www.padippakam.com

# நூல் தேட்டம் - 4



என். செல்வராஜா

படிப்பகம்

www.padippakam.com

DAVID

# நூல் தேட்டம்

(தொகுதி 4)

தாயகத்திலும் புகலிடத்திலும்
வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள்

குறிப்புரையுடனான
## நூல்விபரப்பட்டியல்

என்.செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள்
2006

படிப்பகம்

www.padippakam.com

# நூல் தேட்டம்
## (தொகுதி 4)

ஆசிரியர் - என்.செல்வராஜா
பதிப்பு - முதற்பதிப்பு, 20 டிசம்பர் 2006
வெளியீடு - அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம்
அச்சுப்பதிப்பு – குமரன் புத்தக இல்லம், கொழும்பு
அட்டை வடிவமைப்பு – மயூரன், கனவு நிலையம், கொழும்பு
சர்வதேச தராதர நூல் பதிவெண் **ISBN 0-9549440-3-8**
பக்கங்கள் -xl + 540

**பதிப்புரிமை © என்.செல்வராஜா 2006**

# Nool Thettam
## (Volume 4)

An annotated bibliography of 1000 published writings in Tamil language, by Sri Lankan Tamils, home and abroad.

Compiler - N.Selvarajah
Edition - First Edition, 20 December 2006
Publishers - Ayothy Library Services, United Kingdom
Printers - Kumaran Book Shop, Colombo
Cover Design - Mayooran, Dream Station,
International Standard Book Number **0-9549440-3-8**
Pages - xl + 540

**Price: £ 10.00, Euro 15.00, SLRs 900.00**

**© Copy Right 2006 by N.Selvarajah**

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

படிப்பகம்

www.padippakam.com

# நன்றி

நூல்தேட்டத்தின் நான்காவது தொகுதியான இந்நூலினை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய கடமையாகும்.

நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன் வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.

இலங்கையில் நான்காவது தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்குசெய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டிருக்கலாம். மனதில் நிலைத்தவர்களை முடிந்தவரையில் இங்கு மீட்டிருக்கின்றேன்.

மூன்றாவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வெளியீடு செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல உரிமையாளர் திரு.குமரன் பொறுப்பேற்று நடத்திவைத்திருந்தார். நான்காவது தொகுதியினையும் அவரே அச்சிட்டிருக்கிறார். தனது வெளியீட்டகத்தின் அண்மைக்கால வெளியீடுகளையும், தனது தந்தையார் திரு செ.கணேசலிங்கன் அவர்களின் நூல்களையும் எனக்கு



படிப்பகம்

www.padippakam.com

வழங்கி அவற்றையும் இத்தொகுப்பில் இடம்பெறச்செய்துள்ளார். நூல் அச்சிடும்பணிகளில் எனது வேண்டுகோள்களையும், நெருக்குதல்களையும் செவிமடுத்து உரியவகையில் அவற்றைச் செயற்படுத்தி குமரன் பதிப்பகத்தின் தொடர்பாளராக இருந்தவர் சகோதரி நிகிலா. கொழும்பு, Dream Station, நிறுவன அதிபரான திரு கே.மயூரன், இரண்டாவது தொகுதியின் அட்டை வடிவமைப்பினை மேற்கொண்டவகையில் அறிமுகமானவர். தனது வடிவமைப்பில் உருவான தமிழ் நூல்களை தன்னார்வத்துடன் வழங்கி அவற்றையும் இத்தொகுப்பில் இடம்பெறச் செய்தவர். இத்தொகுதியின் முன்னட்டையையும் அவரே அழகுற வடிவமைத்துள்ளார். இம்மூவருக்கும் முதற்கண் எனது நன்றிகள்.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகத்தினர் தமது வளம்மிக்க நூலகத்தைப் பயன்படுத்தி அரிய பல நூல்களைப் பதிவுசெய்ய வாய்ப்பளித்திருந்தனர். நான் கொழும்பில் நின்ற வேளைகளில் ஈழத்து எழுத்தாளர்களுக்கும் எனக்குமிடையேயான தொடர்புப் பாலத்தை இட்டுத் தந்தவர்கள். அவர்களுக்கும், தமிழ்ச்சங்க நூலகத்தை நான் பயன்படுத்த சகலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய நூலகர்களுக்கும் எனது நன்றி.

உடத்தலவின்னை சிந்தனை வட்டம் தாபகரும் 200க்கும் அதிகமான தமிழ் நூல்களைத் தனது வெளியீட்டகத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளவருமான கலாபூஷணம் பி.எம்.புன்னியாமீன் அவர்கள் சிறப்பான நன்றிக்குரியவர். மூன்றாவது தொகுதியின் உருவாக்கத்தின்போது அறிமுகமாகி, நூல்தேட்டத்தின் வளர்ச்சியில் தீவிர அக்கறைகொண்டவராகிப் பலவழிகளிலும் உதவியுள்ளதுடன் 2005ம் ஆண்டுக்கான சிந்தனைவட்டம் விருதினையும் 11.09.2005 அன்று உடத்தலவின்னையில் வைத்து எனக்கு வழங்கி கௌரவித்திருந்தார். நூல்தேட்டம் பற்றிய அவரது ஆழமான கணிப்பீடு நவமணி பத்திரிகையில் அண்மையில் பிரசுரமாகியது. அதன் பிரதியே இத்தொகுப்பினதும் முன்னுரையாகின்றது. கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் அவர்களும், மாவனல்லை, கிருங்கதெனியாவைச் சேர்ந்த ஜனாப். எல்.எல்.லாபீர் அவர்களும் இத்தொகுதியில் இடம்பெறும் பெரும்பான்மையான இஸ்லாமியத் தமிழ் நூல்களை நான் பதிவுசெய்வதற்குத் துணையாக இருந்துள்ளனர். அவர்களுக்கு என் நன்றி.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு (2005) நான் தங்கியிருந்த வேளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுவடிகள் காப்பகத்தைப்



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்த ஒழுங்கு செய்துதந்த பல்கலைக்கழக நூலகர் திருமதி ரோ.பரராஜசிங்கம் அவர்களுக்கும், தமது சேகரிப்புகளை வழங்கிப் பதிவுசெய்ய உதவிய பேராசிரியர் க.குகபாலன், ஐ.சாந்தன், பொன் கணேசமூர்த்தி ஆகியோருக்கும் எனது நன்றி.

கண்டியில் பேராதனை வீதியில் அமைந்துள்ள Awake என்ற அரசசார்பற்ற சமூக சேவை அமைப்பின் நூலகத்தைப் பயன்படுத்த அனுமதித்த இயக்குநர் மேனகா கந்தசாமி, அந்தனி ஜீவா ஆகியோருக்கும் எனது நன்றி. இத்தொகுதியிலுள்ள பல மலையக வெளியீடுகளை இந்நூலகத்திலிருந்தே பெற்றுக்கொள்ளமுடிந்தது.

கொழும்பில் கம்பன் கழக வெளியீடுகளைத் தமது நூலகத்தில் பார்வையிட அனுமதித்த இலங்கை கம்பன் கழகச் செயற்பாட்டாளர்கள் இ.ஜெயராஜ், ஸ்ரீ. பிரசாந்தன் ஆகியோரும் ஈழத்து எழுத்தாளர்களான தம்பிஐயா தேவதாஸ், ஜின்னாஹ் ஷெரிபுத்தீன், சட்டத்தரணி ஜிப்ரி, அந்தனி ஜீவா, டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகியோரும் இத்தருணம் நன்றியுடன் நினைவுகூரப்படவேண்டியவர்கள். நீர்வை பொன்னையன் அவர்கள் தனது படைப்புகளைப் பார்வையிட வழங்கியதுடன் நில்லாது, நீண்டகாலமாகச் சிறுவர் நூல்களுக்கான பட்டியலொன்றினைத் தயாரிக்கும் பணியிலிருந்த பெரியார் திரு இராசையா அவர்களினதும், மீரா பதிப்பக உரிமையாளர் புலோலியூர் இரத்தினவேலோன் அவர்களினதும் தொடர்பினை ஏற்படுத்தித் தந்திருந்தார். அவருக்கு எனது உளம்கனிந்த நன்றி.

புகலிடத்தில் எனது தொகுப்பு முயற்சிகளுக்கு உதவியவர்களையும் மறவாது நினைவுகூர்வது எனது கடமையாகும்.

மலேசியாவிலிருந்து ஈழத்து எழுத்தாளர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்களின் நூல்திரட்டில் இடம்பெற்ற 24 நூல்களையும் அன்பளிப்பாக அனுப்பிய தேசிய நிலநிதிக் கூட்டுறவு அமைப்பின் இயக்குநர் மதிப்பிற்குரிய டத்தோ சகாதேவன் அவர்களுக்கும், அவற்றை என்னிடம் பத்திரமாகச் சேர்ப்பித்த மலேசிய நண்பர் கா.ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இலண்டன், ஐரோப்பிய நகரங்களில் தங்கள் அரிய நூற்சேர்க்கைகளிலிருந்து தேவைப்பட்ட நூல்களை நான் பயன்படுத்த அனுமதியளித்ததுடன் மேலும் பலரின் தொடர்புகளையும் தாயகத்திலும் புகலிடத்திலும் ஏற்படுத்தித் தந்தவர்கள் பலர். இலண்டனிலிருந்து திரு மு.நித்தியானந்தன், திரு. ஐ.தி.சம்பந்தன்,



படிப்பகம்

www.padippakam.com

புலவர் இளவாலை அமுது, பாரிஸ்டர் ஜோசப், தேசம் த.ஜெயபாலன், இலண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழக இயக்குநர் திரு க.பாலேந்திரா, திருமதி கிருஷ்ணா வைகுந்தவாசன், ஒளி ஓவியர் கிருஷ்ணராஜா ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

லண்டனில் ஈழத்துத் தமிழ்நூல்களை சேகரித்துப் பேணுவதுடன் காலத்திற்குக் காலம் புகலிடத்தில் அவற்றைக் காட்சிப்படுத்திப் புத்தகக் கலாச்சாரத்தை வளர்க்கமுனையும் எழுத்தாளர் முல்லை அமுதன் அவர்கள் சிறப்பான நன்றிக்குரியவர். அவரது பாரிய சேகரிப்பிலிருந்த ஈழத்து நூல்களில், பதிவுசெய்யப்பட்டிராதவற்றைத் தேடி எடுத்து எனது பதிவுக்கு மிகுந்த அக்கறையுடன் வழங்கியிருந்தார். டென்மார்க்கி-லிருந்து திரு ஒப்புரவன், ஜேர்மனி, போகும் தமிழ் நூலகத்தினை இயக்கும் நூலகர் நா.நாகேந்திரம் (Tamilische Bucherei, Bochum), ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை இயக்குநர் ஸ்ரீ ஜீவகன், வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன், அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர் லெ.முருகபூபதி ஆகியோர் நினைவில் வருபவர்கள். திரு.முருகபூபதி அவர்கள் அவுஸ்திரேலியாவில் வெளியான 26 நூல்களைத் தபாலில் அனுப்பி வைத்ததுடன் பலரது தொடர்புகளையும் ஏற்படுத்தித் தந்திருந்தார். இப்பட்டியல் மிகவும் நீண்டது. விரிவஞ்சி இவ்வுரையில் இடம்பெறவில்லை. அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றிகள்.

இலண்டனிலிருந்து இயங்கிவரும் IBC அனைத்துலக தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பிரதி ஞாயிறுதோறும் இடம்பெறும் "காலைக்கலசம்" நிகழ்ச்சியில் 5-5-2002 முதல் தாயகத்திலும் புகலிடத்திலும் அவ்வப்போது வெளியாகும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை இருபது முதல் இருபத்தைந்து நிமிடங்கள் வரை அறிமுகம்செய்யும் பணியில் ஈடுபட்டுவருகின்றேன். ஐந்தாவது ஆண்டாகத் தொடரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக இத்தொகுப்பிற்-கான பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், புதிய எழுத்தாளர்-களின் தொடர்பினைப் பெற்றுக்கொள்ளவும் முடிகின்றது. இந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த ஐ.பீ.சீ. கலையகத்தினருக்கு என் நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிய சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.



படிப்பகம்

www.padippakam.com

எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும். இந்நூலைக் கணணியில் பொறிக்கும்வேளை என் அறியாமையினால் நான் விடும் இமாலயத்தவறுகள் அனைத்தையும் பல்கலைக்கழகம், மற்றும் வீட்டுவேலைக் கடமைக்கிடையேயும் முகம்கோணாது சீர்செய்து விட்டு, எனக்குக் கணணியறிவைச் சிறிது புகட்ட எத்தனித்துத் தோற்றுப்போகும் என் மகன் கௌதமனுக்கும் எனது நன்றிகள்.

இறுதியாக, நிறுவனரீதியான நிதியுதவிகள் ஆதரவுகள், எதுவுமின்றி, தனிமனிதமுயற்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்பதிவின் அவசியத்தையும், ஆழத்தையும் புரிந்துகொண்டு, இந்நூலைக் கொள்வனவுசெய்து எனது முயற்சியின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தங்களாலான பங்களிப்பை நல்கிவரும் இனிய தமிழ் உறவுகளுக்கு என் மனம் கனிந்த நன்றிகள். உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் ஐந்தாவது தொகுதியுடன் அடுத்த ஆண்டில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

**-என்.செல்வராஜா-**

**20.12.2006**

48, Hallwicks Road,
Luton LU2 9BH
United Kingdom

Selvan@ntlworld.com



படிப்பகம்

www.padippakam.com

# நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்கவேண்டியதொரு பெருநதி

இனங்களுக்கிடையிலே ஒற்றுமை, புரிந்துணர்வு, பரஸ்பர நல்லிணக்கம் ஆகிய எண்ணக்கருக்கள் எழுத்துக்களிலும், மேடைப்பேச்சுகளிலும், இலத்திரனியலூடகப் பேட்டிகளிலும், பெரிதாக பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் 'இலங்கையின் தேசிய இலக்கியம்' என்ற விசாலமான கருப்பொருள் பற்றிச் சிந்திக்க வேண்டியதன் அவசியம் இன்றைய காலத்தின் தேவைகளில் ஒன்றாகிவிட்டது.

இலங்கையின் தேசிய இலக்கியப்பரப்பில் எழுத்துத்துறை வளர்ச்சிக்கான இலங்கைவாழ் சிறுபான்மைச் சமூகத்தினரின் பங்களிப்பு விசாலமானதாகும். 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து இத்தகைய பங்களிப்பு முனைப்புடன் இடம்பெறலாயிற்று.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்துச் சிறுபான்மையினரின் தமிழிலக்கியப் பாங்கினை ஆராயும்போது விசேடமாக மூன்று பிரதான விடயங்களின் உள்ளடக்கத்தினை அவதானிக்கலாம்.

- சமயக் கருத்துக்களை மையமாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள்.
- சமூகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள்.
- தேசிய உணர்வினை வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இங்கு சமயக் கருத்துக்களை மையமாகக் கொண்ட இலக்கியங்கள் என்னும்போது பிரித்தானியரால் திணிக்கப்பட்டு வந்த மிஷனரி முறைக்கெதிரா்கத் தத்தமது சமயங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி, தத்தமது சமயத்தினை முதன்மைப்படுத்தி, முக்கியப்படுத்தும் வகையிலான இலக்கிய வடிவங்களை இனங்காட்டலாம்.

சமூகச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் எனும் போது மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அந்நிய நாட்டுக் கலாசாரத் தாக்கங்களினால் சீரழிவுகளை எதிர்நோக்கி வந்த தத்தமது சமூகத்தினரை பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி தத்தமது சமூகத்தினரின் கலாசார முக்கியத்துவங்களையும், சமூக மரபுகளையும், விழுமியங்களையும் முதன்மைப்படுத்துவதனூடாக சமூகத்தினரின் கல்வி, பொருளாதார, கலாசார எழுச்சியினைத் தூண்டத்தக்க இலக்கிய வடிவங்களைக் குறிப்பிடலாம்.

அதே போல தேசிய உணர்வுகளின் வெளிப்பாடு எனும் போது அடிமைத்துவ ஆட்சி முறையிலிருந்து எமது தேசம் விடுதலையாக வேண்டும் என்ற சுதந்திர வேட்கையின் வெளிப்பாடான இலக்கியங்களைச் சுட்டிக் காட்டலாம். மேற்குறிப்பிட்ட மூன்று அடிப்படைகளும் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களால் முன்வைக்கப்பட்ட இலக்கிய வடிவங்களில் மாத்திரமல்ல பெரும்பான்மைச் சமூகத்தினரின் சிங்கள இலக்கியங்களிலும், முச்சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட ஆங்கில இலக்கியங்களிலும் காணமுடியும். ஆனால், இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தினரின் தமிழ் இலக்கியங்கள் பற்றிய பதிவுகள் முறையாக பேணப்படாமையினாலும் அவை ஆவணப்படுத்தப்படாமையினாலும் இலங்கை தேசிய இலக்கியப் பரப்பில் தமிழ் மொழிமூல இலக்கியப் படைப்புக்களினதும், படைப்பாளிகளினதும் பரிமாணம் மதிப்பீடு செய்யப்படாமலே மறைந்து போய்விடுகின்றது.

மேற்கத்திய இலக்கியங்கள், மேற்கத்திய இலக்கியவாதிகளைக் கூட எடுகோளுக்காக உள்வாங்கும் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ் இலக்கியங்கள், தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய ஆய்வுகள் உள்வாங்கப்படாமலிருக்கின்றன என்றால் உரிய பதிவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமலிருப்பதும் பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ்மொழி இலக்கியங்கள்மீது ஆர்வம் காட்டப்படாமலிருப்பது, இனங்களுக்கிடையே நல்லிணக்-



படிப்பகம்

கம், நல்லுறவு என்ற கதையாடல்களில் ஈடுபடும் இக்காலகட்டத்திற்குப் பொருத்தமானதொரு விடயம் எனக்கூறிவிட முடியாது. நல்லிணக்கம், நல்லுறவு எனும் வார்த்தைப் பதங்கள் வெளிவாரியானதல்ல. உள்ளார்ந்த உணர்வுகளுடன் சங்கமித்து உள்ளார்ந்த சிந்தனைகள் பரிமாறப்படும் போதே அப்பதங்களின் அழுத்தம் யதார்த்தம் பெறக்கூடியதாக இருக்கும். இத்தகைய உள்ளார்த்தமான சிந்தனைகளை அறிந்து கொள்ள "இலக்கியங்கள்" ஆணிவேரானவை என்றால் மிகையாகாது.

தேசிய இலக்கிய நிலைபற்றிய எண்ணக்கருவினை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழ் இலக்கியப்பரப்பினை நோக்கின் தமிழ் இலக்கியத்துக்குள்ளும் நாமே உருவாக்கிக் கொண்ட பிரதேச ரீதியான இலக்கியம், இனரீதியான இலக்கியம், சார்பு ரீதியான இலக்கியம் என்பன 'தமிழ்மொழி' எனும்போது உணர்வினைமீறி சுயநலமிக்க -குறுகிய போக்குமிக்கதாக மாறிவருவது வேதனைக்குரிய விடயமாகும்.

இத்தகைய நிலைப்பாடுகள் விஸ்வரூபமாக அமைவதினால் தமிழ் இலக்கியத்தில் கடந்த கால கட்டங்களில் சாதிக்கப்பட்டவை யாவை? சாதித்தவர்கள் யார்? முன்வைக்கப்பட்ட உணர்வுகள் யாவை? அவற்றின் பின்னணிகள் யாவை? என்பன புதிய தலைமுறையினருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன.

எனவே, ஈழத்துத்தமிழ் இலக்கியத்தினை எந்தவித பாகுபாடுமின்றி ஒருமுகப்படுத்த வேண்டியதும், அவற்றின் பதிவுகளைத் திரட்ட வேண்டியதும், அவற்றினை ஆவணப்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகிவிட்டது. ஏனெனில், தேசிய இலக்கிய நீரோட்டத்தில் எமது தமிழ் இலக்கியங்களின் விபரங்களையும் இணைக்க வேண்டுமானால் முதலில் தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக ஈழத்தில் வெளிவந்த தமிழ்நூல்கள் பற்றியும், நூலாசிரியர்கள் பற்றியும் பொதுவான பதிவுகளை மேற்கொண்டு அவற்றை ஆவணப்படுத்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். இந்நிலை பற்றிய உணர்வுபூர்வமான சிந்தனைகளின் வெளிப்பாடுகள் ஆயிரத்துத் தொளாயிரத்து தொன்னூறுகளில் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

குறிப்பாக - இலங்கையில் முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரும், சிறந்த நிர்வாகசேவை உத்தியோகத்தரும், எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்பதிவுகளை "சுவடி

www.padippakam.com

ஆற்றுப்படை” எனும் தலைப்பில் நான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

1994ம் ஆண்டில் வெளிவந்த “சுவடி ஆற்றுப்படை” முதலாம் தொகுதியில் 1850 - 1949 காலப்பகுதியில் ஒரு நூற்றாண்டு காலத்து 198 நூல்கள் பற்றிய தகவல்களையும், 1995ம் ஆண்டில் வெளிவந்த இரண்டாம் தொகுதியில் 1950 -1969 காலப்பகுதியில் இரண்டு தசாப்தகாலத்து 355 நூல்கள் பற்றிய தகவல்களையும், 1997 இல் வெளிவந்த மூன்றாம் தொகுதியில் 1970 - 1995 காலப்பகுதியில் வெளிவந்த 924 நூல்கள் பற்றிய தகவல்களையும், 2001ம் ஆண்டில் வெளிவந்த நான்காம் தொகுதியில் 1996 - 2000 காலப்பகுதியில் வெளிவந்த 500 நூல்கள் பற்றிய தகவல்களையும் பதிவாக்கி ஆவணப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை “சுவடி ஆற்றுப்படை” நான்கு தொகுதிகளிலும் கண்டுகொள்ள முடியும். 1850 முதல் 2000 வரையிலான காலப்பகுதியில் 1977 நூல்கள் பற்றிய விபரங்கள் எஸ்.எச்.எம். ஜெமீலின் “சுவடி ஆற்றுப்படை”யில் பதிவாகியுள்ளன. இலக்கியப் பதிவு, இலக்கிய ஆவணப்படுத்தலில் இது ஒரு முக்கிய கட்டமாகும்.

இதே பணியினை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் வசித்துவரும் திருவாளர் என். செல்வராஜா. அவர்களும் 21ம் நூற்றாண்டில் மேற்கொண்டு வருகின்றார். “சுவடி ஆற்றுப்படை” இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல்களை மாத்திரமே ஆவணப்படுத்தியது. ஆனால், என்.செல்வராஜா அவர்களுடைய “நூல்தேட்டம்” ஓர் இனத்தவரை மாத்திரம் மையப்படுத்தாமல் தமிழ் எழுத்தாளர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள், புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்கள் என்ற அடிப்படையில் தமிழ்மொழி மூலமாக இலங்கையர்களால் எழுதப்பட்ட அனைத்து நூல்களையும் ஆவணப்படுத்த முயன்றுள்ளது.

நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய பணியினை தனியொருவரால் மேற்கொள்ள முடியும் என்பதை செயலில் காட்டி சாதனைபடைத்துவரும் மூத்த நூலகவியலாளரும், பன்னூலாசிரியரும், பிரபல எழுத்தாளரும், வானொலி, மேடைப்பேச்சாளரும், ஆய்வாளருமான திருவாளர் என்.செல்வராஜா அவர்கள் ஈழத்தவர்களின் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும்



படிப்பகம்

பணியை 1990 இல் ஆரம்பித்து 2006 வரை "நூல்தேட்டம்" எனும் பெயரில் நான்கு தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் நூல்கள் என்ற அடிப்படையில் நாலாயிரம் நூல்கள் பற்றிய விபரங்களை இதுவரை பதிவாக்கியுள்ளார். நூல்தேட்டம் முதலாம் தொகுதியில் நூலாசிரியர் என்.செல்வராஜா பின்வருமாறு தனது முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார்.

> **"நூல்கள் ஓர் இனத்தின் பண்பாட்டை, கலாசார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவு எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலை முறைக்கும், அடுத்துவரும் தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமை படைத்தன. அத்தகைய ஒரு வரலாற்றுப் பதிவை, ஈழத்தமிழ்த் தேசியத்தின் அறிவுத்தேட்டத்தின் கனதியை, பதிவாக்கமுனையும் முடிவில்லாதவொரு நீண்ட பயணத்திற்கான முதற் காலடித்தடம் இங்கே பதியப்பெறுகின்றது."**

உண்மையிலே இது ஒரு விசாலமான பணியாகும். இதனை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை வரையறை செய்வதனூடாகவோ அன்றேல் சில தொகுதிகளை வெளியிட்டு விடுவதனூடாகவோ மாத்திரம் நிறைவேற்றிவிட முடியாது. இதனால் தான் என்.செல்வ-ராஜா அவர்கள் "முடிவில்லாதவொரு நீண்ட பயணமாக...." இதனை வர்ணித்துள்ளார்.

தேசிய நூல்விபரப்பட்டியல் முயற்சியென்பது இலங்கைக்குப் புதிய விடயமொன்றல்ல. இலங்கையில் "அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டம்" 1885 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1976ம் ஆண்டில் திருத்தப்பட்டது. இதன்படி இலங்கையில் அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினதும் ஐந்து பிரதிகளைப் பதிவுக்காக தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படும் நூல்கள் தேசிய அரும்பொருட்சாலை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கைத் தேசிய நூலகம் ஆகியவற்றுக்கு வைப்பிற்காக வழங்கப்படும்.

1885 ம் ஆண்டில் 'அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தின்' கீழ் (179 வது அத்தியாயம்) இலங்கையில் அச்சிடப்படும் நூல்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு காலாண்டுக்கொருமுறை

வர்த்தமானியின் ஐந்தாவது பிரிவாக வெளியிடப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. 1949 இல் இலங்கை 'யுனெஸ்கோ' அமைப்பின் அங்கத்துவ நாடாகிய பின்னர் நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூற்பட்டியலின் தேவை வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக 1952 இல் இலங்கைத் தேசிய நூல் விபரப்பட்டியலுக்கான உப ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய நூற்பட்டியல் தொகுப்பின் முதலாவது இதழ் 1962 இல் வெளிவந்தது. 1970 ம் ஆண்டில் 17 ம் இலக்க சட்ட மூலத்தின் பிரகாரம் 'இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை' ஸ்தாபிக்கப்பட்டதையடுத்து தேசிய நூற்பட்டியல் இச்சபையினாலேயே வெளியிடப்பட்டது. பின்பு 1998 ம் ஆண்டில் 51ம் இலக்க சட்ட மூலத்தின் பிரகாரம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை (National Library and Documentation Services Board) ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இச்சபையின் அலுவலகம் கொழும்பு 07, சுதந்திர சதுக்கம், இலக்கம் 14 இல் அமையப்பெற்றுள்ளது.

1986 ம் ஆண்டிலிருந்து இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு ISBN இலக்கம் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் ISBN இலக்கத்தை வழங்கி வருவதும் இந்த தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையேயாகும். இச்சபையானது இலங்கையில் தேசிய நூற்பட்டியலை தயாரிக்கும்போது அச்சகங்களி-னால் தேசிய ஆவணக்காப்பகத்துக்கு அனுப்பப்பட்டு ஆவணக்-காப்பகத்தினால் கிடைக்கும் நூல்களையும், நேரடியாக தனது சபையிடம் ISBN இலக்கத்தைப் பெற்று அச்சிடப்படும் நூல்களையும் சேர்த்துக் கொள்கின்றது. ஆரம்ப காலகட்டங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்பட்ட தேசிய நூற்பட்டியல் தற்போது மாதம் தோறும் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தேசிய நூற்பட்டியலில் மொழி வேறுபாடின்றி மும்மொழி நூல்களுக்கும் கொள்கையளவில் இடம் ஒதுக்கப்பட்ட போதிலும்கூட தமிழ் நூற்பிரிவில் ஒரு சில நூல்களே இடம்பெற்று வருகின்றன. இதற்கான காரணம்,

1. தமிழ் நூல்களை அச்சிடும் அச்சகங்கள் "அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தினை" மதித்து அச்சிடும் நூல்களின் பிரதிகளை தேசிய நூலகத்திற்கு அனுப்பிவைக்காமை.

www.padippakam.com

2. தமிழ்மூல எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் ISBN இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதில் கரிசனை காட்டாமை.

3. நூற்பட்டியலைத் தயாரிக்கும் தேசிய நூலகத்தில் தமிழ் நூல்களைப் பட்டியலிடக் கூடிய ஆட்பலம் விகிதாசார அடிப்படையில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றமை.

எவ்வாறாயினும் இதனால் பாதிப்படையப் போவது தமிழ் மொழிமூல எழுத்தாளர்கள் தான் என்றால் பிழையாகாது. ஏனெனில், தமிழ் மொழிமூல நூல்கள் எதுவிதமான பதிவுகளுக்கும், ஆவணப்படுத்தல்களுக்கும் உட்படாமல் அம்முயற்சிகளும், கருத்துக்களும் வெளிவந்த சுவடின்றியே மறைந்து போய்விடுகின்றன. இதனால் சமகாலத்தில் வாழ்பவர்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் இம்முயற்சிகள் பற்றித் தெரியாமல் போய்விட இடமுண்டு.

1980 களின் பின்னர் தமிழ் நூல்கள் மற்றுமொரு பிரச்சினையையும் எதிர் நோக்குகின்றன. அதாவது 1980 களின் பின்னர் பெருந்தொகையான தமிழ் எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இத்தகையோரால் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், இவர்களின் தமிழ் மொழிமூல நூற்கள் பற்றிய பதிவுகள் சரியான முறையில் மேற்கொள்ள வாய்ப்புகள் இல்லாமலிருக்கின்றன. அண்மைக்காலமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர்களினால் பிற நாடுகளில் வெளியிடப்படும் நூல்களையும் பதிவுக்கு உட்படுத்தும் புதிய பகுதியொன்றை ஆரம்பித்த போதிலும்கூட, நடைமுறையில் இது போதிய சாத்தியப்பாட்டினை வெளிப்படுத்தவில்லை.

எனவே, ஈழத்துத் தமிழ்மொழி நூல்களின் பதிவு என்பது காலத்தின் அவசியத் தேவையாகும். அதே போல அவசரத் தேவையுமாகும். இந்நிலையை நன்கு உணர்ந்திருந்த, தமிழ் இலக்கியப் பதிவுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர் இலட்சியத்தைக் கொண்ட சிரேஷ்ட நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் சுமார் 5000 ஸ்ரேலின் பவுண்களை தனது சொந்தப் பணத்தில் செலவிட்டு இதுவரை எழுதி வெளியிட்டுள்ள நான்கு தொகுதிகள் பற்றியும் சுருக்கமாக அவதானிப்போம்.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற ஈழத்துத் தமிழ்நூல்கள் பற்றிய குறிப்புரையுடனான நூல் விபரப்பட்டியலான



படிப்பகம்

www.padippakam.com

நூல்தேட்டம் முதலாவது தொகுதி 2002 ஜூன் மாதத்தில் அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையினால் இலண்டன் வாசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 356 பக்கங்களைக்-கொண்டு வெளிவந்தது. விலை இலங்கையில் ரூபாய் 600.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும். (ISBN 0-9549440-0-3)

நூல்தேட்டம் இரண்டாவது தொகுதி 2004 ஜூன் மாதத்தில் கொழும்பு ரெக்னோ பிரிண்ட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 484 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. விலை இலங்கையில் ரூபாய் 600.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும். (ISBN 0-954-9440-1-1.)

நூல்தேட்டம் மூன்றாவது தொகுதி 2005 ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 546 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. விலை இலங்கையில் ரூபாய் 900.00, பிரித்-தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும். (ISBN 0-9549440-2-x.)

நூல்தேட்டம் நான்காவது தொகுதி 2006 செப்டெம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சிய, அயோத்தி நூலக சேவைகள் வெளியீடாக கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, தற்போது வெளி-வந்துள்ளது. விலை இலங்கையில் ரூபாய் 900.00, பிரித்தானியாவில் ஸ்ரேலிங் பவுண் 10 ஆகும். (ISBN 0-9549440-3-8)

திரு என். செல்வராஜா அவர்களின் நூல்தேட்டம் தொகுப்பிற்கான சர்வதேச தராதர நூற்றொடர் இலக்கம், International Standard Serial Number (ISSN) 1477-4690 என்பதாகும்.

என். செல்வராஜா அவர்களுடைய மேற்படி நான்கு தொகுதிகளிலும் ஒரு தொகுதியில் ஆயிரம் ஈழத்தவர்களின் தமிழ்மொழிமூலமான நூல்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக நாலாயிரம் நூல்கள் பதிவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய பதிவுகள் அனைத்தும் நூலியல், தகவல் விஞ்ஞானமுறைக்கு அமைய துறைசார் அறிவியல் பின்புலத்துடன் பதிவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம்,



படிப்பகம்

www.padippakam.com

பதிப்பு விபரம் ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) ஆகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று நூல்தேட்டம் முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் புத்தக வெளியீட்டாளர்களும், எழுத்தாளர்களும் கட்டாயமாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டிய கட்டுரை இது. ஏனெனில், இலங்கையில் வெளியிடப்படும் தமிழ் நூல்கள் சர்வதேச தரத்தை அடைய உதவும் முதற்படி ISBN இலக்கம் பெறுவதே என்பதினால் இத்தகைய விளக்கம் கட்டாயத் தேவையாகும்.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது சிறு அறிமுகமாக மாத்திரம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்த அறிமுகத்தின் மூலமாக நூலின் உள்ளடக்கத்தை இலகுவாக இனங்கண்டு கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் ஆங்காங்கே எழுத்தாளர் பற்றியதும் குறிப்பிட்ட நூல் பற்றியதுமான பின்னணித் தகவல்களை-யும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

## பகுப்பாக்கம்

இந்நூல்களின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme). ஈழத்துத் தமிழ் நூல்களின் பகுப்புத் தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். நூலியல் துறையில் பரிச்சயமில்லாத சாதாரண ஒரு வாசகனாலும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இப்பகுப்பு முறையை



படிப்பகம்

www.padippakam.com

இலகுவானதாக முன் வைத்திருப்பதனூடாக திரு. என்.செல்வராஜா அவர்கள் தான் ஒரு அனுபவம்மிக்க சிரேஷ்ட நூலகர் என்பதை நிரூபித்துள்ளார்.

## சிறப்புப் பதிவுகள்

நூல்தேட்டம் நான்கு தொகுதிகளையும் ஆய்வுரீதியாக நோக்குமிடத்து இரண்டு விடயங்களை சிறப்புப் பதிவுகளாக அவதானிக்கலாம்.

1. இலங்கை தொடர்பான பன்னாட்டவர்களின் தமிழ்ப் படைப்புக்கள்
2. முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்.

நூல்தேட்டம் முதலாம் தொகுதியில் காணமுடியாத விசேட சேர்க்கையொன்றினை இரண்டாம் தொகுதியிலிருந்து காண-முடிகின்றது. அதாவது இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத்தமிழரல்லாத பன்நாட்ட-வர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழரின் பிரச்சினைகள் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும், மலேசியாவிலும், ஐரோப்பா-விலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்-டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்ற அடிப்படையில் தனியானதொரு பிரிவாக அவை சேர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நூல்தேட்டம், ஈழத்தமிழ்மொழி நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைவதை நான்கு நூல்தேட்டங்களினூடாகவும் நூலாசிரியர் மேற்கொண்டுள்ள பிரயத்தனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அது பற்றிய தகவலையும் பின்னைய தொகுதியில் நூலாசிரியர் தர எத்த னித்துள்ளார். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்படாது, அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளார். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் சேர்த்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

கூட்டுமொத்தமாக நோக்குமிடத்து இந்நான்கு தொகுதிகளும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியதிகளை உள்வாங்கி-யிருப்பதும், முறைப்படுத்தல், எளிமையாக்கல், இவற்றுடன் விஞ்ஞானத்தன்மைமிக்கதாகவும் இருப்பது நூலாசிரியரின் அனுபவத் திறனை வெளிப்படுத்தும் முத்திரையாகப் பிரகாசிக்கின்றதென்றால் மிகையாகாது.

## நூலியற் பதிவுகள்

1970களின் இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்மொழி நூல்களைப் பட்டியலிடும் சில நடவடிக்கைகள் தனிப்பட்ட சிலரால் மேற்கொள்ளப்பட்டன. முழுமையான முயற்சிகளாகவன்றி ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்த பட்டியல்களாகவோ (உதாரணமாக சிறுகதை, நாவல் என்ற அடிப்படையில்), அன்றேல் சில எழுத்தாளர்களின் அல்லது வெளியீட்டாளர்களின் வெளியீடுகளைப் பட்டியல்படுத்தும் முயற்சிகளாகவோ அவை இருந்தன. அதேபோல 1979ம் ஆண்டில் பேருவளை நளீமிய்யா இஸ்லாமிய நூலகத்துக்காக வேண்டி "இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - இலங்கை நூல்களின் தேர்ந்தெடுத்த பட்டியல்" எனும் நூற்பதிவு எஸ்.எம். கமால்தீன் அவர்களால் எழுதப்பட்டது. ஆனால், இம்முயற்சிகள் அனைத்தும் தொடர்ச்சியான நடவடிக்கைகளாகவோ, அன்றேல் இலங்கையின் நூலியல் வரலாற்றின் நூற்பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலோ அமையவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகராக இருந்த அமரர் எச்.ஏ.ஐ. குணதிலக்கா A Bibilography of Ceylon: a Systematic Guide to the Literature on the Land, People, history and culture published in the Western languages from the Sixteenth century to the present day என்ற தலைப்பில் ஆங்கில நூல்களுக்கான நூற்பட்டியலை 1970-1983 காலப்பகுதியில் 5 தொகுதிகளாக வெளியிட்டார். சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உசாத்துணை நூலாக இது இன்றும் திகழ் கின்றது.

எனவே, முழுமையைத் தேடிச்செல்லும் நூற்பதிவு முயற்சியில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று பின்வரும் மூன்று ஆவணங்களும் முக்கியம் பெறுகின்றன.

1. தேசிய நூற்பட்டியல்
2. சுவடி ஆற்றுப்படை
3. நூல்தேட்டம்



படிப்பகம்

www.padippakam.com

மேற்படி மூன்று ஆவணப்பதிவுகளையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது இலங்கையில் வெளியான நூல்களைப் பதிவு செய்யவேண்டும் என்பதை பொது நோக்காகக் கொண்டிருந்த போதிலும் கூட தோற்றுநிலை, உள்ளடக்க வடிவம், மக்களைச் சென்றடையும் திறன் ஆகியவற்றில் வேறுபாடுகள் காணப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

'தேசிய நூற்பட்டியலா'னது அரசாங்க ஆதரவுடன் நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சி. தமிழ்மொழி மூல நூல்கள் மாத்திரமல்லாமல் இலங்கையில் வெளிவரும் ஏனைய மொழி நூல்களும் இங்கு உள்வாங்கப்படுகின்றன. ஆனால், நூல்களை 'தேடிப்பெறல்' என்ற நிலைக்கு அப்பால் நின்று கிடைக்கும் நூல்களையே பதிவாக்கி வருகின்றது. சட்டரீதியாக 'அச்சகங்கள் பதிவுக்கான வழியை வகுக்கும்' என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நடைமுறையில் இந்நிலைமை பெருமளவிற்கு சாத்தியப்படவில்லை. தான் அச்சிடும் நூல்களின் ஐந்து பிரதிகளை ஆவணக்காப்பகத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற சட்டம் காணப்பட்ட போதிலும் கூட, இதை மீறும் அச்சகங்கள் எவையும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படுவதில்லை. எனவே, அச்சகங்களின் அசிரத்தை - தெரியாமை போன்ற காரணங்களும், கிடைக்கும் நூல்களின் பதிவுடன் திருப்திகண்டுகொள்ளும் நிலையும் முழுமையான தேசிய நூற்பட்டியல் உருவாக்கத்துக்குத் தடைக்கற்கள் எனலாம்.

'சுவடி ஆற்றுப்படை' ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல்களை மாத்திரம் பதிவாக்கியுள்ளது. கொழும்பு ஆவணக்காப்பகம், தேசிய நூலகம், அரும் பொருட்சாலை நூலகம் ஆகிய இடங்களில் பதிவுகளைப் பெற்றும், தனிப்பட்ட நூல் தேடுதல்களை நேரடியாக மேற்கொண்டும் தரவுகள் பெறப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால், நூல்தேட்டம் நான்கு தொகுதிகளிலும் பதிவாக்கப்பட்டுள்ள நாலாயிரம் புத்தகப் பதிவுகளும் நேரடித் தேடலின் வெளிப்பாடே. திருவாளர் என்.செல்வராஜா அவர்கள் 1991ம் ஆண்டிலிருந்து தனது குடும்பத்துடன் ஐக்கிய இராச்சியத்தில் புலம்பெயர்ந்து வசித்து வருகின்றார். எனவே, இலங்கையின் ஆவணக்காப்பகப் பதிவுகளையோ, அன்றேல் தேசிய நூற்பட்டியல் பதிவுகளையோ அவரால் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு மிகவும் அரிது. தான் பதிவு செய்துள்ள நாலாயிரம் நூல்களையும் நேரடியாக நூலகங்களிலும், தனியார் இல்லங்களில் உள்ள சேர்க்கைகளிலும்,



படிப்பகம்

www.padippakam.com

புத்தக விற்பனை நிலையங்களிலும் பார்த்துத் தானே குறிப்பெடுத்து நூல்தேட்டத்தில் சேர்த்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

எனவேதான் தேசிய நூற்பட்டியல் நூற்பதிவிலும், சுவடி ஆற்றுப்படை நூற்பதிவிலும் காணமுடியாத ஒரு விசேட பண்பினை ‘நூல்தேட்டத்தில்’ காண முடிகின்றது. அதாவது நூல்பற்றிய சுருக்கக் குறிப்பே அந்த விசேட பண்பாகும். பதிவாக இடம் பெற்றுள்ள நூல்களின் முக்கியமான உள்ளடக்கம், அந்நூலின் மூலம் தெரிவிக்கப்படும் அடிப்படைக் கருத்து என்பவற்றை சில வரிகளில் சுருக்கமாகவும், இறுக்கமாகவும் தெரியப்படுத்தி அந்நூல் பற்றிய உணர்வினை உள்வாங்க வைக்கின்றார். இதனால் தான் இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டிய முக்கிய ஆவணங்களில் ஒன்றாக நூல்தேட்டத்தைக் குறிப்பிட்டேன். முதலாம் தொகுதியில் நூல்கள் பற்றிய குறிப்புக்கள் இரத்தினச் சுருக்கமாகக் காணப்பட்ட போதிலும் கூட இரண்டாம், மூன்றாம், நான்காம் தொகுதிகளில் சுருக்கக் குறிப்பினூடாக நூல் பற்றிய தெளிவான விளக்கத்தினைப் பெறமுடிகின்றது. இதனை ஒரு சிறு உதாரணம் மூலமாக விளங்கலாம். நூல்தேட்டத்தில் ‘ஸகாத் கோட்பாடும் நடைமுறையும்’ எனும் புத்தகப் பதிவு இடம் பெற்றுள்ளது. (பதிவு எண் 2173) இது ஒரு இஸ்லாமிய நூல் ‘ஸகாத்’ என்பது ஒரு அரபிப்பதம். நூலாசிரியர் என்.செல்வராஜா அவர்கள் தனது சுருக்கக் குறிப்பில் இந்நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

“இஸ்லாம் மதம் 5 பிரதான கடமைகளை அடிப்படையாகக் கொண்டது. இதில் மூன்றாவது கடமை ‘ஸகாத்’ எனப்படும் ஏழைவரியாகும். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களையும்முகமாக வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தமது வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட வீதத்தை ஏழைகளுக்கு ‘ஸகாத்’தாக வழங்க வேண்டும். இது வசதியுள்ள ஒவ்வொரு இஸ்லாமியருக்கும் கட்டாயமானதாகும். இதனை விளக்கும் விரிவான ஆய்வு-விளக்கமாக அமையும் இந்நூல் பிரதானமாக நான்கு தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது. 1. ஸகாத் கோட்பாடும் முக்கியத்துவமும், 2. ஸகாத் விதியாகும் பொருட்களும் அவற்றின் அளவுகளும், 3. ஸகாத் வழங்கக் கடமைப்பட்டோரும், அதனைப் பெறத்தகுதியுடையோரும், தகுதியற்றோரும், 4. ஸகாத் சேகரிப்பும் விநியோகமும். இந்நூல் பாகிஸ்தான் இஸ்லாமாபாத் சர்வதேச பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் இலங்கை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான நால்வர் இணைந்து எழுதியதாகும்.”



படிப்பகம்

www.padippakam.com

திரு. என். செல்வராஜா அவர்கள் ஒரு இஸ்லாமியர் அல்ல. இருப்பினும் இத்தகைய விளக்கத்தினை அவர் தனது சுருக்கக் குறிப்பினூடாக விளக்கியுள்ளார் என்றால் தான் பதிவுக்குட்படுத்தும் நூல்களை அவர் நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. அதே நேரம் இந்தக் குறிப்பினைப் படிக்கும் எவருக்கும் நூலின் தன்மையினை மிகவும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். இதே முறையினைத்தான் நூல்தேட்டத்தில் இடம்பெற்றுள்ள சகல நூல்பதிவுகளிலும் காணமுடிகின்றது.

ஈழத்தைச் சேர்ந்த பல தமிழ் எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, சுவிடன். டென்மார்க், அவுஸ்திரேலியா போன்ற பல்வேறு மேற்கத்தைய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். தாம் வாழ்ந்த சூழலில் இருந்து மாறுபட்ட சூழலில் புலம்பெயர்ந்து வாழும்போது தமிழ்மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், பாதிப்புக்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். எனவே, புலம் பெயர் நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களின் இலக்கிய முயற்சிகளும், நூலியல் முயற்சிகளும் விசேடமாக ஆராயப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். ‘நூல்தேட்டத்தில்’ இத்தகைய புலம்பெயர் தமிழ் நூல்களும் பதிவுக்குட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். புலம்பெயர் தமிழ்நூற்களின் பதிவு நூல்தேட்டம் நான்கு தொகுதிகளிலும் சுமார் நானூறுக்கும் மேல் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் எந்தவொரு எழுத்தாளராலும் மேற்கொள்ளப்படாத தனிமுயற்சி எனத் துணிந்து கூறலாம்.

நூலாசிரியர் என்.செல்வராஜா அவர்கள் ‘நூல்தேட்டத்தை’ நூலுருவாக்குவதுடன் மாத்திரம் நின்றுவிடாது நூல்தேட்டத்தினை உலகில் பல பாகங்களிலும் ஆவணப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையும் குறித்துக்காட்டக் கூடிய ஒரு விடயமாகும்.

‘நூல்தேட்டம் நூற்றொடர்’ தனியொரு மனிதனால் மேற்கொள்ளப்படும் விசாலமான ஒரு முயற்சி என்பதை நான் அறிவேன். இந்த ஆவணப்பதிவு முயற்சிக்காக வேண்டி அவர் பல நாடுகளுக்கும் அடிக்கடி செல்கின்றார். தனது விடுமுறை நாட்களில் கூட இரவு, பகல் பாராது தனது நேரத்தை ஒதுக்கி பதிவுக்கான சான்றுகளைத் தேடி அலைகின்றார். தனது சொந்தப் பணத்தில் தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்து பதிவுகளைத் திரட்டுகின்றார். உண்மையிலே ஒரு தியாக அடிப்படையில் இந்தப் பதிவுகளை



படிப்பகம்

www.padippakam.com

ஆவணப்படுத்தி வருகின்றார் என்றால் மிகையாகாது. இருப்பினும் 'நூல் ஆய்வு' என்ற கண்ணோட்டத்தில் நூல்தேட்டத்தில் சில குறைகளையும் காணக்கூடியதாக உள்ளது.

1. 'நூல்தேட்டம்' நூற்றொடரில் சமகாலத்தையதும், அண்மைக் காலத்தையதும் நூல்களே பெருமளவில் பதிவாகியுள்ளன. ஆரம்பகாலத் தமிழ் நூல்களின் பதிவுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. புழக்கத்திலில்லாத பழங்காலத்துத் தமிழ் நூல்களையும் சுவடிச்சாலைகளில் தேடியெடுத்துப் பதிவுக்கு உட்படுத்த முடியுமாயின் அந்நூல்கள் பற்றிய தரவுகளையும் அழிவிலிருந்து பாதுகாக்க முடியுமானதாக இருக்கும்.

   திரு. செல்வராஜா அவர்களின் புலம்பெயர் நிலையைக் கருத்திற் கொள்ளும் போது இத்தகைய பதிவுகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவாகவே அவருக்கு உள்ளதை மறுக்க முடியாது. எனவே, ஈழத்தில் வாழும் பழம்பெரும் எழுத்தாளர்களும், ஆய்வாளர்களும் இத்தகைய இலக்கியங்கள் பற்றிய விரிவான தகவல்களை செல்வராஜா அவர்களுக்கு வழங்க ஏற்பாடுகளைச் செய்வார்களாயின் இக்குறைபாட்டையும் அவரால் களைய முடியும் என எண்ணுகின்றேன். பிரித்தானிய நூலகத்தையும் இவர் தனது தேடலுக்குப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பும் பிரித்தானியாவில் உள்ளது.

2. (அ) சில இடங்களில் நூல்வெளியீட்டொழுங்கு பேணப்படாமலுள்ளது. அதாவது பதிவுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் ஒரு நூலின் பல தொகுதிகள் வெளிவந்திருப்பின் பின்னர் உள்ள தொகுதி விபரங்கள் நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளிலும், முன்னாள் உள்ள தொகுதி விபரங்கள் நூல்தேட்டத்தின் பின்னைய தொகுதிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய மயக்கம் வாசகர்களையும், ஆய்வாளர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தலாம்.

   (ஆ) சுவடி ஆற்றுப்படையுடன் ஒப்பு நோக்கும் பொழுது நூல் தேட்டத்தில் ஆண்டு ஒழுங்கில் பதிவுகள் பதிவாக்கப்படவில்லை. “சுவடி ஆற்றுப்படை” முதலாம் தொகுதியானது 1868 ம் ஆண்டில் முஸ்லிம்களால் எழுதப்பட்ட முதல் நூல் எனக் கருதப்படும் 'பேருவளை



படிப்பகம்

www.padippakam.com

செய்கு முஸ்தபா வலியுல்லாஹ் வின்' "மீஸான் மாலை" முதல் - 1949 ம் ஆண்டுவரை வெளிவந்த 198 நூல்களையும் ஆண்டொழுங்கில் பதிவாக்கியுள்ளது. இதே போன்றே சுவடி ஆற்றுப்படையின் இரண்டாம் தொகுதியில் 1950 – 1969ம் காலப் பகுதியிலும், மூன்றாம் தொகுதியில் 1970 – 1995 காலப் பகுதியிலும், நான்காம் தொகுதியில் 1996 – 2000 காலப் பகுதியிலும் வெளியான நூல்கள் பதிவாகி-யுள்ளன. ஆனால், நூல்தேட்டத்தில் ஆண்டொழுங்கு எவ்விடத்திலும் பேணப்படவில்லை.

'நூல்தேட்டம்' காலவரையறை விதிக்கப்படாமல் தொகுக்கப்பட்டுள்ள ஓர் ஆவணக்களஞ்சியமாகும். எனவே, 19ம் நூற்றாண்டில் வெளியான நூல்களும் பதியப்படலாம். 21ம் நூற்றாண்டில் வெளியான நூல்களும் பதியப்படலாம். குறிப்பாக நூலாசிரியர் தனக்குக் கிடைக்கும் நூல்களை கிடைக்கும் ஒழுங்கிலே பதிவாக்கு வதினால் மேற்படி குறைபாடுகள் தவிர்க்க முடியாமல் போவது இயற்கை. "குறிப்பாக, தனக்குக் கிடைக்கும் அல்லது தன் கண்களால் பார்வையிடும் நூல்களை மாத்திரம் பதிய வேண்டும். அப்போது தான் நூறுவீதம் ஆதாரபூர்வமானதாகவும், உண்மையுள்ளதாகவும் தனது பதிவுகள் அமையும்" என்ற கொள்கையில் திரு. செல்வ-ராஜா உறுதியாக இருப்பதினால் ஆண்டொழுங்கினைப் பேண முயன்றால் அவரால் 'நூல் தேட்டம்' முயற்சியே சாத்தியமற்றும் போகலாம். எவ்வாறாயினும் முதல் ஐந்து தொகுதிகளும் வெளியானவுடன் ஐந்து தொகுதிகளையும் தொகுத்து நூல் தேட்டத்தின் பாரிய பதிப்பொன்றைத் தமிழகத்தில் கொண்டுவரும் எண்ணம் நூலாசிரியருக்-குண்டு. அச்சந்தர்ப்பத்தில் ஆண்டொழுங்கினைப் பேணியும் தனது பதிவுகளை அட்டவணைப்படுத்தித் தருவாராயின் மேற்படி குறைபாடுகளை ஓரளவேனும் நிவர்த்திக்க முடியுமானதாக இருக்கும்.

3. (அ)நூல்தேட்டம் நான்கு தொகுதிகளையும் நோக்கும்போது மூன்றாவது தொகுதியில் அச்சுப்பதிப்பு குறை தரத்தில் உள்ளது. குறிப்பாக மூன்றாம் தொகுதியில் 489ம் பக்கம் முதல் 522ம் பக்கம் வரை தலைப்பு வழிகாட்டியும், ஆசிரியர் வழிகாட்டியும் தரப்பட்டுள்ளன. அச்சீட்டில்



படிப்பகம்

இவை மங்கலான அச்சில் இருப்பதினால் சிறிது காலத்தில் இவை அழிந்துவிடலாம்.

(ஆ) புத்தகம் கட்டுதல் (binding) முறையிலும் திருப்தி கொள்ள-முடியவில்லை. முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதி-களை அடிக்கடி புரட்டும்போது தாள்கள் வேறாகிவிடும் அபாயம் உள்ளது.

நூலின் உள்ளடக்க அமைப்பு விடயங்களில் காட்டும் ஆர்வத்தைப் போலவே நூலின் அச்சீட்டின் போதும் நூலாசிரியர் ஆர்வம் காட்டுதல் அவசியமானதாகும். 'நூல்தேட்டம்' ஓர் ஆவணப்பதிவாக்கல் புத்தகம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே, நீண்ட காலம் பாதுகாத்து வைக்க வேண்டிய பொக்கிஷமாக நூல்தேட்டத்தின் ஒவ்வொரு தொகுதியும் இருப்பதினால் தரமான – சீரான அச்சுப்பதிவுடன் தாள்கள் வேறாகி விடாத வண்ணம் 'கடின மட்டை கட்டுதல்' (ஹார்ட் போர்ட் பைண்டிங்) மூலம் புத்தக நிறைவினை மேற்கொள்வது அவசியமானதாகும். நூல்தேட்டத்தின் முதலாம் தொகுதி ஐக்கிய இராச்சியத்தில் அச்சாக்கப்பட்டது. ஏனைய மூன்று தொகுதிகளும் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டன. எனவே, பதிப்பு வேலைகளை நூலாசிரியரினால் நேரடியாக அவதானிக்க முடியாவிடினும் கூட அவர் ஒரு பிரதிநிதியை நியமித்தாவது அவற்றை அவதானிக்கலாம்.

## முடிவுரையும், கருத்துரையும்.

'நூல்தேட்ட முயற்சி' என்பது இலகுவான பணியல்ல. இலங்கை தேசிய ஆவணக்காப்பக நூலகத்தில் சுமார் ஒன்பது இலட்சம் நூல்க-ளும், பேராதனைப் பல்கலைக் கழகநூலகத்தில் சுமார் ஐந்து இலட்சம் நூல்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை தமிழ்மொழி மூலமாக பல ஆயிரக்கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. ஆகவே, 'நூல்தேட்ட' முயற்சியில் முழுமையினைக் காண்பதென்பது மிகவும் கடினமான முயற்சியாகும்.

திரு. என். செல்வராஜா அவர்கள் ஆண்டொன்றுக்கு ஆயிரம் பதிவுகள் என்ற ரீதியில் தனது தேடல் பணியினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். 'நூல்தேட்டம்' நான்காம் தொகுதியின் கணனிப்படுத்தல் வேலைகள் நிறைவடைந்த அடுத்த நிமிடத்திலேயே ஐந்தாம் தொகுதிக்கான பதிவுகளையும் ஆரம்பித்துவிட்டார்.

www.padippakam.com

எனவே, இதே வேகத்தில் நூலாசிரியர் செல்லுமிடத்து ஈழத்துத் தமிழ் நூல்தேட்டத்தின் முழுமையினை நோக்கி அவரால் இலகுவாகப் பயணிக்க முடியும். பொதுவாக 'தேசிய நூற்பட்டிய'லுக்கு தமிழ்மொழி மூலமான நூல்கள் பதிவுக்காக அனுப்பப்படாத நூல்கள் கூட 'நூல்தேட்டத்தின்' பதிவுக்காக ஐக்கிய இராச்சியத்துக்கு நேராக அனுப்பி வைக்கப்படுகின்றதென்றால் இப்பயணத்தில் என்.செல்வராஜா அவர்கள் பெற்றுள்ள 'வெற்றி'யையே அதுபுலப்படுத்துகின்றது. அதேபோல எது விதமான பதிவுகளுக்கும் உட்படுத்தப்படாத இந்தியாவில் அச்சிடப்படும் ஈழத்தவர்களின் தமிழ்மொழி நூல்களும் செல்வராஜாவுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

நிச்சயமாக பக்கச்சார்பற்ற தன்மை, இனவேறுபாடுகளையும், பிரதேச வேறுபாடுகளையும் கருத்திற் கொள்ளாத மனோபக்குவம், அயராத முயற்சி, தொடர்ச்சியான செயற்பாடு, உறுதியான இலட்சியம் போன்ற பண்புகளே திரு. என்.செல்வராஜா அவர்களின் இத்தகைய வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படையை வழங்கி வருகின்றன என்பது வெள்ளிடை மலை.

இத்தகைய பெறுமதிமிக்க நூல்தேட்டஆவணத்தை தமிழ்மொழியில் மாத்திரம் அல்லாமல் இலங்கையின் தேசிய மொழியான சிங்களத்திலும், சர்வதேச மொழியான ஆங்கிலத்திலும் வெளிக்கொணரக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுமிடத்து தேசிய இலக்கிய நீரோட்டத்தில் தமிழ்மொழி நூல்களையும் இனங்காட்ட வாய்ப்பாக அமையும். இதனைத் தனியொரு மனிதனால் சாதிப்பது சிரமமான காரியம், அதிலும் குறிப்பாக திரு. செல்வராஜா அவர்களால் இப்பணி மேற்கொள்ளப்படக்கூடாது. ஏனெனில், அவர் தனது நூல் தேட்டத்தினை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டால் தேசிய சொத்தாகக் கருதப்படக் கூடிய 'நூல்தேட்டம்' தொடரின்மூல வேலைகள் ஸ்தம்பித்துவிடலாம். எனவே, மதத்தையும், கலாசாரத்தையும், தமிழ்மொழியினையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்து சமய கலாசார அமைச்சு, அன்றேல் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன இதுவிடயத்தில் ஆர்வம் காட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இனங்களுக்கிடையே ஒற்றுமை, பரஸ்பர நல்லிணக்கம் போன்ற எண்ணக் கருத்துக்களை முதன்மைப்படுத்திவரும் மேற்குறிப்பிட்ட அரசநிறுவனங்கள் தமிழ்மொழியின் முக்கியத்துவத்தையும்,



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்மொழி மூலமான நூல்களின் தன்மையினையும், உணர்வினையும் பெரும்பான்மைச் சமூகத்தினரின் அவதானத்துக்குக் கொண்டு வர வேண்டும். இதற்கான முதற்படி இதுபோன்ற ஆவணப்பதிவுகளை மொழிபெயர்த்து சிங்கள மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் வெளிக்கொணர்வதேயாகும்.

நிறைவாக 'நூல்தேட்டம்' நான்கு தொகுதிகள் பற்றியும் சுருக்கமாகப் பிரஸ்தாபிப்பதென்றால்….. "நூல்தேட்டம்" என்பது ஒரு தேசிய சொத்து. நூல்தேட்டம் முயற்சிகள் இடைநடுவே நின்றுவிடாது பாதுகாக்க வேண்டியது எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் கடமையாகும். திரு. செல்வராஜா அவர்களும் இந்த முயற்சியினை இடைவிட்டு விடாது தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நிச்சயமாக தமிழ் இலக்கிய வரலாற்றில் "நூல்தேட்டம்" என்பது சாகாவரம் பெற்றதோர் ஆவணமாகப் பதிவாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**- கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் -**



படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

## நூல்தேட்டம் (ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும் இரண்டாவது தொகுதி 2004இலும் மூன்றாவது தொகுதி 2005இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான நான்காவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக்குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் நான்காவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 3001இலிருந்து 4000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன.

## தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்-



படிப்பகம்

www.padippakam.com

கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.

இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.

முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

## பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர்



படிப்பகம்

www.padippakam.com

மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

## நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே



படிப்பகம்

www.padippakam.com

வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாத-விடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்-டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்த அமைவது சிறப்பம்-சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்-படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில்



படிப்பகம்

குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

## பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பா-விலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்-கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும்.

www.padippakam.com

ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

## வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம்.

## நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள ஐந்தாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

# நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்படும் வகுப்புப் பிரிவு

(டூவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

## பிரதான பிரிவுகள்

| | |
|---|---|
| **000-099** | **பொதுப்பிரிவு** |
| **100-199** | **மெய்யியல்துறை** |
| **200-299** | **சமயங்கள்** |
| **300-399** | **சமூக விஞ்ஞானங்கள்** |
| **400-499** | **மொழியியல்** |
| **500-599** | **தூய விஞ்ஞானங்கள்** |
| **600-699** | **பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்** |
| **700-799** | **கலைகள், நுண்கலைகள்** |
| **800-899** | **இலக்கியம்** |
| **900-999** | **புவியியல், வரலாறுகள்** |

### 000 பொதுப்பிரிவு

| | | |
|---|---|---|
| *000* | *பொது அறிவு* | *3001-3014* |
| *001* | *கணனியியல்* | |
| *010* | *நூலியல், நூல்விபரப்பட்டியல்* | *3015* |
| *020* | *நூலகவியல், தகவல் விஞ்ஞானம்* | *3016-3020* |
| *030* | *கலைக்களஞ்சியங்கள்* | |
| *050* | *பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள்* | *3021-3023* |
| *051* | *பருவஇதழ் சிறப்பிதழ்கள்* | *3024-3036* |
| *053* | *வழிகாட்டிகள்* | |
| *060* | *பொது நிறுவனங்கள்* | |
| *070* | *ஊடகவியல், வெளியீட்டுத்துறை* | *3037-3043* |



படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| **100** | **மெய்யியல்துறை** | |
| *100* | தத்துவவியல் | *3044* |
| *150* | உளவியல் | *3045-3046* |
| *170* | ஒழுக்கவியல் | *3047-3054* |
| *180* | இந்து தத்துவம் | *3055-3057* |
| *190* | சோதிடம், வானசாஸ்திரம் | *3058-3060* |
| **200** | **சமயங்கள்** | |
| *210* | பொதுச்சமயம் சார்பானவை | |
| *220* | கிறிஸ்தவம் | *3061-3081* |
| *220.1* | கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் | *3082-3084* |
| *294.3* | பௌத்தம் | *3085-3088* |
| *294.5* | இந்து சமயம் | *3089-3109* |
| *294.5(1)* | இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் | *3110-3121* |
| *297* | இஸ்லாம் | *3122-3159* |
| *297.93* | பஹாய் மதம் | *3160* |
| **300** | **சமூக விஞ்ஞானங்கள்** | |
| *301* | சமூகவியல் | *3161-3167* |
| *301.1* | பண்பாடு | *3168-3170* |
| *302* | பெண்ணியம் | *3171-3176* |
| *305.5* | சாதியம் | *3177* |
| *306* | கலாச்சாரம் | *3178-3179* |
| *310* | புள்ளிவிபரவியல் | |
| *315* | ஆசிய புள்ளிவிபரவியல் | *3180* |
| *320* | அரசறிவியல் | *3181-3215* |
| *330* | பொருளியல் | *3216-3217* |
| *331.88* | தொழிற் சங்கங்கள் | *3218* |
| *334* | கூட்டுறவு | |
| *336* | நிதியியல், வங்கியியல் | |
| *338* | பொருளாதார வளங்கள், மீன்வளம் | *3219* |
| *340* | சட்டவியல் | *3220-3222* |
| *340.59* | இஸ்லாமியச் சட்டங்கள் | *3223-3224* |
| *342* | அரசியலமைப்புச் சட்டம் | |
| *350* | பொது நிர்வாகம் | *3225* |




படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| 360 | சமூக சேவை நிறுவனங்கள் | 3226-3230 |
| 363 | சுற்றாடல், சூழல் மாசுபடுதல் | 3231 |
| 364 | பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள் | 3232 |
| 370 | கல்வியியல் | 3233-3248 |
| 370.1 | கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள் | 3249-3270 |
| 380 | வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து | |
| 381 | வர்த்தகம் | 3271-3273 |
| 388 | தரைப்போக்குவரத்து | |
| 390 | நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும் | 3274-3276 |
| 390.1 | இடப்பெயர் ஆய்வு | |
| 391.7 | அணிகலன்கள், உடல் அலங்காரங்கள் | |
| 392 | வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள் | 3277 |
| 392.5 | திருமணங்கள், சடங்கு முறைமைகள் | 3278-3282 |
| 394 | பொது வழமைகள் | |
| 395 | நாட்டார் கலைகள் | 3283 |
| 398 | கிராமிய இலக்கியங்கள் | 3284-3292 |
| 398.1 | பழமொழிகளும் விடுகதைகளும் | 3293-3294 |
| **400** | **மொழியியல்** | |
| 420 | ஆங்கில மொழி | |
| 430 | ஜேர்மன் மொழி | |
| 439.81 | டெனிஷ் மொழி | 3295 |
| 491.2 | சமஸ்கிருத மொழி | |
| 491.48 | சிங்கள மொழி | 3296-3297 |
| 494.8 | தமிழ் மொழி | 3298-3300 |
| 494.8(1) | தமிழ் இலக்கணம் | 3301 |
| 494.8(2) | தமிழ்ப் பாடநூல்கள் | 3302-3305 |
| **500** | **தூய விஞ்ஞானங்கள்** | |
| 500 | தூய விஞ்ஞானம் | |
| 510 | கணிதம் | 3306-3308 |
| 520 | வானியல் விஞ்ஞானம் | |
| 527 | விண்வெளிப்பயணம் | |
| 550 | புவியியல் விஞ்ஞானம் | |
| 551.47 | சுனாமி | 3309-3310 |
| 570 | உயிரியல் | 3311-3312 |




படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| 580 | தாவரவியல் | 3313 |
| **600** | **தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்** | |
| 601 | தொழில்நுட்பம் | 3314-3316 |
| 610 | மருத்துவம் | |
| 612 | உடற்கூற்றுத் தொழிலியல் | |
| 613 | பொது உடல்நலவியல் | |
| 613.7 | யோகக்கலை | |
| 614 | பொதுச் சுகாதாரம் | 3317 |
| 616 | நோய்கள் | |
| 618 | பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் | |
| 619 | கீழைத்தேய மருத்துவம் | |
| 619.1 | சித்த மருத்துவம் | 3318 |
| 630 | விவசாயமும் அது சார்ந்த துறைகளும் | 3319-3321 |
| 640 | இல்லப்பொருளியல், குடும்பக்கலை | 3322-3325 |
| 642 | உணவும் பரிமாறலும் | 3326-3327 |
| 646 | தையற் கலை, உடையலங்காரம் | |
| 649 | குழந்தைப் பராமரிப்பு | |
| 650 | முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் | |
| 653 | தட்டச்சு, சுருக்கெழுத்து | |
| 657 | கணக்கியல் | |
| 658 | விளம்பரத்துறை | |
| **700** | **கலைகள், நுண்கலைகள்** | |
| 701 | பொதுக்கலைகள் | 3328-3330 |
| 730 | சிற்பக்கலை | |
| 750 | ஓவியக்கலை | 3331-3334 |
| 750.(1) | ஒப்பனைக்கலை | |
| 770 | புகைப்படக்கலை | 3335 |
| 780 | இசைக்கலை | 3336-3339 |
| 790 | நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும் | |
| 791 | நாட்டியக் கலை | 3340-3342 |
| 791.1 | நாட்டிய நாடகங்கள் | |
| 792 | அரங்கியல், நாடகக்கலை | 3343-3345 |
| 793 | திரைப்படக்கலை | 3346 |
| 796 | உடற்பயிற்சி, விளையாட்டுகள் | 3347-3350 |




படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| **800** | **இலக்கியம்** | |
| 800.(1) | இலக்கிய அமைப்புகள் | |
| 801 | சிறுவர் இலக்கியங்கள் | |
| 801.(1) | சிறுவர் பாடல்கள், கவிதைகள் | 3351-3359 |
| 801.(2) | சிறுவர் நாடகங்கள் | 3360-3361 |
| 801.(3) | சிறுவர் கவிதா நாடகங்கள், காவியங்கள் | |
| 801.(4) | சிறுவர் சிறுகதைகள் | 3362-3373 |
| 801.(5) | சிறுவர் நாவல்கள் | 3374-3378 |
| 801.(6) | சிறுவர்க்கான கட்டுரைகள் | 3379-3381 |
| 801.(7) | சிறுவர்க்கான பலவின நூல்கள் | 3382 |
| 891.2 | சமஸ்கிருத இலக்கியம் | 3383 |
| 891.48 | சிங்கள இலக்கியம் | |
| 894.8 | தமிழ் இலக்கியம் | 3384-3389 |
| 894.8(1) | தமிழ்க் கவிதைகள் | 3390-3519 |
| 894.8(2) | தமிழ் நாடகங்கள் | 3520-3536 |
| 894.8(3) | தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள் | 3537-3547 |
| 894.8(4) | தமிழ்ச் சிறுகதைகள் | 3548-3651 |
| 894.8(5) | தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் | 3652-3735 |
| 894.8(6) | இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள் | 3736-3801 |
| 894.8(7) | பலவினத் தொகுப்பு | 3802-3830 |
| 899 | பிறமொழி இலக்கியங்கள் | |
| 899.(1) | பிறமொழிக் கவிதைகள் | 3831 |
| 899.(2) | பிறமொழி நாடகங்கள் | 3832 |
| 899.(3) | பிறமொழிக்கவிதைநாடகங்கள், காவியங்கள் | |
| 899.(4) | பிறமொழிச் சிறுகதைகள் | 3833-3835 |
| 899.(5) | பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள் | 3836-3838 |
| 899.(6) | மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் | |
| **900** | **புவியியல், வரலாறுகள்** | |
| 909 | நாகரீகங்கள் | 3839 |
| 910 | பொதுப் புவியியல் | 3840-3841 |
| 911 | பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் | 3842-3845 |
| 912 | தேசப்படங்கள் | 3846 |
| 915 | பிரதேசப் புவியியல் | 3847 |
| 920 | வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள் | |
| 920.01 | துறைசாரா வாழ்க்கைவரலாறுகள் | 3848-3851 |
| 920.1 | ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர் | 3852-3857 |




படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| 921 | மெய்யியலாளர் | |
| 922 | சமயத் தலைவர், சிந்தனையாளர் | 3858-3865 |
| 923 | சமூகவியல்துறை சார்ந்தோர் | 3866-3868 |
| 923.1 | பெண்ணியவாதிகள் | |
| 923.2 | அரசியல் துறையினர் | 3869-3882 |
| 923.3 | பொருளியலாளர்கள் | |
| 923.4 | சட்ட அறிஞர்கள் | 3883 |
| 923.5 | பொது நிர்வாகத்துறையினர் | |
| 923.6 | சமூக சேவகர்கள் | |
| 923.61 | விடுதலைப் போராளிகள் | 3884-3889 |
| 923.7 | கல்வியியலாளர்கள் | 3890-3900 |
| 923.8 | வர்த்தகர்கள் | 3901 |
| 923.9 | நாட்டாரியல் அறிஞர்கள் | |
| 924 | மொழியியலாளர்கள் | 3902-3905 |
| 925 | விஞ்ஞானிகள் | |
| 926 | பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் | 3906-3907 |
| 927 | கலைஞர்கள் | 3908-3909 |
| 927.3 | சிற்பக்கலைஞர் | 3910 |
| 927.5 | ஓவியக்கலைஞர்கள் | 3911-3912 |
| 927.8 | இசைக்கலைஞர்கள் | 3913 |
| 927.91 | நாட்டியக் கலைஞர்கள் | 3914 |
| 927.92 | நாடகக் கலைஞர்கள் | 3915-3917 |
| 927.93 | திரைப்படக்கலைஞர்கள் | |
| 927.94 | விளையாட்டு வீரர்கள், பிரமுகர்கள் | |
| 928 | இலக்கிய அறிஞர்கள் | 3918-3955 |
| 929 | வம்சாவளி ஆய்வுகள் | |
| 950 | ஆசிய வரலாறு | 3956-3959 |
| 954.93 | இலங்கை வரலாறு | 3960 |
| 954.93(1) | இலங்கையின் பொது வரலாறு | |
| 954.93(2) | இலங்கை இனப்பிரச்சினை வரலாறு | 3961-3964 |
| 954.93(3) | இனங்கள் இன உறவுகள் | 3965-3977 |
| 954.93(4) | பிரதேச வரலாறு | 3978-3988 |
| 954.93(5) | தொல்லியலாய்வு | |
| 999 | இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் | 3989-4000 |
| | பின்னிணைப்பு | 1-21 |




படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



# 000 பொதுப் பிரிவு

## 000 பொது அறிவு

### 3001

**அறிவொளி: தரம் 4, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கானது.** *சிஹாரா மஜீட். மாவனல்ல: சிஹாரா மஜீட், 69 ஹெம்மாத்தகம வீதி, 1வது பதிப்பு, 2005. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்டர்ஸ், 44, புகையிரத நிலைய வீதி)*

*171 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 220., அளவு: 28.5x21 சமீ.* ISBN: *955-98950-0-1.*

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கேற்ப தரம் 4,5, பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இப்பயிற்சிநூல், தமிழ், கணிதம், சுற்றாடற் கல்வி, ஆக்கம், அழகியல் ஆகிய தலைப்புக்களில் சகல பாட அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களினதும், தரம் நான்கில் கல்வி கற்கும் மாணவர்களினதும் அறிவுத் தாகத்தைத் தீர்த்துவைக்கும் நோக்கில் இந்நூல் உருவாக்கப்பட்டது.

### 3002

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா-விடைகள்: தொகுதி 1.** *பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997.* (Colombo 12: Aico (Pvt) Ltd, 218/5 Messenger Street)

iv, *98 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 28x21.5 சமீ.*

இலங்கையில் மாணவர்கள் எதிர்நோக்கும் முதலாவது அரசாங்கப் பரீட்சை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையாகும். மாணவர்களை பிரபல்யமான பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5இல் நடத்தப்படும் இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாகும். புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இந்நூலில் பகுதி 1, பகுதி 2க்கான 24 மாதிரி வினாப்பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



### 3003

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா-விடைகள்: தொகுதி 2.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (Colombo 12: Aico (Pvt) Ltd, 218/5 Messenger Street)

*113 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 28x21.5 சமீ.*

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி நூல். இவ்விரண்டாம் தொகுதியில் மாதிரி வினாப்பத்திரங்கள் 25 முதல் 44 வரை இடம்பெற்றுள்ளன.

### 3004

**தரம் 4 புலமைப் பரிசில் மாணவர் வழிகாட்டி.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை)

*(2), 78 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 27x21 சமீ., ISBN: 955-8913-19-7.*

இது சிந்தனை வட்டத்தின் 195ஆவது வெளியீடு. 2005ம் ஆண்டில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான தரம் 04க்குரிய மாணவர் வழிகாட்டி. மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் கொண்டது.

### 3005

**நவீன பொது அறிவு சுடர்.** எஸ்.எல்.எம். மஹ்ரூப். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே)

*272 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-8913-26-x.*

சமகாலப் பொது அறிவுத் தகவல்களை உள்ளடக்கிய இந்நூல், அதிபர் பரீட்சைகள், ஆசிரியர் ஆட்சேர்ப்புப் பரீட்சைகள், க.பொ.த. உயர்தர மாணவர்களின் கல்விப்பொதுச் சாதாரணதரப் பரீட்சை உட்பட



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் நடைபெறும் சகல தரங்களிலுமான பொது அறிவு வினாப்பத்திரங்களுக்கு ஏற்றவாறு அடிப்படை அறிவுடன் புதிய தகவல்களையும் உள்ளடக்கியது. இது சிந்தனை வட்டத்தின் 210ஆவது வெளியீடு.

## 3006

**பல்சுவைச் சுரங்கம்.** இ.சிறீஸ்கந்தராசா. கொழும்பு 06: இ.சிறீஸ்கந்தராசா, 93, பீட்டர்சன் ஒழுங்கை, E15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

100 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 18.5X13 சமீ.

1300 பல்சுவைத் தகவல்கள், புதுமைச் செய்திகள், ஒருவரி, இருவரி மூன்றுவரிச் செய்திகள் என்பனவற்றைக் கொண்ட தொகுப்பு.

## 3007

**புலமைச் சுடர் 02.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜுலை 2004. (கட்டுகஸ்தொட்டை: ஜே.ஜே. பதிப்பகம், இல. 122, கலகெதர வீதி).

80 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20X14 சமீ.

சிந்தனை வட்டத்தின் 188வது வெளியீடு. தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான பயிற்சி வழிகாட்டிக் குறிப்பேடுகளின் தொகுப்பு. எண் புலமை, சொற் புலமை, மொழிப் புலமை, ஆய்ந்தறிதற் புலமை, தர்க்கப் புலமை, கணிதப் புலமை, கட்புலமை ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. பகுதி 1, 2 ஆகியவற்றில் இடம்பெறும் வினாக்களைத் தழுவிய வழிகாட்டலாக குறிப்பேடுகள் இணைக்கப்பட்டுள்ளன.

## 3008

**புலமைப் பரிசில் ஆரம்ப வழிகாட்டி.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஜனவரி 2000, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருணாகலை வீதி).



படிப்பகம்

www.padippakam.com



60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28X21.5 சமீ.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் போது ஒன்றிணைக்கப்பட்ட பாடத் திட்டத்தின்கீழ் தரம் 3, தரம் 4 பாடப் பரப்புகளையும் தழுவியதாகவே பரீட்சை வினாக்கள் இடம்பெறும். எனவே அதற்கேற்ப தரம் 3, தரம் 4 பாடத்திட்டத்தைத் தழுவியதாகத் தயாரிக்கப்பட்ட மாணவர் வழிகாட்டி நூல் இதுவாகும். இந்நூலில் மொத்தமாக பத்து மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## 3009

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 1** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருநாகலை வீதி)

82 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28X22 சமீ.

1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன.

## 3010

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 2.**பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருநாகலை வீதி)

76 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28X22 சமீ.

1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும்.

## 3011

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 3.**பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு,



படிப்பகம்

www.padippakam.com



ஏப்ரல் 1998. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருநாகலை வீதி)

76 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 28X22 சமீ.

1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. இந்நூல் 3 தொகுதிகளில் வெளிவந்துள்ளது.

## 3012

**பொது அறிவு.** ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: ஓட்டோ அச்சகம், 122 சென்ட்ரல் வீதி).

(4), 283 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22X14.5 சமீ.

46 தலைப்புக்களின் கீழ் பொது அறிவு வினாக்களும் விடைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. விஷேட இணைப்பாக பொதுப் பரீட்சைகளுக்கான "எளிதில் எண்கணிதம்" என்ற பகுதியும் 255-283ம் பக்கங்களில் வினா-விடைகளாகத் தரப்பட்டுள்ளன.

## 3013

**பொது அறிவு.** வி.என்.எஸ். உதயச்சந்திரன். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 13: ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

272 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5X15 சமீ., ISBN: 955-96393-3-1.

200க்கும் அதிகமான புகைப்படங்களுடன் 1600க்கும் அதிகமான புதிய தகவல்களுடன் தமிழில் முதன்முதலில் வெளிவரும் பொது அறிவுப் பெட்டகம். எமது பொது அறிவை நாமே பரீட்சித்துக் கொள்ள உதவும் நூல். பொது அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் பல நூல்கள் வெளிவந்திருப்பினும், இந்நூல் அவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டு நிற்கின்றது. விடயங்களை அத்தியாயங்களாகப் பிரித்தெடுத்திருக்கும் முறைமை, அவ்விடயங்களை வினாவிடை அமைப்பில் தொடுத்துள்ள முறைமை, இலகுவான, திருத்தமான



படிப்பகம்

www.padippakam.com



மொழிப் பயன்பாடு, முக்கியமான இடத்தில் தரப்பட்டிருக்கும் விபரப்படங்கள் என்பன இந்நூலைத் தனித்துவம் மிக்கதாக்குகின்றன.

### 3014

**பொது உளச்சார்பு: நுண்ணறிவு பொது விவேகம்.** ஏ.எல்.எம்.பளீல். கல்முனை: பல்கலைக்கழக கல்வி நிலையம், 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் லிமிட்டெட்).

160 பக்கம், விலை: ரூபா 145., அளவு: 21x13.5 சமீ.

பொது உளச்சார்பு என்பது கடினமான ஒரு விடயமல்ல. அறிவியல் வாழ்வுக்கான வழிகாட்டி. இது கற்பிக்கப்படவேண்டிய ஒரு பாடமாகவன்றி, தானாகக் கற்கப்படவேண்டிய துறையாக விளங்குகின்றது. இதன் அடிப்படையில் எண்ணறிவு, மொழியறிவு, கட்புலனறிவு, சுருக்கப்பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ள பொது உளச்சார்பு என்ற இந்நூல் பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டியாக அமைந்துள்ளது. பொது உளச்சார்பில் நுண்ணறிவு, பொது விவேகம், ஆகியன விரிவான உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூலாசிரியரின் **நுண்ணறிவு: பொது உளச்சார்பு: பொது விவேகம்** என்ற தலைப்பிலான நூலொன்று நூல்தேட்டம் பதிவு 2012இல் காணப்படுகின்றது)

## 010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

### 3015

**நூல்தேட்டம்: தொகுதி 3.** என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கொழும்பு 12: Kumaran Press Private Limited, 361, ½ Dam Street).

xxiv, 522 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 10., அளவு: 21x14.5 சமீ., ISBN 0-9549440-2-x.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்-பட்டியல். இம் மூன்றாம் தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவிதசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரி-யாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 2001-3000 வரை தொடர்



படிப்பகம்

www.padippakam.com



இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை நூலின் சிறப்பம்சமாகும்.

# 020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

## 3016

**அறிவாலயம்: திறப்பு விழாச் சிறப்பு மலர்.** அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி (மலராசிரியர்). இணுவில்: இணுவில் திருவூர் ஒன்றியம், 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம்: சாம்பவி பதிப்பகம், 276, கஸ்தூரியார் வீதி).

xxxiv, 179 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 27.5X20.5 சமீ.

இணுவில் திருவூர் ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்ட **அறிவாலயம்** என்ற பொது நூலகத்தின் திறப்பு விழா 20.03.2005இல் இடம்பெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். திரு. ஆறு திருமுருகன் அவர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் சேகரித்த நிதிஉதவியை வழங்கி இந்த நூலகம் உருவாக வசதிசெய்துள்ளார். நூலகவியல் சார்ந்த அரிய பல கட்டுரைகளையும் அறிஞர்களின் கருத்துக்க்ளையும் உள்வாங்கி உருவாகியுள்ள இம்மலரின் உருவாக்கக் குழுவில் பேராசிரியர் சபா ஜெயராஜா, ஆறு திருமுருகன், அ.ஸ்ரீகாந்தலட்சுமி, ச.வே.பஞ்சாட்சரம், மு.சிவலிங்கம், ந.ஞானசூரியர் ஆகியோர் அங்கம் வகித்துள்ளனர்.

## 3017

**இலங்கையில் நூலகச் சட்டங்கள்.** மைதிலி விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 56/5, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், 1வது பதிப்பு, மே 2005. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரிண்டர்ஸ், 717, காங்கேசன்துறை வீதி).

xiv, 65 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5X13 சமீ.

இந்நூலாசிரியர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகவும், இலங்கை நூலகச் சங்கத்தின் விரிவுரையாளராகவும் பணியாற்றும் ஆசிரியராவார். இந்நூலின் உள்ளடக்கம், இலங்கையில் நேரடியாகப் பயன்படும் நூலகச் சட்டங்களுடன், நூலகத்துறை சார்ந்தவர்கள் அறிந்துகொள்ள



படிப்பகம்

www.padippakam.com



வேண்டிய வேறு சட்டங்களையும் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஏழு அத்தியாயங்களில் சட்டங்கள்- பொது அறிமுகம், இலங்கைத் தேசிய ஆவணவாக்க சேவைகள் சபை, இலங்கை நூலகச் சங்கம், மத்திய மாகாண நூலக சேவைகள் சபை, இலங்கையில் பதிப்புரிமை, இலங்கைத் தேசிய ஆவணக் காப்பகம், இலங்கையில் அச்சிடுவோரும் வெளியிடுவோரும் ஆகிய விடயங்கள் தரப்பட்டுள்ளன.

## 3018

**சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்: திறப்புவிழாச் சிறப்பு மலர்.** மலர்க் குழு. தெல்லிப்பழை: சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 1வது பதிப்பு, 2002. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xxviii, 55 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழாவன்று (07.01.2000) எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக 2002இல் உருவாக்கப்பட்ட ஆய்வு நூலகத்தின் திறப்புவிழாவின் நினைவாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. நூலக வளர்ச்சியில் ஐரோப்பியப் பாரம்பரியங்களும் தமிழ்ப் பாரம்பரியங்களும் (சபா.ஜெயராஜா), நூல் நிலையம் (தமிழ்க் கலைக்களஞ்சியம்), பொது நூலகம் குறைபாடுகளும் தீர்வுகளும் (இராஜேஸ்வரி கருணானந்தராஜா), தீட்சண்யங்களின் திறவுகோல் நூலகம் (கோகிலா மகேந்திரன்), நூலகம் சமூகத்தின் மாங்கல்யம் (குமாரசுவாமி சோமசுந்தரம்), பாடசாலை நூலகங்களின் அமைப்பும் அதன் வளர்ச்சிப் போக்கும் (ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி), இன்று தமிழ் மொழியில் உரைகள்: ஒரு நுனிந்த நோக்கு (மனோன்மணி சண்முகதாஸ்), பண்டைய ஈழத்தில் தாய்த்தெய்வ வழிபாடு: ஒரு வரலாற்று நோக்கு (சி.க.சிற்றம்பலம்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 3019

**நூலகமும் சமூகமும்.** மைதிலி விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 56/5, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், 1வது பதிப்பு, நவம்பர் 2004. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

xiv, 114 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x13.5 சமீ., ISBN: 955-98901-0-7.



படிப்பகம்

www.padippakam.com



நூலகமும் சமூகமும், அச்சுக்கலை, நூலகவியலில் சமூக தொடர்பாடல், பொதுசன உறவு முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ள இந்நூல் குறிப்பாக, நூலகவியல் முதலாம் ஆண்டுக் கற்கைநெறி மாணவர்களை மனங்கொண்டு எழுதப்பட்டதாயினும் துறைசார் அறிவை விருத்திசெய்ய விழையும் எவர்க்கும் பயனளிப்பதாயுள்ளது. இந்நூல் ஏழு இயல்களைக் கொண்டுள்ளது. அச்சுக்கலையின் சமூகவிளைவுகள், நூலகப் பாரம்பரிய சேவையில் அச்சு முறைமையின் தாக்கம், நூலகமும் சமூகமும், நூலகவியலின் ஐந்து விதிகள், நூலக நீதிநெறி, தொடர்பாடல், மக்கள் தொடர்பு ஆகியவை அவை.

### 3020

**நூலியல் பதிவுகள்.** *என்.செல்வராஜா. உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).*

*103 பக்கம், விலை: ரூபா 200., ஸ்டேர்லிங் பவுண் 5., அளவு: 20.5x14.5 சமீ.*

நூலியல், நூல் வெளியீட்டுத்துறை, நூலகவியல் துறையுடன் தொடர்பான பதினொரு கட்டுரைகளின் தொகுப்பு, இவை லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் ஐபீ.சீ.அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காலைக்கலசம் நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகி, பின்னர் தேசம் (லண்டன்), வடலி (லண்டன்), தமிழர் தகவல் (கனடா), மலேசியத் தமிழ் இலக்கியம் (தேசம் சிறப்பிதழ்), ஞானம் (கொழும்பு), பூபாள இராகங்கள் 2005 (லண்டன்), நமது இலக்கு (ஜேர்மனி) ஆகிய இதழ்களில் மீள்பிரசுரம் செய்யப்பட்டன.

## 050 பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள்

### 3021

**நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள்.** *டொமினிக் ஜீவா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2002. (கொழும்பு 13: யு.கே.பிரிண்டர்ஸ், 98A, விவேகானந்தா மேடு)*



படிப்பகம்

www.padippakam.com



*138 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *955-8250-20-1.*

மறுமலர்ச்சி, ஈழகேசரி, பாரதி, கலைச்செல்வி, சிரித்திரன், தீர்த்தக்கரை, மல்லிகை ஆகிய ஈழத்தின் சிறுசஞ்சிகைகள் பற்றிய விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பு. இவற்றில் பெரும்பாலானவை மல்லிகை இதழ்களில் பிரசுரமானவை. டொமினிக் ஜீவா, தெளிவத்தை ஜோசப், சிற்பி, செங்கை ஆழியான், செ.யோகராசா, வரதர் ஆகியோர் இதிலுள்ள பதினொரு கட்டுரைகளையும் எழுதியிருந்தனர்.

## 3022

**பிரான்ஸ் தமிழர் வழிகாட்டி 2006.** *கிருஷ்ணா அச்சகம். பிரான்ஸ்: கிருஷ்ணா அச்சகம்,* Imprimerie Krishna, 73, Rue Doudeauville, 75018 Paris, *1வது பதிப்பு, 2006. (பிரான்ஸ்: கிருஷ்ணா அச்சகம்,* Imprimerie Krishna, 73, Rue Doudeauville, 75018 Paris).

*144 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

கிருஷ்ணா அச்சகம் பாரிசில் தொடங்கப்பட்டு 19ஆவது ஆண்டில் அந்நிறுவனத்தினால் இந்த வர்த்தக வழிகாட்டியும் உருவாக்கப்பட்டுள்ளது. பாரிசின் சுற்றுலாத் தலங்கள், அருங்காட்சியகங்கள், அண்டைநாடுகள், மொழிகள் எனப் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உதவக்கூடிய பல்வேறு தகவல்களும் வர்த்தக விளம்பரங்களும் இவ்வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரான்சில் வெளியான முதலாவது தமிழ் வர்த்தக வழிகாட்டியாக இது கருதப்படுகின்றது.

## 3023

**மருதம் கலாசார விழா சிறப்பு மலர். 2003.** *மலர் வெளியீட்டுக் குழு. வெல்லாவெளி: கலாச்சாரப் பேரவை, பிரதேசச் செயலகம், போரதீவுப் பற்று, 1வது பதிப்பு, 2003. (மட்டக்களப்பு: எவர்கிரீன் அச்சகம், 93, திருக்கோணமலை வீதி).*

xvi, *72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.*

போரதீவுப் பற்று பிரதேச கலாசார விழாவினையொட்டி வெளிவரும் மருதம் இரண்டாவது மலர் இதுவாகும். போரதீவுப் பற்றின் பழம்பெரும் பதிகளுள் ஒன்றான மண்டூர் முருகன் ஆலயச் சிறப்பு, போரதீவுப் பற்றின் தமிழர் கலாச்சாரம், நீர்ப்பாசன முகாமைத்துவத்



படிப்பகம்

www.padippakam.com



திட்டங்கள், சூழல் பாதுகாப்பு, பிரதேசக் கல்வி வளர்ச்சியில் இடைவிலகலின் தாக்கம், மண்ணின் மைந்தர்கள், மட்டக்களப்புப் பிரதேச ஆட்சியாளர்கள் ஆகிய விடயங்கள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. World Vision என்ற நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள இம்மலர், அத் தொண்டர் அமைப்பின் சமூகப் பணிகள் பற்றிய தகவல்களையும் பிரத்தியேகமாகக் கொண்டுள்ளது.

## 051 பருவஇதழ் சிறப்பிதழ்கள்

### 3024

**கதிரொளி: விழா மலர் 1976.** மு.ஆ.கந்தவேல் (ஆசிரியர்). *பருத்தித்துறை: சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, 1வது பதிப்பு, 1976. (பருத்தித்துறை: ஊழியன் அச்சகம்).*

*(148) பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.*

*8.3.1974 முதல் கையெழுத்துப் பத்திரிகையாக வெளிவந்த கதிரொளி மாத இதழ் மேற்படி சனசமூக நிலையத்தின் 1976ஆவது ஆண்டு விழா மலராக அச்சில் வெளிவந்துள்ளது. இச்சிறப்பிதழில், ஈழத்து சிறுகதை வரலாற்றில் 20ம் நூற்றாண்டு நோக்கு (செல்வி சு.இராஜலட்சுமி), ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளும் தமிழரும் (ஆ.தேவராசன்), தமிழ்த் தெய்வம் முருகன் (பொ.கணபதிப்பிள்ளை), புலோலியூர்ப் புலவர்கள் (புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளுடன், சிறுகதைகள், சிறு துணுக்குகள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.*

### 3025

**தமிழர் தகவல் பதின்ம மலர்.** *எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (*Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4*).*

*168 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21.5 சமீ.,* ISSN:*1206-0585.*



படிப்பகம்

www.padippakam.com



பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் **தமிழர் தகவல்** மாத சஞ்சிகையின் 15ஆவது ஆண்டு நிறைவு மலர். கனடியத் தமிழ்மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது.

## 3026

**தொண்டன்: வெள்ளிவிழாச் சிறப்பு மலர்.** கிங்ஸ்லி றொபர்ட் (ஆசிரியர்). மட்டக்களப்பு: சமூகத் தொடர்பு நிலையம், திருக்கோணமலை-மட்டக்களப்பு மறை மாவட்டம், த.பெ.இல. 44, 1வது பதிப்பு, ஜனவரி 1994. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).

(4), 108 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 24X19 சமீ.

**தொண்டன்** கிறிஸ்தவ இலக்கியத் திங்களேடு 1969இல் தொடங்கப் பெற்று 25 ஆண்டுகள் கழிந்த நிலையில் டிசம்பர் 1993-ஜனவரி 1994 இதழ் (மலர் 25, இதழ் 10), 25வது ஆண்டு வெள்ளிவிழாச் சிறப்பிதழாக 29 ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. பிரதம ஆசிரியராக கிங்ஸ்லி றொபர்ட், இணை ஆசிரியராக மலர்வேந்தன், துணை ஆசிரியர்களாக எஸ்.லோகநாதன், கண.மகேஸ்வரன், பி.ஜோசப், எப்.எக்ஸ்.டயஸ் ஆகியோர் இம்மலரின் ஆக்கத்தில் பங்கேற்றுள்ளனர்.

## 3027

**ப்ரியநிலா: மீலாத் சிறப்பு மலர் 2005.** உயன்வத்தை றம்ஜான் (ஆசிரியர்). தெவனகலை: ப்ரியநிலா, 193, உயன்வத்தை, 1வது பதிப்பு, ஜூன் 2005. (மாவனல்லை: U.L.M. Hilmy, Milano Graphics)

38 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 27x21 சமீ., ISSN:1391-14855.

காலாண்டு இலக்கியச் சஞ்சிகையாக வெளிவரும் ப்ரியநிலாவின் 2005ம் ஆண்டுக்கான மீலாத் சிறப்பு மலர் இதுவாகும். வழமையான சஞ்சிகையின் ஆக்க இலக்கிய அம்சங்களுடனும், சிறப்புக் கட்டுரைகளுடனும், ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளாகி இறையடியெய்தியவர்களுக்குச் சமர்ப்பணமாக வெளிவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3028

**புதினம் 10-வது ஆண்டு மலர்.** ஈ.கே.ராஜகோபால். லண்டன் SW17 7EZ: புதினம் வெளியீடு, 38, Moffat Road, 1வது பதிப்பு, மே 2006. (Chennai 600005: Sri Raghavendra Laser Printers, No.15, Thanappan Street, Triplicane).

*80 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*1994ம் ஆண்டு முதல் மாதம் இரு இதழ்களாக லண்டனிலிருந்து வெளிவரும் புதினம் பத்திரிகையின் 10ஆவது ஆண்டுவிழா 20.5.2006 அன்று லண்டனில் இடம்பெற்ற வேளை வெளியிடப்பட்ட மலர் இது. ஏ.எஸ்.கணேசன், விமல் சொக்கநாதன், சசிபாரதி சு.சபாரத்தினம், எஸ்.எம்.கோபாலரத்தினம், கே.ஜி.மகாதேவா, பொ.சண்முகநாதன், வா.மா.குலேந்திரன், பொன்.பாலசுந்தரம், எஸ்.தியாகராஜா, கோபன் மகாதேவா, என்.செல்வராஜா, ஐ.தி.சம்பந்தன், ம.சுதாகரன், சிவா பிள்ளை, மனோ மயில், ச.ஸ்ரீரங்கன், த.ஜெயபாலன், ஆகியோரின் கட்டுரைகளும் மனோ ஜெகேந்திரன், மஞ்சு மயூரன், ப.வை.ஜெயபாலன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. புதினம் பத்திரிகை ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால், யாழ்ப்பாணத்தில் ஈழநாடு, கொழும்பில் தினகரன் ஆகியவற்றில் ஆசிரியர் குழுவில் ஒருவராகச் செயற்பட்டவர். 1985முதல் குடும்பத்தினருடன் லண்டனில் வாழ்ந்து வருகின்றார்.*

## 3029

**பூம்பொழில்: விழா மலர் 1973.** மலர்க்குழு. கொழும்பு 2: தமிழ் இலக்கிய மன்றம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 267, யூனியன் பிளேஸ், 1வது பதிப்பு, 1973. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*80 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*வே.அ.திருஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழ் இலக்கிய மன்றம், 1966 செப்டெம்பர் 12ம் திகதி உருவாக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் ஊழியர்களினால் வளர்த்தெடுக்கப்பட்டு முதலாவது தமிழ் விழாவை 12.2.1969 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தியது. இதனைத்*



படிப்பகம்

www.padippakam.com



தொடர்ந்து 1971, 1972, 1973ம் ஆண்டுகளிலும் இவ்விழா நடந்துள்ளது. 1973ம் ஆண்டு கலைவிழா நிகழ்வின் ஞாபகார்த்தமாக பூம்பொழில் சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. பூம்பொழில், 1972 ஏப்ரல் முதல் முத்திங்கள் இதழாக தமிழ் இலக்கிய மன்றத்தால் வெளியிடப்பட்டது. இச்சிறப்பிதழ் ஏழாவது இதழாகும். கலை இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை என்று வழமையான சஞ்சிகைகளுக்குரிய அம்சங்களுடன் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

## 3030

**மல்லிகை அவுஸ்திரேலியா சிறப்பு மலர்.** டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

*104 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 24X18 சமீ.*

ஈழத்துக் கலை இலக்கிய சஞ்சிகையான மல்லிகையின் அவுஸ்திரேலிய வாசகர் வட்டத்தின் சார்பில் அருண், விஜயராணி, லெ.முருகபூபதி ஆகியோரின் ஆதரவுடன் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் தேசத்தில் வாழும் தமிழர்களின் இலக்கியப்பங்களிப்பின் ஒரு அம்சமாக, குறிப்பாக அவுஸ்திரேலிய மண்ணில் வாழும் ஈழத்தவர்களின் கலை, இலக்கிய, பண்பாட்டுக் கோலங்களை இம்மலரில் தரிசிக்க முடிகின்றது. லெ.முருகபூபதி, அரபி, புவனா இராஜரட்ணம், நல்லை க.குமாரசாமி, எஸ்.சுந்தரதாஸ், நடேசன், பொன் பூலோகசிங்கம், பாலம் லக்ஷ்மணன், யோகன், உரும்பைமகள், பிரவீணன் மகேந்திரராஜா, ஜெயசக்தி பத்மநாதன், தி.ஞானசேகரன், வே.இ.பாக்கியநாதன், அம்பி, மாவை நித்தியானந்தன், அருண் விஜயராணி, மாத்தளை சோமு, யோகன், அ.சந்திரகாசன், ஆசி.கந்தராஜா, ரேணுகா தனஸ்கந்தா, த.கலாமணி, மேமன்கவி, இப்நு அசுமத், மா.பாலசிங்கம் ஆகியோரின் பல்துறைப் படைப்புக்களுடன் இவ்விதழ் சிறப்புற வெளிவந்துள்ளது.

## 3031

**மல்லிகை 36வது ஆண்டு மலர்.** டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

*104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 25X18.5 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



15.08.1966 அன்று ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை உலகில் கால்பதித்து 36 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மல்லிகை மாத இதழின் சிறப்பிதழ். சுதாராஜ், சி.சுதந்திரராஜா, கே.எஸ்.சிவகுமாரன், ஏ.பி.வி.கோமஸ், கவிஞர் இக்பால், பா.இரகுவரன், ஆ.கந்தையா, ஸ்ரீ பிரசாந்தன், நீலவண்ணன், மு.அநாதரட்சகன், செங்கை ஆழியான், திக்குவல்லை கமால், தெளிவத்தை ஜோசப், லெனின் மதிவானம், கெக்கிராவ சஹானா, எஸ்.வன்னியகுலம், தாமரை மகேந்திரன், செ.யோகநாதன், எஸ்.முத்துமீரான், பொன் பாலகுமார், எஸ்.எம்.ஜே.பைஸ்தீன், செ.யோகநாதன், சாரல்நாடன், தெணியான், கே.விஜயன், மா.பாலசிங்கம் ஆகிய ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களுடன் இவ்விதழ் வெளிவந்துள்ளது.

## 3032

**மல்லிகை: 38ஆவது ஆண்டு மலர்.** டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

136 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 26x19 சமீ.

15.08.1966 அன்று ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை உலகில் கால்பதித்து 38 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மல்லிகை மாத இதழின் ஆண்டுமலர். தெணியான், செ.குணரத்தினம், மு.பஷீர், அன்னலட்சுமி இராசதுரை, செ.யோகராசா, ராஜஸ்ரீகாந்தன், பொ.கருணாகரமூர்த்தி (ஜேர்மனி), பா.இரகுவரன், ப.ஆப்டீன், திக்குவல்லை கமால், மா.பாலசிங்கம், டொமினிக் ஜீவா, மு.அநாதரட்சகன், ஆ.கந்தையா, துரை மனோகரன், ச.முருகானந்தன், ஆகியோரின் சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வுகள், கட்டுரைகள், கவிதைகள் என்று மல்லிகைச் சிறப்பிதழில் மணம் பரப்புகின்றன.

## 3033

**மல்லிகை: 39ஆவது ஆண்டு மலர்.** டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

148 பக்கம், விலை: ரூபா 135., அளவு: 26x19.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



15.08.1966 அன்று ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை உலகில் கால்பதித்து 39 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மல்லிகை மாத இதழின் சிறப்பிதழ். லெ.முருகபூபதி, செங்கை ஆழியான், இரா.சடகோபன், அன்னலட்சுமி இராசதுரை, ப.ஆப்டீன், திக்குவல்லை சப்வான், குறிஞ்சி இளந்தென்றல், ச.முருகானந்தன், டொமினிக் ஜீவா, கவிஞர் செ.குணரத்தினம், சபா.ஜெயராஜா, க.சட்டநாதன், மு.அநாதரட்சகன், மு.பஷீர், தேவகாந்தன், சி.சுதந்திரராஜா, ஏ.இக்பால், தெணியான், வல்வையூரான், திக்கவல்லை கமால், அந்தனி ஜீவா, என்.எஸ்.நடேசன், சே.யோகராசா, சி.சந்திரசேகரம், ராஜஸ்ரீகாந்தன், வ.ஐ.ச.ஜெயபாலன், சுதாராஜ், செல்.சுதர்சன், மேமன்கவி, இணுவையூர் உத்திரன், எம்.கே.முருகானந்தன், பிரகலாத ஆனந்த் ஆகிய படைப்பாளிகளின் சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வுகள், கட்டுரைகள், கவிதைகள் என்று மல்லிகைச் சிறப்பிதழில் மணம் பரப்புகின்றன.

## 3034

**மல்லிகை: 41ஆவது ஆண்டு மலர்.** டொமினிக் ஜீவா (ஆசிரியர்). கொழும்பு 13: மல்லிகை, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

140 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 26.5X20 சமீ.

15.08.1966 அன்று ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகை உலகில் கால்பதித்து 41 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மல்லிகை மாத இதழின் சிறப்பிதழ். இவ்விதழை செங்கை ஆழியான், மா.பாலசிங்கம், ப.ஆப்டீன் ஆகியோரின் உதவியுடன் ஆசிரியர் டொமினிக் ஜீவா உருவாக்கியுள்ளார். சபா.ஜெயராஜா, தெணியான், செங்கை ஆழியான், செ.யோகநாதன், த.ஜெயசீலன். மு.பஷீர், தெளிவத்தை ஜோசப், திக்குவல்லை சப்வான், யோகன், சி.சுதந்திரராஜா, க.சட்டநாதன், ஈ.வி.டேவிட்ராஜு, கெக்கிராவ ஸஹானா, முருகையன், தாட்சாயினி, அன்னலட்சுமி இராஜதுரை, மேமன் கவி, மா.பாலசிங்கம், மு.அநாதரட்சகன், என்.சோமகாந்தன், ப.ஆப்டீன், அந்தனி ஜீவா, நாச்சியாதீவு பர்வீன், க.குமாரசுவாமி ஆகியோரின் ஆக்கங்கள் இவ்விதழை அலங்கரிக்கின்றன.

## 3035

**வெற்றிமணி: 100வது இதழ்.** மு.க.சு.சிவகுமாரன் (பிரதம ஆசிரியர்). ஜேர்மனி: வெற்றிமணி, Postfach 2765, 58477 Ludenscheid, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).



படிப்பகம்

www.padippakam.com



*36 பக்கம், வண்ணப்படங்கள், விலை: இலவசம், அளவு: 30x21 சமீ.*

*1950இல் இலங்கையில் வடபுலத்தில் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் தாபிக்கப்பட்ட சிறுவர் சஞ்சிகை, பின்னாளில் அவரது மகன் மு.க.சு.சிவகுமாரன் அவர்களால் ஜேர்மனியில் இலவசப் பத்திரிகையாக ஜனரஞ்சகச் செய்திகளுடன் பல்வர்ண மாசிகையாகத் தொடர்ந்தது. ஜேர்மனியில் வெளிவந்த 100வது வெற்றிமணி இதழ் சிறப்பிதழாக அதிக பக்கங்களுடன் பிரசுரமாகியுள்ளது.*

## 3036

**வெற்றிமணியின் பொன்விழா மலர்: 1950-2000.** *மு.க.சு.சிவகுமாரன் (பிரதம ஆசிரியர்). ஜேர்மனி: வெற்றிமணி,* Brinker Hohe 13, 58507, Ludenscheid, *1வது பதிப்பு, வைகாசி 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*34 பக்கம், புகைப்படங்கள், விலை: இலவசம், அளவு: 30x21 சமீ.*

*1950ம் ஆண்டில் சிறுவர்களுக்கென தனியானதொரு பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்ட வெற்றிமணி, ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் குரும்பசிட்டியிலிருந்து வெளியிடப்பட்டது. 25 ஆண்டுகளாக மாத இதழாக இச்சஞ்சிகை வெளிவந்தது. மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்த்தெடுப்பதில் வெற்றிமணி அதிக அக்கறை காட்டிவந்தது. வெற்றிமணி ஆசிரியரின் மகன் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் பின்னாளில் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழத்தொடங்கியதும் வெற்றிமணியின் பரிமாண வளர்ச்சியின் நீட்சியாக அதே பெயரில் ஜனரஞ்சகச் செய்திகளுடன் இலவச மாதப்பத்திரிகையாக வெளியிடத் தொடங்கினார். கண்கவர் வண்ணத்தில் சுவையான செய்தித் துணுக்குகள், சினிமா விமர்சனங்கள், இலக்கியச் செய்திகள், சிறுவர்களுக்கான அம்சங்கள் என குடும்ப இதழாக இதை நடத்தி வருகின்றார். வெற்றிமணி தொடங்கப்பெற்ற 50 ஆண்டு காலப் பணியைப் பதிவுசெய்யும்வகையில் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.*

# 070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

## 3037

**அச்சுத்தாளின் ஊடாக ஓர் அநுபவப் பயணம்.** *டொமினிக் ஜீவா. கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது*



படிப்பகம்

www.padippakam.com



பதிப்பு, செப்டெம்பர் 2004. (கொழும்பு 13: யு.கே.பிரிண்டர்ஸ், 98A, விவேகானந்தா மேடு)

xii, 168 பக்கம், விலை ரூபா 200., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-8250-25-x.

40 ஆண்டுகளுக்கும் மேலாக மணம்பரப்பி நிற்கும் ஈழத்து சிற்றிலக்கிய ஏடான மல்லிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் சுயசரிதையின் 2ம் பாகம் இதுவாகும். இதன் முதற்பாகம் **எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்** என்ற தலைப்பில் வெளிவந்து பலராலும் வாசிக்கப்பட்டது. அதுவே பின்னர் Undrawn portrait for unwritten poetry என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் மொழிமாற்றம் செய்யப்பெற்று வெளிவந்திருந்தது.

## 3038

**இதழியல் முன்னோடி எங்கள் பாரதியார்.** மானா மக்கீன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (சென்னை 14: ஜோதி ஆப்செட்).

88 பக்கம், விலை: இந்திய ரூபா 17., அளவு: 18x12 சமீ.

மகாகவி பாரதியாரின் பத்திரிகைத்துறை ஈடுபாடுகள் பற்றி இந்நூல் ஆய்வுசெய்கின்றது. இவ்விடயம் தொடர்பாக வெளிவந்துள்ள பத்திரிகைக் கட்டுரைகள் பல இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 3039

**ஈழநாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்: சில குறிப்புக்கள்.** ஆ.சிவநேசச்செல்வன். வட்டுக்கோட்டை: ஆ.சிவநேசச்செல்வன், தமிழ் விரிவுரையாளர், பட்டதாரித் திணைக்களம், யாழ்ப்பாணக் கல்லூரி, 1வது பதிப்பு, 1974. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

ஊடகவியலாளர் ஆ.சிவநேசச்செல்வன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையின் பிரதி. இலங்கையில் தோன்றிய தமிழ்ப் பத்திரிகைகள் பற்றி, குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில்



படிப்பகம்

www.padippakam.com



தோன்றிய பத்திரிகைகள் பற்றிய ஆழமானதும் சுருக்கமானதுமான கட்டுரையாக இது அமைகின்றது.

## 3040

**ஊடக இயல் கலைச்சொல் அகராதி.** ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம், இல. 891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி)

xiii, 244 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 955-97574-4-x.

ஆரம்ப ஊடகவியலாளர்களுக்கு ஊடகவியல் கலைச்சொற்களை அறிமுகப்படுத்தும் ஒரு நூல். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்கள் மற்றும் விளக்கங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் விளக்கங்களையும் அறிந்துகொள்ள விரும்புவோருக்கு இந்நூல் உதவும்.

## 3041

**ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம்.** ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம், இல. 891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).

(64), xiv, 312 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 955-97574-5-8.

16 இயல்களையும் 3 பின்னிணைப்புகளையும் கொண்ட இப்பாரிய தொகுப்பில் ஊடகத்துறையில் நேர்காணல்களை வெற்றிகரமாகவும், சுவாரஸ்யமாகவும் மேற்கொள்வது எப்படி என்று பயிற்றுவிக்கப்படுகின்றது. நேர்காணல் குறித்து ஆழமாகவும் விரிவாகவும் அலசி ஆராயும் இந்நூல் இதழியல் கற்கை நெறியில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் பயன்தரும் என நம்பலாம். நேர்காணலின் தோற்றம், வளர்ச்சி, வகைமைகள், நவீன பதிவுகள், இவை குறித்த உலகளாவிய பார்வை என்னும் முழுமையை எட்ட முயன்றுள்ளது இந்நூல். வளர்ந்துவரும் நேர்காணல் கலையின் நுட்பங்களை ஆராயும் இந்நூல் செய்தித்துறையின் காலத்தின் தேவையாக அண்மைய



படிப்பகம்

www.padippakam.com



வரவான மின்னஞ்சல் நேர்காணல்களையும் ஆராய முற்பட்டுள்ளது. பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும், பிஷப் சௌந்தரம் பத்திரிகையியல் நிலையத்தின் ஊடகவியல் துறையின் ஆய்வாளராகவும் பணியாற்றும் இந்நூலாசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் ஏற்கெனவே ஊடகவியல்துறையில் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

## 3042

**பத்திரிகைத் துறை சில நினைவுக் குறிப்புகள்.** எஸ்.பெருமாள். வட்டுக்கோட்டை: திருமதி ஈஸ்வரி பெருமாள், அராலி வடக்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி)

xii, 86 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

ஈழநாடு பத்திரிகையில் ஆசிரியராகப் பணிபுரிந்த எஸ்.பெருமாள் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பத்தில் 1957இல் வீரகேசரி பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவரது பரந்துபட்ட பத்திரிகைத்துறை அனுபவங்கள் இந்நூலில் பதிவாகியுள்ளன. பன்னீரன், வர்ணம் பேனா, பி.எஸ்.பி. ஆகிய புனைபெயர்களில் ஏராளமான படைப்பிலக்கியங்களைத் தந்த இவர் ஒரு படைப்பாளியும் கூட.

## 3043

**வான்பதி: 1வது ஆண்டு மலர்.** கரவைதாசன் (தொகுப்பாசிரியர்). டென்மார்க்: தமிழ்ச் சேவை, ஒல்போ தமிழ் வானொலி, தபால்பெட்டி எண். 624, 9100 Aalborg. 1வது பதிப்பு, ஜனவரி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

40 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

டென்மார்க்கில் இருந்து ஒலிபரப்பாகும் ஒல்போ தமிழ் வானொலி-யின் தமிழ்ச்சேவை ஒல்போ ஆண்டு 1, முதலாவது ஆண்டுமலர் இதுவாகும். வாழ்த்துரைகளுடன், யாழ்ப்பாணத்துச் சாதியம்: காலனித்துவ சமரசம் (மு.நித்தியானந்தன்), தமிழ்த் திரைப்பட விழா (மு.புஷ்பராஜன்), உலகமயமாக்கல் (செல்வன்), சங்கீதம் (குமுதா), புலம்பெயர் தமிழ் வாழ்வும் அதில் ஊடகங்களின் செல்வாக்கும் (முல்லையூரான்), வன்முறையின் உளவியல் மூன்று திரைப்படங்கள்



படிப்பகம்

www.padippakam.com



(ஜமுனா ராஜேந்திரன்) ஆகிய கட்டுரைகளும், கதை, கவிதைகள் துணுக்குகள் போன்ற வேறு அம்சங்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

# 100 மெய்யியல்துறை

## 100 தத்துவவியல்

### 3044

**பாலைவனத்திற்கு சிறுமழை.** எம்.பீ.சோம (சிங்கள மூலம்), டபிள்யூ.சுமணரத்தின (தமிழாக்கம்), மொரட்டுவை: சசர நிரோத இயக்கத்தின் அனுசரணையுடன் சிரிசேன தருமசத்திரம், 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 6: Happy Traders Pvt Ltd, 35, 2/10, 2nd Floor, Plaza Complex, Galle Road).

*35 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் பிறந்து இங்கிலாந்தில் வளர்ந்து 50 ஆண்டுகளாகத் தன் கருத்துக்களை போதித்துவந்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி 1987ம் ஆண்டில் கொழும்பில் ஒரு பொது நிகழ்ச்சியில் சொற்பொழிவை நிகழ்த்தியிருந்தார். இதை அடிப்படையாகக் கொண்டு **பூரண புரட்சி** என்ற நூல் சிங்களத்தில் ஏ.எஸ்.பாலசூரிய அவர்களால் வெளியிடப்பட்டது. பாலசூரியாவின் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட **பாலைவனத்திற்கு சிறுமழை** என்ற இந்நூல் கிருஷ்ணமூர்த்தியின் உளவியல் கொள்கைகளை எளியநடையில் விளக்கமுனைகின்றது.

## 150 உளவியல்

### 3045

**மனங்களின் ஊசல்கள்: உணர்வூட்டும் கட்டுரைத் தொகுதி.** தாரிக்கா மர்ஸுக். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (கண்டி: ஜிபா பிரின்டர்ஸ், ஏ 10, இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், பல்லேகலை).

*160 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 955-8913-18-9.*



படிப்பகம்

www.padippakam.com



மாவனல்லையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தாரிக்கா மர்ஸுக்கின் இந்த உளவியல், ஒழுக்கவியல் சார்ந்த கட்டுரைத் தொகுப்பு, சிந்தனை வட்டத்தின் 215ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. மனித வாழ்வில் அடிப்படையாக ஏற்படும் பிரச்சினைகளை யதார்த்த கோணத்தில் நோக்குவது ஆசிரியரின் ஆழ்ந்த சிந்தனையையும், அனுபவ முதுமையையும் எடுத்துக்காட்டுகின்றது. பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதுடன் அவற்றுக்கான தீர்வுகளையும் இந்நூலில் முன்வைத்திருக்கின்றார்.

### 3046

**வாழ்வெனும் வரம்.** சிவவதனி பிரபாகரன். கனடா: ஆசிரியர், 14, Brantwood Drive, Scarborough – ON. MIH 2G6, 1வது பதிப்பு, மார்கழி 2005. (கனடா: பரடைஸ் அச்சகம்).

192 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இளம் தலைமுறை எழுத்தாளரான இந்நூலாசிரியர் உளவியல் துறையில் உள்ள பல அடிப்படை உண்மைகளை உயர்ந்த லட்சியத்துடன் 28 தேர்ந்த கட்டுரைகளாக்கியுள்ளார். இவற்றில் 10 கட்டுரைகள் சுநாமிப் பேரழிவு நிகழ்ந்த டிசம்பர் 2004க்கு முன்னர் முழக்கம் (கனடா) பத்திரிகையில் வெளிவந்தவை. எஞ்சியவை அண்மைக் காலத்தில் உலகத்தமிழர், முழக்கம், வீடு, அமுதம், தமிழர் தகவல் ஆகியவற்றில் வெளிவந்தவை. சமகால நிகழ்வுகளுடனும், மேலைத்தேய அறிஞர்களின் உளவியல் கருத்துக்களின் ஒப்பீடுகளுடனும் ஒவ்வொரு கட்டுரையும் எளிய நடையில் படைக்கப்பட்டுள்ளது.

## 170 ஒழுக்கவியல்

### 3047

**அழகியலும் அறமும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஜுலை 2004. (சென்னை 600 015: பீ.எஸ்.முத்து கிராப்பிக்ஸ், 42, ஜோன்ஸ் வீதி, சைதாப்பேட்டை).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17.5x12.5 சமீ.

அவலமான, அக்கிரமமான நிகழ்ச்சியை அழகுக் கலையாக இலாபம் சேர்க்கும் விற்பனைப் பண்டமாக்கி சந்தையில் விற்பது அறமாகுமா? மரணத்தையும், யுத்தத்தையும் உலகில் நிறுத்திவிட முடியுமா? தேசிய



படிப்பகம்

www.padippakam.com



இனங்களின் விடுதலையின் பின்னர் சிறுபான்மைத் தேசிய இனங்கள் சமஉரிமை பெற முடியுமா? கிரேக்க துன்பியல் நாடகங்களின் அடிப்படை என்ன? குடும்ப வாழ்வில் பகைமை உறவு ஏற்படுவதன் காரணங்கள் எவை? இவ்வாறு பல்வேறு வினாக்களுக்கான விடைகளை இந்நூலிலுள்ள 25 கட்டுரைகளும் தருகின்றன. பொய் பேசுவதன் எல்லைகள், இசையும் மூளையும், தொலைக்காட்சியில் பெண்கள், சித்தர்களின் வரலாறு போன்ற விடயப் பரப்பில் அமைந்த கட்டுரைகளும் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

## 3048

**அறிவுரைகள்.** இ.பொ.இராசையா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: முகாந்திரம் ஈ.பீ. இராசையா, 1வது பதிப்பு, ஜுலை 1981. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).

(6), 18+16+48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

Pearls of Thought என்ற ஆங்கிலத் தலைப்பிலும் இந்நூல் இருமொழி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தான் சேகரித்துப் பேணி வைத்திருந்த அறிவுரைத் துணுக்குகளை இங்கு நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

## 3049

**இதோபதேசக் கதைகள்.** விஷ்ணு சர்மா (மூலம்), நவாலியூர் சோ. நடராசன் (தமிழாக்கம்). சென்னை 600005: தமிழ்ப் புத்தகாலயம், 3வது பதிப்பு, செப்டெம்பர் 1989, 1வது பதிப்பு, மார்ச் 1961, 2வது பதிப்பு, பெப்ரவரி 1981. (சென்னை 600005: ஸ்ரீ கோமதி அச்சகம், 41, சூரப்ப முதலி தெரு).

196 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18x12.5 சமீ.

இந்தியக் கதை மரபில் பஞ்சதந்திரம் போன்று இதோபதேசமும் பிரதான இடம் வகிக்கின்றது. இந்நூல் தமிழ்நாட்டில் வழக்கில் வராத நிலையில் இலங்கையில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த நாகநாத பண்டிதர் தமிழாக்கம் செய்ததாகவும், பின்னர் அதனைச் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் திருத்திப் பதிப்பித்ததாகவும் அறியப்படுகின்றது. மூலநூலிலுள்ள கதைகளை மாத்திரம் தேர்ந்தெடுத்தே முன்னைய பதிப்பு வெளிவந்திருந்தது. அமரர் நவாலியூர் சோ.நடராசன் இதோப-தேசத்தின் மூல நூலில் உள்ளபடியே முழுமையாகத் தமிழாக்கம்



படிப்பகம்

www.padippakam.com



செய்து இந்நூலை வெளியிட்டுள்ளார். பாயிரம், மித்திரலாபம், சுகிர்ப்பேதம், விக்கிரகம், சந்தி ஆகிய ஐந்து பகுதிகளில் விஷ்ணு-சன்மனின் இதோபதேசக் கதைகள் இங்கு விரிகின்றன.

## 3050

**இஸ்லாமிய நீதிக்கதைகள்.** போர்வை பாயிஸ் ஜிப்ரி. (இயற்பெயர்: எம்.யூ.எம். பாயிஸ் ஜிப்ரி). மாகொல வடக்கு: போர்வை பாயிஸ் ஜிப்ரி, நுஸ்ரா, 35/24, பாத்திமா கார்டன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 02: ஏ.ரீ.பிரின்டர்ஸ், 2-1/3, ஸர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை).

(12), 84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12 சமீ.

இத்தொகுப்பிலுள்ள கதைகள் நபிமார்கள், முஸ்லீம் ஆட்சியாளர்கள், அறிஞர்கள், இறைநேசர்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைத் தழுவியனவாக உள்ளன. ஒவ்வொரு சம்பவமும் ஒரு ஒழுக்கப் போதனையைப் புகட்டும் வகையில் உள்ளது. 1994ம் ஆண்டு முதல் இரு வருடங்கள் தொடர்ச்சியாக மித்திரன் வாரமலரில் வெளிவந்த 84 குட்டிக்கதைகள் இதில் அடங்கியுள்ளன. வாழ்க்கைத் தத்துவம், பண்பாடு, மரபுவழி, சமூக, சமய நெறி, ஆகியன உட்பட நானாவித ஒழுக்கப் போதனைகளை இக்கதைகளில் காணமுடிகின்றது.

## 3051

**உங்களை நோக்கி.** சி.ஆர்.ராஜ்குமார். (புனைபெயர்: தெருத்-தூசியோன்). கொழும்பு 6: 29, ப்றற்றிக்கா வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட்)

(6), 65 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21.5X15 சமீ.

திரு. சார்ள்ஸ் ராஜ்குமார், தனது இயலாமையைப் புறங்கண்டு வலுமிக்க ஒரு தொடர்பாளராக இயங்குவதனை இந்நூல் நிலைநிறுத்துகின்றதெனலாம். தெருத்தூசியோன் என்ற புனைபெயரிற் கவிதைகள் எழுதும் இவர் விழிப்புலனின்மையானது திறமையும் சாதுரியமும் மிக்கவர்களைக் கட்டுப்படுத்தி விடுவதில்லை என்பதற்-கான ஒரு நல்ல உதாரணமாகின்றார். சமூக விழிப்புணர்வூட்டுவதும் சமூகப் பயனுள்ளதுமான பல விடயங்கள் விழிப்புலனற்ற ஒருவரின் வித்தியாசமான பார்வையில் இந்நூலில் எடுத்துப் பேசப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3052

**ஔவையின் அமுத மொழிகளும் விளக்கங்களும்.** க.ப.லிங்கதாசன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

84 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 25., இலங்கையில்: ரூபா 100., அளவு: 18x12 சமீ.

அமரர் க.ப.லிங்கதாசன் இலங்கை மொறக்கொல்லைத் தோட்டத்தில் பிறந்தவர். தலாத்து ஓயா அரசினர் மத்திய கல்லூரியில் உயர்கல்வி பெற்றவர். வீனஸ் கலாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலையை-யும், கலஹா இந்து இளைஞர் மன்றத்தையும் (1971) தோற்றுவித்தவர். 40 வருடங்களாக எழுத்துத் துறையில் - குறிப்பாகத் தமிழ்க் கவிதைத் துறையில் ஈடுபட்டவர். சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் பயன்-படும் வகையில் ஔவையாரின் அறநூல்களை விளக்கக் குறிப்புடன் வழங்கியிருக்கிறார். இவரது மறைவின் பின்னர் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 3053

**மகளே கேள்.** எச்.ஸலாஹுத்தீன். கண்டி: சிபா பதிப்பகம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, பெப்ரவரி 1968. (கொழும்பு 12: ஏப்றாம் பிரிண்டர்ஸ், 84, பீர் சாஹிபு வீதி).

95 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

பிள்ளைப்பருவம், பள்ளிப்பருவம், கன்னிப்பருவம், தாய்மைப்பருவம், முதுமைப்பருவம் என ஒரு பெண்ணின் வாழ்க்கை வட்டத்தை ஐந்தாக வகுத்து, ஒரு மகளுக்குத் தந்தை கூறக்கூடிய அறிவுரைகள் அடங்கிய நூலாக இது அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் பெண் எவ்வாறு வாழவேண்டும் - இஸ்லாமிய அடிப்படையில் அப்பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் - இந்த ஒவ்வொரு பருவத்திலும் ஒரு பெண்ணின் கடமைகள் என்ன? உரிமைகள் என்ன? பொறுப்புகள் என்ன? போன்ற பலதரப்பட்ட விடயங்களை உபதேசமாக பிரபல எழுத்தாளரும், மதபோதகருமான இந்நூலாசிரியர் இங்கு விளக்கியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3054

**வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு.** டி.றி.நயில்ஸ் (மூலம்), டி.ஆர். அம்பலவாணர் (தமிழாக்கம்). சுன்னாகம்: The Christian Institute for the Study of Religion and Society (CISRS), மருதனாமடம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).

98 பக்கம், கருத்தோவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14 சமீ.

வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு மதுவருந்தினால் என்ன, சூதாடினால் என்ன, திருமண விலக்குச் செய்தால் என்ன, சாதகம் பார்த்தால் என்ன, கலப்புத் திருமணம் செய்தால் என்ன என்பன போன்ற தீர்வுகள் சரியானதா என்பது பற்றி அருட்திரு அறிவர் டி.றி.நயில்ஸ் (Rt.Rev. Dr.D.T.Niles) அவர்கள் வழங்கிய அறிவுரைத் தொகுப்பு இதுவாகும்.

## 180 இந்து தத்துவம்

### 3055

**சித்தர்கள் சித்தாந்தமும் சூபிசமும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (சென்னை 94: சிவா கிராப்பிக்ஸ்)

160 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18X12 சமீ.

சித்தர்களின் முதற் கோட்பாடு இறைவன் மேல் செலுத்தும் அன்பு. அந்த அன்பின் பிணைப்பே முதன்மையானது. சிலை வணக்கம் கோவில்களைத் தேடிச் சென்று வணங்குவதுமன்று. திருமூலரின் திருமந்திரம் கோவில்களுக்குப் பொருள்களை வாரி வழங்குவதிலும் பார்க்க சாதாரண மனிதர்க்கு உதவ வேண்டும் என வலியுறுத்துகின்றது. சூபிச தத்துவமும் இதையே போதிக்கின்றது. சூபிச தத்துவஞானி இமாம் கஸ்ஸாலீ அவர்களும் கேள்விப் பேச்சை ஒதுக்கு. நீ பார்ப்பதையே நம்பு என்கிறார். சித்தர்களுடைய சித்தாந்தங்களை சூபிசக் கருத்துக்களுடன் இந்நூல் ஒப்பு நோக்குகின்றது.

### 3056

**சைவ சித்தாந்தங் கூறும் தத்துவங்களும் தாத்துவீகங்களும்: ஒரு விஞ்ஞான நோக்கு.** இ.நமசிவாயம். சென்னை 600004: இ.நமசி-



படிப்பகம்

www.padippakam.com



வாயம், இல.20, பாபநாசசிவம் சாலை, சாந்தோம், 1வது பதிப்பு, தை 1997. (சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணா சாலை)

127 பக்கம், விலை: ரூபா 150., இந்திய ரூபா 100., அளவு: 18.5x12.5 சமீ.

மேலைத்தேய அறிஞர் ஐன்ஸ்டீன் அவர்களின் கருத்தோடு இயைபுபடுத்தி கீழைத்தேய தத்துவமான சைவசித்தாந்தத்தை விஞ்ஞான நோக்கில் இந்நூலில் விளக்கியிருக்கின்றார். முதற்பாகத்தில் அறிமுகம், பிரகிருதி மாயா தத்துவங்கள், சித்தம், பிரகிருதி மாயை, காலம், வினை-பயன்-நியதி முதலியன, புருட தத்துவம், சொல் உலகு, ஐந்து கலைகள், அந்தக் கரண எழுத்துக்கள் ஆகிய பத்து அம்சங்களும், இரண்டாம் பாகத்தில் உலகத் தோற்றமும் ஒடுக்கமும் என்ற விடயமும் பின்னிணைப்பாக மேற்கோள் நூல்கள், அருஞ்சொல் அகராதி, சொல் அடைவு ஆகியனவும் இடம்பெறுகின்றன. நூலாசிரியர் சட்டத்தரணி இ.நமசிவாயம் அவர்கள், திருக்கேதீச்சுவர ஆலயத் திருப்பணிச் சபைச் செயலாளராகவும், அறங்காவலராகவும், செயற்குழு உறுப்பினராகவும், அறங்காவலர் குழுச் செயலராகவும் பணியாற்றியவர்.

### 3057

**பகவத் கீதையும் திருக்குறளும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை: சிவா கிராப்பிக்ஸ்).

240 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.

வேதங்கள் உபநிடதங்களை வேள்வியில் ஈடுபடுவோர் ஓதும் காலத்தில் பரந்துபட்ட மக்கள் மகாபாரதம், இராமாயணக் கதைகளையே ஆர்வத்தோடு கேட்டு வந்தனர். கண்ணனும் இராமனும் காவியத் தலைவர்களாகப் போற்றப்பட்டனர். கடவுளின் அவதாரங்களாக்கப்பட்டனர். உயிர் அழியலாம், ஆத்மா அழிவதில்லை, கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற புதிய குரல்கள் கீதைமூலம் ஒலித்தன. பகவத் கீதை அறநெறி, பக்தி நெறியையும் போதித்ததோடு இந்திய உபகண்டத்தில் பரவி ஆதிக்கம் பெற்றிருந்த பௌத்தம், சமண மதங்களையும் வலுவிழக்கச் செய்தது. கீதையின் 700 ஈரடிச் சுலோகங்களையும் இந்நூல் அடக்குவதுடன் தேர்ந்தெடுத்த 350 திருக்குறள் வெண்பாக்களின் உரையுடன் அவை ஒப்புநோக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# 190 சோதிடம், வானசாஸ்திரம்

## 3058

**அதிர்ஷ்ட வழிகாட்டி.** எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன். யாழ்ப்பாணம்: அதிர்ஷ்ட நியுமரலோஜி பப்ளிக்கேஷன்ஸ், 19, சப்பல் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1980. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், 559, காங்கேசன்துறை வீதி).

(8), 90 பக்கம், விலை: ரூபா 9.50, அளவு: 18x13 சமீ.

இந்நூலாசிரியர் ஒரு எண் சோதிட நிபுணர் மட்டுமன்றி சிறந்த கவிஞ-ராகவும் எழுத்தாளராகவும் அறிமுகமானவர். ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், தினகரன் பத்திரிகையில் எண்சோதிடம் பற்றிய கேள்வி-பதில் நிகழ்ச்சியொன்றையும் வழங்கிவந்துள்ளார்.

## 3059

**எண் ஜோதிடம்.** வி.ஏ.சிவராசா. யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, ஜுன் 1982. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

134 பக்கம், விலை: ரூபா 18.50, அளவு: 18.5x12.5 சமீ.

நியுமரலொஜி எனப்படும் எண் சோதிடம் பற்றிய இந்நூலில் வேலணையூர் சோதிடர் வி.ஏ.சிவராஜா அவர்களால் எளிய முறையில் அதிர்ஷ்ட விஞ்ஞானம் என்று பரவலாக அறியப்பட்ட சோதிடக் கணிப்பு சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. பிறந்த திகதி எண், கூட்டெண், பெயருக்குரிய எண், என்பவற்றுக்கான பலன்களையும் இந்நூலில் அறியலாம்.

## 3060

**மனையடி சிற்ப சிந்தாமணி: வீட்டு நிலைய நூல்.** என்.கே. சுப்பிரமணியம். கோப்பாய்: ஆசிரியர், ரவிமதி, கோப்பாய் தெற்கு, 1வது பதிப்பு, ஆடி 1977. (ஏழாலை: விநாயகர் பிரின்டிங் வேர்க்ஸ்).

(12), 94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

வீடு கட்டுவதற்குப் பொருத்தமான நிலையத்தையும் கிணற்றுக்கான நீர் நிலையத்தையும் தேர்ந்தெடுப்பது தொடர்பான சாஸ்திரீய நடைமுறைகளை வகுத்துக் கூறும் நூல் இதுவாகும். கோப்பாய்



படிப்பகம்

www.padippakam.com



தெற்குப் பகுதியைச் சேர்ந்த பிரபல சாஸ்திரியாரான குமாரசுவாமி சுப்பிரமணியம் அவர்கள் பல்வேறு மனையடி சாஸ்திர நூல்களை உசாத்துணையாகக் கொண்டும், மனையடி சாஸ்திர விற்பன்னர்களின் ஆலோசனை உதவியுடனும் இந்நூலைத் தயாரித்துள்ளார். இவரது துணைவி திருமதி தங்கேஸ்வரி, உவர்நிலப் பகுதிகளில் நன்னீர் ஊற்றைக் கண்டறிவதில் திறமைமிக்கவராகக் கருதப்பட்டவர்.

**மேலும் பார்க்க: 3989**

# 200 சமயங்கள்

## 220 கிறிஸ்தவம்

### 3061

**அவர்கள் மூன்று சிறுவர்கள்.** அதி.வண. சீ.பர்த்தாஸ் சுவாமியார் (பிரெஞ்சு மூலம்), வண. சூ.ஆசீர்வாதம் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, 1வது பதிப்பு, 1949. (யாழ்ப்பாணம்: சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

xiv, 333 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

பத்திமா நகரத்தில் தேவதாயார் அளித்த காட்சிகளின் சுருக்கமான வரலாறுகள். அமலோத்பவ நாயகி பரித்தியாகிகள் சபைக் குருக்களின் யுபிலி வருடத்தினை முன்னிட்டு இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இயாசிந்தா, பிரான்சிஸ், லூசியா ஆகிய 3 இடைச் சிறுவர்களின் முன் தோன்றிய தேவதாய் பற்றிய வரலாறு இந்நூலில் சுவைபடக் கூறப்பட்டுள்ளது.

### 3062

**இயேசு கிறிஸ்துவும் மானிட விடுதலையும்.** திஸ்ஸ பாலசூரிய (ஆங்கில மூலம்), அ.வி.விக்டோரியா (தமிழாக்கம்). கொழும்பு 10: விடுதலை வெளியீடு, சமய சமூக நடுநிலையம், 281, டீன்ஸ் வழி, 1வது பதிப்பு, நவம்பர் 1978. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

x, 195 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 21x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



அண்மைக்கால நூற்றாண்டுகளில் இயேசு கிறிஸ்துவை மரபுமுறையாக அறிமுகஞ் செய்தல், இயேசுவும் அவர் விடுத்த பெருஞ் செய்தியும், சமூக மாற்றம் தொடர்பாக இயேசுவிடம் காணப்பட்ட கலைநுட்பம், பேரண்டத்திற்குரிய கிறிஸ்துவும் அனைத்துலகிற்குமான நிறைவுபடுத்தலும், கிறிஸ்தவர்களும் ஆசியப் புரட்சியும், இயேசு கிறிஸ்து ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்பர் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் விரிகின்றது. இத் தமிழாக்கத்தின் மூலநூல் சிங்களமொழியில் மாத்திரமன்றி பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு பெல்ஜியத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## 3063

**இரக்ஷணிய மனோகரம்: செய்யுளும் உரையும்.** ஹென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளை (மூலம்), க.தா.செல்வராசகோபால் (உரையாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, 2003. (கனடா M5S 2B3: Reflex Printing, 1109 Bay Street, Toronto).

xvi, 188 பக்கம், விலை: கனேடிய டாலர் 50., அளவு: 21x14 சமீ.

John Banyan என்ற ஆங்கிலப் பேராசிரியரின் Pilgrim's Progress என்ற நூலின் வழிநூல் இரட்சணிய மனோகரமாகும். ஆங்கிலத்தில் இருந்த மூலநூலைத் தமிழ்க் கவிதை நடையில் ஆக்கியுள்ளார். இதில் கதைக்கு முக்கியத்துவம் வழங்காது இரட்சணிய மார்க்கத்துக்குரிய சத்தியத்தையே பெரிதும் விளக்கியுள்ளார். இதில் 3800 கவிதைகள் உள்ளன. இந்நூலின் மூலநூலாசிரியர் ஹென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளை, திருநெல்வெலி பாளையங்கோட்டைக்கு அண்மையில் உள்ள இரட்டியாபட்டி என்ற சிற்றூரில் வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்தவர். தனது 30வது வயதில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்.

## 3064

**இரட்சணிய யாத்திரீகம் இரட்சணிய சரிதப் படலம் சிலுவைப்பாடு.** ஹென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளை (மூலம்). தமிழவேள் (பதிப்பாசிரியர். இயற்பெயர்: இ.க.கந்தசாமி). கொழும்பு 06: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மே 1971. (கொழும்பு 12: குமரன் அச்சகம், டாம் வீதி).

(4), 64 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



இரட்சணிய யாத்திரீகம் என்ற நூலின் மூல ஆசிரியர், மகா வித்துவான் ஹெ.அ.கிருட்ணபிள்ளை. இவர் தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1858இல் கிறிஸ்தவராக மதம் மாற்றம் பெற்று ஹென்றி அல்பிரட் என்ற பெயரைப் பெற்றார். வண. பேர்சிவல் பாதிரியாரின் தொடர்பும் பெற்றார். சமய, இலக்கிய ஆர்வத்தினால் ஆங்கில அறிஞர் ஜோன் பன்யன் எழுதிய "மோட்ச பிரயாணம்" என்னும் நூலையும், "புதிய ஏற்பாடு" என்னும் வேத-நூலையும் முதனூலாகக் கொண்டு தமிழிலே "இரட்சணிய யாத்திரி-கம்" என்னும் பெருங் காவிய நூலை 16 ஆண்டுகள் முயன்று 1894இல் உருவாக்கினார். அப்பெரு நூலின் ஒரு பகுதி கிறிஸ்தவ பாடநூலாக மாணவர்களுக்கேற்ற வகையில் இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ளது.

## 3065

**இன்றைய உலகில் நாம்.** *அன்ரன் மத்தாயஸ். யாழ்ப்பாணம்: அன்ரன் மத்தாயஸ், கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1999. (கொழும்பு 13: யுனைற்றற் மேர்ச்சன்ட்).*

*x, 258 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 955-95495-1-0.*

*சத்தியவேத பாதுகாவலன் வார இதழில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கங்களில் தேர்ந்த சிலவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவை செப்டெம்பர் 1979-ஆகஸ்ட் 1986 காலப்பகுதியிலும், பின்னர் ஜுன் 1996-மார்ச் 1997 காலப் பகுதிகளிலும் வெளிவந்தவை. கிறிஸ்தவ வாழ்வு, அரசியல், சமூகம் என முப்பிரிவுகளுக்குள் வரையறுக்கப்பட்டு இத்தலையங்க உரைகள் தலைப்பிடப்பட்டுள்ளன.*

## 3066

**இனியும் அடிமையல்ல.** *ஆ.பிரேம்குமார். கொழும்பு 7: சத்திய வசனம் வெளியீடு, Back to the Bible, தபால் பெட்டி இல. 1012, 120 ஏ, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: மில்டன் என்டர்பிரைஸஸ்).*

*97 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.*

*சிறைக் கைதியாகவிருந்த பவுல் எழுதிய பிலேமோன் நிருபத்துக்கான விளக்கவுரை. வேதாகமத்தின் இச் செய்தியானது இந்நூலின் வாயிலாக*



படிப்பகம்

www.padippakam.com



மிக எளிமையாகவும், தெளிவாகவும், நுணுக்கமாகவும் எமது சூழ்நிலைக்குப் பொருந்தும் விதத்தில் உரைக்கப்பட்டுள்ளது.

## 3067

**ஏசு வரலாறு.** பிரான்சிஸ் கிங்ஸ்பரி. கொழும்பு: பிரான்சிஸ் கிங்ஸ்பரி, 1வது பதிப்பு, வைகாசி 1939. (சாவகச்சேரி: இலங்காபிமானி அச்சியந்திரசாலை).

xvi, 150 பக்கம், வரைபடம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X13 சமீ.

இந்நூல், கிறிஸ்துவ மதநூல்களான முதல் மூன்று சுசமாசாரத்தில் (First three Gospels) வடித்தெடுத்து மீள எழுதப்பட்டது.

## 3068

**ஓ என் தேவனுக்கு மகிமை.** சீ.ஆர்.ராஜ்குமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: சீ.ஆர்.ராஜ்குமார், 29, பிரெட்ரிகா வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட்ஸ்).

ix, 42 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 85., அளவு: 21.5X14.5 சமீ.

சார்ள்ஸ் ராஜ்குமார் முழுமையாகப் பார்வையிழந்த ஒரு பட்டதாரி. கிறிஸ்தவ இறையியல் பற்றி நிறைய எழுதியுள்ளார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறைப் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். கிறிஸ்தவம் சார்ந்த இவரது 12 கட்டுரைகளும் கிறிஸ்தவ நம்பிக்கையின்பாற்பட்ட 12 அதிசயங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

## 3069

**கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு.** சபாபதி குலேந்திரன். பெங்களூர்: இந்திய வேதாகமச் சங்கம், A/1, மகாத்மா காந்தி ரோட், 1வது பதிப்பு, 1967. (Madras: The Diocesan Press).

xvi, 260 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X13 சமீ.

A History of the Tamil Bible என்ற ஆங்கிலத் தலைப்புடன் வெளியான நூல். 1900 செப்டெம்பர் 23இல் பிறந்த நூலாசிரியர் 1931இல் தென்னிந்திய ஐக்கிய சபையின் யாழ்ப்பாணச் சபா சங்கத்தில் இணைந்து கொண்டார். அத்தியட்ச அபிஷேகத்தை 1947இலும் கலாநிதிப் பட்டத்தை 1961இலும் பெற்ற இவர் இதுவரை 5 நூல்களை வெளியிட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3070

**கிறிஸ்து காவியம்.** வாகரைவாணன். மட்டக்களப்பு: வள்ளல் பேதுருப்பிள்ளை உடையார் நினைவகம், உடையார் ஒழுங்கை, வாகரை, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xviii, 276 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5X14 சமீ.

"யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான கவிஞர் வாகரைவாணன் அவர்கள் தனது தமிழாற்றல், ஆங்கிலத் தேர்ச்சி, சமய ஞானம், உலகியலறிவு, தொடர்ந்து கற்றுத் தனதாக்கிக் கொள்ளும் பண்பு ஆகியவற்றைக் கடைந்தெடுக்க, அது திரண்டு மேலெழுந்த வெண்ணெய்ப் பந்தே இந்த கிறிஸ்து காவியம்" என்று இந்நூலுக்கான அணிந்துரையொன்று விதந்து கூறுகின்றது. கி.மு.7க்கும் - கி.பி.30க்கும் இடைப்பட்ட குறுகிய கால எல்லைக்குள் பாலஸ்தீன நாட்டிலுள்ள ஓர் யூதக் குடும்பத்தில் பிறந்து வாழ்ந்த யேசு கிறிஸ்து அந்நாட்டின் ஆளுநர் போஞ்சியு பிலாத்து என்பவரின் அதிகாரத்தின் கீழ் சிலுவை மரணத்துக்கு உள்ளானார். இவர் கடவுளின் வல்லமையின் வெளியீடாக உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதனை இவரது சீடர்கள் போதித்து வந்தனர். இத்தகைய தேவதூதரான இயேசு கிறிஸ்துவின் வரலாறு இங்கே காவியமாகியுள்ளது.

## 3071

**கிறீஸ்தவ நாற்படை.** மார்ட்டின் லூதர், எஸ்.டபிள்யு.சவரிமுத்து, வி.கலியாணசுந்தரனார், ஈழத்துப் பூராடனார். கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, நவம்பர் 1992. (கனடா M5S 2W9:: Reflex Printing, 1108 Bay Street, Toronto).

xxxi, 139 பக்கம், தகடுகள், விலை: கனேடிய டாலர் 10., அளவு: 21X14 சமீ.

இந்நூலில் நான்கு விதமான சமய இலக்கிய நூல்கள் தரப்பட்டுள்ளன. முதலாவது "மார்ட்டின் லூதர் வாழ்க்கை வரலாறு" என்னும் எஸ்.டபிள்யூ சவரிமுத்து எழுதிய நூல். இது கிறிஸ்தவ சமய பக்தனின் வரலாற்றைக் கூறுவது. "கிறீஸ்து அருளும் விடுதலை" என்ற நூல் மார்ட்டின் லூதர் ஜேர்மன் மொழியில் எழுதியது. இது எஸ்.டபிள்யூ சவரிமுத்து அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டது. "கிறீஸ்துவின் அருள் வேட்டல்" என்னும் நூல் வி.கல்யாணசுந்தரனாரின் கிறிஸ்தவ



படிப்பகம்

www.padippakam.com



பக்திப்பாடல்களைக் கொண்டது. இறுதியான "இயேசு கீதை" என்ற நூல் ஈழத்துப் பூராடனார் செல்வராஜகோபால் எழுதியது இது கிறிஸ்தவ தத்துவப் பாடல்களை உள்ளடக்கியது.

## 3072

**சத்திய வசனம்: பொதுப்பாடல்கள்.** *சகோதரி மேரி சூசைப்பிள்ளை (தொகுப்பாசிரியர்). கொழும்பு: சத்திய வசனம்,* Back to the Bible Broadcast, *தபால் பெட்டி எண். 1012, 1வது பதிப்பு, வைகாசி 1991. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(26), 274 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

சத்திய வசனப் பாடல்களும் பொதுப்பாடல்களும் இரண்டு தொகுதி-களில் முன்னர் வெளிவந்திருந்தன. 1978இல் வெளிவந்திருந்த முதலாம் பாகத்தில் 275 பாடல்களும், 1987இல் வெளிவந்திருந்த இரண்டாம் பாகத்தில் 237 பாடல்களும் இடம்பெற்றிருந்தன. இவ்விரு தொகுப்பு-களிலிருந்தும் தேர்ந்த, பிரபல்யமான பாடல்களையும் அவற்றுடன் ஜெபக் கூட்டங்கள், ஆராதனைகளில் பெரும்பாலும் பாடப்பட்டு-வரும் பொதுப்பாடல்களையும் சேர்த்து எல்லாச் சபையினராலும் எப்போதும் பாவிக்கக்கூடியவிதத்தில் ஒழுங்கமைத்து 315 பாடல்-களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.

## 3073

**சின்னப்பரின் நிருபங்கள்: கிறிஸ்தவ மதிப்பீடுகள்.** *எஸ்.ஏ.ஐ.மத்தியூ. மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2001. (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).*

*53 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 22x14 சமீ.*

இந்நூல் "மறையினை அறிவோம்: அறிவிப்போம்" என்னும் சிறந்த நோக்கில் க.பொ.த.(உயர்தர) மாணவர்களின் கிறிஸ்தவப் பாட நெறியை இலகுவாக்கி, ஒரு முழுமையான ஆன்மீக அனுபவம் அளிக்க மேற்கொள்ளப்பட்ட சிறந்த முயற்சியாகும். இங்கு விவிலிய ஞானம் உண்டு. திருச்சபையின் பாரம்பரிய படிப்பினைகள் உண்டு. இறையியல் கூர்மை உண்டு. இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகளும் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com



## 3074

**திருப்பாடல்கள் 150.** அம்புறோஸ் பீற்றர். கொழும்பு 13: அம்புறோஸ் பீற்றர், 53 1/6, நியுன்ஹாம் சதுக்கம், 1வது பதிப்பு, மார்ச் 2000. (சென்னை 10: சிகா அச்சுத் தொழில்நுட்பக் கல்விக் கூடம்).

xii, 102 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5X14 சமீ.

இந்நூல் திருவிவிலியத் திருப்பாடல்களைத் தழுவி எழுதப்பட்ட 150 திருப்பாடல்களின் தொகுப்பு. இலக்கியநயமும் பக்தியும் கொண்டு, இறைபுகழ், நன்றி, வேண்டுதல், இறைவாக்கு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பாடல்கள் இவை.

## 3075

**தெய்வம் புழுதியில்: இறைஇயற் கதைகளும் கவிதைகளும்.** றெக்ஸ் ஜோசப். கண்டி: Rev. Rex M.P.Joseph, திரித்துவக் கல்லூரி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1996. (கண்டி: சிட்னி அச்சகம், 258, டீ.எஸ்.சேனநாயக்க வீதி).

vi, 86 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14.5 சமீ.

எமது வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும், அனுபவங்களிலும் எமது சமூகத்தவரின் சூழல்களிலும் அவர்கள் மத்தியிலும் இயேசு கிறிஸ்து உலவுவதும், உழல்வதும் இந்நூலிலுள்ள 21 தலைப்புகளில் உள்ள கதைகளிலும் கவிதைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அருட்திரு றெக்ஸ் ஜோசப் அவர்கள் கண்டி தேசிய குருத்துவ கலாசாலையில் தத்துவவியல் துறையில் சிறப்பு விருது பெற்று, உரோமாபுரி பாப்பரசரின் பல்கலைக்கழகத்தின் இறையியல்-துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றவர்.

## 3076

**நித்திய ஜீவன் (Eternal Life).** செல்வமதீந்திரன். சுவிட்சர்லாந்து: Gethsemane Glory Missionary, Church of Switzerland, 1வது பதிப்பு, 2000. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

124 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12.5 சமீ.

கிறிஸ்தவத்துக்கும் அதன் மதமாற்றத்துக்கும் எதிராக எழுதிவந்த இந்நூலாசிரியர் முன்னதாக சரிநிகர் பத்திரிகையில் ஜனவரி 26-பெப்ரவரி 08 1995 திகதிக்குரிய இதழில் இத்தகைய மத எதிர்ப்புக்



படிப்பகம்

www.padippakam.com



கவிதைகளை எழுதியிருந்தார். பின்னாளில் தானே மனம்மாறி கிறிஸ்தவ போதனையாளராகிய இவர் இந்நூலை எழுதியுள்ளார். கிறிஸ்தவத்தையும் இயேசு கிறிஸ்துவையும் வெறுப்பவர்களுக்கும் கிறிஸ்து ஒரு வெள்ளையினக் கடவுள் என்று நினைப்பவர்களுக்கு-மான இவரது போதனைகள் இந்நூலில் நிறைந்துள்ளன.

## 3077

**பன்னிரண்டு பிரசங்கங்கள்.** ஜோன் உவெஸ்லி ஐயர். யாழ்ப்பாணம்: வட இலங்கை மெதடிஸ்த மிசன் சங்கம், 1வது பதிப்பு, 1938. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).

xii, 275 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

ஜோன் வெஸ்லி ஐயர் (1703-1791), தனது வேதப் பிரசங்கக் காலத்தில் பிரசுரம் செய்த 141 பிரசங்கங்களில் தேர்ந்த 12 பிரசங்கங்களை The Marrow of Methodism எனறு நூலாக்கியிருந்தார். இது அந்நூலின் தமிழாக்கமாகும்.

## 3078

**புதிய ஆரம்பம்: புதிய ஏற்பாடு.** இலங்கை வேதாகமச் சங்கம். கொழும்பு 3: இலங்கை வேதாகமச் சங்கம். 293, காலி வீதி, 1வது பதிப்பு, 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 355 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955 59515 6 X.

மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷங்-களும், அப்போஸ்தலருடைய நடபடிகள், அப்போஸ்தலராகிய பவுல் ரோமாபுரியருக்கும், கொரிந்தியருக்கும், கலாத்தியருக்கும், எபேசியருக்கும், பிலிப்பியருக்கும், கொலோசியருக்கும், தெசலோனிக்-கேயருக்கும், தித்துவுக்கும், பிலேமோனுக்கும் பிறருக்கும் எழுதிய நிருபங்களும் இப்புதிய ஏற்பாடு நூலில் தரப்பட்டுள்ளன.

## 3079

**வந்து பாருங்கள்.** ஜீவாண்ணன். (இயற்பெயர்: எம்.ஜீவரட்ணம்). காங்கேசன்துறை: எம்.ஜீவரட்ணம், 86, காட்டடைப்பு வீதி, 1வது பதிப்பு, மே 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீனா வெளியீட்டகம், 215, 2ம் குறுக்குத் தெரு).



படிப்பகம்

www.padippakam.com



(8), 112 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 18x12.5 சமீ.

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரான இந்நூலாசிரியர் 1960ம் ஆண்டுகளில் சுதந்திரன், ஈழநாடு, வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் பல சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகளை எழுதியிருக்கிறார். கிறிஸ்துவ திருச்சபை பற்றி, அதன் கொள்கை பற்றி, வழிபாடுகள் பற்றி, பொதுவாக எழுப்பப்படும் கேள்விகள் சிலவற்றுக்கு விடை பகர்வதாக இதிலுள்ள ஆக்கங்கள் அமைந்துள்ளன.

## 3080

**வழிநடத்தும் வார்த்தை.** அரச ஐயாத்துரை. கொழும்பு: அருட்திரு அரச ஐயாத்துரை, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 5: லங்கா பிலிப் மிஷன் அச்சகம், 71/6, விஜய குமாரதுங்க மாவத்தை).

126 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-96225-4-4.

விசுவாசிகள், அருளுரையாளர்கள், பிரசங்கிமார்களுக்கு உகந்த மெதடிஸ்த சபைப் பிரசங்கங்களின் தொகுப்பு.

## 3081

**வாழ்க்கை என்பது என்ன?** வில்லியம் டபிள்யு ஓர் (மூலம்). கொழும்பு 6: ராமன் சுப்பையா, Pragna Publishers, கிறிஸ்துவ ஐக்கிய நிலையம், 7. விவேகானந்தா வீதி, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லிபர்ட்டி பிரஸ், 478 புளூமெண்டால் வீதி).

(4), 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

What is life all about என்ற தலைப்பில் கலாநிதி William W.Orr அவர்கள் எழுதிய நூலின் தமிழாக்கம். மொழிபெயர்ப்பாளர் விபரம் தரப்படவில்லை. கலாநிதி ஓர் கலிபோர்னியா, டெம்பிள் சிற்றி வானொலி வேதாகமப் பாடசாலை ஆசிரியராகவும் பணியாற்றியவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 220.1 கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்

### 3082

**ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 1895-1995.** எஸ்.எம்.யோசெவ் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 2: சிலோன் பிரின்ரர்ஸ், 1வது பதிப்பு, மார்கழி 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டை முன்னிட்டு வெளியான இந்நூல், காவலூரின் இன்றைய நிகழ்வுகளையும், நிலவரங்களையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுத் தொகுப்பாய் மலர்ந்துள்ளது. ஊர்காவற்றுறை பற்றிய வரலாற்றைக் கத்தோலிக்க மறை வளர்ச்சியின் பின்னணியில் நான்கு ஆலயங்களின் வரலாற்று விபரங்களுடன், அங்கு பணியாற்றிய குரவர்கள், துறவிகள், முதலியோரின் சேவைகள் உட்பட பல தகவல்களையும் திரட்டி இயன்றளவு கோவைப் படுத்தி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

### 3083

**மருதமடு யாத்திரைக் கைத்துணை.** யாழ்ப்பாணம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்).

120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 12x9.5சமீ.

Madhu Manual என்ற பெயருடன் வெளியாகியுள்ள சிறு கைநூல் இது. மருதமடுத் திருத்தல யாத்திரையின் போது கைத்துணையாகக் கொண்டு செல்லக்கூடியதாக கையடக்கப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. யாத்திரை செய்யும் விதம், செபமாலைத் தியானம், செபம் செய்யும் முறை, பிரயாண வழிகாட்டி என்பன இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

### 3084

**மிருசுவிலின் தரிசனம். 2004.** மலர் வெளியீட்டுக் குழு. பிரான்ஸ்: மிருசுவில் புனித நிக்கொலார் மன்றம், 11, Place Roger Salengro,



படிப்பகம்

www.padippakam.com



95140, Garges les Gonesse, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: நந்தா அச்சகம்).

126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21.5 சமீ.

யாழ்ப்பாண மறை மாவட்டத்தில் மிருசுவில் பழமைமிக்கதொரு (Parish) பங்காகும். 1871ஆம் ஆண்டிலே நிறுவப்பட்ட இப்பங்கு, பல கல்விமான்களையும், மதகுருக்களையும் உருவாக்கியுள்ளது. பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் இப்பங்கைச் சேர்ந்த மக்கள் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தின் பெயரால் ஒன்றிணைந்து சமூகப்பணியாற்றுகின்றனர். இந்நூல் புனித நீக்கொலார் ஆலயத்தின் வரலாற்றையும் அவ்வாலயம் சார்ந்த மண்ணின் வரலாற்றுக் குறிப்புகளையும், இறைபணிகளையும் பதிந்து வைக்கும் ஒரு ஆவணமாக உருவாகியுள்ளது.

# 294.3 பௌத்தம்

## 3085

**தம்மபதம்: அறவழி.** நவாலியூர் சோ.நடராஜன் (தமிழாக்கம்). கொழும்பு 7: கலாசார அலுவல்கள் அமைச்சு, 212, பௌத்தாலோக மாவத்தை, 1வது பதிப்பு, 1982. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

vi, 87 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தம்மபதம் பௌத்தர் மத்தியில் மிகவும் பிரசித்தமான தர்மநூலாகும். இதனை பௌத்த தர்மத்தின் சாரம் எனலாம். வளர்ச்சி அடைந்த பல உலக மொழிகளில் தம்மபதமானது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் பாளி மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. புத்த அறநூல் வெளியீட்டு வரிசையில் இரண்டாவது நூல்.

## 3086

**தம்மபதம்: பாளி-சிங்கள-தமிழ் ஆங்கிலப் பதிப்பு.** பதிப்புக் குழுவினர் (மொழியாக்கம்). கொழும்பு 7: மத்திய கலாசார நிதியம், 212/1, பௌத்தாலோக மாவத்தை, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 8: அரசாங்க அச்சகத் திணைக்களம்).

xxxvii, 250 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



உயரிய பௌத்த நூலாகக் கருதப்படும் தம்மபதம் பன்மொழி பெயர்ப்புடன் ஒருங்கே இப்பதிப்பில் வெளியாகின்றது. அமர ஹேவா-மத்துமவை பிரதான பதிப்பாசிரியராகவும், டபிள்யூ. ஜீ. வீரரத்தினா, எட்வின் ஆரியதாச, விசுவநாத் வச்சிரசேன, கே.பீ.ஏ. எட்மண்ட், சின்னையா கனகமூர்த்தி, இராஜலட்சுமி கைலாசநாதன் ஆகியோரை பதிப்பாசிரியர் குழுவாகவும் கொண்டு இத்தொகுப்பு மேற்கொள்ளப்-பட்டுள்ளது.

## 3087

**புத்த பகவான் அருளிய போதனை.** வல்பொல ராகுல (மூலம்), நவாலியூர் சோ.நடராசன் (தமிழாக்கம்). கொழும்பு: பண்பாட்டு அலு-வல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

xviii, 180 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

போல் தெமிவீயர் அளித்த தொடக்கவுரையுடன் பாளி மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட விளக்கப் பாடங்களின் தொகுப்பும் கொண்ட நூல் இதுவாகும். பௌத்த தர்மத்தின் மூலாதாரமான கொள்கைகள் எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியவாறு விளக்கமாக இந்நூலில் எழுதப்பட்டுள்ளது.

## 3088

**வெண்தாமரையின் பேரழகு.** கங்கொடவில சோமதேரர் (மூலம்), அறவணடிகள் மதுரை போதிபாலர், மடுளுகிரியே விஜேரத்ன (தமிழாக்கம்). அனுராதபுரம்: வன்னி வெளியீட்டகம், ஸ்ரீ பிரஞ்ஞாராம பௌத்த கலாச்சார வலயம், இலக்கம் 189, எம். ஜயந்தி மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு 10: எஸ்.என்.எஸ். அச்சகம், ஜயந்த வீரசேகர மாவத்தை, மருதானை).

x, 48 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955 8163 02 3.

புத்தர் பெருமானின் அருங்குணங்களும் அவர் தம் போதனைகளும் மேலைத்தேய மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கப்படும் The Beauty of white lotus என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். சித்தார்த்தன் என்ற அரசகுமாரன் புத்தர் என்று ஏன்



படிப்பகம்

www.padippakam.com



போற்றப்படுகின்றார், புத்தர் என்பதின் பொருள் என்ன என்பன போன்ற கேள்விகளுக்கு இந்நூல் விடைகாண்கின்றது. மேலும் புத்தர் பெருமான் போதித்த எண் வகை வழியான நடுவழி இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

## 294.5 இந்து சமயம்

### 3089

**அபிராமி அந்தாதி: விளக்க உரையுடன்.** ஸ்ரீ அபிராமிப் பட்டர் (மூலம்), த.துரைசிங்கம் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: நிலா பதிப்பகம், 70/1 வைமன் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கொழும்பு 12: Perfect Printers, 130, Dias Place)

xii, 110 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 155., அளவு: 19.5x14 சமீ.

இந்நூலின் உரையாசிரியர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராகவும், கவிஞராகவும், சிறுவர் இலக்கியப் படைப்பாளியாகவும் தாயகத்தில் நன்கு அறியப்பெற்றவர். ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளரான இவரின் ஆன்மீக ஈடுபாட்டின் வெளிப்பாடாக அபிராமி அந்தாதி என்ற பக்தி இலக்கியத்துக்கான பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என்பனவற்றுடன் கூடிய இந்நூல் அமைகின்றது.

### 3090

**அபிராமிப் பட்டரின் ஸ்ரீ அபிராமி அந்தாதி: மூலமும் உரையும்.** அபிராமிப் பட்டர் (மூலம்), ராம் கந்தையா, சகி கந்தையா (ஆங்கில மொழிபெயர்ப்பு). கனடா: தர்மசீலன் குடும்பம், ஜெயதுர்க்கா தேவஸ்தானம், மிஸிஸாகா, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (கனடா: R.J.Multi Litho Inc.)

108 பக்கம், விலை: இலவசம், அளவு: 21x14 சமீ.

இந்நூலில் அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி ஆங்கில மொழிபெயர்ப்புடன் தரப்பட்டுள்ளது. சரபோஜி மன்னரின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் திருக்கடவூரிலே சுப்பிரமணியர் என்ற இயற்பெயர் கொண்ட அபிராமிப்பட்டர் பாடியருளிய 100 பாடல்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3091

**ஆய்வரங்குக் கட்டுரைகள் 1997.** சாந்தி நாவுக்கரசன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (கொழும்பு 13: மரியோ பிரின்டர்ஸ், 173, ஜெம்பட்டா வீதி).

xx, 264 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.

1997, அக்டோபர் 12,13ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற இந்து சமய ஆய்வரங்கிற் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. "தமிழகத்திலும் இலங்கையிலும் 13ம் நூற்றாண்டு வரை ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி" என்னும் தலைப்பில் இடம்பெற்ற இவ்வாய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட 16 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

## 3092

**ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு (இரண்டு பாகங்களும்).** ஆறுமுக நாவலர் (மூலம்), த.கைலாசபிள்ளை (பதிப்பாசிரியர்). கொழும்பு 7: இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 3வது பதிப்பு (மீள்பிரசுரம்) மார்கழி 1996. (கொழும்பு 6: கார்த்திகேயன் பிரைவேட் லிமிட்டெட், 501/2 காலி வீதி, வெள்ளவத்தை).

xxx, 396 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x11சமீ.

19ம் நூற்றாண்டில் இலங்கையில் சமயப் பிரச்சார நடவடிக்கைகள் மிகுந்து காணப்பட்ட ஒரு காலகட்டத்தில் சைவசமயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவர் ஆறுமுக நாவலர். சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அறிந்திருக்க வேண்டிய பல தகவல்களை அவர்களுக்குக் கூறுவதாகவும், சமயப் பரம்பலைத் தடுப்பதற்கு மிக அத்தியாவசியமானதாக சைவ சமயம் பற்றிய தெளிவை அவர்களுக்கு எளிய வடிவில் வழங்குவதற்காகவும், அவர்களுக்கு வழங்கும் ஆலோசனையாகவும் தவறிழைக்கும் சைவசமயிகளுக்கும் மற்றோருக்கும் எதிரான கண்டனக் கணைகளாகவும் நாவலரின் பிரபந்தத் திரட்டு அமைந்துள்ளது. இவை ஆறுமுக நாவலரால் வெவ்வேறு காலகட்டங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவற்றின் திரட்டு. பெரும்பான்மை வசனநடையிலும், சில செய்யுள் நடையிலும் அமையும் இத்திரட்டு, நாவலர் காலத்தில் பத்திரிகைகளிலும், தனித் துண்டுப்பிரசுரங்களாயும் வெளியிடப்பட்டவை.



படிப்பகம்

www.padippakam.com



## 3093

**இந்து மதம் என்ன சொல்கிறது.** திருமதி. ஞானம் ஞானசேகர ஐயர். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600005: கேயெம் பெக்கேஜிங் இன்டஸ்ட்ரீஸ்).

232 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18X12 சமீ.

சமயக் கருத்தரங்குகள் செயலமர்வுகள் பலவற்றில் ஆசிரியர் அவ்வப்போது முன்வைத்த கருத்துக்கள் இந்நூலாக்கத்துக்கு வழிகோலியுள்ளன. இந்துமதம் ஓர் அறிமுகம், திருக்கோயில், திருக்கோயில் வழிபாடு, திருவுருவ வழிபாடு, பரிவாரத் தெய்வங்கள், திருக்கோயிற் பூசைகள், அபிஷேகம் பூசைக்குரிய சாதனங்கள், இறை-வழிபாட்டிற்குரிய ஏனைய முறைகள், ஆன்மார்த்த கிரியைகள், அபரக்-கிரியைகள், விரதம், பண்டிகைகள், புண்ணிய காலங்கள், சமய நடை-முறை விளக்கங்கள், தல விசேடங்கள், ஆகியவற்றை எளிதாக விளங்க-வைக்கும் நூல். இந்து கலாசார அமைச்சின் பரிசினைப் பெற்றது.

## 3094

**இந்து மதம் என்ன சொல்கிறது: பாகம் 2: மங்கலப் பொருட்களின் மகத்துவம்.** திருமதி. ஞானம் ஞானசேகர ஐயர். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்கழி 2005. (கொழும்பு 6: பரணன் அசோஷியேட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 403, 1/1 காலி வீதி).

128 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18X12.5 சமீ.

இந்து சமயிகளின் வாழ்க்கையானது கிரியைகள், சடங்குகள், அனுட்-டானங்கள், சம்பிரதாயங்கள், ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்துள்-ளது. இவற்றைக் கடைப்பிடிக்குமிடத்து பயன்படுத்தப்படும் பொருட்கள் மங்கலப் பொருட்களாகும். இத்தகைய மங்கலப் பொருட்கள் யாவை? அவற்றின் தாற்பரியம் எத்தகையது? அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? அவற்றிற்குரிய சமய தத்துவப் பின்னணி யாது? போன்ற விடயங்கள் இந்த நூலில் விபரிக்கப்பட்-டுள்ளன.

## 3095

**இலங்கையில் இந்துசமயம்.** சி.பத்மநாதன். கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர்



படிப்பகம்

www.padippakam.com



மாவத்தை, இணைந்து வெளியிட்டவர்கள், கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

xxviii, 476 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: சாதாரண பதிப்பு, 955-9429-56-6, நூலகப் பதிப்பு, 955-9429-57-4.

இந்நூல் ஆதி காலம் முதலாகப் பொலந்நறுவைக் காலம் முடிவு-பெறும் வரை இலங்கையில் இந்து சமயம் தொடர்பாக ஏற்பட்ட வளர்ச்சிகளைப் பற்றியது. இதில் ஆதி அநுராதபுரக் காலம், பிந்திய அநுராதபுரக் காலம், சோழர் ஆட்சிக் காலம், பொலந்நறுவைக் காலத்தில் அரசரும் ஆலயங்களும், பொலந்நறுவைக் காலத்தில் வணிக கணங்களும் கலாச்சாரமும், பொலந்நறுவைக் காலத்தில் கோயில்களும் படிமங்களும் ஆகிய ஆறு பிரிவுகளும் அதனுள் 19 அத்தியாயங்களும் அடங்கியுள்ளன. இந்நூலில் இந்து சமயம், இந்து கலாச்சாரம், இலங்கை வரலாறு, தென்னிந்தியப் பண்பாட்டு வரலாறு, தமிழர் வரலாறு, தமிழிலக்கியம், இலங்கைத் தமிழர் வரலாறு என்பன பற்றிய பிரதானமான அம்சங்களும் புதிய விபரங்களும் அடங்கி-யுள்ளன.

## 3096

**இலங்கையில் விஸ்வகர்மா.** பூ.ம.செல்லத்துரை. பெரியபோரதீவு: இராசம்மா பதிப்பகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

xvi, 128 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

விஸ்வம் என்றால் உலகம், கர்மா என்றால் படைத்தல். எனவே விஸ்வகர்மா என்றால் உலகைப் படைத்தவர் எனப் பொருள் கொள்வர். விஸ்வகர்மா என்னும் தலைப்போடு ஆரம்பித்து, தமிழர் பண்பாடு, நாகரீகம், இலங்கையில் மூத்த குடியினர் என இழையோடி மாந்தையின் மாட்சியை நிழற்படம் போல் காட்டி விஸ்வகர்மாவுக்கு விழா ஏன் என்ற கேள்வி எழுப்பி, போரதீவில் ஆதீனம் அமைப்ப-தற்குரிய காரணங்கள் பல காட்டி இந்நூலை நிறைவு செய்திருக்கிறார்.

## 3097

**ஒன்பதாந் திருமுறை ஒரு நோக்கு: திருவிசைப்பா திருப்பல்லாண்டு.** இரா. மயில்வாகனம். கொழும்பு 13: இரா.மயில்வாகனம், 34/3 புளு-



படிப்பகம்

www.padippakam.com



மெண்டால் ஒழுங்கை, கொட்டாஞ்சேனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (கொழும்பு 13: எம்.ஜி.எம். அச்சகம், 102/2 ஆட்டுப்பட்டித் தெரு).

(4), LVI, 260 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 85., அளவு: 19x13 சமீ.

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் இரண்டும் சேர்ந்த ஒன்பதாந் திருமுறை ஒன்பதின்மரால் தனித்தனியே பாடப்பெற்ற பக்தி இலக்கியமாகும். அளவில் குறைந்த 301 பாடல்களையே கொண்டிருந்தாலும் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு இலக்கியமாக விரியும் தரம் கொண்டது. இத்தகு சிறப்புக் கொண்ட ஒன்பதாம் திருமுறையை விரிவாக ஆராய்ந்து ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கால ஆராய்ச்சி மிளிர இந்நூலாசிரியர் ஓர் கருத்துக் கோவையாக்கியுள்ளார். கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற பன்னிரு திருமுறை முற்றோதலின்போது குறிப்பாக 9ம் திருமுறைப் பாராயணத்தின் போது ஆசிரியர் எண்ணத்தில் எழுந்த திருமுறை அலைகளே நூலுருவில் வெளிவந்துள்ளன.

## 3098

**கந்தபுராணச் சிந்தனைகள்.** சங்கரப்பிள்ளை சிவலோகநாதன். லண்டன்: இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில் மகா கும்பாபிஷேகச் சிறப்பு வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2004. (கொழும்பு 6: நியூ பிரின்ட் கிராப்பிக்ஸ், 289 ½, காலி வீதி).

xxviii, 252 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

ஆசியுரைகள், முன்னுரைகளுடன் கூடிய இந்நூலில் பிரதான விடயதானமாக கந்தபுராணக் கதைச் சுருக்கமும் அதையடுத்து 48 கந்தபுராணச் சிந்தனைக் கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

## 3099

**கவசத் திரட்டு.** ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320 செட்டியார் தெரு).

123 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 22x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



விநாயகர், முருகன், சிவன், சக்தி, சரஸ்வதி, பராசக்தி, ஸ்ரீ துர்க்கா, ஸ்ரீ அம்பிகை, ஸ்ரீ துளசி மற்றும் நவக்கிரகங்கள், ஸ்ரீ கிருஷ்ணர், நாராயணர், ஸ்ரீ ஹனுமன் பேரில் பல்வேறு முனிவர்களும் பாடியருளிய கவசங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 3100

**சண்முக விஜயம்: கந்தபுராணக் கதையமுதம்.** ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு: கௌரி அச்சகம்).

vi, 221 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

தமிழ்க் கடவுள் முருகனின் வரலாற்றையும், அவரது மகிமையையும், திருவுருவத் தோற்றத்தின் விளக்கத்தையும் எளிய முறையில் விரிவாகத் தந்துள்ளார். நூலின் முன்னட்டையில் "கந்தபுராணக் கதை" என்று அச்சாகியுள்ளது.

## 3101

**திருவாசக ஆராய்ச்சியுரை.** சு.அருளம்பலவனார். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 27, 2வது சந்து, குமரன் காலனி, வடபழனி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (சென்னை 15: நிறைமொழி அச்சகம், 124 வேளாச்சேரி சாலை, சின்னமலை).

(16), 567 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ.

மணிவாசகர் அருளிச் செய்த திருவாசகத்திற்கு முழுமையான ஆராய்ச்சி உரையை அருளம்பலவனார் எழுதிமுடித்து அச்சிடும் வேளையில் உயிர்நீத்துவிட்டார். அவரது மைந்தன் அ.சிவானந்தன் பின்னாளில் அந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். முதலில் சொற்பொருளும், அதைத் தொடர்ந்து ஆராய்ச்சிப் பகுதியுமாக அமைந்துள்ள இந்நூலுக்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் சொ.சிங்காரவேலன் ஆகியோர் மதிப்புரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். குறிப்பிட்ட பகுதிகளுக்கு விளக்கம் தருகின்ற போது அவற்றோடொத்த திருவாசகப் பகுதிகளை மிகத் தெளிவாகக் காட்டியும் விளக்கியுள்ளார்.

## 3102

**தெய்வீகத் தோத்திரப் பாடல்கள்.** இ.க.சிவஞானசுந்தரம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: தென்றல் பப்ளிகேஷன்ஸ், 1வது



படிப்பகம்

www.padippakam.com



பதிப்பு, ஜுலை 2002. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி மையம், 9, சுங்குராம செட்டி வீதி)

(4), 98 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5X13.5 சமீ.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், விநாயகர் அகவல், விநாயகர் கவசம், திருப்புகழ், கந்தபுராணம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை, கந்த சஷ்டி கவசம், சிவபுராணம், திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, கௌரி காப்பு, காயத்ரி மந்திரம் ஆகிய தெய்வீகத் தோத்திரப் பாடல்களின் தொகுப்பு.

## 3103

**பரிமளத் திரட்டு.** திருமதி கமலேஸ்வரி கணேசலிங்கம் நினைவு மலர். சு.கணேசலிங்கம், க.தாக்ஷாயினி (தொகுப்பாளர்கள்). சென்னை 41: எஸ்.கணேசலிங்கம், T.M.M.Street, Thiruvanmiyur, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(12), 246 பக்கம், வண்ணத்தகடுகள், விலை: தரப்படவில்லை, அளவு: 22X14 சமீ.

அமரத்துவமடைந்த யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த திருமதி கமலேஸ்வரி கணேசலிங்கம் (19.02.1951- 13.03.2005) அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட நினைவுமலர். விநாயகர் கவசம் முதல் யோகர் சுவாமிகள் பாடல்கள் வரை 29 தலைப்புக்களில் திருமுறைகளையும், தோத்திரப்பாடல்களையும் கொண்ட பாரிய தொகுப்பு இதுவாகும்.

## 3104

**பிரார்த்தனைப் பாடல்கள்: தோத்திரத்திரட்டு.** தொகுப்பாளர் விபரம் தரப்படவில்லை. கொழும்பு: சரசு பதிப்பகம், 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 6: ஈ.எஸ்.பிரின்டர்ஸ், 257- 1E காலி வீதி, வெள்ளவத்தை).

72 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21X14 சமீ.

இருபத்தியாறு பிரிவுகளாக வகைப்படுத்தி, கணபதி, முருகன், திரு-மால், மகாலட்சுமி, ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ புவனேஸ்வரி, ஸ்ரீ துர்க்கா, சிவபுராணம் ஆகிய தலைப்புகளில் பிரார்த்தனைப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3105

**பெரியபுராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம்.** சேக்கிழார் நாயனார் (மூலம்), ஆறுமுகநாவலர், மு.கந்தையா (உரையாசிரியர்), கோலாலம்பூர் 50490: சைவசித்தாந்த நிலையம், No. 16, Lorong Kasah Dalam, Medan Damansura, 9வது பதிப்பு, 1993. (சென்னை 600002: காந்தளகம், 4, முதல் மாடி, ரகிசா கட்டடம், 834 அண்ணா சாலை).

(22), 778 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: மலேசிய வெள்ளி 40, இந்திய ரூபா 400, இலங்கை ரூபா 450., அளவு: 25X19 சமீ.

பெரிய புராணத்தை ஆறுமுகநாவலர் உரைநடையில் எழுதி 1852இல் வெளியிட்டார். இந்நூல் இதுவரை 22 பதிப்புகளைக் கண்டுள்ளது. நாவலர் அவர்கள் பெரியபுராணம் முழுவதையும் செம்மையுறப் பதிப்பித்தல் வேண்டும் என்ற ஆவலுடன் நாயன்மார் சரிதைகளை மரபு வழியில் விளங்கிக் கொள்ளுவதற்குச் சூசனம் ஒன்றை இயற்றிடவும் எண்ணம் கொண்டார். அவரது சூசனம் காரைக்கால் அம்மையார் புராணம் வரையிலான 23 நாயன்மார்கள் வரையில் தொடர்ந்தது. 1879இல் நாவலர் மறைந்துவிட்டார். அவர் முடியாது விட்ட எஞ்சிய 40 நாயன்மார்களின் சூசனத்தை யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த பண்டிதர் மு.கந்தையா அவர்கள் மூலம் எழுதுவிக்கப்பெற்று இந்நூல் முழுமையாகத் தயாராகியுள்ளது.

## 3106

**முருகன் துதி மஞ்சரி.** ஊரெழு கதிரமலையான். (இயற்பெயர்: ச.கதிரவேலு). சென்னை 101: கதிரமலை வெளியீடு, 241/12 ரோகிணி தொடர் மாடி, அண்ணா நகர் மேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (சென்னை 14: மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் சாலை).

88 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 18X12.5 சமீ.

நாற்பதாண்டு காலம் இலங்கையில் ஆசிரியராகத் தொழில்புரிந்து ஓய்வுபெற்றுள்ள முருகபக்தரான நூலாசிரியர், முருகன் பேரிற் பாடிய கவிதைகள் இவை. மரபுநெறி சிதையாது, மொழிவளம் மிகுந்த 38 கவிதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. உலகின் பல நாடுகளுக்கும் சென்று ஆங்காங்கே எழுந்தருளியுள்ள முருகன் திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு இயற்றித்தந்தவர். ஏற்கெனவே முருகானந்தம் என்ற நூலில் அவற்றின் ஒரு பகுதியும், இந்நூலில் மேலும் சில பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் லண்டன் செ.விஸ்வநாதன் அவர்களை



படிப்பகம்

www.padippakam.com



பதிப்பாசிரியராகக் கொண்டு சிலோன் விஜயேந்திரன் அவர்களால் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

## 3107

**முருகானந்தம்.** ஊரெழு கதிரமலையான். (இயற்பெயர்: ச.கதிரவேலு). சென்னை 101: கதிரமலை வெளியீடு, 241/12 ரோகிணி தொடர் மாடி, அண்ணா நகர் மேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (சென்னை 5: ஸ்ரீ கோமதி அச்சகம், 41,சூரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி)

80 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 18X12.5 சமீ.

நாற்பதாண்டு காலம் ஆசிரியராகத் தொழில்புரிந்து ஓய்வுபெற்றுள்ள முருகபக்தரான நூலாசிரியர், முருகன் பேரிற் பாடிய கவிதைகள் இவை. இதிலுள்ள 22 கவிதைகளில் சில உலகெங்கிலும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள முருகன் திருத்தலங்களின்மீது பாடப்பெற்றவையாகவும் உள்ளன.

## 3108

**வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்.** ஐ.வீரக்கோன் முதலியார் (மூலம்), இ.வடிவேல் (உரையாசிரியர்). கொழும்பு 7: இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், 98 வோட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜுன் 2000. (கொழும்பு 11: அனுஷ் பிரின்டர்ஸ்).

158 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22X14 சமீ.

1624இல் போர்த்துக்கேயரால் கோணேசர் ஆலயம் அழிக்கப்பட்ட பின்னர் கோணேச பக்தரான திருக்கோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ஐ.வீரக்கோன் முதலியார் அவர்கள் 1686இல் பாடிய பாடல்கள், பின்னர் புலவர் வே.அகிலேசபிள்ளை அவர்களால் பரிசோதித்து 1906இல் சென்னை ரிப்பன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலில் லௌகீகக் காதல் வெளிப்படையாகப் பேசப்படுகின்றது. தெய்வீகக் காதல் உட்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. பேரின்பத்தையும் சிற்றின்பத்தையும் அழகாக உணர்த்தும் இப்பாடல்களுக்கு ஞானசிரோன்மணி பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் எழுதிய உரையுடன் இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் இந்த மீள்பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பேராசிரியர் சி.பத்மநாதனின் வரலாற்றுரீதியான மதிப்புரையுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3109

**ஸ்ரீ ராமர்-ஆஞ்சநேயர் தோத்திரங்கள், கவசம், வரலாறு.** ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: கௌரி அச்சகம்).

(2), 106 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 22X14 சமீ.

ஸ்ரீ ராம அஷ்டோத்திர சதநாமாவளி, சந்திரசேகர குருஸ்துதி பஞ்சகம், ஸ்ரீ ராம கதாமாலை ஆகியவற்றுடன் ஆஞ்சநேயர், மாருதி ஆகிய பெயர்களில் வழங்கும் ஸ்ரீ ஹனுமானின் வரலாறும், வழிபாட்டு முறைகளும், தோத்திரங்களும், மொத்தம் 14 இயல்களில் தொகுக்கப்பட்டுள்ளன. புலவர் சுப.துளசியின் “மாருதி தோத்திரமாலை” யும் இணைக்கப்பட்டுள்ளது.

**மேலும் பார்க்க: 3901**

## 294.5(1) இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்

### 3110

**அருளமுதம்: ஒரு ஆவணத் தொகுப்பு.** வேலணையூர் பொன்னண்ணா. டென்மார்க்: வேலணை ஸ்ரீ பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினருக்காக, திருமதி பொன்மணி, அறிவகம், 1வது பதிப்பு, 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

352 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X15 சமீ.

வேலணை ஸ்ரீ பெருங்குளம் முத்துமாரி அம்பாள் பெயரால் பாடப்பட்ட பக்திப் பஜனைப் பாமாலையும் தேவார, தோத்திர, அம்பிகை பதிகங்களும், வேலணை, அம்மன் ஆலய வரலாறும் கொண்ட ஆவணத் தொகுப்பு. தீவகத்தின் வேலணை மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டு, தற்போது உலகெங்கும் பரந்து வாழும் பலரின் வாழ்த்துரைகளுடன் வெளியாகியுள்ள இத்தொகுப்பில், தொண்டால் நிலைத்த வேலணைப் பெரியார்களின் வாழ்வும் பணிகளும் நினைவுகூரப்பட்டுள்ளதுடன், அம்மன் பற்றிய கட்டுரைகளும், முத்துமாரி அம்மன் பக்திப் பஜனைப் பாமாலைகளும், வேலணைக் கலைக் கோயில்களான வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்,



படிப்பகம்

www.padippakam.com



வேலணை மத்திய மகாவித்தியாலயம் ஆகிய கல்விக்கூடங்களின் வரலாறுகளும், இந்து சமயம் சைவசித்தாந்தம் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இறுதியில் பஞ்சபுராணப் பதிகங்கள் தரப்பட்டுள்ளன.

## 3111

**ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஞாபகார்த்தக் கட்டுரை மலர்.** கா.குகபாலன், நா.ஞானகுமாரன் (இணையாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: இந்து சமயப் பேரவை, 1வது பதிப்பு, 1997. (Colombo 6: Karthikeyan Press, Hotel Ceylon Inn, 501/2 Galle Road).

*132 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x19 சமீ.*

*3 பகுதிகளில் ஒழுங்கமைக்கப்பட்ட இம்மலரின் முதற்பகுதியில் பல்வேறு சமய நிறுவனங்கள், பிரமுகர்கள் இம்மலருக்காக வழங்கிய ஆசியுரைகளும், வாழ்த்துரைகளும் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் அமரர் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வாழ்வும் வளமும் பற்றிப் பேசும் ஆறு கட்டுரைகள் இடம்பெறுகின்றன. மூன்றாம் பிரிவில் பல்வேறு பேராசிரியர்கள், அறிஞர்கள் எழுதிய சமயச்சார்பான கட்டுரைகள் 11 இடம்பெற்றுள்ளன.*

## 3112

**ஐயப்ப தரிசனம்: மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்.** மலைக்கொழுந்து சண்முகநாதன், பொ.முத்துசாமி, க.கரு.கணேசமூர்த்தி (மலர்க் குழுவினர்). கொழும்பு 15: அறங்காவலர் சபை, அகில இலங்கை ஆனந்த ஐயப்பன் தேவஸ்தானம், 478/67, அழுத்மாவத்தை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்-டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

*(48), 142 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19.5 சமீ.*

*15.07.2002 திங்கட்கிழமை இடம்பெற்ற அழுத்மாவத்தை, அகில இலங்கை ஆனந்த ஐயப்பன் தேவஸ்தான மகா கும்பாபிஷேக விழாவின்போது வெளியிடப்பட்ட மலர். இந்நூலில் ஸ்ரீ ஐயப்ப சுவாமிகள் நமஸ்கார சுலோகங்கள், வழிபாட்டு மகிமைகள், என்பன-போன்ற விரிவான கட்டுரைகள் வண்ணப் புகைப்படங்களுடன் இடம்பெற்றுள்ளன.*



படிப்பகம்

www.padippakam.com



## 3113

**கண்ணகி சரிதையும் வரலாறுகளும்.** க.இ.குமாரசாமி (கோவைக்கிழார்). கோப்பாய்: அரவிந்த வாசம், 1வது பதிப்பு, 1999. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

x, 60 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 75., அளவு: 26x14 சமீ.

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலயத்தில் 1965 வரை கோவலனார் கதை படிப்பு நடந்துவந்தது. ஆலய வழக்கு காரணமாக 1965-1981 காலகட்டத்தில் இவ்வாலயம் பூட்டப்பட்டிருந்தது. பரிபாலன சபையின் வேண்டுகோளின்பேரில் ஈழத்தின் பிற கண்ணகை அம்மன் ஆலயங்களைத் தரிசித்து கோவலனார் கதை சம்பந்தமான ஏடுகளைப் பார்வையிடவும் சிற்பவேலைகள், ஆலய நடைமுறைகளை அறியவும் முயற்சி எடுக்கப்பட்டது. சிலப்பதிகாரக் கதையைத் தழுவி கண்ணகி சரிதையைச் சுருக்கமாக எழுதி, கண்ணகை வழிபாடு இலங்கையிற் பரவிய வரலாறு, இவ்வாலயத்தின் பரிபாலனம் ஆகியவற்றையும் சேர்த்து ஒரு சிறு நூலாக வெளியிடத் தீர்மானமானது. கோவலன்-கண்ணகி திருமணம் முதல் கஜபாகு வரம்பெறல், இறுதியாக 23 தலைப்புக்களில் எழுதப்பட்டிருந்தது. கண்ணகி வழிபாடு இலங்கையில் பரவிய வழிபாடு, 1975 இற்குப் பிறகு நடந்த ஆலய விசாரணைகளைத் தொடர்ந்து நியமிக்கப்பெற்ற பரிபாலனசபை எடுத்த நடவடிக்கைகள், செங்குட்டுவன் தாபித்த முதலாவது கண்ணகி கோவிலின் இன்றைய நிலை பற்றி 20.6.1996இல் India Today தமிழ்ச் சஞ்சிகையில் வெளியான கட்டுரையின் பகுதி என்பனவும் இந்நூலில் பதிவுபெற்றுள்ளன.

## 3114

**கொழும்பில் இந்துப் பாரம்பரியம்: ஒரு தேடலின் தொடக்கம்: பொன்விழா மலர்.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 15: வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம், 40A, கோவில் வீதி, 1வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(44), xx, 300 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் பொன்விழா மலராக வெளிவந்துள்ள இந்நூலில் கட்டுரைகள், நேர்காணல்கள், கொழும்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள், நிறுவனங்கள்,



படிப்பகம்

www.padippakam.com



அறநெறிப் பாடசாலைகளின் விபரங்கள், கொழும்பில் இந்து வழிபாட்டிடங்கள், கொழும்பில் சத்திரங்கள், நிறுவனங்கள், சங்கங்கள், களப் பதிவுகள், என்று ஆறு பிரதான பிரிவுகளின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் துலங்கி வந்துள்ள இந்துப் பாரம்பரியத்தின் வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3115

**சுத்தானந்தம் 50. பொன்விழா மலர்.** அகளங்கன் (மலராசிரியர்). வவுனியா: சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (வவுனியா: சுதன் அச்சகம்).

232 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.

19.11.1952இல் தாபிக்கப்பட்ட வவுனியா, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், தனது பொன்விழா ஆண்டாக 2002ஐக் கொண்டாடுகின்றது. கடந்த 50 ஆண்டுக்காலப் பணிகளை பதிவுசெய்யும் நோக்கிலும், தமிழறிஞர்களின் தரமான சமய, சமூகவியல், மற்றும் படைப்பிலக்கிய முயற்சிகளுக்கு இடமளிக்கும் வகையிலும் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

## 3116

**திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர், 1963.** இ.வடிவேல், வை.சோமஸ்கந்தர் (இணையாசிரியர்கள்). திருக்கோணமலை: திருக்கோணேசர் ஆலயப் புனருத்தாரண கும்பாபிஷேக சபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1963. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).

132 பக்கம், தகடுகள், விலை: ரூபா 2.25, அளவு: 24.5x18.5 சமீ.

சுபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 21ம் நாள் (03.04.1963) இல் வெளியிடப்பட்ட இம்மலர் திருக்கோணமலையினதும், திருக்கோணேஸ்வர திருத்தலத்தினதும் வரலாற்றைக் கற்கும் எவருக்கும் முக்கியமான ஆவணமாகும். 38 ஆக்கங்கள் கொண்ட இம்மலரில் வாழ்த்துரை, முகவுரை போக எஞ்சிய 36 ஆக்கங்களும் திருக்கோணேஸ்வரம் பற்றியும், அதன் வரலாற்று, சமயப் பின்னணி பற்றியும் புகைப்படங்களுடன் விளக்குகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



**3117**

**திருவாசக அமுதம்: பண்டிதர் சி.அப்புத்துரை பவளவிழா மலர்.** சி.அப்புத்துரை யாழ்ப்பாணம்: பண்டிதர் சி.அப்புத்துரை பவளவிழாச் சபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

ix, 195 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 19.5x13.5 சமீ.

பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் அவ்வப்போது திருவாசகம் பற்றி எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது. மணிவாசகரது திருவாசகத்தின் 51 பதிகங்களையும் ஒவ்வொன்றாக விளக்கி எழுதப்பட்ட 51 கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. அவ்வகையில் திருவாசகம் முழுவதின் சாரமும் பதிகம் பதிகமாகத் திரட்டித் தரப்பட்டுள்ளது.

**3118**

**தெய்வச் சேக்கிழார்: ஐந்தாவது உலகச் சேக்கிழார் மாநாட்டு மலர், 2005.** மகேஸ்வரி வேலாயுதம் (மலராசிரியர்). கொழும்பு 4: இந்து சமய அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி)

xxviii, 175 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 300., அளவு: 28x21.5 சமீ.

2005 செப்டெம்பர் மாதம் 9,10,11ஆம் திகதிகளில் கொழும்பில் இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற ஐந்தாவது உலகச் சேக்கிழார் மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். இம்மலரில், மாநாட்டில் படிக்கப்பெற்ற சேக்கிழாரியல், பெரியபுராணம் சார்ந்த 45 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மலர் வெளியீட்டுக் குழுவிலும் ஆய்வரங்கக் குழுவிலும் பேராசிரியர் சி.பத்மநாதன், செல்வி மகேஸ்வரி வேலாயுதம், திருமதி சாந்தி திருநாவுக்கரசு, திருமதி வசந்தா வைத்தியநாதன், திருவாளர் க.இரகுபரன், எஸ்.தெய்வநாயகம், எம். சண்முகநாதன், இ.நமசிவாயம், எஸ்.சரவணமுத்து, தமிழ்வேள் கந்தசாமி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

**3119**

**நல்லைக்குமரன் மலர் 1997.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண



படிப்பகம்

www.padippakam.com



மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 1997. (யாழ்ப்பாணம்: பாரதி அச்சகம்).

109 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25X18 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு 1993ம் ஆண்டு முதல் வருடாந்தம் வெளியிடப்படும் மலர். இது ஐந்தாவது மலராக 1997 நல்லூர்த் திருவிழாவின்போது வெளிவந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் பாரிய இடப்பெயர்வு 1995இல் நடைபெற்றதன் பின்னர் யாழ்ப்பாண மண்ணில் வெளியாகிய முதலாவது நூல் இது என்ற வரலாற்றுப் பெருமையும் இம்மலருக்கு உண்டு. ஆசிச்செய்திகளுடன் ஆன்மீகக் கட்டுரைகள் நிறைந்து காணப்படுகின்றன.

## 3120

**புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் கும்பாபிஷேக மலர் 2004.** கா.குகபாலன், ந.பேரின்பநாதன் (இதழாசிரியர்கள்). புங்குடுதீவு: ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், அரியநாயகன்புலம், இறுப்பிட்டி, 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424 காங்கேசன்துறை வீதி)

(9), 89 பக்கம், வண்ணப் படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24X18 சமீ.

இந்து சமய மரபில் கணாபத்திய வழிபாட்டு முறைகளும் அதன் சிறப்புக்களும் (ம.பாலகைலாசநாத சர்மா), திருவாசகத்தில் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் (மா.வேதநாதன்), சமய வாழ்வில் ஒழுக்கம் (நா.ஞானகுமாரன்), இந்துசமயக்கல்வியின் தாற்பரியம் (சுகந்தினி ஸ்ரீ முரளீதரன்), இந்திய தத்துவத்தில் பத்தியும் முத்தியும்: ஒரு நோக்கு (ஸ்ரீரதிதேவி கமலராஜன்), திருக்கைலாய ஞானபரம்பரை வரலாற்றுத் தேவையும் பணியும் (ம.இரகுநாதன்), பிள்ளையார் கோவிலைச் சுற்றியுள்ள பிரதேசம்: ஒரு சமூக, பொருளாதார, வரலாற்று நோக்கு (ந.பேரின்பநாதன்), ஆகிய ஆய்வுக் கட்டுரைகளுடன் கோவில் வரலாறு உட்பட பல்வேறு தகவல்களும், புகைப்படங்களும் கொண்ட மலர்.

## 3121

**வட இலங்கையில் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்: வரலாறும் தலப் பெருமையும்.** கனகசபாபதி நாகேஸ்வரன்.



படிப்பகம்

www.padippakam.com



கொழும்பு: திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 13: Luxmi Printer, 195, Wolfendhal Street ).

(20), 79 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

வட இலங்கையின் சக்திபீடம் எனத் திகழ்வது நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவஸ்தானம். குண்டலினிற் தொழிற்பாடும் ஸ்ரீ சக்கர பூசை வழிபாட்டு மேன்மையும் உடையது இத் திருத்தலம். சக்தி வழிபாடு நாகப்பாம்பு வழிபாட்டோடு தொடர்பு கொண்டமைவதாகும். இன்றும் உலகமக்களிடையே பேதமற்ற முறையில் நயினை அம்மன் திருத்தலம் கீர்த்திபெற்றுள்ளது. இவ்வாலயத்தின் தல வரலாற்று ஆய்வு 23 தலைப்புக்களின்கீழ் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

**மேலும் பார்க்க: 3991**

## 297 இஸ்லாம்

### 3122

**அல் குர் ஆன் கூறும் அழகிய உவமைகள்.** உஸ்மான் சாஹிப். கல்முனை: ஹஜ்ஜத்துல் இஸ்லாம் பதிப்பகம், 2வது பதிப்பு, பெப்ரவரி 1998, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (மருதமுனை: இளம்பிறை ஓப்செட், பிரதான வீதி).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

உலக முஸ்லீம்களின் வேதநூல் அல்குர் ஆன் ஆகும். இஸ்லாத்தின் சில கருத்துக்களை எளிதாக விளக்குவதற்கு அல்குர் ஆனில் பல உவமைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய உவமைக் கருத்துக்கள் இலக்கிய நயத்துடன் இந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன.

### 3123

**அல்லாஹ் எங்கும் உள்ளானா?** எஸ்.எச்.எம். இஸ்மாஈல் ஸலபி. பரகஹதெனிய: Jam-E athu Ansaris Sunnathil Mohammadiyya, Head Office, Ku / Weuda, 1வது பதிப்பு, மே 1998. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



56 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 17.5X12 சமீ.

இந்நூலின் ஆசிரியர் கண்டி மாவட்டத்தில் உடத்தலவின்னை மடிகேயைச் சேர்ந்தவர். பல இஸ்லாமிய நூல்களை எழுதியவர். நவீனகாலத் தேவைகளில் இஸ்லாமின் பங்களிப்புத் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். இத்தகைய ஆய்வுகளின் தொனிப்பொருள்கள் இவரது நூல்களின் பொதுப் பண்பாகும். இந்த அடிப்படையில் அல்லாஹ் எங்கும் உள்ளானா என்னும் இந்நூலும் அமைந்துள்ளது. இந்நூலின் முதற் பதிப்பு, 09.05.1998இல் இலங்கையில் வெளியாகிய பின்னர் எவ்வித மாற்றமுமின்றி மீள்பதிப்பாக நவம்பர் 1998இல் தமிழகத்தில் மதுரை 22, மாலிக் பப்ளிக்கேஷன்ஸ் நிறுவனத்தின் மூலம் சென்னை எம்.அப்துல் ஷக்கூர் அச்சகத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டுமுள்ளது.

## 3124

**அறிவியல் வளர்த்த முஸ்லீம்கள் (முதலாம் பாகம்).** ஏ.எம்.அபூபக்கர். காத்தான்குடி 2: முனீரா பப்ளிக்கேஷன்ஸ், 86, பழைய வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1980. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).

iv, 214 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 20X14 சமீ.

உலக வரலாற்றில் கிரேக்க நாகரீகத்திற்குப் பின்னர் எழுச்சியடைந்தது இஸ்லாமிய நாகரீகமாகும். 15ம் நூற்றாண்டில் ஐரோப்பிய மறுமலர்ச்சி நிகழும் வரை இந்நாகரீகம் நீடித்திருந்தது. இக்கால கட்டத்தில் உலகுக்கு பண்பட்ட ஒரு நாகரீகத்தையும், அறிவியல் வளர்ச்சியையும் இவர்கள் காட்டினார்கள். இத்தகைய அறிவியல் வித்தானது, பிற்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையை வழங்கியது. இக்கால கட்டத்தில் கடக்கப்பட்டுள்ள முஸ்லீம்களின் அறிவியல் வளர்ச்சிப்படிகள் ஆதாரபூர்வமாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.

## 3125

**அன்னை கதீஜா (ரலி).** அகத்தி முறிப்பான் (இயற்பெயர்: செய்னுத்தீன் எஸ்.பரீத்). சென்னை 600 001: முனீரா பதிப்பகம், 248, தம்புசெட்டி தெரு, 1வது பதிப்பு, ஜூன் 2004. (சென்னை 5: கிராபிக் பார்க்)

32 பக்கம், விலை: இந்திய ரூபா 7.00, அளவு: 18X12 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு காரணிகளின் நிமித்தம் பதினொரு பெண்களை மணம் முடித்ததாக இஸ்லாமிய வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. அவரது முதல் மனைவி கதீஜா (ரலி) என்பவராவார். இந்நூலில் கதீஜா நாயகியின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை கதைவடிவில் நூலாசிரியர் சிறுவர்களுக்காகத் தந்துள்ளார். இந்நூலின் ஆசிரியர் இலங்கையில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். விசுவாசிகளின் தாய்மார்கள் வரிசையில் வெளிவந்த முதலாவது நூல் இது.

### 3126

**ஆத்ம ஞானிகளும் அறப் போராட்டங்களும்.** எம்.ஏ.எம்.சுக்ரி. பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், த.பெ. இல. 01, 1வது பதிப்பு, ஜூன் 1984. (கொழும்பு 9: S.H.Nilabdeen, Developrint, 69, Albion Road).

*30 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18X12.5 சமீ.*

இஸ்லாமிய அடிப்படையில் **தஸவ்புப்** என அழைக்கப்படும் இஸ்லாமிய ஆத்மீகவியல் பற்றியும், **ஸூபிகள்** என அழைக்கப்படும் ஆத்மஞானிகள் பற்றியும் இந்நூல் ஆராய்கிறது. ஆத்மீகவியல், ஆத்மஞானிகள் பற்றிப் பரப்பப்பட்டிருந்த தவறான கருத்துக்களுக்கு விளக்கமளிக்க முற்படும் இந்நூலின் ஆசிரியர் இலங்கை ஜாமிய்யா நளீமிய்யா கலாசாலையின் அதிபரும், சிறந்த இஸ்லாமிய கல்விமானுமாவார்.

### 3127

**ஆத்ம பரவசங்கள்.** அஷ் ஷஹீத் ஸெய்யித் குத்ப் (மூலம்), A.C.M.சுபையிர் (தமிழாக்கம்). அட்டாளைச்சேனை 4: தென்கிழக்கு இஸ்லாமிய நிலையம், 1வது பதிப்பு, ஜனவரி 1999. (கல்முனை: An-Noor Graphics).

*(10), 22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X14 சமீ.,* ISBN: *955-8220-00-0.*

எகிப்தின் புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞரான செய்யித் குத்ப் (1906-1966) அவர்கள் மரணதண்டனை விதிக்கப்பெற்று சிறையிலிருக்கும் வேளை தன் தங்கையான இலக்கிய மேதை அமீனா குதுப் அவர்களுக்கு எழுதிய கடித உருவிலான இஸ்லாமிய தத்துவோபதேசங்கள் இவை. மனித வாழ்வின் யதார்த்தத்தினை நன்கு தெளிவுபடுத்தும்



படிப்பகம்

www.padippakam.com



நூல். மௌலவி ஏ.சீ.எம்.சுபையிர் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும், இலங்கைத் திறந்த பல்கலைக்கழக போதனாசிரியராகவும் கடமையாற்றுகிறார்.

## 3128

**இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும்.** ஆ.மு.ஷரிபுத்தீன். மருதமுனை: ஆ.மு.ஷரிபுத்தீன், 1வது பதிப்பு, 1979.( கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ்).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12 சமீ.

99 செய்யுள்களைக் கொண்ட இசைவருள் மாலையும், 100 செய்யுள்களைக்கொண்ட மக்களுக்கு இதோபதேசமும் இந்நூலில் அடங்கியுள்ளன. "அஸ்மா உல்ஹுஸ்னா" எனப்படும் அல்லாஹ்வின் 99 திருநாமங்களும் ஒவ்வோர் காரணம் கருதி அமைந்தவை. அறபு மொழியிலியன்ற அவை அல்லாஹ்வின் பெருமை, வல்லமை, முதலான பண்புகளை விளக்குவன. அவற்றைத் தமிழ்மொழியில் தெரிந்துகொள்ள வசதியாக இசைவருள் மாலை உருவாக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இதோபதேசம் என்பது 100 செய்யுள்களில் அமைந்த நன்னெறிப் போதனையாகும்.

## 3129

**இதுதான் தவ்ஹீத்.** ஸாலிஹ் பின் பவ்ஸான் அல் பவ்ஸான் (அரபு மூலம்), எம்.எல்.முபாரக் ஸலபி (மொழிபெயர்ப்பு). பரகஹதெனிய: ஜம் இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா தலைமையகம், பறகஹதெனிய, வேஉட, 1வது பதிப்பு, மே 2000. (பரகஹதெனிய: தாருத் தவ்ஹீத் கம்பியூட்டர் மையம், பரகஹதெனிய, வேஉட).

X, 206 பக்கம், விலை: இலவசம், அளவு: 18X13.5 சமீ.

இஸ்லாம் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததொரு மார்க்கமாகும். இஸ்லாமிய நம்பிக்கையின் மூல ஊற்று ஏகத்துவம் - ஓரிறைக் கொள்கையாகும். இதனையே தவ்ஹீத் என்பர். இந்நூல் இஸ்லாமிய ஏகத்துவக் கொள்கையை விளக்குகின்றது. அரபுலக அறிஞரும் எழுத்தாளருமான கலாநிதி ஸாலிஹ் பின் பவ்ஸான் அல் பவ்ஸான் அரபு மூலத்தில் எழுதிய **கிதாபுத் தவ்ஹீத்** என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இந்நூலின் மொழிபெயர்ப்பாளரான எம்.எல்.முபாரக் ஸலபி அவர்கள், தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட விரிவுரையாளராவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3130

**இனிமைமிக்க ஸலவாத்துக்கள்.** ஆசிரியர் விபரம் தரப்படவில்லை. அக்குறணை: இஸ்லாமிய ஆன்மீக அமைப்பு, 6, வராகஸ்ஹின்ன, 1வது பதிப்பு, மே 2005. (கண்டி: கிரியேட்டிவ் பிரின்டர்ஸ், இல.3 ஏ, பகிரவகந்த வீதி).

*44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5X14 சமீ.*

நாயகம் (ஸல்) அவர்களின் புகழ்பாடும் கீர்த்தனங்களின் முக்கியத்துவம் பற்றி இந்நூல் விளக்குகின்றது. பலரால் பல மொழிகளில் பாடப்பெற்ற கீர்த்தனைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளமையால் மூல நூலாசிரியர் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் இந்நூலின் வெளியீட்டுக்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் உடத்தலவின்னையைச் சேர்ந்த இஸ்லாமிய ஆன்மீக் வைத்தியர் எம்.எல்.ஹுசைன் அலி என்று அறியப்படுகின்றது. (தகவல்: பீ.எம். புன்னியாமீன், சிந்தனை வட்டம்).

## 3131

**இஸ்லாத்தின் பார்வையில் யார் குழப்பவாதிகள்?** எஸ்.எம்.மன்சூர். மாத்தளை: அல்-ஹிக்மா பப்ளிஷர்ஸ், 14, மஹாதெவட்ட வீதி, 2வது பதிப்பு, மார்ச் 1988, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1987. (கொழும்பு 9: Milaksh Consultancy, 204/12 Dematagoda Road).

*112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X13 சமீ.*

***குழப்பவாதிகள் ஜாக்கிரதை*** என்னும் தலைப்பில் குலாம் ரசூல் என்பவரால் எழுதப்பட்ட நூலுக்குப் பதிலளிக்கும் வகையில் வெளிவந்துள்ள நூல். இந்நூலில் ஜம்அத்தே இஸ்லாமி என்ற இஸ்லாமிய பிரச்சார இயக்கத்தின் தாபகர் மௌலானா மௌதூதி (றஹ்) அவர்கள் பற்றியும் ஜமா அதே இஸ்லாமி பற்றியும் எழுப்பப்பட்டுள்ள ஐயப்பாடுகளுக்கு போதிய விளக்கமளிக்கும் வகையில் ஆதாரபூர்வமான கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

## 3132

**இஸ்லாம் ஓர் அறிமுகம்.** பேகம் ஆயிஷா பவானி வக்பு (ஆங்கில மூலம்), ஸாயிக் (தமிழாக்கம்). கொழும்பு 5: இலங்கை இஸ்லாமிய போதனா கழகம், இல.7, கவர் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1973. (கொழும்பு 10: தி டயமண்ட் பிரிண்டர்ஸ், 98 டீன்ஸ் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



xiii, *204 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18X12.5 சமீ.*

*பாக்கிஸ்தான், கராச்சி நகரைச் சேர்ந்த பேகம் ஆயிஷா பவானி வக்பு ஆங்கிலத்தில் எழுதிய* Islam an Introduction *என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். பேருவளையைச் சேர்ந்த அல்ஹாஜ் ஏ.எம்.அப்துல் கரீம் என்பவர் மரணித்தபோது அவரின் நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டது. இஸ்லாமிய இலட்சியவாதமும் அதன் பண்புகளும், இஸ்லாம் விசுவாசமும் கிரியைகளும், அல்குர்ஆன், நபிகள் நாயகம் (ஸல்), ஆட்சேபணைகளும் அவற்றின் மறுப்புக்களும் ஆகிய 5 பிரதான அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் ஒரு இஸ்லாமிய ஆய்வு நூலாகும்.*

## 3133

**இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம்.** *பீ.ஜைனுல் ஆபிதீன் (மூலம்), அகத்தி முறிப்பான் (தொகுப்பாசிரியர்). சென்னை: முனீரா பதிப்பகம், 248 தம்புசெட்டித் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (மதுரை 625001: சன் பிரிண்டிங் ஏஜென்சி).*

*208 பக்கம், விலை: இந்திய ரூபா 38., அளவு: 18X12 சமீ.*

*மவ்லவி பீ.ஜைனுல் ஆபிதீன் உலவி என்பவர் இந்தியாவில் உள்ள பிரபல இஸ்லாமிய அறிஞரும் மார்க்கப் போதகருமாவார். தமிழகத்தின் விஜய் தொலைக்காட்சியில் மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களின் கேள்விகளுக்கு பீ.ஜைனுல் ஆபிதீன் அவர்கள் வழங்கிய பதில்கள் புத்தளத்தைச் சேர்ந்த அகத்தி முறிப்பான் (இயற்பெயர்: செய்னுத்தீன் எஸ்.பரீத்) அவர்களால் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்பட்டுள்ளன.*

## 3134

**இஸ்லாமிய அகீதா: ஒரு விளக்கம். ஸாலிஹ் ஸயீத்** *அஸ்ஸுஹைமீ (மூலம்), எஸ்.எச்.எம்.இஸ்மாயில் ஸலபி (மொழிபெயர்ப்பு). பரகஹதெனிய: ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா தலைமையகம், வேஉட, 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (பரகஹதெனிய: தாருத் தவ்ஹீத் கம்ப்யூட்டர் மையம், வேஉட).*

*135 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12 சமீ.*

*"அகீதா" என்றால் அரபு மொழியில் கொள்கை, கோட்பாடு என்று பொருள்படும். இஸ்லாமிய அகீதாவை விளக்கும் இந்நூலின் அரபு மொழி மூல நூலாசிரியர் கலாநிதி ஸாலிஹ் ஸயீத் அஸ்ஸுஹைமீ,*



படிப்பகம்

www.padippakam.com



மதீனாப் பல்கலைக்கழக ஷரிஆ (சட்ட) பீடத் துணைப் பேராசிரியரராவார். இலங்கை முஸ்லீம்களுக்குத் தேவையான முக்கிய அகீதா அம்சங்களைக் கொண்டதாக இந்நூலினை **உண்மை உதயம்** மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.எச்.எம்.இஸ்மாஈல் அவர்கள் எளிய நடையில் தமிழாக்கம் செய்துள்ளார். **முதக்கீரா பில் அகீதா** என்ற அரபு நூலின் தமிழாக்கமே இந்நூலாகும்.

## 3135

**இஸ்லாமிய நாகரீகம்.** முக்தார் ஏ.முஹம்மது. பேருவளை: வை.எம்.எம்.ஏ., சீனன்கோட்டை, 1வது பதிப்பு, ஜனவரி 1975. (கொழும்பு 3: டயமண்ட் அச்சகம், 41, சென் மைக்கல் வீதி).

*(26), 280 பக்கம், விலை: ரூபா 14.50, அளவு: 17.5x12 சமீ.*

இஸ்லாமிய நாகரீகம் உலக வரலாற்றுடன் பின்னிப் பிணைவதால் வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னணியாக வைத்து நாகரீக வளர்ச்சிப் படிகளை ஆசிரியர் வழங்குவது பொருத்தமாயுள்ளது. பல்வேறு துணை நுல்களை சான்றாதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்நூல் வரலாற்று நிகழ்வுகளை எளிய நடையில் சுவைபட விளக்குகின்றது. இலங்கைப் பல்கலைக்கழக வித்தியோதய வளாகத்திலும் கொழும்பு வளாகத்திலும் பட்டப்படிப்பை மேற்கொண்டு பேராதனை வளாகத்தில் அறபு-இஸ்லாமிய கலைத்துறைப் பிரிவில் சிறப்புப்பட்டம் பெற்ற இந்நூலாசிரியர் வித்தியாலங்கார வளாகத்தில் இடைக்கால விரிவுரையாளராகக் கடமையாற்றியபோது இந்நூல் எழுதப்பட்டது.

## 3136

**இஸ்லாமிய நாகரீகம் வினா விடை.** எம்.எம்.எம்.அக்ரம். கொழும்பு 10: இஸ்லாமிய புத்தக நிலையம், சின்னப்பள்ளி வாசல் ஷொப்பிங் கொம்பிளெக்ஸ், 20 A/4, சைமன்ஸ் வீதி, மருதானை, 1வது பதிப்பு, ஜனவரி 1992. (சென்னை 600012: பைலட் ஏஜன்சீஸ்).

*(4), 44 பக்கம், விலை: ரூபா 25., இந்திய ரூபா 7.50, அளவு: 21x13.5 சமீ.*

க.பொ.த.உயர்தர இஸ்லாமிய நாகரிகம் பாடத்தில் பகுதி 1 வினாப்பத்திரத்துக்கேற்ற வகையில் இந்நூல் வினா-விடை வடிவில் எழுதப்பட்டுள்ளது. பாடப்பரப்பைத் தழுவி எழுதப்பட்ட போதிலும்



படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாமிய நாகரீகம், இஸ்லாமிய வரலாறு பற்றி அறிந்துகொள்ள விரும்புவோருக்குப் பயனுள்ள வகையில் இந்நூல் அமைகின்றது. இலங்கையில் பிரபல்யம் பெற்ற இஸ்லாமிய மார்க்க அறிஞர் மர்ஹூம் மஸூத் ஆலிம் ஸாஹிப் அவர்களின் மகன் இந்நூலாசிரியராவார்.

## 3137

**இஸ்லாமிய நாகரீகம் வினா விடை: பகுதி 2.** எம்.எம்.முகம்மது அக்ரம். கொழும்பு 10: இஸ்லாமிய புத்தக நிலையம், சின்னப்பள்ளி வாசல் ஷொப்பிங் கொம்பிளெக்ஸ், 20 A/4, சைமன்ஸ் வீதி, மருதானை, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (சென்னை 6000 86: முகில் பிரின்டர்ஸ்).

56 பக்கம், விலை: ரூபா 25., இந்திய ரூபா 7.50, அளவு: 24x18.5 சமீ.

க.பொ.த.உயர்தர இஸ்லாமிய நாகரிகம் பாடத்தில் பகுதி 2 வினாப்பத்திரத்துக்கேற்ற வகையில் இந்நூல் வினா-விடை வடிவில் எழுதப்பட்டுள்ளது. பாடப்பரப்பைத் தழுவி எழுதப்பட்ட போதிலும் இஸ்லாமிய நாகரீகம், இஸ்லாத்தின் உண்மையான வரலாறு, கலாச்சாரம் என்பன பற்றி அறிந்துகொள்ள விரும்புவோருக்குப் பயனுள்ள வகையில் இந்நூல் 33 தலைப்புக்களில் அமைகின்றது. இலங்கையில் பிரபல்யம் பெற்ற இஸ்லாமிய மார்க்க அறிஞர் மர்ஹூம் மஸூத் ஆலிம் ஸாஹிப் அவர்களின் மகன் இந்நூலாசிரியராவார்.

## 3138

**இஸ்லாமிய மறுமலர்ச்சி: ஒரு வரலாற்று நோக்கு.** அபுல் அஃலா மௌதூதி (உருது மூலம்), ஏ.எச்.அபூ உபைதா. கொழும்பு 9: இலங்கை ஜமா அதே இஸ்லாமி வெளியீடு, (Sri Lanka Jama'ath E Islami), 77, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு ஜனவரி 2001. (பேருவளை: ஏ.ஏ.பிரின்ட்ஸ், 6 மார்க்கட் வீதி).

(12), 153 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-608-027-9.

1940ஆம் ஆண்டில் இந்தியாவைச் சேர்ந்த மூலநூலாசிரியரால் உருது மொழியில் எழுதப்பட்ட **தஜ்தீதோ இஹ்யா ஈ தீன்** என்னும் நூலின் தமிழாக்கம். இஸ்லாமிய வரலாற்றுப் பதிவுகளை நான்கு பிரதான தலைப்புகளினூடாக நூலாசிரியர் விளக்குகின்றார். இஸ்லாமும் இதர கொள்கைகளும் முரண்பாடுகளும், இஸ்லாமிய மறுமலர்ச்சியின் தன்மை (தஜ்ஜீத்), இஸ்லாத்தின் மாபெரும் முஜத்தித்கள் சிலரும்



படிப்பகம்

www.padippakam.com



அவர்களின் சாதனைகளும், டில்லி ஷாஹ் வலியுல்லாஹ் அவர்களின் சாதனைகள், ஆகிய நான்கு இயல்களிலும், இஸ்லாமிய மறுமலர்ச்சி என்றால் என்ன, அது பற்றிய சர்ச்சைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண இந்நூல் விளைகின்றது. ஏ.எச்.அபூ உபைதா இலங்கையில் வெளிவரும் பிரதான இஸ்லாமிய மாத இதழான அல்ஹசனாத்தின் பிரதம ஆசிரியராவார்.

## 3139

**இஸ்லாமும் குடும்பத் திட்டமும்.** எம்.எல்.நஜிமுதீன். தர்கா நகர் 12090: படிப்பு வட்டம், 9, எஸ்.எப்.மாவத்தை, தர்கா நகர், 1வது பதிப்பு, அக்டோபர் 2000. (கொழும்பு 11: கியு.சீ.கிராப்பிக்ஸ், 110, ¼, மலிபன் வீதி).

xxiii, 163 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8037-02-5.

தினகரன் பத்திரிகையில் இஸ்லாமும், குடும்பத் திட்டமும் எனும் தலைப்பில் இடம்பெற்ற கட்டுரைத் தொடரே இந்நூலாகும். இஸ்லாத்தில் குடும்பத்திட்டத்திற்கு இடமே இல்லை என்ற எண்ணத்தில் வருடாவருடம் அளவுக்கு மீறிப்பிள்ளைகள் பெற்று உடல் மெலிந்து, உள்ளம் தளர்ந்து மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் எம்முடைய முஸ்லீம் சகோதரிகளுக்கு இந்நூலினை நூலாசிரியர் சமர்ப்பணமாக்கியிருக்கிறார். இந்நூல் மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அறிவியல் சார்ந்ததொரு நூலாகும். கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி எம்.எல்.நஜிமுதீன் மகப்பேறு மாதர் நோய்கள் பற்றிய வைத்தியத்துறையில் விசேட நிபுணத்துவம் பெற்றவர்.

## 3140

**இஸ்லாமும் சர்வமத கோட்பாடும்.** ஓட்டமாவடி அறபாத். வாழைச்சேனை: சுஹா பப்ளிக்கேஷன், 71, பஷீர் வீதி, மாவடிச்சேனை, 1வது பதிப்பு, ஜுலை 1999. (கொழும்பு 10: எம்.எச்.தஹிர் பிரிண்டர்ஸ், 20, சைமன்ட்ஸ் வீதி, மருதானை).

64 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20x14 சமீ., ISBN: 955-96317-4-5.

இந்நூலில் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கும், ஏனைய மதக் கோட்பாடுகளுக்கும் இடைப்பட்ட விளக்கங்கள் ஆராயப்பட்டு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. சகல மதங்களும் அன்பு, பரிவு,



படிப்பகம்

www.padippakam.com



சமாதானம், ஒற்றுமை, போன்றவற்றையே வலியுறுத்தி நிற்கின்றன என்பதை இந்நூலில் நிரூபிக்க நூலாசிரியர் முனைகின்றார்.

## 3141

**உணவுப் பொருள்களில் ஹராமான கலப்படங்கள்.** ஸீ.எம்.ஏ.அமீன். கலகெடிஹேன: ரேஷ்மா பதிப்பகம், 348/1, Warapalana Road, Thihariya, 1வது பதிப்பு, மார்ச் 1987. (Colombo 9: Developrint, 69, Sri Darmarama Road).

(8), 76 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12 சமீ.

இஸ்லாம் மதத்தினால் தடுக்கப்பட்டவற்றை ஹராம் எனக் கூறுவார். சில உணவுப் பொருட்கள் உண்பதை இஸ்லாம் ஹராம் ஆக்கியுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஹராமான உணவு வகைகள் எவை? அவற்றை இனம் காண்பது எப்படி? ஹராமான பொருட்கள் சேர்க்கப்பட்டுத் தயாராகும் உணவுவகைகள் எவை? இவ்வாறான வினாக்களுக்கு விடைகாண இந்நூல் முனைகின்றது. பதினொரு உசாத்துணை நூல்களையும், பதினொரு ஆய்வுக் கட்டுரைகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆதாரபூர்வமான தகவல்களைத் தந்திருப்பது உணவுப்பொருள்களில் ஹராமான கலப்படங்கள் (Prohibited ingredients in food items) என்ற இந்நூலின் சிறப்பம்சமாகும்.

## 3142

**காலத்தின் அறைகூவலும் முஸ்லீம்கள் பணியும்.** செய்யித் அபுல் ஹசன் அலி நத்வி. (மூலம்), எம்.ஏ.எம்.சுக்ரி (தமிழாக்கம்). பேருவளை: நுஸ்ரதுல் இஸ்லாம், த.பெட்டி இல.1, சீனன் கோட்டை, 1வது பதிப்பு, நவம்பர் 1969. (கொழும்பு 10: அல்பியன் அச்சகம், 157, ஜயந்த வீரசேகர மாவத்தை, மருதானை)

(6), 30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

நவீன உலகம் லோகாயதவாதம், நாஸ்திகவாதம், சடவாதம் போன்ற பலவிதமான தத்துவங்களின் பாதிப்புக்குட்பட்டு ஆத்மீகவாதம் பற்றிய சித்தாந்தத்தில் இருந்து படிப்படியாக விலகிக் கொண்டு செல்கின்றது. இத்தகைய நிலையில் இஸ்லாமிய உலகம் எதிர்நோக்கும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்ற அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதே இந்நூல். இதன் மூல நூலாசிரியர் பேராசிரியர் மௌலானா அபுல் ஹசன் அலி நத்வி அவர்கள் **அர்ரித்த**



படிப்பகம்

www.padippakam.com



**லா அபூபக்ர் லஹா** என்னும் தலைப்பில் அரபு மொழியில் எழுதிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுவாகும்.

## 3143

**கீத போதனா ரஞ்சிதம்.** ரீ.எம்.ஷாஹுல் ஹமீது. கொழும்பு 7: சர்வதேச இஸ்லாமிய மன்றம், 108, பார்ண்ஸ் பிளேஸ், 1வது பதிப்பு, ஏப்ரல் 1972. (கொழும்பு 13: Central Printers, 147, Wolfendhal Street).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இலங்கை முஸ்லீம்களுடைய மௌலிது (சமய நிகழ்ச்சி) மஜ்லிஸுகளிலும், திருமணம், கந்தூரி முதலிய வைபவங்களிலும் பதம் பாடும் மரபு எண்ணற்ற இஸ்லாமிய கீர்த்தனைகளை எமக்களித்துள்ளன. இக் கீர்த்தனங்களின் பொருளாக இஸ்லாத்தின் மாண்பு, நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை மற்றும் முஸ்லிம் ஆத்ம ஞானிகளின் வாழ்க்கை ஆதியன அமையும். 20ம் நூற்றாண்டின் இறுதிக்கால கட்டங்கள் வரை இத்தகைய இசைப் பாரம்பரியங்கள் சிறப்பாகக் கிராமங்களில் பேணப்பட்டு வந்துள்ளன. இத்தகைய இசைப்பாரம்பரியத்தின் வழி வந்தவர் தான் கவிஞர் ஷாஹுல் ஹமீது அவர்கள். 15.07.1893ம் திகதி அக்குறணை குருகொடையில் பிறந்த இக்கவிஞர் இயற்றியுள்ள 19 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3144

**தப்லீக் ஜமாஅத்: ஓர் அறிமுகம்.** ஏ.ஸீ.எம். ஜலீல். மாவனெல்ல: அந்-நிஸா பதிப்பகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

40 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 17.5x12.5 சமீ.

இன்று இலங்கையில் இயங்கிவரும் இஸ்லாமிய மதப் பிரச்சார இயக்கங்களுள் **தப்லிக் ஜமாஅத்** இயக்கமும் ஒன்று. இந்தத் தப்லிக் இயக்கப் பணிகள் 1930ம் ஆண்டுகளில் இந்தியாவில், டில்லியில் மௌலானா இல்யாஸ் (ரஹ்) என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டன. தப்லிக் ஜமாஅத்தின் தோற்றம், அதன் பின்னணி, பாமரர்களையும் பள்ளிவாசல்களுடன் தொடர்பற்றவர்களையும் மார்க்க அடிப்படை-யில் மாற்ற மேற்கொள்ளப்பட்ட தியாகங்கள், இன்றைய தப்லீக் இயக்கத்தின் நிலைப்பாடு என்பன இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



இந்நூலாசிரியர் ஏ.ஸீ.எம்.ஜலீல் (கார்க்கூன்சாப்) அவர்கள் நீண்டகாலம் இவ்வியக்கச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

## 3145

**திருக்குர் ஆன் தீர்ப்பு - மூன்றாம் பாகம்: பாடம் ஒன்று: சுவனம் செல்லும் சுன்னத்வல் ஜமாஅத்தினரை நாம் அறிந்துகொள்வது எப்படி?** ஷெய்குல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு 6: அகில இலங்கை தரீக்கதுல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 4வது பதிப்பு, பெப்ரவரி 2003, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1991, 2வது பதிப்பு, ஏப்ரல் 1996, 3வது பதிப்பு, ஏப்ரல் 2002. (கொழும்பு 6: பரணன் அசோஷியேட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 403, 1/1 காலி வீதி).

66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14.5 சமீ.

இது ஒரு சமய விளக்க நூலாகும். அல்லாஹ் ஒருவனே என்ற ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டு, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தான் அல்லாஹ்வின் தூதர் என்ற விசுவாசத்தைக் கொண்டவர்களை சுன்னத் வல் ஜமாஅத்தினர் என்பர். சுன்னத் வல் ஜமாஅத்தினரைப் பற்றிய பல்வேறு விளக்கங்களையும் இந்நூல் முன்வைக்கின்றது.

## 3146

**நற்செயல்களும் பிரதிபலன்களும்.** ஹபீப் முஹம்மத் அல் யஹ்யூஹ் (அரபு மூலம்), செய்னுதீன் எஸ்.பரீத் (தமிழாக்கம்). பரகஹதெனிய: ஜம் இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா. தலைமையகம், பறகஹதெனிய, வேஉட, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (தெகிவளை: ஏ.ஜே.அச்சகம், 44, ஸ்டேஷன் வீதி)

viii, 36 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8732-43-5

ஒவ்வொரு மனிதனும் தனக்காகவும், பிறருக்காகவும் நற்செயல்களையே புரியவேண்டும். இவ்வாறு நற்செயல்களைப் புரியும்போது கிடைக்கும் பிரதிபலன்கள் இவ்வுலகிலும், மறு உலகிலும் எமக்குக் நன்மை பயக்கின்றன என்ற அடிப்படையில் எழுதப்பட்ட நூல். மார்க்க அறிஞரும் குவைத்-ஸகாத் நிறுவனத்தின் அநாதைப் பராமரிப்புப் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் ஹபீப் முஹம்மது அல்யஹ்யூத் அவர்கள் மூலநூலாசிரியராவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3147

**நறுமணம் கமழும் ஸலவாத்துக்கள்.** மஜீதிய்யா. கல்ஹின்னை: மஜீதிய்யா பதிப்பகம், 115/1, பாடசாலை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2004. (கல்ஹின்னை: மஜீதிய்யா பதிப்பகம்).

36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X11.5 சமீ.

நாயகம் (ஸல்) அவர்கள் மீது புகழ்பாடும் கீர்த்தனங்கள் ஸலவாத் எனப்படும். இப்படிப்பட்ட ஸலவாத் தொடர்பாக எழுதப்பட்ட நூலே இதுவாகும். ஸலவாத்தின் முக்கியத்துவம், அது ஓதப்படும் சந்தர்ப்பங்கள் போன்ற இன்னோரன்ன விளக்கங்களை இந்நூலில் காணலாம். அராபியக் கவிஞர்களாலும், இலங்கை இந்திய அராபி மொழிக் கவிஞர்களாலும் இயற்றப்பட்ட இத்தகைய கீர்த்தனங்கள் மரபுரீதியாக இசைக்கப்படுவதினால் மூலக் கவிஞர்களை கண்டறிவது இயலாத காரியம். எனவே இத்தொகுப்புகள் பதிப்புநூல்களாகவே காணப்படுகின்றன.

## 3148

**நாற்பயனன்னூல்: நபிமொழி நாற்பதும் கருத்தும் விளக்கமும்.** முஹம்மது உமர். கொழும்பு 2: முஸ்லீம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அலுவலகம், 34 மலே வீதி, 3வது பதிப்பு, ஜுன் 1994, 1வது பதிப்பு, 1954. (சென்னை: திறீயெம் பிரின்டர்ஸ்).

112 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18X12 சமீ.

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் பொன்மொழிகளாகிய நாற்பது ஹதிஸ்களுக்கு எளியவடிவில் அழகிய செந்தமிழில் தெளிவான விளக்கம் தருவதாக இந்நூல் அமைகின்றது. இந்நூலாசிரியர் மவ்லானா மவ்லவி முஹம்மது உமர் அவர்கள் ஒரு சிறந்த மார்க்க அறிஞராவார்.

## 3149

**நிந்தித்தும்மை நிராகரித்தால்.** M.H.M.அஷ்ரஃப் (மொழிபெயர்ப்பாளர்), ஏ.சீ.ஏ.எம்.புஹாரி (பதிப்பாசிரியர்), கொழும்பு 5: மதினா வெளியீட்டகம், தாருல் அமான், மனிங் டவுன், எல்விட்டிகல மாவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1998. (கொழும்பு 13: பசிபிக் பிரஸ் (பி) லிமிட்டெட், 267, ஆட்டுப்பட்டித் தெரு).

(8), 22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X14.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



உலகளாவிய முஸ்லீம்களின் வேதநூல் அல் குர்ஆன் ஆகும். அல்குர்ஆனின் முக்கிய அத்தியாயங்களுள் யாஸீன் என்பதும் ஒன்று. பொதுவாக இறை பொருத்தத்தை நாடி ஓதும் அத்தியாயமாக இது கொள்ளப்படுகின்றது. இந்த சூறா யாஸினின் கவிப்பெயர்ப்பே இந்நூலாகும்.

## 3150

**பித்அத் ஓர் ஆய்வு.** *செய்னுத்தீன் எஸ்.பரீத் (மூலம்), எஸ்.எச்.எம்.- ஸலபி (பதிப்பாசிரியர்). பரகஹதெனிய: ஜம்இய்யது அன்ஸாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யா, வேஉட, 1வது பதிப்பு, ஜனவரி 1999. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*

*64 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18X12.5 சமீ.*

இஸ்லாமியர்களின் நம்பிக்கையின் படி இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) மூலமாக இஸ்லாம் பூரணத்துவப்படுத்தப்பட்ட ஒரு மார்க்கமாகும். முஹம்மது நபியின் மறைவின் பின் மார்க்கம் எனும் பெயரில் உருவான வணக்க வழிபாடுகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், இஸ்லாத்தின் பெயரில் உருவான கொள்கைகள், கோட்பாடுகள், போன்றவையே பித்அத் என அழைக்கப்படுகின்றன. இது தொடர்பாக இந்தியாவைச் சேர்ந்த மார்க்க அறிஞர் பீ.ஜெய்னுலாப்தீன் அவர்களால் நிகழ்த்தப்பட்ட உரைகள் செய்னுத்தீன் எஸ்.பரீத் (அகத்தி முறிப்பான்) அவர்களால் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன.

## 3151

**புனித ரமழான் - ஒரு விளக்கம்.** *ரஷீத் எம்.பியாஸ். மாரஸ்ஸன: ஸல்மா பதிப்பகம், 56, உடுதெனிய, மாரஸ்ஸன, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (கொழும்பு 11:* Technografix Systems, 211/1, 2nd Floor, Olcott Mawathe*)*

V, *42 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18X12.5 சமீ.*

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் நான்காவது கடமை நோன்பாகும். இஸ்லாமிய கலண்டர் பிரகாரம் ரமளான் மாதம் முழுவதும் முஸ்லீம்கள் நோன்பிருப்பர். நோன்பு என்பதற்கு அரபியில் ஸெளம் என்பர். அதாவது தவிர்த்துக் கொள்ளுதல், விட்டுவிடுதல் என்பது இதன் பொருள். உணவு, குடிப்பு, சரீர இச்சைகள் போன்றவற்றை விட்டும், தவிர்த்தும் கொள்ளும் தன்மை இப்பொருளைப்



படிப்பகம்

www.padippakam.com



புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. நோன்பின் வரலாறு, அதன் கடமைகள், வழிமுறைகள், நோன்பாளிக்கு ஏற்படும் பிரச்சினைக்குரிய தீர்வுகள், நோன்பினை முறிக்கும் கருமங்கள் போன்ற விடயங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

## 3152

**மதீனாவை நோக்கி.** எம்.ஜே.எம்.றியாள். உக்குவளை 21300: உம்மத் பப்ளிக்கேஷன்ஸ், 64, எல்கடுவ வீதி, 2வது பதிப்பு, ஏப்ரல் 2001, 1வது பதிப்பு, ஜனவரி 1980. (கொழும்பு: டெக்னோகிராப்பிக்).

214 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-8559-00-8.

நபிகள் நாயகம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற சம்பவத்தை ஹிஜ்ரத் என்பர். இஸ்லாமிய வருடமான ஹிஜ்ரி இதிலிருந்தே ஆரம்பமாகின்றது. மதீனா பயணத்தின் (ஹிஜ்ரத் நிகழ்வின்) அடிப்படை நோக்கையும், வரலாற்று முக்கியத்துவத்தையும் அதனைத் தொடர்ந்து மதீனாவில் தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாமிய சமூக அமைப்பினையும் அதன் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட இஸ்லாமிய ஆட்சிமுறையையும், அந்த ஆட்சி எதிர்நோக்கிய இராணுவச் சவால்கள், அதன் விளைவாக நடைபெற்ற போர்கள் என்பனவும் மிக விரிவாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. நூலாசிரியர் றியாள் அவர்கள், நீர்கொழும்பு கம்மல்துறையைச் சேர்ந்தவர்.

## 3153

**மனிதகுல ஐக்கியத்துக்கு இஸ்லாத்தின் அழைப்பு.** H.I.M.கைரூல் பஷர். தர்ஹாநகர்: புஷ்ரா பதிப்பகம், 124, மீரிப்பன்ன, தர்ஹாநகர், 1வது பதிப்பு, நவம்பர் 1986. (கொழும்பு 9: IPC Printing Press, 320, NMM Ishak Mawathe).

viii, 80 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

ஆயுதக் கலாசாரத்தில் உச்சநிலையை அடைந்திருக்கும் இன்றைய மனித சமூகத்தில் மனித ஐக்கியம் என்பது ஓர் ஆத்மீக அடிப்படையிலே தோன்ற முடியும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மனித இனம் பற்றி குர் ஆனின் விளக்கம், மீட்சிக்கு வழி, மனிதர்களில் வேற்றுமை இல்லை, பிரிவினை வளர்த்த மதங்களும் கொள்கைகளும், சர்வதேச ஐக்கியத்தை வலியுறுத்தும்



படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாம், குர் ஆன் ஹதீஸ் நிலைக்களனில் மனிதகுல மேம்பாட்டுக்குரிய வழிகாட்டல்கள் ஆகிய ஆறு பிரதான தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். காலத்தின் தேவைக்கேற்ப வெளிவந்துள்ள இந்நூலின் நூலாசிரியர் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார்.

## 3154

**விஞ்ஞானம் வளர்த்த மெஞ்ஞானத் திருமறை: முதற் பாகம்.** *எஸ்.எல்.எம்.ஹசன். கண்டி: ஹாஜி ஹம்ஸா வெளியீடு, 42/12, விக்ரோரியா ட்ரைவ், 1வது பதிப்பு, மே 1983. (கண்டி: சென்ட்ரல் அச்சகம், 98, திருக்கோணமலை வீதி).*

*(6), 104 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x13 சமீ.*

விஞ்ஞானம் வளர்த்த மெஞ்ஞானத் திருமறை என்ற தலைப்பில் இலங்கை வானொலியில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு. திருக்குர் ஆனின் உயர் போதனைகள் இன்றைய விஞ்ஞான அறிவோடு எவ்வித முரண்பாடுகளுமின்றி ஒத்துப்போகும் பாங்கினை பல மேற்கோள்கள் வாயிலாக இவ்வுரைகள் தெளிவுபடுத்துகின்றன. உயிரியல், வாழ்வியல், புவியியல், வானியல், மருத்துவம், சுகாதாரம், சார்ந்த பல திருக்குர்ஆன் வசனங்களை எடுத்துக்காட்டி அவை எவ்வாறு இன்றைய விஞ்ஞான அறிவுடன் பொருந்துகின்றன. என்பதை இத்தொகுப்பிலுள்ள 14 கட்டுரைகளும் விளக்குகின்றன. கிண்ணியா, குறிஞ்சாக்கேணியைப் பிறப்பிடமாகக்கொண்ட இந்நூலாசிரியர் இலங்கையின் பல்வேறு ஜும் ஆப் பள்ளிகளில் கௌரவ கதீப் ஆகவும், இலங்கை வானொலியின் முஸ்லீம் சேவைக்கலைஞராகவும் பணியாற்றியவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து கெய்ரோ அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பை முடித்தவர்.

## 3155

**ஸுபிகள்: முதலாம் பாகம்.** *ஏ.எம்.அபூபக்கர். சாய்ந்தமருது 1: இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்திற்காக, முனீரா பப்ளிக்கேஷன்ஸ், 62, ஒஸ்மன் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1986. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).*

*(12), 84 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 18x12.5 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



ஸுபிகள் எனப்படுவோர் ஆன்மீக ஞானிகளாவர். இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த உவைஸ் அல்-கர்னி, ஹசன் அல்-பஸ்ரீ, ஜஃபார் அல்-ஸாதீக், ஸைனுல் ஆபிதீன், மாலிக் இப்ன் தீனார், அதாஃ இப்ன் அபி ரபாஹ், ராபிஆ பஸ்ரி ஆகிய ஸுபிகள் பற்றிய குறிப்புக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3156

**ஷீயாக்களின் சீர்கேடுகள்.** எஸ்.எச்.எம். இஸ்மாஈல். பரகஹதெனிய: Jameathu Ansarissunnathul Mohammadiya, Head Office, Paragahadeniya, Ku / We-uda, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 1-B, P.T.De Silva Mawathe).

36 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18X12 சமீ.

இலங்கை முஸ்லீம்கள் "சுன்னத் வல் ஜமாஅத்" கொள்கையின் அடிப்படையில் வாழ்பவர்கள். இவர்களை சுன்னிக்கள் என அழைப்பர். ஈரான், ஈராக் போன்ற நாடுகளின் சில பிரதேசங்களில் "ஷீயா"க்கள் என்ற கொள்கையினைப் பின்பற்றுபவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கொள்கையளவில் ஏற்படும் முரண்பாடுகளினால் சுன்னிகள், ஷியாக்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதை முஸ்லிம் உலகில் காண முடியும். ஷியா கொள்கையை இலங்கையிலும் பரப்பும் சில ஏற்பாடுகள் 20ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய நிலையைக் கருத்திற்கொண்டு இலங்கைவாழ் சுன்னத் வல் ஜமாஅத் முஸ்லீம்களிடையே பிளவுகள் ஏற்படக்கூடாது என்னும் நோக்கில் எழுதப்பட்ட நூல் இதுவாகும். **உண்மை உதயம்** இஸ்லாமிய இதழின் பதிப்பாசிரியராக இருந்த இந்நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த வேளையில் எழுதிய நூல் இது.

## 3157

**ஹஜ் - உலகளாவிய இஸ்லாமிய இயக்கத்தின் இதயம்.** அலி ஷரீஅத்தி (மூலம்), ஸொமையாஹ் யாசிர் (தமிழாக்கம்). கொழும்பு 02: The Islamic Foundation, 90, Justice Akbar Mawathe, 1வது பதிப்பு, மே 1991. (கொழும்பு 02: கிரஸன்ட் பப்ளிக்கேஷன்ஸ், 90, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

ix, 116 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 22X14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



மதரீதியாக எழுதப்படக்கூடிய நூல்கள் பெருமளவில் மதப் பிரச்சாரத்தை மேற்கொள்வதாகவோ அன்றேல் கோட்பாட்டு விளக்கங்களாகவோ அமைவது இயல்பு. இந்நூல் வழமைக்கு மாறாக, மதக்கோட்பாட்டிலிருந்து விலகி சமூகமயமாக்கல், உலக ஒற்றுமை, போன்ற உலகப் பொதுக் கருத்துக்களை விளக்குவதன்மூலம் அகில உலகுக்கான செய்தியைக் கொண்டிருக்கின்றது. மனித இனத்துடன் சம்பந்தப்பட்டபிரச்சினைகளும் போதனைகளுமே இந்நூலின் கருப்பொருளாகின்றது. மூலநூலாசிரியர் கலாநிதி அலி ஷரீஅத்தி ஈரான் நாட்டைச் சேர்ந்தவர். பொருளாதாரரீதியாகச் சமூகத்தின் அடித்தளத்தில் நசுக்குண்டு வறுமையில் உழன்று வாடிய இளைஞர்களுடன் இவர்கொண்ட நேரடித் தொடர்பு இவரை மதவாதியாகவல்லாது சமூகசீர்திருத்தவாதியாகவே இனம்காட்டியது. இவரது சமூகமயமாக்கல் சிந்தனை காரணமாக 19.06.1977இல் கொலைசெய்யப்பட்டார்.

## 3158

**ஹஜ் வழிகாட்டி.** மௌலவி ஜே.மீரா மொஹிதீன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 2: முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 34, மலே வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1999. (கொழும்பு 12: Milir Graphics, FLG 15, Dias Place).

98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13.5x11 சமீ.

முஸ்லீம்களின் ஐம்பெரும் கடமைகளுள் இறுதிக் கடமையான ஹஜ் கடமையை நிறைவேற்ற ஆண்டுதோறும் இலங்கையிலிருந்து மெக்கா செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் வெகுவாக அதிகரித்துள்ளது. தற்போது இத்தொகை நான்காயிரத்தையும் தாண்டியுள்ளது. எனவே ஹஜ் கடமைகளை நிறைவேற்றச் செல்லும் பயணிகள் மக்கா, மதீனா ஆகிய நகரங்களில் தாம் தரித்திருக்கும் ஒரு மாத காலத்தில் எத்தகைய மதக் கடமைகளில் எவ்வாறு ஈடுபடவேண்டும் என்பதை விளக்கும் நூல் இது. பிரதானமாகத் தமிழ்மொழியில் இந்நூல் எழுதப்பட்டுள்ள போதிலும் தேவையான முக்கிய விளக்கங்களை சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இந்நூலின் தொகுப்பாசிரியரும், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளருமான அல்ஹாஜ் மௌலவி ஜே.மீரா மொஹிதீன் அவர்கள் தந்திருக்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3159

**ஹிஜ்ரா.** ஏ.ஸி.சாஹுல் ஹமீத். கட்டுகஸ்தொட்டை: கட்டுகஸ்தொட்டை இஸ்லாமிய சேமநலச் சங்கம், 1வது பதிப்பு, ஜனவரி 1980. (கட்டுகஸ்தொட்டை: KIWS Press, குருணாகலை வீதி).

x, 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனா நோக்கிச் சென்ற சம்பவம் இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்ரா எனப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய வருடம் கணக்கிடப்படுகின்றது. ஹிஜ்ரி 15ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தினை முன்னிட்டு 1980ம் ஆண்டில் தேசிய ஹிஜ்ரி விழா இலங்கையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு இந் நூல் தேசிய ஹிஜ்ரி விழாக்குழுவின் ஆதரவுடன் வெளியிடப்பட்டது.

**மேலும் பார்க்க: 3055**

## 297.93 பஹாய் மதம்

### 3160

**பாரிஸ் பேருரைகள்.** அப்துல் பஹா (மூலம்), நவாலியூர் சோ.நடராசன் (தமிழாக்கம்). சென்னை 600017: பஹாய் நிலையம், இல.8. சாரங்கபாணி தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977. (சென்னை 6000024: Sri B.L.S. Press, திருமலை).

xvi, 184 பக்கம், விலை: இந்திய ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

பஹாய் மதம் கடவுள் ஒன்றெனவும், அவர் அனுப்பிய தீர்க்கதரிசிக-ளெல்லாம் ஒன்று எனவும் நம்புகின்றது. உண்மையைத் தடையின்றி ஆராயவேண்டுமென்றும், குருட்டு நம்பிக்கைகளும், தப்பெண்ணங்-களும், தவிர்க்கப்படவேண்டும் என்றும் கருதுகின்றது. சமயத்தின் மூலநோக்கம் மக்களிடையே ஒற்றுமையையும், இணக்கத்தையும் உண்டாக்குவதேயென்றும், சமயமும், விஞ்ஞானமும் தோளோடு தோள் செல்ல வேண்டுமென்றும் பஹாய் மதம் கருதுகின்றது. இத்தகைய கருத்துக்களை போதிப்பதாக இம்மதத்தைச் சார்ந்த பேருரைகள் இந்நூலில் காணப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



# 300 சமூக விஞ்ஞானங்கள்

## 301 சமூகவியல்

### 3161

**சமூகக் கல்வியும் வரலாறும்: தரம் 9.** நூலாக்கக் குழு (சிங்கள மூலம்), ஜனாபா பாத்திமா ராசியா, மர்ஹூம் எஸ்.ஐ.எம்.ஹம்ஸா, ஜனாப் எம்.வை.ஏ.கரீம் (தமிழாக்கம்). கே.ரீ.கனகரத்தினம் (பதிப்பாசிரியர்). பத்தரமுல்லை: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, 6வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 1998. (பாதுக்கை: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

ix, 250 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

இலங்கையின் புவியியற் பின்னணி, தரைத்தோற்ற அம்சங்கள், காலநிலை, இயற்கைத் தாவர வலயங்கள், உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, மீன்பிடித் தொழில், கால்நடை வளர்ப்பு, இயற்கை வளங்கள், சனத்தொகை, கைத்தொழில்கள், பொலன்னறுவையின் பின் இராசதானிகள் இடம்பெயர்வு, 1500க்குப் பின் இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும், இலங்கையும் பிரித்தானியர்களும், இலங்கையின் ஆட்சிமுறை ஆகிய விடயங்கள் இந்நூலின் தனித்தனி அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன.

### 3162

**சமூகக் கல்வியும் வரலாறும்: 10ஆம் தரம்.** கே.எம்.எம்.இக்பால், எஸ்.எச்.ஹிஸ்புல்லாஹ். கிண்ணியா: இக்ரா (சில்மியா) புத்தகசாலை, வித்தியாலய வீதி, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 2001. (Colombo 12: Kribs, 162, Dam Street).

170 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 175., அளவு: 21.5x14..5 சமீ. ISBN: 955 8549 01 0.

2000ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பத்தாம் ஆண்டு சமூகக் கல்வியும், வரலாறும் பாடத்திட்டத்தினைத் தழுவி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடவிதானங்களை மிகவும் இலகுவான முறையில் மாணவர்கள் அறிந்துகொள்வதற்கு ஏற்றதாக இது ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் இக்பால் ஆசிரிய ஆலோசகராவார். ஹிஸ்புல்லா பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளராவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3163

**சரிநிகர் சமானமாக: கைநூல் 2.** சாந்தி சச்சிதானந்தன். கொழும்பு: விழுது- Centre for Human Resources Development, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (கொழும்பு 13: ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ், 315 ஜெம்பட்டா வீதி).

*130 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.*

முரண்நிலைகளை உருமாற்றும் முறைவழிகளை ஆண்களும் பெண்களும் சமானமாக முன்னெடுக்கும் ஆற்றல்களை மேம்படுத்தல் பற்றிய நூல். சமாதானம் என்பது வெறுமனே ஒப்பந்தங்களுடன் வந்துவிடும் விடயமல்ல. அது பல தளங்களில் பலரின் பல்வேறு முயற்சிகளினூடாக நடைமுறைக்கு வரும் தொடர்தேடல். இத்தேடல் முறை வழியொன்றின் அடிநாதமாக ஜனநாயகப் பண்புகளும் விழுமியங்களும் இருக்க வேண்டும் என இந்நூலாசிரியர் வலியுறுத்துகிறார். மக்கள் மத்தியில் தோன்றும் அதிருப்திகளையும் அநீதிகளையும் தோற்றுவிக்கும் காரணிகளைக் கண்டுபிடித்து அவற்றை மாற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதோடு, இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாகப் பங்கெடுக்கும் நிலையைத் தோற்றுவிக்க சில வழிமுறைகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

## 3164

**தலைமைத்துவம்: ஓர் இஸ்லாமிய அணுகல்.** எம்.ஆசிம் அலவி. கொழும்பு: ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், 77, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (பேருவளை: ஏ.ஏ.பிரின்ட்ஸ்).

*xii, 208 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8047-00-7.*

இந்நூல் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் தலைமைத்துவம் பற்றிய சில முக்கியமான கோட்பாடுகளை விளக்குகின்றது. தலைமைத்துவம் பற்றிய வரைவிலக்கணங்கள், ஆளுமை என்ற எண்ணக்கருவின் விளக்கங்கள், பொது உறவுத்திறன் பற்றிய நடைமுறை சாத்தியப்-பாட்டு நிலைகள் என்பன இங்கு தெளிவுற விளக்கப்பட்டுள்ளன. தலைமைத்துவம் பற்றிய சிறப்புகளை விளங்கிக் கொள்ள உதவியாக



படிப்பகம்

www.padippakam.com



அவற்றை ஏனைய தலைமைத்துவக் கோட்பாடுகளுடன் ஒப்புநோக்கி விளக்க முற்பட்டிருப்பது இந்நூலின் முக்கிய அம்சமாகும்.

## 3165

**முதியோர் வாழ்வு.** கா.குகபாலன். யாழ்ப்பாணம்: புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15சமீ.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கைதடி என்னுமிடத்தில் அமைந்துள்ள **சாந்தி நிலையம்** என அழைக்கப்படும் முதியோர் வாழ்விடத்தி-லுள்ள முதியோரை அடிப்படையாகக் கொண்ட ஒரு குடித்தொகை ஆய்வு. இவ்வாய்வு, 1997ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது.

## 3166

**முதியோர் வாழ உதவுவோம்.** அனுசூயா முருகானந்தன். கரவெட்டி: கலை ஒளி பிரசுரம், கரணவாய் கிழக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை)

64 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14.5 சமீ.

கிளிநொச்சி மாவட்டத்தில் அநாதரவான முதியவர்களைப் பராமரித்து அரும்பணியாற்றும் யோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தினை தனது நேரடியான தரிசிப்பின் மூலம் மன்னார், சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவியான செல்வி அனுசூயா அவர்கள் ஆய்வுக்குட்படுத்தியுள்ளார். இவ்வாய்வு, தாயகத்தில் வாழும் இன்றைய முதியோரைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் ஆதரவில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 3167

**மோதல் தீர்வும் வன்முறையும்.** எஸ்.ஐ.கீதபொன்கலன். கொழும்பு: சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட UNDP இலங்கைக் கிளையின் சிறு நிதித் திட்டம், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: Dreamland Printers, 139, சேர் ரட்ணஜோதி சரவணமுத்து மாவத்தை).



படிப்பகம்

www.padippakam.com



*(6), 34 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.*

இந்நூல் UNDP சிறுநிதித் திட்டத்தினால் மோதல் தீர்வியல் (Conflict Resolution) தொடர்பில் வெளியிடப்படும் நூல்வரிசையில் இரண்டாவது நூலாகும். இன்று பிரச்சினைக்குரியதாக மாறியிருப்பது மோதல்களுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கப்படுகின்ற வன்முறை ஆகும். வன்முறையும் கூட முற்றிலும் தவறானதல்ல. சில சமூக நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு வன்முறை பயன்படுத்தப்படுவது அவசியமென்று வாதிடுவோரும் உண்டு. அவ்வகையில் மனிதன் ஏன் வன்முறையில் ஈடுபடுகின்றான் என்பதை விபரிக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள சில கோட்பாடுகளும், வன்முறை தொடர்பில் அண்மைக்காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சில எண்ணக் கருக்களும் இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. கலாநிதி கீதபொன்கலன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசியல் சிறப்புத்துறைப் பட்டதாரி. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்தேச உறவுகளுக்கான முதுமானிப் பட்டத்தை பெற்றவர். அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் நோவா சவுத் ஈஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில் மோதல் தீர்வியல் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.

## 301.1 பண்பாடு

### 3168

**கீழக்கரைப் பண்பாட்டுக் கோலங்கள்.** மானா மக்கீன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2000. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

*104 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12 சமீ.*

"தமிழகத்தின் கீர்த்திமிகு கீழக்கரைவாசிகளுக்கு முத்துக்குளித்தல் கைவந்த கலை. இரத்தின வணிகம் பரம்பரைத் தொழில். இந்த இரண்டுமே என்னைப் போன்றவர்களுக்கு வராது. இருந்தாலும் எல்லாம் வல்லவனிடம் கையேந்தி நின்றேன். கைகூடி வந்தது. ஆனால் கைகூடி வந்தது இரத்தின வணிகமல்ல. ஆய்வு முத்து." என்று தன் ஆய்வுரையில் நூலாசிரியர் மானாமக்கீன் குறிப்பிடுகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழகத்தின் கீழக்கரைக் கிராமம் முஸ்லீம் சமூக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்க் கிராமமாகும். கீழக்கரை மண்ணுக்கேயுரிய சுவையான உணவு வகைகளையும், அழகழகான நகை நட்டுக்களையும் பற்றி மாத்திரம் சொல்லாமல், ஆங்காங்கே வரலாற்றுப் பெருமைமிக்க அம்மண்ணின் பண்பாட்டுக் கோலங்களையும் இந்நூலில் பதிவுசெய்துள்ளார்.

## 3169

**பண்பாட்டின் சமூகவியல்.** என்.சண்முகலிங்கன். தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மைலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ்).

(8), 96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20X14 சமீ.

இந்நூல் சமூகவியல், மானிடவியல் நோக்கில் எங்கள் பண்பாட்டின் செல்நெறிகளைப் பகுப்பாய்வு செய்வதுடன் பண்பாட்டு மேம்பாட்டுக்கான திசையினையும் சுட்டி நிற்கின்றது. கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் அரசறிவியல், சமூகவியல் துறையின் தலைவர். உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கைநெறியின் இணைப்பாளர்.

## 3170

**மரபுகளும் மாற்றங்களும்.** என்.சண்முகலிங்கன். யாழ்ப்பாணம்: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மைலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஜுலை 2001. (யாழ்ப்பாணம்: மணி ஓசை, ஹரிகணன் அச்சகங்கள்).

xii, 41 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12 சமீ.

பாதுகாவலன் இதழில் வெளியான 40 சிறு கட்டுரைகளின் தொகுப்பாக இது வெளிவருகின்றது. நூலாசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் அரசறிவியல், சமூகவியல் துறையின் தலைவர். உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கைநெறியின் இணைப்பாளர்.



படிப்பகம்

www.padippakam.com



# 302 பெண்ணியம்

## 3171

**பெண்களும் சமூகமும் அன்றும் இன்றும் -பெண்கள் உலகம் - பெண்கள் புரட்சி.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், A4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xx, 156 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்தொகுதியின் ஐந்தாவது பாகமான இத்திரட்டில் ந.சி.க.வின் பெண்கள் தொடர்பான கருத்துக்களைக் கொண்ட மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. பெண்கள் புரட்சி, பெண்களும் சமூகமும் அன்றும் இன்றும், பெண்கள் உலகம் (பகுதி 1: பெண்கள் பெருமை, பகுதி 2: பெண்கள் போராட்டம், பகுதி 3: திருமணம்) ஆகிய மூன்று நூல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 05)

## 3172

**பெண்களும் மூடநம்பிக்கையும்: சகுனம்.** எஸ்.எச்.எம்.இஸ்மாஈல். We-Uda: Jam-E-Athu Ansarissunnathil Muhammadiyya, Head Office, Paragahadeniya, 1வது பதிப்பு, மே 1998. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

24 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x13 சமீ.

மூடநம்பிக்கைகள் என்பன பல்வேறு சமூகங்களிலும் ஊடுருவியுள்ளன. குறிப்பாக ஆண்களை விட பெண்கள் மத்தியிலே இத்தகைய மூடநம்பிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது குறித்து ஆராயும் இந்நூலில் பெண்களின் சகுனம் பார்க்கும் மூடநம்பிக்கை பற்றியும் அதிலிருந்து விழிப்புணர்வு பெறுவது பற்றியும் சொல்லப்படுகின்றது. இந்நூலாசிரியர் **உண்மை உதயம்** சஞ்சிகையின் ஆசிரியராவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3173

**பெண்ணுரிமையின் பரிமாணங்களும் பெண்ணடிமையின் விளக்கமும்.** *செல்வி திருச்சந்திரன், கொழும்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 2வது பதிப்பு, 1993, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11:* Lanka Asia Print pvt Ltd, 526, 3rd Floor, Colombo Central Super Market*)*

*(10), 63 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 21X14 சமீ.*

*பெண்ணுரிமை- ஒரு விளக்கம், பெண்மையின் யதார்த்தமும் கற்பனைவாதமும், பெண் தொழிலாளி, கலைகளில் பெண், இலங்கையின் சிறுகதையில் பெண்மை, பெண் விடுதலைவாதத்தின் பிரச்சினை மையம்- அது ஒரு மேலைத்தேயக் கோட்பாடா? பெண்களின் தொழிற்சங்க ஈடுபாட்டிற்குத் தடையாக நிற்கும் கலாச்சாரப் பண்புகள், ஆண்-பெண் இனவாரியாக அமைந்த வேலைப்பிரிவினை ஆகிய 8 இயல்களில் பெண்ணியம் சார்ந்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

## 3174

**பெண்மைக்கு இணையுண்டோ?** *தங்கம்மா அப்பாக்குட்டி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 94: ஸ்கிரிப்ட் பிரின்டர்ஸ்).*

xxvi, *150 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18X12 சமீ.*

*சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 77ஆவது அகவைப் பூர்த்தின்போது வெளியான இத்தொகுப்பில், சங்க இலக்கியங்கள் தொடக்கம் பாரதி பாடல்கள், பிற்காலப் பெண்கள் பற்றிய வரலாறுகள் வரையுள்ள காலப்பகுதியிலே தமிழ் இலக்கியங்கள் சித்திரித்துக்காட்டும் மாட்சிமை மிக்க பெண்களைக் கூர்ந்து நோக்குகின்றார். இதிலுள்ள ஒன்பது இயல்களிலும் சங்ககாலப் பெண்மை, வள்ளுவர் காட்டிய பெண்மை, இளங்கோ காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை, கச்சியப்பர் காட்டிய பெண்மை, கம்பர் காட்டிய பெண்மை, பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மை, பாரதி காட்டிய பெண்மை, பிற்காலப் பெண்மை, என்ற ஒழுங்கில் இலக்கிய நயம்மிக்கதும் அறவியல் சார்ந்ததுமான பார்வையில் பெண்மையின் பெருமை பற்றிப் பேசுகின்றார்.*



படிப்பகம்

www.padippakam.com



## 3175

**மாற்று நோக்கில் சில கருத்துக்களும் நிகழ்வுகளும்.** செ.யோகராசா (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவகம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(8), 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X15 சமீ., ISBN: 955-9261-31-2.

இந்நூல் தொகுப்பு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் (Women's Education and Research Centre) வெளியிட்டு வரும் **பிரவாகினி** செய்திமடலின் 1-15 வரையுள்ள இதழ்களிலிருந்து தேர்ந்தெடுத்த படைப்புக்களைக் கொண்டது. தற்காலத்தில் இலங்கை, இந்தியா, வங்காளம், ஈரான், ஆகிய நாடுகளில் பெண்கள் எதிர்கொள்ளும் இன்றைய பிரச்சினைகள், வரலாற்றில் தடம் பதித்தவர்கள், பதிவுகள் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் பெண்களும் வன்முறையும், தொழிலுலகும் பெண்களும், குடும்பமும் பெண்களும், சீதனக் கொடுமை, புதிய கொடுமைகள், அரசியலில் பெண்களின் பிரவேசம், தொடர்பூடகங்களில் பெண்கள் ஆகிய ஏழு விடயங்கள் இடம்பெறுகின்றன. பதிவுகள் பகுதியில் பெண்களும் கருத்தரங்கு-கலந்துரையாடல் நிகழ்வுகளும், உலகப் பெண்கள் மாநாடுகள், கவனத்திற்குரிய நூல்கள், தெரிந்தெடுத்த கவிதைகள் என்பன இடம்பெறுகின்றன.

## 3176

**முதல்நிலை முஸ்லிம் பெண்கள்.** S.H.M.இஸ்மாயீல் ஸலபி. பறகஹதெனிய: ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

84 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18X12 சமீ.

இஸ்லாமிய வரலாற்றில் முதல்நிலையில் முக்கியத்துவம் பெற்ற சில முஸ்லிம் பெண்மணிகளின் வரலாற்றினை சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்நூல் தருகின்றது. இஸ்லாத்தை ஏற்ற முதல் பெண்மணி, இஸ்லாத்துக்காக உயிர்நீத்த முதற்பெண்மணி, ஹிஜ்ரி ஆண்டில் முதல் முஸ்லிம் தாய், இவ்வாறாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மேலும் பார்க்க: 3506, 3746, 3189, 3180**



படிப்பகம்

www.padippakam.com



# 305.5 சாதியம்

## 3177

**சாதியும் துடக்கும்: பண்டைத் தமிழர் தொடக்கம் யாழ்ப்பாணத் தமிழர் வரை.** *மனோன்மணி சண்முகதாஸ். சென்னை 600 098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், 1வது பதிப்பு, டிசம்பர் 1991. (சென்னை 600 108: ஜனசக்தி அச்சகம், 161, பிரகாசம் சாலை).*

*(4),163 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.,* ISBN: *81-234-0034-9.*

பழந் தமிழரும் சாதியும், சாதியும் துடக்கும் ஆகிய இரு ஆய்வுக்கட்டுரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டிலே சாதியமும், தீட்டும் துடக்கும் மிக முக்கிய நடைமுறைகளாகவுள்ளதுடன் அவை இந்து சமய நடைமுறைகளோடு பெரிதும் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களின் உதவிகொண்டு இவை பற்றிய சமூகவியல் ஆய்வொன்றினை இவ்விரு கட்டுரைகளிலும் நூலாசிரியர் மேற்கொண்டுள்ளார்.

# 306 கலாச்சாரம்

## 3178

**நமக்குள் ஏன் இந்தப் பிரச்சினைகள்.** *கி.செ.துரை. டென்மார்க்:* K.Sellathurai, Fuetiojvej 10, 2TH, 7400 Herning, *1வது பதிப்பு, மே 1999. (சென்னை: ஆதித்யா கொம்பியூட்டர்ஸ்).*

*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.*

புலம்பெயர் வாழ்வு நமக்கு மிகவும் புதியது. முன்னரே நமது மூதாதையரால் வாழப்பட்டு, ஒவ்வொன்றாகக் கற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் துணை செய்ய அச்சமின்றி நடைபயிலும் அடித்தளம் கொண்டதல்ல இவ்வாழ்வு. இங்கு தோன்றும் சிக்கல்களை ஒவ்வொருவரும் சுயமாகவே எதிர்கொண்டு தத்தமது அறிவுக்கு எட்டியபடி அவற்றிலிருந்து விரைவாகவோ அல்லது தாமதமாகவோ தம்மைக் காப்பாற்றிக்கொள்வதைத் தவிர மாற்றுவழிகள் தெரியவில்லை என்று கூறும் ஆசிரியர் நம்மிடையே உள்ள பற்பல



படிப்பகம்

www.padippakam.com



குறைபாடுகளை சமூக உளவியல் நோக்கில் இனம்கண்டு முடிந்த-வரையில் அவற்றுக்கான திர்வினைத் தேட முயன்றிருக்கிறார்.

### 3179

**மலையகத்தின் கலாச்சாரம்.** கே.ஏ.குணதாச பெரேரா (தொகுப்-பாசிரியர்). பத்தரமுல்ல: கலாச்சார, சமய அலுவல்கள் அமைச்சு, 8வது மாடி, செத்சிரிபாய, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1995. (ராஜகிரிய: தர்ஷண ஓப்செட், 26/3 சில்வா லேன்).

(2), 88 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மலையகத்தின் கலாசாரத்தை மேம்படுத்தும் குழுவினால் 1995 செப்டெம்பர் 24ம் திகதி கொட்டகல, பதனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற “மலையகத்தில் கலாசாரத்தை மேம்படுத்தல்” தொடர்பான ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு இடம்பெற்றது. இக் கருத்தரங்கின் சொற்பொழிவுகளிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இது. சிங்கள தமிழ் மொழிகளில் இடம்பெற்றுள்ளன.

# 310 புள்ளிவிபரவியல்

# 315 ஆசிய புள்ளிவிபரவியல்

### 3180

**இலங்கையில் மங்கையரும் ஆடவரும்.** தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இல.6, அல்பேர்ட் கிறசென்ற், தபால்பெட்டி இலக்கம் 563, 1வது பதிப்பு, 1996. (கொழும்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்).

(4), 101 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-577-147-2.

பாலியல் ரீதியாக வகுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் வளர்ந்துவரும் தேவையை ஈடுசெய்யும் பொருட்டு முக்கிய சமூக பொருளாதாரக் கோணங்களில் மங்கையரை ஆடவருடன் ஒப்பிட்டு புள்ளிவிபரங்-களையும் குறிகாட்டிகளையும் ஒருங்கிணைத்து வருணிக்க, இலங்கை புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்டுள்ள முயற்சியின் வெளிப்பாடு இந்நூலாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# 320 அரசறிவியல்

## 3181

**அடிப்படை அரசியற் கோட்பாடுகள்.** நிதானிதாசன். கொழும்பு 10: Prishanmi Creations, 33B, Siri Dhamma Mawathe, 1வது பதிப்பு, நவம்பர் 1993. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(4), 36 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9174-01-0.

க.பொ.த. சாதாரணதர / உயர்தர வகுப்புகளுக்கும் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு அரசியல்துறை மாணவர்களுக்கும் ஏற்ற அடிப்படை அரசியல் கோட்பாடுகள் இந்நூலில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் நிதானிதாசன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அரசியற்துறையில் இறுதியாண்டு மாணவராவார். நூலகவியல் விஞ்ஞானத்தில் இறுதியாண்டு பாடநெறியினை பின்பற்றும் இவர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் நூலகராக நியமனம் பெற்றுள்ளார். அரசியல்துறைசார்ந்த "விடிவு" என்ற தமிழ்ச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இயங்குகின்றார்.

## 3182

**அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளும், முஸ்லீம்கள் அதிகப்படியான மாநில சபை ஒன்றின் அவசியமும்.** எம்.ஐ.எம்.முஹியத்தீன். கொழும்பு 10: எம்.ஐ.எம்.முஹியத்தீன், 57, நொறிஸ் கனல் ரோட், 1வது பதிப்பு, ஜனவரி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 17 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கை அரசியல் நீரோட்டத்தில் இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு திருப்திகரமானதாக இல்லாத நிலையில் வடக்கு-கிழக்கு முஸ்லீம்களிடையே அவர்களது உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்குச் சுதந்திரமான பாதுகாப்பு எற்பாடுகளை செய்ய வேண்டிய நிலையில் அரசியல் விழிப்புணர்வை முஸ்லீம் மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் இச்சிறுநூல் வெளியிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3183

**அரச அறிவியல்: முதலாம் பகுதி.** கே.எச்.ஜயசிங்க, வை.ஆர்.அமரசிங்க (மூலம்), அ.விஜயன் விக்டோரியா (தமிழாக்கம்). வே.பேரம்பலம் (பதிப்பாசிரியர்). கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: எயிற்கின் ஸ்பென்ஸ் அச்சகம்).

vii, 55 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

தமிழ்மொழி மூலம் அரசறிவியல் பாடத்திட்டத்தினைக் கற்பதற்குப் போதிய நூல்கள் இல்லாத நிலையில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் முன்னதாக, சிங்கள மொழியில் வெளியிட்டிருந்த இந்நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. தேசிய உயர்கல்விச் சான்றிதழ் பரீட்சை பாடத்திட்டத்திற்கு அமைவாக அரசு என்ற எண்ணக்கரு பல்வேறுபட்ட கோணங்களில் ஆராயப்பட்டுள்ளது. எளிமையான நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையினால் மாணவர்கள் சுயமாக விளங்கிக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

### 3184

**அரசறிவியல் மூலதத்துவங்கள்: பரீட்சை மாதிரி வினாவிடை 1998.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (கட்டுகஸ்தொட்டை: J.J.Printers, 122, Kurunegala Road).

88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 28x21.5 சமீ.

1997ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடப்பரப்பில் இடம்பெறும் வினாக்களுக்கு விடை எழுதக்கூடிய வகையில் பரீட்சை மாதிரி வினாவிடை 1998 என்னும் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலில் புதிய பாடத்திட்டத்திற்கமைய பகுதி 1, 2 ஆகிய இரு வினாப்பத்திரங்களிலும் வினாக்கள் எவ்வாறு அமையும், விடைகள் எவ்வாறு வழங்க வேண்டும் என்பனபோன்ற விளக்கங்கள் எளிய நடையில் இதன் நூலாசிரியர் புன்னியாமீன் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

### 3185

**அரசறிவியல் மூலதத்துவங்கள்: பல்தேர்வு மாதிரி வினாவிடைத் தொகுதி 1.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம்,



படிப்பகம்

www.padippakam.com



14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 12: Aico Ltd, 218/5, Messenger Street).

96 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 28x21.5 சமீ.

1997ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடப்பரப்பில் முதற்தடவையாக பல்தேர்வு வினாக்கள் (MCQ) வினாப்பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது. பரீட்சையில் 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இவ்வினாப்பத்திரத்திற்கேற்ற வகையில் முழுமையான பாடப்பரப்பினை உள்ளடக்கி மாணவர்களின் நுணுக்க அவதானிப்பு, ஞாபகத்திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் மொத்தம் 10 மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன. அரசறிவியல் மாணவர்களுக்கென இலங்கையிலே தமிழ்மொழிமூலம்வெளிவந்த முதலாவது பல்தேர்வு வினாவிடைத்தொகுதி இதுவென்று கருதப்படுகின்றது.

### 3186

**அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு.** நா.சண்முகநாதன். தெகிவளை: மார்க்சிசக் கற்கைகளுக்கான சண்முகநாதன் நிலையம், 59/3, வைத்தியா வீதி, 2வது பதிப்பு, மாசி 2001, 1வது பதிப்பு, ஏப்ரல் 1973. (கொழும்பு: மயூரி கிராப்பிக்ஸ்).

27 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.

இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடிகளில் முக்கியமானவரான என். சண்முகதாசன், இலங்கை இடதுசாரி இயக்கத்தில் மார்க்சிசம், லெனினிசம், மாஓசேதுங் சிந்தனைகளை உறுதியுடன் முன்னெடுத்துச் சென்று வழிகாட்டுவதில் இறுதிவரை போராடியும் செயற்பட்டும் வந்த ஒரு தலைவர். வர்க்க முரண்பாட்டுச் சூழலில் ஒருவர்க்கத்தை மற்றைய வர்க்கம் அடக்கியாள வேண்டிய தேவையினை நிறைவு செய்வதற்கு ஒரு கருவியாக அரசு என்ற வடிவம் உருவாக்கம் பெற்றது என்பதை மார்க்சிய நோக்கில் விளக்குகின்றார். அரசு நிறுவனத்தின் உள்ளார்ந்த ரீதியில் காணப்படும் அதன் பக்கச் சார்பையோ அல்லது அதன் பலாத்கார சாராம்சத்தையோ எவரும் கோட்பாட்டு ரீதியான கேள்விக்கு உட்படுத்தவில்லை. அதை இந்நூல் செய்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3187

**ஆட்சி இயல்.** ச.ஹண்டி பேரின்பநாயகம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1962. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

x, 366 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 22x14 சமீ.

இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களின் தேவை கருதி எழுதப்பட்ட நூல். குடியாட்சி வரலாறும் அடிப்படையும், ஆட்சிமுறை, அரசமைப்பு, புதிய ஆட்சிக் கொள்கைகள் என்பன முதலாம் பாகத்திலும், இலங்கை ஆட்சி இயல் வரலாறு, இலங்கை ஆட்சி முறை, சட்டமியற்றல், நிருவாகம், நீதி பரிபாலனம், மத்திய ஆட்சியும் உள்ளூராட்சியும், ஆட்சியியற் கட்சிகள், கட்சிமுறை ஆட்சி இலங்கைக்கு வேண்டுமோ? ஆகிய பகுதிகள் இரண்டாம் பாகத்திலும், பிரித்தானிய அரசமைப்பு, அரசமைப்பின் அம்சங்கள், சட்டத்துறை, மன்னர், அமைச்சும் அமைச்சரவையும், மரபுகள், சட்ட ஆட்சி, என்பன மூன்றாம் பாகத்திலும், பேரரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும், ஆணிலப்பதம், பொதுநலவாய தேயங்களின் தொடர்புமுறை, ஒரே உலகம் ஆகிய தலைப்புகள் நான்காம் (இறுதிப்) பாகத்திலும் விபரிக்கப்பட்டுள்ளன.

## 3188

**இலங்கை அரசியலமைப்பும் தேர்தல் முறைசார் சீர்திருத்தங்களும்: ஒரு முஸ்லீம் கண்ணோட்டம்.** M.I.M.மொஹிதீன். கொழும்பு 10: எம்.ஐ.எம்.எம். பதிப்பகம், இல. 57, நொறிஸ் கனால் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1997. (கொழும்பு 9: மிலக்ஸ் கிரபிக் மீடியா, 204/12, தெமட்டகொட வீதி).

iv, 80 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 75., அளவு: 21x14 சமீ.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக எடுக்கப்பட்டுவரும் இலங்கை அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகளின்போது சிங்களவரின் அபிலாசைகளுக்கு முரணாக முஸ்லீம்கள் எந்தவொரு கருத்தையும் முன்வைத்திராத போதிலும், இலங்கை பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் காலத்துக்குக் காலம் முஸ்லீம்களின் இனமத கலாசார உரிமைகளைச் சிதைத்தே வந்துள்ளனர். இத்தகைய பின்புலத்தில் நின்று இலங்கையின் அரசியலமைப்புகளையும், தேர்தல் முறைசார் சீர்திருத்தங்களையும் இந்நூல் விமர்சிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



**3189**

**இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும்.** N.சரவணன். கொழும்பு 2: மூன்றாவது மனிதன் வெளியீடு, 37/14, வக்சோல் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

178 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 230., அளவு: 22x14 சமீ., ISBN: 955-97535-0-9.

ஒடுக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமூகச் சக்திகளில் முக்கியமான சக்தியாக பெண்கள் காணப்படுகின்றனர். இங்கு ஆணாதிக்கம் அதிகாரம்படைத்த நிலையிலும், பெண்கள் அவ்வதிகாரத்திற்கு வெளியில் இருந்துகொண்டு அவ்வதிகாரத்துக்குப் பலியாகும் சக்தியாக விளங்கி வருகின்றனர். ஆணாதிக்கமயப்பட்ட சகல சூழல்களிலிருந்தும் தப்பி அதிகாரத்தில் பெண்களும் பங்கு செலுத்துவது என்பது எளிதான காரியமல்ல. அந்த வகையில் இலங்கை அனுபவத்தைக்கொண்டு இலங்கையின் அரசியலில் பெண்களும் பெண்களது அரசியலும் என்கின்ற விடயம் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.

**3190**

**இலங்கை அரசியலில் மொழியும் மதமும்.** சமாதிலிங்கம் சத்தியசீலன். யாழ்ப்பாணம்: அருண் வெளியீட்டகம், 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: அருண் பிரிண்டர்ஸ்).

viii, 110 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ.

இலங்கையின் சமகால அரசியலில் மிக முக்கியமான பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதப்பட்ட நூல். இலங்கை அரசியலில், சுதந்திரமடைந்த காலத்திற்குப் பின்னர் மொழியும், மதமும், மேலாண்மை செலுத்தி வந்ததையும் அதனூடாகப் பெரும்பான்மை-யினரின் நிலைப்பாடுகள் பெரும்பாலும் நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளதனையும் இவற்றினூடாகப் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுக்கிடையே பிளவு நிலைகள் எவ்வாறு எழுந்தன என்பதனையும் ஆசிரியர் எடுத்து விளக்கியுள்ளார்.

**3191**

**இலங்கை இனப் பிரச்சினையின் பொருளாதார மூலங்கள்.** சமாதிலிங்கம் சத்தியசீலன். யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430,



படிப்பகம்

www.padippakam.com



காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: A.B. பிரின்டர்ஸ், 430, காங்கேசன்துறை வீதி).

(12), 164 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5X14.5 சமீ.

**பாரம்பரியப் பிரதேசங்களும் அரச குடியேற்றத் திட்டங்களும், கல்வி, வேலைவாய்ப்பு, தேசிய அபிவிருத்தி** ஆகிய இரு இயல்களைக் கொண்ட இந்நூலில், இனப்பிரச்சினையின் பொருளாதார சார்பான காரணிகளை எடுத்து ஆராய்ந்துள்ளார். தமிழ் மக்களுடைய நோக்கிலிருந்து, எவ்விதமாகப் பொருளாதார ரீதியில் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும், அவற்றினூடாக இன முரண்பாடு வலுவடைந்து வந்திருப்பதனையும் எடுத்து விளக்கியுள்ளார். இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார பரிமாணங்களை விளங்கிக் கொள்வதில் பயனுள்ள நூலாக இது அமைகின்றது.

## 3192

**இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்: சில அவதானிப்புகள்.** சமாதிலிங்கம் சத்தியசீலன். சாவகச்சேரி: சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(4), 22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையைச் சேர்ந்த கலாநிதி ச.சத்தியசீலன் அவர்கள் 27.01.1992 அன்று வழங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தாபகர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் நினைவுப் பேருரை. இலங்கை அரசியலில் இனவாதம் மேலோங்கிய சக்தியாகச் செயற்பட்டதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியவாதம் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது, இப்போது எத்தகைய நிலைமையில் உள்ளது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட முற்பட்டுள்ளார். சிங்கள-தமிழ் முரண்பாடுகள் எந்தளவுக்கு இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் வளர்ச்சி அடைவதற்கு வழிவகுத்தது என்பதும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

## 3193

**இலங்கையில் தேர்தல்கள்: அன்றும் இன்றும்.** பீ.எம்.புன்னியாமீன். கொழும்பு 13: ஈ.பீ.ஐ.புத்தகாலயம், 64, 2/2, ஹின்னி அப்புஹாமி மாவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1994. (கொழும்பு 10: ஜீவதாஸ், ஏ 225/33, மாளிகாவத்தை தொடர்மாடி).



படிப்பகம்

www.padippakam.com



*68 பக்கம், வரைபடங்கள், புள்ளிவிபரம், விலை: ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.*

இலங்கை அரசியல் வரலாற்றில் சட்டநிரூபண சபைக்கு பிரதிநிதி-யொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது தேர்தல் 1911ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில் இருந்து 1994ம் ஆண்டில் தென் மாகாணசபை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட இடைக்கால மாகாணசபைத் தேர்தல் வரை இலங்கையில் நடைபெற்ற சகல தேர்தல்களும், அவற்றின் போக்குகளும், தேர்தல் முடிவுகளும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. புன்னியாமீனால் எழுதப்பட்டு சிந்தனை வட்டத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் இலங்கையின் தேர்தல் வரலாற்றினைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் பயன்மிக்க கையேடாகும்.

## 3194

**இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி.** *பீ.எம்.புன்னியாமீன். கொழும்பு 13:* E.P.I.*புத்தகாலயம், 64, 2/2,* Hinniappuhamy Mawathe, Kotahena, *1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (அக்குறணை 06: ஸிடி பதிப்பகம்).*

*46+28 பக்கம், விலை: ரூபா 47.50, அளவு: 21x14 சமீ.*

டொனமூர், சோல்பரி 1ம் 2ம் குடியரசு அரசியல் அமைப்புத் திட்டங்கள் தொடர்பான பாட அலகுகளின் மாதிரி வினாத்தாள்கள்-விடைகள் அடங்கிய நூல். G.C.E.(A/L), G.A.Q., B.A. வகுப்பு-களுக்கேற்றது.

## 3195

**உங்களோடு பேசுகிறார் உஸாமா பின் லாதின்.** வெளியீட்டுக்குழு. Gintotta: Ihwathul Umma Al Islamiyyah, 116/13, Kurunduwatte 02, *1வது பதிப்பு, மார்ச் 2002. (கொழும்பு 12: பிரின்ட் கொம் லிமிட்டெட், 134, ஹல்ஸ்ட்ரொப் வீதி).*

*24 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 19x14 சமீ.*

அல்-ஜெஸீரா தொலைக்காட்சியில் அவ்வப்போது ஒளிபரப்பப்பட்ட ஒஸாமா பின் லாடனின் உரைகளின் தமிழ்மொழி பெயர்ப்பு இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3196

**உயர்தர அரசியல் சிந்தனைகள்.** அம்பலவாணர் சிவராஜா. கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 361, ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு: குமரன் அச்சகம், 361, ½ டாம் வீதி)

x, 138 பக்கம், விலை: ரூபா 250, அளவு: 22x15 சமீ., ISBN: 955 9429 81 7.

அரசியல் சிந்தனையின் வளர்ச்சியினையும், அதற்குக் காரணமாக இருந்த சிந்தனையாளர்களையும் இந்நூல் விபரிக்கிறது, கிரேக்க, ரோம மற்றும் பண்டைய இந்திய காலங்களிலிருந்து இன்றுவரை வளர்ச்சியடைந்து வந்த அரசியல் சிந்தனையில் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்திய இருபதுக்கும் மேற்பட்ட சிந்தனைகள் இந்நூலில் அறிமுகமாகின்றன. பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், கௌடில்யர், அக்கியுனாஸ், ஒகஸ்ரின், சிசரோவ், கூக்கர், தாந்தே, ஹேகல், மார்க்ஸ், லெனின், ட்ரோஸ்கி, மா ஓ, மக்ஸ் வெபர், கிரம்ஸ்சி, மகாத்மா காந்தி, போன்ற சிந்தனையாளர்களின் சிந்தனைகளையும் பயனுடைமை-வாதம், தாராண்மைவாதம், கற்பனாசோசலிசம், மார்க்சிசம், அராஜரீகம், ஜனநாயகம் போன்ற வாதங்களின் தர்க்கங்களையும் இந்நூலில் விரிவாகக் காணலாம். பேராசிரியர் அ.சிவராஜா நமது நாட்டில் அரச அறிவியல் மட்டத்தில் பரவலாகக் கணிக்கப்படுபவர். மதிக்கப்படுபவர். அரச அறிவியல் சம்பந்தமாக கணிப்பீடுகளைத் தன் அறிவுசார் துறைநின்று இலங்கையர்களுக்குத் தந்துள்ளார். தமிழில் சுயமாக இதைச் சிந்திப்பதற்காகத் தமிழ் நூல்களைக் கொண்டுவந்து பாடப்புத்தகங்களை விரும்பிப் படிக்கும் காத்திரமான நிலையை இலங்கையில் ஏற்படுத்தியவர் இவர்.

## 3197

**ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும் பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்.** பதிப்பாசிரியர் குழு. கொழும்பு: தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (மஹரகம: பியதாச அச்சகம், 51, நாக கஹவத்தை வீதி, மஹரகம)

(8), 76 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 30., அளவு: 21.5x14 சமீ, ISBN: 955-9123-05-x.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் நான்கு தலைவர்களின் உரைகளின் தொகுப்பு. Workers League தேசிய



படிப்பகம்

www.padippakam.com



செயலாளர் டேவிட் நோர்த் அவர்களது "ட்ரொட்ஸ்கிசத்துக்கான போராட்டமும் பேர்ளின் மகாநாட்டின் முன்நோக்கும்", புரட்சிக் கம்யுனிஸ்ட் கழக பொதுச் செயலாளர் விஜே டயஸ் அவர்களின் "தொழிலாள வர்க்கத்தினை உலகளாவியரீதியில் அணிதிரட்டுங்கள்", பண்ட் சோசலிஸ்டர் ஆர் பயிட்டரின் தேசிய செயலாளர் உல்ரிச் ரிப்பேர்ட் அவர்களின் "அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்காக", அனைத்துலகக் கம்யுனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டேவ் ஹைலண்ட் அவர்களின் "ஏகாதிபத்திய நெருக்கடியும் அனைத்துலகக் குழுவின் பணியும்" ஆகிய நான்கு உரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

## 3198

**ஒப்பீட்டு அரசியல்.** அம்பலவாணர் சிவராஜா, வே.சிவயோகலிங்கம், வெ.அமீர்தீன், (தொகுப்பாசிரியர்கள்). சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்).

(6), 250 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15 சமீ.

அரசியல் விஞ்ஞானத்தின் முக்கியமான உபதுறையாக வளர்ந்துள்ள ஒப்பீட்டு அரசியல் பற்றிய புதிய கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் கொண்ட நூல். ஒப்பீட்டு அணுகுமுறைகளைப் பற்றிய விரிவான விளக்கத்தைத் தருவதுடன் இந்தியா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் அரசியல் பற்றிய முறைகளையும் இந்நூல் விளக்கி ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்கின்றது.

## 3199

**ஓலாண்ட் தீவுகளின் சுயாட்சி: உதாரணமாகுமொரு தீர்வு.** வி.ரி.தமிழ்மாறன். கொழும்பு 5: மதுரி மலர்வகம், 215, C/1/3, பார்க் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு 12: Perfect Printers, 130, Dias Place).

viii, 158 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x13.5 சமீ., ISBN: 955-8222-03-8.

பல விதங்களில் ஸ்கன்டிநேவிய நாடுகளில் ஒன்றான ஓலாண்ட் தீவுகளின் (Aland Island) அன்றைய பிரச்சினைகளும் இலங்கை வாழ்



படிப்பகம்

www.padippakam.com



வட, கிழக்கு மாகாண மக்களின் இன்றைய பிரச்சினைகளும் ஒத்திருக்கின்றன. வேற்றுமைகளும் இல்லாமலில்லை. ஆனால் அரசியல்ரீதியாக அன்றைய நாடுகள் அவையினது (League of Nation) அங்கீகாரத்துடன் 1921ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தீர்வு இன்றும் நிலைத்து நிற்கின்றது. சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் தீர்க்கப்பட்ட ஒரு பிரச்சினையே ஒலாண்ட் தீவுகளின் பிரச்சினை-யாகும். அவற்றின் அடிப்படைப் பிரச்சினைகளை இனம்கண்டு, அவற்றை **நாடுகள் அவை** இதுவரையில் நிலைக்கும் வண்ணம் எவ்வாறு தீர்த்து வைத்துள்ளது என்றும் எதிர்காலத்தில் எப்பேர்ப்பட்ட பிரச்சினைகள் எழக்கூடும் என்பது பற்றியும் தனக்கேயுரிய தனித்துவமான பாணியில் திரு. தமிழ்மாறன் இந்நூலில் ஆராய்ந்துள்ளார்.

## 3200

**குடிஇயல்.** S.F.D. சில்வா (மூல ஆசிரியர்). கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ், கம்பெனி, குமார வீதி, கோட்டை, 2வது பதிப்பு, 1956. 1வது பதிப்பு, 1953. (கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை).

(6), 473 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

சிரேஷ்ட பாடசாலைத் தராதர (சி.பா.த.ப) வகுப்புகளுக்குரிய உப பாடநூலாக வெளியிடப்பட்டது. இலங்கை பிரித்தானிய இராச்சியப் பொது நலவமைப்பில் பரிபூரண சுதந்திரம் வகிக்கும் ஒரு அங்கத்துவ நாடாக மிளிர ஆரம்பித்த காலங்களில் வெளியான இப்பாடநூல், இலங்கையின் அரசியற் பிரச்சினைகளில் மாத்திரமன்றி அப் பொதுநலவமைப்புப் பிரச்சினைகளிலும் உயர்தர மாணவர்களுக்குச் சிரத்தையூட்டும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. சனநாயகத்தைப் பற்றியும், சனநாயகத் தாபனங்களைப் பற்றியும் ஓரளவுக்கு அறிந்திருக்க இந்நூல் உதவுகின்றது.

## 3201

**குடியுரிமைக் கல்வி: தரம் 7.** தயாலதா லேகம்கே, ஈ.எல்.சுரனிமல (மூலம்), ஜீ.ஜே.பிலிப் (மொழிபெயர்ப்பு). கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

x, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



குடியுரிமைக் கல்வி இலங்கையில் பாடசாலைக் கல்வி பாடவிதானத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பாடமாகும். இப்பாடம் தரம் 7 பாடவிதானத்தில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாளை- நாட்டின் பொறுப்புக்களை ஏற்கக்கூடிய வகையில் மாணவர்களின் திறன்களை விருத்திசெய்து நற்பண்புகள் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட குடியுரிமைக் கல்வியானது, எமது மக்கள் சமூகத்தில் வேர்விட்டிருக்கும் பழக்க வழக்கங்கள், குண இயல்புகள் என்பவற்றைப் பயிற்றுவித்து, இலங்கையின் சன சமூகத்தில் காணப்படும் பல்லின கலாச்சாரத் தன்மையினை கௌரவிக்கவும், இனங்களுக்கிடையே ஒற்றுமை எண்ணக்கருவை உருவாக்கவும் முனைகின்றது.

## 3202

**குமரனுக்குக் கடிதங்கள் அறிவுக் கடிதங்கள்.** செ.கணேசலிங்கன். *சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 2வது பதிப்பு, ஏப்ரல் 2001, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (சென்னை 600 078:* P.S.Muthu Graphics, 29/28, Rani Anna Nagar, K.K.Nagar).

*192 பக்கம், விலை: இந்திய ரூபா 48., அளவு: 18x12 சமீ.*

ஆலமரத்தின் அடிவேர் போல சமூகத்தின் அடிப்படை அமைப்பாக இருப்பது பொருளாதாரம். அதற்குச் சேவை செய்வதாக அரசியல், சட்டம் சார்ந்தவை, கருத்தியல்கள் என்பன உள்ளன. இது மார்க்சியக் கோட்பாடாகும். இந்நூலின் முதற்பாகமான குமரனுக்கு எழுதிய கடிதங்கள் கருத்தியல்களின் பல்வேறு பிரிவுகளையும் சமூக அடிப்படை அமைப்பான பொருளாதாரத்திற்கு அவற்றின் சேவைகளையும் விளக்குகின்றது. இது தனி நூலாகவும் ஏற்கெனவே வெளிவந்துள்ளது. இரண்டாம் பாகமான அறிவுக்கடிதங்கள், மார்க்சிய சித்தாந்தமாகிய இயங்கியல் பொருள் முதல் வாதத்தை எளிமையாக விளக்குகின்றது.

## 3203

**சமாதான வழியில்.** பாக்கியசோதி சரவணமுத்து. *கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28வது ஒழுங்கை, பிளவர் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ்).*



படிப்பகம்

www.padippakam.com



iii, 57 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ., ISBN: 955-8037-56-7.

சமாதான நோக்கு, தினகரன், தினக்குரல், ராவய, சண்டே ஒப்சேர்வர், ஆகிய பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளும், நேர்காணல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3204

**சமாதானத்தின் தேக்கநிலையும் அதனை வெற்றிகொள்வதற்கான மார்க்கங்களும்.** குமார் ரூபசிங்க (ஆங்கில மூலம்), ஆர்.சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 02: இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகம், 143/4, கியு வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22x15 சமீ, ISBN: 955-1202-00-7.

இனங்களுக்கிடையே புரிந்துணர்வுடன் கூடிய ஒரு மீள் இணைவை உருவாக்கும் நோக்கில் அதற்கான செயற்பாடுகளை புலமை நிலையிலும் மக்கள் நிலையிலும் கொண்டு செல்வதற்காக இனங்களுக்கிடையேயான சமாதானத்திற்கான ஆய்வகம் (Research Centre for Inter-Racial Peace Receipe) உருவாக்கப்பட்டது. இவ்வாய்வகத்தின் கருத்தரங்க உரை நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. கலாநிதி குமார் ரூபசிங்க, சமாதானச் செயற்பாட்டில் அனைத்து ஒடுக்கப்பட்ட இனங்களின் அபிலாஷைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் இருப்பவர். ஒரு இடதுசாரிப் பாரம்பரியத்தில் வளர்ந்தவர். சகவாழ்வு மன்றத்தின் தலைவராக இருப்பதுடன் சமாதானச் செயற்பாடுகளுக்குக் கொள்கைரீதியான உதவிகளையும் வழங்கிவருகின்றார். லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச எச்சரிக்கை அமைப்பின் (International Alert) பொதுச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

## 3205

**சனநாயக அரசாங்கத்தின் மாதிரிகள்.** ஜோன் பி.பிராங், லரி டயமண்ட் (மூலம்), சோ. சந்திரசேகரன், மா.கருணாநிதி, டி.தனராஜ் (தமிழாக்கம்), எஸ்.அன்ரனி நோபர்ட் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: Marga Institute, P.O.Box 601, 61, Isipathana Mawathe, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

**சனநாயக அரசாங்கத்தின் மாதிரிகள்** என்ற முதலாம் பகுதியில் சட்டவாக்கக் கிளை, நிறைவேற்றுத் துறை, நீதித்துறை அதிகாரம், திருத்தங்கள், அரசாங்கத்தின் அதிகாரங்கள் மீதான எல்லைகள், சமத்துவம் பற்றிய அடிப்படை உரிமை ஆகிய பிரிவுகள் விளக்கப்படுகின்றன. **அறிமுகம்: தொடர்ந்து கடைப்பிடிப்பு, தேய்வு, செயலின்மை, புதிதாக்கம்** என்ற இரண்டாவது பகுதியில் ஆசியாவின் ஜனநாயகத்தின் சரிவு, சனநாயக முன்னேற்றத்தையும் தோல்வியையும் விளக்குதல், ஆசியாவில் சனநாயகத்தை நோக்கி ஆகிய பிரிவுகள் விளக்கப்பட்டுள்ளன.

## 3206

**செந்தமிழர் ஆகிடுவோம்.** வ.பொன்னம்பலம். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

72 பக்கம், விலை: ரூபா 2.60, அளவு: 18x12சமீ.

செந்தமிழர் இயக்கம் என்ற அமைப்பின் தாபகரான வ.பொன்னம்பலம், தமிழ் மக்களின் உரிமைகளையும் அவற்றை எவ்விதமேனும் பெற்றாக வேண்டியதன் அவசியத்தையும் அவற்றைப் பெறும் வழிவகைகளையும் தனக்கேயுரிய முறையில் இந்நூலில் விளக்கியுள்ளார். "நம் கண்முன்னாலேயே ஒரு இனத்தின் பிரதேசமும், தனித்துவமும் அரசுகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் பழங்கதையாகிக் கொண்டிருக்கும் போது, அதைப்பற்றி வாய்திறந்து பேசாமல் வாழ என் மனச்சாட்சி இடம் தரவில்லை. நான் சரியென நம்பும் கருத்துக்களை முன்வைக்கிறேன். மார்க்சும் லெனினும் முன்வைத்த கருத்துக்களே இவை" என்ற அறிமுகத்துடன் தன் கருத்துக்களை இந்நூலில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

## 3207

**சோவியத் யூனியனின் உடைவு.** றெஜி சிறிவர்த்தன. (மூலம்), எம்.ஏ.நுஃமான், உ.சேரன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 8: இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம், 8, கின்சி றெறெஸ், 1வது பதிப்பு, ஜுன் 1992. (Colombo 2: Crescent Publications, 90, Justice Akbar Mawathe).

x, 210 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



தமிழில் வெளிவரும் ரெஜி சிறிவர்த்தனாவின் முதலாவது நூல் இது. சோவியத் யூனியனின் உடைவு சமகால உலக வரலாற்றில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள முக்கியமானதொரு வரலாற்று நிகழ்வாகும். இதன் பல்வேறு அம்சங்களும் இந்நூலில் விரிவாக ஆராயப்படுகின்றன. தமிழில் முதன்முறையாக மார்க்சிசம், சோசலிச வரலாறு, ஆயுதப் புரட்சி, அரசியல் அறம் என்பன பற்றிய விரிவான ஆதாரபூர்வமான தரவுகளின் அடிப்படையில் ஒரு திறந்த விவாதத்தை இந்நூல் தொடக்கி வைக்கின்றது. வன்முறை அரசியல் சூழலில் சிக்குண்டு திக்குத் திசை தெரியாது தத்தளிக்கும் நம் நாட்டுச் சூழலில் வன்முறையின் கருத்தியலை விசாரணைக்கு உட்படுத்தும் ஆய்வு இதுவாகும். ரெஜி சிறிவர்த்தன (1922), இலங்கையின் மிக முக்கியமான ஆய்வறிஞர்களுள் ஒருவர். மார்க்சியக் கோட்பாட்டிலும் வரலாற்றிலும் ஆழ்ந்த புலமையுள்ளவர். தீவிரமான மனித உரிமையாளர். பன்மொழி அறிஞர். சிறந்த கவிஞரும் நாடகாசிரியருமான இவர் ஒரு கலை இலக்கிய விமர்சகருமாவார்.

## 3208

**தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் தென்னிலங்கை அரசியலின் இயலாமையும்.** *விக்கிரமபாகு கருணாரத்தின. கொழும்பு: இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகம், 1வது பதிப்பு, மே 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(8), 16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.*

இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகத்தினால் கொழும்பு சுகததாச ஸ்போர்ட்ஸ் ஹோட்டல் கேட்போர் கூடத்தில் 31.05.2005 அன்று ஒழுங்குசெய்யப்பட்ட ஆய்வரங்கில் ஆற்றிய உரையின் தமிழாக்கம். இது இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகத்தின் நான்காவது பிரசுரம். இந்நூல் இலங்கையில் சமூகங்களுக்கிடையே இன்று இடம்பெற்றுவரும் அசைவுகள், அதன் விளைவாக சமூகத்துக்கு வெளியே உருவாகிவரும் அரசியல் அணி-திரட்டல்கள் மற்றும் மோதல்கள் என்பவற்றை மிகவும் நுட்பமாக எடுத்துக்காட்டுகின்றது. கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின பேராதனைப் பல்கலைக்கழக மின்னியல் பொறியியலாளராகத் தனது முதற் பட்டத்தையும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் காந்த இலத்திரனியல் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பொறியியல்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுபவர். மார்க்சியவாத சிந்தனை-



படிப்பகம்

www.padippakam.com



யாளரான இவர் இலங்கையின் பல்வேறு மனித உரிமைமீறல்களுக்கும் எதிராகக் குரல்கொடுத்து வருபவர்.

## 3209

**பாலஸ்தீனர்களைப் பாதாளத்தில் தள்ளிய பாதகர்கள்.** ஏ.எல்.எம்.ஹாஸிம் (ஆங்கில மூலம்), எம்.எச்.எம்.ஹலீம்தீன் (தமிழாக்கம்). உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (கண்டி 20800: கிரியேட்டிவ் பிரின்டர்ஸ், இல 3/A, பஹிரவகந்த வீதி).

54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

ஜனாதிபதி சட்டத்தரணியும் சவுதி அரேபியாவில் முன்னாள் இலங்கைத் தூதுவரும், அகில இலங்கை முஸ்லீம் லீக் தலைவருமான பரிஸ்டர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். ஹாஸிம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம். 1897இல் உருப்பெற்ற யூதக் குடியேற்ற இயக்கம் (Zionist Movement) பற்றியும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் பற்றியும், அதில் யாஸீர் அரபாத்தின் பங்களிப்பு பற்றியும், பின்னாளில் தாயக மீட்சிக்காகப் போராடும் பாலஸ்தீனர்களுக்கெதிராக இடம்பெற்ற அண்மைக்கால அரசியல் நகர்வுகள் பற்றியும் இந்நூல் பேசுகின்றது.

## 3210

**புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு.** மு.திருநாவுக்கரசு. யாழ்ப்பாணம்: மு.திருநாவக்கரசு, 1வது பதிப்பு, ஜுலை 1991. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ்).

(12), 43 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சர்வதேச அரசியல் இன்று மிகப்பெரும் மாற்றத்தை அடைந்துள்ளது. இம்மாற்றம் எவ்வாறு ஏற்பட்டது? இம்மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகள் எவை? ஏற்பட்டிருக்கும் மாற்றம் எப்படியானது? இம்மாற்றம் யாருக்கு இலாபகரமானது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகளைக் கண்டறிவதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றை ஆராய்ந்து யதார்த்தத்தையும் எதிர்காலப் போக்கையும் புரிந்துகொள்வதன் மூலம் எமக்கு இலாபகரமான வழிவகைகளை நாம் கண்டறிய இந்நூல் வாய்ப்பளிக்கின்றது. இந்நூலின் பின்னிணைப்பாகத் தமிழீழ ஆய்வு நிறுவனத் தயாரிப்பான **தமிழீழத்தின் பொருளாதார வளங்கள்**, கரும்பறவை எழுதிய ஒரு



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப்போராளியின் வாழ்க்கைக் குறிப்பான **கோட்டையின் கீரோ (ஹீரோ)** ஆகிய இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 3211

**மக்கியாவலியும் வள்ளுவரும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஜுலை 2001. (சென்னை 26: சிவா கிராப்பிக்ஸ்).

208 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12 சமீ.

மக்கியாவலியைக் கற்காதவர் யதார்த்த அரசியலைப் படிக்காதவ-ராயும், வள்ளுவரின் பொருட்பாலைப் படிக்காதவர் அரசியலில் அறநெறியை அறியாதவராயும் கருதப்படுவர். மக்கியாவலி இத்தாலிய தேசியவாதி, கிறிஸ்தவர், ஐரோப்பிய அரசியலை நன்கு அலசிக் கற்றவர், அரசியலில் அறத்தைப் பற்றிக் கவலையில்லாதவர். வள்ளுவர் தமிழர், சமண சமயத்தவர், உயிர்க்கொலையை எதிர்ப்பவர், ஊழ்வினை, மறுபிறவிக் கொள்கையோடு அறத்தை வேண்டுபவர். கடந்தகால வரலாற்றில் அரசியல் நூல் துறையில் இன்றும் எழுத்தில் கிடைக்கக் கூடிய நூல்கள் மூன்று எனக் கூறலாம். கௌடலியரின் அர்த்த சாத்திரம், வள்ளுவரின் பொருட்பால், மாக்கியவலியின் இளவரசன். மக்கியாவலியதும் வள்ளுவரதும் முரண்பட்ட அரசியல் கொள்கைகளை இச்சிறு நூல் அறிமுகப்படுத்தும்.

## 3212

**மலையக அரசியலும் சமூக வாழ்வும்.** சந்தனம் சத்தியநாதன். கண்டி: ஞானம் பதிப்பகம், 19/7, பேராதனை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-8339-00-8.

இதிலுள்ள கட்டுரைகள் தேசியப் பத்திரிகைகளில் பிரசுரமானபோது பலரது கணிப்புக்கு உள்ளாகின. இவை மலையக அரசியல் பற்றியும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் பிரச்சினைகள் பற்றியும் பேசுகின்றன. இவற்றை ஒன்றுசேர வாசிக்கும்போது ஒட்டு-மொத்தமானதொரு பரிமாணத்தையும் புதிய தரிசனத்தையும் வாசகர்கள் பெறுவதற்கு வாய்ப்பாகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## 3213

**மாறிவரும் புதிய உலக ஒழுங்கு: புவிசார் அரசியல் நோக்கு.** *கே.ரி.கணேசலிங்கம். பிரான்ஸ்:* T.Thayalan, 11, Ruedel, Hermet, 93400 ST-ouen, *1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (யாழ்ப்பாணம்:* S.S.R.Computer &Offset Printers, 288, Palaly Road).

*(14), 133 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.*

*உலகளாவிய மேலாதிக்க வியூகத்தில் புவிசார் அரசியல், உலகளாவிய இராணுவ அரசியல் போக்கு, அமெரிக்க மேலாண்மையை நிலைநிறுவும் தேசிய பாதுகாப்பு ஏவுகணை, உலகப் பொருளாதாரத்தில் ஆதிக்க அரசுகளின் போக்கு ஆகிய நான்கு பிரதான இயல்களினூடாக இந்நூலில் புதிய உலக ஒழுங்கு என்ற கருத்தியலை விளக்கியுள்ளார். இந்நூலாசிரியர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்-சமூகவியல் துறை விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்.*

## 3214

**முஸ்லீம்களின் அரசியல் தனித்துவத்தை அங்கீகரித்த தமிழர் தலைவர் தந்தை செல்வா.** *ரவூப் ஹக்கீம். இலங்கை: எம்.எச்.எம்.அஷ்ரப், தலைவர், ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ், 1வது பதிப்பு, ஜுன் 1997. (கொழும்பு 2:* Crescent Publications, 119, Justice Akbar Mawathe).

*16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராகவும், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பொதுச் செயலாளராகவும் இருந்த ரவுப் ஹக்கீம் அவர்களின் இவ்வுரை, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஒழுங்கு செய்துள்ள தந்தை செல்வா நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில்* ***தந்தை செல்வாவும் முஸ்லீம்களும்*** *என்ற தலைப்பில் 31.3.1997 இல் ஆற்றப்பட்டதாகும்.*

## 3215

**வளம்பெற ஒன்றுபடுவோம்.** *சிறிமா ஆர்.டி.பண்டாரநாயக்க. கொழும்பு: தகவல் திணைக்களம், 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).*



படிப்பகம்

www.padippakam.com



*70 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*சிறிமா ஆர்.டி.பண்டாரநாயக்க இலங்கைப் பிரதமராக இருந்த காலகட்டத்தில், 1976 செப்டெம்பரில் ஐ.நா. பொதுச்சபையின் 31வது தொடர்க் கூட்டத்திலும், 1976 ஓகஸ்டில் கொழும்பில் 5ஆவது அணிசேரா உச்சிமாநாட்டிலும், 1976 ஒக்டோபரில் நியுயோர்க்கிலுள்ள ஐ.நா.வில் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகளின் மத்தியிலும் ஆற்றப்பட்ட உரைகளின் தமிழாக்கம்.*

## 330 பொருளியல்

### 3216

**எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்.** *தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். யாழ்ப்பாணம்: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், முதன்மைச் செயலகம், தமிழீழ விடுதலைப் புலிகள், தாவடி, 1வது பதிப்பு, ஜனவரி 1994. (சங்கானை: ஞானம்).*

*(10), 20 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 13.5x21 சமீ.*

*ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களின் சுயதேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் பொருண்மிய சூழலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்த இந்நூல் அப்பிரதேசத்திலுள்ள அனைத்து வளங்களையும் திறமையாகவும், உச்சப் பயன்பாட்டைப் பெறும் வகையிலும் பயன்படுத்துவதற்கான சூழல் பற்றிய விழிப்புணர்வினை ஊட்டுகின்றன.*

### 3217

**புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்.** *என்.சிறிரஞ்சன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 361, 1/2, டாம் வீதி).*

xii, *124 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.,* ISBN: *955-9429-74-4.*

*இந்நூல் புலம்பெயர்ந்தவர்களுக்கும் தாயகத்திற்கும் இடையிலான பொருளாதார உறவுகள் பற்றியது. பொருளாதாரப் பங்களிப்புகள்*



படிப்பகம்

www.padippakam.com



எதிர்காலத்தில் குறைவடைந்து செல்வதாக இருக்கும் என்பதனைச் சுட்டிக் காட்டுவதனை நோக்கமாகக் கொண்ட இந்நூலில் அவ்வாறான நிலையினை எவ்வாறு எதிர்கொள்வது, தாயகத்திற்கான புலம்பெயர்ந்தவர்களின் பல்தரப்பட்ட பொருளாதாரப் பங்களிப்புக்கள் எத்தகையவை, அவற்றின் முக்கியத்துவம் யாவை, அவை மேலும் எவ்வாறு அதிகரிக்கப்படலாம் என்பது உட்பட்ட விடயங்களைக் கொண்டுள்ளது. சாதாரண வாசகர்களை இலக்காகக் கொண்ட இந்நூலில் அடங்கியுள்ள 25 கட்டுரைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்றபோதும் தனியே ஒரு கட்டுரையினை வாசிக்கும் வாசகருக்குக் கூடப் பயனுள்ள செய்தியொன்றை வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் பயின்று முறையே வணிகமாணி, வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவர் இந் நூலாசிரியர். இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் பணியாற்றி வருவதுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ நிதிப் பீடத்தின் வருகை விரிவுரையாளருமாவார்.

## 331.88 தொழிற் சங்கங்கள்

### 3218

**மலையகத் தொழிற்சங்க வரலாறு.** அந்தனி ஜீவா. கண்டி: மலையக வெளியீட்டகம், த.பெ.எண் 32, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (அக்குறணை: வர்தா பதிப்பகம்).

*24 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14.5,* ISBN: *955-9084-22-4.*

இந்நூல் **மலையகத் தொழிற்சங்க வரலாறு** என்ற தலைப்பில் வீரகேசரி வார வெளியீட்டில் 2003இல் இடம்பெற்ற கட்டுரையின் விரிவாக்கமாகும். இலங்கை தொழிற்சங்க வரலாற்றில் போராளியாகத் திகழ்ந்தவரும், இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான திருமதி விவியன் குணவர்த்தனாவிற்குக் காணிக்கையாக இச்சிறுநூல் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் மலையக வரலாற்றில் கோ.நடேசையர், டாக்டர் மணிவால் போன்றோரின் வருகை, அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உதயம், அரசாங்க சபைத் தேர்தல், முல்லோயா போராட்டம், இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழி-



படிப்பகம்

www.padippakam.com



லாளர் தேசிய சங்கம், செங்கொடிச் சங்கம் போன்றவற்றின் உதயமும் செயற்பாடும் என்பன சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. விரிவான வரலாறொன்றினை எழுதப்புகும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் உதவக்கூடும்.

## 338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

### 3219

**இலங்கை மீன்வளம்: பயன்படுத்தலும் அபிவிருத்தியும்.** *அ.சோமசுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: கடல்வள அபிவிருத்தி நிலையம், பல்கலைக்கழகம், 2வது பதிப்பு, 2003., 1வது பதிப்பு, 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*vi, 90 பக்கம், புள்ளிவிபரம், வரைபடம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.*

*மீன்பிடித் தளங்கள், மீன்வளம் பயன்படுத்தல், மீன்பிடிப் படகுகளும் உபகரணங்களும், உபதேவைகளும் வசதிகளும், இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும், மீனவர் சமூகம், அரச நிதியும் வெளிநாட்டு உதவியும், மிதமிஞ்சிய மீன்பிடியால் ஏற்படும் ஆபத்துக்கள், மீன்வள அபிவிருத்தியும், தமிழர் பிரதேசங்களும், மீன்வள அபிவிருத்தி, மற்றைய தேவைகள் ஆகிய 11 தலைப்புகளில் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் பிரதான வளங்களில் ஒன்றாகிய மீன்வளம் பற்றி இந்நூல் விரிவாக ஆராய்கின்றது. இந்நூலாசிரியர் ஒரு பட்டயக்கணக்காளராவார்.*

## 340 சட்டவியல்

### 3220

**ஒப்பீட்டுச் சட்டம்: ஒரு சில சிந்தனைகள்.** *வி.ரி.தமிழ்மாறன். கொழும்பு 5: மதுரி மலர்வகம், 215, C/1/3 பார்க் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).*

*(6), 144 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-8222-00-3.*



படிப்பகம்

www.padippakam.com



சர்வதேச சட்டம், மனித உரிமைகள் சட்டம், அரசியலமைப்புச் சட்டம், அரசறிவியல் என்பவற்றின் சிலதுளிச் சிறப்பு நிலைத் தெரிவு. இதிலுள்ள ஒன்பது கட்டுரைகளும் சட்டத்துறை மாணவர்களுக்கு ஏற்றது. சர்வதேசச் சட்டமும் மனிதாபிமானத் தலையீடும், சர்வதேசச் சட்டத்தில் மீளொப்படைப்பு: மீள் பார்வை அவசியம் தானா?, கடல் சட்டம், இஸ்லாமும் மனித உரிமைகளும், சிறுபான்மைத் தேசிய இனங்களின் போராட்டம் 20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பார்வை, இலங்கை அங்கீகரித்துள்ள புதிய மனித உரிமைகள் சாசனம் எமக்கு இதனால் ஏது பயன்? அரசுகளும் அவற்றுக்கான அங்கீகாரமும், கிளர்ச்சிக் குழுக்களும் மனித உரிமைகளும், இந்து மதத்தில் சட்டம், நீதி, நீதி நிர்வாகம் பற்றிய கருத்துக்கள் ஆகிய 9 இயல்களில் இந்நூல் சட்டத்துறை சார்ந்த அறிவை மாணவர்களுக்குப் போதிக்கின்றது.

## 3221

**தோட்டத் தொழிலாளர் கைநூல்.** தெ.வ.இராசரத்தினம் (ஆங்கில மூலம்), பொன். கிருஷ்ணசாமி (தமிழாக்கம்). இலங்கை: தொழிலாளர் காங்கிரஸ், ஆசிய அமெரிக்க சுதந்திர தொழில் நிறுவனம், 1வது பதிப்பு, மார்ச் 1982. (கொழும்பு 12: ஷபீனா பிரஸ், 20, பிரைஸ் பிளேஸ்).

viii, 123 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தோட்டத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட சட்டங்களைப் பற்றிய அடிப்படை அறிவை இந்நூல் தருகின்றது. தோட்டத் தொழிலாளருக்கு நாட்டின் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகள், அவர்தம் தொழில் கொள்வோருடன், தொழிற்சங்கத்துடன், அரசுடன், அவரது உறவுகள் என்ன?, அவரது வேலை நிபந்தனைகளும் சட்டங்களும் யாவை என்பதை மிகச் சொற்ப சொற்களில், ஒரே புத்தகத்தில் அவரது விரல் நுனியிலே வைக்குமொரு முயற்சியே இதுவாகும். சிரமமின்றி அவற்றை அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது.

## 3222

**வீதிச் சட்டமும், வேறு அறிவுரைகளும்.** ஜினதாச வித்தாரண (மூலம்), சீ.ஆறுமுகம் (மொழிபெயர்ப்பாளர்). களுத்துறை: ஜினதாச வித்தாரண, 299 சீ, அபய மாவத்தை, நாகொட, 2வது பதிப்பு, 2000. (களுத்துறை: விஜய அச்சகம், புகையிரத நிலைய வீதி).

40 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 45., அளவு: 18x11.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



சர்வதேச வீதிச் சட்டங்கள், இலங்கை அரசின் வர்த்தமானி, மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு ஏற்ப இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வீதிச் சட்டங்கள் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன. வீதிச் சட்டங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும், பயிலுநர் சாரதிகளுக்கும் ஏற்புடையது. இந்நூலாசிரியர் இலங்கை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் இருபது வருடங்களுக்கும் மேலாகக் கடமையாற்றியவர்.

## 340.59 இஸ்லாமியச் சட்டங்கள்

### 3223

**அல்குர் ஆன் அல்ஹதீஸ் அடிப்படையில் (முத்)தலாக் பற்றி ஓர் ஆய்வு.** எஸ்.எல்.ஏ.அப்துல் ஹக். கொழும்பு 11: ஹாதி புத்தக நிலையம், 52/7, இரண்டாம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, மே 1996. (சென்னை 600001: Threeyem Exports, 83, Angappa Naicken Street)

74 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 18x12 சமீ.

இஸ்லாம் சட்ட அடிப்படையில் விவாகரத்துச் செய்வதை **தலாக்** என்பர். இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விவாகரத்துக்கு இடம் வழங்கப்பட்டுள்ள போதிலும்கூட இது பூரண விருப்பத்துக்குரியதொன்றாகக் கருதப்படவில்லை. எனவே விவாகரத்து விவகாரம் குறித்து மார்க்க அடிப்படையிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விவாகரத்துப் புரியவேண்டும் என்ற நிலை உருவானாலும் ஒரே முறையில் தலாக் கூற முடியாது. கணவன்-மனைவியின் மனநிலையில் மாற்றம் ஏற்பட இடமுண்டு என்ற அடிப்படையில் இடைவெளி விடப்பட்டு மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். இந்த மூன்று சந்தர்ப்பத்திலும் முடிவில் மாற்றம் இடம்பெறாதவிடத்தே விவாகரத்து ஏற்றுக் கொள்ளப்படும். இது பற்றிய சட்ட வரையறைகளை விளக்குவதாக (முத்)தலாக் எனும் இந்நூல் அமைந்துள்ளது.

### 3224

**இஸ்லாமிய சட்டக்கலை: ஒரு வரலாற்று நோக்கு.** M.I.M.அமீன். (இயற்பெயர்: முகம்மது இப்றாகிம் ஆலிம் சாகிபு முகம்மது அமீன்). பேருவளை: அல் கழம் பதிப்பகம், 26/2 யூசுப் அவென்யு, சீனன்கோட்டை, 1வது பதிப்பு, மே 1996. (கொழும்பு 13: Quick Graphics Print, 5- 1/20 Super Market, Kotahena).



படிப்பகம்

www.padippakam.com



*xx, 124 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21x15 சமீ.,* ISBN: *955-9454-00-5.*

இஸ்லாத்தின் மிக முக்கிய துறைகளுள் ஒன்றான ஷரீஆ பிக்ஹ் பற்றி விளக்கி அதன் வரலாற்றை ஆதாரபூர்வமாகத் தொகுத்துக் கூறும் நூல் இது. இத்துறையில் விரிவான விளக்கத்தை தமிழில் கூறும் முதலாவது நூல் என்றும் இது கருதப்படுகின்றது. முஸ்லிம் சமூகத்தில் பிக்ஹின் களம் பிற்காலத்தில் மிகக் குறுகியதாக அமைந்தாலும் இஸ்லாமிய வரலாற்றில் ஷரிஆ என்றும் செயலிழந்ததாகக் காணப்படவில்லை என்ற கருத்து மிகச் சிறப்பாக இந்நூலில் நிறுவப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் M.I.M.அமீன், ஹெம்மாதகமவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அறபு இஸ்லாமிய நாகரிகத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

# 350 பொது நிர்வாகம்

## 3225

**அலுவலக நிருவாகம்: பகுதி 1.** கந்தையா கனகரட்ணம். *யாழ்ப்பாணம்: உயர் கல்விச் சேவை நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(18), 102 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x14.5 சமீ.*

தொழில் நிர்வாகத்தின் ஒரு பிரிவான அலுவலக நிர்வாகத்தின் கோட்பாடுகளும் நடைமுறைகளும் அரச துறையில் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்நூலில் அடங்கியுள்ள விடயங்களுள் தொடர்பாடல், அறிக்கை ஆகிய இரு விடயங்களைத் தவிர ஏனைய விடயங்கள் யாவும் அலுவலக நிர்வாகத்தின் முக்கிய பிரிவான ஒழுங்கமைத்தலும், ஆளணியும் பற்றியதாகும்.

# 360 சமூக சேவை நிறுவனங்கள்

## 3226

**உயிரலைகள்: 17வது ஆண்டு சிறப்பு மலர்.** *மலர்க்குழு. பிரான்ஸ்:* Paris Singing Fish, 12, rue Eugene Jumin, 75019, Paris, *1வது பதிப்பு, ஏப்ரல் 2002. (பிரான்ஸ்: ஸ்ரீ பாரதி அச்சகம், பாரிஸ்).*



படிப்பகம்

www.padippakam.com



(78) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26X17 சமீ.

யாழ்ப்பாணம், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் பிரபல்யமானதொரு விளையாட்டுக் கழகமாகத் திகழ்ந்திருந்தது. புலம்பெயர்ந்து பிரான்சில் குடியேறிய குருநகர் மக்கள் 1982ம் ஆண்டு பாரிசில் தமது தாய்ச்சங்கத்தின் நினைவாக பாரிஸ் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கி விளையாட்டுத்துறையில் ஈடுபாட்டுடன் உழைத்துவந்தார்கள். இச்சங்கம் உருவாக்கப்பட்டு 17 ஆண்டுகள் நிறைவெய்திய நிலையில் புலம்பெயர்ந்து பிரான்சில் வாழும் அதன் அங்கத்தவர்கள் இச்சிறப்பு மலரை வெளியிட்டுள்ளார்கள். 21.4.2002இல் வெளியாகிய இம்மலரில், கழகத் தோற்றம், அங்கத்தவர்கள் விபரம் போன்ற விபரங்களுடன் பிரான்சில் குடியேறிய ஈழத்தமிழர் பற்றிய குறிப்புக்கள் மற்றும் இலக்கியக்கட்டுரைகள் என்பனவும் காணப்படுகின்றன.

## 3227

**குரும்பசிட்டி சன்மார்க்கசபை: 30 ஆண்டு நிறைவுமலர்.** மலர்க்குழு. குரும்பசிட்டி: சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, ஜுலை 1965. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

X, 132 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25X18.5 சமீ.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 30ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மூன்று நாள் நிகழ்வாக முத்தமிழ்ப் பெருவிழாவொன்று 1965 ஜுலை 25-27 ம் திகதிகளில் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதன் நினைவாக சன்மார்க்க சபையின் முப்பதாண்டுக்கால வரலாற்றுப் பதிவாக இம்மலர் வெளியிடப்பட்டது. சன்மார்க்க சபை முப்பது வருட வரலாறு, சன்மார்க்க சபையும் குரும்பசிட்டியும், சன்மார்க்க சபையின் சாதனைகள், சன்மார்க்க சபைத் தொண்டர்கள், குரும்பசிட்டிப் பெரியார்கள் என்று ஐந்து பிரிவுகளில் இந்நூல் அடங்கியுள்ளது. ஏ.ரி.பொன்னுத்துரை, த.க.நல்லையா ஆகிய இருவரும் இணைக்காரியதரிசிகளாக இருந்து இம்மலர் வெளியீட்டை மேற்கொண்டிருந்தனர்.

## 3228

**சுவடுகள் 99: நினைவு மலர்.** மலர் வெளியீட்டுக் குழு, உடத்தலவின்ன: கென்ட் பவுண்டேஷன், 14/1, உடத்தலவின்ன



படிப்பகம்

www.padippakam.com



*மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (உடத்தலவின்ன 20802: அச்சிட்டுப் பிரிவு, சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே)*

*160 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.*

மலையகத்தின் உடத்தலவின்ன மடிகேயில் இயங்கிவரும் கென்ட் பவுண்டேஷன் (Kent Foundation) நிறுவனத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். நாடளாவிய-ரீதியில் வாழும் பல அறிஞர்களின் கட்டுரைகள் இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன மடிகேயின் பிரதேச வரலாறு பற்றிய பல தகவல்களை இம்மலர் தன்னகத்தே கொண்டுள்ளது.

## 3229

**தமிழீழச் சங்கம், கனடா: வெள்ளிவிழா மலர். சண்முகம்** குகதாசன். *(மலராசிரியர்). கனடா: தமிழீழச் சங்கம்,* Tamil Eelam Society of Canada, 2130, Lawrence Avenue East #204, Scarborough, Ontario, *1வது பதிப்பு, 2003. (கனடா: பி.கே.அச்சகம்)*

*1974இல் ரொரன்ரோவில் கால்கோளிடப்பெற்று 1975இல் தொடங்கப்பெற்று, 1978ம் ஆண்டில் வருவாய் நோக்கற்ற ஒரு அமைப்பாகப் பதிவுசெய்யப்பட்ட கனடா தமிழீழச் சங்கம் என்ற தமிழர் நலன்பேணும் அமைப்பின் 25ஆவது ஆண்டினை நினைவு-கூரும் வகையில் உருவான சிறப்பு மலர். கனடாத் தமிழீழச் சங்கப் பகுதி, கனடாத் தமிழர் பகுதி, தமிழர் பகுதி, படைப்பிலக்கியப் பகுதி, என்ற பிரிவுகளுக்குள் ஆக்கங்களைப் பகுத்துப் பதிவுசெய்துள்ளனர்.*

## 3230

**புலர்வு 2000.** மலர்க் குழு. டென்மார்க்: தமிழர் புனர்வாழ்வுக் கழகம், TRO, Post Office Box 82, 7400 Herning, *1வது பதிப்பு, 2000. (லண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்)*

*40 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x20 சமீ.*

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யுத்த நெருக்கடிகளினால் பாதிக்கப்-பட்ட தமிழீழ மக்களுடைய தேவைகளையும் கஷ்டங்களையும் முடிந்தவரை நிறைவுசெய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லதோர் வாழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட ஒரு மக்கள் அமைப்பாகும். 1985ம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் பின்னாளில்



படிப்பகம்

www.padippakam.com


அமெரிக்க, அவுஸ்திரேலிய, ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்கள் எங்கும் வியாபித்துள்ளது. ஆரம்பகாலங்களில் அரசசார்பற்ற தனியார் தொண்டு நிறுவனமாக இதன் செயற்பாடுகள் அமைந்திருந்தன. பின்னாளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிளை அமைப்பாக இணைத்துச் செயற்பட ஆரம்பித்தது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 15வது வருட நிறைவை முன்னிட்டு டென்மார்க் கிளையினால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். உலகெங்கிலும் இயங்கும் இக்கழகத்தின் பணிகள் பற்றிய அறிக்கைகள் புகைப்படங்களுடன் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

### 3231

**சுற்றாடற் கல்வி: 6ஆந் தரம்.** *மாளெல் ரூபா ரஞ்சினி குலத்துங்க, பத்மினி த சில்வா (மூல நூலாசிரியர்), ஐ.தம்பிமுத்து, எம்.எம்.ராசீக் (தமிழாக்கம்). கொழும்பு: வரையறுக்கப்பட்ட கிறபிடெக் (பிரைவேற்) லிமிட்டெட், 2வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட கிறபிடெக் (பிரைவேற்) லிமிட்டெட்).*

vii, *88 பக்கம், விலை: இலவசம், அளவு: 25X19 சமீ.*

*அரசினால் செயற்படுத்தப்படும் பல்பாடநூல் தேர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைய உலக வங்கியின் பொதுக் கல்விச் செயற்றிட்டம் 2 இன் அனுசரணையுடன் ஆக்கப்படும் இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாட நிபுணத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்திலே முக்கியமான 5 கருப்பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கருப்பொருளும் தலைப்பு, உபதலைப்பு எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த உப தலைப்புகளின் படி 6ஆந் தரத்திற்குப் பொருத்தமான குறிக்கோள்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் செய்தித் தொடர்பாடல் ஆற்றல் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*


படிப்பகம்

www.padippakam.com



# 364 பொதுப் பாதுகாப்பு நடைமுறைகள்

## 3232

**அரச பயங்கரவாத விமானக் குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு: பாதுகாப்புக் கையேடு.** *படைத்துறைச் செயலகம், தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 2வது பதிப்பு, தை 1995, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம், 664, கேணல் கிட்டு சாலை).*

*(4), 52 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 25., அளவு: 18X13 சமீ.*

*தற்காப்புக் கலையை விளக்கும் ஒரு இராணுவ விஞ்ஞானக் கையேடு இதுவாகும். சிறீலங்கா வான்படையின் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சிலிருந்து எப்படி மக்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டும் என்பதை இக்கையேடு விரிவாக விளக்குகின்றது. குண்டுவீச்சு விமானங்களின் வகைகள் மற்றும் விமானக் குண்டுகளின் தன்மைகள் பற்றியும், சூழலுக்கேற்ப எவ்வகைப் பதுங்குகுழிகளை அமைக்கலாம் அல்லது இருக்கும் தரை அமைப்பை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் இக்கையேடு மக்களுக்கு வழிகாட்டுகின்றது. சுலப விளக்கத்திற்காக 40க்கும் அதிகமான விளக்கப்படங்கள் தரப்பட்டுள்ளன.*

# 370 கல்வியியல்

## 3233

**ஆசிரிய சேவையும் ஆசிரியர் வாண்மையும்.** *ஜயசேன புத்பிட்டிய (மூலம்), ஆர்தர் ஜோன்ஸ் பெர்ணாண்டோ (தமிழாக்கம்). மஹரகம: தை.தனராஜ், பதிப்பாசிரியர், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1999. (மஹரகம: ஜனக பிரிண்டர்ஸ், இல.186, ஹை லெவல் வீதி).*

*x, 223 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 21X14 சமீ., ISBN: 955-96526-0-5.*

Teacher Service and Teacher Professionalism *என்ற ஆங்கில மூலநூலின் தமிழாக்கம். ஆசிரியத்துவ பாத்திரம் பற்றிய நோக்கும் சிந்தனையும், நாம் இந்நாட்டின் ஆசிரியர்களாவோம், தேசியக் கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும், கற்றலின் உளவியல் அடிப்படை,*



படிப்பகம்

www.padippakam.com



கலைத்திட்டம், கற்றல், கலாசாரம், ஆசிரியர் நடிபங்கு, சிறந்த பாடசாலை, நல்லாசிரியர் மற்றும் ஆசிரியர் தொழில் வாண்மை, கல்விச் செயற்றிட்டங்களின் பின்னணி, கல்விச் செயற்றிட்ட முகாமைத்துவம், பாடசாலையின் அடிப்படையிலான கல்விப் பிரயோகங்கள் ஆகிய 9 இயல்களில் தனது கல்வியியல் அறிவு, அனுபவம், சிந்தனை என்பவற்றோடு இந்நூலினூடாக தமிழ்மொழி மூல ஆசிரியர்களுடன் இந்நூலாசிரியர் சங்கமமாகின்றார்.

## 3234

**ஆசிரிய முகாமைத்துவம்.** மா.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: விஸ்டம் பப்ளிஷர்ஸ், சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

(16), 136 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-1204-00-X.

ஆசிரியர்களுடைய செயற்பாடுகளை முகாமைத்துவ நோக்கில் பரிசீலனை செய்யும் இந்நூல் இரு அடிப்படைகளைக் கொண்டு அமைந்துள்ளது. ஒன்று- தமது பணிகளைப் பற்றிய ஆசிரியர்களின் சுய முகாமைத்துவப் பார்வை. மற்றையது – ஆசிரியர்களின் செயற்பாடுகள் பிறரால் கணிக்கப்படும் முகாமைத்துவ நோக்கம். பள்ளிக்கூட மட்டம், சமூக மட்டம் ஆகிய இரு மட்டங்களிலும் ஆசிரியர்களது பங்கும் பணிகளும் நூலாசிரியரின் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவம் என்ற எண்ணக்கருவின் விளக்கத்தை முன்வைத்து, ஆசிரியர்களின் பங்கு, ஆசிரியர்களின் செயற்பாடுகளில் அவர்களுக்கு அறைகூவல்களாக எழும் பிரச்சினைகள், நேரத்தைச் சரியான முறையில் செலவிடுதல், பொருத்தமான வழியில் வழிகாட்டிகளாகச் செயற்படுதல், விளைதிறன் அளவுகோலின்படி மதிப்பிடுதல் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் வெள்ளிவிழா ஆண்டு (1980-2005) நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



## 3235

**இலங்கை முஸ்லிம்களின் கல்வியும் அரசியலும்.** றிம்ஸான் ஹம்தூன். பேருவளை: அல்-கலம் பதிப்பகம், 26/2 யூசுப் அவென்யு, சீனன் கோட்டை, பேருவளை, 1வது பதிப்பு, மார்ச் 1998. (பேருவளை: குவிக் கிராப்பிக்ஸ், 24, யூசுப் அவென்யு).

(8), 73 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9454-01-3.

பேருவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பேருவளை நகரசபையின் உப நகரபிதாவுமான இந்நூலாசிரியரால் தனது கலைமாணிப் பட்டப்படிப்பின் இறுதியாண்டு ஆய்வுக்கென சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இதுவாகும். சில மாற்றங்களுடன் நூலுருப் பெற்றுள்ளது. வரலாற்றுரீதியாகவும், நடைமுறைரீதியாகவும், இலங்கைவாழ் முஸ்லீம்களின் கல்வி மற்றும் அரசியல் நிலை பற்றி இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது.

## 3236

**இலங்கையில் முகாமைத்துவக் கல்வி.** மா.சின்னத்தம்பி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

xiv, 268 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 955-9429-68-x.

இந்நூல் இலங்கையில் முகாமைத்துவக் கல்வியின் நிலைமையினை முழுமையாக ஆராய்கின்றது. முகாமைத்துவக் கல்வியின் வளர்ச்சி, அது சார்ந்த கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, அவற்றின் கலைத் திட்டங்கள், என்பவற்றை ஆழமாக ஆராய்வதுடன் இவற்றில் காணப்படும் பலவீனங்களையும், பிரச்சினைகளையும் இந்நூல் அடையாளம் காண்கின்றது. மேலும், இலங்கையில் முகாமைத்துவ கல்வி விருத்தி அடைவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் முன்வைக்கின்றது. இந்நூலாசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் துறையின் தலைவராகப் பணியாற்றியவர்.

## 3237

**இலங்கையிற் கல்வி.** சோ.சந்திரசேகரன், மா.கருணாநிதி, மதுரை 625020: கவிதா பதிப்பகம், 132ஏ, மருது பாண்டியர் தெரு, 1வது



படிப்பகம்

www.padippakam.com


பதிப்பு, 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 123 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

கொழும்புப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித்துறைத் தலைவர் திரு.சோ.சந்திரசேகரன் அவர்களும் விரிவுரையாளர் திரு. மா.கருணாநிதி அவர்களும் இணைந்து வெளியிட்ட இக்கட்டுரைத் தொகுதியில் குடியேற்றவாதக் கல்விக் கொள்கை, தென்னாசியாவில் குடியேற்றவாதக் கல்வி, இலங்கையில் குடியேற்றவாதக் கல்வி, பாடசாலை அமைப்பு மாற்றங்கள், பல்கலைக்கழக, மாகாணக் கல்லூரிகள், தமிழர் உயர்கல்வி, மூன்றாம் நிலை, தொழிற் கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி ஆணைக்குழு, சிறிய பாடசாலைகள் ஆகிய விடயங்களில் அமைந்த 10 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3238

**இலங்கையின் கல்விச் செலவு.** மா.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: விஸ்டம் பப்ளிஷர்ஸ், சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், 1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

104 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-1204-01-8.

இலங்கையில் அரசாங்கம் கல்வியில் மேற்கொண்ட செலவுகளின் போக்கு, பயன்பாடு பற்றி இந்நூல் ஆராயமுயல்கின்றது. 1971-1981 காலப்பகுதியிலான செலவுப் போக்குப்பற்றி ஆராய்வதன் மூலம் கல்விச் செலவின் பன்முக அம்சங்கள் இதில் விளக்கப்படுகின்றன. நாடு இனப்பிரச்சினையின் நேரடிப் பாதிப்புக்கு உட்படுவதற்கு முந்திய காலப்பகுதியிலான அரசாங்கச் செலவு பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எட்டு இயல்களைக்கொண்ட இவ்வாய்வு இலங்கையில் கல்வி அறிமுகம், கல்வியில் அரசும் தனியாரும், இலங்கையின் குறைவிருத்திப் பண்பும் கல்வியும், மனித முதலீடாகக் கல்விச் செலவு, கல்விச் செலவின் அளவும் போக்கும், கல்வியும் நலத்துறையும், இலங்கையின் கல்விப் பிரச்சினைகள், முன்னேற்றமும் முன்மொழிவும் ஆகிய அம்சங்களைத் தனித்தனி இயல்களாக இந்நூல் ஆராய்கின்றது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் தலைவராகவும், கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி இணைப்பாளராகவும் பணியாற்றியவர். யாழ்ப்பாணப்


படிப்பகம்

www.padippakam.com



பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் வெள்ளிவிழா ஆண்டு (1980-2005) நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டது.

## 3239

**உயர்கல்விச் சிந்தனையில் புதிய செல்நெறிகள்.** சோ.சந்திரசேகரம். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (யாழ்ப்பாணம் பதிவாளர் பணிமனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்).

xiv, 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டில் நிகழ்த்தப்பட்ட பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நினைவுப் பேருரையாக 11.10.1999இல் வழங்கப்பட்ட உரையின் நூலுரு இதுவாகும். இந்த ஞாபகார்த்தப் பேருரையில் உயர்கல்வி தொடர்பாக அண்மைக் காலத்தில் வெளிக்கிளம்பியுள்ள புதிய சிந்தனைகள், அவற்றின் நவீன போக்குகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. உலகமயமாதல், கல்வியைத் தனியார் மயப்படுத்தல், தகவல் தொழில்நுட்பத்தில் அதிவேகத் தாக்கம், உயர்கல்வியை ஜனநாயகப்படுத்தல் போன்ற பல்வேறு சமகால முன்னேற்றங்கள் மற்றும் வளர்ச்சிகள் என்பவற்றால் உயர்கல்வி எவ்வாறு விசையுடன் செல்கின்றது என இப்பேருரை விளக்குகின்றது.

## 3240

**கல்விசார் தொடர்புகள், நினைவுகள், சிந்தனைகள்.** சு.சுசீந்திரராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

x, 294 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X14.5 சமீ., ISBN: 955-9429-61-2.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாட் பேராசிரியர் சு.சுசீந்திரராஜா. கல்வியைப் பொறுத்தவரை, இளமையிலிருந்து இன்றுவரை, தனது வாழ்க்கை எவ்வாறு அமைந்தது, அந்த அமைவிற்கு யார் யார் காரணம், அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பு, தொடர்பால் பெற்ற பயன்கள், தான் கற்றவாறு, கற்பித்தவாறு பிறர் தன்னிடமும் தன் மாணவர்களிடமும் எதிர்பார்த்தவை, அவற்றில் கைகூடியவை,



படிப்பகம்

www.padippakam.com



கைகூடாதவை, இரண்டிற்கும் உரிய பின்னணி, தோன்றிய இடையூறுகள், ஆய்வு முயற்சியில் தான் விரும்பியவை, பெற்றவை, இனிப் பெறுவதற்கு விரும்பத் தக்கவை என்று பிற கருமங்களுக்கிடையே ஓய்வாக இருந்த சமயம் உள்ளத்தில் பதிந்து கிடந்தவற்றை, சில ஆவணங்களில் எழுதப் பெற்றிருந்தவற்றை உள்ளது உள்ளவாறு இந்த சுயவரலாற்று நூலில் கூறியுள்ளார்.

## 3241

**கிழக்கிலங்கையில் கிறிஸ்தவர் ஆற்றிய கல்விப் பணி.** எஸ்.ஏ.ஐ.மத்தியூ. கல்முனை: பழைய மாணவர் சங்க வெளியீடு, கார்மேல் பாத்திமா கல்லூரி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (மருதமுனை: இளம்பிறை அச்சகம்).

(14), 130 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

கிறிஸ்தவர்களின் சமூக, கல்விப் பணிகள் மதமாற்றம் என்ற குறிக்கோளுடன் இயங்கியவை என்ற கருத்தின் விஷமக் கொடுக்குகளை இந்நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் அகற்றுகின்றன. பிரச்சாரம் இல்லாமல், புள்ளிவிபர அடிப்படையில் இவை தகவல்களைப் பதிவுசெய்கின்றன. 1977ம் ஆண்டு எழுதப்பட்ட இவ்வாய்வின் ஒரு பகுதி, 1986இல் கல்முனை, கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் **அணையா விளக்கு** ஆண்டுமலரில் இடம்பெற்றுள்ளது.

## 3242

**சமாதானத்திற்கான கல்விப் பாதை: சமாதான கல்வி ஆசிரியர்கட்கான வழிகாட்டி நூல்.** ஏ.எஸ்.பாலசூரிய (மூலம்), பா.சி.சர்மா (பதிப்பாசிரியர்), எப்.எம்.நவாஸ்தீன் (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 8: ஸ்ரீ லங்கா- யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை, 78, லெஸ்லி ரணகல மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xviii, 358 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9043-46-3.

தெற்காசிய நாடுகளிலுள்ள பாடசாலைகளில் சமாதானக் கல்வியை அறிமுகம் செய்யும் பொருட்டு யுனெஸ்கோ ஸ்தாபனம் இந்த ஆசிரிய வழிகாட்டி நூலைத் தயாரித்து வழங்குகின்றது. இந்நூல் சமாதானக் கல்வித்திட்ட விடயங்களையும் அவை சம்பந்தமான கருத்திட்டங்-



படிப்பகம்

www.padippakam.com



களையும் தெளிவுபடுத்துகின்றது. பாடசாலைகளில் சமாதானப் பண்புகளின் தரத்தை எப்படிக் கட்டி வளர்ப்பதென்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. பாடசாலைகளிலும் வகுப்பறைகளிலும் மாணவர்களுக்கிடையே சமாதானத்தின் குறிக்கோள்களை வளர்த்தெடுப்பதற்கான பல வழிமுறைகளை முன்வைக்கின்றது. பாடநெறிகளுக்கூடாக சமாதானத்தை அறிமுகம் செய்வதற்கான பல வழிகளைக் காட்டுகின்றது. ஒவ்வொரு ஆசிரியரும் எப்படி சமாதானத்தைப் போதித்து வளர்த்தெடுக்கலாம் என்பதையும் விளக்கப்படுத்துகின்றது.

## 3243

**சுனாமியினால் பாதிப்புற்ற பாடசாலைகளை முகாமை செய்தல்: புதிய அணுகுமுறையைத் தேடுதல்.** *மா.சின்னத்தம்பி. இராஜகிரிய: அகவிழி, 49/1, மடவெலிக்கட வீதி, 1வது பதிப்பு, ஜூன் 2005. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55, ஈ.ஏ.குரே மாவத்தை).*

*48 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 22x14 சமீ.*

டிசம்பர் 2004இல் ஏற்பட்ட சுனாமி பேரலைத் தாக்கத்தால் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் பாடசாலைகள் பல முழுமையாக அழிக்கப்பட்டும், அவற்றின் செயற்பாடுகள் தடைப்பட்டுமுள்ளன. இந்நிலையில் தமிழ்ச் சமூகத்தில் கல்வித்துறையில் மிக மோசமான நெருக்கடிகள் ஏற்பட்டு பாரதூரமான பின்விளைவுகளை உருவாக்கியுள்ளன. சுனாமியால் பாதிப்புற்ற பாடசாலைகளை முகாமை செய்யும் நோக்கில் புதிய அணுகுமுறைகள் குறித்த தேடல் நமக்கு உடனடித் தேவையாகவும், அவசியமாகவும் உள்ளன. இந்நூல் இத்தேடலுக்கான சில தேவைகளை நிறைவு செய்கின்றது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையின் தலைவராகவும், கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி இணைப்பாளராகவும் பணியாற்றியவர்.

## 3244

**தமிழர் உளவியலும் கல்வியும்.** *சபா. ஜெயராசா. யாழ்ப்பாணம்: சபா. ஜெயராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2001. (நல்லூர்: பொஸ்கோ பதிப்பகம்).*

*(6), 138 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.*

யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளையும், முதியோர்களிடத்துப் பெறப்பட்ட தகவல்களையும் சமூக



படிப்பகம்

www.padippakam.com



மானுடவியல் ஆதாரங்களையும் இலக்கியங்களையும் அடிப்படை-யாகக் கொண்டு தமிழரின் சமூக உளவியலையும் கல்விச் செயற்பாடு-களையும் கண்டறியும் ஒரு முன்னோடி நடவடிக்கையாக இந்நூல் அமைகின்றது.

## 3245

**தேடல்: சில முயற்சிகள்.** எஸ்.ஏ.ஐ.மத்தியூ. மட்டக்களப்பு: அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியூ, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (மட்டக்களப்பு: புனிதவளனார் கத்தோலிக்க அச்சகம்).

(4), 157 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.

கல்வியின் பரிமாணம், பாடசாலைகளின் நிர்வாகம், ஆசிரியர்களின் கடமைப்பாங்கு, மாணவர்களின் உளவிருத்தி, என்பன பற்றி அவரால் எழுதப்பட்ட பல சிறப்புக் கட்டுரைகளும் கல்விப் பணிகளுக்-கென்றே தம் வாழ்க்கைக் காலத்தைக் கரைத்த சிந்தனையாளர்கள் பற்றி ஆசிரியர் எழுதிய ஆழமான வாழ்க்கைக் குறிப்புகளும் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

## 3246

**நினைவாற்றலை வளர்த்தல்: மாணவர், ஆசிரியருக்கான ஒரு வழிகாட்டி நூல்.** சீதா சாந்தசீலி சமரசிங்க (சிங்கள மூலம்), எம்.எச்.எம்.யாக்கூத், எம்.எச்.எம்.ஹசன் (தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, மாசி 2005. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

viii, 128 பக்கம், கருத்தோவியங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9429-65-5.

நினைவாற்றலைப் பயிற்சி மூலம் வளர்த்துக்கொள்ளத் தேவையான செயற்பாடுகளையும், விளையாட்டுக்களையும் முப்பத்தியொரு தலைப்புக்களில் முன்வைக்கும் நூல் இது. ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஞாபகசக்தியை மேம்படுத்திக்கொள்வதற்கு ஏற்ப உத்திகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. சிங்கள மொழியிலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்ட இந்நூலின் மூல ஆசிரியர் தேசிய கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் கல்வித்துறைப் பணிப்பாளர். கல்வி உளவியல் விரிவுரையாளர்.



படிப்பகம்

www.padippakam.com



### 3247

**பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்.** ஸ்டெலா வொஸ்னியாடோ (மூலம்), சோ.சந்திரசேகரன் (தமிழ் மொழிப் பதிப்பாசிரியர்), புஷ்பா சிவகுமாரன் (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு குமரன் பதிப்பகம்)

62 பக்கம், விலை: இந்திய ரூபா 30., இலங்கையில் ரூபா 90., அளவு: 22x15 சமீ., ISBN: 955-9429-69-8.

கல்விசார் நடைமுறைகள் கைந்நூற்தொடர் வரிசையில் ஏழாவது நூல் இது. இந்நூலில் செயலூக்கத்துடன் ஈடுபடுதல், சமூகப் பங்குபற்றல், அர்த்தபூர்வமான செயற்பாடுகள், முன்னர் பெற்ற அறிவை புதிய தகவல்களுடன் தொடர்பு படுத்துதல், உபாயம் சார்ந்ததாக இருத்தல், சுய ஒழுங்கில் ஈடுபடுதலும் சிந்தித்தலும், முன்னர் பெற்ற அறிவை மீள் கட்டமைப்புச் செய்தல், மனப்பாடஞ் செய்வதை விட விளங்கிக் கொள்ளுதலைக் குறிக்கோளாகக் கொள்ளுதல், இடமாற்றஞ் செய்யக் கற்பதற்கு மாணாக்கருக்கு உதவுதல், பயிற்சி செய்வதற்கு நேரத்தைச் செலவிடுதல், அபிவிருத்திசார் வேறுபாடுகளும் தனி ஆள் வேறுபாடுகளும், தூண்டப்பட்ட கற்போரை உருவாக்குதல் ஆகிய அம்சங்கள் விவாதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக வாசிப்பிற்கு வழிகாட்டும் துணை நூற்பட்டியல் ஒன்றையும் இந்நூல் கொண்டுள்ளது.

### 3248

**மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகளின் 2001ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்: ஒரு மீள்பார்வை.** கல்வி அபிவிருத்திப் பிரிவு, மபாஸ் ஹஜ் டிரவல்ஸ். காத்தான்குடி 05: மபாஸ் பதிப்பகம், மபாஸ் ஹஜ் டிரவல்ஸ் - கல்வி அபிவிருத்திப் பிரிவு, 97/3 பழைய வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (உடத்தலவின்ன 20802: அச்சீட்டுப் பிரிவு, சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே).

32 பக்கம், வரைபடங்கள், புள்ளிவிபரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

இந்நூலில் மட்டக்களப்பு கல்வி வலய முஸ்லீம் பாடசாலைகளின் 2001ம் ஆண்டுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்-பட்டுள்ளன. இதன் வாயிலாக இப்பிரதேசக் கல்வித்தரம் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com



கணிப்பீடொன்று பெறமுடிந்துள்ளது. கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் தொகுக்கப்பட்டு அறிக்கை வடிவில் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டுவந்த போதிலும், இதுபற்றிப் பொதுமக்கள் தமக்குரிய எளிய வழியில் அவற்றைப் புரிந்துகொள்ளக்கூடியவகையில் நூலுருவில் ஆய்வுகள் வெளிவருவதைக் காண முடிவதில்லை. அந்த வகையில் இதுவொரு முன்னோடி முயற்சியாகும்.

**மேலும் பார்க்க: *3343, 3897***

## 370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்

### 3249

**அருணோதயம்.** வி.கந்தவனம், ப.சிதம்பரசிவன் (மலர்க்குழு). கனடா: அளவெட்டி அருணோதயக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு,1995. (கனடா: சங்கர் அச்சகம்).

*80 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28X21.5 சமீ.*

அளவெட்டி அருணோதயக் கல்லூரி 1994ம் ஆண்டு நூற்றாண்டு விழாவை தாயகத்தில் கொண்டாடியது. அதனையொட்டி கனடா அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வெளியிட்ட நூற்றாண்டுவிழா மலர். கல்லூரியின் வரலாறு, வளர்ச்சி தொடர்பான கட்டுரைகள் மட்டுமின்றி அளவெட்டி ஊரைப்பற்றிய சிறப்புக்களையும் இம்மலர் பேசுகின்றது.

### 3250

**அறிவொளி.** தயாநிதி லோகநாதன் (இதழாசிரியர்). வவுனியா: புதுக்குளம் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, 2004. (வவுனியா: ஜெய்னிகா அச்சகம்).

*176 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5X18 சமீ.*

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் ஆண்டுமலர் இது. ஆசிரியர், மாணவர்களின் படைப்புக்களைத் தாங்கி முதலாவது மலராக இது வெளிவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3251

**இந்து தீபம்: நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்.** மலர் ஆசிரியர் குழு. கோண்டாவில்: யா/ இந்து மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம் சாந்தி அச்சகம்)

(78) பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24X18.5 சமீ.

ஆறுமுகநாவலர் காட்டிய வழியில் பிரமஸ்ரீ வேங்கடாசல ஐயர் அவர்களால் 1878 இல் யாழ்ப்பாணத்தின் கோண்டாவில் பகுதியில் உருவாக்கப்பட்டது. நூற்றாண்டு நிறைவு காணும் இக்கல்விக்-கூடத்தின் சிறப்பு மலரின் மலராசிரியர் குழுவில், பொறுப்பாசிரியராக திருமதி அ.தனேஸ்வரன் அவர்களும், நிர்வாக ஆசிரியராக திரு.கா.தம்பிராசா அவர்களும், மாணவர் பிரதிநிதிகளாக செல்வி ப.ரஜனி, செல்வன் பா.இரகுதரன் அவர்களும் இடம்பெற்றுள்ளார்கள். பாடசாலையின் நூற்றாண்டுக் கால வளர்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவுகளும், ஆசிரியர், மாணவர்களின் ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

### 3252

**உந்து சக்தி: விஞ்ஞான மன்ற சிறப்புமலர்.** மஸீதா புன்னியாமீன், மப்ரூஹா அபூபக்கர் (இதழாசிரியர்கள்). வத்தேகம: வத்தேகம, தெல்தெனிய வலய விஞ்ஞான மன்றம், வலயக் கல்விப் பணிமனை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், இல.14, உடத்தலவின்ன மடிகே).

xvi, 48 பக்கம், விலை: இலவசம், அளவு: 25X18.5 சமீ.

வத்துகாம- தெல்தெனிய வலய (தமிழ்ப் பிரிவு) விஞ்ஞான ஆசிரியர் கழகத்தின் முயற்சியால் வெளியிடப்பட்ட 2005ம் ஆண்டுக்கான விஞ்ஞானதினச் சிறப்பு மலர் இதுவாகும். இதில் இப்பிரதேச மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 3253

**56வது ஆண்டு நிறைவு 1947-2003: பரிசளிப்பு விழா சிறப்பு மலர்.** தா.சிவானந்தம், ஆர்.நவரெட்ணம் (இதழாசிரியர்கள்). திருக்-கோணமலை: விபுலானந்தா கல்லூரி, 1வது பதிப்பு, 2003.



படிப்பகம்

www.padippakam.com



(திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, நீதிமன்ற வீதி).

135 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5X17.5 சமீ.

திருக்கோணமலை அ.த.க. வித்தியாலயம் என்ற பெயரில் 1947இல் ஆரம்பமான தி/விபுலானந்தர் கல்லூரியின் 56ஆவது ஆண்டு நிறைவைப் பூர்த்திசெய்யும் வகையிலும் அதன் 2003ம் ஆண்டு பரிசளிப்பு விழாவை முன்னிட்டும் வெளியாகியுள்ள கல்லூரி மலர். 1998 முதல் ஏ.செல்வநாயகம் அவர்களின் தலைமைத்துவத்தில் இயங்கிய காலகட்டத்தில் அப்பாடசாலையின் வளர்ச்சி, மாணவர்களின் அறிவின் விருத்தி என்பன இதிலுள்ள கட்டுரைகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## 3254

**ஒரு தனிமனித நிறுவனம்: வே.வ.நினைவுப் பேருரை.** நாகலிங்கம் சண்முகலிங்கன். சுன்னாகம்: மதி வெளியீடு, மதி அக்கடமி, பலாலி வீதி, ஊரெழு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1988. (ஏழாலை: மகாத்மா அச்சகம்).

12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12.5 சமீ.

வேல்-அமுதன் அவர்களால் உருவாக்கப்பட்ட மதி அக்கடமி என்ற கல்வி நிறுவனத்தின் வரலாற்றைக் கூறும் சிறு நூல். 1983 இனக் கலவரத்துடன் யாழ்ப்பாணம் வந்து, குரும்பசிட்டியில் மதி அக்கடமி என்ற தனியார் கல்வி நிறுவனம் தொடக்கப்பட்ட காலத்திலிருந்து அதன் வளர்ச்சி, அதன் பிற பணிகளாக மேற்கொள்ளப்பட்ட மதி நூலகம், மதி வெளியீட்டகம், மதி கலைஞர் வட்டம், மதி பல்பொருள் அங்காடி என்பன பற்றியும், விளக்கும் வரலாற்றுப் பதிவு இது.

## 3255

**கதிராளி 2004.** அகளங்கன் (மலராசிரியர்). வவுனியா: தமிழ் மத்திய மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, ஜுன் 2004. (வவுனியா: ஜெய்நிகா கிராப்பிக்ஸ்).

vi, 210 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25X17.5 சமீ.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய ஆண்டு மலர். கண்ணின் கருமணி – கதிராளி எனப்படுகின்றது. 1996இல் முதலாவது கதிராளி



படிப்பகம்

www.padippakam.com



வெளியிடப்பட்டது. அதுவே கல்லூரியினால் வெளியிடப்பட்ட முதலாவது பரிசளிப்பு விழாமலருமாகும். 2004க்குரிய இந்த மலரிலும் வழமையான வாழ்த்துச் செய்திகளுடன் மாணவர் ஆசிரியரின் ஆக்கங்கள், கல்லூரி வாழ்வில் அவர்கள் ஈட்டிய சாதனைகள் என்பன பதிவாகியுள்ளன.

## 3256

**கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் வரலாறும் வளர்ச்சி-யும்.1971-1999.** M.M.காஸிம். கல்முனை: கல்லூரி வெளியீட்டுப் பணியகம், மஹ்மூத் மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1999. (சாய்ந்தமருது: ஸ்டார் ஒப்செட் பிரின்டர்ஸ்).

(12), 81 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5X14 சமீ.

கிழக்கிலங்கையின் சாய்ந்தமருது பிரதேசத்தில் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்டு, நீண்டகால வரலாற்றையுடைய பாடசாலையான சாய்ந்தமருது அல்-அமான் பாடசாலை 1971.01.05ம் திகதி கல்முனை மஹ்மூத் மகளிர் மகாவித்தியாலயமாக பெயர்மாற்றம் பெற்று புனரமைக்கப்பட்டது. அக் கல்லூரியின் வரலாற்றையும், வளர்ச்சியையும் ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்-ஹாஜ் எம்.எம்.காசிம் அவர்கள் இந்நூலில் பதிவாக்கியுள்ளார்.

## 3257

**கலைச்செல்வி.** ந.கோணேசராஜா (இதழாசிரியர்). அ.ஜெயப்பிர-தாபன் (துணை இதழாசிரியர்). மட்டக்களப்பு: முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, 2005. (மட்டக்களப்பு: கணா டிஜிட்டல் வீடியோவிஷன், 143, திருக்கோணமலை வீதி).

xvi, 123 பக்கம், வண்ணப் புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5X18 சமீ.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 2004/2005க்குரிய மலர். முன்னைய வருடம் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுநாமிப் பேரலை விளைத்த பாதிப்புக்களைத் தாங்கிய அட்-டைப்படத்துடன் வெளியாகியுள்ள இம்மலரினுள்ளே 17 கட்டுரை-களும், 7 கவிதைகளும், 3 சிறுகதைகளும், இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3258

**கலைச்செல்வி: திமிலைத்துமிலன் மணிவிழாச் சிறப்பு மலர்.** ப.தேவரஞ்சன். (மலராசிரியர்). மட்டக்களப்பு: முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, நவம்பர் 1993. (மட்டக்களப்பு: Jescom Printers, No.1, Jesuit Street).

L, 124 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26X18.5 சமீ.

25.11.1993இல் வெளியிடப்பட்ட இம்மலரின் முதற் பகுதியில் (50 பக்கங்கள்) திமிலைத் துமிலன் பற்றிய கட்டுரைகளையும், பிற்பகுதியில் ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் பலவினக் கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆசிரியர் கலாசாலையின் தமிழ்ப் பேராசானாகப் பணியாற்றிய கவிமணி திமிலைத்துமிலன் (சி.கிருஷ்ணபிள்ளை) அவர்களின் மணிவிழாவையொட்டி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. அன்புமணி, கவிஞர் சோமலிங்கம், சி.மௌனகுரு, உதயணன், சா.இ.கமலநாதன், க.யோகநாதன், செ.சிவானந்ததேவன், எஸ்.எதிர்மன்னசிங்கம் ஆகியோர் திமிலைத்துமிலன் பற்றிய மனப்பதிவுகளை இம்மலரில் பதிவுசெய்துள்ளனர்.

## 3259

**கலைச்செல்வி: விபுலானந்தர் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 1992.** த.சகா தேவராஜா (மலராசிரியர்). மட்டக்களப்பு: முத்தமிழ் மன்றம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (மட்டக்களப்பு: St. Sebastian Printers).

xvi, 184 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24X19 சமீ.

மட்டக்களப்பின் உயர் கல்விக்கூடமான ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தின் வருடாந்த சஞ்சிகையான கலைச்செல்வியின் 1992ம் ஆண்டுக்கான சிறப்பிதழ் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்டது. விபுலானந்தர் தொடர்பான பல கட்டுரைகளுடன் வழமையான கலாசாலை மலரின் பொதுவான படைப்பிலக்கியங்கள், பாடவிதானம் சார்ந்த கட்டுரைகள், புகைப்படங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3260

**கலைஞானம்.** க.சிவராசா (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: கல்விக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீனா அச்சகம், 215, 2ம் குறுக்குத் தெரு)

(6), 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25X19 சமீ.

கல்வியியலாளர்களுக்கும் கல்வித்துறையில் ஆர்வமுள்ளோருக்கும் பயன்தரும் ஆக்கங்களைக் கொண்ட கலைஞானம் நான்காவது இதழ் இதுவாகும்.

### 3261

**கலைமலர் 2004-2005.** ம.பிரபாகரன் (இதழாசிரியர்), சி.யசோதா (துணை இதழாசிரியர்). கோப்பாய்: முத்தமிழ் மன்றம், ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

xvi, 148 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29X20 சமீ.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட மலர் இது. 80 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியர் உலகில் பணியாற்றிவரும் பாரம்பரியம் மிக்க கலாசாலையின் வருடாந்த மலர் இதுவாகும். ஆசிரிய மாணவர்களின் உணர்வுகளுக்கும், தேடல்களுக்கும் படைப்புத்திறன்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ள இம்மலர் பழமையையும் புதுமையையும் தழுவிய ஆக்கங்களுடன் நவீன தொழில்நுட்பம் பற்றிய சமகாலத் தேவைகளுக்கும் இடமளித்துள்ளது. படைப்பிலக்கியங்கள், உரைச்சித்திரங்கள், போன்றவையும் இடம்பெற்றுள்ளன.

### 3262

**சூழல் முரசு 1999.** மே.ம.கருணைநாயகம். யாழ்ப்பாணம்: விவசாய விஞ்ஞானக் கழகம், பரியோவான் கல்லூரி, 1வது பதிப்பு, 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(12), 36 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25X18.5 சமீ.

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றாடலுக்கான உதவி அமைப்பின் அனுசரணையுடன் வெளியிடப்படும் இம்மலர், யாழ்ப்பாணம் புனித



படிப்பகம்

www.padippakam.com


பரியோவான் (St. Patricks) கல்லூரியின் விவசாய விஞ்ஞானக் கழக ஆசிரியர், மாணவர்களின் கட்டுரைகளைக் கொண்டது. புவி மாசடைதல் என்ற கருப்பொருளின் கீழ் சூழலைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஊட்டும் 17 கட்டுரைகள் இம்மலரில் இடம்பெறுகின்றன.

## 3263

**தமிழோசை 1988-1989.** க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: மேர்க்குரி அச்சகம், 40/1 நாவலர் வீதி).

xiv, 95 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

பேராசிரியர் அ.துரைராஜா அவர்கள் துணைவேந்தராகப் பணியாற்றிய காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினால் உருவாக்கப்பட்ட இம்மலரில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களின் 16 பன்முகப் படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இலக்கியமும் இலக்கணமும், இலக்கியத்தில் மருத்துவம், இளைஞர் சுகாதாரம், ஓசோன் படை, ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள், இலங்கையின் தொழிற்சங்கப் போராட்டங்கள், சோழர் காலத் தமிழ் நாடகங்கள், பழமொழிகள், காத்தவராயன் நாடகம், பெண்ணியம் ஆகிய விடயப் பரப்புக்களில் இக்கட்டுரைகள் ஆக்கப்பட்டுள்ளன.

## 3264

**பரமானந்தம்: 75 ஆண்டு நிறைவுவிழா மலர்.** மு.க.சுப்பிரமணியம் (மலர்க் குழுத் தலைவர்), கனக. செந்திநாதன், வ.நடராசா, த.கதிரவேலு, ஏ.ரி.பொன்னுத்துரை (மலர்க்குழுவினர்). குரும்பசிட்டி: பொன் பரமானந்தர் வித்தியாலயம், 1வது பதிப்பு, நவம்பர் 1975. (யாழ்ப்பாணம்: சக்தி அச்சகம், ஸ்ரான்லி வீதி).

xxii, 50 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x16.5 சமீ.

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பொன். பரமானந்தர் வித்தியாலயத்தின் 75 ஆண்டுக்கால வியத்தகு வளர்ச்சியை, அதன் சேவைகளை, குரும்பசிட்டியின் சிறப்புக்களை, அக்கிராமத்தின் நலம் காத்த பெரியோரை, இம்மலர் பதிவுசெய்கிறது. இவ்வித்தியாலயத்தின்


படிப்பகம்

www.padippakam.com



தாபகர் அமரர் பொன் பரமானந்தர் அவர்களின் பெயரே இம்மலர்த் தலைப்பாகவும் வெளியிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

## 3265

**பரமானந்தம்: குரும்பசிட்டி பொன் பரமானந்தம் மகா வித்தியாலயம் நூற்றாண்டு நிறைவு மலர்.** ஆ.சி.நடராஜா, ஏ.ரி.பொன்னுத்துரை, ஆ.மகாதேவன் (மலர்க்குழு). குரும்பசிட்டி: பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஜுலை 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 108 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25X19 சமீ.

1900 அன்று ஆரம்பமான குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவைக் (1900-2000) குறிக்கும் முகமாக 1.7.2001 இல் வெளியிடப்பட்ட மலர். முன்னதாக 75 ஆண்டு நிறைவினைக் குறிக்குமுகமாக அதன் தலைமை ஆசிரியராகவிருந்த வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் முயற்சியால் 1975இல் வெளியிடப்பட்ட மலரில் உள்ள சில ஆக்கங்களுடன், மேலதிகமான பதிவுகளுடனும் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

## 3266

**பவள நிலா.** மலர் வெளியீட்டுக் குழு. கட்டுகஸ்தொட்டை: ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன 20802, 1வது பதிப்பு, 2000. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ்).

148 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5X22 சமீ.

அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாக 1923இல் உதயமாகி பரிணாம வளர்ச்சி பெற்று 1973இல் ஜாமியுல் அஸ்ஹர் மகாவித்தியாலயமாகித் தற்போது (1993 முதல்) ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியாக வளர்ச்சி பெற்றிருக்கும் உடத்தலவின்ன பிரதேசத்தின் பிரபல முஸ்லிம் பாடசாலையின் பவளவிழாவை (1923-1998) முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள சிறப்பு மலர். ஆசிரியர்கள், மாணவர்களின் படைப்புக்களுடன் வெளிவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3267

**பூபாள ராகங்கள் 2005.** மகாலிங்கம் சுதாகரன் (பிரதம ஆசிரியர்). ஐக்கிய இராச்சியம்: யாழ்./ கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கொம்மந்தறை பழைய மாணவர் சங்கம், செல்வ சிகரம், 72, Minterne Waye, Hayes, Middlesex, UB4 OPF, 1வது பதிப்பு, ஜுலை 2005. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).

224 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x15 சமீ.

பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் 6வது ஆண்டாக 02.07.2005 அன்று நடத்தப்பட்ட பூபாளராகங்கள் கலை நிகழ்ச்சின்போது வெளியிடப்பட்ட மலர். வர்த்தக விளம்பரங்களும், வாழ்த்துச் செய்திகளும், கலை இலக்கிய சமூக அறிவியல் கட்டுரைகளும், புகலிட அனுபவங்களும் செறிந்த ஆக்கங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 3268

**முகை.** செ.சோபிகா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: விஞ்ஞான மன்றம், யாழ். இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

xiv, 77 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்ற மாணவர்களின் அறிவியல் கட்டுரைகளைக் கொண்ட படைப்புக்களைக் கொண்ட முதலாவது மலர்.

## 3269

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: நூற்றாண்டு மலர், 1890-1990.** ச.சத்தியசீலன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி)

182 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

நூற்றாண்டு விழா கொண்டாடும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் (1890-1990) வரலாறு, அதன் மாணவர் சங்கப் பணிகள், மற்றும் பாடசாலையின் பழைய மாணவர்களின் மனப்பதிவுகள் என்று



படிப்பகம்

www.padippakam.com



பல்வேறுபட்ட விடயங்கள் இம்மலரில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

### 3270

**வெண்சங்கு: 2004-2005.** ஞானக்குமரன், துசியந்தன், கௌசி பாலசுந்தரம் (தொகுப்பாசிரியர்கள்). வவுனியா: அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கம், வவுனியா மாவட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், குடியிருப்பு).

136 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5X17.5 சமீ.

வவுனியா மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையாக **வெண் சங்கு** வெளிவருகின்றது. சமகால அறிவியல் புதினங்களை மாணவர் நலன் நோக்கிய கட்டுரைகளாக இம்மலரில் காணமுடிகின்றது. வவுனியா மாவட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான பல நடவடிக்கைகளை இந்த அமைப்பு மேற்கொண்டு வருகின்றது. அதன் நோக்கங்களை ஈடுசெய்யும் பாங்கில் இதிலுள்ள கட்டுரைகளும் அமைகின்றன.

## 381 வர்த்தகம்

### 3271

**வணிகக் கல்வியும் கணக்கீடும். தரம் 11.** அ.சிவநேசராஜா. கொழும்பு 10: ஆசிரியர், 33 ¼, தேசிய வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: கௌரி பிரிண்டர்ஸ், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

vi, 235 பக்கம், விலை: ரூபா 165., அளவு: 21.5X14 சமீ.

இந்நூலின் ஒவ்வொரு பாட அலகிலும் கற்றல் தேர்ச்சிகள், விடய உள்ளடக்கம், கட்டமைப்பு வினாக்கள், பல்தேர்வு வினாக்கள், ஒப்படை வினாக்கள் என்பன ஒருவித கட்டமைப்பில் தரப்பட்டுள்ளன. கற்றல் தேர்ச்சி எந்த வகையில் அடையப்பட்டுள்ளன என்பதை ஆசிரியர்கள் கணித்துக்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு அலகிலும் அலகுப் பரீட்சைகள் இடம்பெறுகின்றன. தரம் 11 மாணவர்களின் புதிய பாடத்திட்டத்தை இந்நூல் அடிப்படையாகக் கொண்டது. இந்நூலாசிரியர், தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகத்துறைச் செயல்திட்ட அதிகாரியாவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3272

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும். தரம் 10, 11: பாகம் 1.** அ.சிவநேசராஜா. மஹரகம: அ.சிவநேசராஜா, வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: கௌரி பிரிண்டர்ஸ், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

vii, 174 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 22x14.5 சமீ.

இந்நூலாசிரியர், தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகத்துறைச் செயல்-திட்ட அதிகாரியாவார். பாடநூலாக்கத்தில் உள்நாட்டிலும் வெளி-நாடுகளிலும் பயிற்சிபெற்று அனுபவமுடைய இவர் வணிக நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். கற்றல் குறிக்கோள்களை நிறைவு-செய்யும் சீரான அணுகுமுறைகள், தொடர்ச்சியான எண்ணக் கருவாக்கத்தை விருத்தி செய்யும் சீரான உள்ளடக்கம், அலகு வாரியான தெளிவான வினா-விடை, பரீட்சைக்குத் துணைசெய்யும் மாதிரி வினா-விடைகள், தற்கால நிகழ்வுகளை விளக்கும் நடைமுறை விடயங்கள் என்பன அந்நூலின் சிறப்பம்சங்களாகும். இந்நூலில் ஒவ்வொரு அலகிற்கும் கட்டமைப்பு வினாக்கள் (Structured Questions), பல்தேர்வு வினாக்கள் (MCQ), சிறு வினாக்கள் என்பவற்றை உள்ளடக்கிய புறவய வினாக்கள் (Objective Questions) என்பன தற்காலப் பரீட்சை வினா அமைப்பைப் பின்பற்றித் தெளிவாக விடைகளுடன் தரப்பட்டுள்ளன.

## 3273

**வளரும் வணிகம்.** பொன்.குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (Canada: Bits R Bytes IT solutions).

x, 218 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

குவியம் என்ற இணையத்தள மும்மொழிச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான பொன் குலேந்திரன் பௌதிகத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். தொலைத்தொடர்பு, பொறியியற்துறை, சந்தைப் படுத்தல் துறைகளிலும் பட்டம் பெற்றவர். வணிகத்தின் வளர்ச்சிக்கு உதவும் காரணிகள் எவை என்பதைச் சுவையாகச் சிறு உதாரணங்கள் மூலம் இந்நூலில் விளக்கியுள்ளார். 26 தமிழ்க் கட்டுரைகளும், 11 ஆங்கிலக் கட்டுரைகளும் இதில் அடங்குகின்றன. வெறும் அனுபவம் மட்டும் வணிகத்துக்குப் போதாது என்றும், சந்தைமுறைக்கோட்பாடு, சந்தை ஆராய்ச்சி, வாடிக்கையாளர் சேவை, திட்டமிடல், சேவைத்-தரம், தொழில்நுட்பம் என்பன கலந்த கலவையுமே வணிக



படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சிக்கு உரமாகின்றது என்பதை இந்நூலில் தெளிவாக விளக்குகின்றார்.

## 390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

### 3274

**நாட்டார் வழக்காற்றியல்: ஓர் அறிமுகம்.** கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 56/5, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

xii, 172 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1071-00-x.

நாட்டார் வழக்காற்றியலைப் பொதுநிலையில் அறிமுகம் செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது. நாட்டார் வழக்காற்றியல், நாட்டார் வழக்காற்றியல் வகைப்பாடு, கள ஆய்வு, வாய்மொழி வழக்காறுகள், நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புறச் சமயம், நாட்டுப்புற மருத்துவம், நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புற விளையாட்டு, பெயராய்வு என 10 இயல்களில் இந்நூலின் விடயப்பரப்புகள் அணுகப்பட்டுள்ளன.

### 3275

**வதனமார் வழிபாடு: ஒரு மதிப்பீடு.** ஈழத்துப் பூராடனார். (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, புரட்டாதி 2000. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், # 3, 1292, Sherwood Mills, Mississauga, Ontario, L5V 1S6).

72 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21x14 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழக்கிலிருந்து வந்த வதனமார் வழிபாடு பற்றிய நாட்டாரியல் ஆய்வுக்கான முன்னோடி நூல் இதுவாகும். கிழக்கிலங்கைப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பவர்கள் கைதொழும் காவல் தெய்வமாகக் கருதப்படும் “வதனமார்” தொடர்பான சடங்குகள், பட்டிகளில் பட்டியின் காவல் தெய்வங்களுக்குச் செய்யும் வழிபாட்டுச் சடங்குகள் போன்ற நடைமுறைகள் பற்றி நாட்டாரியல் பார்வையில் இச்சிறுநூல் பேசுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3276

**வரவும் வாழ்வும்: மலையக நாட்டாரியல் சிந்தனைகள்.** சு.முரளீதரன். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், இல.7, ரொசிட்டா பல்கூட்டுச் சந்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (ஹட்டன்: காயத்திரி பிரின்டர்ஸ், இல.50, டன்பார் ரோட்).

(2), 62 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 19.5x14 சமீ., ISBN: 955 8589 02 0

மலையக நாட்டாரியல் கூறுகளான கூத்துக்கள், வழிபாடுகள், நாட்டார் பாடல்கள் பற்றிய காத்திரமான புதிய சிந்தனைகள், தேடல்கள் கொண்டதாக இந்நூல் காணப்படுகின்றது. வரவும் வாழ்வும் மலையக கலாச்சாரம் குறித்த பார்வை, நாட்டாரியல் வெளிச்சத்தில் மலையகத்தை அணுகுதல், மலையகத்தின் காமன் கூத்து சில அர்த்தங் கோடல்கள், மலையக இதிகாச கலாச்சாரத்தின் ஒரு கூறு: விவரணப் பார்வையில் அருச்சுனன் தபசு, தோட்டப் பகுதியில் மாரியம்மன் வழிபாடு: சிறுதெய்வ மரபும் பெருந்தெய்வ மரபும், கடவுள்களை சாட்சியாகக் கொண்டு மனிதர்கள் கைகுலுக்கிக் கொள்ளல், தொழிற் சமூக உளநிலைகளும் மலையக நாட்டார் பாடல்களும் ஆகிய ஏழு கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

## 392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள்

### 3277

**மக்கட் பெயர் அகரவரிசை.** தமிழீழம்: தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, மே 1992. (யாழ்ப்பாணம், அச்சக விபரம் அறியமுடியவில்லை).

(2), 23 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13சமீ.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதல் முயற்சியாக தமிழ் மக்களின் தனித்தன்மை – சிறப்பைப் பேணும் வகையில் தூய தமிழ்ப் பெயர்களைக் கொண்ட சிறுநூல்களை வெளியிட்டனர். அத்தொடரில் வெளிவந்த இந்நூலில், பெண்பால், ஆண்பால் பெயர்கள் என வகுக்கப்பட்ட ஆயிரம் தமிழ்ப் பெயர்கள் இச்சிறு நூலில் இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# 392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள்

## 3278

**தமிழர்-யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்.** மனோன்மணி சண்முகதாஸ். யாழ்ப்பாணம்: பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (கொழும்பு: Kribs Printers).

149 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

நூலாசிரியர் தோக்கியோ Gakushuin பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராக இருந்து கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்-யப்பானிய மொழிகளுக்கிடையேயான தொடர்பு பற்றிய ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்நூலில் தைப்பொங்கல் பற்றிய செய்திகள், பழைய இலக்கியச் செய்திகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு தைப்பொங்கலின் தொடக்க நிலைபற்றிய சில கருத்துக்களை முன்வைக்கும் "தமிழர் யப்பானிய வாழ்வில் தைப்பொங்கல்" என்ற கட்டுரையையும், ஆய்வுநிலைத் தரவுகளையும் வளர்ச்சிப்போக்குகளையும் ஆய்வின் விமர்சன நிலைப்பாட்டையும் விளக்குவதாய் அமைந்த "தமிழ்மொழியும் யப்பானிய மொழியும்-ஒப்பீட்டாய்வும் வரலாறும், வளர்ச்சி நிலைகளும்" என்ற கட்டுரையையும் கொண்டுள்ளது.

## 3279

**திருமண பந்தத்தில் கணவன் மனைவி.** கலையரசன். (இயற்பெயர்: எஸ்.எல்.லரீப்). இறக்காமம்: மறுமலர்ச்சி ஒன்றியம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஒப்செட்).

iv, 99 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x13 சமீ.

திருமண வாழ்வு பற்றியும், அதன் தன்மைகள் பற்றியும், அதனூடே எழும் நெறிவு, சுழிவுகள் பற்றியும் "திருமண பந்தத்தில் கணவன் மனைவி" எனும் இந்நூல் சித்திரிக்கிறது. இதன் நூலாசிரியர் எஸ்.எல்.லரீப் (கலையரசன்) கிழக்கு மாகாணத்தில் இறக்காமம் கிராமத்தைச் சேர்ந்தவர்.

## 3280

**திருமறையும் திருமணமும்.** எம்.எஸ்.வசந்தகுமார். கொழும்பு: Back to the Bible, சத்திய வசனம், த.பெ.இல. 1012, 1வது பதிப்பு, ஜுலை 1994. (கொழும்பு 13: மில்டன் என்டர்பிரைஸ்).



படிப்பகம்

www.padippakam.com



(2), 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X13.5 சமீ.

இன்றைய கிறிஸ்தவ உலகில் திருமணம் பற்றிய பலவிதமான கருத்து முரண்பாடுகளும் தப்பபிப்பிராயங்களும் நிலவுகின்றன. இவை சாதாரண விசுவாசிகளினதும், சபைத் தலைவர்களினதும், ஊழியர்களினதும் மனதைக் குழப்புவதோடு சில சமயங்களில், இவர்களைத் தவறான வழியிலும் இட்டுச் செல்கின்றன. இதனால் திருமணம் பற்றி, கிறிஸ்தவர்களின் வேதநூலான திருமறை என்ன கூறுகின்றது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம் என்ற நோக்கில் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலில் திருமணத்தோடு சம்பந்தப்பட்ட பல விடயங்களுக்கு வேதாகமத்திலிருந்து தகுந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பலதார மணம், நெருங்கிய உறவினருடனான திருமணம், அவிசுவாசியுடனான திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் என்பவை போன்ற சர்ச்சைக்குரிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் இலங்கை வேதாகமக் கல்லூரியின் விரிவுரையாளராகவும், சத்திய வசனம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இறைபணியாளராகவும் இருக்கின்றார்.

## 3281

**மரணமும் கடமையும்.** ஏ.எம்.கனி. கட்டுகஸ்தொட்ட: பாஹிமா பப்ளிஷர்ஸ், உடத்தலவின்ன மடிகே, உடத்தலவின்ன, 1வது பதிப்பு, ஜுன் 1976. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

52 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18X12 சமீ.

முஸ்லிம் ஒருவன் மரணித்தால் இஸ்லாமிய மத அடிப்படையில் நான்கு பிரதான கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும். 1. குளிப்பாட்டுதல் (நீரால் கழுவுதல்) 2.கபனிடல் (சடலத்துக்கு ஆடை அணிவித்தல்) 3. தொழுவித்தல் (இதற்காக விஷேட தொழுகை முறை உண்டு), 4. அடக்கம் செய்தல். மரணம் சம்பவிக்குமிடத்து மையித்துக்கு (சடலத்திற்கு) மேற்கொள்ள வேண்டிய மேற்படி கடமைகள் பற்றி இந்நூல் விளக்குகின்றது. இந்நூலாசிரியர் கண்டி மாவட்டத்தில் உடத்தலவின்னையைச் சேர்ந்த மார்க்க அறிஞராவார்.

## 3282

**மரபு தழுவிய திருமண நாண் பூணல்.** செல்லப்பா தியாகராஜா கனகலிங்கம். கொழும்பு 06: ஆசிரியர், 7/3, அருத்தூசா லேன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேற் லிமிட்டெட், இல. 48B, புளுமெண்டால் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



xii, 48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-99126-0-7.

திருமணக் கிரியைகள் என்னும் கிரியா விளக்கத்தை இந்து கலாசார முறைப்படி மக்கள் விளங்கிக் கொள்வதற்கு இலகுவான முறையில் 43 தலைப்புக்களில் திருமண நிகழ்வுகள் குறித்த ஆய்வும், அனுபவத் தொகுப்பும் இந்நூலில் இடம்பெறுகின்றன. நூலுக்குப் பொருத்தமான இடங்களில் திரு.பரமநாதன் தவநேசன் அவர்களின் விளக்கப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

## 395 நாட்டார் கலைகள்

### 3283

**காமன் கூத்து: ஓர் கள ஆய்வு.** சந்தனம் சத்தியநாதன். கண்டி: ஞானம் பதிப்பகம், 19/7 பேராதனை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கம்பொல: அடோப் கிரப்பிக் டிசைனிங், 30, கடுகண்ணாவை வீதி).

47 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-8354-11-2.

மலையகத்தின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான காமன் கூத்து தெய்வபக்தியோடு பின்பற்றப்படும் ஒரு கலையாகும். வாய்மொழி இலக்கியமாகவே மக்கள் பயன்படுத்தி வந்த இக்கலையில் காமன் கூத்துப் பாடல்களுக்கு ஒரு எழுத்து வடிவம் கொடுத்துத் தமது சிந்தனைக்கு எட்டிய வகையில் ஓர் ஆய்வினை இந்நூலாசிரியர் மேற்கொண்டுள்ளார். சங்குவாரி தோட்டத்தின் (கீழ்ப் பிரிவு) காமன்கூத்து ஆசிரியராக இருந்த T.M.பெருமாள் அவர்களிடமிருந்து வாய்ப்பாட்டாகப் பெறப்பட்ட 30 பாடல்களின் அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

## 398 கிராமிய இலக்கியங்கள்

### 3284

**அர்ச்சுனன் தபசு.** அம்பிகை வேல்முருகு. சென்னை 600026: குமரன் பதிப்பகம், 79, முதலாவது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



120 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 32., அளவு: 20X14 சமீ.

மகாபாரதம் உலக இதிகாசங்கள் அனைத்திலும் அளவினில் பெரியது. அர்ச்சுனன் தபசு என்ற இந்நூல் கூறும் கூத்து மகாபாரதத்தில் இடம்பெறும் ஒருசம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. அர்ச்சுனன் தபசு என்ற இக்கூத்து தமிழகத்திலிருந்து வந்து மலையகத் தோட்டத் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது. அம்பிகை வேல்முருகு ஆழமாகவும், அகலமாகவும் இக்கூத்தினை ஆராய்ந்துள்ளார். அர்ச்சுனன் தபசு இலங்கையில் பரவிய வரலாறு, அக்கூத்து அவைக்காற்றப்படும் முறை, அதற்கு மூலாதாரமாக அமைந்த இலக்கியங்கள், அதன் மொழியமைப்புக் கூறுகள், நாடகக் கூட்டமைப்பு, அதில் அமைந்துள்ள சுவைகள், அவற்றினூடாகப் புலப்படுத்தப்படும் வாழ்வியல் அம்சங்கள் முதலானவற்றை இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளார். நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவிவிரிவுரையாளராக இருந்தவேளையில் உருவாக்கப்பட்ட நூல்.

## 3285

**இலங்கை நாட்டுப்புறப் பாடல்கள்.** சுதாராஜ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: பி.வி.ஆர். ஆஃப்செட்).

iv, 144 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18X12.5 சமீ.

கிழக்கிலங்கை முஸ்லீம் கிராமங்களில் வழக்கிலிருக்கும் நாட்டுப்புறப் பாடல்களை விளக்கங்களுடன் தந்துள்ளார். கவிகள், நாட்டுப்புறப் பாடல்கள் என இரு பிரிவுகளில், பெற்றோரின் கொஞ்சுமொழிப் பாடல்கள், கலியாணப்பேச்சு, சிருங்காரப் பாடல்கள், பள்ளுப்பாட்டு, கள்ளுப்பாடல், நொண்டிச்சிந்து, அடுப்பங்கரைப் பாடல், தெம்மாங்கு, பறங்கியர் பாடல், என பல்வேறு வகையான பாடல்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

## 3286

**எஸ்தாக்கியர் நாடகம்.** எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை. யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 7வது பதிப்பு, 1993. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



(8), 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

1884ம் ஆண்டு சன்மார்க்க முன்னேற்றச்சபையை உருவாக்கிய எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் அதன் சார்பாக சன்மார்க்க போதினி என்ற பருவ வெளியீடொன்றையும் தொடக்கியிருந்தார். அதன் பிரசுரத்திற்கென அச்சுவேலியில் 1890இல் தனது வளர்ப்பு-மகனான ஞானப்பிரகாசரின் பெயரில் ஞானப்பிரகாசர் அச்சகத்-தினையும் நிறுவியிருந்தார். வரகவியான இவர் 1886இல் தானே இயற்றிய எஸ்தாக்கியர் நாட்டுக்கூத்தை நாடகமாக மேடையேற்றியும் வந்தார். பின்னர் அந்த அச்சகத்தின் வாயிலாக 1890இல் நூலுருவிலும் அதனைப் பிரசுரித்தார். இதன் ஆறாவது வெளியீடு அச்சுவேலியில் 1928இல் வெளியிடப்பட்டது.

## 3287

**கிராமிய மணம்.** பேராதனை ஷர்புன்னிசா. (இயற்பெயர்: சித்தி ஸர்தாபி) கொழும்பு 01300: பேசும்பேனா வெளியீடு, 5-1/20, சுப்பர் மார்க்கட், கொட்டஹேன, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (Colombo 01300: Quick Graphics Print, 5-1/20 Super Market, Kotahena)

xvii, 56 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 17.5x13 சமீ., ISBN: 955-9510-05-3.

கிழக்கிலங்கை முஸ்லீம் பெண்களிடையே வழிவழியாக வழங்கிவந்த நாட்டார் பாடல்களை 12 கதைகளில் அமைத்து ஒரு நூலாகத் தொகுத்துள்ளார். காதல், ஏக்கம், தாபம், சல்லாபம், இலம்பாடு, என்று கிழக்கிலங்கை மகளிர் அனுபவிக்கும் பாடுகள் இப்பாடல்களில் பண்பாடுகின்றன. 1948 முதல் எழுத்துலகில் பிரகாசிக்கும் இவர் கிழக்கிலங்கைப் பெண் எழுத்தாளர்களின் முன்னோடியாகக் கருதப்படுபவர்.

## 3288

**கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார் பாடல்கள்.** S.முத்துமீரான். நிந்தவூர்: மீரா உம்மா நூல் வெளியீட்டகம், 1வது பதிப்பு, நவம்பர் 1997. (சென்னை 5: Novena Offset Printing Co).

240 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

கிழக்கிலங்கை முஸ்லீம் கிராமங்களில் 1975இலிருந்து 1995வரை தேடியெடுத்த பாடல்களை தாலாட்டுப் பாடல் முதல் வழிநடைச் சிந்து வரை பன்னிரண்டு வகையாகப் பிரித்து இந்நூலில்



படிப்பகம்

www.padippakam.com



வழங்கியுள்ளார். தாலாட்டு, குழந்தைப் பாடல்களும் விளையாட்டும், நகைச்சுவைப் பாடல்கள், நையாண்டிப் பாடல்கள், தொழிற் பாடல்கள், காதற் பாடல்கள், தூதுவிடு பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள், சத்தியப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், பொல்லடிப் பாடல்கள், வழிநடைச் சிந்து என பன்னிரண்டு தலைப்புகளின்கீழ் அவற்றை வகுத்து நோக்குகின்றார்.

## 3289

**கிழக்கிலங்கைக் கிராமியம்.** *றமிஸ் அப்துல்லாஹ். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மார்ச், 2001. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு)*

*(16), 75 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-8250-06-6.*

இது கிழக்கிலங்கை முஸ்லீம்களின் சமூக பண்பாட்டு அம்சங்களின் அடிப்படையிலான ஒரு நோக்கு. தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையில் விரிவுரையாளரான நூலாசிரியர் தாம் வாழும் சூழலில் இவ்வாய்வை விரிவாக மேற்கொண்டுள்ளார். இவர் பல கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று தாம் திரட்டிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தனது கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். இவரது ஆய்வும் நாட்டார் இலக்கியத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அவற்றினூடாக வெளிப்படும் பல்வேறு பண்பாட்டு அம்சங்களையும் சிறப்பாக இனம்காட்டுகின்றார். கிழக்கிலங்கைக் கிராமிய இலக்கியத்தில் முஸ்லீம்களின் பண்பாட்டுச் செல்வாக்கு என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சிறப்புக் கலைமாணி இறுதித் தேர்வுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆய்வு சில மாற்றங்களுடன் நூலுருவாகியுள்ளது. கிழக்கிலங்கை முஸ்லீம்கள்-வாழ்வும் வளமும், நாட்டாரியல் விளக்கம், நம்நாடும் நாட்டாரியலும், கிழக்கிலங்கை நாட்டாரிலக்கியமும் முஸ்லீம்களும், ஆகிய நான்கு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னிணைப்பில், மருமகள் மாமிக்கு எழுதிய கடிதம், புயற்காவியம், முஸ்லீம் பிரதேசத்துப் பழமொழிகள், விடுகதைகள், முஸ்லீம் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் நாட்டார் கதைகள் என்பன இடம்பெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3290

**குன்றில் எழுந்த குரல்.** பாசையூர் யேசுதாசன். ஜேர்மனி: தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம், 49084 ஒஸ்னாபுறுக், 1வது பதிப்பு, பெப்ரவரி 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14.5 சமீ.

அறுபது நிமிடங்களே தொடரும் இந்த நாட்டுக் கூத்து, ஒரு விவிலியக் கதையின் நூல் வடிவமாகும். திருமுழுக்கு யுவானியாரின் பிறப்பு, பணி, இறப்பு பற்றிய பாரம்பரியத்தை நற்செய்தியாளர்களான மத்தேயு, மாற்கு, லூக்காஸ் ஆகிய மூவரும் தங்கள் நற்செய்தியில் தொகுத்துள்ளனர். திருமுழுக்கு யுவானியார் இயேசுவை சுட்டிக்காட்ட இறைவாக்கினர் பரம்பரையில் இறுதியாக வந்த இறைவாக்கினர் என நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பற்றிய நற்செய்திக் கதையை கூத்து வடிவமாக்கி குன்றில் எழுந்த குரல் என்று தலைப்பிட்டு மேடையேற்றியுள்ளார்கள். அக்கூத்தின் எழுத்துப் பிரதி இதுவாகும். கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் கலைப்பணிப் பொறுப்பாளராகப் பணியாற்றிய அருளானந்தம் யேசுதாசன் கூத்தியல் கலைப்பணியின் ஆரம்பத்தைத் தந்தையின் வாயிலாகப் பெற்று வளர்ந்தவர்.

## 3291

**முள்ளில் படுக்கையிட்டு.** S.நஜிமுதீன். சாய்ந்தமருது: டீன்ஸ் பதிப்பகம், கலை இலக்கிய வட்டம், அக்கரைப்பற்று, 1வது பதிப்பு, ஜுலை 2000. (அக்கரைப்பற்று: செலக்ஷன் அச்சகம்).

XV, 86 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 19.5X14 சமீ.

கிராமப்புற மக்களின் பண்பாட்டுக் கோலங்களுள் கவி எனப்படும் பாடல்கள், மற்றும் பழமொழிகள், மூதுரைகள், விடுகதைகள், மரபுக்கதைகள், கதைப்பாடல்கள், குழூச் சொற்கள் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. அம்மக்களின் சிந்தனை, வாழ்க்கை முறை, பண்பாடு, மரபுகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை வெளிப்படுத்த இவை உதவுகின்றன. இலங்கை முஸ்லீம்கள் மத்தியில் இத்தகைய நாட்டுப்புற பண்பாட்டியல் கவிதைகள் கிழக்கு மாகாணத்தில் வெகுவாகக் காணப்பட்டன. வாய்மொழிப்பாடல்களாகவே காணப்பட்ட இத்தகைய நாட்டார் கவிதைகள் அழிவுற்றுவரும் இக்காலத்தில் இத்தகைய பாடல்களைத் தொகுத்து கலாநிதி எஸ்.நஜிமுதீன் அவர்கள் இந்நூலில் வழங்கியுள்ளார். ஒரு சமூகத்தின்



படிப்பகம்

www.padippakam.com



வாழ்வுமுறை இங்கு நன்கு பிரதிபலிக்கின்றது. தமிழ் மொழியுடன் எவ்வித முறிவும் இல்லாது கிழக்கிலங்கை முஸ்லீம்கள் இரண்டறக் கலந்து நிற்பதை இந்நூலிலுள்ள நாட்டார் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

### 3292

**வீரத் தளபதி: தென்மோடிக் கூத்து.** நீ.எஸ்தாக்கி. யாழ்ப்பாணம்: யாழ் நாவாயூர் ஒன்றியம், 1வது பதிப்பு, யூலை 2004. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம்).

xiv, 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் வேதசாட்சிகள் நாட்டுக்கூத்தின் தொகுப்பாக வெளிவரும் புனித செபஸ்தியார் என்னும் வீரத்தளபதி என்ற இந்தக் கூத்து யாழ் அண்ணாவி மரபு தழுவி கலைக்கவி நாவாந்துறை நீ.எஸ்தாக்கி அவர்களால் உருவாக்கப்பட்டது. கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் ரோமப் பேரரசை தியோக் கிளேசியன் என்ற மன்னன் ஆண்ட காலத்தில் பிரான்ஸ் தேசத்தில் பிறந்து இத்தாலியில் தாயுடன் வாழ்ந்த செபஸ்தியன் (கிரேக்க மொழியில் உயர்ந்தோன், பெருமகன் எனக் கருத்துப்படும்) என்ற தளபதியின் கதை இதுவாகும். கிறிஸ்துவத்தில் இவர் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக பகிரங்க இடத்தில் இவர்மேல் அம்பு எய்து மரணதண்டனை வழங்கப்பட்டது. குற்றுயிராக விடப்பட்ட அவரை இறேனே என்ற விதவைப்பெண் காப்பாற்றிக் குணப்படுத்துகின்றார். குணமான பின்பும் தான் கொண்ட சமயப்பற்றின் காரணமாக மன்னனிடம் மீண்டும் செல்கின்றார் செபஸ்தியார். தியோக்கிளேசியன் அவரைக் கண்டு மீண்டும் தன் மரண தண்டனையை நிறைவேற்றுகின்றார். புனிதரான செபஸ்தியாரின் கதை நாட்டுக்கூத்தாக இந்நூலில் சொல்லப்படுகின்றது.

## 398.1 பழமொழிகளும் விடுகதைகளும்

### 3293

**இலங்கை கிராமத்து முஸ்லீம்களின் பழமொழிகள்.** எஸ்.முத்துமீரான். சென்னை 600017: நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில், தியாகராயநகர், 1வது பதிப்பு, மே 2005. (சென்னை 600014: சபரி புரொஸஸ்).



படிப்பகம்

www.padippakam.com



208 பக்கம், விலை: இந்திய ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8281-02-6.

இலங்கையின் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த 40 ஊர்களில் 65 தகவலாளர்களிடமிருந்து அரிதின் முயன்று சேகரித்த 206 பழமொழிகளை இந்நூலில் பதிவு செய்துள்ளார். இவற்றுள் 92 பழமொழிகளுக்கு அரிய விளக்கங்கள் தந்துள்ளார். நாய் பற்றிய 30 பழமொழிகளுக்குச் சிறு குறிப்பும் எழுதியுள்ள இவர், இலங்கை கிராமத்து முஸ்லீம்கள் அன்றாடம் பயன்படுத்தும் 84 பழமொழிகளையும் பட்டியலிட்டுள்ளார். நூலின் முற்பகுதியில் பழமொழிகளின் பண்பு, வரலாறு முதலியவற்றை விளக்கியுள்ள ஆசிரியர், முஸ்லீம்களின் பழமொழிகளை நான்காக வகைப்படுத்துகின்றார். தொடர்ந்து சுமார் 200 பக்கங்களில் 92 பழமொழிகளைத் தனித்தனியே விளக்கியுள்ளார்.

## 3294

**சிங்களப் பழமொழிகள்.** தம்பிஐயா தேவதாஸ். கொழும்பு 13: வித்தியாதீபம் பதிப்பகம், 90/9, புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

xii, 124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 955-96785-1-5.

யாழ்ப்பாணம்- புங்குடுதீவைச் சேர்ந்த தேவதாஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றவர். கொழும்பு கணபதி வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும், ரூபவாஹினி தொலைக்காட்சியில் செவ்வி காண்பவராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைப் பகுதியில் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். பிரபல்யமான மூன்று சிங்கள நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ள இவர் தொகுத்துள்ள இந்நூலில், நாளாந்த வழக்கிலுள்ள 815 சிங்களப் பழமொழிகளும் அவற்றுக்கான பொருளும் தரப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# 400 மொழியியல்

## 439.81 டெனிஷ் மொழி

### 3295

**டெனிஷ்-தமிழ், தமிழ்-டெனிஷ் சிறு அகராதி. Dansk-Tamilsk, Tamilsk-Dansk mini** Ordbog. Long Fog, கிருஷ்ணநிதி கிருஷ்ணபிள்ளை, நற்குணராஜா குழந்தை, Per Pilekjaer, கண்ணதாஸ் இராமலிங்கம், Will Sutter, சிவபாதசுந்தரம் வேலுப்பிள்ளை. டென்மார்க்: Special-poedagogisk Forlag, 1வது பதிப்பு, ஜுலை 1987. (டென்மார்க்: Tryk Thuesen Bogtryk)

120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 87 7399 106 6.

கடினமான தனிச் சொற்களைத் தவிர்த்து, முக்கியமானதும், வழக்கில் அதிகம் பயன்படுத்தப்படுவதுமான டேனிஷ் சொற்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட அகராதி. டென்மார்க்கின் மொழிப் பாடசாலைகளில் தமிழர்கள் நாளாந்தம் பயிலும் சொற்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

## 491.48 சிங்கள மொழி

### 3296

**சிங்கள தமிழ் அகராதி.** என்.டி.பீரிஸ். கொழும்பு 1: அரசகரும மொழிகள் திணைக்களம், வைட் எவேஸ் கட்டிடம், ஸ்ரீமத் பாரொன் ஜயத்திலக்க மாவத்தை, 1வது பதிப்பு, 1993. (தெகிவளை: ஸ்ரீ தேவி பிரிண்டர்ஸ், 27, பெபிலியான வீதி).

viii, 224 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9180-2-1.

இலங்கையின் அரசகரும மொழிகள் ஆணையாளராக நிமல் சமரசுந்தர பணியாற்றிய காலகட்டத்தில் உருவான அகராதி இதுவாகும். சுமார் 10 சிங்கள அகராதிகளையும், மதுரைத் தமிழ்ப் பேரகராதி, கழகத் தமிழ் அகராதி, என்.டி.பீரிசின் தமிழ்-சிங்கள அகராதி, திவான் பகதூர் சீ.பவானந்தம்பிள்ளை அவர்களின் தற்காலத்



படிப்பகம்

www.padippakam.com



தமிழ்ச் சொல்லகராதி ஆகிய தமிழ் அகராதிகளையும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சொற்றொகுதிகளையும் பயன்படுத்தி இவ்வகராதி உருவாக்கப்பட்டுள்ளது.

### 3297

**சுஜிகலா சிங்கள-தமிழ் ஆசிரியன்.** ஸ்ரீ இந்துசனன். கொழும்பு 11: சுஜிகலா இன்டஸ்ட்ரீஸ், 104/6, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (கொழும்பு 11: சுஜிகலா இன்டஸ்ட்ரீஸ், 104/6, செட்டியார் தெரு).

360 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 18x12.5 சமீ.

சிங்கள மொழியை தமிழ்மூலம் கற்போருக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட மொழியியல் அகராதி. இரு பாகங்களைக் கொண்டுள்ள இந்நூலின் முதற்பாகம் சொல்-இலக்கண விளக்கங்களையும், இரண்டாம் பாகம் உரையாடல், எழுதல் போன்ற விளக்கங்களையும் தருகின்றன.

## 494.8 தமிழ் மொழி

### 3298

**காலக்குறிப்பு அகராதி.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xii, 100 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் காலக்குறிப்பு அகராதி என்ற நூல் இடம்பெற்றுள்ளது. தமிழ் அகராதிக் கலைக்கு வளம்சேர்த்த ஈழத்தவரான இவர் தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப் புலவர் அகராதி, செந்தமிழ் அகராதி, திருக்குறள் அகராதி ஆகியவற்றையும் எமக்களித்துள்ளார். காலக்குறிப்பு அகராதியில் (Dictionary of Dates and Events)



படிப்பகம்

www.padippakam.com



இந்தியப் பெருங்கண்டத்தின் அரசர்கள், புலவர்கள், அரசர் மரபுகளும், கால முறைப்படி உலகில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், கால-இட விபரங்களுடன் தொகுக்கப்பட்டுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 21)

## 3299

**செந்தமிழ் அகராதி.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 005: M.K.Enterprises).

xx, 676 பக்கம், விலை: இந்திய ரூபா 435., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் செந்தமிழ் அகராதி என்ற நூல் இடம்பெற்றுள்ளது. தமிழ் அகராதிக் கலைக்கு வளம்சேர்த்த ஈழத்தவரான இவர் தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப் புலவர் அகராதி, காலக்குறிப்பு அகராதி, திருக்குறள் அகராதி ஆகியவற்றையும் எமக்களித்துள்ளார். (ந.சி.க. நூல் திரட்டு 22)

## 3300

**சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி. An Etymological and Comparative Lexicon of the Tamil Language.** நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசர். சென்னை 600 113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், CIT வளாகம், தரமணி, மீள்பதிப்பு 1999, 1வது பதிப்பு, 1938. (சென்னை 600 014: The Parkar, 293, Ahamed Complex 2nd Floor, Royapettah High Road).

xlviii, (8), 432 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 28x22 சமீ.

சுவாமி ஞானப்பிரகாசரால் 6 பாகங்கள் வரையில் தொகுக்கப்பட்ட இவ்வகராதியின் முதல் மடலத்தின் முதற்பகுதி 1938இலும், தொடர்ந்து 1940, 1941, 1943, 1944 ஆகிய ஆண்டுகளில் ஐந்து பகுதிகளும் வெளிவந்தன. இறுதியாக இவரது 6ஆவது பகுதி 1948இல் வெளிவந்தது. சுகவீனம் காரணமாக இப்பாரிய முயற்சி தொடர-



படிப்பகம்

www.padippakam.com



வில்லை. இவ்வகராதியில் இடுகுறி, ஆக்கப் பெயர் கொண்டுள்ள சில மிருகங்கள், தாவரங்கள், ஆகியன நீங்கலாகத் தமிழ்ச்சொற்கள் பலவற்றின் சொற்பிறப்புக் காட்டப்பட்டுள்ளன. 6 பாகங்களும் ஒன்று திரட்டப்பெற்று இத்தனித் தொகுதி வெளிவந்துள்ளது. பின்னிணைப்பாக **யாழ்ப்பாணத்துச் சிங்களப் பெயர்கள்** என்ற சுவாமி ஞானப்பிரகாசரது ஆய்வுக் கட்டுரையும், **மொழியாய்வில் ஒரு முனிவர்** என்ற தலைப்பில் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றி கலாநிதி அ.சண்முகதாஸ் அவர்களின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

# 494.8(1) தமிழ் இலக்கணம்

## 3301

**கடலும் படகும்.** க.வீரகத்தி. கரவெட்டி: இலங்கைப் பண்டிதர் சங்கம், வரணி, கரவெட்டி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1971. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

(18), 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

மிகவும் தொன்மொழிகளில் ஒன்றாகிய தமிழ் மொழி இன்னமிழ்தப் பொலிவுடன் விளங்குவதற்குக் காரணம் அதன் இலக்கண அமைப்பே என்றால் பிழையாகாது. நெறிபடத் தமிழ் வளர விரும்பும் ஒவ்வொருவரும் தமிழ் இலக்கண அமைப்பைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இந்த அடிப்படையில் கடலும் படகும் என்ற இந்நூல் தமிழ் இலக்கண அடிநிலைக் கோட்பாடுகளை திருத்தமாகவும், சுவையுறவும் விளக்குகின்றது. பண்டிதர் க.வீரகத்தி அவர்கள் இலங்கை வானொலியில் **இலக்கணச் சுடர்** என்ற தலைப்பில் நிகழ்த்திய ஆறு சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூலாகும்.

# 494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

## 3302

**தமிழ் இலக்கியத் தொகுப்பு: 10-11 ஆந் தரங்கள்: செய்யுள் பகுதிக்கான விரிவான விளக்கம்.** எஸ்.சிவநிர்த்தானந்தா. கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, தை 2001. (கொழும்பு: சு.கிருஷ்ணமூர்த்தி, க்ரிப்ஸ்).



படிப்பகம்

www.padippakam.com



viii, 137 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ.

இந்நூலின் முன்னட்டையில் **தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10-11** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தாராதரப் பத்திரத் தரத்தின் மாணவர்களின் தமிழ் இலக்கியப் பயிற்சிக்குரிய துணைப்பாட நூலாக இது வெளிவந்துள்ளது. இளையான்குடி மாறநாயனார், நீதிப்பாடல்கள், நமுறூது அழிவுண்ட படலம் (திருமணி மாலை), குரு தரிசனப் படலம் (இரட்சணிய யாத்திரீகம்), மழைப்பாட்டு மகிமை, பொற்கிழி, அங்கதன் தூதுப்படலம் (கம்பராமாயணம்), அரிச்சந்திர புராணம், காவியத் தலைவி கதீஜா நாயகி ஆகிய விடயத் தலைப்புகளில் இவை தரப்பட்டுள்ளன.

## 3303

**தமிழ் மொழியும் இலக்கியமும்: தரம் 6.** ந.சிதம்பரநாதன், ஷீலா ஸ்ரீதரன். பிட்டகோட்டை: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 130 சீ, பாகொட வீதி, 2வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, 2003. (பாதுக்கை: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

x, 173 பக்கம், விலை: இலவசம், அளவு: 24x18 சமீ.

அரசினால் செயற்படுத்தப்படும் பல்பாடநூல் தேர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழி-காட்டலுக்கு அமைய உலக வங்கியின் பொதுக் கல்விச் செயற்றிட்டம் 2 இன் அனுசரணையுடன் ஆக்கப்படும் இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாட நிபுணத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்-பட்டுள்ளது.

## 3304

**திருக்குறள் ஒழிபியல் பாரதியார் கவிதைகள்.** எஸ்.சிவநிர்த்-தானந்தா. கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆனி 2001. (கொழும்பு: சு.கிருஷ்ணமூர்த்தி, க்ரிப்ஸ்).

182 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x15 சமீ.

பாடல்கள், பாடற்பிரிப்புகள், விளக்கவுரைகள், பொருள் குறிப்புகள், அரும்பத விளக்கங்கள், மாதிரி வினாக்கள் ஆகிய அம்சங்கள் கொண்ட இவ்வுப பாடநூல் க.பொ.த. உயர்தர வகுப்பிற்கெனத்



படிப்பகம்

www.padippakam.com



*தயாரிக்கப்பட்டுள்ளது. திருக்குறள், பாரதியார் கவிதைகள் என்னும் இரு பாடப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்த ஒரு நூலாக இதை வெளியிட்டுள்ளார். திருக்குறள் பகுதியின் பதவுரை, பொழிப்புரை, என்பன இலகுபடுத்தப்பட்டுள்ளன. பாரதியார் கவிதைகளைப் பொறுத்தவரை பாடற்பகுதிகளுக்கான வினாக்கள், குறிப்புகள் அடங்கலாக பரீட்சை வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. கவிதைகளுக்கான விளக்கங்கள் பல நூல்களிலிருந்தும் வாசித்து அறிந்து தேர்ந்து தரப்பட்டுள்ளன.*

### 3305

**மாதிரிக் கட்டுரைகள்: தரம்: 5.** *பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 7வது பதிப்பு, மே 2005, 1வது பதிப்பு, மே 2002. (கட்டுகஸ்தொட்ட: ஜே.ஜே.பிரின்டர்ஸ், 122 குருணாகலை வீதி).*

*36 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 15x10.5 சமீ.*

*சிந்தனை வட்டத்தின் 203ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூலில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இடம்பெறக்கூடிய வசனக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்ட 26 கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இலங்கையில், வசனக் கட்டுரை அடிப்படையில் தரம் 5 மாணவர்களுக்காக வெளிவந்த முதல் நூல் இதுவென்று கருதப்படுகின்றது.*

# 500 தூய விஞ்ஞானங்கள்

## 510 கணிதம்

### 3306

**கணிதம் தரம் 6.** *W.ரத்னாயக்க (மூலம்), கல்வி வெளியீட்டுத் திணைக்கள மொழிபெயர்ப்புக் குழு (தமிழாக்கம்). ஹோமாகம: வரையறுக்கப்பட்ட கருணாரத்ன அண்ட் சன்ஸ், 67, கைத்தொழிற்பேட்டை, கட்டுவான வீதி, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2004, 1வது பதிப்பு, 2003. (ஹோமாகம: வரையறுக்கப்பட்ட கருணாரத்ன அண்ட் சன்ஸ், 67, கைத்தொழிற்பேட்டை, கட்டுவான வீதி).*



படிப்பகம்

www.padippakam.com



viii, 216 பக்கம், விலை: இலவசம், அளவு: 24.5x17.5 சமீ.

அரசினால் செயற்படுத்தப்படும் பல்பாடநூல் தேர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைய உலக வங்கியின் பொதுக் கல்விச் செயற்றிட்டம் 2 இன் அனுசரணையுடன் ஆக்கப்படும் இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாட நிபுணத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழாக்கக் குழுவில் கே.ஜீவராஜன். வி.இராஜநாயகம், எம்.கே.நஜீபல்லாஹ், ஈ.பீர் மொஹமட், ஆர்.எஸ்.இ.புஷ்பராஜன், என்.இரகுநாதன். ஏ.ஆர்.நஹ்றாஸ், பி.அமலதாசன், எம்.ஏ.ரஸ்ஸாக் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## 3307

**தரம் 10 கணிதம்: பயிற்சியும் செயல் நூலும்.** கே.கண்ணன். கொழும்பு 6: Sai Educational Publications, 155/2 Canal Road , 1வது பதிப்பு ஏப்ரல் 2000. (சென்னை 600017: Students Offset Services and Adyar Student Xerox).

iv, 172 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 23.5x18 சமீ.

2000 முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய கல்வி மறுசீரமைப்பில் தரம் 10இல் புகுத்தப்பட்டிருக்கும் பாடத்திட்டம் முழுவதையும் மீட்கும் விதத்தில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. 27 அலகுகள் கொண்ட இந்நூலின் ஒவ்வொரு அலகிலும் குறித்த பாட அலகிற்கான பாடவிதானங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு உதாரணக் கணக்குகள் மூலம் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சுயகற்றல் மூலம் இதில் இடம்பெறும் பயிற்சிகளை மாணவர்களால் எளிமையாகச் செய்யக்கூடிய வகையில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 3308

**விடைகள்: மூன்றாம் புத்தகம்.** இ.ச.அப்புத்துரை. சிங்கப்பூர்: மலாயா பப்ளிஷிங் ஹவுஸ், லிமிட்டெட், 1வது பதிப்பு, 1933. (அச்சக விபரம் அறிய முடியவில்லை).

22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13சமீ.

போட் டிக்சன் சுகாதாரச் சங்கப் பிரதம இலிகிதராகவும், போட் டிக்சன் தமிழ் வித்தியாசாலையின் கௌரவ முகாமையாளருமாகக் கடமையாற்றிய நூலாசிரியர் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து



படிப்பகம்

www.padippakam.com



சென்று சிங்கப்பூரில் வாழ்ந்தவர். மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட கணிதப்பயிற்சி நூலின் 38 அப்பியாசங்களுக்குமான விடைகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. (பிரித்தானிய நூலகத்தில் பார்வையிடப்பட்ட இந்நூலின் பதிவு இலக்கம் 14172 g 32)

# 550 புவியியல் விஞ்ஞானம்

## 551.47 சுனாமி

### 3309

**சுனாமி: கடற்கோள் 26/12 (2004).** கந்தையா குணராசா. யாழ்ப்பாணம் கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

xvi, 192 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 350., ISBN: 955-1200-03-9.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் 26, டிசம்பர் 2004ம் திகதி பெரும் உயிரழிவையும், சொத்தழிவையும் ஏற்படுத்திச் சென்ற சுனாமி ஆழிப்பேரலை பற்றிய ஆவணம். சுமாத்திராவில் உருக்கொண்டு இந்து சமுத்திரப் பிராந்தியத்தையே கலக்கிய இந்த ஆழிப்பேரலையின் தோற்றப்பாட்டினை அறிவியல்ரீதியாக இந்நூல் விளக்குவதுடன், அந்நிகழ்வினை வரலாற்றுப் பதிவாக்கியுமுள்ளது. 115 கறுப்பு-வெள்ளை, வண்ணப் புகைப்படங்களும் அவற்றிற்கான விளக்கக்குறிப்புடன் தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

### 3310

**விஞ்ஞான விளக்கம்: புவி நடுக்கமும் சுனாமி அலைகளும்.** ஆ.யோகராஜா. கொழும்பு 12: Loyal Publication, 125A, New Moor Street, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 112 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ.

350 வினா விடைகளைக் கொண்ட இந்த உப பாடநூல் "**புவி-நடுக்கமும் சுனாமி அலைகளும்**" என்ற தலைப்பில் வெளிவந்-



படிப்பகம்

www.padippakam.com



துள்ளது. விஞ்ஞான விளக்கம் முதல் 58 பக்கங்களிலும், புவி நடுக்கமும் சுனாமி அலைகளும், 59 முதல் 112 பக்கங்களிலுமாக இரு பாகங்களில் இந் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. 350 விஞ்ஞான வினா-விடைகள் இந்நூலில் காணப்படுகின்றன. உயர்கல்வி மாணவர்களின் விஞ்ஞானப் பாடத்தேவையை முன்னிட்டு இவை தொகுக்கப்பட்டுள்ளன. முதல் 50 வினாக்களும் புவிநடுக்கம், சுனாமி அலைகள் தொடர்பானவையாகவும் எஞ்சிய 300 பொது விஞ்ஞான வினாக்களாகவும் காணப்படுகின்றன. இந்நூலின் முன் பின் அட்டைகளில் இலங்கையைத் தாக்கிய சுனாமிப் பேரலையின் கோரப் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. புவியின் அமைப்பு, புவிநடுக்கம், எரிமலை, ஆகிய புவியியல்சார் அம்சங்களுடன் சுனாமி அலைகள், இலங்கையைத் தாக்கிய சுனாமி அலைகள், சுனாமி முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகிய விடயங்களிலும் கேள்வி பதில் வடிவிலான தகவல்கள் இந்நூலில் பொதிந்துள்ளன.

## 570 உயிரியல்

### 3311

**உயிர்ப் பல்வகைமை: ஓர் அறிமுகம்.** மனோ.சபாரத்தினம். யாழ்ப்பாணம்: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 6: நியு கார்த்திகேயன் பிரின்டர்ஸ், 50 ½ காலி வீதி).

vi, 139 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 160., அளவு: 23.5x16.5 சமீ.

Biodiversity என ஆங்கிலத்தில் வழங்கப்படும் உயிர்ப் பல்வகைமை பற்றிய அறிமுகத்தை கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியான பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள் இந்நூலில் விளக்கியுள்ளார். பூமியில் வாழும் அனைத்து அங்கிகளையும் அவற்றுக்கான சூழல் தொகுதிகளையும் பற்றிய முழுமையான அறிவைத் தருவது உயிர்ப் பல்வகைமை என்ற உயிரியல் விஞ்ஞான அறிவியல்துறையாகும். எமது வாழ்வும் வளமும் உயிர்ப் பல்வகைமையிலேயே தங்கியுள்ளது என்பதை இந்நூல் விஞ்ஞானபூர்வமாக விளக்கப்படங்களுடன் விளக்குகின்றது. உயிரியல் கற்கும் மாணவர்களுக்கு மாத்திரமல்லாது, சமூக மேம்பாட்டு திட்டமிடலாளர்களுக்கும் இந்நூல் ஏற்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3312

**நீருயிர்வளத் தொழில்நுட்பம்.** *தாவீதுராசா டேவிட். யாழ்ப்பாணம்: நீருயிர் வள ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (Aqua Bio Resources Research and Development Organisation), 2வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: Smart Graphics and Prints, 717, காங்கேசன்துறை வீதி).*

*(2), 91 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.*

*நீருயிர் வளத் தொழில்நுட்ப பாடத்தை ஒரு பாடமாகக் கற்கும் 10ம் 11ம் ஆண்டு மாணவர்களுக்கு அனுசரணையான வகையில் உருவாக்கப்பட்டுள்ள வினா-விடைத் தொகுப்பு.*

## 580 தாவரவியல்

### 3313

**உயர்தர தாவரவியல்: முதற்பாகம்.** *ம.சிவபாலராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1978, 1வது பதிப்பு, ஜனவரி 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63. பீ.ஏ.தம்பி ஒழுங்கை).*

*(8), 494 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 22., அளவு: 21x13.5 சமீ.*

*இலங்கையில் அரச பாடசாலைகளில் தமிழ்மொழி மூலம் விஞ்ஞான பாடங்களைப் போதிக்க ஆரம்பித்த காலகட்டங்களில் உடன்-தேவைக்காக பழமைவாய்ந்த சில ஆங்கில நூல்கள் மொழிபெயர்க்-கப்பட்டு வெளியிடப்பட்டன. எமது நாட்டுப் பாடத்திட்டத்திற்கோ, பரீட்சைகளுக்கோ ஏற்றதாக அவை அமைந்திருக்கவில்லை. இக்குறைபாட்டை நீக்கும் வகையில் இலங்கையின் கல்வித் திட்டத்துக்கும், எமது மண்ணுக்கும் அமைய எழுதி வெளியிடப்பட்ட மூலநூல்களுள் இதுவும் ஒன்றாகும். இந்நூல் 8 பாகங்கள் கொண்டது.*

## 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

### 3314

**விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் தரம் 7.** கே.ஆரியசிங்க (மூலம்), எஸ்.ஸ்ரீரங்கநாதன், எம்.எச்.எம்.யாக்கூத், கே.ஜீவராஜன், எம்.எம். இராசீக், என்.இரகுநாதன், ஏ.ஏ.எம்.மஹ்ரூப் (மொழிபெயர்ப்-



படிப்பகம்

www.padippakam.com



பாளர்கள்). ஹோமாகம: கருணாரத்ன அன் சன்ஸ், 67, கைத்தொழிற்பேட்டை, கட்டுவான வீதி, 1வது பதிப்பு, ஜூன் 2004. (ஹோமாகம: வரையறுக்கப்பட்ட கருணாரத்ன அன் சன்ஸ், 67, கைத்தொழிற்பேட்டை, கட்டுவான வீதி).

viii, 184 பக்கம், வண்ணப் படங்கள், விலை: இலவசம், அளவு: 24.5x17.5 சமீ.

புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவின்கீழ் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பல் பாடநூல் தேர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைய, உலக வங்கியின் பொதுக் கல்விச் செயற்றிட்டம் 2இன் அனுசரணையுடன் 7ம் தரத்திற்காக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்கால உலகின் மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் ஏற்றவகையில் முகம்கொடுத்து வெற்றி கொள்வதற்கும் மாணவர்களைத் தயார்செய்வது இந்நூலின் நோக்கமாகும்.

## 3315

**விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்: தரம் 10.** வை.க.தவமணிதாசன். கொழும்பு 6: வீ.கே.வீ.பப்ளிக்கேஷன்ஸ், இல.6, கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, மே 2004. (கொழும்பு 13: யூ.கே.பிரின்டர்ஸ், 103, விவேகானந்தா மேடு).

iv, 207 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 18x11.5 சமீ.

தரம் 10 மாணவர்களுக்கான விஞ்ஞான வழிகாட்டி நூல். நூலாசிரியர் கொழும்பு இந்துக் கல்லூரியின் ஆசிரியர். பாடத்திட்டத்தில் இடம்பெறக்கூடிய 13 பாட அலகுகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. மாணவர்களின் சுயமான கற்றலுக்கேற்ப இலகு மொழிநடையில் எழுதப்பட்டுள்ளது.

## 3316

**விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும்: தரம் 11.** பி.சிவகாந்தா. கொழும்பு 3: திருமதி பீ.சிவகாந்தா, கொ/ சாந்த அந்தோனியார் வித்தியாலயம், கொள்ளுப்பிட்டி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: லட்சுமி பிரின்டர்ஸ், 195 வூல்பெண்டால் வீதி).

56 பக்கம், படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



தரம் 11க்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் இதுவாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் மண்ணின் பயன்கள், இறப்பர் பாலும் அதன் உற்பத்திகளும், ஆகிய தலைப்புக்கள் இந்நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் ஆங்கிலப் பயிற்சிபெற்ற முன்னைநாள் பட்டதாரி ஆசிரியராவார்.

## 614 பொதுச் சுகாதாரம்

### 3317

**வாழ்க வளமுடன்.** கா.வைத்தீஸ்வரன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: கா.வைத்தீஸ்வரன், 7 அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

72 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18X12.5 சமீ.

திருமண வாழ்வில் நுழையும் புதுமணத் தம்பதிகளான சரவணபவன்-சுகந்தினி இருவரது திருமண நாளன்று 03.07.2005 அன்று விநியோகிக்கப்பட்ட இந்நூலில், இளம் குடும்பம் எதிர்கொள்ளும் பல்வேறு சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவும் தகவல்களும், பொதுவான ஒழுக்கவியல் சார்ந்த தகவல்களும் இடம்பெற்றுள்ளன. திருமணப்பரிசாக வழங்கப்படத் தக்க பல அம்சங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூலாசிரியர் ஓய்வுபெற்ற சுகாதாரக் கல்வி அதிகாரியாவார்.

## 619 கீழைத்தேய மருத்துவம்

## 619.1 சித்த மருத்துவம்

### 3318

**உடல்நல வாழ்வுக்குரிய அறிவுச்சுடர்.** விநாயகர் தரும நிதியம். அல்வாய்: திருமதி பிலோமினா வேலும் மயிலும், வள்ளிமனை, அல்வாய் கிழக்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), ப.65-142, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



09.03.1997இல் இடம்பெற்ற அமரர் போல் வேலும் மயிலும் அவர்களின் 31ம் நாள் நினைவாக வெளியிடப்பட்ட இந்நினைவு-மலரில், விநாயகர் தரும நிதியம் வெளியிட்ட அறத்தமிழ் ஞானம்: மருத்துவக் குறிப்பு என்ற பிரசுரத்தின் 65முதல் 140 வரையிலான பக்கங்கள் இங்கு தனியான நூலாக்கம் பெற்றுள்ளது. இயற்கை வைத்திய முறைகளில் தாவரங்கள் மூலிகைகளின் மருத்துவக் குணாம்சங்களும் அவை தீர்க்கும் நோய்களும், விசக்கடி, நஞ்சூட்டல் போன்றவற்றில் கைவைத்திய முறைகளும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன.

## 630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும்

### 3319

**கால்நடை அபிவிருத்தி: இலங்கை தமிழர் பிரதேசம்.** அ.சோமசுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: அ.சோமசுந்தரம்பிள்ளை, பட்டயக் கணக்காளர், 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

(6), 78 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x14.5 சமீ.

15 இயல்களில் தமிழ்ப் பிரதேசத்தின் கால்நடை அபிவிருத்தி பற்றிப் பேசும் இந்நூலில், தமிழர் பிரதேசங்களில் பாலுற்பத்தி, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, போன்ற விலங்குப் பண்ணை அபிவிருத்திக்குச் சாதகமான வளங்களை இனம்கண்டுள்ளார். மேலும், மாடு, ஆடு, கோழி போன்றவற்றின் பராமரிப்பு முறைகள், உணவூட்டல், வீடமைப்பு போன்ற விடயங்களைத் துலக்கமாக விளக்கியுள்ளார். மாடு கோழிகளைத் தாக்கும் முக்கிய நோய்களையும் அவற்றின் கட்டுப்பாட்டு முறைகளையும் விளக்கியுள்ளார். இனவிருத்தியின் அவசியம், செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் முக்கியத்துவம் என்பன நன்கு விளக்கப்பட்டுள்ளன. விலங்கு வேளாண்மை பற்றிய பரவலான தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது.

### 3320

**பனை வளம்.** க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: க.கனகராசா, மில்க்வைற் தொழிலகம், திரு ஆலவாய், 1வது பதிப்பு, 1977. (அச்சக விபரம் தரப்படவில்லை).



படிப்பகம்

www.padippakam.com



*144 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14 சமீ.*

மில்க்வைற் தொழிலகத்தின் பொன்விழா வெளியீடாக (1927-1977) வெளிவந்துள்ள இந்நூலில் பனைமரம் பற்றியும் பனையின் பயன்பாடு பற்றியும் தேடித்தொகுக்கப்பெற்ற அரிய பல தகவல்களும், இலக்கியங்களில் பனை பற்றி வெளிவந்த குறிப்புகளும் தொகுக்கப்பட்டுள்ளன. பனையியல் தொடர்பான விரிவானதொரு ஆவணமாக இது அமைகின்றது.

## 3321

**விவசாயம்: தரம் 10.** செல்லையா அருள்மொழி. Mount Lavinia: திருமதி வசந்தி இராஜேந்திரா, 10/3 Barnes Avenue, 5வது பதிப்பு, ஒக்டோபர் 2002, முதற் பதிப்பு, செப்டெம்பர் 1993. (கொழும்பு 13: ஈசன் பிரின்டர்ஸ்).

*(6), 185 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், புள்ளிவிபரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5X14 சமீ.*

இலங்கையில் இடைநிலைப் பாடசாலைக் கலைத் திட்டத்தில் விவசாயம் ஒரு பாடமாகப் போதிக்கப்படுகின்றது. 2002ம் ஆண்டு புதிய பாடத்திட்டத்திற்கமைய தரம் 10 மாணவர்களின் பாடப்பரப்பில் இடம்பெறும் 9 பாட அலகுகள் எளிய நடையில் இங்கு தரப்பட்டுள்ளன. நூலாசிரியர் அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராவார்.

# 640 இல்லப்பொருளியல், குடும்பக்கலை

## 3322

**மனைப் பொருளியல்.** ஆர்.அயூப். கொழும்பு 9: இஸ்லாமிய புத்தக நிலையம், 77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, 5வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு: கொம் பிரின்ட் சிஸ்டம், HL ½, டயஸ் பிளேஸ்).

*85 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 25X17.5 சமீ.*

திருமதி றமீசா அயூப் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஏற்கெனவே யாழ்ப்பாணத்து சமையற் கலை என்ற நூலை எழுதி வெளியிட்டவர். மனைப்பொருளியல் என்ற இந்நூல் கல்வி அமைச்சின் புதிய



படிப்பகம்

www.padippakam.com


பாடத்திட்டத்திற்கமைய தரம் 11 மாணவர்களின் பாடத்திட்டத்தினை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். மனை நிர்வாகம், உணவும் போசணையும், புடவையும் உடை அமைத்தலும், பிள்ளை விருத்தி ஆகிய நான்கு பிரதான தலைப்புக்களின் கீழ் எளிமையாகவும், சுயமாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் எழுதப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

## 3323

**மனைப் பொருளியல்: ஆசிரியர் கைந்நூல் தரம் 12.** நூலாக்கக் குழு (சிங்கள மூலம்). எம்.எச்.எஸ். ஆயிஷா (மொழிபெயர்ப்பாளர்). மஹரகம: தொழில், தொழில் நுட்பக் கல்வித் திணைக்கள வெளியீடு, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (மஹரகம: தேசிய கல்வி நிறுவகம்).

vi, 108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21.5 சமீ.

1995ம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ள க.பொ.த. (உயர்தர) மனைப் பொருளியல் திருத்தி அமைக்கப்பட்ட பாடத் திட்டத்தில் 12ஆந் தரத்திற்கான குறித்த பாட அலகுகளை விளக்கும் ஆசிரியர் கையேடு இந்நூலாகும். இதன் சிங்கள மூலநூல் 1996ம் ஆண்டில் வெளிவந்த போதிலும்கூட 2004ம் ஆண்டிலேயே தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது. இலங்கையில் தமிழ் மொழி அரசகரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் கூட உயர்தர மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தினை ஆசிரியர்களுக்கு விளக்கும் சிங்கள மூல நூல் வெளிவந்து அதன் மொழிபெயர்ப்பு தமிழ் மொழி ஆசிரியர்களைச் சென்றடைய 8 ஆண்டு காலம் சென்றுள்ளமை அவதானத்திற்குரியது.

## 3324

**மனைப் பொருளியல்: ஆசிரியர் கைந்நூல் தரம் 13.** நூலாக்கக் குழு (சிங்கள மூலம்), எம்.எச்.எஸ்.ஆயிஷா (மொழிபெயர்ப்பாளர்). மஹரகம: தொழில்சார் தொழில் நுட்பக் கல்வித் திணைக்கள வெளியீடு, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (மஹரகம: தேசிய கல்வி நிறுவக அச்சகம்).

vi, (7), 60 விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x20.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் க.பொ.த.(உயர்தர) மாணவர்களுக்கான மனைப்பொருளியல் பாடத்திட்டம் 1995ம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது. சிங்கள மொழிமூலம் மனைப்பொருளியல் - ஆசிரியர் கைநூல் அதே ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தினால் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது. ஆனால் தமிழ் மொழி மூலமாக இந்நூல் 2004ம் ஆண்டிலேயே பதிப்பிக்கப்பட்டது. தரம் 13ஐ மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நூல் பாட அலகு 4 முதல் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. சிங்கள மூல நூலாக்கக் குழுவில் மொத்தம் 23 எழுத்தாளர்கள் இடம்பெற்றிருந்தனர்.

### 3325

**மனைப் பொருளியல்: 10ம், 11ம் தரத்திற்குரியது.** எஸ்.விஜயலட்சுமி. மாத்தளை: எஸ்.விஜயலட்சுமி, விஜய வில்லா, 30/5, பன்சல வீதி, மன்டன்டவெல, 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு 12: ஸ்ரீ சக்தி பிரிண்டிங் இன்டஸ்ட்ரீஸ், 61/1F பீர் சாகிபு வீதி).

viii, 175 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், புள்ளிவிபரங்கள், விலை: ரூபா 180., அளவு: 29x21 சமீ., ISBN: 955-97548-0-7.

தரம் 10-11 மனைப் பொருளியல் பாடப்பரப்பினை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் இது. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு மனைப் பொருளியல் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும்கூட தமிழ்மொழி மூலம் இப்பாடத்தினைக் கற்க மாணவர்களுக்குப் போதிய நூல்கள் இல்லாமை ஒரு பெருங்குறையாகவிருந்த காலகட்டத்தில் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலாசிரியை மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரியின் ஆசிரியையாவார்.

## 642 உணவும் பரிமாறலும்

### 3326

**100 விரைவான & இலகுவான சிற்றுண்டிக் குறிப்புகள்.** நெஸ்லே. கொழும்பு: நெஸ்லே மில்க் மெய்ட் நுகர்வோர் சேவைகள், நெஸ்லே லங்கா லிமிட்டெட், தபால் பெட்டி எண் 189, 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (கொழும்பு: குணரட்ண ஓப்செட் லிமிட்டெட்).

64 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x19.5 சமீ., ISBN: 955-1002-02-4.



படிப்பகம்

www.padippakam.com



நூறு வருடங்களுக்கு முன்பு ஆங்கிலோ-சுவிஸ் கட்டிப்பால் கம்பெனியுடன் கூட்டிணைந்து இலங்கை நெஸ்லே கம்பெனி இனிப்பூட்டிய மில்க் மெய்ட் கட்டிப்பாலைத் தயாரிக்கத் தொடங்கியது. மில்க் மெய்ட் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு தற்போது இந்நூல் வெளிவந்துள்ளது. வர்ணப் புகைப்படங்களுடன் எளிய நடையிலான சமையற் குறிப்புகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

### 3327

**யாழ்ப்பாணத்துச் சமையற்கலை.** ஆர்.அயூப். யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

*43 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.*

மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி ஆர்.அயூப் அவர்களின் சமையற்கலை நூல். 76 வகையான உணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்கும் வழிமுறைகள் இந்நூலில் காணப்படுகின்றன. நூலின் தலைப்புக்கும் நூலின் உள்ளடக்கத்துக்கும் உள்ள தொடர்பு இந்நூலில் தெளிவாகப் புரியவில்லை.

# 700 கலைகள், நுண்கலைகள்

## 701 பொதுக்கலைகள்

### 3328

**இந்துக் கலைக் கொள்கை.** சோ.கிருஷ்ணராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

*107 பக்கம், வரைபடங்கள், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-9429-00-0.*

இந்நூல் இந்துக் கோயில் சிற்பமும் அதன் கொள்கையும், இந்து ஓவியக் கொள்கை, சித்திர சூத்திரம் ஓர் அறிமுகம், தந்திர வழிபாடும் அதன் கலையும், ஆகிய நான்கு தலைப்புக்களில் இந்துக் கலை வரலாற்றினை சுருக்கமாக விபரிக்கின்றது. பேராசிரியர்.



படிப்பகம்

www.padippakam.com



சோ.கிருஷ்ணராஜா, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டத்தினையும் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பல ஆய்வு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

## 3329

**சிவானந்த நடனம்.** ஆனந்த குமாரசுவாமி (மூலம்), சோ.நடராசன் (தமிழாக்கம்). சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1வது பதிப்பு, 1980. (சென்னை 600 018: சங்கர் அச்சகம்).

xvi, 204 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: இந்திய ரூபா 17., அளவு: 22x14.5 சமீ.

The Dance of Shiva என்ற ஆங்கில மூலநூலின் தமிழாக்கம். நடராஜ தத்துவத்தில் புதைந்து கிடக்கும் விஞ்ஞான உண்மைகளையும், ஆனந்த ரகசியங்களையும் திருமூலர் முதலிய மெய்ஞ்ஞானிகளுடைய பாடல்கள் மூலம் உலகத்திற்கே விளக்கிக் காட்டியவர் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள். நவாலியூர் சோ.நடராசன் அவர்களின் தமிழாக்கத்தில் வெளிவந்துள்ள இந்நூல் மூலநூலுக்கான ரோமெய்ன் ரோவாண்ட் அவர்களின் முன்னுரையையும் கொண்டுள்ளது. மனித இனத்தின் நன்மைக்கு இந்தியா செய்த தொண்டு, இந்துக்களின் கலைக் கோட்பாடு, அழகியல் வரலாறு, அவர்களின் அழகு பற்றிய கொள்கை, அழகென்பது ஒரு நிலை, பூர்வ பௌத்த வடிவங்கள், சிவ நடனம், பல கைகளையுடைய இந்தியச் சிலைகள், இந்தியச் சங்கீதம், இந்திய மாதரின் நிலை, சகச நெறி, அறிவாளர் கூட்டம், நீட்சேயின் பரந்த நோக்கு, நவ பாரதம், தன்னியல் தன்னாட்சி தன்னறம் ஆகிய பல்வேறு தலைப்புகளை இவ்வரிய நூல் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு வெளியீடு இலக்கம் 2.

## 3330

**புதிய வடிவங்கள்: சித்திர சிற்பக் கண்காட்சி சிறப்புமலர்.** சுப்பிரமணியம் சிவகுமாரன். மேற்கு ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, Uhlandstr 1, 5880, Ludenscheid, 1வது பதிப்பு, 1990. (அச்சக விபரம் தரப்படவில்லை).



படிப்பகம்

www.padippakam.com



28 பக்கம், புகைப்படங்கள், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

தெல்லிப்பழை குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும் வெற்றிமணி சிறுவர் மாத இதழ் ஆசிரியருமான மு.க.சுப்பிரமணியம் ஆசிரியரின் மகனான சு.சிவகுமாரன் (கண்ணா), அவர்கள் புலம்பெயர்ந்து மேற்கு ஜேர்மனியில் குடியேறி வாழ்பவர். புலம்பெயர்ந்த நாட்டில் கரித்தாஸ் நிறுவனத்தின் ஆதரவில் (Caritasverbandes e.V., Propsteihof 10, 4600 Dortmund) 1990 சித்திரை 20-27ம் திகதிகளில் இவர் ஓவிய சிற்பக் கண்காட்சியொன்றினை நடத்தினார். புதிய வடிவங்கள் என்ற இந்த நவின ஓவிய சிற்பக் கண்காட்சியின் போது வெளியிடப்பட்ட சிறப்பு-மலர் இதுவாகும். இவரது நவீன ஓவிய, சிற்பப் புகைப்படங்களுடன், வாழ்த்துச் செய்திகளும், **எனது கண்ணோட்டத்தில் புதிய வடிவங்கள்** என்ற தலைப்பில் சிவகுமாரனின் கட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளன.

## 750 ஓவியக்கலை

### 3331

**இருபதாம் நூற்றாண்டு ஓவியம்.** கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (சென்னை 600005: மணி ஓப்செட் பிரிண்டர்ஸ்).

92 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.

தமிழ் ஓவியக்கலை ஆர்வலர்களுக்கு நவீன ஓவியம் பற்றிய அறிவை விசாலித்துக்கொள்ளவும், விவாதித்துக்கொள்ளவும் இந்நூல் உதவும். 20ம் நூற்றாண்டு, கலை இலக்கியத்துறைகளில் பெரும் மாற்றங்களைக் கண்டுள்ளது. ஓவியன் வெறுமனே காட்சிப் பதிவுடன் மட்டும் நின்றுவிடாது அவற்றைத் தன் சார்புநிலைகளில் நின்று நோக்கினான். தன் கருத்து நிலைகளுடாக அவற்றில் விகாரங்களை ஏற்படுத்தினான். தன் படைப்புக்களில் தன் பார்வையை ஏற்றினான். தன் விருப்பத்தின்படி நிறங்களை மாற்றினான். ஓவிய வளர்ச்சியில் ஏற்பட்ட இப்பாரிய மாற்றம் பார்வையாளனின் தன்மையிலும் மாற்றத்தைக் கோரி நின்றது. இன்றைய ஓவியம் அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் அணுகும் பார்வையாளனை கோரிநிற்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தேவையினை மனம்கொண்டே இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் 21 கட்டுரைகளிலும் முதல் இரு கட்டுரைகளும் கட்புலக் கூறுகள், அவற்றின் தொகுப்பு, கலைரசனை என்ற சில அடிப்படை விடயங்களைப் பற்றியது. ஏனைய கட்டுரைகள் நவீன ஓவிய வரலாறு சம்பந்தப்பட்டது. ஒவ்வொரு ஓவிய இயக்கத்தைப் பற்றிய விபரிப்பின் முடிவிலும் அந்த இயக்கத்தின் ஓரிரு முக்கியஸ்தர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு ஓவிய இயக்கத்தைப் பற்றியும் நவீன ஓவிய வளர்ச்சி பற்றியும் அடிப்படையான புரிதலை வாசகரிடம் ஏற்படுத்துகின்றது.

## 3332

**பண்பாட்டின் மூன்று கோலங்கள்.** *கலாகேசரி ஆ.தம்பித்துரை. தெல்லிப்பழை: குரும்பசிட்டி சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, மே 1990. (சுன்னாகம்: திருமகள் அச்சகம்).*

*(10), 66 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 22X14.5 சமீ.*

தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்களான அழகுக் கலைகள் காட்சிக்கு விருந்தளிப்பதுடன் ஆன்மீகத் தத்துவச் சிந்தனைகளைக் கிளர்ந்தெழச் செய்து மனித மேம்பாட்டுக்கு வழிகாட்டியும் வருகின்றன. அக் கலையாக்கங்களை அலங்கரிப்பதற்குப் பல அணிகளைத் தமக்கேயுரிய தனித்துவப் பாணியில் கையாண்டுள்ளனர். அவற்றுள் மகரம், அன்னம், தாமரை ஆகிய முக்கிய மூன்று அலங்கார அணிகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கவின்கலைகளில் மங்கல மகரம், அழகுக் கலைகளில் அழகுறு அன்னம், இன்கலைகளில் பொங்கு தாமரை ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியரின் 58ஆவது பிறந்ததின வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டது.

## 3333

**புதிய முறைச் சித்திரம்.** *க.எதிர்வீரசிங்கம். கொழும்பு 13: செல்வி க.எதிர்வீரசிங்கம், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, 1வது பதிப்பு, பங்குனி 1997. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை. G.L.1-2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*(4), 80 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 75., அளவு: 21.5X14 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



புதிய பாடத்திட்டத்தின் கீழ், ஆண்டு 6 தொடக்கம் 11 வரையான மாணவர்க்குரிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள உப பாடநூல் இதுவாகும். நூலாசிரியர் கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் சித்திர ஆசிரியையாவார்.

### 3334

**மானுடக் கலை.** கணபதி இராசரத்தினம் (மூலம்), காவலூர் இ.விஜேந்திரன் (தொகுப்பாசிரியர்). மானிப்பாய்: இராசம்மா இராசரத்தினம், ரெம்பிள் வியு, நவாலி தெற்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxx, 57 பக்கம், விளக்கப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 20x14.5 சமீ.

இரேகை பற்றிய நுண்ணறிவு, சமநிலை, சமநிலையிற் சுதந்திர வகை, கிரேக்கர் தந்த சமநிலையும் சந்தமும், உடல் ஒரு வளையும் பொருள், உடல் அமைப்பில் ஒளிநிழல், பாக வெளிப்பாடு, தனித்தன்மை, தொகுப்பமைவு, தன்னுருவம், கூட்டு மானுடம், பிரச்சினைகள், ஊடகங்கள் ஆகிய தலைப்புக்களில் பிரதிமைக் கலையின் பதிவுகளை மானுடக்கலை என்ற நூலுருவில் இங்கு வெளியிட்டுள்ளனர். இது அமரர் கணபதி இராசரத்தினம் அவர்களால் (6.1.1927-6.9.2005) எழுதப்பட்ட நூலாகும். அவரது மறைவின் பின்னர் நினைவஞ்சலி மலராக வெளியிடப்பட்டுள்ளது.

**மேலும் பார்க்க: 3328**

## 770 புகைப்படக்கலை

### 3335

**ஆதலினால் காதல் செய்வீர்.** சைமன் விமலராஜன் (புனைபெயர்: தமயந்தி). நூலில் தலைப்புப் பக்கம் காணப்படவில்லை.

32 பக்கம், புகைப்படங்கள் (கறுப்பு வெள்ளை), விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x17.5 சமீ.

தமயந்தி சிறந்ததொரு கவிஞரும், குறும்பட இயக்குநரும் மாத்திரமல்லாது ஒரு கலைத்துவம் மிக்க புகைப்படப்பிடிப்பாள-ராகவும் புகலிடத்தில் வலம் வருகின்றார். இவரது கலைத்துவப்



படிப்பகம்

www.padippakam.com



படைப்புக்களில் சில இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. Roger Engvik, Borge Otterlei, Knut Enstad, உ.சேரன், கலைச்செல்வன், மணி சுப்ராயன், கரவைதாசன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் புகைப்படத் தொகுப்புகளுக்கு இடையே அலங்கரிக்கின்றன. இந்நூலின் இணைத் தலைப்பாக Dagens bilde காணப்படுகின்றது.

# 780 இசைக்கலை

## 3336

**அடிப்படை கர்னாடக இசையியல்.** பீ.ஞானவரதன், மீரா வில்லவராயர், டீ.வீ.பிச்சையப்பா, பீ.கணேசவரதன். லண்டன் SW8 3JF: 711, Wandsworth Road, 1வது பதிப்பு, ஜுன் 1998. (கொழும்பு: வின்னேஸ் ஸ்தாபனம், 30, நிஹால் டீ சில்வா மாவத்தை).

viii, 146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கர்னாடக இசையைக் கற்பிக்கும் நூல். ஆங்கிலத் தலைப்பு Basic Karnatic Music Theory எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இசையின் அடிப்படை அம்சங்கள், சங்கீதம் எழுதும் முறையும் குறியீடுகளும், சப்த ஸ்வரங்களின் விபரம், பிரக்ருதி, விக்ருதி ஸ்வரங்களும், 12 ஸ்வரஸ்தானங்களும், 16 ஸ்வரப் பெயர்களும், இராகம், 72 மேளகர்த்தா இராகங்களின் அமைப்பு, தாளம், மனோதர்ம சங்கீதம் ஆகிய தலைப்புக்களில் கர்னாடக இசையின் உரைநடைப் பயிற்சி விளக்கப்பட்டுள்ளது.

## 3337

**தெய்வ கானம்.** த.நல்லலிங்கம். மட்டக்களப்பு: சரீரம், ஸ்ரீலங்கா தேசிய மன்றம், 1வது பதிப்பு, 1999. (மட்டக்களப்பு: நியூ கீன் பிரிண்டர்ஸ்).

(2), 112 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21x14 சமீ.

இந்நூலாசிரியர் நாட்டுக்கூத்தையே உயிர்மூச்சாகக் கொண்டிருப்பினும், நாடகம், கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம் போன்றவற்றை ஆக்குவதிலும் அவற்றை இயக்குவதிலும் தானும் சேர்ந்து நடித்து நிகழ்ச்சியை வெற்றிபெறச் செய்வதிலும் பல தசாப்தகாலமாக ஈடுபட்டு வந்துள்ளார். தெய்வீகப் பாடல்களையும் பொதுப்பாடல்களையும் ஆலயங்களின் தலச் சிறப்பினைக் குறிக்கும்



படிப்பகம்

www.padippakam.com



பாடல்களையும் யாத்து, அவற்றைத் தனது சொந்தக் குரலில் பாடி ஒலிப்பேழை வடிவில் வெளியிட்டும் வந்துள்ளார். அப்பாடல்களின் ஒரு பகுதியே இந்நூலில் எழுத்துருவில் காணப்படுகின்றன. காவடிப்பாடல்கள் பதின்மூன்றும், பக்திப் பாடல்கள் பன்னிரண்டும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3338

**வில்லிசைக் கலை.** இராசையா ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: ஆசிரியர், நாச்சிமார் கோவிலடி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ.தம்பி ஒழுங்கை).

xvi, 124 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 270, அளவு: 20x15 சமீ.

1967ம் ஆண்டு முதல் வில்லிசை நிகழ்ச்சிகளை மேடையேற்றி வரும் யாழ்ப்பாணம் இராசையா ஸ்ரீதரன் அவர்கள் வில்லிசைக் கலையை வரலாற்றுரீதியாகவும், அனுபவரீதியாகவும் முதல் 48 பக்கங்களில் அறிமுகம் செய்துள்ளார். அதைத் தொடர்ந்து, 49-124 பக்கங்களில் வீணைக்கொடி வேந்தன் இராவணேஸ்வரன், பக்த நந்தனார், ஆவும் கோவும், நவராத்திரி நாயகிகள், மங்கையர் மாண்பு-பெண்ணியம், தமிழ் மொழியின் சிறப்பு ஆகிய ஆறு வில்லுப்பாட்டு உரைநடைப் பிரதிகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3339

**ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகள்.** ஸ்ரீ செம்மங்குடி ஆர்.ஸ்ரீநிவாச அய்யர். யாழ்ப்பாணம்: அகில இலங்கை கம்பன் கழக வெளியீடு, கம்பன் கோட்டம், இல. 300, கோவில் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(5), 27 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

சங்கீத கலாநிதி, பத்மபூஷண் ஸ்ரீ செம்மங்குடி ஆர். ஸ்ரீநிவாஸ அய்யர் அவர்களின் ஸ்வர அமைப்பில் உருவான பஞ்சரத்ன கீர்த்தனைகள். அகில இலங்கை கம்பன் கழகம் மூப்பும் தகுதியும் அடிப்படையாகக் கொண்டு இசைத்துறை சார்ந்த மூதறிஞர் ஒருவருக்கு இசைப்-பேரறிஞர் விருது வழங்கி கௌரவித்தது. 1992இல் நாதஸ்வர மேதை கே.எம்.பஞ்சாபிகேசன், 1993இல் சங்கீதபூஷணம் கே.ஆர்.நடராஜா ஆகியோர் கௌரவம் பெற்றனர். அவ்வகையில் 1994இல் விருதுபெற்ற வி.கே.குமாரசுவாமி அவர்களின் நினைவாக அவர்களது குடும்பத்-



படிப்பகம்

www.padippakam.com



தினரின் அனுசரணையுடன் இந்நூல் அகில இலங்கை கம்பன் கழகத்தினால் வெளியீடு கண்டுள்ளது.

## 791 நாட்டியக் கலை

### 3340

**நாட்டிய அரங்கு.** இ.இரத்தினம் (மூலம்), ஞானம் இரத்தினம் (பதிப்பாசிரியர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-58-5.

யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இளையதம்பி இரத்தினம் (17.8.1916-21.3.1981). இசைவேளாளர் பரம்பரை வேரூன்றிய இணுவில் கிராமத்தில் தமிழும் சைவமும் இவரை இயல்பாகவே ஈர்த்து இசை ரசனையும் கைகூடியிருந்தது. இசை, நடனம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவருக்கு, நாட்டியப் பிரதி எழுதுவதில் ஆர்வம் மேலிட்டது. அதன் பயனாக உருவான பன்னிரண்டு நாட்டியங்களின் பிரதிகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இரதி பூசை, ஆய்ச்சியர் குரவை, மணிமேகலை, சிவதாண்டவம், அமரகீதம், கண்வழி நுழைந்த கள்வன், பராசக்தி மகிமை, நூபுர நாதம், தெய்வத் திருமணம், முத்தமிழின் தோற்றம், மார்கழி மங்கையர், உழவர் நாட்டியம் ஆகிய நாட்டிய நாடகப் பிரதிகளே இவை.

### 3341

**பரத நாட்டிய அரங்கேற்றம்.** மு.க.சுப்பிரமணியம் (தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: தயாநிதி சுப்பிரமணியம், நிதி பவனம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, டிசம்பர் 1978. (சுன்னாகம்: சக்தி அச்சகம்).

(34) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

பண்ணும் பரதமும் (V.T.V.சுப்பிரமணியம் ஓதுவார் மூர்த்தி), தெய்வீக ஆடற்கலை (வழுவூர் பீ. இராமையாபிள்ளை), ஆடற்கலை (கலாநிதி அ.சண்முகதாஸ்), பரதத்தில் கரணங்கள் (க.கா.சோமசுந்தரன்), ஆகிய கட்டுரைகளைக் கொண்ட இந்தச் சிறப்பிதழ், 09.12.1978 அன்று



படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேறிய தையிட்டி சிலம்பொலி ஷேத்திரம் வழங்கிய பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியின்போது வெளியிடப்பட்டது. செல்வி ஜெயபத்மினி சின்னத்துரையின் மாணவியும், வெற்றிமணி ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் மகளுமான தயாநிதி சுப்பிரமணியம் அவர்களின் அரங்கேற்ற நிகழ்வு இதுவாகும்.

### 3342

**ஹஸ்த விநியோகங்கள்: முத்திரை விநியோகங்கள்.** ஏ.எஸ்.ஏ. தரங்கனி. மூளாய்: அருணா பப்ளிக்கேஷன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: விக்ரம் பிரிண்டர்ஸ், இல.19, வூல்பெண்டால் ஒழுங்கை).

(6), 105 பக்கம், விளக்கச் சித்திரங்கள், விலை: ரூபா 145., அளவு: 22x15 சமீ.

நடனக் கலையில் இடம்பெறும் அபிநயமானது ஆங்கிகம், வாச்சிகம், ஆகார்யம், சாத்விகம் என்று நான்கு வகைப்படும். இவற்றுள் ஆங்கிக அபிநயம் என்பதனுள் அங்கம், உபாங்கம், பிரதியாங்கம், என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. இவற்றுள் ஹஸ்தம் பற்றியே இந்நூல் விளக்குகின்றது. ஹஸ்தம் என்பதன் தமிழ்ப்பதம் "முத்திரை" என்பதாகும். குறிப்பாக சம்யுதஹஸ்தம் (ஒற்றைக்கை முத்திரை), அசம்யுத ஹஸ்தம் (இரட்டைக்கை முத்திரை), என்பன பற்றியும் அவற்றின் விநியோகங்களையும் விளக்கங்களையும் தமிழில் தருவதுடன் அவ்விநியோகங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதையும் மிக விரிவாக இந்நூல் விளக்குகின்றது. இங்கு சம்யுத ஹஸ்தங்கள் 28, அசம்யுத ஹஸ்தங்கள் 24 ஆக மொத்தம் 52 முத்திரைகளுக்கான விநியோகங்களின் செயல்முறைகள் தரப்பட்டுள்ளன.

**மேலும் பார்க்க: 3329**

## 792 அரங்கியல், நாடகக்கலை

### 3343

**இடம் கொடுத்தல்: சுதந்திர செயற்பாடும் கல்விச் சமூக வெளிப்பாடும்.** செ.விந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வள



படிப்பகம்

www.padippakam.com



*நிலையம், அரங்க செயற்பாட்டுக் குழு, 19, பழம் ரோட், கந்தர் மடம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (வவனியா: நிலம் வெளியீட்டகம், 87, வியாசர் வீதி, தோணிக்கல்).*

*117 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 22X14 சமீ.*

*இந்நூல் "கல்வியில் அரங்கு" செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தியபோது விளைந்த ஒரு அனுபவப் பதிவாகும். மாணவர்களி-டையே சுதந்திர செயற்பாட்டிற்குக் களம் ஏற்படுத்தப்பட்ட போது கல்விச் சமூகத்தின் புனைவுகளற்ற தூய வெளிப்பாடு அங்கு சாத்தியமானதை இந்நூலில் ஆதாரபூர்வமாகத் தரிசிக்கமுடிகின்றது. வவுனியா பிரதேச பாடசாலைகளின் பாடசாலை வளவு முழுவதை-யும், மரங்களையும் கட்டடங்களையும் என்று எல்லா இடங்களுமே ஆற்றுகை வெளிகளாகப் பயன்படுத்தி இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னாளில் இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது. இந்நூலின் முதற் பகுதியில் இச்செயற் திட்டத்தினால் சிறுவர்கள் பெற்ற அனுபவங்கள் அவர்கள் கைப்படப் பதிவாகியுள்ளன. இரண்டாம் பிரிவில் இவ்வரங்குகளில் மேடையேற்றம் கண்ட வாலறுந்த குரங்கு, ஒற்றுமை, மலரும் மனங்கள், கலகம் நாசம், ஒற்றுமை வலிமையாம் ஆகிய சிறுவர் நாடகங்களும், மூன்றாம் பிரிவில் இவ்வரங்குச் செயற்பாட்டில் பங்கேற்ற ஆசிரியர்கள், செயற்பாட்டாளர்களின் ஆரோக்கியமான கருத்துக்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன.*

## 3344

**இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்நாடக அரங்கம்.** *இ.சிவானந்தன். கொழும்பு: நடிகர் ஒன்றியம் வெளியீடு, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1979. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).*

*(14), 100 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18.5X12.5 சமீ.*

*அரை நூற்றாண்டுக் கால ஈழத்து அரங்கியல் வரலாற்றினைப் பதிவு-செய்யும் இந்நூல் 1927-1977 வரையான இலங்கைப் பல்கலைக்-கழகத்துத் தமிழ் நாடக அரங்கியல் பணிகளை ஆவணப்படுத்து-கின்றது. சிவானந்தனின் இவ்வாய்வு 13 அத்தியாயங்களைக் கொண்டது. முதலில் பல்கலைக்கழகத்தில் அரங்கேறிய நாடகங்களை உருவம், பொருளுக்கேற்ப வகுத்து, அடுத்துக் காலகட்டங்களை நிர்ணயஞ்செய்து கொண்டு, தொடர்ந்து பெருகும் பல்கலைக்கழகத் தொகையினை முதலிரண்டுடனும் இயைபுறுத்தித் தன் ஆய்வில்*



படிப்பகம்

www.padippakam.com



இறங்குகின்றார். நாடகங்களை வகுத்துள்ள முறைமை, நாடகாசிரியரையும் நாடகத்தையும் இணைக்கும் முறைமை, நெறியாளர்கள் பற்றிக் குறிப்பிடும் முறைமை ஆகியவற்றை நோக்கும்போது இது அரங்கியல் நெறிநின்ற நாடக வரலாறு என்பது புலனாகின்றது. 1970இல் கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்ட நடிகர் ஒன்றியத்தின் முதலாவது வெளியீடு இதுவாகும்.

### 3345

**பனிமழையில் கூத்தாடி.** ஏ.ஜீ.யோகராஜா, லா.சண்முகராஜா (தொகுப்பாசிரியர்கள்). சுவிட்லர்லாந்து: சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி, AztZ, Emmenmattstrasse 15, 6020 Emmenbrucke, Schweiz, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*119 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி உள்ளுறைவுகளாக அமையும் இந்த நூல் அவர்களது அரங்கியல் செயற்பாடுகளின் அனுபவப் பகிர்வாக பதிவுக்குள்ளாகின்றது. இந்த நாடகக் கல்லூரியின் மூன்றாண்டுக் கால வளர்ச்சியை இதிலுள்ள தனித்தனி நினைவுப் பதிகைகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## 793 திரைப்படக்கலை

### 3346

**சீரழிய சினிமாவைப் பாருங்கள்.** டீ.எஸ்.ஏ.ரசூல் (மூலம்), எம்.எஸ்.எம்.ஹனிப் (பதிப்பாசிரியர்), கொழும்பு 12: றஹ்மானியா பதிப்பகம், 25 1/1 டாம் வீதி, 3வது பதிப்பு, ஓகஸ்ட் 1973, 1வது பதிப்பு, மே 1969, 2வது பதிப்பு, 1970. (கொழும்பு 12: றஹ்மானியா பதிப்பகம், 25 1/1 டாம் வீதி).

*48 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18.5x12.5 சமீ.*

டி.எஸ்.ஏ.ரசூல் அவர்கள் இந்தியாவின் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல முஸ்லீம் எழுத்தாளர்களுள் ஒருவராவார். இவரால் 1966ம் ஆண்டில் எழுதப்பட்டு இந்தியாவில் பதிப்பிக்கப்பட்ட இந்நூலினை நூலாசிரியர் அனுமதியுடன் இலங்கையில் அல்ஹாஜ் மௌலவி



படிப்பகம்

www.padippakam.com



எம்.எஸ்.எம்.ஹனிப் அவர்கள் 1969இல் பதிப்பித்திருந்தார். 16 தலைப்புகளின் கீழ் எழுதப்பட்ட இந்நூல் திரைப்படத்தினால் ஏற்படக்கூடிய தீமைகளை மட்டுமே எடுத்துக்காட்டுகின்றது.

## 796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

### 3347

**அஸ்கிரிய முதல் லாஹூர் வரை.** நூராணியா ஹசன். மாவனல்லை: நூராணியா வெளியீட்டகம், உயன்வத்தை, தெவனகல, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (மாவனல்ல: எம்.ஜே.எம். பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).

xii, 60 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 40., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-96296-0-3.

ஒரு தமிழ் நேர்முக வர்ணனையாளரின் உலக கிண்ண கிரிக்கெட் அனுபவங்களாக இந்நூல் வெளிவந்துள்ளது. 1996 மார்ச் 17ம் திகதி நடந்தேறிய உலக கிண்ண இறுதி ஆட்டம் பாக்கிஸ்தானின் லாகூரில் நடைபெற்றது. அவ்வேளையில் தமிழில் நேர்முக வர்ணனையாளராகப் பணியாற்றியவர் இந்நூலாசிரியர். உலகக் கிண்ணத் தொடர் குறித்து முதன்முதலாக விமர்சன ரீதியாகத் தமிழில் வெளிவந்த நூல் இதுவாகும். தினகரன் வாரமஞ்சரியில் எட்டு வாரங்கள் கட்டுரையாகத் தொடர்ந்து வெளிவந்தது. பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான நூலாசிரியர் தன் பெயருடன் தான் கற்ற பாடசாலையின் பெயரையும் சேர்த்துக்கொண்டுள்ளார்.

### 3348

**எனது பார்வை.** நூராணியா ஹசன். கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/13 பூரணவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (மாவனல்லை: எம்.ஜே.எம். பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி)

xvi, 128 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-8335-00-2.

இலங்கையில் தமிழ்மொழியில் விளையாட்டுத்துறை நூல்கள் வெளிவருவது மிகக் குறைவாக உள்ள நிலையில், நூராணியா ஹசன் எழுதி, அவ்வப்போது வானொலியில் ஒலிபரப்பப்பட்டதும் பத்திரிகைகளில் பிரசுரமானதுமான 17 விளையாட்டுத்துறை விமர்சனக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவில் வெளிவந்துள்-



படிப்பகம்

www.padippakam.com



என. கிரிக்கெட் உலகம் பற்றி பல சுவையான தகவல்களைத் தாங்கியதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### 3349

**குரும்பசிட்டி மக்களின் விளையாட்டுத்துறை: ஓர் ஆய்வு.** சு.இளங்கோவன். தெல்லிப்பழை: உதயதாரகை மன்றம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, ஆடி 2005. (திருநெல்வேலி: குரு பிரிண்டர்ஸ், ஆடியபாதம் வீதி).

v, 121 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

மன்னார், முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவரான சுப்பையா இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உடற்கல்வியுடன் உள்நாட்டு உயிர்வளத் தொழில்நுட்பத்தையும் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த நாடகக் கலைஞர். யாழ்ற்றன் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவ்வாய்வு பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா பயிற்சியின் ஒரு பகுதித் தேவையை நிவர்த்திசெய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் போரால் அழிந்துபோய் பெயரளவில் மட்டும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு கிராமத்தின் புகழையும், அக்கிராம மக்களின் கல்வி, விளையாட்டுத்துறை வளர்ச்சியையும் பதிவுசெய்துவைக்கும் வரலாற்று ஆவணமாக இவ்வாய்வு அமைகின்றது.

### 3350

**வலைப்பந்தாட்டம்.** த.ம.தேவேந்திரன். வவுனியா: உடற்கல்வி மன்றம், தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, சித்திரை 1999. (கொழும்பு 6: நியு கார்த்திகேயன் பதிப்பகம், 501/2, காலி வீதி, வெள்ளவத்தை).

(10), 68 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 80., அளவு: 21.5x15 சமீ.

வலைபந்தாட்ட (NetBall) வரலாற்றை சுருக்கமாகவும், புதிய விதிகளைத் தெளிவாகவும் இந்நூல் வழங்குகின்றது. வலைபந்தாட்ட வீரர்களின் பண்புகள், நுட்பதிட்பங்கள், அவை தொடர்பான குறிப்புகள் என்பவற்றை விளக்கப்படங்களின் உதவியுடன் வழங்குகின்றது. திறன்கள், திறன்களைப் பயிற்றுவித்தல், பயிற்சி, திட்டமிடல், போன்ற விடயங்களும் உதாரணங்களுடன் இந்நூலில் காணமுடிகின்றது. இந்நூலாசிரியர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உடற்கல்-



படிப்பகம்

www.padippakam.com



வித் துறை விரிவுரையாளரும், வவுனியா மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தின் தலைவருமாவார். இது இவரது பத்தாவது நூலாகும்.

# 800 இலக்கியம்

## 801 சிறுவர் இலக்கியங்கள்

## 801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

### 3351

**உயிர் காத்த ஓவியம்: சிறுவர் பாடல்கள்.** *பா.சத்தியசீலன். மானிப்பாய்: ச.கலாதேவி, கலைவண்ணம், சின்னப்பா வீதி, நவாலி தெற்கு, 1வது பதிப்பு, ஜுன் 1991. (ஆனைக்கோட்டை: மஞ்சரி பதிப்பகம்)*

*32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 40., அளவு: 20.5X14 சமீ.*

*நூலாசிரியர் எழுதிய புதிர்ப் பாடல்கள், கதைப்பாடல்கள் என்பனவற்றின் தொகுப்பு. 13 தனிப்பாடல்கள், 12 புதிர்ப் பாடல்கள், பன்றியாரை வென்றுவிட்ட பாட்டி அம்மா, அந்த அதிசயமான பாத அணிகள், உயிர்காத்த ஓவியம், கெட்டிக்காரன் என்றாலும், குழப்படியும் குளப்படியும் முதலிய பிற கவிதைகள் அடங்கியது. தனித்தனியாக முன்னர் வெளிவந்து தமிழ்ச் சிறார்களை இன்புறுத்திய இப்புதிர்ப்பாடல்களும், பாட்டுக் கூத்துகளும் கவிஞர் சத்தியசீலனின் எழுத்துலக வெள்ளிவிழாவை முன்னிட்டு சிறப்புத் தொகுதியாக 7.6.1991அன்று வெளியிடப்பட்டது.*

### 3352

**எங்கள் உலகம்.** *ஜின்னாஹ் (இயற்பெயர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).*

vii, *24 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5X14.5 சமீ.*

*கடலில் மிதக்கும் மாடிவீடு என்ற தனது கன்னிப் படைப்பை அடுத்து அதே பாணியில் உருவாக்கிய இரண்டாவது சிறுவர் பாடல் தொகுப்பு*



படிப்பகம்

www.padippakam.com



இது. பல்லினமான 12 பொருள் தலைப்புகளில் அமைந்த சிறுவர் பாடல்கள் முழுப்பக்க சித்திரங்களைக் கொண்டதாக நூலுருவில் தொகுக்கப்பட்டுள்ளன.

## 3353

**கடலில் மிதக்கும் மாடிவீடு.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, மார்ச் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).

V, 26 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISBN: 955-97349-1-1.

35 ஆண்டுகளுக்கும் மேலாக கவிஞராகவும், காவியகர்த்தாவாகவும் புனைகதை எழுத்தாளராகவும் அறியப்பட்ட ஆசிரியரின் முதலாவது சிறுவர் இலக்கிய அறுவடையான இது 13 சிறுவர் பாடல்களின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் முழுப்பக்கச் சித்திரங்கள் மெருகூட்டுகின்றன.

## 3354

**குட்டிகளுக்குப் பாட்டுக்கள்.** நந்தி. (இயற்பெயர்: செ.சிவஞான-சுந்தரம்), தே.தேவானந் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: செயல்திறன் அரங்க இயக்கம், Active Theatre Movement, அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 2005. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ், 103, பலாலி வீதி).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x19.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரான அமரர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் அவர்கள் சிறுவர்களுக்காக எழுதிய பாடல்கள் கொண்ட தொகுப்பு, அவரது மறைவின் 31ம் நாள் நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. சிறுவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட அமரர் நந்தி, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு மனித மேம்பாட்டுக் கல்விக் கருத்தரங்குகளை நடத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். இக்காலப் பகுதியில் சிறுவர்களுக்காக சிறு பாடல்களை அவ்வப்போது எழுதிச் சேர்த்திருந்தார். அவற்றைத் தொகுத்தே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3355

**குழந்தைக் குரல்.** க.ச.கந்தசாமி. சங்கானை: சங்கானை மத்திய அபிவிருத்திச் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1979. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432 காங்கேசன்துறை வீதி).

xiv, 49 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

காந்தி அடிகளாரின் இலங்கை வருகையின் 50 ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையிலும், குழந்தைகள் ஆண்டு நினைவினைக் குறிக்கும் வகையிலும், சர்வதேச சிறுவர் ஆண்டில் இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் 41 குழந்தைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### 3356

**சின்னச் சிட்டுக்கள்.** அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஆனி 2005. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்டர்ஸ், 44, புகையிரத நிலைய வீதி).

36 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8715-24-7.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 28ஆவது வெளியீடு. நிலை – 2 சிறுவர்களுக்காக எழுதப்பட்ட 30 பாடல்களைக் கொண்டது. சிறுவர்கள் பாடி, ஆடச் சிறந்த நூலாகவும் அமைகின்றது. பாடல்களுக்கான சித்திரங்களை ஞானகுரு, சுசிமன், நிர்மலவாசன் ஆகியோர் வரைந்துள்ளனர். இதுவரை 30 நூல்களை வெளியிட்டுள்ள அகளங்கன் பண்டைய தமிழ் மணத்தையும், இன்றைய தமிழ் உணர்வையும் தனது எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும் வாழ்வியலாலும் மக்கள் மத்தியில் பரப்பி வருபவர். தேசிய, வடக்கு-கிழக்கு மாகாண சாகித்திய விருதுகள், ஆளுநர் விருதுகள் மற்றும் அரச, அரச சார்பற்ற, சமூக, சமய நிறவனங்களின் தேசிய விருதுகளையும் தன் படைப்புகளுக்காகப் பெற்றவர்.

### 3357

**பாப்பா பாடல்கள்.** கல்வயல் வே.குமாரசாமி. சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/



படிப்பகம்

www.padippakam.com



1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஜுலை 1995. (சென்னை 41: சூர்யா அச்சகம்).

(4), 63 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 14., அளவு: 21x13.5 சமீ.

குழந்தைகளுக்கான பாக்கள் புனைவது ஒரு சவால் என்றே சொல்லவேண்டும். பாலருடைய அனுபவப் பரப்புக்குள்ளும் அவர்களுடைய சொற்களஞ்சியத்துக்குள்ளும் நின்று கொண்டு பாட எல்லோராலும் முடிவதில்லை. கவிஞர் குமாரசாமி அவர்கள் இதில் சமர்த்தர் என்பதை அவரது 63 பாடல்களும் நிரூபித்துள்ளன. நடப்பியல் நுணுக்கமும் நம்பகத்தன்மையும் கவிஞர் குமாரசாமியின் பாடல்களில் உள்ள சிறப்பியல்புகளாகும். பாப்பாக்களின் அனுபவத்தோடு, மனித உறவாடலின் பாற்படும் அனுபவங்களையும் இணைத்துக் காட்டுகின்றார். இதில் அ/றிணை விலங்குப் பெயர்கள் பலவும் உயர்திணை விகுதி பெற்று வருகின்றன. இவ்வாறு வருவதால், அவையும் மனித உறவாடலுக்கு உரியனவாகக் குழந்தை மனங்களின் பொருட்டுப் பாவனை செய்யப்படுகின்றன. கவிஞர் வே.குமாரசாமி அவர்களின் பாடல்கள் குழந்தைத் தமிழ்ப் பாடல் இலக்கியத்துக்கு ஓர் உயரிய முன்னுதாரணமாகவும் சிறந்த பங்களிப்பாகவும் திகழ்கின்றது.

## 3358

**பிள்ளை மொழி.** தாமரைத்தீவான் (இயற்பெயர்: சோ.இராசேந்திரம்). திருக்கோணமலை: அன்பர் நிதியம், 282/2 திருஞானசம்பந்தர் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1992. (கொழும்பு 13: Oskha Enterprises, 149 B, Jampettah Street).

(8), 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

ஈழத்தின் சுதந்திரன் பத்திரிகைப் பண்ணையில் 50களில் முகிழ்ந்தவர் கவிஞர் தாமரைத்தீவான். கிழக்கிலங்கையின் கிண்ணியாப் பிரதேசத்தின் தாமரைத்தீவில் பிறந்து ஈச்சந்தீவில் வளர்ந்த முன்னணிக் கவிஞரான இவரது சிந்தனையும் உணர்வும் எழுத்தும் வலிமைமிக்கவை.

## 3359

**பூக்கள் விடும் பட்டம்.** நகுலா சிவநாதன் (தொகுப்பாசிரியர்). இங்கிலாந்து: First Audio, லண்டன் தமிழ் வானொலி, 1வது பதிப்பு,



படிப்பகம்

www.padippakam.com



ஏப்ரல் 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

165 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5X19 சமீ.

லண்டனில் ஊடகவியலாளர் நடாமோகன் அவர்களின் First Audio என்ற லண்டன் தமிழ் வானொலிச் சேவை சிறுவர்களிடையே ஆக்க இலக்கிய ஆற்றலையும், கவித்திறனையும் வளர்க்கும் நோக்குடன் **ஓடி விளையாடு பாப்பா** என்ற சிறுவர் நிகழ்வை நடத்திவந்தது. அந்நிகழ்வில் பட்டம் நல்ல பட்டம், பூவே நல்ல பூவே என்ற இரு தலைப்புக்கள் வழங்கப்பட்டு அத்தலைப்புக்குப் பொருத்தமான பாடல்களை சிறார்களைக் கொண்டு இயற்றுவித்து அவர்களைக்கொண்டே வானொலியில் பாடவைத்தார். இவ்வரங்கில் 155 சிறுவர்கள் பங்கேற்றனர். இவர்கள் பெரும்பாலும் 12வயதுக்குட்பட்டவர்கள். இப்பாடல்கள் அனைத்தையும் தொகுத்து, அவர்களது புகைப்படங்களுடன் அழகான நூலுருவில் தொகுப்பாசிரியர் நகுலா வழங்கியுள்ளார். நகுலா சிவநாதன் ஜேர்மனியில் தமிழ்ப்பள்ளியொன்றின் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இவர் சிறுவர் வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள், மழலைகளுக்கான பாடல்கள், அன்னையின் வளர்ப்பில் அரும்புகள், முனைப்புடன் எழு ஆகிய நூல்களின் ஆசிரியருமாவார்.

**மேலும் பார்க்க: 3891**

## 801.(2) சிறுவர் நாடகங்கள்

### 3360

**பஞ்சவர்ண நரியார்.** குழந்தை ம.சண்முகலிங்கம். யாழ்ப்பாணம்: செயல்திறன் அரங்க இயக்கம் (Active Theatre Movement), அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுலை 2004. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரிண்டர்ஸ், 103, பலாலி வீதி).

ix, 42 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 20X14 சமீ., ISBN: 955-98711-0-2.

கூடி விளையாடு பாப்பா என்ற சிறுவர் நாடகத்தை எழுதியதன் மூலம் குழந்தை என்ற அடைமொழியைப் பெற்றுக்கொண்ட ம.சண்முகலிங்கம் அவர்களின் எழுத்திலும் நெறியாள்கையிலும் உருவான



படிப்பகம்

www.padippakam.com



இரண்டாவது சிறுவர் நாடகம் இதுவாகும். யாழ்ப்பாண மாவட்டத்தின் 50 ஆரம்பப் பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டு 23000 சிறுவர்களை மகிழ்வித்த இந்நாடகம் நிறம் மாறிய ஒரு நரியின் கதையாகும். மேற்படி நாடக எழுத்துருவுடன், "கூடிப்பறைந்து கற்கும் அரங்கு" என்ற தலைப்பில் சிறுவர் அரங்கிற்கான நாடகப் படைப்பாக்கப் படிமுறை பற்றிய தே.தேவானந்த் அவர்களின் மனப்பதிவு, "பள்ளி எழுந்துவரும் எங்கள் பஞ்சவர்ண நரியார் - சிறுவர் நாடகம்" என்ற தலைப்பில் நா.சிவசிதம்பரம் அவர்கள் எழுதிய விமர்சன உரை என்பன இச்சிறுவர் நாடக நூலை அரங்கியல் கற்கையில் ஈடுபாடுகொண்ட வளர்ந்தோருக்கும் உரியதாக ஆக்கியுள்ளது.

### 3361

**பிள்ளை அழுத கண்ணீர்.** சி.ஜெய்சங்கர். திருக்கோணமலை: கீழைத் தென்றல் கலாமன்றம், 58 சீ, லோவர் ரோட், உவர்மலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (திருக்கோணமலை: விஸ்டம் அச்சகம்).

(8), 14 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18.5x14.5 சமீ.

இன்று உலகைக் குலுக்கும் பிரச்சினையான சூழல் மாசடைதல் என்ற பரந்த கருப்பொருளின் ஒரு பகுதியான மரம் வளர்த்தல் தொடர்பான கருத்தாழம் மிக்க நாடகம் இதுவாகும். அன்ரனியோ கிராம்ஷியின் குட்டிக்கதை ஒன்றினையும், பாலுக்குப் பாலகன் என்னும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகத்தையும் தழுவி ஆக்கப்பெற்றது. நூலாசிரியர் மட்டக்களப்பு, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவின் விரிவுரையாளராவார்.

**மேலும் பார்க்க: 3891**

## 801.(4) சிறுவர் சிறுகதைகள்

### 3362

**அணில் வால்.** திமிலைத் துமிலன். (இயற்பெயர்: சி.கிருஷ்ண-பிள்ளை) மட்டக்களப்பு: கவிமணி வெளியீட்டுக் குழு, அரசினர் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65 லேடி மனிங் டிரைவ்).

vi, 104 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 55., அளவு: 21x16.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



கவிமணி வெளியீட்டின் ஐந்தாவது நூலாக வெளிவந்துள்ள இச்சிறுவர் இலக்கியம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. **உரையும் கதையும்** என்ற முதற் பகுதியில் அணில் வால், ஆமையும் அன்னமும், இலையில் ஒரு புழு, ஈசலும் புற்றும் என்னும் நான்கு கதைகளும், **கதையும் பாட்டும்** என்ற இரண்டாம் பகுதியில் பாட்டுகளுடன் கூடிய கதைகளாக உழைப்பும் உதவியும், ஊரே போற்றும் உத்தமி, எல்லையில் தீவினை, ஏழ்மையும் ஏணிதான், ஐயமில் சால்பு, ஒரு திருடன் உண்மை பேசுகிறான், ஓடும் ரயிலில் ஒரு கிழவன், ஔடதம் அருளிய முனிவர் ஆகிய எட்டுக் கதைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கலாசாலையின் தமிழ்ப் பேராசானாகப் பணியாற்றியவர் கவிமணி திமிலைத்துமிலன்.

## 3363

**அந்த அழகான பூனை.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: செல்வி ராமேஸ்வரன் வெளியீடு, E 2/4, அண்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, 2002. (மகரகம: தரஞ்ஜீ பிரிண்டர்ஸ், நாவின்ன).

(6), 41 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-96039-8-1.

அந்த அழகான பூனை, நேர்மைக்குப் பரிசு, பிறந்தநாள் அன்பளிப்பு, ஐந்தில் வளையாதது, உயிர்த் தோழிகள், அதிமேதாவி, புதுச் சட்டை, ஆகிய சிறுவர்க்குரிய ஏழு கதைகளைக் கொண்டது. இக்கதைகள் எளிய மொழிநடையில் சாகசங்கள் நிறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டதாகவும், விறுவிறுப்பான நடையில் படிப்பினை ஊட்டக்கூடியதாகவும் விளங்குகின்றன.

## 3364

**அன்புள்ள அப்பா.** தேவராசா ஷர்மிலன். வேலணை 3: தேவராசா ஷர்மிலன், வேலணை கிழக்கு, 1வது பதிப்பு, பதிப்பு விபரம் இல்லை. (வேலணை: கேதீஸ் அச்சகம், துறையூர்).

v, 61 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பில் பயிலும் மாணவன் ஷர்மிலனின் ஒன்பது சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை என்று பன்முக ஆர்வமுள்ள ஷர்மிலன் பல போட்டிகளில்



படிப்பகம்

www.padippakam.com



பரிசில்களையும் பெற்றுக்கொண்டவர். இந்நூலிலுள்ள தீபாவளிப் பரிசு என்ற கதை மித்திரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

## 3365

**ஆசையினாலே மனம்: உருவகக் கதைகள்.** இராசவல்லவன் இராசயோகன். ஆனைக்கோட்டை: பூமா இராசயோகன், சங்கரப்பிள்ளை வீதி, 1வது பதிப்பு, 2001. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

*(10), 70 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5X12.5 சமீ.*

மிருகங்கள், பறவைகளின் இயல்புகளையும், பழக்க வழக்கங்களையும் நன்கு அவதானித்து, காரண காரியங்களைப் பொருத்தமாகத் தொடர்புபடுத்தி, சிறுவர்களுக்குத் தேவையான நீதிகளையும் புத்திமதிகளையும் ஆங்காங்கே நயமாகப் புகுத்தி இக்கதைகளை எழுதியுள்ளார். நன்றி மறப்பது நன்றன்று, துட்டரைக் கண்டால் தூரவிலகு, மன ஆசை மாறாத துன்பம், ஆழம் அறிந்து காலை விடு, எண்ணித் துணிக கருமம், பாவத்தின் கூலி மரணம், அடாது செய்தவர் படாது படுவார், உள்வீட்டுப் பகை ஊருக்கு உபகாரமானது, ஆகிய அன்றாடம் பரிச்சயமான நீதிமொழிகளை இதிலுள்ள கதைகள் போதிக்கின்றன.

## 3366

**ஆயிரம் கொக்குகள்.** யோ.சத்யன். சென்னை 26: படைப்பாளிகள் பதிப்பகம், 92, முதல் தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை 14: ஜோதி ஆப்செட், 1/159, வி.எம். தெரு, இராயப்பேட்டை).

*128 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18X12 சமீ.*

ஈழத்து எழுத்தாளர் செ.யோகநாதனின் மகன் யோ.சத்யனின் பதினேழு சிறுவர் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. எளிமையான நடை, குழந்தைகளுக்கு ஏற்ற சொல்வளம், அருமையான கருத்து, எவரையும் வசீகரிக்கும் கதை சொல்லும் முறை என்பன சத்யனுக்கு சிறப்பாகக் கைவந்துள்ளது. மனதைக் கவரும் ட்ரொஸ்கி மருதுவின் ஓவியங்கள் இந்நூலின் மற்றொரு சிறப்பம்சம். **நமது குழந்தை இலக்கியம்** என்ற தலைப்பில் செ.யோகநாதனின் விரிவான முன்னுரையுடன் கூடியது.



படிப்பகம்

www.padippakam.com



## 3367

**சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 2வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, அக்டோபர் 1995. (சென்னை 600094: சிவா கிரப்பிக்ஸ்).

151 பக்கம், விலை: இந்திய ரூபா 48., அளவு: 18x12 சமீ.

இச்சிறு நூலின் கதைகள் பல உலகப் புகழ்பெற்றவை. சிறுவரின் சிந்தனை ஆற்றலை வளர்க்கவல்லவை. இந்திய, அமெரிக்க, ஆங்கிலேய, சீன, பாரசீகக் கதைகள், நாடோடிக் கதைகளில் தேர்ந்து தரப்பட்டுள்ளன. வளர்ச்சியடைந்து வரும் இன்றைய விஞ்ஞான அறிவிற்கேற்ப சில மீள எழுதப்பட்டுள்ளன. அத்தோடு ஆசிரியரின் சிந்தனையூட்டும் கதைகளும் உள்ளன. இக்கதைகளில் ஆழமான கருத்துக்கள் பொதிந்திருப்பதை விழிப்பாகக் கற்பவர் அறிவர்.

## 3368

**சிறுவர்களுக்கு அமுதமான கதைகள்.** ஈழமுருகதாசன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ/ப்செட்)

xii, 52 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 20., அளவு: 17.5x12 சமீ.

ஏப்ரல் 1993இல் அமரர் சின்ன இராஜேஸ்வரன் அவர்களால் வெளியிடப்பட்ட சிறுவர் கதைகள் மீண்டும் மறுபிரசுரமாகியுள்ளது. இதிலுள்ள 17 கதைகளும் சிறுவர்களுக்கு ஏற்ற நன்நெறிப் போதனை வழங்குவதாக உள்ளன. கதைகள் புகட்டும் நீதி போதனை ஒவ்வொரு கதையின் இறுதியிலும் தரப்பட்டுள்ளன.

## 3369

**சிறுவருக்கான சிந்தனைக் கதைகள்.** யோகேஸ்வரி கணேசலிங்கம். கொழும்பு 6: திருவருள் வெளியீடு, 5/4, விக்டோரியா கோர்ட், 54, சென் லோரன்ஸ் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

68 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22.5x15 சமீ., ISBN: 955-99437-0-7



படிப்பகம்

www.padippakam.com



சிறுவர்களிடையே ஒழுக்கவியல் சார்ந்த சிந்தனையை வளர்த்தெடுக்கும் நோக்குடன் படைக்கப்பட்ட 10 சிறுவர் கதைகளைக் கொண்டது இந்நூல். இடைக்கிடையே சித்திரங்கள் காணப்படுகின்றன.

## 3370

**மலரும் மொட்டுக்கள்.** நூலியல் விபரம் கொண்ட தலைப்புப் பக்கம் அச்சிடப்படவில்லை. 1வது பதிப்பு, 2005. (கொழும்பு: லட்சுமி அச்சகம்)

v, 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

லண்டன் தமிழ் வானொலி நிகழ்வுகளில் பங்குகொள்ளும் சிறுவர்கள் இணைந்து படைத்த நூல். இதில் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சிறுவர்களால் தத்தம் நாட்டு மொழிகளில் வழக்கிலிருந்த குட்டிக்கதைகள் உள்வாங்கப்பட்டு தமிழில் மீள்வடிவம் தரப்பட்டுள்ளன. இப்படி உருவாக்கப்பட்ட 92 குட்டிக்கதைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. ஜேர்மனி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் பரம. விசுவலிங்கம் அவர்களின் விதப்புரையும், இலங்கை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அவர்களின் 14.6.2005 திகதியிட்ட வாழ்த்துரையும் மட்டும் நூல் பற்றிய சில பின்னணித் தகவல்களை வழங்குகின்றன.

## 3371

**மாறன் மணிக்கதைகள்.** பொ.கனகசபாபதி. ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, Brinker Hohe 13, 58507 Ludenscheid, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000.

16 பக்கம், வண்ண ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30.5x22 சமீ.

தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் ஸ்கார்பரோ மாநிலப் பகுதியில் வாழ்ந்து வரும் தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி அவர்களின் ஆறு சிறுவர் கதைகள் இதில் இடம்பெறுகின்றன. எல்லா உயிரையும் நேசிப்போம், குழந்தைப் பாசம், தாய்ப்பாசம், பசிக்கு உணவு கொடு, சுட்டபழம், நன்றி மறவேல், ஆகிய கதைகள் சிறுவர்க்குரிய நீதி போதனைகளாகவும் இந்நூலில் இடம்பெறுகின்றன. இந்நூலின் ஓவியங்களை வெற்றிமணி (ஜேர்மனி) ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தீட்டியிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3372

**மாறன் மணிக்கதைகள் 2.** ச.பொ.கனகசபாபதி. தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, மே 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ்).

v, 12 பக்கம், வண்ண ஓவியங்கள், விலை: ரூபா 300., அளவு: 29.5.X21 சமீ.

தற்போது புலம்பெயர்ந்து கனடா (ஸ்கார்பரோ) பெருநகர்ப்பகுதியில் வாழ்ந்து வரும் தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி அவர்களின் ஆறு சிறுவர் கதைகள் இதில் இடம்பெறுகின்றன. ஆமையும் எலியும், நன்றி மறவாத டொல்ஃபீன், புத்தியுள்ள கொக்கு, சுறாமீனும் பெண்மணியும், குழந்தையும் கொறில்லாவும், குழந்தையும் துருவக் கரடியும் ஆகிய விலங்குக் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இக்குழந்தை இலக்கியத்திற்கான வண்ணப்படங்களை எஸ்.துரைவீரசிங்கம் தீட்டியுள்ளார்.

### 3373

**வண்ண மலர்கள்: நல்வழிச் சிறுகதைகள்.** இராஜ்கண்ணா. (இயற்பெயர்: சகாதேவன் ராஜ்தேவன்). நோர்வே: கண்ணன் வெளியீட்டகம், Drammens v-4, 6060 Hareid, 1வது பதிப்பு, புரட்டாதி 2005. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 361- ½, டாம் வீதி).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14.5 சமீ.

சிறுவர்களுக்குரிய 10 நன்னெறிக் கதைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு கதையின் இறுதியிலும் கதைக்கேற்ற சிறுவர் பாடல் வரிகள் காணப்படுகின்றன. இக்கதைகள் நெய்தல் இணையத் தளத்தில் அவ்வப்போது பிரசுரமாகியிருந்தன.

## 801.(5) சிறுவர் நாவல்கள்

### 3374

**ஏழு நண்பர்கள்.** செ.யோகநாதன். புத்தளம்: தேனுகா பதிப்பகம், 58/3, அனுராதபுரம் வீதி, 1வது பதிப்பு, 2000. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).



படிப்பகம்

www.padippakam.com



72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 18.5x12.5 சமீ.

ஓவியர் ஞானதாசனின் சித்திரங்களுடன் கூடிய இக்கதை, யாழ் நகர்க் கிராமமான பூஞ்சோலையில் வாழ்ந்த இரத்தினம் என்பவரிடம் வளர்ந்த அழகு என்ற கழுதை பற்றியது. மனிதர்களிடையே வசித்த அழகு என்ற அக்கழுதை, நாய், பூனை முதலிய வேறு விலங்குகளுடன் சேர்ந்து தத்தம் எஜமானரை விட்டுப் பிரிந்து போய் ஓர் இசைக்குழுவாகச் சேர்ந்து காட்டில் வசித்தல் சுவாரஸ்யமான கதையாகின்றது. எழுத்தாளர் யோகநாதன் தங்கத்தாமரை என்ற குழந்தை இலக்கியத்துக்காக சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவர். தங்கத் தாமரை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. இதுவரை பத்துக்கும் மேற்பட்ட குழந்தை இலக்கியங்களை எழுதியவர் இவர்.

## 3375

**சுதந்திரம்.** ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: பிரியா பிரசுரம், அமிர்தகழி, 1வது பதிப்பு, மார்கழி 1995. (வவுனியா: ஆதவன் அச்சகம், தர்மலிங்கம் வீதி).

38 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5x12.5 சமீ.

தந்தம், கொம்பு, பல், தோல் என்பவற்றுக்காக வனவிலங்குகளை வேட்டையாடுகின்றவர்களைக் கைதுசெய்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளின் தீரச் செயல்கள் இந்நாவலில் சொல்லப்படுகின்றன. வீர ஆனந்தன் என்ற சிறுவர் நாவலும் இந்நூலின் மறுவளமாக 38 பக்கங்களில் இணைக்கப்பட்டுள்ளது.

## 3376

**தங்கப் புதையல்.** யோ.சத்யன். கொழும்பு 6: அட்மிரல் பப்ளிஷர்ஸ், 403 -1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 6: Quick Tec Academy, 385-2/9, Galle Road).

(2), 46 பக்கம், படங்கள், விலை: ரூபா 90., அளவு: 21.5x14.5 சமீ.

குட்டி நாயாரும் கோழிக் குஞ்சும் பூனைக் குட்டியாரும் ஒரு தங்கப் புதையலைத் தேடி பலூன் ஒன்றில் வான்வழியாகச் செல்லும் பயணமே இச்சிறுவர் நாவலாக வளர்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3377

**நீலராணி.** சி.சுதந்திரராஜா. யாழ்ப்பாணம்: சி.சுதந்திரராஜா, தாவடி வடக்கு, 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம், நாச்சிமார் கோவிலடி).

40 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20X14 சமீ.

தினபதி நாளிதழில் 06.06.1967 முதல் 25.07.1967 வரை எட்டு இதழ்களில் பிரசுரமாகியிருந்த சிறுவர் நாவல் இது. மழைக்குறி என்ற நாவல் மூலம் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய உலகிற்கு நன்கு பரிச்சயமானவர் சுதந்திரராஜா. 1972ம் ஆண்டிலிருந்து இன்று வரை எழுதிவருகின்றார். இவரது இரு சிறுகதைத் தொகுப்புகள் "சிறுகதை" என்ற தலைப்பில் வெளியாகியுள்ளன. மல்லிகை, தாயகம், நவமணி, தினகரன், கணையாழி போன்ற ஏடுகள் இவரது ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

### 3378

**வீர ஆனந்தன்.** ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: பிரியா பிரசுரம், அமிர்தகழி, 1வது பதிப்பு மார்கழி 1995. (வவுனியா: ஆதவன் அச்சகம், தர்மலிங்கம் வீதி).

(8), 39-76 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5X12.5 சமீ.

கொள்ளைக்காரர்களிடம் அகப்பட்ட சிறுவன் ஒருவன் துணிகரச் செயல்கள் பல புரிந்து அவர்களிடமிருந்து தப்பிவருவதை குணநாதன் சுவையான சிறுவர் கதையாக்கியுள்ளார். இந்நூலின் மறுவளமாக 38 பக்கத்தில் அமைந்த குணநாதனின் மற்றுமொரு படைப்பான **சுதந்திரம்** என்னும் சிறுவர் நாவலும் அச்சிட்டு இணைக்கப்பட்டுள்ளது. (நூல்தேட்டம் பதிவு: 3375)

## 801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்

### 3379

**உலக அதிசயங்கள்.** மாதவன் (இயற்பெயர்: செ.கணேசலிங்கன்). சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, மே 2003. (சென்னை: சிவம்ஸ்).



படிப்பகம்

www.padippakam.com



96 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18X12 சமீ.

உலக அதிசயங்கள் ஏழு என நீண்டகாலமாகக் கூறப்பட்டு வந்தது. வரலாற்றுக் காலத்தின் பழமையும் சிறப்பும் பற்றியே அவை கணிக்கப்பட்டன. ஏழு அதிசயங்கள் எனக் கூறப்பட்டவற்றில் சீனப் பெருஞ்சுவர், பிசா நகர சாய்ந்த கோபுரம், தாஜ்மகால் குறிப்பிடப்படவில்லை. இந்நூல் குறிப்பிட்ட அந்த ஏழு அதிசயங்களுடன் மற்றும் 33 அதிசயங்களைக் கூறுகின்றது. எகிப்திய கூர்நுதிக் கோபுரங்கள் (Pyramids) தொடக்கம் மலேசியாவின் பெற்றோனிசக் கோபுரம் வரை இந்நூல் குறிப்பிடுகின்றது.

## 3380

**உலகச் சமயங்கள்.** மாதவன் (இயற்பெயர்: செ.கணேசலிங்கன்). புதுக்கோட்டை மாவட்டம்: அருண்மொழிப் பதிப்பகம், 35, N.G.O.காலனி, புதுக்கோட்டை நகரம் 622 001, 1வது பதிப்பு, 1999. (சென்னை 600 014: மொனார்க் கிராப்பிக்ஸ்).

56 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 17.5X12 சமீ.

அறியப்பட்ட உலகச் சமயங்களான இந்து, சமண, புத்த, சீக்கிய, சோராட்டானிச, யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் சமயங்களுடன் பெரிதும் அறியப்படாத தாவோசியம், கன்பூசியம், சித்தர்கள், சூபிசம் ஆகியவற்றையும் இந்நூல் அறிமுகப்படுத்துகின்றது. சிறுவர்களுக்கு மாத்திரமன்றி பெரியோருக்கும் ஏற்றவகையில் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

## 3381

**உலகை மேம்படுத்திய சிந்தனையாளர்கள்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஜுலை 2003. (சென்னை: சிவம்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18X12 சமீ.

கடந்த 500 ஆண்டுகளில் மனித இனம் பெரும் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. வானமண்டலத்தின் மையம் பூமி எனவும் சூரியன் பூமியைச் சுற்றி வருவதாகவும் எண்ணிய அறியாமைக்காலம் 17ம் நூற்றாண்டுவரை நிலவியது. இன்று சந்திர மண்டலத்தில் காலடி பதிக்கும்வரை வளர்ந்துள்ளோம். இத்தகைய வேக வளர்ச்சிக்குத்



படிப்பகம்

www.padippakam.com



துணைபுரிந்த சிந்தனையாளர் எழுவரின் பணி பற்றி இந்நூல் விளக்குகின்றது. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் (1473-1543), கலிலியோ கலிலி (1564-1642), சேர். ஐசாக் நியுட்டன் (1642-1727), சார்ள்ஸ் டார்வின் (1809-1882), கார்ள் மார்க்ஸ் (1818-1883), சிக்மண்ட் பிராய்டு (1856-1939), அல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879-1955) ஆகிய எழுவர் பற்றி சிறுவர்க்கு ஏற்ற வகையில் எளிமையாக இந்நூல் விளக்குகின்றது.

## 801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

### 3382

**ஆடி மகிழ்வோம்: விளையாட்டு வழிகாட்டி.** ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7 மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கொழும்பு 13: பேசும்பேனா வெளியீடு, 38/4, சிவானந்தா வீதி).

vi, 36 பக்கம், விளக்கச் சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 21x15 சமீ., ISBN: 955-97106-7-2.

விளையாட்டு வழிக் கல்வியை பாலர்களிடையே போதிப்பதற்கு வசதியாக உருவாக்கப்பட்டுள்ள இந்நூலில் சிறுவர்களுக்கான 30 விளையாட்டுக்கள் விளக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் ஒவ்வொரு விளையாட்டும் எப்படி விளையாடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது. பின்னர் இவ்விளையாட்டுகளினால் ஏற்படக்கூடிய நற்பலன்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பயிற்சி ஆசிரியர்களுக்கு புதிய விளையாட்டுக்களை உருவாக்கும் திறனையும் இந்நூல் வழங்குகின்றது. வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலகினை 1998இல் தொடங்கியது. அந்த அலகின் கல்விப் பணிப்பாளராக திரு அருளானந்தம் இருந்துள்ளார்.

**மேலும் பார்க்க: *3052, 3125***

## 891.2 சமஸ்கிருத இலக்கியம்

### 3383

**வடமொழி இலக்கிய வரலாறு.** நவாலியூர் நடராஜன். சென்னை 600 017: கலைஞன் பதிப்பகம், 10, கண்ணதாசன் சாலை, தியாகராய



படிப்பகம்

www.padippakam.com



நகர், 3வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1979, 2வது பதிப்பு, 1988. (சென்னை 600 034: மலர் பிரின்டர்ஸ்).

272 பக்கம், விலை: இந்திய ரூபா 85., அளவு: 21x13.5 சமீ.

ஆசியாக் கண்டத்தில் வேதகாலத்திலிருந்து அண்மைக்காலம் வரை சமஸ்கிருதம் பெற்றுவந்துள்ள வளர்ச்சி நிலைகளையும் பலதுறை இலக்கியங்களையும் இந்நூல் தெளிவாகக் கூறுகின்றது. ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற சமஸ்கிருத வரலாற்று நூல்களையும் இந்நூலையும் ஒப்புநோக்கிப் பயில்வோருக்கு அறிஞர் பலரது கருத்துக்களுக்கு இடம்தருவதோடு புதிய கருத்துக்களையும் ஆங்காங்கே கண்டு-கொள்ள முடிகின்றது. வடமொழித் தோற்றம், வேதங்கள், பிராமணங்கள், உபநிஷதங்கள், தரிசனங்கள், செம்மொழித் தோற்றம், இதிகாசங்கள், புராணங்கள், காவியத் தோற்றம், அஷ்வகோஷர், பெருங்காப்பியங்கள், குமார சம்பவம், பக்திப் பாடல்கள், கதை, சரித்திரக் காவியம், நாடகம், நாடக இயல், அணியியல், ஆகிய பல்வேறு தலைப்புக்களில் வடமொழி இலக்கிய வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

## 894.8 தமிழ் இலக்கியம்

### 3384

**அகநானூறு.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்-பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாக-ராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xvi, 224 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் அகநானூறு என்ற தனி நூல் இடம்பெற்றுள்ளது. முக-வுரை, உரிப்பொருள் விளக்கம், களிற்றியானை நிரை, அருஞ்செய்யுட் பகுதிகள், மணிமிடை பவளம், நித்திலக் கோவை, பாயிரம் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 03)



படிப்பகம்

www.padippakam.com



## 3385

**இலக்கியச் சொல்லகர்ராதி.** அ.குமாரசுவாமிப்பிள்ளை (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: அ.குமாரசுவாமிப்பிள்ளை, 1வது பதிப்பு, ஆனந்த வருடம், ஐப்பசி மாதம் (1915). (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை)

(5), கஅ, உ0ரு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X12 சமீ.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் த.கைலாசபிள்ளையவர்கள் விரும்பியவண்ணம் தொகுக்கப்பட்டது. இராமாயணம், மகாபாரதம், கலித்தொகை, சிந்தாமணி முதலான பழந்தமிழ் நூல்களில் உள்ள பெயர்ச் சொற்களை அதிகமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அகராதி. இலக்கியத்தில் வரும் பெயர்ச் சொற்களே பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. வினைச்சொற்கள், இடைச்சொற்கள், என்பன இத்தொகுப்பில் தவிர்க்கப்பட்டுள்ளன. பெயர்ச்சொற்களுள்ளும் உலக வழக்கிலும், நிகழ்ந்து வெளிப்பட்டு நிற்கும் இயற்சொற்களும் இங்கு தொகுக்கப்படவில்லை. இயற்கையிலேயே ஒரு நிலையும், சற்றே வேறுபட்டு மற்றொரு நிலையுமாக இருவகை நிலையாய் நின்று ஒரு பொருளையே உணர்த்துஞ் சொற்களும் பற்பல பண்டை இலக்கியங்களில் இருந்துள்ளன. அவைகளும் தனித்தனியாக இங்கே சேர்க்கப்படவில்லை. (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுவடிகள் பாதுகாப்புப் பிரிவில் பார்வையிடப்பட்டது. இல. 131022)

## 3386

**ஈழத்து இலக்கியமும் வரலாறும்.** சி.பத்மநாதன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

xv, 352 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14.5 சமீ., ISBN: 955-9429-44-2.

இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவரான இவர் இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். இந்நூல் இலங்கைத் தமிழரின் பாரம்பரியம் பற்றிய கருவூலம். இதிலே சமூக வரலாறு, அரசியல், சமூக வழமைகள், இலக்கிய மரபுகள், ஆலய வழமைகள், தொல்பொருட் சின்னங்கள், தமிழ்ச் சாசனங்கள், சமுதாய நிறுவனங்கள் என்பன பற்றிய அரிய விவரங்கள் அடங்கியுள்ளன. பழைய மரபு-



படிப்பகம்

www.padippakam.com



களைப் புரிந்துகொள்வதற்கு வேண்டிய புதிய சிந்தனைகளும், முன்பு நூல்களில் வெளிவராத பெருமளவிலான புதிய விபரங்களும் இதில் காணப்படுகின்றன. இந்நூலிலுள்ள பதினாறு கட்டுரைகளில் எட்டுக் கட்டுரைகள் வையாபாடல்கள், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, போன்றவை- இலங்கைத் தமிழரின் வரலாற்று நூல்கள் பற்றியவை. இலங்கைத் தமிழர் வாழும் பிரதேசங்களின் வரலாற்று அம்சங்களை விளக்கும் நூல்கள் எல்லாவற்றையும் பற்றிய புலமைத்துவமான கட்டுரைகள் முதன்முதலாக ஒரே தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனைய கட்டுரைகள் ஈழத்துத் தமிழ்ச் சாசனங்கள் பற்றியும், வணிக கணங்களைப் பற்றியும், சிறப்புமிக்க தமிழர் பாரம்பரியத்தினைப் பிரதிபலிக்கும் தொல்பொருள் சின்னங்கள் பற்றியும் யாழ்ப்பாணத்து அரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்து அரசியல், சமய, பண்பாட்டு மரபுகளைப் பற்றியவையாகும்.

## 3387

**கலித்தொகை-பரிபாடல்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xx, 236 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் பரிபாடல் உரை, கலித்தொகை உரை ஆகிய இரு நூல்களும் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 02)

## 3388

**தமிழ் இலக்கிய அகராதி: இலக்கிய அகரவரிசை.** ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 1: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56, பவழக்காரத் தெரு, 1வது பதிப்பு, 1952. (சென்னை 1: Progressive Printers)



படிப்பகம்

www.padippakam.com



*184 பக்கம், விலை: இந்திய ரூபா 2.50., அளவு: 18.5X13 சமீ.*

*யாழ்ப்பாணத்து நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட இலக்கிய அகராதி. தஞ்சாவூர் சரசுவதி மகால் புத்தகநிலையம், சென்னை அரசாங்க நூல்நிலையம், டாக்டர் போப் பேர்னாட் அவர்களால் தொகுக்கப்பட்டு 1909இல் அச்சிடப்பட்ட நூல் ஆகியவற்றில் சேகரித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த இலக்கிய அகராதி தயாரிக்கப்பட்டுள்ளது. (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுவடிகள் பாதுகாப்புப் பிரிவில் பார்வையிடப்பட்டது. இல. 130952)*

**தமிழ் இலக்கிய அகராதி.** *ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014:* Prompt Offset Printers, *34, திப்பு தெரு).*

xvi, *184 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 22X14 சமீ*

*ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழ் இலக்கிய அகராதி என்றநூல் இடம்பெற்றுள்ளது. (ந.சி.க. நூல் திரட்டு 20)*

**3389**

**பத்துப் பாட்டு-பதிற்றுப் பத்து** *ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).*

xx, *148 பக்கம், விலை: இந்திய ரூபா 105., அளவு: 22X14 சமீ.*

*ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இது முதலாவது*



படிப்பகம்

www.padippakam.com



திரட்டாகும். இத்திரட்டில் ந.சி.க.வின் பதிற்றுப்பத்து வசனம், பத்துப்பாட்டு உரைநடை ஆகிய இரு சங்க இலக்கிய நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 01)

## 894.8(1) தமிழ்க் கவிதைகள்

### 3390

**அங்கையன் கவிதைகள்.** வை.அ.கயிலாசநாதன். (புனைபெயர்: அங்கையன்). கொழும்பு 04: திருமதி இராஜலட்சுமி அம்மாள் கைலாசநாதன், H ½, அரச தொடர்மாடி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xiv, 106 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17x12 சமீ.

1976இல் தனது 34வது வயதில் அகால மரணமடைந்த அங்கையன் கைலாசநாதன் 1960 தொடக்கம், 15 வருட காலம் தொடர்ச்சியாக ஈழத்துத் தமிழ் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வந்துள்ளார். 1972இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நாடகத் தயாரிப்பாளராகச் சேர்ந்து இசையின் பாற்பட்ட ஆர்வத்தால் பல மெல்லிசைப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் வாழும் காலத்தில் கடற்காற்று என்ற பரிசு நாவல் 1972இல் வெளிவந்தது. அதன் பின்னர் வைகறை நிலவு (கவிதை, 1977), கடற்காற்று 2ம் பதிப்பு (நாவல் 2000), செந்தணல் (நாவல் 2000), அங்கையன் கதைகள் (சிறுகதை 2000), சிட்டுக்குருவிகளும் வானம்பாடியும் (நாவல் 2001) ஆகிய நூல்கள் அவரது துணைவியாரால் வெளியிடப்பட்டுள்ளன.

### 3391

**அச்சுக்கு வராத கவிதைகள்.** புசல்லாவை தே.கணபதி. புசல்லாவை: நட்புக் குழாம் வெளியீடு, நியு பீகொக் தோட்டம், சௌலி பிரிவு, 1வது பதிப்பு, ஐப்பசி 2004. (புசல்லாவை: ஏசியன் அச்சகம்).

x, 90 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 97., அளவு: 21x11.5 சமீ.

பக்கம்தோறும் கவிதைகளுடன் போட்டியிடும் ஸ்ரீதர் பிச்சையப்பாவின் அழகான நவீன ஓவியங்களுடன் அமைந்த கவிதைத் தொகுப்பு இது. ஏற்கெனவே தேசியப் பத்திரிகைகளில் வெளியான 60 கவிதைகள் இதில் இடம்பெறுகின்றன. தன்னுணர்ச்சிப் பாங்கான, சமூக



படிப்பகம்

www.padippakam.com



விமர்சனமான இவரது கவிதைகளில் மலையகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகண்டு பொங்கி எழுந்து துணிதிறன் கொண்டு அவற்றைச் சாடுகின்ற போக்குக் காணப்படுகின்றது. கணபதியின் முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

## 3392

**அடையாளம்.** எஸ்.சுதாகினி. உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (உடத்தலவின்னை: அச்சீட்டுப் பிரிவு, சிந்தனை வட்டம், உடத்தலவின்னை மடிகே).

32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு: 21X15 சமீ, ISBN: 955-8913-26-4.

ஈழத்தின் கிழக்கில் மட்டக்களப்பின், செங்கலடியை பிறப்பிடமாகக் கொண்ட சுதாகினி சுப்பிரமணியம் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப, உயர்தரக் கல்வியினைப் பெற்றுள்ளார். வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுள்ள இவர் தனது பட்டப்படிப்பிற்காக மேற்கொண்ட ஆய்வு, **இலங்கையில் வெளிவரும் பெண்கள் சார் தமிழ்ச் சஞ்சிகைகள்: தேடலும் மதிப்பீடும்** என்பதாகும். இவரது கவிதைகளிலும் பெண்ணியக்கருத்துக்கள் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் பதிந்துள்ளன. தான் கற்கும் காலத்திலிருந்தே கவிதை கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதியாக்கம் என இலக்கியத்தில் பல்வேறு துறைகளிலும் ஆர்வம் காட்டிவரும் சுதாகினி சுப்பிரமணியத்தின் படைப்புக்கள் ஈழத்தின் தேசிய இதழ்களிலும், சஞ்சிகைகளிலும், வானொலி நிகழ்ச்சிகளிலும் இடம்பெற்று வருகின்றன. இவரின் கவிதைகள் சமூகமயமானவை. அடையாளம் என்ற இச்சிறு கவிதைத் தொகுதியின் வாயிலாகத் தனது தேர்ந்த 14 கவிதைகளைப் பிரசுரித்து, ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகத்துக்குத் தன்னை அடையாளம் காட்டியுள்ளார். இந்நூல் சிந்தனை வட்டத்தின் 213ஆவது வெளியீடு.

## 3393

**அந்தரிக்கும் ஆன்மா.** அன்ரன் செல்வக்குமார். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).



படிப்பகம்

www.padippakam.com



112 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18X12 சமீ.

செவ்வந்தி காலாண்டுச் சஞ்சிகையின் புதியபாடம் என்ற சிறுகதை ஒன்றின் மூலம் (25.6.1975) இலக்கிய உலகில் காலடி வைத்த அன்ரன் செல்வக்குமாரின் கவிதைத் தொகுதி. நின்று நிதானித்து நிமிர வைக்கும் பாங்கினைக் கொண்ட 52 கவிதைகளை இத்தொகுப்பில் இடம்பெறவைத்திருக்கிறார். ஜுன் 1998இலேயே இக்கவிதைகளை இவர் இணையத்தளத்தினூடாக அறிமுகப்படுத்தியிருக்கிறார். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர். இவர் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் புத்தளம் பகுதியில் பணியாற்றி, பின்னாளில் Qatar National Cement Company யில் பணியாற்றியுள்ளார்.

## 3394

**அம்மா.** விக்னா பாக்கியநாதன். ஜேர்மன்: கலை விளக்கு வெளியீடு, Droote 19, 44328 Dortmund, 1வது பதிப்பு, மாசி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14.5 சமீ.

கலைவிளக்கு வெளியீட்டகத்தின் இருபதாவது வெளியீடாக இச்சிறு கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. நூலாசிரியையின் தாயாரின் மறைவின் நான்காவதாண்டு பூர்த்தியை நினைவுகூரும் முகமாக வெளிவந்துள்ள இத்தொகுப்பில் தாய், தாய்மொழி, தாயகம் போன்ற கருத்துக்கள் விதைக்கப்பெற்ற 29 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 3395

**அம்மா: கவிதைகள்.** திருமலை சுந்தா (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: அம்மா பதிப்பகம், 172, பிரதான வீதி, 1வது பதிப்பு, தை 1998. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம், 39 அருணகிரி வீதி).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

அம்மா என்ற தலைப்பில் தாமரைத்தீவான், அ.கௌரிதாசன், நாகராணி ஸ்ரீதரன், சு.வில்வரத்தினம், கனகசபை தேவகடாட்சம், செ.நவசோதிராஜா, கெஜதர்மா, மு.பொ., புரட்சிபாலன், ப.தர்மலிங்கம், கா.இரத்தினலிங்கம், சிகண்டிதாசன், க.கோணேஸ்வரன், அன்னலெட்சுமி சுப்பிரமணியம், திருமலை சுந்தா ஆகியோர்



படிப்பகம்

www.padippakam.com



எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது. திருமதி வள்ளிநாயகி சின்னத்துரை நினைவுமலராக வெளியிடப்பட்டுள்ளது.

## 3396

**அலையில் பூத்த மலர்கள்.** எம்.எஸ்.எம். யூசுப். Hemmathagama: Muslim Writers Association, Dumbulawawa, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (மாவனல்லை: M.J.M.Offset Printers).

xv, 48 பக்கம், விலை: இலவசம், அளவு: 21x14 சமீ.

2004 டிசம்பர் 26ம் திகதி இந்துசமுத்திரப் பிராந்தியத்தைத் தாக்கிய சுனாமிப் பேரலைத் தாக்குதலின் பாதிப்பில் எழுந்த கவிதைத் தொகுப்பு. ஆழிப்பேரலை அநர்த்தத்தை கண்டும் கேட்டும் உணர்ந்த கவிஞர் தன் உள்ளத்தில் தோன்றிய பரிதாப உணர்வினை கவிதைகளில் வடித்துள்ளார். ஒரு சிங்களக் கவிதை, ஒரு ஆங்கிலக் கவிதை, என்பவற்றுடன் 22 தமிழ்க் கவிதைகள் இந்நூலில் உள்ளன.

## 3397

**அவனும் அவளும் அவையும்.** பன்னைமூலை ந.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: சாயிராம் வெளியீடு, பன்னைமூலை, சித்தங்கேணி, 1வது பதிப்பு, வைகாசி 1975. (யாழ்ப்பாணம்: கண்ணன் அச்சகம், நல்லூர்).

(4), 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

நூலாசிரியரின் இளமைக்காலத்தில் (1954க்கு முன்னர்) எழுதிய கவிதைகளும், பின்னாளில் (1973ம் ஆண்டின் பின்னர்) எழுதிய கவிதைகளும் கீர்த்தனைகளுமாக இந்நூலில் தொகுத்திருக்கிறார். தன் மரபுக் கவிதைகளுக்குத் தானே உரையும் தந்திருக்கின்றார். இடையிடையே யாழ்ப்பாணத்து சமகால வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. கவிதைகள் அனைத்தும், அவனும் அவளும், அவள், அவளும் அவையும், அவன், அவனும் அவையும், அவை ஆகிய தலைப்புக்களின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையின் மூளை, நரம்பு, சத்திர சிகிச்சைப் பிரிவின் வைத்தியராகப் பணியாற்றியவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3398

**ஆகாய கங்கை.** விக்கி-நவரட்ணம். சுவிட்சர்லாந்து: விக்கி நவரட்ணம், Vieux Canal 37, 1950 SION, 1வது பதிப்பு, 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

136 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 17.5x12 சமீ.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவருமாவார். சுவிஸ்சில் வெளிவந்த உதயதாரகை மற்றும் ஈழமுரசு, தமிழ் காவி போன்ற பத்திரிகைகளிலும் ஐரோப்பிய வானொலிகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. தான் எழுதிய கவிதைகளில் 50 கவிதைகளைச் சேர்த்து இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

## 3399

**ஆச்சி: கவிதைத்தொகுப்பு.** சோ.தேவராஜா. கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம், 44, 3வது மாடி, மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, மே 2001. (Mount Lavinia: Techno Print, 7/15A, Pinthaliya Road ).

xii, 77 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955 8567 00 0.

தமிழ்த் தேசியப் பிரச்சினையின் தீர்வுக்கான மார்க்சியப் பார்வையிலான இத்தொகுதியின் கவிதைகள் அதன் உள்ளடக்கத்துக்கு ஏற்புடையதாய் மக்களுக்கானதே. இத்தொகுதியில் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் யாழ்ப்பாணத்திலிருந்து 1974 முதல் வெளியிடப்படும் தாயகம் கலை இலக்கியச் சஞ்சிகையில் 1984இலிருந்து எழுதிய கவிதைகளும், புதிய பூமி பத்திரிகையில் எழுதிய இரண்டு கவிதைகளும் இடம்பெறுகின்றன. கவிதையாகவும், பாடலாகவும் வீதி நாடகமாகவும் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தால் முப்பரிமாணத்தில் தயாரிக்கப்பட்டு நிகழ்ச்சிப்படுத்தப்பட்ட **பேய்ப்பசி** என்ற அரங்கியல் நிகழ்வின் கவிதையும் இணைக்கப்பட்டுள்ளது.

## 3400

**ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு.** றஷ்மி. கனடா: வெளி.கொம், 29, Rutledge Avenue, Scarborough, Ontario, M1K 3X5, 1வது பதிப்பு, மார்ச் 2005. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன்).



படிப்பகம்

www.padippakam.com



28 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 19.5x14.5 சமீ., ISBN: 955-99058-0-5.

26.12.2004 அன்று இலங்கையில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவின் பாதிப்பில் எழுந்த கவிதைகள். நவீன ஓவியரும், பத்திரிகை வடிவமைப்புத்துறையில் ஈடுபாடு கொண்டவரும், கவிஞருமான றஷ்மி ஈழத்தின் முக்கியமான சமகாலக் கவிஞர்களுள் முனைப்பாகத் தெரியும் ஒருவர். கிழக்கின் அக்கரைப்பற்றை வாழ்விடமாகக் கொண்ட இவர் சரிநிகர் வெளியீட்டுக் குழுவில் இணைந்து பணியாற்றியவர். 2002இல் வெளியான காவுகொள்ளப்பட்ட வாழ்வு முதலாய கவிதைகள் என்ற கவிதைத் தொகுதி இவரது முதலாவது வெளியீடாகும்.

## 3401

**ஆனந்தன் கவிதைகள்.** வே.ஆனந்தன். மட்டக்களப்பு: மட்டக்களப்பு வாசகர் வட்டம், 87/2, பயனியர் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1997. (மருதமுனை: இளம்பிறை ஓப்செட், பிரதான வீதி).

40 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x13.5 சமீ.

சம்மாந்துறையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆனந்தன் 8.4.1949இல் பிறந்தவர். தபால் திணைக்களத்தில் பணியாற்றியவர். கவிஞர் நீலாவணனின் பாசறையில் வளர்ந்த கவிஞர்களுள் ஒருவராகத் தன்னை இனம்காட்டியவர். மட்டக்களப்பு வாசகர் வட்டத்தில் இணைந்து தீவிர அங்கத்தவராக இருந்தவர். 05.12.1995 அன்று மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் பஸ்சில் பயணித்தபோது இராணுவத்தினரின் படுகொலைக்குள்ளானவர். அவர் மறைவின் பின்னர் நண்பர்களால் தேடிச்சேகரிக்கப்பட்ட கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. விரிவுரையாளர் எம்.ஏ.நுஃமான் அவர்களின் முன்னுரையுடன் கூடியது. மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் இரண்டாவது வெளியீடாக வந்துள்ளது.

## 3402

**இணைப்போம் கரங்கள்: அத்வலக் தனமு அப்பி.** ரோஹண லக்ஷ்மன் பியதாச (தொகுப்பாசிரியர்). கண்டி: தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகம், 30 புஷ்பதான வீதி, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 6: சாமர மீடியா லிங்க் பிரைவேட் லிமிட்டெட், 22ஏ, மல்லிகா லேன்).



படிப்பகம்

www.padippakam.com



*(4), 62 பக்கங்கள் + (4), 56 பக்கங்களில் சிங்களப் பிரிவு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

தமிழிலும் சிங்களத்திலும் வெளியான 20 கவிதைகள் இந்நூலில் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் பரஸ்பரம் மொழிமாற்றம் செய்யப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இன மோதல், சந்தேகப் போக்கு, அறியாமை, புரிந்துணர்வற்ற தன்மை, தவறாகப் புரிந்துகொள்ளல், என்பவற்றுக்கூடாக உயிர்ப்புடன் இன ஒருமைப்பாட்டுக்காகப் போராடும் ஒரு சிங்களக் கவிஞர் குழுவினரின் குரல் இங்கு பதிவுக்குள்ளாகியுள்ளது. இ.முருகையன், குறிஞ்சி தென்னவன், மேமன்கவி, எஸ்.இஸ்மாலிகா, சில்லையூர் செல்வராசன், சபா ஜெயராசா, எம்.ஏ.நுஃமான், எம்.எச்.எம்.ஷம்ஸ், சேரன், த.முரளிதரன், கோங்கஸ்தெனிய ஆனந்த தேரர், மொனிகா ரூவன்பத்திரன, சிறிலால் கொடிக்கார, ஜயவடு வித்தான, தயாசேன குணசிங்க, பராக்கிரம கொடித்துவக்கு, ரத்னசிறி விஜேசிங்க, புத்ததாச கலபத்தி, தர்மசிறி ராஜபக்ச, செனரத் கொன்சால் கோரள ஆகிய இலங்கைக் கவிஞர்களின் படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம் பிடித்துள்ளன. ரோஹண லக்ஷ்மன் பியதாச, களனிப் பல்கலைக்கழகத்தின் வெகுசனத் தொடர்பு மற்றும் கல்விப் பிரிவின் விரிவுரையாளராவார்.

## 3403

**இதய ஒலி.** கே.எம்.எம். இக்பால். கிண்ணியா: பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிண்ணியா மத்திய கல்லூரி, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (திருக்கோணமலை: ரெயின்போ அச்சகம்).

*26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*

காலத்தின் மாற்றங்களுக்கேற்ப கருத்துகளிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என எதிர்பார்ப்பது பொது நியதி. ஒரு காலத்திற்குப் பொருத்தமான கருத்துக்கள் அடுத்து வரும் காலத்துடன் பொருந்தாமல் போகலாம். தான் வாழும் சூழலுடன் ஒன்றி, சமூகத்தின் மீது தனது பார்வையைப் படரவிடும் படைப்பாளியினால்தான் காலத்தின் தேவையை உணர்ந்த கவிதைகளைப் பிரசவிக்க முடியும். கவிஞர் கே.எம்.எம்.இக்பால் அவர்களை, காலத்தின் தேவையை நன்கு உணர்ந்த கவிஞனாகவே இங்கு நான் காண்கிறேன். வெறுமனே ஆகாயத்தில் கோட்டைகள் கட்டி கொட்டாவி விடுவதைத் தவிர்த்து, மண்மீது பார்வையைப் பதித்து, கல்லையும் முள்ளையும் இனம் கண்டதாலே சமூகப் பிரக்ஞையுடன் இரண்டறக் கலந்த



படிப்பகம்

www.padippakam.com



கவிதைகளை இவரால் இயற்ற முடிந்திருக்கிறது. -கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் (அணிந்துரையில்)

## 3404

**இருளைத் துளாவும் மின்மினிகள்.** பொகவந்தலாவை சோ.ஸ்ரீதரன், கலகெதர உனைஸ் ஆரிப். கொழும்பு 6: கொழுந்து பிரசுரம், மலையக வெளியீட்டகம், 57, மகிந்த பிளேஸ், 1வது பதிப்பு, 1992. (பத்தனை: ஏ.வீ.எஸ்.அச்சகம், 68, பிரதான வீதி).

vii, 36 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 17.5x12.5 சமீ.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சோ.ஸ்ரீதரன் பொகவந்தலாவை ஹோலி ரோசரி தமிழ் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர். ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் ஆசிரியப்பயிற்சி பெற்றுவந்த வேளையில் கலகெதர உனைஸ் அவர்களுடன் இணைந்து எழுதிய கவிதைத் தொகுப்பு இதுவாகும். கலகெதர உனைஸ் 1986 முதல் கவிதை எழுதத் தொடங்கியவர். கண்டி புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவரான இவரும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் கற்கும்போது இந்நூல் வெளியிடப்பட்டது.

## 3405

**இன்ப வானில்: அகத்துறைக் கவிதைகள்.** ச.வே.பஞ்சாட்சரம். யாழ்ப்பாணம்: புதுமைலோலன், அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1971. (புசல்லாவை: நாதன் அச்சகம்).

(12), 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

கவிஞர் ச.வே.பஞ்சாட்சரத்தின் கவிதைகள் மண்ணின் மைந்தரைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை. சாதாரண கிராமத்து உழைப்பாளிகளை, வறுமைதோய்ந்த அவர்களது இயல்பு வாழ்வியலை நன்கு அவதானித்துத் தம் கவிதைக்குள் அவற்றைச் சிறைப்பிடித்துக்கொள்கிறார். அதனால் இவரது கவிதைகளில் ஒரு இயற்கைத் தன்மையை, இதய நெருக்கத்தை எம்மால் உணரமுடிகின்றது. தூயசிந்தனை, துடிக்கும் உணர்ச்சி, துள்ளல் நடை, அளவான அழகான அற்புதமான சொற்பிரயோகம் அனைத்தும் கலந்த இந்தக் கவிதைகள் கவிஞர் ச.வே.பஞ்சாட்சரத்தின் கவிதாபுலமைக்கு கட்டியம்கூறி நிற்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3406

**இன்னமும் வாழ்வேன்.** மாவை. வரோதயன். (இயற்பெயர்: சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் பிரைவேட் லிமிட்டெட், எஸ்.44, 3வது மாடி, கொழும்பு மத்திய கூட்டுச் சந்தைத் தொகுதி, 1வது பதிப்பு, புரட்டாதி 2000. (தெகிவளை: டெக்னோ பிரின்ட்).

*(12), 82 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 21x14 சமீ.*

யாழ்ப்பாணத்தின் வடக்கே மாவிட்டபுரம், பழை என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் மாவை. வரோதயன். 1980களின் ஆரம்பத்தில் கவிதைகளோடு படைப்பிலக்கியத்துறைக்குள் புகுந்தவர். இலங்கை சுகாதார சேவையில் பொதுச் சுகாதார பரிசோதகராகப் பணியாற்றியவர். பல்வேறுபட்ட மக்கள் சமூகங்களுடனும் தொடர்பாடலை உத்தியோகரீதியாக மேற்கொள்வதால் பெறப்பட்ட அனுபவங்களும் ஆளுமைகளும் இவரது படைப்புக்களில் மேலெழுந்து நிற்கும் பொதுமைப்பாட்டுக்குரிய தளமாகின்றது. கவிதையின் தேவை குறித்து கருத்து, கற்பனை, உணர்ச்சி, மொழிநடை என்ற நான்கு அம்சங்களின் நிறைவைக் கவிதையின் நிறைவாகக் கொள்கிறார்கள். கவிஞர் மாவை வரோதயன் அவர்களின் கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகளில் இந்நான்கு அம்சங்களையும் காணமுடிகின்றது.

## 3407

**இன்னும் மனிதர்களாக.** காத்தான்குடி எம்.எம்.ஜுனைதீன். காத்தான்குடி: நவ இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்டர்ஸ், 44, புகையிரத நிலைய வீதி).

*(14), 69 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-99092-0-7.*

நவ இலக்கிய மன்றத்தின் 9ஆவது வெளியீடாக உருவாகியுள்ள இக்கவிதைத் தொகுதி 38 கவிதைகளைக் கொண்டது. இலங்கைத் தேசியப் பத்திரிகைகளில் வெளியான தனது பத்திரிகைக் கவிதைகளையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கவிதைகளையும் இணைத்து ஒரு தொகுப்பாக்கியுள்ளார். 1990களில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்து இலக்கியம் படைக்கத்தொடங்கிய இவரை இனம்காண தினபதி-சிந்தாமணி பத்திரிகை களம் அமைத்துக் கொடுத்திருந்தது. போதனைப் பாங்கில்



படிப்பகம்

www.padippakam.com



அமைந்த சீதனம், குடி, போன்ற சமூக சீர்திருத்தக் கவிதைகளும், காதல் இயற்கை பற்றிய கவிதைகளும் சமகால நிகழ்வுகளின் பாதிப்புடன் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

## 3408

**இன்னொரு நாளில் உயிர்ப்பேன்.** நிலா குகதாசன். கனடா: ரோஜா வெளியீடு, F.P.P.O., P.O.Box 45593, 747 Don Mills, Ontario, M3C3S4, 1வது பதிப்பு, ஆவணி 1996. (கனடா: விவேகா அச்சகம், 60, Barbados Blvd, #6, Scarborough).

68 பக்கம், ஓவியங்கள், விலை: கனேடிய டொலர் 2.50, அளவு: 21x13 சமீ.

1993 ஜுலை முதல் காலாண்டுச் சஞ்சிகையாக கனடாவில் மலர்ந்த ரோஜாவின் மூன்றாவது ஆண்டு நிறைவின் நினைவாக இக்கவிதைத் தொகுதி வெளிவருகின்றது. கனேடிய கலை இலக்கிய உலகில் படைப்பிலக்கியத்துடன், கலைத்துறையிலும் தடம்பதித்துள்ள நிலா குகதாசன் தமிழ் வீடியோ சஞ்சிகையான **இளையநிலா**வின் ஆசிரியர். திருக்கோணமலையின் நிலாவெளி என்ற சொந்த மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து கனேடிய மண்ணில் வாழ்ந்த போதிலும் பிறந்த மண்ணை மறக்காதவர். இவரது கவிதைகளில் தனது மண் பற்றிய ஏக்கங்களை எழுத்தின்மூலம் இறக்கி வைக்க முற்படும் போக்கு காணப்படுகின்றது. மனித நேயம் இவரது கருப்பொருளாகின்றது. கருணாவின் ஓவியங்கள் கவிதைகளுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

## 3409

**ஈழக்குயிலின் இதயத்தில் நீ.** ஈழக்குயில் இத்ரீஸ். மருதமுனை: அல் நுஸ்ரத் வெளியீடு, வறிய குடும்ப அபிவிருத்தி சாந்தி சமாதான சமூக நலன்புரிச் சங்கம், 171, பொது நூலக வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1994. (கல்லச்சுப்பிரதி).

(26) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

மர்ஹூம் நாவலர் ஈழமேகம் எனப்படும் M.I.L.பக்கீர்தம்பி பற்றிய நூல். அவரது மறைவினை யொட்டி கவிஞர் ஈழக்குயில் இர்தியாஸ் படைத்த அஞ்சலிக் கவிதைகள் நூலுருவாகியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3410

**ஈழத்துக் கவிமலர்கள்.** கனக.செந்திநாதன் (தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: பராசக்தி நிலையம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, ஆடி 1962. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 60 பக்கம், புகைப்படத் தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

ஈழத்தின் 36 கவிமணிகளின் கவிதைகளின் தொகுப்பு. ஈழத்து மரபுக்கவிதையின் வளர்ச்சிக்கு அணிசேர்த்த இக்கவிமணிகளின் ஆக்கங்களில் ஒவ்வொன்றைத் தேர்ந்து, கவிஞர் பற்றிய சுருக்கக் குறிப்புடன் இந்நூலைத் தொகுத்திருக்கிறார். 21ஆவது வயதில் மறைந்த தன் மகள் பராசக்தியின் (11.09.1941- 29.06.1962) நினைவாக 31வது தின நிகழ்வின்போது 29.07.1962 அன்று இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் அணிந்துரையுடன் கூடிய இத்தொகுப்பின் அநுபந்தமாக பண்டிதர் சோ.இளமுருகனார் இயற்றிய **செல்வி பராசக்திக் காஞ்சி** இடம்பெற்றுள்ளது.

## 3411

**ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.** ஆ.சதாசிவம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 7: சாகித்திய மண்டலம், 135, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, 1966. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xxxii, 585 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

ஈழத்துப் பூதன் தேவனார் காலம் தொடக்கம் கலாநிதி நடேசபிள்ளை காலம் வரையும் இலங்கையில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப் புலவர்கள் இயற்றிய செய்யுட்களுட் சிறந்தவை அப்புலவர்கள் வாழ்ந்த கால முறைப்படி தொகுத்துக் கூறும் கவிதைக் களஞ்சியம் இதுவாகும். சங்ககாலம் தொடக்கம் சமீபகாலம் வரையில் இலங்கையில் வாழ்ந்து மறைந்தவர்களாய் அறியப்பட்டுள்ள ஈழத்தின் எல்லாப் புலவர்களுடைய கவிதைகளுடன் அவர்களது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு, காலம், அன்னார் நூல்களிலிருந்தும் தனிப்பாடல்களிலிருந்தும் மாதிரிகைப் பொருட்டாகத் தேர்ந்தெடுத்த சில செய்யுட்கள் என்பவற்றைக் காலவரிசைப்படி தொகுத்துத் தரும் நூல் இதுவாகும். கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## 3412

**உயிர்த்தெழுகிற கவிதை.** வ.ஐ.ச.ஜெயபாலன். அக்கரைப்பற்று 02: மூன்றாவது மனிதன் வெளியீடு, 27, ஏ.வீ.வீ. வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (அக்கரைப்பற்று: I.P.C.).

(4), 56 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21X12.5 சமீ.

"நான் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிறைந்த மனிதன். என்னையே தளரவைக்கின்றன காலத்தின் பெரும் துயர்கள். மணல் தைத்த சிப்பியின் துயரம் முத்தாகின்றது. எனது துயர்கள் கனவுகளாகவும் கவிதைகளாகவும் விளைகின்ற காலமிது" என்று கூறும் கவிஞர் ஜெயபாலனின் கவிதைகள் அடக்கப்பட்ட மக்களின் குரலாக, வஞ்சிக்கப்பட்ட மக்களின் கண்ணீராக, காதலின் வசீகரப் புன்னகையாக, நியாயம், நீதி வழங்கக் கோரும் சத்தியத்தின் பிரகடனமாக மலர்ந்துள்ளன. தற்போது நோர்வே நாட்டில் வாழும் ஈழத்துக் கவிஞரான இவர், வாழ்வின் மீதான காதலை, வாழ்வின் அழகியலை, தனது கவிதையின் ஊடே கருக்கட்ட வைத்து மலரச்செய்பவர். தனது வாழ்வின் பெரும்பகுதியை அடக்கப்பட்ட தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் விமோசனத்திற்காக எழுதியும் வாழ்ந்தும் கழித்தவர்.

## 3413

**உயிரோடிருத்தல்.** யாத்திரீகன். உடுப்பிட்டி: மீளுகை 2, இமையாணன் கிழக்கு, 1வது பதிப்பு, ஆனி 2005. (கிளிநொச்சி: வேழன் பதிப்பகம்).

60 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 19X12 சமீ.

யாத்திரீகனின் கவிதைகளுக்குள் ஊடுருவிப் பார்த்தால் ஒன்றிரண்டு கவிதைகள் தவிர பெரும்பாலானவை சமகால நடப்புகளின் பதிவுகளாக உள்ளன. அவை குறித்த கேள்விகள், அல்லது அழுத்தங்கள் அவரது கவிதைத் தடங்களாகின்றன. போரும், போருக்குள்ளான வாழ்வும், அதனுள் முக்குளித்து தத்தளித்த அவலங்களும், அதிலிருந்து மீள எழ அகதியாய் அலைந்ததும், இன்னும் மீளெழலுக்காய் ஓடி ஓடித் தோற்றுப்போன அலுப்புகளுடன் மண்ணின் விடுதலையின் மீதான வீரம், தீரம், தியாகம் என்பவற்றை இத் தொகுப்பிலுள்ள 21 கவிதைகளில் தேடல் மிகுந்த ஒரு யாத்திரீகனாகப் பதிந்திருக்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3414

**உரசல் ஓசைகள்.** பவித்திரன். (இயற்பெயர்: முருகையன் நாவலன்) கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல.S44, 3வது மாடி, CCSM Complex, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

xii, 63 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ., ISBN: 955 8637 06 8.

இக்கவிதைகளில் சோகம், நம்பிக்கை, வரட்சி, தணியாத கலைத்தாகம், காதல் என்ற பன்முகத் தன்மைகளையும் இனம்காண-முடிகின்றது. இவை யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கும் சாமானிய மனிதர்களின் அவலங்களையும் பேசுகின்றன. வாழ்நிலை யதார்த்தம் சிக்கலாகிப் போய்விட்ட சூழலில் சக மனிதர்களின் நேசம் மறுக்கப்பட்ட நிலையில் அவர்களைக் குறித்துப் பாடப்பட்ட கவிதைகள் இவை.

## 3415

**உலகியல் விளக்கமும் நம்நாட்டின் நானிலக் காட்சிகளும்.** ஆ.மு.ஷரிபுத்தீன். தெகிவளை: அன்னை வெளியீட்டகம், இல.16, School Avenue, Off Station Road, 1வது பதிப்பு, பெப்ரவரி 1997. (பாணந்துறை: கிளீன் பிரின்ட், ஹொரண வீதி, எழுவில).

(8), 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

நம்நாட்டின் நானிலக்காட்சிகள் என்ற கவிதை முதல் 12 பக்கங்களிலும், உலகியல் விளக்கம் என்ற கவிதை பக்கம் 13-68வரையும் இடம்பெற்றுள்ளன. 1909ம் ஆண்டு பிறந்த புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் செந்தமிழில் யாப்பமையக் கவிதை இயற்றும் வல்லமை பொருந்திய மிகச் சிலருள் தலைசிறந்தவர். இலங்கை அரசினால் "இலக்கிய மாமணி", "நூறுல் பன்னான்" ஆகிய பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## 3416

**உறக்கந் தேடும் உலகிற்காய்.** சார்ள்ஸ் (இயற்பெயர் விக்னேஸ்வரன் ஐங்கரன்). யாழ்ப்பாணம்: மாணவர் கலை இலக்கிய மன்றம், (பதிப்பு மற்றும் அச்சக விபரம் அறியமுடியவில்லை).



படிப்பகம்

www.padippakam.com



(4), 80 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 25., அளவு: 18X12 சமீ.

அடக்கமும் உணர்திறனும், கவிதையில் ஆர்வமும் கொண்ட இளைஞரான சார்ள்ஸ் எண்பதுகளின் பின்னரைகளில் கவிதைத் துறையுள் நுழைந்தவர். சமூக நல நாட்டமும் அரசியல் உணர்வும் மிக்க இவர் தனது கவிதைகளினூடாக அவற்றைப் புலப்படுத்தி வந்துள்ளார். கவித்துவ கற்பனையும் மொழியாட்சியும் இவரது கவிதைகளுள் பொதிந்துள்ளன. இன்னமும் இருட்டினிலே, அணையாத அறிவாலயம், விடியலின் கானம் போன்ற கவிதைத் தொகுதி வரிசையில் இந்நூல் 1980களின் கடைக்கூற்றில் வெளிவந்தது.

## 3417

**உனக்குள்ளேயே உள்ளிருப்பு: ஹைக்கூ கவிதைகள்.** சார்ள்ஸ். (இயற்பெயர்: விக்னேஸ்வரன் ஐங்கரன்). யாழ்ப்பாணம்: வசந்தம் வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (யாழ்ப்பாணம்: புதிய சித்ரா பதிப்பகம், 664, ஆஸ்பத்திரி வீதி).

32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 22., அளவு: 17.5X13 சமீ.

80களுக்குப் பின் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் காரணமாக ஏற்பட்ட புதிய பரிமாணப் பண்பு ஈழத்து ஹைக்கூக்களிலும்- குறிப்பாக 80களுக்குப் பின் ஈழத்துச் சிறு சஞ்சிகைகளில் எழுதப்பட்ட ஹைக்கூகளின் மூலம்- காணக்கூடியதாக இருக்கிறது. இத்தொகுதியில் உள்ள ஹைக்கூ கவிதைகள் தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமானவை.

## 3418

**எண்ணத்தில் பூத்த வண்ண மலர்கள்.** விக்னா பாக்கியநாதன். சென்னை 600 014: தாமரைச்செல்வி பதிப்பகம், 14/3, பீட்டர்சு குடியிருப்பு, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, 2003. (சென்னை 600014: ரவிராஜா ஆப்செட்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18X12 சமீ.

தாயக விடுதலையை, மொழியுணர்வினை, இன விடுதலையை எழுச்சியுடன் எடுத்தியம்பும் கவிதைகள். ஜேர்மன் நாட்டில் புலம்பெயர்ந்து நீண்டகாலம் வாழ்ந்த போதிலும் தாயகம் பற்றிய உணர்வுகளுடனேயே இவரது பெரும்பாலான கவிதைகள் உருப்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3419

**எரிந்துகொண்டிருக்கும் நேரம்.** உ.சேரன். சென்னை 600024: ஆசியா வெளியீட்டகத்திற்காக தாமரைச் செல்வி பதிப்பகம், 16, 4வது தெரு, டாக்டர் சுப்பராயன் நகர், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (சென்னை 600017: கிளாசிக் கிராப்பிக்ஸ்).

*36 பக்கம், விலை: இந்திய ரூபா 12., அளவு: 21.5x14 சமீ.*

1986க்கு முன்னரும் பின்னருமாக எழுதப்பட்ட 9 கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ்முரசு (பிரான்ஸ்), இனி (இந்தியா), பாலம் (இந்தியா), தாகம், தூண்டில் (ஜேர்மனி), ஆகிய சிறுசஞ்சிகைகளிலும், மரணத்துள் வாழ்வோம் கவிதைத் தொகுப்பிலும் இவை பிரசுரமானவை.

## 3420

**என் காதல் கிராமத்தின் சாளரம்.** மு.க.சு.சிவகுமாரன். ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, Post Box 2765, 58477 Ludenscheid, 1வது பதிப்பு, ஜுலை 2003. (ஜேர்மனி: அச்சக விபரம் தரப்படவில்லை)

*16 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15x10.5 சமீ.*

இச்சிறு கையடக்க நூலில், இன்று போரினால் உருக்குலைந்து போயுள்ள தன் தாய்நிலமான குரும்பசிட்டியின் ஏக்கங்களை வண்ணப் புகைப்படங்களாக்கி, பழைய நினைவுகளை இரைமீட்கும் புகைப்படங்களையும் தன் கணனி வடிவமைப்பில் இணைத்து மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தன் கவிதைகளுக்கு உருவமும் உணர்வும் ஊட்டியுள்ளார்.

## 3421

**என் தேசம்.** மடவளை அன்சார் எம்.ஷியாம். கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், பூரணாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (அக்குறணை 7: நிலன் பிரின்டர்ஸ்).

*98 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17x12 சமீ.*

எதிர்காலத்தில் பிரகாசிக்கவிருக்கும் தரமான ஒரு கவிஞரை இனம்காட்டத் தக்கவகையில் இக்கவிதைத்தொகுதி அமைந்துள்ளது. ஒரு இளங்கவிஞரின் ஆவேசமும், துடிப்பும் கவிதைவீச்சுடன் இத்தொகுப்பில் மிளிர்கின்றது. அன்சார் எம்.ஷியாமின் கவிதைகளில்



படிப்பகம்

www.padippakam.com



பொருட்பரப்பும் நடைச்சிறப்பும் தனித்துவம் வாய்ந்து விளங்குகின்றன. கண்டி மாவட்டத்தில் தும்பறை, மடவளையில் பிறந்து, அங்கேயே வாழும் இவ்விளம் கவிஞர் மடவளை மதீனா கல்லூரியில் தன் கல்வியைப் பெற்றவர். புதுக்கவிதை மூலமும் நவீன கவிதைகள் மூலமும் தனது திறமைகளைப் புலப்படுத்த முயன்றிருக்கிறார்.

## 3422

**எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்.** நவஜோதி ஜோகரட்னம். *லண்டன்: திருமதி நவஜோதி ஜோகரட்னம்,* 127, Long Elmes, Harrow, HA3 5LB, *1வது பதிப்பு, ஜுலை 2005. (கொழும்பு 13: ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).*

xviii, *148 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 350., அளவு: 19.5x12.5 சமீ.*

லண்டனிலிருந்து ஒரு ஈழத்துப் பெண் படைப்பாளி எழுதி வெளிவரும் முதலாவது தமிழ் கவிதைத் தொகுப்பு என்ற வகையில் இந்நூல் புகலிடப் படைப்பிலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்கதாகும். ஜோகினி, மாஜிதா ஆகிய புனைபெயர்களில் எழுதிவரும் நவஜோதி ஜோகரட்ணம், யாழ்ப்பாணம் இளவாலை மகளிர் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தவர். தலவாக்கல்லை, பண்டாரவளை ஆகிய மலையகப் பாடசாலைகளில் கணித ஆசிரியையாகப் பணியாற்றியவர். அம்மக்களின் வாழ்வியல் துயரங்களால் ஈர்க்கப்பட்டு பல கவிதைகளின் வாயிலாக அதற்கு வடிகால் தேடிக்கொண்டவர். எண்பதுகளின் ஆரம்பத்தில் பிரான்சை நோக்கிப் புலம்பெயர்ந்த நவஜோதி பிரெஞ்சு மொழியிலும் சரளமாகப் பேசும் புலமை பெற்றவர். பின்னாளில் லண்டனைத் தனது நிரந்தர வதிவிடமாக்கிக் கொண்டு இன்று லண்டனில் ஊடகவியல்துறையில் தன் பாதங்களை ஆழப்பதித்து வருகின்றார். ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் மூலபுருஷர்களில் ஒருவரான அகஸ்தியரின் மகளான இவரிடமும் தந்தையின் படைப்பிலக்கிய ஆளுமையின் அம்சங்கள் ஆங்காங்கே பொதிந்துள்ளதை இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் இனம்காட்டுகின்றன.

## 3423

**ஏகலைவ பூமி.** *சி.சிவசேகரம். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, மே 1995. (சென்னை 600041: சூர்யா அச்சகம்)*



படிப்பகம்

www.padippakam.com



55 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 18X12 சமீ.

இத்தொகுதியில் உள்ள கவிதைகளில் இசைக்கப்படக்கூடியவை மூன்று உள்ளன. இன்னுமொன்று சீரான மரபுசார்ந்த சந்தவடிவிலானது. மற்றையவை வடிவில் மரபுடன் எளிதாக உறவுகாட்ட முடியாதவை. பெண்நிலை தொடர்பான கவிதைகள் புவனம் என்ற புனைபெயரில் ஆசிரியரால் தாயகம் (கனடா) இதழில் வெளியிடப்பட்டவை. இக்கவிதைகளுட் சர்வதேச நிலவரங்கள் தொடர்பானவை சில சுவடுகள் (நோர்வே) இதழில் பிரசுரமானவை. இந்நூல் இவரது ஐந்தாவது கவிதைத் தொகுதியாகும்.

## 3424

**ஐம்பாலைம்பது.** தாமரைத் தீவான் (இயற்பெயர்: சோ.இராசேந்திரம்). திருக்கோணமலை: அம்மா பதிப்பகம், 172, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம், 39, அருணகிரி வீதி)

(4), 34 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20.5X14.5 சமீ.

அம்மா பதிப்பகத்தின் 3வது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. எளிதில் மறந்து போகாமல் இதயத்தைப் பற்றிநிற்கும் கவிஞரின் மரபுக் கவிதைகள் இவை. கவிதைகள் தோறும் நளினமாகச் சொற்களைக் கையாண்டு, சந்த அழகுடன் சாதுரியமாகக் கவிதைகள் மூலம் கருத்துக்களை நுழைத்துச் செல்லும் பாங்கு இக்கவிதைகளின் சிறப்பம்சமாகும்.

## 3425

**ஒரு அகதியின் கவிதைகள்.** அப்புக்குட்டி விஜயகுமார். ஜேர்மனி: அப்புக்குட்டி விஜயகுமார், Adalbert Str 3, 10999 Berlin, 1வது பதிப்பு, மார்ச் 2001. (ஜேர்மனி: ராஜி பதிப்பகம்).

(15), 63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5X12.5 சமீ.

யாழ்ப்பாணம் கரம்பொன்னிலிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மன்-பேர்லின் நகரில் வாழும் அ.விஜயகுமாரின் கன்னிப் படைப்பு இக்கவிதைத் தொகுதியாகும். பெண்மை, தாய்மை, வெளிநாட்டுப் பண்பாடு, அகதி வாழ்வு, தாயக விடுதலை ஆகியவை இவரது கவிதைகளின் கருப்பொருட்களாகின்றன. ஈழத் தமிழர் நலன்புரிக்கழக (பேர்லின்) வெளியீடான யதார்த்தம் இதழில் வெளியான கவிதைகள் இவை.



படிப்பகம்

www.padippakam.com



## 3426

**ஒரு இலையின் மரணம்.** மஜீத். அக்கரைப்பற்று 06: பெருவெளி பதிப்பகம், 107, மாவடிச் சந்தி, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்டர்ஸ்).

46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14.5 சமீ.

கதையும், கவிதையுமாய் ஊடாடி, ஒன்றுக்குள் ஒன்று பரவி, தன்னைத்தானே சிருஷ்டிக்கும் கவிதைவெளி மஜீத்தினுடையது. ஒரு இலையின் மரணம் எனும் பிரதி சொற்களின் எல்லையைத் தாண்டிச் சென்று விடுகின்றது. சொற்களோடு பயணித்துச் சென்ற நமக்கு திடீ-ரென ஒரு விளிம்பு, ஒரு முடிவு வந்து விடுகின்றது. சொற்களின் எல்லை முடிவுறும் இடத்தில் அனுபவம் தன்னை ஆரம்பிக்கின்றது. முடிவுற்ற சொற்களின் எல்லைக்கு அப்பால் உள்ள அனுபவத்தின் கூறுகளை சென்றடைய எவ்விதப் பாதையையும் பிரதி கொண்டிருக்கவில்லை. வாசிப்போன் ஒரு பாதையை அமைத்து வெளியே சென்றுவிட்ட கவிதையோடு மிதக்க வேண்டிய திறந்த அனுபவத்தை இவை தருகின்றன.

## 3427

**ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்.** கருணாகரன். முல்லைத்தீவு: மகிழ், புதுக்குடியிருப்பு 04, 1வது பதிப்பு, மே 2003. (முல்லைத்தீவு: அந்திவானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு).

viii, 82 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21X14 சமீ.

இதிலுள்ள பெரும்பாலான கவிதைகள் ஈழப்போர் உக்கிரம் பெற்றிருந்த தொண்ணூறுகளின் சூழலில், வெளியுலகத்திலிருந்து பலவகையிலும் துண்டிக்கப்பட்டிருந்த ஒரு பிரதேசத்திலிருந்து எழுதப்பட்டவை. போரினுள் வாழ்ந்தவராக, போராட்ட வாழ்வோடு இணைந்தவராக, தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து கொண்டிருப்-பவராக, சொந்த நாட்டுக்குள்ளேயே அகதியாக்கப்பட்டவராக, ஊர் ஊராக குடும்பத்தோடு ஓடிக்கொண்டிருப்பவராக வாழ நிர்ப்பந்திக்-கப்பட்டோருடைய சூழ்நிலையின் வெளிப்பாடுகளே இக்கவிதைகள்.

## 3428

**ஒருலகம்.** க.வீரகத்தி. சென்னை 600 024: அபேதம் வெளியீட்டுடன் இணைந்து அலைகள் வெளியீடு, 37, தெற்கு சிவன்கோவில் தெரு,



படிப்பகம்

www.padippakam.com



கோடம்பாக்கம், 1வது பதிப்பு, அக்டோபர் 1991. (சென்னை 600 020: இராசகிளி பிரின்டர்ஸ்).

42 பக்கம், விலை: இந்திய ரூபா 7., அளவு: 18x12 சமீ.

ஓருலகம் என்ற உன்னதமான கனவில் மூழ்கியவர்கள் வரிசையில் கணியன் பூங்குன்றனார், பிளேட்டோ, தோமஸ் மோர் ஆகியோரின் வரிசையில் பண்டிதர் க.வீரகத்தி அவர்களும் அடங்குவார். உடல் தளர்ந்தாலும் உள்ளத்தால் இளைஞனாய் வாழ்ந்து இவர் படைத்த ஓருலகம் பற்றிய சிந்தனைச் சிதறல்கள் மரபுக் கவிதைகளாக உருப்பெற்று நூலுருக் கண்டுள்ளது. ஓருலக அரசு பற்றிய கோட்பாடு இளைய தலைமுறையினரிடம் சேரவேண்டும் என்ற ஆர்வத்தில் 1981இல் இருமாத இதழாக "கிருதயுகம்" என்ற இதழை 1983வரை நடத்தியவர் இவர்.

## 3429

**ஓவியம் வரையாத தூரிகை.** அனார். (இயற்பெயர்: இஸத் ரெஹானா அஸீம்). கொழும்பு 3: மூன்றாவது மனிதன் வெளியீடு, 143, முகாந்திரம் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

42 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

பெண்களின் ஆத்மார்த்தமான குரலினைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தி விளிம்புநிலை வாழ்வை பலவழிகளில் பதிவுசெய்வதில் வெற்றிகண்டுள்ளது இந்நூல். பெண்கள் என்ற காரணத்துக்காக மறுக்கப்படுகின்ற நியாயம் பற்றி துணிச்சலான கோரிக்கைவிடும் இக்கவிதைகள், உணர்ச்சிமிக்கதும், மனித சுதந்திரத்துக்கு முக்கியமளிப்பதுமாக உள்ளன. இக் கவிதைத் தொகுப்பு 2004ம் ஆண்டிற்கான இலங்கை சாஹித்திய மண்டலப்பரிசு பெற்றது. நூலாசிரியை கிழக்கிலங்கையின் சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

## 3430

**கடற்கரையில் அந்தக் கல்லறைகள்.** தங்கவேலு சரீஷ். ஜேர்மனி: ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம், 1வது பதிப்பு, வைகாசி 2005. (ஜேர்மனி: ராஜி பதிப்பகம், RombergstraBe. 10b, 59439, Holzwickede).

xviii, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



கவிதைகளின் பொருளுக்கேற்ற புகைப்படங்களைக் கொண்ட 75 புதுக் கவிதைகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. 2004 டிசம்பர் 26ம் திகதி இந்து சமுத்திரப் பிராந்தியத்தைத் தாக்கிய சுனாமிப் பேரலைத் தாக்குதலின் பாதிப்பில் எழுந்த கவிதைத் தொகுப்பு. கவிஞர் சரீஷ் தாயகத்தில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கிராமத்தைச் சேர்ந்தவர். 1997இல் புலம்பெயர்ந்து பாரிசில் வாழ்கின்றார். தென்றல் வரும் தெரு, விடியலின் முகவரி ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளை ஏற்கெனவே வெளியிட்டவர். இது இவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பு.

## 3431

**கடைசிச் சொட்டு உசிரில்.** S.நளீம். வாழைச்சேனை: யாத்ரா வெளியீடு, நண்பர் இலக்கியக் குழு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

xix, 71 பக்கம், விலை: ரூபா 95., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8448-00-1.

நவீன ஓவியத்தில் ஈடுபாடும் திறமையும் மிக்க நளீமின் நவீன கவிதைகளும், அழகிய ஓவியங்களாகவே காட்சியளிக்கின்றன. ஓர் ஊர் அல்லது ஒரு சமுதாயம் உள்ளாகியிருக்கும் நிலை, விருப்பு வெறுப்புக்கள், நன்மை தீமைகள், எதிர்பார்ப்புகள், கையாலாகாத நிலை, கோபம், விரக்தி, போன்ற பல்வேறு உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டு குமுறும் ஒரு இளைஞனின் கவிதைகளாக இவை அமைகின்றன.

## 3432

**கரவைக்கிழார் கவிதைகள்.** கரவைக்கிழார் (இயற்பெயர்: க.கந்தசாமி). கரவெட்டி: க.கந்தசாமி, மதி ஒளி வாசா, கரவெட்டி கிழக்கு, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10, பிரதான வீதி).

xx, 108 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18x12 சமீ.

23.5.1931இல் பிறந்த கரவைக்கிழார் அரச சேவையில் எழுதுவினைஞ-ராக இணைந்து தமிழ்த் தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தவர். ஜுன் 1964இல் அரசகரும மொழிச் சட்டத்தினால் கட்டாய ஓய்வுக்கு உட்-படுத்தப்பட்டு மீளவும் கட்டாய உத்தரவில் அரசசேவையில் உள்-வாங்கப்பட்டவர். 39வது வயதில் ஓய்வுபெற்றுத் தமிழார்வம் காரண-



படிப்பகம்

www.padippakam.com



மாகத் தன்னை முழுமையாகத் தமிழ் இலக்கியத்துக்கு வழங்கியவர். அரியதொரு கவிஞராகவும், சிறந்த பேச்சாளராகவும், நாடக ஆசிரியராகவும், இலக்கியக் கட்டுரையாளராகவும் வாழ்ந்தவர். ஈழத்தின் தேசிய பிராந்திய நாளிதழ்களில் இவரது படைப்புக்கள் வெளிவந்தன. இத்தொகுப்பில் அக்கவிதைகளில் தேர்ந்த சில கவிதைகள் தொகுக்கப்பட்டு இறைவணக்கம், சான்றோர், விடுதலைக் கவிதைகள், குறுங்காவியங்கள், பன்மணித்திரள் என்ற தலைப்புக்களின் கீழ் இடம்பெறுகின்றன.

## 3433

**கருவாட்டுக் கஸ்லா.** எஸ்.முத்துமீரான். சென்னை 600 017: நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, ஜூன் 2005. (சென்னை 600 014: சபரி புரோஸஸ்).

176 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 250., அளவு: 22x14 சமீ.

அம்பாறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துமீரான் 1960களின் பிற்பகுதியில் எழுத ஆரம்பித்தவர். கிராமிய மணத்தை, குறிப்பாக மட்டக்களப்பு முஸ்லீம்களின் மொழிவழக்கைக் கவிதையில் தாராளமாகவும் ஆழமாகவும் கையாண்டவர்களுள் முத்துமீரான் குறிப்பிடத்தக்கவர். இத்தொகுதியில் உள்ள 39 கவிதைகளும் பெரும்பாலும் நிகழ்கால உலகிலேயே தோய்ந்துநின்று மனித நேய அக்கறையுடனும் உணர்வு விழிப்புடனும் திகழ்கின்றன. முத்துமீரானின் எழுத்தாக்கத்தில் முனைப்பாகத் தோன்றும் ஒரு பண்பு இதுவாகும்.

## 3434

**கல் உயிர்.** உவைஸ் கனி. பேருவளை: பேசும் பேனா, 63, பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2005. (Beruwala, Positive Graphics, 63 Mosque Road).

96 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 21x13 சமீ., ISBN: 955-98410-0-9.

1990இல் வடக்கில் தம் சொந்த மண்ணிலிருந்து அகதிகளாக்கப்பட்ட முஸ்லீம் குடும்பமொன்றைச் சேர்ந்தவர் இவ்விளங்கவிஞர். இக்கவிஞரின் 47 கவிதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. அவநம்பிக்கைக்கும் நம்பிக்கைக்கும் இடையே ஊசலாடும் இம்மக்களது யதார்த்தம் உவைஸ் கனியின் கவிதைகளில் பிரதிபலிக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



சொற்களைத் தெரிவுசெய்து பொருத்தமாகப் பயன்படுத்தியுள்ளார். **மனிதனோடு நடந்தபடி** என்ற தனது முதலாவது கவிதைத் தொகுதியை 2002இல் வெளியிட்ட இவரது இரண்டாவது தொகுதி இதுவாகும். தினகரன், வீரகேசரி, தினமுரசு, மூன்றாவது மனிதன், ஞானம் ஆகிய ஊடகங்களில் வெளிவந்த கவிதைகள் இவை.

## 3435

**கல்லறைக்குள் கதிரவன்: ஹைக்கூ கவிதைகள் தொகுப்பு.** *சார்ள்ஸ் (இயற்பெயர் விக்னேஸ்வரன் ஐங்கரன்). யாழ்ப்பாணம்: வசந்தம் வெளியீட்டகம், 1வது பதிப்பு, பங்குனி 1990. (யாழ்ப்பாணம்: புதிய சித்ரா பதிப்பகம், 664, ஆஸ்பத்திரி வீதி).*

*64 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 17.5x12.5 சமீ.*

*சார்ள்ஸ் எழுதிய ஏழாவது கவிதைத் தொகுப்பு, இவ்விளங் கவிஞனின் மனதில் நெருடிக்கொண்டிருந்த சமூக யதார்த்தமும் ஈழப்போராட்டச் சூழலும் இங்கு ஹைக்கூ கவிதைகளாகின்றன.*

## 3436

**கவிதை நேரங்கள்.** *இ.இரத்தினம் (மூலம்), ஞானம் இரத்தினம் (பதிப்பாசிரியர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).*

*160 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-40-2.*

*அமரர் இ.இரத்தினம் (17.8.1916-21.3.1981) அவர்கள் இயற்றிய மரபுக் கவிதைத் தொகுதி. இத்தொகுதியில் முன்னர் தனிநூலாக வெளியான முருகவேள், புலவர் போற்றிசை ஆகிய இரண்டும் உள்ளடங்கி-யுள்ளன. "முருகவேள்", உயர்ந்த தத்துவக் கருத்துகளை அன்போடு குழைத்துத் தரும் நூல் என்று மூலநூலிற்கான முன்னுரையை வழங்கிய தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டுள்ளார். "புலவர் போற்றிசை என்னும் நூலிலே தன் ஆசான் சிவங் கருணாலய பாண்டியனாருக்கு பாஆரம் படைத்துள்ளார். புலவரின் ஆளுமை, ஆழ்ந்த புலமை ஆகியவற்றை இப்பாடல்கள் சித்திரிக்கின்றன.*



படிப்பகம்

www.padippakam.com



## 3437

**கவிதைக் கதம்பம்.** சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: சொக்கன் எழுத்துப் பணியின் வெள்ளிவிழாக் குழு வெளியீடு, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1974. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432 காங்கேசன்துறை வீதி).

xii, 42 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18.5x12 சமீ.

1944ஆம் ஆண்டுமுதல் எழுதத் தொடங்கியுள்ள சொக்கன் அவர்களின் முதற்கவிதைத் தொகுதியான **வீரத்தாய்** பருத்தித்துறை கலாபவன அச்சக வெளியீடாக 5.9.1958இல் பிரசுரமாயிற்று. இவரது முதல் நூலும் இதுவேயாகும். அன்றுதொடக்கம் தொடர்ந்து எழுத்துலகில் தடம்பதித்து வந்த சொக்கனின் வெள்ளிவிழா நினைவாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. தெய்வீகம், தத்துவம், மொழி, இலக்கியம், சமூகம், மானிடம் ஆகியன பற்றிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் பாடிய கவிதைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. அமரர் சொக்கனின் வாழ்வியல் பணிகள் பற்றிய பல்வேறு குறிப்புகளும் இத்தொகுதியில் செறிந்து காணக்கிடைக்கின்றன. அவரது வாழ்வும் பணியும் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளவிருப்பவர்களுக்கு சொக்கனின் இலக்கிய வாழ்வின் முதல் 25 ஆண்டுகளைப் பற்றிய தகவல்களை இந்நூலில் நிறையவே பெற்றுக்கொள்ளலாம்.

## 3438

**கவிவானம் பொழிகிறது.** அகியோபி. (இயற்பெயர்: வதிரியூர் வேலாயுதம் அகிலன்). அல்வாய்: திருமதி யோபிகா அகிலன், அர்ஜனம், அல்வாய் வடக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ்).

xii, 80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x13 சமீ.

வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட அகிலனின் 55 கவிதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் தன்னை மட்டுப்படுத்திக்கொள்ளாது சமகால மனித நடத்தைகளின் அனைத்துக் கோலங்களையும் கவிதைகளாக்கியுள்ளார். கவிதைகளுள் பொதிந்துள்ள நகைச்சுவையுணர்வினூடாக பல சீர்திருத்தக் கருத்துக்களை விதைத்துச் செல்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3439

**கனவுப் பூக்கள்.** உ.நிசார். மாவனல்லை: திருமதி முபீதா நிசார், இல. 70/3, புதிய கண்டிப் பாதை, 1வது பதிப்பு, மார்ச் 2005. (மாவனல்லை: எம்.ஜே.எம். அச்சகம், 119, பிரதான வீதி).

xvi, 90 பக்கம், விலை: ரூபா 100, அளவு: 20x14.5 சமீ., ISBN: 955-99075-0-9.

இந்நூலாசிரியர் சிங்கள மொழிமூலம் கல்வி பயின்றாலும் தமிழ் மொழியில் கவிதை படைக்கும் ஆற்றல் மிக்கவர். கண்டி மாவட்டத்தின் உடுநுவரை, முறுத்தகஹமுல்லவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எச்.எல்.முஹம்மது நிசார், உடுநுவரை நிசார், உ.நிசார் ஆகிய பெயர்களில் இவர் எழுதிய பல கவிதைகள் வானொலியிலும், இலங்கையின் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இவற்றில் தேர்ந்த 46 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை பொதுவாக மனித நேயம், சமூகப் பற்று, சமாதான ஏக்கம், இயற்கை மீதான காதல், என்பவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன.

### 3440

**கனவுப் பூக்கள்.** க.திருச்செல்வம். யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1972. (புசல்லாவை: நாதன் அச்சகம்).

56 பக்கம், விலை: தரப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

தீவகத்தில், இறம்பொடை, வேவண்டன் அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த க.திருச்செல்வம், கனக எழிலன் என்ற புனைபெயரிலும் அறிமுகமானவர். உணர்ச்சிச் சிலிர்ப்பு, நளினம், எளிமை, தங்குதடையற்ற சொல்வேகம் கொண்ட கவிதைகள் மூலம் உணர்ச்சிக் கவிஞர் என்று பலரும் பாராட்டும் பெருமை பெற்றுத் திகழ்ந்தவர். சமூக அநீதிகள், தன்னலச் சூழ்ச்சிகள், போலித்தனங்கள், மூடநம்பிக்கைகளைப் பூண்டோடு அழிக்க நிற்கும் ஆன்மார்த்தமான ஆவேசம் என்பன இவரது கவிதைகளில் பீறிடுவதைக் காணமுடிகின்றது.

### 3441

**காசி ஆனந்தன் கவிதைகள்: முதல் தொகுப்பு.** காசி.ஆனந்தன். (இயற்பெயர்: காத்தமுத்து சிவானந்தன்). சென்னை 600 020:



படிப்பகம்

www.padippakam.com



நா.அருணாசலம், மாணவர் புத்தகப் பண்ணை, 26, ச.ப.சாலை, அடையாறு, 2வது பதிப்பு, நவம்பர் 1998, 1வது பதிப்பு, தை 1982. (சென்னை 600 017: மாணவர் மறுதோன்றி அச்சகம், அபெக்ஸ் சேம்பர்ஸ், 4, தியாகராயர் சாலை, தியாகராயர் நகர்).

221 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18X12 சமீ.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் பாரதியும், நடுக்காலத்தில் பாரதிதாசனும் உருவாக்கிய தமிழர் எழுச்சியின் போர்க்குரலாக இந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் ஒலிப்பவர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன். கவிஞர் காசி ஆனந்தனின் களை நிறைந்த கவிதைகளில் மூன்று பெரும் அடிப்படைகள் மிளிர்கின்றன. ஒன்று தமிழ் மரபில் அவருக்குள்ள ஊற்றம்-தோய்வு. இரண்டு, தமிழர் சமுதாயத்தில் சீர்திருத்தங்களின் தேவைகள் பற்றிய அவரது தேற்றம்-ஆய்வு. மூன்று, தமிழினதும் தமிழினத்தினதும் எதிரிகளிடம் அவருக்கு இருக்கும் சீற்றம் - காய்வு. இவை மூன்றையும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைத் தொகுப்பில் காண முடிகின்றது.

## 3442

**காத்திருத்தல்.** நவம் அரவிந்தன். (இயற்பெயர்: ஆறுமுகம் அரவிந்தன்). ஆரையம்பதி 2: பூபாளம் வெளியீடு, பூபாளம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (சென்னை 600024: ஏ.ஆர்.பிரின்ட், இளம்பிறை பதிப்பகம், 375/8, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 21., அளவு: 18X12.5 சமீ.

அரவிந்தன் (30.4.1963) மட்டக்களப்பையடுத்துள்ள ஆரைப்பற்றையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 17ஆவது வயதில் எழுத்துலகில் புகுந்தவர். தினபதி, சிந்தாமணி, வீரகேசரி முதலான பத்தரிகைகள் இவருக்குக் களம் தந்தன. பின்னாளில் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் குடியேறியவர். பத்தாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இக்கவிதைகள் 22 வயது இளைஞனின் இளமைக் குமுறல்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவரது தந்தையார் ஆறுமுகம் அவர்களும், நவம் என்ற புனைபெயரில் படைப்பிலக்கிவாதியாக ஈழத்தில் அறிமுகமானவர்.

## 3443

**காவிரி முதல் மாவெலி வரை.** பெயாவெல் ஏ.செல்வராஜ். பொகவந்தலாவ: ஏ.செல்வராஜ், சென் மேரிஸ் தமிழ் மகா



படிப்பகம்

www.padippakam.com



வித்தியாலயம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995, (ஹட்டன்: யுனிவர்சல் பிரின்டர்ஸ், 90, side street)

(4), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19X12.5 சமீ.

தலவாக்கொல்லை Bairwel தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இக்கவிஞர். 1979இல் வீரகேசரியில் வெளியான "முனைவு" என்னும் புதுக்கவிதை மூலம் கவிதைத் துறைக்குள் நுழைந்தவர். இந்நூலில், மலையக மக்களின் வாழ்க்கைச் சுவடுகள் சிலவற்றைப் பதிய முயன்றுள்ளார். இக்கவிதைகளில் சொல்லப்பட்ட எல்லாத் துன்பங்களையும் ஏமாற்றங்களையும், தோல்விகளையும் தொட்டவர் இவர். அதனால் புடம்போடப்பட்டு தரமான கவிதைகளை யதார்த்தமாகப் புனைய முடிந்துள்ளது.

## 3444

**கீரிமலையினிலே.** வி.கந்தவனம். யாழ்ப்பாணம் யாழ் இலக்கிய வட்டம், மாநகரசபை, 1வது பதிப்பு, மார்கழி 1969. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(2), 60 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18X12 சமீ.

குறுங்காவியம். கீரிமலையினிலே நலந்தரும் கேணியருகினிலே வேந்தனைப்போல் ஒருகால் வீற்றிருந்து இலட்சிய சமுதாயமொன்றை அமைத்துக் காட்டுகின்றார் கவிஞர் கந்தவனம். கனவுலகில் தன்னை நாடி வந்த சடையப்ப வள்ளல், கம்பர், ஆகியோருக்குத் தற்காலத் தமிழரின் தமிழபிமானம், இலக்கிய வறுமை பற்றி நையாண்டியுடனும் நகைச்சுவையாகவும் எடுத்துரைக்கிறார். கம்பர் விடைபெற்றுச்செல்ல, கவிஞர் தன் கனவுலகிலிருந்து மீள்கிறார். இந்நூலுக்கான விரிவான அணிந்துரையொன்றும் சிந்தனைச் செம்மல் சு.வேலுப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டுள்ளது. யாழ். இலக்கிய வட்டத்தின் 14ஆவது வெளியீடு இதுவாகும்.

## 3445

**குரோட்டன் அழகி.** டீன்கபூர். (இயற்பெயர்: Abdul Gaffoor Rafeeudeen). கல்முனை: முனைப்பு வெளியீடு, மருதமுனை, 1வது பதிப்பு, மார்ச் 1994. (கல்முனை: முனைப்பு அச்சகம், மருதமுனை)

(12), 64 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18X13 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



இளம்பராயத்து நினைவின் சுகங்களை மீட்டல், இயற்கை அழகில் லயித்தல், மனதில் பதிந்த சில மாந்தர்கள், பிராணிகள், பறவைகள், என இவர் கவியுலகின் பயணம் நகர்கின்றது. மரம், செடி, கொடி, ஆறு, கடல், வயல், வரப்பு, மழை, வெயில் என அலைகின்ற உள்ளம் அவருடையது. இதிலுள்ள 32 கவிதைகளும் இவற்றினூடாக டீன்கபூர் என்ற நல்லதொரு கவிஞனை வாசகனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

## 3446

**குறளின் நிழல்கள்.** விக்னா பாக்கியநாதன். ஜேர்மனி: கலைவிளக்கு வெளியீட்டகம், டோர்ட்முண்ட், 1வது பதிப்பு, ஜனவரி 1996. (Germany: CARITAS, Dortmund).

*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15x12 சமீ.*

திருக்குறளின் ஈரடி வரிகளையொத்த இப்புனைவுகள், புலம்பெயர் வாழ்வியலின் சில கூறுகளை நகைச்சுவை உணர்வுடன் தருகின்றன. குறளின் நிழல்கள் என்ற பகுதியில் 133 பாக்களும், ஜேர்ம(னி)ணிக் குறள்கள் என்ற இரண்டாவது பகுதியில் 70 பாக்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலிலுள்ள பாக்கள், பொய்யாமொழிப் புலவரின் அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் என்ற திருக்குறளுக்கு முன்னே அணுவளவேனும் எதிர்நிற்க முடியாது என்ற நூலாசிரியரின் முன்னுரைக் கூற்று சரியானது என்பதை உள்ளே உள்ள வரிகள் அடிக்கடி நினைவூட்டுகின்றன.

## 3447

**கைகளுக்குள் சிக்காத காற்று.** த.ஜெயசீலன். யாழ்ப்பாணம்: அருணன் பதிப்பகம், நல்லூர், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

*(4), 110 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17x12.5 சமீ.*

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த த.ஜெயசீலனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. கவித்துவ அழகோடு வெளிவந்துள்ள இக்கவிதைகள் தனிமனித உணர்வுகளின் வெளிப்பாடுகளாக, ஓசை வழிப்பட்ட கவிதைகளாகப் பொருள் ஆழத்துடன் இலாவகமாகப் படைக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3448

**கைதிப் புறாக்கள்.** மடவளை கலீல். மடவளை: முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், மடவளைக் கிளை, மடவளை பஸார், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (உக்குவளை: எம்.ஆர்.என். பிரின்டர்ஸ், 205, மனம்பொட, உக்குவளை).

iv, 44 பக்கம், விலை: ரூபா 20, அளவு: 18x12.5 சமீ.

துயரக் கொழுந்துகள், இதயக் கதவுகள் ஆகிய இரு நூல்களை எழுதிய இந்நூலாசிரியரின் இக்கவிதைத் தொகுதியில் 37 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலான கவிதைகள் தினகரன், வீரகேசரி, பத்திரிகைகளில் பிரசுரமானவை.

## 3449

**சந்தன மேடை.** என்.சண்முகலிங்கன். தெல்லிப்பளை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மைலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, மே 1992. (கொழும்பு 13: லக்சு கிரப்பிக்ஸ், 253/4, George R De Silva Mawathe).

xii, 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளரான இந்நூலாசிரியர், தென்மயிலைச் சண்முகன் என்ற பெயரில் மாணவர் கையெழுத்துச் சஞ்சிகைகளில் கவிதை புனைந்து இலக்கியத்துறையில் நாட்டம் கண்டவர். பின்னர் என்.சண்முகன், சண்முக பாரதி ஆகிய புனைபெயர்களிலும் கவிதை எழுதியவர். 1971 முதல் 1992 வரையிலான காலப்பகுதியில் இவர் எழுதிய கவிதைகள் ஆண்டொழுங்கில் 5 பிரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## 3450

**சாம்பல் பூத்த மேட்டில்.** தமயந்தி. சென்னை 600024: ஈழசூரியன் வெளியீட்டு மையம், அறை இலக்கம் 23, 135, ஒத்தவாடை தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, புரட்டாதி 1985. (சென்னை: சௌத்ரி பிரிண்டர்ஸ்).

48 பக்கம், விலை: இந்திய ரூபா 5., அளவு: 17x12 சமீ.

ஈழத்தில் 80களில் ஓடிய இரத்த ஆற்றையும், வானில் எழுந்து எரிந்த நெருப்பைக் காட்டிலும், ஓங்கி எழுந்த எமது மக்களின் அவல ஓலங்களோடு அந்த மண்ணில் கையூன்றி எழுந்த கவிதைகளும்



படிப்பகம்

www.padippakam.com



இக்கவிதைத் தொகுப்பில் சங்கமமாகியிருக்கின்றன. இப் போர்க்காலக் கவிதைகள், ஈழத்து இலக்கியவலுவைக் கோடிகாட்டுவதோடு மக்களின் தோள்களில் ஏறிநின்று புரட்சிப் பூக்கள் பறிக்கின்றன.

## 3451

**சிறைகளில் இருந்து.** ஹம்சத்வனி. (இயற்பெயர்: கனகசுந்தரம் தமிழ்ச்செல்வன்). செட்டிகுளம்: க.தமிழ்ச்செல்வன். பிரதான வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1981. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டுக் கோபுர வீதி).

(10), 41 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18.5X12.5சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இறுதிவருட மாணவனாக இருந்த வேளை வெளியாகிய இத்தொகுதியில் 1980 ஜனவரி முதல் 1981 செப்டெம்பர் வரையிலும் பல்கலைக்கழக மாணவனாக இருந்த வேளையில் இவரால் எழுதப்பட்ட 25 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ்த் தேசிய வாதமும் தேசிய இன ஒடுக்குமுறையும் அதிலிருந்து விடுதலை பெறும் வேட்கையும் முக்கியம்பெற்றுவந்த அக்காலப்பகுதி-யில் இந்தத் தெளிவும் எளிமையும் மிக்க கவிதைகள் புனையப்பெற்றன.

## 3452

**சுவைத் தேன்.** நீ.மரியசேவியர் அடிகள். பிரான்ஸ்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை),

(4), 83 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20X13 சமீ.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநரான அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகள் இயற்றிய இப்பாடல்கள், திருமறைக்கலாமன்றத்தினர் தயாரித்த வானொலி நிகழ்ச்சிகளிலும் மேடை நாடகங்களிலிருந்தும் இடம்பெற்றவை. அவை தனியாகத் தொகுக்கப்பெற்று நூலுருவாகி-யுள்ளன. அடிகளாரின் சமய ஆழமும், மானிட நேயமும், ஆன்மீகப் பற்றும் இக்கவிதைகளில் துலங்குகின்றன. கன்னி பெற்ற கடவுள், குவலயம் பெற்ற குழந்தை, அன்பில் மலர்ந்த அமர காவியம், கடவுள் வடித்த கண்ணீர், சாவை வென்ற சத்தியன், களங்கம், காட்டிக் கொடுத்-தவன், வா மகனே வா, எழுதிய கரம், கவலையின் எல்லை, வானொ-லிப் பாடல்கள் ஆகிய 11 தலைப்புகளில் இவை அமைந்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



**3453**

**சுனாமி.** மருதூர் ஏ.ஹஸன். சாய்ந்தமருது 7: அனைத்து இந்திய முகாமைத்துவ கல்வி நிறுவனம், 24, 1வது தளம், Super Market Complex, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (அக்கரைப்பற்று: செலெக்ஷன்).

80 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-99009-0-0.

சுனாமிப் பேரலையால் ஏற்படுத்தப்பட்ட கடலோரக் கிராமங்களின் கடுந்துயரம் இங்கே பதிவாகியுள்ளது. இக்கவிதைகளை வாசிக்கும் போது மனதுக்குள் அந்தத் துயரம் ஊறிக் கசிகின்றது. மிகைப்படுத்த-லற்ற கவிதை வரிகளில் 26.12.2004 அன்று சீறிப்பாய்ந்து பல்லாயிரம் உயிர்களைக் கணப்பொழுதில் காவுகொண்ட அந்தச்சுனாமியின் சீற்றம் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது.

**3454**

**செந்தமிழே செம்மொழியே.** செந்தாரகை. கனடா: கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கனடா: விவேகா அச்சகம், 60, Barbados Blvd, #6, Scarborough)

xxiii, xxxi, 114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பான கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு இதுவாகும்.

**3455**

**செல்வி - சிவரமணி கவிதைகள்.** செல்வி (இயற்பெயர்: செல்வநிதி தியாகராஜா), சிவரமணி. சென்னை 600 078: தாமரைச்செல்வி பதிப்பகம், 31/48, இராணி அண்ணாநகர், 1வது பதிப்பு, நவம்பர் 1996. (சென்னை 600 024: அலைகள் அச்சகம், 36, தெற்குச் சிவன்கோவில் தெரு, கோடம்பாக்கம்).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 17.5x12 சமீ.

ஈழத்தின் மிக முக்கியமான இரு பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு இது. செல்வி International Pen என்ற சர்வதேச படைப்பிலக்கியவாதிகளின் கூட்டமைப்பு 1992க்கான வருடாந்த சிறப்புப் பரிசையும், 1994ம் ஆண்டிற்கான Poetry International



படிப்பகம்

www.padippakam.com



என்ற பரிசையும் பெற்றவர். 09.08.1991இல் போராளிக் குழுவொன்றினால் கடத்தப்பட்டார். இன்றுவரை இவரது இருப்புப் பற்றிய தகவல் இல்லை. சிவரமணி இலக்கிய ஆக்கத்தில் மாத்திரமன்றி ஓவியம், இசை முதலியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். "எனது கைக்கெட்டியவரை எனது அடையாளங்கள் யாவற்றையும் அழித்துவிட்டேன். நீங்கள் செய்யக்கூடிய உதவி, ஏதும் எஞ்சியிருந்தால் அவற்றையும் அழித்து விடுவதே" என்று தனது இறுதிக் குறிப்பினை 16.5.1991இல் எழுதி வைத்துவிட்டு, தனது கவிதைகள் அனைத்தையும் எரித்துவிட்டு 19.5.1991இல் தனது 23ஆவது வயதில் தற்கொலை செய்துகொண்டார். இத்தொகுப்பிலுள்ள 22 கவிதைகளில் முதல் எட்டு கவிதைகளும் செல்வியினுடையவை. எஞ்சியவை சிவரமணியினுடையவை. இக்கவிதைத் தொகுப்பின் பதிப்பாசிரியர் ப.திருநாவக்கரசு அவர்களுக்கு செல்வி எழுதிய மூன்று கடிதங்களும் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

## 3456

**சோகங்களிலும் துயரமனது.** கௌரி. சென்னை 600 083: சமூக ஆய்வு வட்டம், 264, 16ஆவது அவென்யூ, அஷோக் நகர், 1வது பதிப்பு, சித்திரை 1988. (சென்னை 600 086: ரோமா ஆப்செட் பிரிண்டர்ஸ்).

66 பக்கம், விலை: இந்திய ரூபா 7., அளவு: 16x10.5 சமீ.

ஈழப் போராட்டக் களத்திலிருந்து கனல் மணம் பரப்பிய இளங் கவிஞர்களுள் கௌரியும் ஒருவர். விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்காளியாக இருந்த வேளையில் ஈழத்தின் போர்க்குரலாக இவரது கவிதைகள் வெடித்தன. தமிழ் மண்ணை ஆக்கிரமித்த சிங்கள இராணுவத்துக்கும், இந்திய இராணுவத்துக்கும் அதன் அரசுகளுக்கும் எதிரான மக்களின் உள்ளக் குமுறல்கள் இவரது கவிதைகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தொகுப்பிற்கான நீண்ட முன்னுரையினை சென்னை மாநிலப் புதுக் கல்லூரிப் பேராசிரியர் கவிஞர் இன்குலாப் அவர்களும், பின்னுரையினை தமிழ்நாடு, குடியாத்தம் அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்களும் வழங்கியுள்ளனர்.

## 3457

**தமிழரின் தாகம்.** மு.வே.யோ.வாஞ்சிநாதன். யாழ்ப்பாணம்: தமிழ்த் தாய் பதிப்பகம், 1வது பதிப்பு, சித்திரை 1991. (யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் பதிப்பகம்).



படிப்பகம்

www.padippakam.com



(6), 24 பக்கம், விலை: ரூபா 14., அளவு: 19X13 சமீ.

தமிழர் தாகம் என்னும் குறுங்காவியம் 1987ஆம் ஆண்டு வார முரசொலியில் தொடராக வெளிவந்தது. ஆதிக்கவெறியர் கையில் சிக்கிக் கிடக்கும் தாயகமண்ணின் அவலங்களையும் இடர்ப்பாடுகளையும் அதற்கான மீட்புப் போரில் வேங்கைகளின் அளப்பரிய ஈகங்களையும் நேர்த்தியாகக் கவிதைகளில் வடித்துள்ளார். தமிழரின் தாகம், திருக்கோணமலை பதிகம், மட்டக்களப்பு பதிகம், வன்னி பதிகம், மன்னார் பதிகம், மலையக பதிகம், யாழ்ப்பாண பதிகம் என ஆறு சிறு பாகங்களில் பாடப்பெற்றுள்ளது.

## 3458

**தாய்.** தில்லைச்சிவன் (இயற்பெயர்: தி.சிவசாமி). யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1969. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

(14), 105 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18X12.5 சமீ.

1961ம் ஆண்டில் கவிதைக்கன்னி என்ற தொகுதியை வெளியிட்ட தில்லைச்சிவனின் இரண்டாவது கவிதைத் தொகுதி இதுவாகும். பட்டணத்து மச்சினி என்ற தனது முதலாவது கவிதையை மறுமலர்ச்சி இதழில் இடம்பெறச்செய்தவர். கற்பனைகள் இனிக்கும், காதல் துள்ளும், உணர்ச்சி கிளுகிளுக்கும், தமிழ் மணக்கும் இவரது தீந்தமிழ்க் கவிதைகள் 38 இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவற்றை தேசம், தமிழ், அழகு, காதலும் குடும்பமும், பெரியோர்கள், கதைப் பாடல் என்று ஆறு பிரிவுகளில் அடக்கமுடிகின்றது.

## 3459

**திருக்குமரன் கவிதைகள்.** தி.திருக்குமரன். யாழ்ப்பாணம்: தி.திருக்குமரன், 95/1, கச்சேரி நல்லூர் வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிறின்ரேர்ஸ், 424 காங்கேசன்துறை வீதி).

xvi, 98 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5X12.5 சமீ.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் விரிவான அணிந்துரையுடன் கூடிய இக்கவிதைத் தொகுப்பில் கால்நூற்றாண்டுக்குள்ளான காலப்பகுதியில் தான் சந்திக்க நேர்ந்த அனுபவங்களைத் தன்னை நெகிழ்த்தும் மொழியில் பதிவாக்கியிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3460

**துருவச் சுவடுகள்.** நோர்வே தமிழ்க் கவிஞர்கள். நோர்வே: சுவடுகள் பதிப்பகம், Herslebs Gate 43, 0578, Oslo 5, 1வது பதிப்பு, மார்கழி 1989. (நோர்வே: சுவடுகள் கணனியகம், ஒஸ்லோ).

(4), 76 பக்கம், விலை: நோர்வேஜியன் குரோணர் 30., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 82-7261-000-0.

நோர்வேயில் புலம்பெயர்ந்துவாழும் ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத்தொகுதி. வ.ஐ.ச.ஜெயபாலன், தம்பா, கலிஸ்ரா இராஜநாயகம், தமயந்தி, வயவைக்குமரன், மைத்ரேயி, இளவாலை விஜயேந்திரன் ஆகிய கவிஞர்களின் 23 கவிதைகள் இதில் இடம்பெறுகின்றன. இத்தொகுதிக்காக சமுத்திரன் எழுதிய விரிவான அணிந்துரையும் இடம்பெறுகின்றது.

### 3461

**துளியூண்டு புன்னகைத்து.** ஏ.நஸ்புள்ளாஹ். கிண்ணியா: நேயம்-அல் மின்ஹாஜ் இளைஞர் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361 பீ, நீதிமன்ற வீதி)

xiv, 47 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21x14.5 சமீ.

ஒரு வாழ்க்கைப் போராட்டத்தின் கண்ணீர்ப் பயணமாக இக்கவிதைத் தொகுதி அமைந்துள்ளது. மொத்தம் 43 கவிதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. கவிஞர் கிண்ணியா ஏ ஏ.நஸ்புள்ளாஹ் அவர்கள் தொன்னூறுகளில் எழுத்துலகில் பிரவேசித்தவர்.

### 3462

**தென்கோவை கந்தையாப் பண்டிதர் கவித் திரட்டு.** கந்தையா பண்டிதர் (மூலம்), கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: புலவரகம், மயிலணி, 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

(4), vi, 74 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

மலாய் நாட்டு இளைப்பாறிய உத்தியோகத்தர் கொல்லன்கலட்டி உயர்திரு ந.பொ.செ.இலங்கைநாயகம் அவர்கள் விரும்பியவாறு தொகுக்கப்பட்ட இரண்டாவது புலவரக வெளியீடு இதுவாகும். யாழ்ப்பாணத்தில் சிறப்புற்றிருந்த புலவர் பரம்பரையான சேனாதிராய



படிப்பகம்

www.padippakam.com



முதலியார் வழித்தோன்றலான தென்கோவை கந்தையாப் பண்டிதர் அவர்களின் மூளாய் மூத்தவிநாயகர் திருவூஞ்சல், புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் ஒருபா வொருபது, புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் பதிகம் (1935), மேலைக்கரம்பொன் முருகவேள் துவாதச தோத்திர மஞ்சரி, யாழ்ப்பாணம் காரைநகர் மணிவாசகர் விழா மலர் வாழ்த்துரை, ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்து (1919), மயிலிட்டி க.மயில்வாகனப் புலவரின் நகுலேச்சர விநோத விசித்திர கவிப்பூங்கொத்துச் சிறப்புப் பாயிரம் (1911), சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் கணக்கிய நீதிவெண்பாச் சிறப்புப் பாயிரம் (1914), புன்னாலைக்கட்டுவன் வித்துவான் சி.கணேசையரின் இரகுவம்மிசப் புத்துரைச் சிறப்புப்பாயிரம் (1915), போன்ற பல படைப்புக்களைத் தேடித் தொகுத்து வெளியாகியுள்ள திரட்டே இந்நூலாகும்.

## 3463

**தேடல் வலி.** ஜெயந்தி சாம்சன். பிரான்ஸ்: முகம் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜுலை 2003. (யாழ்ப்பாணம்: கங்கை ஒப்செற் பிரின்டர்ஸ், நாவலர் வீதி).

x, 39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வாழ்விடமாகவும் கொண்ட ஜெயந்தி பின்னாளில் புலம்பெயர்ந்து பாரிசில் வாழ்ந்து வருகின்றார். பெண்ணியச் சிந்தனையாளரான இக்கவிஞர், பாரிஸில் ஊடகத்துறையிலும் ஈடுபாடு கொண்டவராக இருக்கின்றார். தேடல் வலி இவரது முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

## 3464

**தேவி எழுந்தாள்.** சி.சிவசேகரம். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, நவம்பர் 1991. (சென்னை 20: இராசகிளி பிரிண்டர்ஸ்).

86 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

இந்நூலிலுள்ள கவிதைகளில் பெரும்பாலானவை தாயகம், புதிய பூமியிலும் ஏனையவை ஒல்லாந்து- அஆஇ, ஜேர்மனி- தூண்டில், புதுமை, பிரான்ஸ்- ஓசை, சுவிஸ்- மனிதம், நோர்வே- சுவடுகள், சக்தி, இங்கிலாந்து- பனிமலர் ஆகிய இதழ்களிலும் வெளிவந்தவை. சாதிவெறி, இனவெறி, அமைதிகாக்கும் வெறி, அரசியல்வெறி



படிப்பகம்

www.padippakam.com



ஆகியவற்றின் அனர்த்தங்களைச் சாடும் இவரது கவிதைகள், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், தியாகிகளைப் பற்றியும் பாடுகின்றன.

### 3465

**தொலைவில்.** வாசுதேவன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு ஏப்ரல் 2006. (சென்னை 600 005: மணி ஆப்செட்)

103 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 22x13.5 சமீ., ISBN: 81-89359-30-4.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணையில் 1962இல் பிறந்த வாசுதேவன் தற்போது பிரான்சில் புலம்பெயர்ந்து வாழ்ந்துவருகிறார். தனது பதினேழு வயதில் ஊரைவிட்டும், இருபத்தியிரண்டு வயதில் நாட்டைவிட்டும் புறப்பட்ட ஒரு ஈழத்துக் கவிஞனின் அலைதலுக்கூடான வாழ்வனுபவங்கள் இத்தொகுப்பில் கவிதைகளாகியுள்ளன. அவ்வகையில் தாயகங்களுக்கு அப்பால் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு சமூக மனிதனின் ஆன்மாவை, அவனது தொனியை இக்கவிதைகள் உணர்த்தி நிற்கின்றன. கே.வாசுதேவனின் முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும்.

### 3466

**நான் எனும் நீ.** M.H.M.அஷ்ரஃப். கொழும்பு 2: புதிய வெளிச்சங்கள் வெளியீட்டகம், சாந்தி இல்லம், 53, வொக்சோல் லேன், 2வது பதிப்பு, ஒக்டோபர் 1999, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xviii, 582 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955 8305 00 6.

இலங்கையின் முதலாவது முஸ்லீம் அரசியல் கட்சியை (ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்) தாபித்து தான் மரணிக்கும் வரை கட்சியின் தலைவராக விளங்கியவர் இந்நூலாசிரியர். கவிஞரின் தொடக்க காலக் கவிதைகள் முதல் அண்மைக்கால கவிதைகள் வரை ஒன்றுதிரட்டப்பட்டு 189 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சுரண்டல், சமூக ஏற்றத்தாழ்வு, என்பவற்றுக்கு எதிரான, சமூக நீதிக்கான இன ஒருமைப்பாட்டுக்கான குரல் இக்கவிதைகளில் ஒலிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## 3467

**நிர்வாண விழிகள்.** முல்லையூரான். (இயற்பெயர்: மு.சிவராஜா). டென்மார்க்: Tuli Publikation, Baunehøjen – 35, 3320 Skaevinge, 1வது பதிப்பு, 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

120 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16x10 சமீ., ISBN: 87-89739-00-0.

முல்லையூரானின் புதுக் கவிதைத் தொகுதியில் நாம் காணும் முக்கிய உணர்வுநெறி, சொந்த மண்ணிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்ட தன்மையும், புதிய சூழலுடன் உணர்வுபூர்வமாக இணைய முடியாதுள்ள சோகமுமாகும். இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு புறங்களாக நின்று ஒன்று மற்றொன்றின் சோகத்தை அதிகரிக்கின்றது. புதுக்கவிதைகளுக்குப் பொருத்தமான கணனிவரி ஓவியங்கள் கவிதைகளின் கட்புல வடிவங்களோடு இணைகின்றன. வன்னி மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட முல்லையூரான் 80களில் புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழ்பவர்.

## 3468

**நிலப்பூக்கள்.** புதிய பாரதி (இயற்பெயர்: வே.இராஜலிங்கம்). கனடா: பாரதி வயல், 1வது பதிப்பு, தை 2005. (கனடா: விவேகா அச்சகம், 60, Barbados Blvd, #6, Scarborough).

xviii, 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x12.5 சமீ.

கனடா நம்நாடு பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த தீவகம் வே.இராஜலிங்கம் அவர்களின் முதலாவது கவிதைத் தொகுதி. இத்தொகுப்பு மூன்று பாகங்களாகப் பிரித்து வகைப்படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளது. தமிழீழ தேசியக்காற்று என்ற முதற் பிரிவில் 27 தமிழ்த் தேசிய, விடுதலை உணர்ச்சிக் கவிதைகளும், இரண்டாவது பிரிவில், வாராய் தைப்பாவாய் என்ற நெடுங்கவிதையும், மூன்றாவது பகுதியில் பார்வைகள் என்ற தலைப்பில் கவிஞரின் 24 பலவினக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூலிலுள்ள மொத்தம் 52 கவிதைகளும் புதியபாரதியின் கவிதாபுலமைக்குச் சான்றாக அமைந்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3469

**நெஞ்ச நெருடல்.** இணுவை சக்திதாசன். இணுவில்: பொது நூலக இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, வைகாசி 2003. (யாழ்ப்பாணம்: கஜன் பிரின்டர்ஸ், உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு).

xxvi, 58 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

வடபுலத்து இணுவில் கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று டென்மார்க்கில் வாழும் கனகசபாபதி சக்திதாசனின் 50 கவிதைகளின் தொகுப்பு இந்நூல். ஐரோப்பிய வானலையிலும் பிற ஊடகங்களிலும் வலம்வந்த இவரது கவிதைகள் தாயக மண்ணின் உணர்வுகளையும் புலம்பெயர்ந்த தேசத்தில் எம்மவரின் பாடுகளையும் உள்வாங்கி சிந்தனையைத் தூண்டும் வகையில் எழுதப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

## 3470

**நெஞ்சத்து நெருப்பு.** வேலணையூர் பொன்னண்ணா. டென்மார்க்: திருமதி பொன்மணி, அறிவகம், 1வது பதிப்பு, ஜுன் 2004. (கிளிநொச்சி: நிலா பதிப்பகம்).

(14), 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

வரலாற்றில் இருந்து தமிழினத்தை அழித்துவிட வேண்டும் என்ற வேட்கையுடன் புறப்பட்டுச் சீறிநிற்கும் சிங்கள இனவாதத்தின் செயற்பாடுகளும், அதை உரம்போட்டு வளர்த்தெடுக்க உதவும் இந்திய அரசியலும், அண்டை நாட்டில் தம்மினத்தின் அவலத்தை ஆழ்ந்தறியாது, தமிழகத்தின் சினிமாக் கவர்ச்சியிலே மயங்கிக் கிடக்கும் தமிழகப் பெருநிலத்தாரும், உத்தமனாய் நடித்து உலகை ஏமாற்றும் உலக அரசியல் தலைமைகளும் அவர்களின் செயற்பாடுகளும் பொன்னண்ணாவின் நெஞ்சத்தில் நெருப்பாகக் கனன்று, கவிதைகளாக வடிகால் தேடிக்கொண்டுள்ளன.

## 3471

**நெருடல்கள்.** த.திரேஸ்குமார். பஸ்ஸறை: கஸ்தூரி பிரசுரம், த.பெ.எண், 2, பஸ்ஸறை, 1வது பதிப்பு, ஐப்பசி 2003. (பதுளை: Brownkey, 264 கெப்பிட்டிபொல வீதி).

iii, 40 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20.5x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



பாடசாலை மாணவனாக இருக்கும் காலத்திலேயே இரண்டு கவிதை நூல்களை வெளியிட்ட இவ்விளம் எழுத்தாளரின் மூன்றாவது கவிதைத் தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் 25 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகளுள் பல தேசிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமானவை.

## 3472

**நெருப்பு ஊர்வலங்கள்.** பெனி. (இயற்பெயர்: S.J.Benny) மட்டக்களப்பு: ஜெஸ்கொம் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜுலை 1999. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

(18), xliv, 62 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x13 சமீ.

மலையக கவிதை இலக்கியத்தில் கால்நூற்றாண்டுகாலப் புதுக்கவிதை வளர்ச்சியில் பெனியின் கவிதைகள் புதுவசந்தம் காட்டுகின்றன. கவிதையின் மொழிவளம், தமிழ்வளம், வரிகளின் வீச்சு, வார்த்தைகளின் வீரியம் என்பன சுவைக்கப்பட வேண்டியவை. யாரும் பாடியிராத மலையகத்தின் இயற்கை அழகை, பசுமையை, தென்றலை, வாடைக்காற்றை, நதியை, ஓடையை, ஓடைக்கரை மூங்கில்களை, குளிரை, அவர் அணுகித் தரும் பாங்கு ரசிக்கக்கூடியவை.

## 3473

**பத்துப் பாட்டு.** வி.கந்தவனம். சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம், 375-8, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜுலை 1998. (சென்னை 600 024: இளம்பிறை புக் மேக்கர்ஸ், 375-8, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

சந்திப்பு, குளிர்வதை, அர்த்தங்கள் சிதறியன, கரிய நெஞ்சிருள், அன்பும் அறனும், அகதி ஆகிய அவள், கவரிமான் அன்னாள், தாயகமே எந்தன் வேதம், இடமில்லை கோழைகளுக்கு, ஞானக்கூத்து ஆகிய சுவையான பத்துக் கதைப்பாடல்கள் இத்தொகுப்பில் மரபுக் கவிதைகளாக மலர்ந்துள்ளன.

## 3474

**பனிமழையில் பூபாளம்.** மருதம் (இயற்பெயர்: ஜின்னாஹ் ஷெரிபுத்தீன்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, நவம்பர் 1995. (பாணந்துறை: கிளீன் பிரின்டர்ஸ், எழுவில).



படிப்பகம்

www.padippakam.com



xviii, 70 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20.5X14 சமீ.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பின் உத்தியோகபூர்வ ஏடான காங்கிரஸ் இதழ்களில் கவிஞர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன் அவர்கள் "மருதம்" என்ற புனைபெயரில் எழுதிவந்த அருமையான கவிதைகள் சிலவற்றின் திரட்டு இத்தொகுதியாகும். இ.தொ.கா.வின் சேவைகள், மலையகத் தமிழ் மக்களுக்கு அதன் தலைமைத்துவம் வழங்கும் சிறப்புச் சேவைகள் பற்றியும், மலையக மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், அவர்களது உள்ளத்தில் முகிழ்க்கும் உணர்வுகள், எதிர்நோக்கும் கஷ்ட நஷ்டங்கள் பற்றியும் அழகாகவும், ஆழமாகவும், சிந்தித்து உள்ளக் கிளர்ச்சி ஏற்படும் வண்ணம் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன.

## 3475

**பாலையும் பயணமும்.** வைரமுத்து சுந்தரேசன். யாழ்ப்பாணம்: பசுபதி சிவநாதன், தலைவர், பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை நிலையம்).

vi, 68 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19X14 சமீ.

சமகால ஈழத்துக் கவிஞரின் இனப்பிரச்சினை சார்ந்த போரியல் கவிதைகளிலிருந்து வேறுபட்டு தன்னைச்சூழவுள்ள மனிதர்களிலும் பார்க்க இயற்கையை ஆத்மார்த்தமாக நேசிக்கும் பார்வை இவருடையது. இவரது கவிதைகளில் அகதி வாழ்வு, இடப்பெயர்வு, போன்ற மனித அவலங்களைப் புலப்படுத்தும் கவிதைகளும் வாழ்வு பற்றிய தத்துவத் தேடல்களும் கவனத்தை ஈர்க்கின்றன. மனிதனால் இயற்கை காயப்படுவதை இக்கவிஞன் விரும்பவில்லை. பிராணிகள் மீதும், இயற்கையின் மீதும் இவர் கொண்ட அக்கறை கவிதைகளினூடாக வெளிப்படுகின்றன. வலையில் சிக்கிய வௌவால், இறந்து கிடக்கும் வெள்ளாடு, நன்றியுணர்வால் மரணிக்கும் நாய், பாம்பாட்டியின் கையில் ஆடும் நாகம் என்று இவரது கவிதைப் பரப்பு விரிகின்றது.

## 3476

**பாவாரம்.** சாந்தி முஹியித்தீன், எம்.எச்.எம்.புஹாரி, அஷ்ரப் சிஹாப்தீன் (தொகுப்பாளர்கள்). கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2002, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்



படிப்பகம்

www.padippakam.com



திணைக்களம், 1வது பதிப்பு ஒக்டோபர் 2002. (கொழும்பு 13: கொம்பிரின்ட் சிஸ்டம்ஸ், 334 ஏ, கே.சிறில் சீ. பெரேரா மாவத்தை).

iv, 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14 சமீ, ISBN: 955-8806-13-7.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவுக் ஹக்கீம் அவர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சராக இருந்த காலத்தில் அவ்வமைச்சின் அனுசரணையுடன் 2002 அக்டோபர் 22-24ம் திகதிகளில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு மூன்றுநாள் நிகழ்வாக நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட பல நூல்களில் ஒன்றே பாவாரம் ஆகும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூதூர் உமறு நெயினாப் புலவர், அக்கரைப்பற்று அ.லெ.உமறு லெப்பை ஆலிம் புலவர், ஏறாவூர் எல்.கே.முஹயிதீன் பிச்சைப் புலவர், காத்தான்குடி செய்யிது ஸக்கார் பாறுப் புலவர், மருதமுனை வை.தாவூது லெப்பைப் புலவர் ஆகியோரின் பாடல்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

## 3477

**புதுயுகத் தமிழர்.** பொன் பாலசுந்தரம், ஐ.தி.சம்பந்தர் (தொகுப்பாசிரி-யர்கள்). லண்டன் E7 8PQ : சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15, ருத்லண்ட் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (சென்னை 600094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராட்டிரா நகர், 7ம் தெரு, சூளைமேடு).

96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 70., இந்திய ரூபா 30., அளவு: 21X14 சமீ.

லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் 2000ஆம் ஆண்டில் வருக தமிழர் பொற்காலம் என்ற தலைப்பிலான உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியொன்றினை ஒழுங்குசெய்து பங்கேற்று வெற்றியீட்டிய-வர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தது. 2004ம் ஆண்டிலும் அவ்வாறான போட்டியொன்றினை புதுயுகத் தமிழர் என்ற தலைப்பில் ஒழுங்குசெய்து 2வது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியை நடத்தியது. முன்னைய போட்டியைப் போலல்லாது, இம்முறை வெற்றிபெற்ற கவிதைகளைத் தொகுத்து, கவிஞர்களின் புகைப்படங்களுடன் தனி நூலாக வெளியிட்டுள்ளது. இப்போட்டிக்கு உலகெங்கினுமிருந்து 426 கவிதைகள் பெறப்பட்டன. இவற்றில் பரிசுக்குரிய 37 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3478

**புரட்சிக்கமால் கவிதைகள்.** புரட்சிக்கமால். கண்டி: இக்பால் பதிப்பகம், 1வது பதிப்பு, மார்கழி 1962. (கண்டி: கிங்ஸ்லி அச்சகம், 205, கொழும்பு வீதி).

(16), 149 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18X12.5 சமீ.

இத்தொகுப்பிலுள்ள பாடல்கள் பெரும்பாலும் சமயச் சார்புடையனவாகக் காணப்பட்டாலும், பிற சமயத்தவரும் ஈடுபாட்டுடன் சுவைக்கும் வண்ணம் அவை அமைந்துள்ளன. யாவருக்கும் பொதுவான உயரிய லட்சியங்களாக இஸ்லாம் வலியுறுத்தும் நம்பிக்கை, சமத்துவம், சகோதரத்துவம், தியாகம் என்பவற்றைத் தமது கவிதைகளிலே எடுத்துரைக்கின்றார். சாலிஹ் என்ற புரட்சிக் கமாலின் 75 கவிதைகள் கொண்ட இத்தொகுப்பிற்கு பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளார்.

## 3479

**புலமும் புலராத பொழுதுகளும்.** ஜெகதீஸ்வரி இராஜரட்ணம். ஜேர்மனி: சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 1வது பதிப்பு, புரட்டாதி 2005. (ஜேர்மனி: ராஜி பதிப்பகம், Rombergstrabe. 10b, 59439, Holzwickede).

xi, 107 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

வட்டுக்கோட்டை, அராலி வடக்கைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி இராஜரட்ணம் அவர்கள் 1985இல் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வந்து வேரோடியவர். 1990ம் ஆண்டிலிருந்து ஜேர்மனியின் சார்புருக்கன் - தமிழாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றும் ஜெகதீஸ்வரி, 2003ம் ஆண்டு முதல் தமிழாலய நிர்வாகியாகவும் செயற்பட்டு வருகின்றார். இக்கவிதைத் தொகுதியில் உள்ள 96 கவிதைகளிலும் பெரும்பாலானவை ஈழவிடுதலைப் போராட்டம் சார்ந்தவையாக உள்ளன. தமிழினத்தை நேசித்து, இன விடுதலைப் போராட்டத்தை வலியுறுத்தி, வேட்கையுடன் எழுதப்பட்ட இக்கவிதைகளில் இடையிடையே இயற்கையின் மீது கொண்ட இவரது வாஞ்சையும் வாழ்வியல் தத்துவங்களும் இடம்பெற்று சற்று வித்தியாசமாகப் பிரகாசிக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3480

**புலவர்மணி ஷரிபுத்தீன் செய்த தமிழ்.** ஆ.மு.ஷரிபுத்தீன். கொழும்பு: முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்ட்ஸ், புகையிரத நிலைய வீதி).

xii, 173 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14.5 சமீ., ISBN 955 8806 09 9.

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் இயற்றிய கவிதைகளில் நபிமொழி நாற்பது, நலவியல் நாற்பது, நபிமொழி நானாற்பது, புனித ரமழான் சிந்தனைகள், மணமங்கல மாலை, தௌபா மாலை ஆகிய ஆறு கவிமாலைகளின் மூலமும், தேவைப்படுமிடத்து அதன் உரைகளும் தரப்பட்டுள்ளன. துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லீம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் ஒக்டோபர் 22-24. 2002 இல் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்ட நூல் இது.

## 3481

**பூ மழை.** அனலை ஆறு. இராசேந்திரம். கனடா: மாரி பதிப்பகம், 1வது பதிப்பு, ஆடி 2004. (கனடா: விவேகா அச்சகம், 60, Barbados Blvd, #6, Scarborough).

xxvi, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X13.5 சமீ.

31 மரபுக் கவிதைகள் கொண்ட தொகுப்பு. தீவகத்தின் வனப்பையும் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களையும் இக்கவிதைத் தொகுதியில் தரிசிக்கலாம். ஆன்மீகமும் மண்வாசனையும் கவிதைகளுள் பொதிந்துள்ள அதே வேளையில் புலம்பெயர்ந்து வாழும் தீவக மக்களின் திசைமாறிய வாழ்வும் மேலைக் கலாச்சாரத்தில் மோகம்கொண்ட அவர்களது பண்பாட்டுப் பிறழ்வும் ஆங்காங்கே வெளிச்சமிடப்பட்டுள்ளன. கனடாவில் தற்போது புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளரின் படைப்பு என்ற வகையில் புகலிட இலக்கியத்துக்கு இந்நூல் அணிசேர்க்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## 3482

**பேசவே செய்ததடி.** எஸ்.நஜிமுதீன். சாய்ந்தமருது: கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன்).

60 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

வைத்தியராகப் பணிபுரியும் எஸ்.நஜிமுதீனின் முதலாவது கவிதைத் தொகுப்பு. இத்தொகுதியிலுள்ள பல்சுவை கொண்ட கவிதைகளும் உண்மையும் நம்பகத் தன்மையும் மிக்கவை. இறுக்கம் கொண்ட கவிதைகளில் சொல்ல வந்த செய்தியை ஆலாபனை இன்றிச் சொல்ல முடிகின்றது.

## 3483

**மகரந்தம்: கவிதைத் தொகுப்பு** 2. மூதூர் கலைமேகம். (இயற்பெயர்: ஏ.எஸ்.இப்றாஹீம்). மூதூர்: சமூகநல அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்பு நிலையம், 3CD, நொக்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: விக்ரம் பிரின்டர்ஸ், 19, வூல்பெண்டால் வீதி).

46 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20.5x14.5 சமீ.

கிழக்கிலங்கையின் மூதூர் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இக்கவிஞர் 38 வருடங்களாக படைப்பிலக்கியத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். சமாதானம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, இயற்கை அழிவுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதிய 31 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

## 3484

**மடிக்குள் விழுந்த வெள்ளிகள்.** நற்பிட்டிமுனை பளீல். மட்டக்களப்பு: பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்ச் 1988. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், விலை: ரூபா 12., அளவு: 19x13 சமீ.

1965இல் கல்முனை, நற்பிட்டிமுனையில் பிறந்த பளீலின் முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். 1980 முதல் கவிதை, கதை, அரசியல் கட்டுரைகள் என்று எழுதிவரும் இவரது படைப்புக்கள் பெரும்பாலான தேசிய நாளிதழ்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 28 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கிழக்குப்



படிப்பகம்

www.padippakam.com



பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியான இவர் எழுதிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கான வினாவிடை நூல்கள் மாணவர் மத்தியில் பிரபல்யமானவை.

## 3485

**மண்ணில் தொலைந்த மனது தேடி.** சடாகோபன். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் பிரைவேற் லிமிட்டெட், 44, மூன்றாம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (கொழும்பு: கிறிப்ஸ்).

*160 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 24.5X11 சமீ.,* ISBN: *955-8637-21-1.*

கவிஞர் சடகோபன் ஈழத்துத் தமிழர் பட்டுவரும் சமகாலத் துன்பங்களினூடு வாழ்ந்து வருபவர். அவரது அனுபவங்கள் சமகாலத்தில் வாழும் அத்தனை தமிழ் உள்ளங்களையும் மீள்பிரதிபலிப்புச் செய்யவைக்கும் வீறு கொண்டவை. வெறுமனே பழைய-இழந்த, போரால் இழக்க வைக்கப்பட்ட வாழ்வை- வாழ்வின் சோகங்களை மட்டுமே ஏக்கத்தோடு பாடும் கவிஞராக அல்லாது, சொந்த சோகங்களையும் கால தேச வர்த்தமானம் கடந்த நிலையில் சமூகத்தின் விடிவுதேடிப் பாடுபடுவதாக இத்தொகுப்பிலுள்ள இவரது கவிதைகள் அமைகின்றன. தேசிய கலை இலக்கியப் பேரவையின் 105வது நூல்.

## 3486

**மண்ணில் வேரானாய்.** எம்.நவாஸ் சௌபி. ஒலுவில்: மின்னல் வெளியீட்டகம், நெசவு நிலைய வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (அக்கரைப்பற்று: மெற்றோ ஓப்செட், பிரதான வீதி).

*(12), 50 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 17X12.5 சமீ.*

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள இத்தொகுதியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட மாணவனான இறக்காமத்தைச் சேர்ந்த இளங்கவிஞன் நவாஸ் சௌபியின் 16 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் அமைச்சர் அஷ்ரப்பின் வாழ்வும் மரணமும் மறக்கமுடியாததொன்றாகியுள்ளது. அஷ்ரப் பற்றிய தன் மனப்பதிவுகளை இக்கவிதைகளில் உணர்வுடன்



படிப்பகம்

www.padippakam.com



வடித்திருக்கிறார் இக் கவிஞர். மர்ஹூம் அஷ்ரஃப் பற்றிய பதிவுகளுக்கு இந்தக் கவிதைத் தொகுதியும் துணைபுரிகின்றது.

## 3487

**மண்வாசம்.** கோவிலூர் செல்வராஜன். சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம், 32/8 (375), ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2004. (சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம், 32/8 (375), ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).

xiv, 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 81 88686 09 3.

தமிழீழ மண்ணின் பண்பாட்டுக் கோலங்கள், போருக்குப் பின்னான மண்ணின் மாற்றங்கள், அழிவுகள், விடுதலைப் போராட்டம், போராளிகளின் தியாகம் என்பனவும், புலம்பெயர்வாழ்வியலின் பண்பாட்டிலக்கிய மாற்றங்கள் என்பனவும் உள்வாங்கப்பட்டு மண்வாசமாக 35 கவிதைகளில் பதிவுபெற்றுள்ளன. பிரபல்யமான ஈழத்து மெல்லிசைப்பாடகரான இந் நூலாசிரியர், கிழக்கிலங்கை மட்டக்களப்பின் திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர். தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். இது இளம்பிறை வெளியீட்டகத்தின் 28வது நூல்.

## 3488

**மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும்.** மு.நல்லதம்பி. வட்டுக்கோட்டை: மு.நல்லதம்பி சிவச்செல்வன், முருகன் அகம், 2வது பதிப்பு, ஒக்டோபர் 1976, 1வது பதிப்பு, 1950. (கொழும்பு: 13: இரஞ்சனா அச்சகம்).

(6), 40 பக்கம், புகைப்படத் தகடு, ரூபா: 4.90, அளவு: 24x15.5 சமீ.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் நினைவாக அரசாங்கம் 1950ம் ஆண்டில் அகில இலங்கை ரீதியில் கவிதைப் போட்டியொன்றை நிகழ்த்தியது. அப்போது நடந்த மரதன் ஓட்டப் போட்டி நிகழ்ச்சியை குறிப்பாக வைத்து எமது நாட்டு வளங்களைப் போற்றிப் பாடப்பட்ட பல கவிதைகளில் முது தமிழ்ப்புலவர் வட்டுக்கோட்டை மு.நல்லதம்பி (13.09.1896-08.05.1951) அவர்களின் இந்நூல் முதன்மையானதெனத் தெரிவுசெய்யப்பட்டு முதற்பரிசு (ரூபா 1000) வழங்கப்பட்டது. இந்நூலின் முக்கியத்துவம் கருதி 25 ஆண்டுகளுக்குப் பின்னர் மீள்பதிப்புக் கண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3489

**மரணத்தை வென்ற மகாகவி.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

1988ம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பெற்ற அனைத்திலங்கை உயர்நிலைக் கவிதைத் தேர்வில் பரிசுபெற்ற கவிதை. பாரதிவிழாச் சிறப்பு வெளியீடாக 14.9.2003 அன்று வெளியிடப்பட்டது.

## 3490

**மலை மேகம்: நடைப்பா.** சி.வே.ராமையா. (இயற்பெயர்: சின்னவேலு இராமையா). வத்தளை: சி.வே.ராமையா, 34/4 போகாவத்தை, ஏக்கித்த, 1வது பதிப்பு, மே 2004. (ராஜகிரிய: ராணி பப்ளிக்கேஷன்ஸ், இல.3, New shopping complex, பண்டாரநாயக்கபுர).

(16), 102 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20X14 சமீ.

இந்நூலில் மலையகப் பிரச்சினைகள் சிறப்புற வடிக்கப்பட்டுள்ளன. இது முழு மலையக மக்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கியிருப்பதோடு மலையகத்தின் தலைமைகளும் வழிகாட்டிகளும் செயற்படவேண்டிய முறைமையை நடைப்பாக்கள் மூலம் கவிஞர் தெளிவாக்கியுள்ளார். தமிழர், தமிழ்மொழி, தொழிலாளர், மலையகத் தாய்மார் என்றெல்லாம் திட்டவட்டமான செய்திகளைக் கூறுவதோடு எதிர்கால மலையகம் அமைவதற்கான வழிமுறைகளையும் விவரிக்கின்றார். வீரகேசரி, மாலைமுரசு ஆகியவற்றில் 60களிலிருந்தே எழுதத் தொடங்கிய ஆசிரியர் தொழிற்சங்கத்துக்குள்ளிருந்தே எழுத்துலகில் ஈடுபாடுகொண்டவர். 1960ம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பில் சேர்ந்து பல பதவிகளில் இயங்கி இறுதியில் தொழிலுறவுச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செயற்பட்டவர். தொழிலாளர்களிலேயே தங்கியிருக்கும் தொழிற்சங்கங்களினால் அப்பாவித் தோட்டத் தொழிலாளிகளுக்கு எவ்விதமான நன்மைகளும் ஏற்படப்போவதில்லை, எந்தவிதமான உரிமைகளும் கிடைக்கப்போவதில்லை என்று பத்திரிகைகளில் எழுதுவதனால் ஏற்படும் எல்லாவிதமான கசப்புகளையும் இன்னல்களையும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தவர் இக்கவிஞர்.



படிப்பகம்

www.padippakam.com



### 3491

**மலைச் சுவடுகள்.** மாரிமுத்து சிவகுமார். உடத்தலவின்ன 20802: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, மே 2005. (கண்டி: கிரியேட்டிவ் பிரிண்டர்ஸ், 3 A, பகிரவகந்த வீதி).

122 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x15 சமீ., ISBN: 955-8913-13-8.

மலையக இளம் கவிஞரான மாரிமுத்து சிவகுமார் (18.08.1973) இரத்தினபுரி மாவட்டத்தில் கஹவத்தை பெல்மதுளை அரச பிரிவில் நீலகாமம் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். இது இவரது முதலாவது கவிதைத் தொகுதி. மலையக மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் துன்ப துயரங்களையும் வெளிக்கொணர வேண்டும் என்ற உத்வேகம் கொண்டு சமூக அவலங்களையும் மூட நம்பிக்கை-களையும் அழகாகப் படம்பிடித்திருக்கிறார். இவரது கவிதைகளில் ஆரோக்கியமான சமூகப் பார்வையும், இன மொழி மத பேதமற்ற மானிட நேயமும் இழையோடி நிற்பதை அவதானிக்கலாம். 67 கவிதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பில் பல கவிதைகள் முத்திரை பதிக்கின்றன.

### 3492

**மலைத் தென்றல்.** சந்தனம் சத்தியநாதன். கண்டி: மலையக வெளியீட்டகம், த.பெ.எண் 32, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (Muruthagahamula 20526: Vardha Publications, 85C, Pitunugama)

54 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955 9084 20 8.

இலங்கை வானொலியின் மலையக சேவை நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசையும், "நெத்" பத்திரிகையின் சிறுகதைப்போட்டியில் முதற்பரிசையும் பெற்றுக்கொண்டவர் இந்நூலாசிரியர். இவரது குறுநாவல்கள், ஆய்வுக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள் என்பன ஏற்கெனவே நூல்வடிவில் வெளிவந்துள்ளன. இவரது முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். இவரது ஐந்தாவது நூலாக வெளிவரும் இக்கவிதைத் தொகுப்பில் சராசரி மனிதனின் சாதாரண விருப்பு வெறுப்புக்களையும் மன அசைவுகளையும் உணர்ச்சிப் பெருக்குகளையும் எளிமையாக, நேர்ப்பாங்காக உயிர்த்துடிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3493

**மனக்கோலம்.** சக்திசாந்தன். கனடா: அனுஜானி வெளியீடு, 145, கில்கிறஸ்ட் அவென்யு, மிஸ்ஸஸாகா, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, பங்குனி 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

கடந்த பதினைந்து வருடங்களாக புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கைச் சூழலிலே இடம்பெற்ற நிகழ்வுகளை அவ்வப்போது மனத்திரையில் பதிந்துவைத்து மனக்கோலமாகப் பதிவுசெய்திருக்கிறார். இவை படையல், அன்பு, பாவம், கொடுமை, முத்துக்கள், அநீதி, மண்வாசனை, சுயநலம், புகுந்தநாடு, ஆச்சரியம், அஞ்சலி ஆகிய பதினொரு தலைப்புகளில் கவிதாவரிகளாக இடம்பெறுகின்றன. அஜந்தா, சக்திசாந்தன் என்ற புனைபெயர்களில் எழுதிவரும் இக்கவிஞர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்பவர்.

## 3494

**மனித ஏணிகள்.** கலா விஸ்வநாதன். கொழும்பு 15: கலா விஸ்வநாதன், கவின் பதிப்பகம், 1/46 டி. மல்லிகைத் தோட்டம், மட்டக்குளி, 1வது பதிப்பு, ஜுன் 2003. (கொழும்பு 12: ஜஸ்மின் அச்சகம், 64-D, பீர் சாயிபு வீதி).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

மனித ஏணிகள் என்ற நெடுங்கவிதையுடன் மேலும் பத்து தனிக்கவிதைகளையும் கலா விஸ்வநாதன் இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார். மலையக மண்ணின் அவலச் சூழ்நிலை பற்றியதான இக்கவிதைகள் கவிஞரின் ஆத்மசுத்தமான அக்கறையைப் பிரதிபலிக்கின்றன.

## 3495

**மனோபாவம்.** சக்திசாந்தன். கனடா: அனுஜானி வெளியீடு, 108, Muirland Crescent, Brampton, Ontario, L6X 4G2, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம், 32/8 (375), ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).



படிப்பகம்

www.padippakam.com



96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 81 88686 04 2.

அஜந்தா, சக்திசாந்தன் என்ற புனைபெயர்களில் எழுதிவரும் இக்கவிஞர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்பவர். சிவனடியைப் போற்றித் தொடங்கி பூமித் தாயை வாழ்த்தி முடிக்கும் இவரது தொகுப்பில் மொத்தம் 34 கவிதைகள் இடம்பிடித்துள்ளன. வாழ்வியலையும் சமுதாயப் பிரச்சினைகளையும் தொட்டுப் பார்த்து அவற்றில் எழும் பிரச்சினைகளை அலசும் போக்கும் மானுடத்தைச் சிந்திக்க வைக்கும் தீவிர நோக்கும் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு 2000ம் ஆண்டு வெளிவந்த **மனக்கோலம்** என்பதாகும். மனோபாவம், இளம்பிறை பதிப்பகத்தின் 23ஆவது பிரசுரமாகும்.

## 3496

**மனோராகம்.** சக்திசாந்தன். கனடா: அனுஜானி வெளியீடு, 108, Muirland Crescent, Brampton, Ontario, L6X 4G2, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம், 32/8 (375), ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்)

96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 81 88686 05 0.

அஜந்தா, சக்திசாந்தன் என்ற புனைபெயர்களில் எழுதிவரும் இக்கவிஞர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்பவர். நாட்டைப் பற்றியும் மொழியைப் பற்றியும் அவருக்குள்ள கவலையும், எடுத்த கருவை உரத்து நிலைநிறுத்தும் ஆளுமையும், பாசாங்கற்ற ஓர்மையும் அவரது கவிதைகளில் புலப்படுகின்றன. துர்க்கா சரணத்தில் தொடங்கி உன்னையே நீ அறிவாய் என்ற சாக்கிரட்டீஸ் தத்துவத்தோடு முடியும் இத்தொகுப்பில் மொத்தம் 37 கவிதைகள் அடங்குகின்றன. இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு 2000ம் ஆண்டு வெளிவந்த **மனக்கோலம்** என்பதாகும். மனோராகம் இளம்பிறை பதிப்பகத்தின் 24ஆவது பிரசுரமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3497

**மாடும் கயிறுகள் அறுக்கும்.** இ.முருகையன். சென்னை 600002: சென்னை புக்ஸ், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஜுன் 1990. (சென்னை 20: ராசகிளி பதிப்பகம்).

216 பக்கம், விலை: இந்திய ரூபா 26., அளவு: 18X12.5 சமீ.

கடந்த 25 ஆண்டுக்கால எழுத்துக்களில் சிலவற்றைத் தொகுத்து இக்கவிதைத் தொகுதி உருவாகியுள்ளது. சிறுகவிதைகளும் சில நீண்ட கவிதைகளும் (1971இல் கொழும்பில் மேடையேற்றப்பட்ட) **கடூழியம்** என்ற நாடகமும் இதில் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் ஆய்வறிவுப் பண்புடையனவாயுள்ளமை சிறப்பியல்பாகும். உணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டுப் போகாமல் நிதானித்து விஷயங்களை ஆழமாக நோக்கிக் கவிதைகள் புனையப்பட்டுள்ளன.

## 3498

**மாலை சூட்டும் நாள்.** குறமகள் (இயற்பெயர்: வள்ளிநாயகி இராமலிங்கம்). Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, 1வது பதிப்பு, மே 2005. (கனடா: அகிலன் அசோஷியேட்ஸ்).

xxxvi, 146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14 சமீ.

இத் தொகுப்பிலே ஊடாடி நிற்கும் சமுதாய உணர்வு, தமிழ் உணர்வு, தமிழீழ உணர்வு, தாய்மை உணர்வு, புதுமை உணர்வு, வீர உணர்வு எனப் பல்லுணர்வு சார்ந்த கவிதைகள் பல்வேறு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தெய்வமும் குருவும், தமிழும் தொன்மையும், நாடும் நடப்பும், போரும் களமும், மேடையும் களமும், தாயும் சேயும், கவியும் காலமும், உளமும் உடலும், குமுறலும் குறுங்கவியும், தமிழ் ஈழமும் மாலையும் ஆகிய 10 தலைப்புக்களில் இங்கு கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கவிதையும் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் அதன் பண்புகள் சிதையாது கோர்த்து ஒரு மலர்மாலையாக குறமகள் தன் ஈழத்தாய்க்கு அணிவித்து அழகுபார்த்திருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3499

**மீண்டும் துளிர்க்கும் வசந்தம்.** ந.அம்புலி (இயற்பெயர்: சுகந்தி நடராசா). தமிழீழம்: மகளிர் வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள், 1வது பதிப்பு, 2004. (கிளிநொச்சி: அழகன் பதிப்பகம்).

xii, 107 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21X14 சமீ.

7 புகைப்படங்களுடனும், த.வி.பு.தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் ஆசியுரையுடனும் வெளியாகியுள்ள இந்நூலில், சுதந்திரப் பறவைகள் இதழில் பிரசுரமான 70க்கும் அதிகமான அம்புலியின் கவிதைகளில் தேர்ந்த 35 கவிதைகள் இடம்பெறுகின்றது. விடுதலைக்கான நேசிப்பையும், தேச விடுதலை- பெண் விடுதலை ஆகிய இரு அம்சங்களின் இணைவினையும் இக்கவிதைகளில் தரிசிக்கலாம். தன்னைப் போராளியாக்கியதால் விசாலமான வாழ்வனுபவத்தை இவரால் தனதாக்க முடிந்துள்ளது. யுத்தத்தையும் அதன் வாழ்வையும் எதிர்கொண்ட ஒரு பெண்ணின் பட்டுணர்வுகளை இந்தக் கவிதைகள் பாடுகின்றன. இக்கவிஞர், உதயலட்சுமி, அணங்கு, அரியாத்தை, மனுசி, கங்கை, ந.சாரங்கா ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

## 3500

**முட்களின் இடுக்கில்.** மெலிஞ்சி முத்தன். பாரிஸ் 75010: ஸ்ரீ பாரதி பதிப்பகம், 18, rue Cail, 1வது பதிப்பு, ஐப்பசி 2005. (பாரிஸ் 75010: ஸ்ரீ பாரதி பதிப்பகம், 18, rue Cail).

75 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19X19 சமீ.

இத்தொகுப்பிலுள்ள மெலிஞ்சிமுத்தனின் 41 கவிதைகளும், போர்க்காலக் கொடூரங்கள், அந்நிய ஆக்கிரமிப்பினால் சிதறுண்டு-போன நம்பிக்கைகள், மீள ஒருநாள் திரும்ப எண்ணும் எதிர்பார்ப்பு, வரையறுக்கப்பட்ட நியதிகளுக்கெதிரான போர்க்கோலம், அபத்தங்களின் கணக்கீடு, சமூக வாழ்க்கையில் கலந்துபோன அறியாமைப் பரிமாணம், அதன் நாடகப் பரிமாணம், இருத்தலின் மீதான ஆத்மீக விசாரம் எனப் பல்வகைப்பட்ட தளங்களில் தம்மை அடையாளம் காட்டிக்கொள்கின்றன. 1975இல் இலங்கையில் பிறந்த மெலிஞ்சிமுத்தன் தற்போது பிரான்சில் வாழ்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3501

**முடிந்தால் மன்னித்துவிடு.** வீ.கே.பெரியசாமி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

xiv, 118 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18X12 சமீ.

மலையகத்தில் பசுமலை என்ற சிறிய ஊரில் பிறந்தவர் வீ.கே.பெரியசாமி. ஆரம்பக்கல்வியை லிண்டுல பாடசாலையிலும் ஹட்டன் சென் ஜோன் பொஸ்கோ கல்லூரியிலும், திருச்சி தேசிய கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தவர். குவைத்தில் ஒரு நிறுவனத்தில் நிதிக் கட்டுப்பாட்டாளராக இருக்கின்றார். இவர் எழுதிய 54 கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. சிவப்பு விளக்குப் பகுதியில் பிறந்து, அனாதை இல்லத்தில் வளர்ந்து, ஒரு கண்ணியமான ஆசிரியையாக வாழும் ஒரு பெண்ணைப் பற்றிய செய்தி – ஒட்டுமொத்த ஆணினத்தின் சார்பாக மன்னிப்புக் கேட்கும் கவிதையாக, இந்நூலின் தலைப்புக் கவிதை அமைகின்றது. குவைத் நாட்டில் பணிப்பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், அவலங்கள் போன்ற பல சம்பவங்கள் இக்கவிஞனின் கவிதாவரிகளில் உணர்வுபூர்வமாக வெளிக்கொணரப்பட்டுள்ளன.

### 3502

**முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும்.** ஆ.மு.ஷரிப்புத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜனவரி 1998. (பாணந்துறை: கிளீன் பிரின்டர்ஸ், ஹொரண வீதி, எழுவில).

(8), 73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X13 சமீ.

பல்வேறு பாவகைகளைப் பாடுவதில் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் கைவந்தவராக இருந்தபோதிலும் வெண்பாவில் அவர் வீச்சும், வளமும் துலக்கமாகப் பரிணமிக்கின்றன. வெண்பாவின் இலக்கணம் அதன் யாப்பு போன்றவற்றை நன்கு அறிந்த கவிஞரே வெண்பாவை யாக்க முடியும். அந்தவகையில் அல் ஹாஜ். ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் முதுமொழி வெண்பா, சூறாவளிப் படைப்போர் ஆகிய இரு பாவகையும் ஈழத்து முஸ்லீம் தமிழ் இலக்கியத்தின் மைற்கற்களாக அமைகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3503

**முறையீடும் தேற்றமும்.** அ.லெ.அப்துல் காதர் லெப்பை. கண்டி: இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம், மாவத்தபொல G.M.M.S, அளவத்துகொட, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1970. (கண்டி: ரோயல் அச்சகம்).

30 பக்கம், விலை: ரூபா 1., அளவு: 18X12 சமீ.

இந்நூலின் நூலாசிரியர் அப்துல் காதர் லெப்பை அவர்கள் 7.9.1913 இல் கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடியில் பிறந்தவர். உமர் கையாமின் ரூபாய்யாத் என்னும் காவியத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர். மெய்நெறி, இறசூல் சதகம், செய்னம்பு நாச்சியார் மான்மியம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டவர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற இந்தக் கவிஞரின் முறையீடும் தேற்றமும் என்ற இக்கவிதைநூல், இறை ஏகத்துவத்தை இலக்கிய ரசனையுடன் விளக்கும் நூலாகும். 1970இல் உருவாக்கப்பட்ட இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்தின் முதலாவது நூல் இது. நூலாசிரியரின் பிறந்த தினமான 7.9.1970 அன்று அவரைப் பாராட்டி எடுத்த பெருவிழாவின்போது வெளியிடப்பட்டது.

## 3504

**மௌன தரிசனங்கள்.** வி.ஜெயபால். யாழ்ப்பாணம்: வி.ஜெயபால், 588/10, நாவலர் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, சித்திரை 2004. (யாழ்ப்பாணம்: சாந்தி கணனிசார் சேவைகள்).

(20), 61 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 17.5X12 சமீ.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் இக்கவிதைத் தொகுதியின் ஆசிரியராவார். இத்தொகுதியிலுள்ள சில கவிதைகள் சொற்செட்டோடு கவிதைக்குரிய இறுக்கமும் தரமாகக் கொண்டு காணப்படுகின்றது. சில கவிதைகள் அறவழிப் போதனைக் கவிதைகளாகத் தோற்றுகின்றன.

## 3505

**யாசகம்.** கௌரி மோகனதாசன். சுவிட்சர்லாந்து: கௌரி மோகனதாசன், St. Gallen, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

xii, 106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



"London Time" வானொலியில் கவிதைகள், ஆன்மீகச் சிந்தனைகள், புதுமொழிகள், இலக்கியச் சிந்தனைகள், சீர்திருத்தக் கட்டுரைகள் என்று வானலையில் தவழச்செய்து வருபவர் கௌரி மோகனதாசன். இவரது வானொலிக் கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். இது நூலுருவில் வெளிவரும் இவரது முதல் கவிதைத் தொகுதியுமாகும்.

## 3506

**யுத்த காலத்தில் பெண்கள்.** பெண்கள் தொடர்பூடக கூட்டமைப்பு. கொழும்பு 5: Women and Media Collective, 166/8, Kirulapone Avenue, 1வது பதிப்பு, மார்ச் 2002. (ரத்மலானை: நவமக பிரின்டர்ஸ், 66/4, தர்மராம வீதி).

117 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x13.5 சமீ., ISBN: 955 9078 03 8.

இலங்கைப் பெண்களின் கவிதைத் தொகுப்பாக தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவந்துள்ள நூல். புஷ்பா இலங்கன்திலக, சித்திரலேகா மௌனகுரு, சர்வமங்களம் கைலாசபதி, சுனந்தா ரணசிங்க, தர்மா ரணதுங்க, தனுஜா தர்மபால, ஜமுனா மாலினி பெரேரா, ஜே.ஷீலா விக்ரமரத்ன, மொனிக்கா ருவன்பத்திரன, பிரியதர்சினி, சிவரமணி, சீதா ரஞ்சனி, துஷாரி விஜயநாயக்க, சாந்திகுமாரி ஈரியகம, சுல்பிக்கா, ஷானிகா கல்ஹாரி வட்டோவிட்ட, செல்வநிதி தியாகராஜா, எட்னா மல்காந்தி, ஊர்வசி, பெண்ணியா, விபுலி நிரோஷா ஹெட்டியாராச்சி, அனோமா ராஜகருணா, ஔவை, புஷ்பா ரம்லணி, விஜயலட்சுமி சேகர், ஆழியாள், ஹில்டா ரூபிணி ஆகிய தமிழ் சிங்கள பெண் எழுத்தாளர்களின் கவிதைகள் மூல மொழியிலும், மற்றிரு மொழிகளுக்கும் மொழிமாற்றம் செய்யப்பட்டும் பிரசுரமாகியிருக்கின்றன.

## 3507

**வரிக்கவிகள்.** வி.கந்தவனம். கனடா: கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கனடா: விவேகா அச்சகம்).

xii, 113 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ., ISBN: 0-9731939-0-5.

கனடாவில் ரொரன்ரோ மாநிலத்தில் தற்போது புலம்பெயர்ந்து வாழும் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் தலைவராகவும் விளங்குகின்றார். இவ்வமைப்பினரால்



படிப்பகம்

www.padippakam.com



வெளியிடப்பட்ட இக்கவிதைத் தொகுப்பில் கவிஞரின் 65 வரிக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

### 3508

**வள்ளுவர் அந்தாதி.** தாமரைத் தீவான் (இயற்பெயர்: சோ.இராசேந்திரம்). திருக்கோணமலை: அம்மா பதிப்பகம், 172, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம், 39, அருணகிரி வீதி).

vii, 28 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20.5X14.5 சமீ.

அம்மா பதிப்பகத்தின் 6வது வெளியீடாக இக்குறட் பிழிவுகள் வெளிவந்துள்ளன. திருக்குறளை 133 நாலடி அந்தாதிக் கவிவடிவில் வழங்கும் புது முயற்சி இதுவாகும். ஒவ்வொரு அந்தாதிப் பாடலுக்கும் விளக்கத் தலைப்புகள் பாடல்களுக்கு அணிசேர்க்கின்றன.

### 3509

**வா ஊருக்குப் போவோம்.** எஸ்.எச்.நிஹ்மத். எருக்கலம்பிட்டி: இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, நவம்பர் 1992. (கொழும்பு 12: ரோயல் பிரிண்ட்ஸ், 42, பீரா ரோட்).

(12), 35 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 21X14 சமீ.

மன்னார், எருக்கலம்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர் எஸ்.எச்.நிஃமத். மன்னாரில் 90களில் இடம்பெயர்ந்த 75000 வடபகுதி முஸ்லீம்களில் இவரும் ஒருவர். தனது இதயக் குமுறலாக இக்கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கிறார். அழகியல் உணர்வும், ஆர்ப்பாட்டமற்ற அங்கதச் சுவையும் நெக்குருகவைக்கும் கவிவரிகளும் கவிதைகளை மனதில் பதிவுசெய்கின்றன.

### 3510

**விடியலின் பாதையினிலே.** ஈழவன் (இயற்பெயர்: ப.காண்டீபன்). சென்னை 600 017: திருமகள் நிலையம், 55 வெங்கட்நாராயணா சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஜனவரி 1993. (சென்னை 6000013: லோட்டஸ் ஓப்செட் பிரஸ்).

(8), 42 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 17.5X12.5 சமீ.

ஈழ விடுதலைப் போராளியாக வாழமுடியாமல் போன தன் சூழலை எண்ணித் தனக்குத் தானே சூடுபோட்டுக்கொள்ளும் கவிதை வரிகள்



படிப்பகம்

www.padippakam.com



ஈழவனின் கவிதைத் தொகுப்பில் விரிந்து கிடக்கின்றன. புலம்பெயர்ந்து ஜேர்மனியில் பேர்ண் நகரில் வாழும் இக்கவிஞர் எழுதி உலகத்தமிழர் (கனடா), பாரிஸ் ஈழநாடு, எரிமலை (பாரிஸ்), வீரகேசரி ஆகிய ஏடுகளில் வெளிவந்த 19 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்கொண்டுள்ளன.

## 3511

**விடியலுக்காய்.** வத்தியூர் மைக்கல். லண்டன்: ஆசிரியர், ஈஸ்ட்ஹாம், 1வது பதிப்பு, ஆடி 2004. (இலண்டன்: ஜே.ஆர். அச்சகம்).

54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X14.5 சமீ.

வடமராட்சிக் கிழக்கின் வத்திராயன் கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்து லண்டனில் வாழும் இக்கவிஞர், ஈழ்த்தில் தான் இழந்ததையும், தன் இனம் பட்ட இன்னல்களையும் தனது கவிதைகளில் வெளிக்காட்ட முனைந்துள்ளார். வத்தியூர் மைக்கலின் கலைத்துறை ஈடுபாடும், குறிப்பாக மேடை நாடக, புகலிடக் குறும்படத்துறையில் அவர் கொண்ட ஈடுபாடும் குறிப்பிடத்தக்கது. சில குறும்படங்களுக்கு வசனமும் எழுதியுமிருக்கிறார்.

## 3512

**விடிவை நோக்கி வா.** பூண்டுலோயா தர்மு (இயற்பெயர்: எஸ்.எம்.தர்மலிங்கம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600014: பி.வி.ஆர். ஆப்செட்).

viii, 88 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18X12.5 சமீ.

கண்ணுக்கும் மனத்திற்கும் பூரிப்பூட்டும் இயற்கை வளங்களும் செழிப்பும் நிறைந்து காணும் ஒரு பிரதேசத்தில், உயிருள்ள அடக்கு முறைக்கு உட்பட்ட ஜீவன்களின் அவலத்திற்கு ஆட்பட்டு, அழகையும் அவலத்தையும் இணைத்தும் ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கியும் தனது கவிதைகளை ஆக்கியுள்ளார். தமிழ், காதல், இன ஒற்றுமை ஆகியவற்றைப் பேசும் கவிதைகள் இவை.

## 3513

**விடுதலை வேட்கை.** முத்து சொக்கன். (இயற்பெயர்: மு.சொக்கலிங்க-சாமி). மேற்கு ஜேர்மனி: மு.சொக்கலிங்கசாமி, Sachsen Str 76, 4350



படிப்பகம்

www.padippakam.com



Recklinghausen, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

ஜேர்மனியிலிருந்து வெளியிடப்பட்ட ஆரம்பகால கவிதைத் தொகுப்புகளில் இதுவும் ஒன்று. ஆண்டுவிபரம் தரப்படவில்லை-யாயினும் இந்நூல் தொன்னூறுகளின் ஆரம்பப் பகுதிகளில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இக்கவிஞர் இலங்கையி-லிருந்து புலம்பெயர்ந்து மேற்கு ஜேர்மனியில் வசித்த காலத்தில் ஜேர்மன் கல்விச் சேவையின் தலைவராக 1989முதல் 1993வரை சேவையாற்றியவர். பின்னாளில் தாயகம் திரும்பி வாழ்ந்துவருகிறார்.

## 3514

**விடுதலைக்காய்.** கனகரவி (இயற்பெயர்: கனகரத்தினம் இரவீந்திரன்). வவுனியா: கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, 1998. (வவுனியா: சுதன் அச்சகம்).

xii, 48 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14.5 சமீ.

போரினால் மடிந்த அனைவருக்கும் சமர்ப்பணமாகப் பரிண-மித்துள்ள இக்கவிதைத் தொகுதியில் உள்ள 30 கவிதைகளும் ஈழப்போரின் கோரமுகத்தைத் தாங்கி நிற்பதுடன் இழந்த வாழ்வின் ஏக்கங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. ஊடகவியலாளரான கனகரவி ஐ.பீ.சீ.அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வன்னிச் செய்தியாளராகப் பணியாற்றியவர்.

## 3515

**விஜயேந்திரன் கவிதைகள்.** விஜயேந்திரன். (இயற்பெயர்: இ.இராஜேஸ்வரன்). யாழ்ப்பாணம்: இ.மகேந்திரன், யாழ். வள்ளுவர் தமிழ் மன்றம், 1வது பதிப்பு, தை 1968. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).

(6), 33 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து பின்னாளில் குடியேறியபோது சிலோன் விஜயேந்திரன் என்று அறியப்பட்ட கவிஞர் விஜயேந்திரனின் ஆரம்பக்கால கவிதைகள் நாற்பது, கவிஞர் மஹாகவியின் நயவுரை-யுடன் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இவரது தந்தையார் புகழ்பூத்த ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் மகனாவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3516

**வீசுக புயலே.** லறீனா அப்துல் ஹக். முறுதகஹமுல்ல 20526: வர்தா பதிப்பகம், 85 சீ, பிட்டுணுகம, 1வது பதிப்பு, மே 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

63 பக்கம், புகைப்படங்கள், விலை ரூபா 80., அளவு: 20X13.5 சமீ., ISBN: 955 98241 0 4.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளரான லறீனா அப்துல் ஹக் ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையில் காத்திர மான பங்களிப்பை நல்கும் பெண் கவிஞர். 12 வயதிலிருந்து கவிதை எழுத ஆரம்பித்த இவரது முதல் கவிதை வீரகேசரியில் 1992இல் வெளிவந்தது. இவர் இதுவரை எழுதிய 50க்கும் அதிகமான கவிதைகளில் தேர்ந்த 22 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற் றுள்ளன. இவர் கொண்ட சமாதான ஆவல், மனித நேயம் மீதான ஈடுபாடு, மலையகத் தொழிலாளர் தொடர்பான ஆதங்கம், பாலஸ்தீனம் பற்றிய பரிவுணர்வு, பெண்ணிய நோக்கு, அகவுணர்வு களின் வெளிப்பாடு முதலிய அம்சங்கள் இக்கவிதைகளில் இழையோடுகின்றன.

## 3517

**வெளிப்படுதல்.** ஜெயந்தி தளையசிங்கம். மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 20 டயஸ் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2001. (மட்டக்களப்பு: செள் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

x, 50 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 19X14 சமீ.

யுத்தசூழலின் அவலம், அது பெண்களில் ஏற்படுத்திய தாக்கம், வெற்று எதிர்பார்ப்புகள், பிரிவுத்துயரம், ஆணாதிக்கம் கொண்ட சமூக அமைப்பின் ஆதிக்கச் சிந்தனையின் தாக்கம், இவையெல்லாம் தாண்டி ஒவ்வொரு பெண்ணின் இருப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற வீறு இக்கவிதைகளில் தெரிகின்றன. வாழ்வு பற்றிய தேடல்கள், பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுத்தல் என்ற அவசியமான பணிகளை மேற்கொள்ளும் வகையில் இக்கவிதைத் தொகுதி 18 பெண்களின் 35 கவிதைகளை உள்ளடக்கியதாக மலர்ந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3518

**றஞ்சனி கவிதைகள்.** றஞ்சனி. சென்னை 600018: Image and Impression, 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (சென்னை 600005: மணி ஒப்செட்).

63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

றஞ்சனியின் கவிதைகள் புலம் பெயர்ந்த ஈழத்துக் கவிஞர்களில் தனித்துவமான அடையாளங்கள் கொண்டவை. புதுமை சிற்றிதழின் ஆசிரியர் குழுவில் ஒருவரான ரஞ்சி ஈழத்துத் தமிழ்ப் பெண்கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். தனிமை, பிரியங்கள், வாதைகள், எனப் பல்வேறு தளங்களில் விரியும் இக்கவிதைகள் றஞ்சனியின் முதல் தொகுப்பாகும். இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் புதுமை, உயிர்நிழல், சக்தி, எக்ஸில், இருள்வெளி, புதிய பார்வை, கணையாழி, இந்தியா டுடே, பறத்தல் அதன் சுதந்திரம், சரிநிகர், வார்ப்பு, திண்ணை, பதிவுகள், எக்சில்லிவர், ஆகிய சிற்றேடுகளில் வெளியானவை.

### 3519

**ஸ்ருதி தேடும் சந்தங்கள்.** அக்கரையூர் அப்துல் குத்தூஸ். அக்கரைப்பற்று: தேசிய கலைஞர் பேரவை, 215/1A மத்திய சாலை, அக்கரைப்பற்று, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (அக்கரைப்பற்று: அபா ஒப்செட் பிறின்டர்ஸ், இல.1, பிரதான வீதி).

(20), 100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-96942-0-0.

அக்கரையூர் அப்துல் குத்தூசின் இசைப்பாடல்கள் கவிதைத் தரம் வாய்ந்தன. புதுக்கவிதைக்குரிய படிமங்களையும் மரபுக்கவிதைக்குரிய மாண்புகளையும் இணைத்து வெளியான 100 பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வானொலி தொலைக்காட்சிகளில் இவரது பல பாடல்கள் ஒலிபரப்பாகியுள்ளன. அவை பற்றிய பட்டியலொன்றும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## 894.8(2) தமிழ் நாடகங்கள்

### 3520

**அபத்த நாடகம்.** ஜோர்ஜ் சந்திரசேகரன். மட்டக்களப்பு: ஜோர்ஜ் சந்திரசேகரன், 54/14, இசை ஒழுங்கை, தாமரைக்கேணி, 1வது பதிப்பு,



படிப்பகம்

www.padippakam.com



நவம்பர் 1999. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

xvii, 53 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22X15 சமீ.

மேலைத்தேய அரங்கியலில் இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சிகளுள் ஒன்று Absurd Theatre என்ற அபத்த அரங்கு. இதை அனர்த்த அரங்கு என்றும் தமிழாக்கம் செய்வர். இத்தொகுதியில் நத்தையும் ஆமையும், மோட்சமும் நரகமும் ஆகிய இரு அபத்த நாடகங்கள் இடம்பெறுகின்றன. நத்தையும் ஆமையும் என்ற நாடகம் பிரெஞ்சு மொழியில் Eugene Ionesco எழுதிய நாடகத்தின் ஆங்கில வழித் தழுவல். கொழும்பில் 1940ஆம் ஆண்டு பிறந்த ஜோர்ஜ் சந்திரசேகரன், கொட்டாஞ்சேனை சென் பெனடிக்ட் கல்லூரியில் கற்றவர். 1968முதல் 1996இல் ஓய்வு பெறும்வரை 28 ஆண்டுகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாளராகப் பணியாற்றியவர். நாடக ஆசிரியராக, நடிகராக, நூலாசிரியராக, ஓவியராக, சிறுகதை எழுத்தாளராக இவர் முத்திரை பதித்தவர்.

## 3521

**எனது வானொலி நாடகங்கள்.** பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன். தெகிவளை: ஷாமிலா பப்ளிக்கேஷன்ஸ், 21/1-C மயூரா மாவத்தை, நதிமல, 1வது பதிப்பு, 1999. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

ix, 128 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 22X14 சமீ., ISBN: 955-96265-3-1.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் உதவியுடன் வெளியிடப்பட்ட இந்நூலில், எழுத்தாளரும் நாடகாசிரியருமான ஜுனைதீனின் 8 வானொலி நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. இவை அவ்வப்போது இலங்கை வானொலியில் வெளியிடப்பெற்றவை.

## 3522

**ஒரு பூ மலர்கின்றது.** வாகரைவாணன். மானிப்பாய்: தமிழ் இலக்கியப் பொதிகை, உடுவில், 1வது பதிப்பு, ஜுலை 1993. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், மவுன்ற் காமல் ரோட், குருநகர்).

58 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20.5X14 சமீ.

கவிஞர் வாகரைவாணன், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர். துரோணர் சபதம் என்ற நூலை அடுத்து வெளிவந்த இவரது



படிப்பகம்

www.padippakam.com



இரண்டாவது நாடக நூல் இது. இந்நூல் இவர் எழுதிய கிறிஸ்தவ நாடகங்கள் சிலவற்றின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. இதிலுள்ள ஆறு நாடகங்கள் பைபிள் நிகழ்வுகளை ஒட்டியவையாகவும் மற்றது கிறிஸ்துவின் பிறப்பினை உள்ளடக்கமாகக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. வேதாகம நிகழ்வுகளை மனதிலே ஆழப்பதிய-வைக்கும் நோக்கில் இவை உருவாக்கப்பட்டவை.

## 3523

**கானல்நீர் கங்கையாகிறது: சமூக, நகைச்சுவை நாடகங்கள்.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 10: எஸ்.கொடகே சஹ சகோதரயோ, 675, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2006. (வெல்லம்பிட்டி: சதுர அச்சகம், 142, அவிசாவளை வீதி).

*87 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ, ISBN: 955-2089-34-4.*

கானல்நீர் கங்கையாகிறது (சமூக நாடகம்), ஒரு கல்லும் மூன்று மாங்காய்களும் (நகைச்சுவை நாடகம்), கனடா மருமகன் (நகைச்சுவை நாடகம்), ஆகிய மூன்று நாடகங்களின் தொகுப்பு. 1992இல் யோகராணி கொழும்புக்குப் போகிறாள் என்ற தனது முதலாவது நாவலுடன் இலக்கிய உலகில் பிரபல்யமானவர் சோ.ராமேஸ்வரன். 31 நூல்கள் வரை எழுதியுள்ள இவரது பல நூல்கள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1974-1980 வரை வீரகேசரி உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் தற்போது ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தின் வெளியீட்டுப் பிரிவின் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

## 3524

**கிட்கிந்தை.** சி.சிவசேகரம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல.44, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, ஓகஸ்ட் 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஆட்டுப்பட்டித் தெரு).

*61 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955 8637 08 4.*

கூத்து வடிவத்தில் ஒரு மரபுக் கதையை எடுத்துச் சமகாலச் சிந்தனைகளை அதனூடு வழங்கியுள்ளார். ஈழத்து நாடகத் தயாரிப்பாளர் இ.தாசீசியஸ் அவர்களின் உதவியுடன் தெரிவு



படிப்பகம்

www.padippakam.com



செய்யப்பட்ட பாடல் வடிவங்களுடனும் ஆலோசனையுடனும் இந்தக் கூத்துப்பிரதி தயாரிக்கப்பட்டுள்ளது. கிட்கிந்தையின் நோக்கம் அயலார் வருகை பற்றிய ஒரு பரிசீலனையாகும். இது மூன்றாந் தரப்பினரின் குறுக்கீடு பற்றிய கேள்வியினை பார்வையாளரிடம் எழுப்புகின்றது. “அண்ணன் தம்பி பகைதனிலே அந்நியரின் தலையீடு வந்திடுதல் வெகு தீது” என்ற நீதியை அரசியல் வாடையின்றிப் புகட்டும் கூத்துப் பிரதி இதுவாகும்.

## 3525

**குரங்குகள்.** நந்தி (இயற்பெயர்: செ.சிவஞானசுந்தரம்). கண்டி: நந்தி வெளியீடு, 492/3, பேராதனை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1975. (கண்டி: ரோயல் பிரின்டர்ஸ்).

48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

அமரர் நந்தி அவர்கள் தயாரிப்பில் வெளிவந்த இந்நாடகம் 1949இல் சுதந்திரனில் வெளிவந்த **விசித்திர மூக்குக் கண்ணாடி** என்ற இவரது சிறுகதையொன்றினை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டது. 1957இல் வானொலி நாடகமாகவும் இது மேடையேற்றப்பட்டது.

## 3526

**சக்தி பிறக்குது (நாடகம்).** சி.மௌனகுரு. கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், இல. 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (களுபோவில: டெக்னோ பிரின்ட், 83, ஆஸ்பத்திரி வீதி).

(12), 75 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

பேராசிரியர் மௌனகுருவின் இந்த நாடகம் பல பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பெண்மையின் அவலங்கள் யாவும் வெளிக்கொணரும் முறையில் எழுதப்பட்ட ஒரு நாடகம். ஒரு சமூகத்தின் வேறுபட்ட மட்டங்களின் கூறுகளில் பெண்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் இங்கே இனங்காணப்படுகின்றன. நமது சமூகத்தின் நடைமுறைகளையும், கட்டு திட்டங்களையும் கடுமையாக விமர்சனம் செய்யும் படைப்பு இது. தமிழர்க்கென தனித்தன்மை பொருந்திய நாடகமேடை மரபு ஒன்றினை நவீன தேவைகளுக்கேற்ப ஆக்கும் முயற்சிக்கு ஒரு பங்களிப்பாக இந்நாடகம் அமைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3527

**சங்கிலி.** க.கணபதிப்பிள்ளை. பேராதனை: க.கணபதிப்பிள்ளை, இலங்கைப் பல்கலைக்கழகம், 2வது பதிப்பு, ஆனி 1964, 1வது பதிப்பு, 1956. (கொழும்பு: சுதந்திரன் அச்சகம், 194ஏ, பண்டாரநாயக்கா மாவத்தை).

xxxiii, (5), 95 பக்கம், விலை: ரூபா 3.50., அளவு: 22x14 சமீ.

ஈழத்துத் தமிழருடைய வரலாறு பற்றிப் பல இருட்டடிப்புகள் நடைபெற்று தமிழருடைய உரிமைகள் படிப்படியாகப் பறிபோய்க்கொண்டிருந்த ஒருகாலகட்டத்தில், ஈழத்தமிழர் தம்முடைய வரலாற்றை ஒருதடவை முறையாகப் பின்னோக்கிப் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டிருந்த வேளையில் அதற்குத் தூண்டுகோலாக அமைந்தது இந்த நூல். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவிருந்தவர் இந்நூலாசிரியர். இந்நூலின் முதலாம் பாகத்தில் சரித்திர காலத்துக்கு முந்திய யாழ்ப்பாணம், உக்கிரசிங்கன் தொடக்கம் பாணன் வரை, பாணன் தொடக்கம் ஆரியச் சக்கரவர்த்தி வரை, ஆரியச்சக்கரவர்த்திகள் முதலாம் பரம்பரை, பிற்கால யாழ்ப்பாணத்தரசர், விடுதலைப் போராட்டம் ஆகிய ஆறு இயல்களில் இலங்கை வாழ் தமிழர் வரலாறு சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது. இது சங்கிலி நாடகத்திற்கான உறுதியான பின்புலமாக அமைகின்றது. இரண்டாம் பாகம் பக்கம் 1-95 வரை சங்கிலி நாடகம் இடம்பெறுகின்றது.

## 3528

**நல்லைநகர் நாவலன்.** கு.சோமசுந்தரன். யாழ்ப்பாணம்: ரஜி வெளியீடு, நல்லூர், 1வது பதிப்பு, ஐப்பசி 1977. (யாழ்ப்பாணம் செட்டியார் அச்சகம், 432 காங்கேசன்துறை வீதி).

viii, 92 பக்கம், விலை: ரூபா 4.50, அளவு: 18x12.5 சமீ.

நல்லூர், ஆறுமுகநாவலர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் பன்னிரண்டு காட்சிகளில் உருவாக்கப்பட்ட நாடகம். நாவலரின் ஆளுமையை வெளிக்காட்டவென உருவாக்கப்பட்ட சில கற்பனைப் பாத்திரங்களுடன் சுவாரஸ்யமாக இந்நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் அணிந்துரையுடன் கூடியது.



படிப்பகம்

www.padippakam.com



## 3529

**நெஞ்சுறுத்தும் கானல் (இரு நாடகங்கள்).** தே.தேவானந்த். யாழ்ப்பாணம்: அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 106, 4ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 2003. (யாழ்ப்பாணம்: அருண் பிரிண்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ்).

vii, 115 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5X13.5 சமீ., ISBN: 955-1005-00-7.

மிதிவெடி பற்றிய விழிப்புணர்வூட்டும் வகையில் சமூக உணர்வுடன் இயற்றப்பட்ட நெஞ்சுறுத்தும் கானல், முடக்கம் ஆகிய இரு நாடகங்களுக்கான ஆற்றுகைகளும் அவற்றைப் பெறுமானம் குன்றாத நிலையில் முழு அரங்கப் பார்வையை வெளிக்கொணர்ந்து படிப்பவர்களுக்கு முழு அனுபவ உணர்வைத் தொற்றவைக்கக்கூடிய நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விரு அரங்கச் செயற்பாட்டுடனும் நேரடித் தொடர்பாளர்களானவர்களின் அனுபவப் பகிர்வும் இந்நூலில் சேர்க்கப்பட்டு நூலின் தரத்தை உயர்த்துகின்றன.

## 3530

**பலிக்களம்.** நீ.மரியசேவியர். கனடா: திருமறைக் கலாமன்ற வெளியீடு, Canada Centre for Performing Arts, 2175 Victoria Park Ave.,#201, Scarborough, Ontario, M1R 1V6, 3வது பதிப்பு, மார்ச் 1996, 1வது பதிப்பு, மார்ச் 1973, 2வது பதிப்பு, பெப்ரவரி 1993, (கனடா: லக்கி பிரின்ட்).

64 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21X13.5 சமீ.

பலிக்களம், இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் சித்திரிக்கும் ஒரு காவியம். உலகெங்கும் வன்முறையில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கைச் சுடரைப் பிரகாசிக்கச் செய்வதே பலிக்களத்தின் முக்கிய நோக்கமாக அமைகின்றது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மேடையேறிய இந்நாடகம் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதலாவது ஒளிப்பதிவு நாடகப்பிரதியாகவும் விநியோகிக்கப்பட்டது.

## 3531

**பாலசுகுமார் நாடகங்கள்.** பாலசிங்கம் சுகுமார். மட்டக்களப்பு: பிரமிளா சுகுமார், அனாமிகா வெளியீடு, 219, பார் வீதி, 1வது பதிப்பு, மார்கழி 1993. (மட்டக்களப்பு: புனித செபத்தியார் அச்சகம்).



படிப்பகம்

www.padippakam.com



xiv, 100 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

பாலசுகுமார் (1955) கிழக்கிலங்கையின் மூதூர், சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாடசாலை ஆசிரியராகப் பணியைத் தொடங்கிப் பின்னாளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடத்தின் விரிவுரையாளரான இவர் நாடகம், விமர்சனம், நாட்டாரியல் துறைகளில் தனது பங்களிப்பினை வழங்கிவருபவர். 1983-1993 காலப்பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கெனத் தான் எழுதிப் பயிற்றுவித்த பன்னிரண்டு நாடகங்களில் ஆறு சிறுவர் நாடகங்களைத் தொகுத்து இந்நூலாக வெளியிட்டுள்ளார். வானம் நமக்கொரு வரையறையா (நிருத்தி நாடகம்), எவடம் எவடம் புங்கடி புளியடி (நவீன அரங்கு), மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் (இசை நாடகம்), முன்னொரு காலத்திலே (சிறுவர் நாடகம்), மானுடம் வென்றதம்மா (நவீன கூத்து), சூழலைக் காப்போம் (நாட்டிய நாடகம்) ஆகிய நாடகங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3532

**புதிய சிந்தனை: மலையக சமூக மேடை நாடகங்கள்.** மலையக வாசுதேவன். (இயற்பெயர்: மாதையா வாசகம்). கண்டி: ஞானம் பதிப்பகம், 19/7, பேராதனை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ, ISBN: 955-8354-05-8.

ஐந்து மலையக சமூக மேடை நாடகங்கள் அடங்கிய இத் தொகுப்பில், புதிய சிந்தனை, பணத்தால் வந்த வினை, தீராத விளையாட்டு, எங்கே சுதந்திரம், பயணம் ஒன்று ஆகிய நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. புசல்லாவை சோகம தோட்டத்தைச் சேர்ந்த மாதையா வாசகம் 01.02.1956இல் பிறந்தவர். 1996இல் மலையக நட்சத்திர கலைப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி பல சமூக சிர்திருத்த நாடகங்களை மேடைநாடகங்களாகவும், வீதி நாடகங்களாகவும் அரங்கேற்றியவர். 1998 அரச தமிழ் நாடக விழாவில் எங்கே சுதந்திரம் என்ற நாடகத்திற்கு அதன் அரங்கியற் சாத்தியப்பாடுகளுக்காக **மதிப்பார்ந்த படைப்பு** என்னும் விருதினை (ரூபா 15000) பெற்றுக்கொண்டவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3533

**ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்: 1 சித்ரா.** *ரவீந்திரநாத் தாகூர் (மூல ஆசிரியர்), வை.முத்துக்குமாரசுவாமி (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: உமா சிவா பதிப்பகம், 136, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (யாழ்ப்பாணம்: எஸ்.கந்தையா, சுதந்திரநாத அச்சகம், 86, பரமேஸ்வராக் கல்லூரி வீதி, திருநெல்வேலி).*

*x, 28 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x12.5 சமீ.*

*வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் (06.05.1861-07.08.1941) சித்ரா, பலி, வேந்தனும் அரசியும் ஆகிய மூன்று நாடகங்கள் லண்டனில் வாழும் வை.முத்துக்குமாரசுவாமி அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அத்தொடரில் வெளிவந்த முதலாவது நூலான சித்ரா நாடகம் 1914இல் தாகூரால் வங்காளத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் அவ்வாங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.*

## 3534

**வாழ்ந்து பார்க்கலாம்: வானொலி நாடகம்.** P.விக்னேஸ்வரன். Canada: P.Vickneswaran, 100 Mornelle Court, Apt # 1080, Scarborough, Ontario, M1E 4X2, *1வது பதிப்பு, செப்டெம்பர் 1998. (*Canada: PMJ Printing & Graphics, Scarborough, Ontario*).*

*134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.*

*இலங்கை வானொலிமூலம் எம்மிடையே பிரபல்யமான பீ.விக்னேஸ்வரன்* **வானொலி நாடகங்களும் நானும்** *என்ற தலைப்பில் தனது அனுபவங்களைத் தந்துள்ளதுடன் அவரது வானொலி நாடகமான வாழ்ந்து பார்க்கலாம் நாடகப் பிரதியையும் நூலுருவாக்கியுள்ளார். ரொரன்ரோவில் தமிழோசை வானொலிச் சேவையில் 1995இல் ஜனவரி முதல் ஏப்ரல் வரை முதலில் ஒலிபரப்பப்பட்ட இவ்வானொலி நாடகம், பின்னர் டி.பி.எஸ். ஜெயராஜ் அவர்களால் மஞ்சரி பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் இளைய பாரதி அவர்களின் 24 மணி நேர ஒலிபரப்புச் சேவையான கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் ஒலிபரப்பாகியது.*



படிப்பகம்

www.padippakam.com



## 3535

**வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி.** சோ.பரமசாமி. தாவடி: தாவடியூர் சித்த வைத்தியர் அமரர் சி.ஆ.பொன்னம்பலம் (பரமு வைத்தியர்) அவர்களின் நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, 2005. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xii, 102 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சோ.பரமசாமி ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. ஓய்வுபெற்ற அரச மொழிபெயர்ப்பாளர். இவரால் எழுதப்பட்டு, 1969ம் ஆண்டுக் காலப்பகுதியில் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பத்து நாடகங்களின் தொகுப்பே இந்நூல். திருக்குறளின் உழவு என்ற அதிகாரத்திலுள்ள பத்து குறள்களையும் தனது கருப்பொருளாகக் கொண்டு அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் கிராமியப் பொருளாதாரத்தின் உந்துசக்தியாக இருக்கும் உழவுத் தொழிலையும், அதன் வளர்ச்சிக்குக் கையாள-வேண்டிய நடைமுறைகளையும் தன் கதாபாத்திரப்படைப்புகள் மூலம் இந்நாடகங்களில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

## 3536

**வானொலி நாடகங்கள். தொகுதி 3.** எஸ்.எஸ்.துரை. கிளிநொச்சி: தமிழ்த் தாய் வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 2005. (கிளிநொச்சி நிலா பதிப்பகம்).

(18), 256 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மரணங்கள் மலிந்த பூமி, நிஜம், விடியலைத் தேடி, காதலா கடமையா, உடலுக்கப்பால் ஆகிய ஐந்து வானொலி நாடகங்களின் தொகுப்பு. கனேடியத் தமிழ் வானொலியிலும் Fair Child 1430AM அலைஓசை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டவை. 1984இல் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வாழும் ஈழத்துப் படைப்பாளி-யான எஸ்.எஸ்.துரை ஏராளமான வானொலி நாடகங்களை எழுதியிருக்கின்றார். இவரது வானொலி நாடகங்களின் முதலாம் தொகுதி "எஸ்.எஸ்.துரையின் நாடகங்கள் தொகுப்பு 1" என்ற தலைப்-பில் பதிவாகியுள்ளது. (பதிவு 2560). இரண்டாம் மூன்றாம் தொகுதிகள் வானொலி நாடகங்கள் என்ற தலைப்பில் வெளியாகியுள்ளன.

**(மேலும் பார்க்க: பதிவு இலக்கம் 2573).**

**மேலும் பார்க்க: 3497**



படிப்பகம்

www.padippakam.com



# 894.8(3) தமிழ்க் கவிதை நாடகங்கள்-காவியங்கள்

## 3537

**அந்தச் சிரிப்பு.** அம்பி. (இயற்பெயர்: இ.அம்பிகைபாகர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12 சமீ., ISBN: 1 876626 52 6.

சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட அம்பி குழந்தைப் பாடல் நூல்கள் பலவற்றின் ஆசிரியராவார். சிறந்த கவித்துவம் மிக்க இவர் சில கவிதா நாடகங்களையும் இயற்றியுள்ளார். ஈழத்து நாடக மேடைகளில் தாக்கத்தை ஏற்படுத்திய "வேதாளம் சொன்ன கதை", **அந்தச் சிரிப்பு** என்ற பெயரில் இங்கு பிரசுரமாகியுள்ளது. இந்த நாடகத்துடன் வானொலி நாடகமான **யாழ் பாடியும்**, நாட்டிய நாடகமான **அன்னம் விடு தூது** என்ற இலக்கிய நயம்சொட்டும் நாடகமும் சேர மொத்தம் மூன்று நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை மூன்றும் கவிதை நாடகவகையினதாகும்.

## 3538

**அப்பையா.** எஸ்.பொன்னுத்துரை. கொழும்பு 13: அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1972. (கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ், 231, ஆதிருப்பள்ளித் தெரு).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12 சமீ.

எழுத்தாளர் எஸ்.பொ அவர்களின் தந்தையாரின் இழப்பின் பின் அவரைக் காவியநாயகனாகக் கொண்டு படைத்த காவியம் இது. வழமையான கல்வெட்டு மரபிலிருந்து விலகி மகனான தனக்கும் அப்பையாவென விழிக்கப்படும் தன் தந்தைக்கும் இடையே இருந்த அன்புத் தொடர்புகளையும் ஆசாபாசங்களையும், அகங்கனிந்து பாடுகின்றார். தந்தையின் வாழ்வைத் தனையனாக நின்று மனமுருகிப்பாடி அதையே தன் பிரிவுத் துயரைத்தீர்க்கும் வடிகாலாகக் காண்கிறார். பாரம்பரிய கல்வெட்டு மரபுமுறையின் மற்றொரு பரிமாணமாக இக்காவியம் மலர்ந்துள்ளது. இது 31ஆவது அரசு வெளியீடு.



படிப்பகம்

www.padippakam.com



## 3539

**ஆசிரியை ஆகினேன்: காவியம்.** தில்லைச்சிவன் (இயற்பெயர்: தி.சிவசாமி). வேலணை: செந்தமிழ்ச் செல்வி வெளியீடு, கூடல், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).

53 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 17.5X12 சமீ.

துணைவனை இழந்து, பிள்ளைகளை இழந்து, உண்ண உணவும், நோய்க்கு மருந்தும் வாழ வீடுமின்றி வருந்தும் பெண்கள் ஒருபுறமும், பெண்களைக் கேலி செய்து தொல்லைப்படுத்தும் ஊடகங்கள் மறுபுறமுமாக இவற்றிடையே ஓயாத்துயரில் வாழும் பெண்களுக்காக உழைத்து அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தைக் காண விழைகின்றாள் இக் காவியத் தலைவியான சுந்தரி. பெண்களின் உயர்வு —விடுதலை பற்றிப் பேசும் நல்லதொரு காவியம் இது.

## 3540

**கதை-கண்ணீர்-கவிதை.** நாவண்ணன். யாழ்ப்பாணம்: நாவண்ணன், ஸ்ரீனா வெளியீடு, ஸ்ரீனா அச்சகம், 215, 2ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீனா அச்சகம், 215, 2ம் குறுக்குத் தெரு).

x, 60 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 17X12 சமீ.

மலையக மக்களின் கண்ணீர்க் கதை இங்கு கவிதைகளாகின்றன. ஈழமுரசு பத்திரிகையில் 1986இல் நான்கு இதழ்களில் வெளியாகி நின்றுபோன இக்காவியத் தொடர், பின்னர் 1987 ஏப்ரல் 5ம் திகதி முதல் 20 வாரங்கள் தொடர்ந்து முழுமையாக வெளிவந்திருந்தது.

## 3541

**கம்பதாசன் காவியங்கள்.** கம்பதாசன் (மூலம்), சிலோன் விஜயேந்திரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600 108: பாரி நிலையம், 184 பிராட்வே, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1987. (சென்னை 600 086: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம்).

iv, 156 பக்கம், விலை: இந்திய ரூபா 12., அளவு: 18X12.5 சமீ.

1941 இல் வெளிவந்த கம்பதாசனின் முதற் கவிதைநூலான "கனவு" முதல் 1969 வரை கம்பதாசன் எழுதிக் குவித்த படைப்புக்களுள் தேர்ந்த 13 காவியங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் திண்டிவனம் பகுதியில் 1916இல் பிறந்த இக்கவிஞன்



படிப்பகம்

www.padippakam.com



1973இல் மறைந்துவிட்டார். அவரது படைப்புக்களை, தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துக் கலைஞரான சிலோன் விஜயேந்திரன் அவர்கள் பதிப்பித்து வந்துள்ளார். கனவு, காணிக்கை, காதலும் கண்ணீரும், புத்தன் புனர்ஜென்மம், சாவுக்கு விருந்து, வேளை வந்தது, இரத்த ஓவியம், கல்லாத கலை, சொல்லாத சொல், கற்கனி, மொழி முத்தம், மான சம்ரகஷ்ணம், கம்பக் குயில், ஆகிய 13 காவியங்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன.

## 3542

**கொய்யாக் கனிகள்.** திமிலைத்துமிலன். மட்டக்களப்பு: இராஜம் பிரசுரம், திமிலைத் தீவு, 1வது பதிப்பு, சித்திரை 1964. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி).

66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12.5 சமீ.

பத்து அத்தியாயங்களில், 163 பாடல்களில் இயற்றப்பட்ட இந்தக் காதல் காவியம் **கதம்பம்** என்ற சிற்றேட்டில் வெளிவந்து பிரபல்யமான காவியத்தொடராகும். வித்துவான் சா.இ.கமலநாதன் அவர்களின் விரிவான முன்னுரையுடன் கூடியது. கலைஞர் கிருஷ்ணாவின் ஓவியங்கள் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் மெருகூட்டுகின்றன.

## 3543

**தந்தை செல்வா காவியம்.** தில்லைச்சிவன் (இயற்பெயர்: தி.சிவசாமி). யாழ்ப்பாணம்: தாமரை, 45/1, அம்மன் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 6: விகடன் அச்சகம், 541/2, காலி வீதி)

88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21X14.5 சமீ.

தந்தை செல்வா இலங்கை அரசுடன் மேற்கொண்ட சாத்வீகப் போராட்டத்தை கவிதை வடிவில் சிறப்பான முறையில் கவிஞர் தில்லைச்சிவன் முன்நிறுத்தியுள்ளார். ஈழத்தமிழரின் இன விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால வரலாறு தெள்ளுதமிழில் இங்கு காவியமாகியுள்ளது.

## 3544

**பண்டாரவன்னியன் காவியம்.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன். தெகிவளை: அன்னை வெளியீட்டகம், இல. 16, பாடசாலை ஒழுங்கை,



படிப்பகம்

www.padippakam.com



புகையிரதநிலைய வீதி, 1வது பதிப்பு, மே 2005. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

xxxiv, 366 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-97349-3-8.

கவிதை இயற்றும் ஆற்றல் மிக்க பரம்பரையில் வந்தவர் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள். அவரது புதல்வரான இந்நூலாசிரியரின் ஐந்தாவது காவியமாக மலர்ந்துள்ள இந்நூல், தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் இயற்றிய பாயும்புலி பண்டாரக வன்னியன் என்ற உரைநடை நூலின் காவிய வடிவமாகும்.

## 3545

**புனித பூமியிலே.** சையது முஹம்மது (மூலம்), ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (கவியாக்கம்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், தமிழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (சென்னை 600 001: மில்லத் பிரின்டர்ஸ், 16, அப்பு மேஸ்திரி சாலை).

xii, 264 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 20x14 சமீ.

பகைமைபூண்ட ஓர் அரசன் நோய்வாய்ப்பட்டிருக்கும் பொழுது பகைமையைப் பாராட்டாது மாறுவேடம் பூண்டு அந்த அரசனுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த பெருமை சுல்தான் சலாஹுதீன் அவர்களைச் சாரும். இத்தகைய பெருமைமிக்க சுல்தானின் வீரதீரச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு சையது முகம்மது (ஹசன்) அவர்களால் இயற்றப்பட்ட வரலாற்றுப் புதினங்களான "மஜ்ஜபீன்", "புனித பூமியிலே" ஆகியவற்றை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கிய காவியம் இதுவாகும்.

## 3546

**மஹ்ஜபீன் காவியம்.** ஹசன் (மூலம்), ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (கவியாக்கம்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், தமிழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1991. (சென்னை 600 001: மில்லத் பிரின்டர்ஸ், 16, அப்பு மேஸ்திரி சாலை).

xliv, 152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

இந்நூல் 15.2.1992இல் புதுக்கோட்டையில் நடைபெற்ற முதலாம் இஸ்லாமிய தமிழ்ச் சிற்றிலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்டது. எகிப்திய பேரரசன் சுல்தான் ஸலாஹுத்தீனின் ஆட்சிக்காலம்



படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாமிய வரலாற்றில் தனிச்சிறப்புப் பெற்றது. இவர் கிறிஸ்துவச் சிலுவைப் போர்வீரர்களை வெற்றிகண்டு கி.பி. 1193இல் ஜெருசலத்தைக் கைப்பற்றினார். அப்போது ஜெருசலத்தை ஆண்டவன் கைடி லூசினான் என்ற கிறிஸ்தவ மன்னன். அவனும் அவனது சிற்றரசர்களும் இஸ்லாமியருக்குப் பெரும் கொடுமைகளைப் புரிந்து வந்தனர். எல்லை மீறிய கொடுமைகளுக்கு முடிவுகாண சுல்தான் ஸலாஹுத்தீன் பொங்கியெழுந்து கிறீஸ்தவர்களை அடக்கி வெற்றிகண்டான். இந்த வரலாற்றுப் பின்னணியில் எழுந்தது தான் மஹ்ஜபீன் காவியம். மஹ்ஜபீன் என்ற இஸ்லாமிய மங்கையை கைதுசெய்து துன்புறுத்த முனைந்த ரேமண்ட் என்ற கிறிஸ்தவ சிற்றரசனிடமிருந்து (திரிபோலியை ஆண்டவன்) அவளை மீட்டெடுத்தல் காவியமாகின்றது. இடையில் மஹ்ஜபீன் சந்தித்த இடையூறுகள், காதல், வீரம், அன்பு, தியாகம், பெருமிதம் ஆகியன இக்கதையில் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

## 3547

**ஜின்னாஹ்வின் இரு குறுங்காவியங்கள்.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2001. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 ஸ்டேஷன் வீதி).

xii, 43 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 21x15 சமீ., ISBN: 955-97349-0-3.

"பிரளயம் கண்ட பிதா" (நூஹ் நபி காவியம்), "தாய்க்கென வாழ்ந்த தனயன்" (உவைசுல் கர்ணீ காவியம்) ஆகிய இரு இஸ்லாமிய குறுங்காவியங்கள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன. பிரளயம் கண்ட பிதா, நூஹ் நபி அவர்களின் வரலாற்றைக் கூறுவது, குர் ஆன் கூறும் சம்பவங்களையும், குர் ஆன் விரிவுரையாளர்கள் கூறும் நூஹ் நபி பற்றிய வரலாற்று ஐதீகங்களையும் அடிப்படையாகக் கொண்டு இக்குறுங்காவியம் இயற்றப்பட்டுள்ளது. நூஹ் நபியின் பிறப்பு, வளர்ப்பு, அவர் தீர்க்கதரிசியாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டமை, ஏக தெய்வக் கொள்கை பற்றிய அவரது பிரச்சாரம், பல தெய்வ வழிபாட்டாளர்களின் எதிர்ப்பு என்பன இக்காவியத்தில் பதிவாகின்றன. "தாய்க்கென வாழ்ந்த தனயன்" இஸ்லாமிய சூபி ஞானி ஒருவரின் கதை. பெருமானார் ஸல் அவர்களின் காலத்தில் வாழ்ந்தபோதும் தன் தாயை பராமரிக்கவேண்டிய காரணத்தால் அவரை நேரில் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பையும் இழந்தவர் இவர். இதன் காரணமாகவே பெருமானாரால் "நன்மாராயம்" பெற்றவர்.



படிப்பகம்

www.padippakam.com



பெருமானாரின் மறைவின் பின்னர் கலிபா உமர் (ரலி) அவர்கள் இப்பெரியாரைச் சந்திக்க எடுத்த முயற்சிகளும் சந்தித்த வரலாறும் அதன் பின்னுள்ள அவரது வாழ்வும் மரணமும் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இக்காவியம் படைக்கப்பட்டுள்ளது.

## 894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

### 3548

**அகதி அரிசி.** தையிட்டி அ.இராசதுரை. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 75/10A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 120 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

தையிட்டியில் 11.5.1938இல் பிறந்த இராசதுரை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர். இவரது முதலாவது சிறுகதை **முப்பதாவது முட்டாள்** தமிழன் பத்திரிகையில் வெளிவந்தது. அதன்பின் இலங்கையின் சகல தேசிய, பிராந்தியப் பத்திரிகைகளிலும் இவரது படைப்புக்கள் வெளிவந்திருந்தன. வலிகாமம் வடக்கினை இலங்கை இராணுவம் கைப்பற்றியதும், அப்பிரதேசத்துத் தமிழ்மக்கள் அனைவரும் அகதிகளாக இடம்பெயர்ந்த வேளையில் இவரும் இவரது மனைவியும் தாம் பிறந்த மண்ணை விட்டு வெளியேறாது பிடிவாதமாக அங்கேயே வாழ்ந்து வந்தனர். இத்தொகுதியிலுள்ள 21 கதைகளிலும் இவர் அங்கு பெற்ற அரிய அனுபவங்களின் பாதிப்பு பரவலாகக் காணப்படுகின்றன.

### 3549

**அந்த ஆவணி ஆறு.** ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீடு, 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கொழும்பு 13: நிசான் பிரின்டர்ஸ்).

xiv, 96 பக்கம், விலை: ரூபா 95., அளவு: 18x13.5 சமீ., ISBN: 955-97106-2-1.

இத்தொகுப்பிலுள்ள ஒன்பது கதைகளுள் ஆறு சிறுகதைகள் இன்றைய சமூக யதார்த்தத்தை- சமூக அரசியல் பிரச்சினைகளைப் பிரதிபலிப்பவை. குதறல் - இராணுவ நெருக்கடிகளால் உளப்பாதிப்புக்குள்ளான தாயொருத்தியின் கதை. வாகைமரம் - உள்ளகப் புலப்பெயர்வுக்குள்ளான அகதிகள் சிலரின் மன இயல்புகளைக்



படிப்பகம்

www.padippakam.com



காட்டுகின்றது. தலைப்புக் கதையான அந்த ஆவணி ஆறு – 1990 அடக்குமுறைக் கலவரம் பற்றிய நடுநிலை ரீதியான உண்மைப் படப்பிடிப்பாகின்றது. எஞ்சிய மூன்று சிறுகதைகளும் திருக்கோணமலை மாவட்டத்திற்கே சிறப்பாகவுள்ள கல்விசார் பிரச்சினைகளைக் களமாகக் கொண்டவை. நூலாசிரியர் அருளானந்தம் ஆசிரியராக, கல்லூரி அதிபராக, கல்விப் பணிப்பாளராகவென்று இலங்கை கல்விச் சேவையில் நீண்டகாலப் பரிச்சயம் கொண்டவர். அவரது துறைசார் அனுபவங்கள் கதைகளை உளவியல்ரீதியாக எடுத்துச்சொல்ல உதவுகின்றன.

## 3550

**அநு. வை.நாவின் ஒரு காலத்துச் சிறுகதைகள்.** அநு.வை.நாக-ராஜன். யாழ்ப்பாணம்: வைரமான் வெளியீடு, சங்கராபரணம், தென் மயிலை, தெல்லிப்பழை, 1வது பதிப்பு, மே 2003. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64 N, Peer Saibo Street).

xviii, 126 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18X12.5 சமீ.

யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி மண்ணில் 1933ம் ஆண்டு பிறந்து அநுராதபுரத்தில் தன் இளமைக் காலத்தைக் கழித்த அநு.வை.நாகராஜன் பிள்ளைப் பராயத்திலிருந்தே எழுதத் தொடங்கியவர். கல்வித்துறையில் 37 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். சமய இலக்கியங்களிலும் சிறுவர் இலக்கியங்களிலும் ஈடுபாடு காட்டி பல நூல்களைத் தனது வைரமான் வெளியீட்டகத்தின் வாயிலாக வெளியிட்டவர். 1954 முதல் 1993 வரை தேசிய நாளிதழ்களில் வெளியான இவரது சிறுகதைகளில் 11 கதைகள் கொண்ட தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. இது 11ஆவது வைரமான் வெளியீடாகும்.

## 3551

**அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்.** தி.ஞானசேகரன். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல் வெளியீடு, 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மே 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

152 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5X12 சமீ.

யாழ்ப்பாணத்தின் புன்னாலைக்கட்டுவனைச் சொந்த இடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி தி.ஞானசேகர ஐயர் மலையகத்தில்



படிப்பகம்

www.padippakam.com



வைத்தியராகப் பணியாற்றியவர், ஞானம் என்ற கலை இலக்கிய சஞ்சிகையை நடத்தி வருபவர். இவரது கதைகளின் உள்ளடக்கத்தில் மட்டுமன்றி உருவ அமைதியிலும் தீவிர கவனம் செலுத்துபவர். உள்ளடக்கங்களுக்கேற்ற பொருத்தமான தலைப்புக்கள், உயிர்த்துடிப்புள்ள நடை, பொருத்தமான, சுவாரஸ்யமான கதைத் திருப்பங்கள், சிந்தனையைத் தூண்டும் முடிவுகள், பண்புநலனை வெளிப்படுத்தும் பாத்திர வார்ப்புகள், உவமைப் பிரயோகங்கள் என்பன இவரது கதைகளுக்குத் தனிச் சோபையை அளிப்பதாக பேராசிரியர் க.அருணாசலம் அவர்கள் விதந்து கூறியுள்ளார். ஞானசேகரனின் 11 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன. இந்நூல் தற்போது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பாடநூலாகவும் வைக்கப்பட்டுள்ளது.

## 3552

**அவன் ஒருவனல்ல.** மாத்தளை சோமு. மதுரை 01: மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக் கோபுரத் தெரு, 1வது பதிப்பு, 1989. (சென்னை 6000 86: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம்).

143 பக்கம், விலை: இந்திய ரூபா 13., அளவு: 18X12.5 சமீ.

1967ம் ஆண்டிலிருந்து சிறுகதைகளை எழுதத் தொடங்கிய மாத்தளை சோமுவின் 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை 1972 முதல் 1984 வரை வீரகேசரி, சிந்தாமணி, தீபம், சிரித்திரன் ஆகியவற்றில் வெளியானவை.

## 3553

**அழியும் கோலங்கள்.** புலோலியூர் க.தம்பையா. கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (கொழும்பு 12: பேஜ் செட்டர்ஸ், இல.72, மெசெஞ்சர் வீதி).

xviii, 144 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5X13.5 சமீ.

1937ம் ஆண்டு தென்புலோலி, புற்றளைக் கிராமத்தில் பிறந்தவர் புலோலியூர் க. தம்பையா. 1956இல் நில அளவைத் திணைக்களத்தில் படவரைஞராகப் பணியாற்றி 1984இல் ஓய்வுபெற்றவர். கடந்த நான்கு தசாப்தங்களாக எழுதிவரும் இவர் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன் மணிவிழாக்குழு 1986இல் ஒழுங்குசெய்த சிறுகதைப்போட்டி உட்பட பல போட்டிகளில் தங்கப் பதக்கங்களை



படிப்பகம்

www.padippakam.com



வென்றவர். இவரது 14 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இதுவாகும்.

### 3554

**ஆண் மரம்.** ஒட்டமாவடி அறபாத். வாழைச்சேனை: Zuha Publications, 71, Basheer Street, Mavadichenai, 1வது பதிப்பு, ஜூலை 2001. (கொழும்பு: ஷபாப் பிரின்டர்ஸ், பொரளை).

*(4), 100 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN*: 955-96317-5-6.*

ஒட்டமாவடி அறபாத் ஈழத்தில் 80க்குப் பின் விளைந்த காத்திரமான படைப்பாளி. கவிதை, சிறுகதை என்பன இவரது படைப்பாளுமையின் பிரதான தளங்களாகும். கற்பனையிலிருந்து படைப்பாக்கம் நிகழ்வதை மிக வன்மையாக மறுக்கும் இவர் யதார்த்தத்தின் கண்ணாகவும், வாயாகவும் படைப்பை அதன் உயிரைக் கருதுபவர். 80க்குப் பின் ஈழத்தில் நிகழ்ந்த வாழ்வின் நெருக்கடிகளும் மனிதாத்மாக்களின் துன்பமும் அறபாத்தின் எழுத்தின் வாயிலாக ஓடி வருகின்றன. மிக மோசமான, அரசியல், இன நெருக்கடிமிக்க கிழக்கில் தோன்றிய வாழ்வே அறபாத்தின் கதைப் பதிவுகளும் கலைநேர்த்தியான சிருஷ்டிப்புமாக வடிவமெடுக்கின்றன. எதிர்க்குரலின் ஆளுமையை, சமரசம் செய்துகொள்ளாத படைப்பாளியின் வீச்சை இவருடைய சிறுகதைகளில் நாம் காணலாம். இது இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு.

### 3555

**ஆளடையாள அட்டையும் ஐந்து ரூபாயும்.** S.H.நிஃமத். கொழும்பு: நம்நாடு நற்பணிப் பேரவை, 1வது பதிப்பு, ஜூன் 1997. (கொழும்பு 2: Crescent Publications, 90, Justice Akbar Mawatha).

*124 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 18x13 சமீ.*

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தினகரன் பத்திரிகையுடன் இணைந்து நடாத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற தலைப்புக் கதையுடன் மேலும் தேர்ந்த 9 கதைகளையும் இணைத்து இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. இவற்றில் ஆறு கதைகள் பல்வேறு போட்டிகளில் பரிசில்களை வென்றவை. வீரகேசரி, தினகரன், நவமணி, சங்கமம் ஆகிய இதழ்களில் பிரசுரமானவை.



படிப்பகம்

www.padippakam.com



## 3556

**இணையும் இரண்டு துருவங்கள்.** கணபதி கணேசன், ஆயிலியன். யாழ்ப்பாணம்: இளம் எழுத்தாளர் ஒன்றியம், ஓட்டுமடம், 1வது பதிப்பு, மார்ச் 1979. (யாழ்ப்பாணம்: செல்வி அச்சகம்).

(4), 67 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 17.5x12.5 சமீ.

ஏழு சிறுகதைகள் கொண்ட இத்தொகுதியில் கணபதி கணேசன் எழுதிய பரீட்சை மாணவர்க்கல்ல ஒரு சமூகத்திற்கு, சபலத்தின் எதிரொலி, இப்படியும் ஒரு பெண், இணையும் இரண்டு துருவங்கள் ஆகிய நான்கு சிறகதைகளும், ஆயிலியன் எழுதிய ஒரு புதிய உலகம் தோற்றுவிக்கப்படுகின்றது, ஒரு விடிவு காத்திருக்கிறது, நோயாளிகள் மருந்து சாப்பிடுவதில்லை ஆகிய மூன்று சிறுகதைகளும் இடம்பெற்றள்ளன.

## 3557

**இதயக் கதவுகள்.** மடவளை கலீல். உக்குவளை: ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம், 1வது பதிப்பு, ஜுன் 1995. (உக்குவளை: எம்.ஆர்.என். பிரின்டர்ஸ், 205 மன்னம்பொட).

iv, 49 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

துயரக் கொழுந்துகள், கைதிப் புறாக்கள் என்னும் இரு கவிதைத் தொகுதிகளைத் தந்த மடவளை கலீலின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இந்நூலில் மொத்தம் ஆறு சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

## 3558

**இயற்கை.** S.முத்துமீரான். நிந்தவூர்: மீரா உம்மா நூல் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜுலை 1999. (சென்னை 600005: Novena Offset Printing Co.).

154 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x12 சமீ., ISBN: 955-8281-00-X.

என்றும் அழியாத இறைவனின் இயற்கையையும், இறைத்தன்மையின் சக்திகளையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் இதிலுள்ள 48 உருவகக் கதைகளின் வாயிலாக கவித்துவத்துடன் வெளிப்படுத்தி-யுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3559

**இரவில் நான் உன் குதிரை.** என்.கே.மகாலிங்கம். நாகர்கோவில் 629001: காலச் சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600 005: மணி ஆஃப்செட்).

256 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21.5x14 சமீ., ISBN: 81-87477-69-5.

என்.கே.மகாலிங்கம் நைஜீரியாவில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். கவிஞரும், சிறுகதை ஆசிரியரும், கட்டுரையாளருமான இவர் பூரணி சிற்றிதழை இலங்கையில் நடத்தியவர்களுள் முக்கியமானவர். ஆங்கில மொழியூடாக தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட பல்தேசங்களின் 17 சிறுகதைகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. டென்மார்க், கல்கத்தா, பஞ்சாப், ஆர்ஜென்ரீனா, நைஜீரியா, ரஷ்யா, அயர்லாந்து, கனடா, பிரிட்டன், அமெரிக்கா, போலந்து, மெக்சிக்கோ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களின் தேர்ந்த சிறுகதைகள் இவை.

## 3560

**இருட்டு ஒளி.** சோ.ஜெயச்சந்திரா. வவுனியா: சோ.ஜெயச்சந்திரா, கோகுலம், குட்ஷெட் வீதி, 1ம் ஒழுங்கை, 1வது பதிப்பு, மே 2005. (வவுனியா: ஆதவன் அச்சகம்).

68 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20x14 சமீ.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் சோ.ஜெயச்சந்திராவின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. திடீர் திருப்பங்களும், மாறுபட்ட முடிவுகளும், துணிச்சலான தீர்வுகளும் கொண்ட 14 கதைகள் இத்தொகுப்பில் இடம்கொள்கின்றன. வளரும் எழுத்தாளனின் கன்னி முயற்சி என்ற வகையில் இது குறிப்பிடத்தக்கதாகின்றது.

## 3561

**இருமை.** K.S.சிவகுமாரன். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, மார்ச் 1998. (சென்னை 600005: மணி ஆப்செட் பிரிண்டர்ஸ்).

x, 102 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடம் பெற்றுள்ள கே.எஸ்.சிவகுமாரன், வானொலி, தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகள் ஆகியன மூலம் நன்கு அறியப்பட்டவர். 1950, 1960களில் எழுதப்பட்ட கதைகளும், 1980களில் எழுதப்பட்ட ஒரு கதையும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இக்கதைகளில் பெரும்பாலானவை கொழும்புவாழ் உயர்மட்ட மக்கள் சிலரின் அனுபவங்களைப் படம்பிடிக்க முயல்கின்றன. ஆங்கில சம்பிரதாயங்கள், மரபுகளைப் பின்பற்றும் மேல்தட்டுப் பாத்திரங்கள் இவர்களிற் சிலர். சிங்கள மக்களும் இக்கதைகளில் பவனி வருகின்றனர். பெரும்பாலான கதைகள் உளவியலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவை.

## 3562

**இலங்கை எழுத்தாளர்களின் 26 சிறுகதைகள்.** S.செல்வகுமார். (தொகுப்பாசிரியர்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை 14: பி.வி.ஆர். பிரின்டர்ஸ்).

320 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18X12 சமீ.

தாயகத்திலுள்ள 21 சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளும், புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளில் வாழும் புகலிட எழுத்தாளர்கள் ஐவரின் கதைகளுமாக மொத்தம் 26 ஈழத்து எழுத்தாளர்களின் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தொகுப்பாசிரியர், திருக்கோணமலை இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராவார். அமரர் வ.அ.இராசரத்தினம், சண்முகம் சந்திரன் (ஆவூரான்), மா.கி.கிரிஸ்ரியன், கே.எஸ்.சுதாகர், முல்லைமணி (வே.சுப்பிரமணியம்), சிவலிங்கம் சிவபாலன் (கமலபாரதி), எம்.ஐ.எம். தாஹிர் (சீவதரன்), நீ.பி.அருளானந்தம், வெ.பாக்கியநாதன், எஸ்.உதயகுமார், சி.இலங்கேஸ்வரன், புரட்சிபாலன், எஸ்.செல்வகுமார், க.ராகுலன், இணுவில் உத்திரன், பி.பி.அந்தோனிப்பிள்ளை, உக்குவளை சம்ஸியா, பாலா சங்குப்பிள்ளை, அ.அச்சுதன், ஆ.தங்கவேலாயுதன், மா.செல்லத்தம்பி, திருமலை சுந்தா, தினகரன் முரளீதரன், தங்கராஜா செல்வகுமார், ச.கவிதா, மாதுமை ஆகியோரின் படைப்புக்கள் இத்தொகுப்பில் உள்ளடங்கியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3563

**இன்னொரு வெண்ணிரவு.** சாந்தன். யாழ்ப்பாணம் வெண்புறா வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1988. (யாழ்ப்பாணம்: சுவர்ணம் பப்ளிசிட்டீஸ், 5, கலைப்புலவர் வீதி).

viii, 42 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12 சமீ.

1966இல் எழுத்துலகப் பிரவேசம் கண்ட ஐ.சாந்தன், இன்று ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தகுந்தவராக வளர்ந்துள்ளார். குறுகிய வடிவத்தில் மகத்தான செய்திகளைத் தந்து நிற்கும் இவரது படைப்புக்களில் 14 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்கொண்டுள்ளன.

## 3564

**ஈழ எழுத்தாளர் புரட்சிபாலனின் புதுமைக் கதைகள்.** புரட்சிபாலன். (இயற்பெயர்: கந்தசாமி சண்முகபாலன்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).

xiv, 190 பக்கம், விலை: இந்திய ரூபா 47., அளவு: 18x12..5 சமீ.

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் புரட்சிபாலன், கதிரவன் என்ற கையெழுத்துச் சஞ்சிகையை இளவயதில் ஆம்பித்து நடத்தியது முதலாக 1960ம் ஆண்டிலிருந்து

கடந்த 45 ஆண்டு காலமாகப் படைப்பிலக்கியத்துறையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். உமையாள் புரத்து உமா என்ற இவரது நாவல் வீரகேசரி பிரசுரமாக 1976இல் வெளிவந்து பாராட்டைப் பெற்றது. இத்தொகுப்பில் புரட்சிபாலனின் 15 கதைகள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலானவை கடந்த கால ஈழ யுத்தத்தின் பகைப்புலத்தில் உருவானவை.

## 3565

**உதயம்.** நீர்வை பொன்னையன். யாழ்ப்பாணம்: நவயுகப் பதிப்பகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1970. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(18), 135 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



பிரபல முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் விவசாயக் குடும்பத்தில் தோன்றியவர். விவசாயிகள் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அறிந்தவர். அவர்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டவர். அவற்றுக்கு விடிவுகாணும் வேணவா அவரது சிறுகதைகளில் வீர உணர்வோடு வெளிவருகின்றது. ஒடுக்குமுறை, சுரண்டல் போன்ற விலங்குகளை விட்டெழும் விடுதலை வேட்கைகொண்ட விவசாயிகளை இவரது பெரும்பாலான கதைகள் சித்திரிக்கின்றன. 1962 முதல் 1969 வரை இவர் எழுதிய 11 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

## 3566

**உதிர வேர்கள்.** முத்து இராதாகிருஷ்ணன். திருக்கோணமலை: மதுஷா வெளியீடு, 25, கோணேசபுரம், உவர்மலை, 1வது பதிப்பு, மார்கழி 2000. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

xi, 86 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5X14.5 சமீ.

ஈழத்து இலக்கியச் சூழலில் நவீன ஓவியராக, நாடகவியலாளராக, சிறுகதை எழுத்தாளராகப் பல்வேறு தளங்களில் அறியப்பட்ட முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன், இலங்கை கல்வி நிர்வாகச் சேவையில் இணைந்து திருக்கோணமலையில், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். உதிர வேர்கள் இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். இதிலுள்ள ஒன்பது சிறுகதைகளும் கணையாழி, தாமரை, புது ஊற்று, புதிய வசந்தம், சரிநிகர் போன்ற சஞ்சிகைகளிலும் நாளிதழ்களிலும் வெளிவந்தவை. உணர்வுகளுடன் பேசுபவை.

## 3567

**உம்மாவுக்கு ஒரு சேலை.** திக்குவல்லை ஸப்வான். வெலிகம: கலைச்சுடர் நிலையம், 65, முஹம்மட் லேன், 1வது பதிப்பு, மார்ச் 1998. (கொழும்பு 13: வீ.ஆர்.ஜீ.கே.அச்சகம், 169, ஜோர்ஜ் ஆர்.டீ.சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை).

XX, 136 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5X13 சமீ.

திக்குவல்லை ஸப்வான் தென்மாகாணத்தில் வெலிகம-திக்குவல்லையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இனிமை,



படிப்பகம்

www.padippakam.com



கவிமஞ்சரி ஆகிய இலக்கிய சஞ்சிகைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். தற்போது கிராம அதிகாரியாகக் கடமையாற்றிவரும் இவர் கல்வியியல் நூல்கள் சிலவற்றையும் எழுதியுள்ளார். இந்நூல் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி. இதில் மொத்தம் 18 சிறுகதைகள் இடம்பெறுகின்றன. சமூகத்தில் வேரூன்றியுள்ள அவலநிலைகள், ஏற்றத்தாழ்வுகள், எரியும் பிரச்சினைகள் தத்ரூபமாக இக்கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

## 3568

**உயிர்ப்பு.** லெ.முருகபூபதி (தொகுப்பாசிரியர்). அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கம் வெளியீடு, Australian Tamil Literary and Arts Society, 170, Hothlyn Drive, Craigieburn, Victoria 3064, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (Colombo 12: Kribs, 162, Dam Street).

*168 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5X15 சமீ.*

அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழ் மக்களின் வாழ்வுக் கோலங்களை சித்திரிக்கும் 20 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. சாந்தா ஜெயராஜ், கிருஷ்ணமூர்த்தி, கல்லோடைக்கரன், உஷா ஜவஹர், களுவாஞ்சிக்குடி யோகன், நித்தியகீர்த்தி, ரதி, புவனா இராஜரட்ணம், ரவி, சந்திரகாசன், மாத்தளை சோமு, நல்லைக் குமரன், அருண் விஜயராணி, கலாமணி, தி.ஞானசேகரன், நடேசன், யோகன், ஆ.சி.கந்தராஜா, சுதாகர், ஆவூரான் ஆகியோரின் படைப்புக்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

## 3569

**உலகங்கள் வெல்லப்படுகின்றன.** கே.டானியல். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி 160, 1வது பதிப்பு, பெப்ரவரி 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

*(8), 215 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 17X11.8 சமீ.*

ஈழத்தின் புகழ்பூத்த சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவரான டானியலின் 13 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. 1970களில் ஈழத்து நூல்வெளியீட்டுத் துறையில் முத்திரை பதித்த வீரகேசரி வெளியீட்டுத் தொடரில் இருபதாவது பிரசுரம் இது.



படிப்பகம்

www.padippakam.com



## 3570

**உறவுகள்.** எஸ்.பொன்னுத்துரை (மூலம்), பா.இரவிக்குமார், தி.சுமதி (தொகுப்பாசிரியர்கள்). சென்னை 94: அர்ச்சுனா பதிப்பகம், ஸ்ரீ ராம் குடியிருப்பு, 212A/156 C- 2, சூளைமேடு நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/8-10, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்).

240 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை அவர்கள் எழுதிய சிறுகதைகளும், திறனாய்வுக் கட்டுரைகளும் கலந்த 14 படைப்புக்கள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

## 3571

**எங்கே, மனக்கண்ணையும் திறவுங்கள்** ஆதித்த நிலா. கிளிநொச்சி: அறிவு அமுது பதிப்பகம், யாழ் நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

viii, 76 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 21.5x14.5 சமீ.

காலத்தின் தேவையறிந்து தன்னைப் படைப்பாளியாக்கிக் கொண்டவர் ஆதித்தநிலா. இவரது சிறுகதைகள் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்படும் நெருப்புப் பொறிகள். இவரது கூரிய பார்வை, தெளிந்த நடை, இயல்பான மொழி, அலட்டலற்ற செறிந்த அமைப்பு என்பன இலக்கியப்பரப்பில் இவரை அடையாளம் காட்டுகின்றன. கதைகளினூடு இழையோடிச் செல்லும் எள்ளல் தொனி அவருக்கே இயல்பானதென முன்னுரை வழங்கிய ஆதிலட்சுமி சிவகுமார் குறிப்பிடுகின்றார். ஆதித்தநிலாவின் 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3572

**எஸ்.பி.கிருஷ்ணன் சிறுகதைகள்: இனி வசந்த காலம்.** எஸ்.பி.கிருஷ்ணன். யாழ்ப்பாணம்: கண்ணன் வெளியீடு, 17, பேரின்பநாயகம் தெரு, 1வது பதிப்பு, வைகாசி 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

xiv, 245 பக்கம், விலை: ரூபா 365., அளவு: 19.5x14 சமீ.

இது எஸ்.பி.கிருஷ்ணன் அவர்களின் நான்காவது சிறுகதைத் தொகுதியாகும். ஆசிரியரின் 1965ஆம் ஆண்டு ஈழநாடுச் சிறுகதையி-



படிப்பகம்

www.padippakam.com



விருந்து 2005ஆம் ஆண்டு நமது ஈழநாடு வரையிலான 29 கதைகளைக் கொண்டுள்ளது. தனது கதைகளைச் சொல்வதற்கு ஆசிரியர் கையாளும் மொழிநடை வெகு எளிமையானது. வாசிப்பவர்களைக் களைப்படைய வைக்காத இந்நடை கருவை நெகிழ்த்தாது சொல்லவந்த சேதியை ஆணித்தரமாகப் புரியவைக்கின்றது. தமிழுணர்வுக் கதைகள் தொடக்கம், வாழ்வின் பல்வேறு அம்சங்களைக் கொண்ட உணர்வூட்டுருவக் கதைகள் வரை இதில் அடங்குகின்றன.

## 3573

**ஒரு தாயின் பிள்ளைகள்.** *சிறுகதைப்போட்டி ஏற்பாட்டாளர் குழு. கொழும்பு: நீதி, அரசியலமைப்பு விவகார, இன உறவு அலுவல்கள், தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, 1வது பதிப்பு, பதிப்பித்த ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).*

viii, *145 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14 சமீ.*

*திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் பொறுப்பில் இருந்த நீதி, அரசியலமைப்பு விவகார, இன உறவு அலுவல்கள், தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, இன ஐக்கியத்தை முன்வைத்து ஒரு சிறுகதைப் போட்டியை ஒழுங்குசெய்திருந்தது. அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தலைமையில் கே.எம்.எம்.ஷெரீப் (சிரேஷ்ட உதவிச் செயலாளர்), திருமதி எஸ்.விக்ரமசிங்க (உதவிச் செயலாளர்), ரீ.எம்.ஏ.டீன் (உதவிச் செயலாளர்), திருமதி ஜானகி பெர்ணான்டோ (தேசிய நூலக சேவைகள் சபையின் பிரதிப் பணிப்பாளர்) ஆகியோரின் உதவியுடன் இந்தப் போட்டி ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அதில் பரிசுபெற்றவர்களின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இலங்கை தேசிய நூலகத்தின் பங்களிப்பு இருந்தபோதிலும், அடிப்படை நூல்விபரப் பதிவுக்குரிய தகவல்கள் எதுவுமின்றி இந்நூல் தொகுத்து விநியோகிக்கப்பட்டுள்ளது. நூலின் மட்டையில் ஒரு தாய் மக்கள் என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தெளிவத்தை ஜோசப், எம்.ஐ.எம்.சுபைர், எம்.எஸ்.அமானுல்லா, ஓ.கே.குணநாதன், திருமதி வை.யோகேந்திரன் ஆகியோர் பரிசுபெற்ற 5 சிறுகதைகளையும் எழுதியவர்களாவர். பரிசுபெற்ற 5 சிங்களக் கதைகளும், 5 ஆங்கிலக் கதைகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மொத்தம் 15 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அன்னலட்சுமி இராஜதுரை,*



படிப்பகம்

www.padippakam.com



எம்.எச்.எம்.ஷம்ஸ் ஆகியோர் இவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர்.

## 3574

**ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்.** நெல்லை க.பேரன். (இயற்பெயர்: க.பேரம்பலம்). யாழ்ப்பாணம்: யாழ். சட்டக் கல்விநிலைய மாணவர் மன்றம், மின்சார நிலைய வீதி, 1வது பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: பார்வதி அச்சகம்).

xii, 98 பக்கம், விலை: ரூபா 3.25, அளவு: 17x12 சமீ.

1967 முதல் 1975 வரை வெளியான ஆசிரியரின் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. எழுபதுகளிலே ஈழத்தில் காணப்பட்ட சில வாழ்க்கைப் பிரச்சினைகள் இக்கதைகளில் நுணுக்க விபரங்களோடு சித்திரிக்கப்பட்டுள்ளன. தொழில், உழைப்பு, கல்வி, அரசியல், தேசப்பற்று முதலியன இக்கதைகளின் பிரச்சினை மையங்களாக உள்ளன. இந்நூலாசிரியர் நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அஞ்சல் திணைக்களத்தில் பணியாற்றிய இவர், 1961-66வரை வீரகேசரி, ஈழநாடு தினசரிகளின் செய்தி நிருபராகவும் பணியாற்றியவர். இது இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி. 14.07.1991 அன்று இரவு நடந்த இலங்கை இராணுவத்தின் ஆட்லறி எறிகணைத் தாக்குதலில் இவர் தன் மனைவி, இரு குழந்தைகளுடன் கொல்லப்பட்டார்.

## 3575

**ஒரு பிடி மண்.** கனகசபை தேவகடாட்சம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

xii, 212 பக்கம், விலை: இந்திய ரூபா 55., இலங்கையில்: ரூபா 203., அளவு: 18x12.5 சமீ.

திருக்கோணமலை மாவட்டத்தின் மல்லிகைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியரின் 21 படைப்புக்களைக் கொண்ட சிறுகதைத் தொகுதி இதுவாகும். வீரகேசரி, சுடரொளி, ஆதவன் ஆகிய பத்திரிகைகளிலும், கவிதை உறவு, ஞானம், சிறகுகள், வெளிச்சம் ஆகிய சிற்றேடுகளிலும் இக்கதைகள் பிரசுரமானவை. இவர் அவுஸ்திரேலியா தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப்போட்டியில் (2004) வெற்றியீட்டியவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3576

**ஒரு மரணமும் சில மனிதர்களும்.** *தாட்சாயிணி. (இயற்பெயர்: பிரேமினி சபாரத்தினம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600014:* B.V.R.Offset*).*

viii, *144 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 18x12 சமீ.*

*12 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. தலைப்புக் கதை 2004க்கான ஞானம் விருது பெற்றது. போர்க்கால வாழ்வில் இறந்த உறவுகளையே உரிமை கொண்டாட முடியாத அவல நிலையை இக்கதை சித்திரித்திருந்தது. யுத்த சூழ்நிலையில் வாழ்ந்து போர்க்கால நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து நாச யுத்த கொடூரங்களை இலக்கியமாக்கிவரும் ஈழத்து இளம் போரிலக்கியகர்த்தாக்களில் தாட்சாயணி முக்கியமானவராகக் கருதப்படுகின்றார். சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியாவார்.*

## 3577

**ஒரு விதை நெல்.** *மு.சிவலிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 4: ஸ்ரீ முருகன் ஓப்செட்).*

xiv, *242 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18x12.5 சமீ.*

*மலையகத் தமிழரின் சமூக வாழ்க்கையை ஆய்வுரீதியில் எடுத்துக்காட்டியிருக்கும் 15 சிறுகதைகள் இத்தொகுதியில் உள்ளன. சமூக அக்கறையுடன் கூடிய தன் கருத்துக்களை நையாண்டியாகவும் அறுதியிட்டும் துணிச்சலாக முன்வைப்பவர் மலையகம் தந்த படைப்பாளியான மு.சிவலிங்கம். இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இது. வீரகேசரியில் பத்திரிகை ஆசிரியராகத் தன் பணியை ஆரம்பித்த மு.சிவலிங்கம் பின்னர் தொழிற்சங்க, அரசியல் பத்திரிகை ஆசிரியராகவும், பாடசாலை ஆசிரியராகவும் பணியாற்றியவர். ஆங்கிலப் புலமைமிக்க இவர், அமரர் சி.வி.வேலுப்பிள்ளையின்* Born to Labour *என்ற நூலைத் தமிழாக்கியுமுள்ளார்.*



படிப்பகம்

www.padippakam.com



## 3578

**ஒரே ஒரு ஊரிலே.** சாந்தன். மானிப்பாய்: எஸ்.ஐயாத்துரை, அண்ணாமலை வீதி, சுதுமலை, 1வது பதிப்பு, ஒக்டோபர், 1975. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம், 14 C, பெர்ணான்டோ அவென்யு).

88 பக்கம், விலை: ரூபா 4., அளவு: 17.5x12.5 சமீ.

இத்தொகுதியில் பல்வகைப்பட்ட துறைகளின் அலைவீச்சுக்களைக் காணமுடிகின்றது. பொருளாதாரம், சமூகம், அரசியல், இலக்கியம், பாலுறவு, இனங்கள், தேசிய ஒருமைப்பாடு போன்றன கருப்பொருள்களாகியுள்ளன. தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இன உணர்வுகளுக்குமுள்ள வேற்றுமைகளும், அவற்றின் தோற்றக் காரணிகளும் காட்டப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள சுதுமலைக் கிராமத்தில் 1947ம் ஆண்டு பிறந்த சாந்தன், மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர்.

## 3579

**கங்கை மகள்.** லெ.முருகபூபதி. கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

xii, 139 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x15 சமீ., ISBN: 955-8250-39-2.

அவுஸ்திரேலியாவில், மெல்போர்ண் நகரில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர் லெ.முருகபூபதியின் ஐந்தாவது சிறுகதைத் தொகுதி. இதில் 14 கதைகள் உள்ளன. கங்கை மகள், கல்லும் சொல்லாதோ கதை ஆகிய இரண்டையும் தவிர எஞ்சிய 12 கதைகளும் அவுஸ்திரேலிய புலம்பெயர்வாழ்வியலின் தரிசனங்களாக உள்ளன. முருகபூபதியின் கதைகளில் அநேகமானவை மனித வாழ்க்கையின் அவலங்களை உயிர்ப்பாகச் சித்திரிக்கின்றன. மனதில் பட்டதைச் சொல்லிவிடவேண்டும் என்ற ஆதங்கம் இவரது கதைகளில் தொக்கி நிற்கின்றது.

## 3580

**கடுகு: குறுங்கதைத் தொகுதி.** சாந்தன். மானிப்பாய்: எஸ்.ஐயாத்துரை, அண்ணாமலை வீதி, சுதுமலை, 1வது பதிப்பு, 1975. (அச்சக விபரம் தரப்படவில்லை).



படிப்பகம்

www.padippakam.com



31 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14x11 சமீ.

கடுகு என்ற இச் சிறுநூல் தலைப்பிற்கேற்ப சிறிய அளவில், 25 குறுங்கதைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. எளிய "தந்தி" நடையில் அமைந்துள்ளபோதிலும் மிக நுணுக்கமாக இசைக்கப்பட்டுள்ள இக்கடுகுக் கதைகள் தரும் கனதியான சமுதாயப் பார்வையின் கோலங்களை ஜீரணித்துச் சுவைப்பதற்கு நீண்டநேரம் ஆகலாம். உதாரணத்துக்கு ஒன்று:

"மதில்கரையோட நிக்கிற பப்பாசி மரத்திலை, ஒரு பழமும் மிஞ்சுதில்லை"
"ஏன்?"
"ரோட்டுக்கு அந்தப்பக்கமிருக்கிற பட்டினிப் பட்டாளங்களெல்லாம், ஆக்களில்லாத நேரம் பார்த்து மதிலிலை ஏறி, எல்லாத்தையும் பிடுங்கிக்கொண்டு போகுதுகள்."
"அந்த மரத்தை வெட்டி விடுங்கோ. தொல்லை இல்லை"

## 3581

**கதம்ப வாசங்கள்.** புஷ்பராணி ஜோர்ஜ். ஜேர்மனி: திருமதி புஸ்பராணி ஜோர்ஜ், Goethe Str. 18a, 59065, Hamm, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (திருக்கோணமலை: ரெயின்போ அச்சகம்).

256 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் 1988இல் புலம்பெயர்ந்து ஜேர்மனில் வாழ்கின்றார். இவரது படைப்புக்கள் ஜேர்மன் மாத இதழ்களான பூவரசு, வண்ணத்துப் பூச்சி போன்றவற்றில் வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைகளும் நெடுங்கதைகளுமாக 10 படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எழுதாத கோலங்கள், பிரியாத உறவுகள், ஓயாத பயணங்கள், முடியாத தொடர்கள், சுதிசேரா சுரங்கள், ஒலிக்காத ஓசைகள், அழியாத சுவடுகள், சுவையா இலக்குகள், புரியாத சில நொடிகள், நிழலின் நிசங்கள் ஆகிய தலைப்புகளில் இவை அமைந்துள்ளன. மானிட வாழ்வில் புதையுண்டிருக்கும் பல்கூறுகளில் வினாக்கள் எழுப்பி அவற்றுக்கு விடைகாண முற்படும் கதைகள் இவை.

## 3582

**கதை முடியுமா?** க.தணிகாசலம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல.S44, 3வது மாடி,



படிப்பகம்

www.padippakam.com



CCSM Complex, இணை வெளியீடு, சென்னை 600002: சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1, தாயார் சாஹிபு இரண்டாவது சந்து, 1வது பதிப்பு, ஜூன் 1995. (சென்னை 41: சூர்யா அச்சகம்).

138 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18X12 சமீ.

பிரம்படி என்ற தொகுப்பை அடுத்து வெளிவந்துள்ள தணிகாசலத்தின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி. அன்றாட வாழ்வின் எளிமையான நிகழ்வுகள் மூலமும் அந்த நிகழ்வுகள் மனித மனங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களின் மூலமும் மிகவும் சிக்கலான ஒரு வாழ்க்கைச் சூழலைத் தெளிவுபடச் சித்திரிப்பது இவரது சிறுகதைகளின் சிறப்பம்சமாகும். இளம்பிராயத்துப் பிள்ளைகளையும் விடுதலைப்போராட்டத்தின் பால் ஈர்ப்பது என்ன என்பதையும் மனிதரது இறுகிப்போன சமுதாயப் பார்வையை இளக்கிப் புதிய திசைகளில் அதைச் செலுத்துவது எது என்பதையும் அரசியலில் அக்கறையேயில்லாது, தானுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழ்ந்தவர்களையும் விடுதலைப் போராட்ட அரசியலில் ஈடுபடுத்துவது எது என்பதையும் இத்தொகுப்பிலுள்ள தணிகாசலத்தின் கதைகளில் அடையாளம் காணலாம்.

## 3583

**கபளீகரம்.** நீ.பி.அருளானந்தன். வவுனியா: திருமகள் பதிப்பகம், இல. 144, 2ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

20, 160 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 190., அளவு: 22X14.5 சமீ.

மாற்றங்களை மறுப்பதற்கில்லை என்ற சிறுகதைத் தொகுதியையடுத்து, மேலும் 22 சிறுகதைகள் கொண்ட இரண்டாவது சிறுகதைத் தொகுதி இது. அனேக கதைகள் தற்கால வாழ்க்கைச் சித்திரங்களாக அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தை விட்டுக் கொழும்பில் வசிக்க வந்தவர்கள் தங்களுடைய பழைய இருப்பிடங்களை நாடிச் செல்லத் தவிப்பதையும், சிரமப்பட்டு சொந்தக் கிராமங்களைப் போய்ச் சேர்கின்றவர்கள் அங்கே காண்கின்ற சிதைவுகளையும் பாழ்மைகளையும் உள்ளம் வெதும்பி உள்வாங்கும் நிலைமையையும் இக்கதைகளில் எடுத்துக்காட்டுகின்றார்.

## 3584

**கன்னிகா தானங்கள்.** அருண் விஜயராணி. சென்னை 600005: தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி.கோயில் தெரு, N.K.T.பெண்கள் பள்ளி



படிப்பகம்

www.padippakam.com



எதிரில், திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, ஜுலை 1990. (சென்னை 5: ஸ்ரீ கோமதி அச்சகம்).

134 பக்கம், விலை: இந்திய ரூபா 17., அளவு: 18X12.5 சமீ.

1972ம் ஆண்டு **இந்து மாணவன்** என்ற பாடசாலை மலரில் **அவன் வரும்வரை** என்ற சிறுகதையினூடாக இலக்கியத்துறையில் கால் பதித்தவர் அருண் விஜயராணி. இலங்கை வானொலியில் 25 வாரங்கள் தொடர்ந்து ஒலிபரப்பப்பெற்ற விசாலாட்சிப் பாட்டி பேசுகின்றாள் என்ற நகைச்சுவைத் தொடர் இவரை வானொலிவழியே பிரபல்யமாக்கியது. தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழும் இந்த ஈழத்துப் பெண் எழுத்தாளரின் 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3585

**கன்னிப் பெண்.** நகுலன். (இயற்பெயர்: நா.க.தங்கரத்தினம்). சித்தன்கேணி: நகுலன் வெளியீடு, கலையகம், கலைநகர், 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், 10, பிரதான வீதி)

xvi, 148 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18X12.5 சமீ.

நூலாசிரியர் தான் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெறும்போது தொகுத்து வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். நமது சமூகத்தில் காணப்படும் குடி, சூது, சீதனம் முதலிய ஊழல்களைத் தனது சிறுகதைகளின் பிரச்சினை மையங்களாக்கியுள்ளார். அத்துடன் பெண்கள் தம் பாரம்பரியப் பண்புகளைப் பேணிப்பாதுகாத்து வருவதையும் தன் கதைகளின் ஊடாக சொல்லிச் செல்கின்றார். ஈழநாடு, வீரகேசரி, சுதந்திரன், தினகரன், கலைவாணி, விவேகி ஆகிய ஊடகங்களில் இவை வெளிவந்தன.

## 3586

**காலக் கீறல்கள்.** கனகசபை தேவகடாட்சம். திருக்கோணமலை: செல்வமாணிக்கம் பிரபாகரன், இலங்கை நிர்வாக சேவை, உதவிச் செயலாளர், பிரதம செயலாளர் பணிமனை, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஜுன் 1996. (திருக்கோணமலை: சங்கமம் பதிப்பகம்).

80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 17.5X12 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



மல்லிகைத் தீவைச் சேர்ந்த நூலாசிரியர் 1995 ஆடியில் மதில்மேல் என்ற சிறகதையினை தினமுரசு பத்திரிகையில் பிரசுரித்து எழுத்துலகில் பிரவேசித்தவர். இவர் எழுதிய 25 சின்னஞ்சிறு கதைகள் இத்தொகுப்பல் இடம்பெற்றள்ளன. இந்நூலின் விற்பனை வருவாய் விழிப்புலனற்ற மாணவரின் கல்விக்கான நிதியம் ஒன்றிற்கு வழங்கப்படுவதாகக் குறிப்பு ஒன்றுள்ளது.

## 3587

**காலங்கள்.** சாந்தன். யாழ்ப்பாணம்: வெண்புறா வெளியீடு, சுதுமலை, 1வது பதிப்பு, ஜனவரி 1994. (யாழ்ப்பாணம்: ரதீப் பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

56 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

செறிவும் கலை நேர்த்தியும் பயனும் நிரம்பிய இக்கதைத் தொகுதி, சுருக்கம், குறிப்புணர்த்தல் ஆகிய இரு பிரதான தனித்தன்மைகள் கொண்டவை. மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் சில பண்புக்கூறுகள் இந்தக் கதைகளில் உள்ளன. 15 சிறுகதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

## 3588

**காலத்தால் மறையாத கற்பக இதழ் சிறுகதைகள்.** த.சிவசுப்பிரமணியம். (புனைபெயர் தம்பு-சிவா). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 14: பி.வி.ஆர்.ஆப்செட்).

xx, 140 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12.5 சமீ.

இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவையின் வெளியீடாக 1970 நடுப்பகுதிகளிலிருந்து ஈழத்தின் சிறுசஞ்சிகையாக வெளிவந்திருந்த **கற்பகம்** இதழின் சிறப்பாசிரியராகப் பணியாற்றியவர் இத்தொகுப்பாசிரியர். யாழ்ப்பாணம் இணுவிலை பிறப்பிடமாகவும், திருக்கோணமலையை வதிவிடமாகவும் கொண்டவர். மூன்றே மூன்று இதழ்களே வெளிவந்திருந்த இச்சிற்றிலக்கிய ஏட்டில் வெளிவந்துள்ள 12 கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. செ.கணேசலிங்கன், நெல்லை க.பேரன், நீர்வை பொன்னையன், குப்பிளான் ஐ.சண்முகன், கே.டானியல், போர்வையூர் ஜிப்ரி, செ.கதிர்காமநாதன், எஸ். இராஜம் புஷ்பவனம், செ.கந்தசாமி, செ.யோகநாதன், த.சிவ-



படிப்பகம்

www.padippakam.com



சுப்பிரமணியம், தமிழக எழுத்தாளர் பிரகாஷ், ஆகியோரின் படைப்புக்கள் இதில் உள்ளடங்கியுள்ளன.

## 3589

**காற்றோடு போதல்.** சுதாராஜ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600014: பி.வி.ஆர்.ஆப்செட்).

vi, 146 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5X12..5 சமீ.

1970களில் எழுத்துலகிற்கு வந்தவர் சுதாராஜ். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், சிங்கள மொழிபெயர்ப்பு என பல நூல்களை வெளியிட்டவர். இவரது தமிழ்க் கதைகளின் மொழிபெயர்ப்புகள் ஆங்கிலம், சிங்களம், மற்றும் ரஷ்ய மொழிகளில் வெளிவந்துள்ளன. இலங்கை சாகித்திய மண்டல விருது பெற்றவர். 1995-2000 காலப்பகுதியில் எழுதப்பட்ட எட்டு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3590

**கிருஷ்ணன் தூது.** சாந்தன். பாளையங்கோட்டை 627 002: இலக்கியத் தேடல், 9, ரெயில்வே ஸ்டேஷன் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1982. (திருநெல்வேலி நகரம்: உமா அச்சகம்).

(14), 76 பக்கம், விலை: இந்திய ரூபா 6., அளவு: 19X13 சமீ.

1975இல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற ஐயாத்துரை சாந்தன் அவர்கள் 1965 முதல் எழுதத் தொடங்கியவர். இத்தொகுப்பில் இவர் எழுதிய 11 கதைகள் உள்ளன. இவை பொதுவான இரண்டு பிரிவுகளுக்குள் அடங்குகின்றன. தனிமனிதப் பிரச்சினைகள், அனுபவங்கள் பற்றிய கதைகள் என்றும், இலங்கையின் இன்றைய தலையாய பிரச்சினையான தமிழ், சிங்கள, இன மக்களிடையே நிலவுகின்ற இறுக்கத்தை உள்ளீடாகக் கொண்ட கதைகள் என்றும் இவ்விரு பிரிவுகளையும் வகைப்படுத்தலாம். நீக்கல்கள், புரிதல், கவலை, இழப்பு, இன்னும் உள்ள வண்ணங்கள், அடையாளம் ஆகிய கதைகள் முதல் பிரிவிலும், மனிதர்கள், மனங்கள், மானங்கள், தமிழன், 76இல் ஒரு விடுமுறை நாளில், கிருஷ்ணன் தூது ஆகிய கதைகள் இரண்டாவது பிரிவிலும் அடங்கியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3591

**குமார் மூர்த்தி கதைகள்.** குமார் மூர்த்தி. கனடா: காலம், த.பெ.எண் 7305, 509 சென் கிளையார் அவென்யு வெஸ்ட், ரொரன்டோ, ஒன்ராரியோ M6C 1CO, 1வது பதிப்பு, அக்டோபர் 2002. (சென்னை 600 006: அகம் அச்சகம்).

166 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 22x14 சமீ.

இனப்பிரச்சினை அரசியலின் அசுரப் பிடியில் சிக்குண்டு அல்லலுறும் ஈழத் தமிழர் வாழ்வின் அவலங்களையும் கோரங்களையும் தனிமனித – குடும்ப சமூகப் பின்புலங்களினூடாகவும் அவற்றின் உள்ளும் புறமுமான ஊடுபாவலின் மூலமாகவும் குமார் மூர்த்தி தம் படைப்புகளில் வெளிப்படுத்துகின்றார். இத்தொகுப்பிலுள்ள 27 படைப்புக்களில் 1995இல் வெளிவந்த குமார் மூர்த்தியின் **முகம் தேடும் மனிதன்** சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற 11 சிறுகதை-களும், அதன் பின்னர் பிரசுரமான இருகதைகளும், கையெழுத்துப் பிரதியாக இருந்த 12 கதைகளும் முற்றுப்பெறாத அவரது நாவலின் பக்கங்களும், தன்னைப்பற்றி அவர் எழுதிய **என்னைப்பற்றி** என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் குமார்மூர்த்தி அவர்களின் மறைவின் முதலாம் ஆண்டின் நினைவையொட்டி வெளிவருகின்றது.

## 3592

**குர்பான் செய்த கனவு: சிங்கள தமிழ் சிறுகதைத் தொகுப்பு.** நிலார் என். காசிம், அபு மிர்ஷான், அரோஷா சமரதிவாகர (மொழிபெயர்ப்பு), சித்திரலேகா மௌனகுரு, சுமிகா பெரேரா (தொகுப்பாசிரியர்கள்). நாவல: பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு, 20/1, 8வது ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 2003. (இரத்மலானை: நவமக அச்சகம், 66/4, தர்மாராம வீதி).

xii, 141 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 125., ISBN: 955 9078 04 6.

Women and Media Collective என்ற அமைப்பினால் இலங்கையின் இன ஒருமைப்பாட்டுக்கான இலக்கிய முயற்சியாக இத்தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையின் தமிழ் சிங்கள பெண் எழுத்தாளர்கள் பதின்மரின் கதைகளையும் அவற்றின் தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்புக்களையும் இத்தொகுதியில் தேர்ந்து தொகுத்-திருக்கிறார்கள். அஹமட் ஷம்சாத் பேகம், தாமரைச்செல்வி (ரதிதேவி கந்தசாமி), நந்தா பெரேரா, சே.விஜயலட்சுமி, வினிதா மானெல்



படிப்பகம்

www.padippakam.com



கமகே, ஹசீனா வஹாப், எட்னா மல்காந்தி, தயாநிதி, சுமீகா பெரேரா, வாசுகி குணரெத்தினம் ஆகியோரின் கதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன.

## 3593

**குருட்டு வெளிச்சம்.** திக்குவல்லை கமால். பேருவளை: பேசும் பேனா பேரணி வெளியீடு, 63, பள்ளி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1993. (பேருவளை: Quick Graphic Print, 26/6 மொஸ்க் ரோட்).

117 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12. சமீ.

தமிழகத்தில் வெளியான கோடையும் வரம்புகளை உடைக்கும் என்ற சிறுகதைத் தொகுப்பின் மூலம் ஈழத்து இலக்கிய வெளியீட்டு உலகில் தடம் பதித்த கமாலின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இது. இலங்கையில் மல்லிகை சஞ்சிகையைத் தனது இலக்கிய முகாமாக அடையாளம் காட்டி நிற்கும் கமாலின் படைப்புக்கள் மிக யதார்த்தமான முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டு மண் மணம் கமழும் வகையில் உருவானவை. இதிலுள்ள 16 கதைகளும் மனிதநேயத்தின் குரல்களாகவும் திகழ்கின்றன. மூன்றாவது பேசும் பேனா வெளியீடாக இது மலர்ந்துள்ளது.

## 3594

**குறளிக் குஞ்சன்.** விமல் குழந்தைவேல். அக்கரைப்பற்று 1: நிறம் வெளியீடு, இல. 270, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

179 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 19.5x14 சமீ.

லண்டனில் வாழும் ஈழத்து எழுத்தாளர் விமல் குழந்தைவேலின் ஆறாவது நூல் இது. மார்கழி 26இல் ஏற்பட்ட சுனாமிப்பேரலை அழிவினையடுத்து லண்டனிலிருந்து உதவிப்பொதிகளுடன் கிழக்கிலங்கைக்குச் சென்ற இவர் அங்கு தங்கிநின்று நிவாரணப்பணிகளில் உதவியிருந்தார். அவ்வேளையில் அவர் உள்வாங்கிய அழிவின் அகோரத்தையும், மானிடவாழ்வின் அவலத்தையும் இத்தொகுப்பிலுள்ள 11 சிறுகதைகளின் வாயிலாகப் பதிவுசெய்ய முனைந்துள்ளார். இருத்தலாய் ஓர் இல்லாதது, கல்லாய் மனிதராய், மிஸிஸ் மாட்டினின் நாய்க்குட்டி, குறளிக்குஞ்சன், அன்பு, முனிவராய்த் தேவராய், தடாகத் தவளைகள், தமிழ்த் தூண், அப்பாவின் அறை, பிறிதொரு துச்சாதனம், கடல் பேசுகிறது (நெடுங்கதை) ஆகிய



படிப்பகம்

www.padippakam.com



கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. கடல் பேசுகிறது கதையுடன் ஆழிப்பேரலை நிகழ்ந்து முடிந்த மண்ணின் சில காட்சிகள் வண்ணப்படங்களாகவும் பதியப்பெற்றுள்ளன.

## 3595

**கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும்.** செங்கை ஆழியான். (இயற்பெயர்: க. குணராசா). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

x, 144 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8250-19-8.

செங்கை ஆழியானின் 17 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. இது இவரது நான்காவது சிறுகதைத் தொகுதி. இச்சிறுகதைகள் சமகால வாழ்வின் அவல அம்சங்களைக் குறியீடாகக் கூறமுயல்கின்றன. மானிடர்களோடு அவர்கள் வாழும் சூழலில் காணும் உயிரினங்களும் சிறுகதைகளை நகர்த்திச் செல்கின்றன.

## 3596

**கொக்கிளாய் மாமி.** தி.ஞானசேகரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B – 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (கொழும்பு 6: பரணன் அசோஷியேட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 403, 1/1 காலி வீதி).

(6), 108 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

ஞானம் கலை இலக்கியப் பண்ணை ஏற்பாட்டில் 2005ம் ஆண்டுக்கான கலாபூஷணம் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற 12 சிறுகதைகளின் தொகுப்பு. முல்லைமணி வே.சுப்பிரமணியம், மாதுமை சிவசுப்பிரமணியம், டாக்டர் ச.முருகானந்தன், தம்பு-சிவா, புனிதகலா, நவஜோதி ஜோகரட்னம், மு.சந்திரகாந்தா, த.அஜந்தகுமார், தாட்சாயணி, டி.ஜனார்த்தனன், சிவனு மனோகரன், எஸ்.உதயச்செல்வன் ஆகிய எழுத்தாளர்களின் பரிசுபெற்ற சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எழுத்தாளர் பற்றிய சுருக்கக் குறிப்பும் ஒவ்வொரு கதைக்கு முன்னும் இடம்பெற்றுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3597

**கோடையும் வரம்புகளை உடைக்கும்.** திக்குவல்லை கமால். *சென்னை 6000098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1984. (சென்னை 600014: பாவை பிரின்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 142, ஜானி ஜான் கான் வீதி).*

xvi, *164 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 18X12.5 சமீ.*

தென்னிலங்கையின் திக்குவல்லை கிராமத்தைச் சேர்ந்த நூலாசிரியரின் இருபது சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. ஏற்றத்தாழ்வான சமூக அமைப்புக் கொண்ட சமுதாயத்தில் எல்லா மதத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்களும் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டும், சாதி, சமயச் சுமையால் நசுக்கப்பட்டும் வருகின்றனர் என்பதை சித்திரிக்கும் கதைகள். முஸ்லீம் சமூகத்துக்கும் இந்நிலை பொருந்தும் என்று கூறும் ஆசிரியர், மத பக்தியைப் பறைசாற்றும் பக்தி இலக்கியமே இஸ்லாமிய இலக்கியம் என்னும் போக்கை உடைத்தெறியும் வகையில் இக்கதைகளை வித்தியாசமான தளத்தில் உருவாக்கியுள்ளார். இன்றைய சமுதாய நிலையைப் பிரதிபலிக்கும் உயிர்த்துடிப்பான பாத்திரப்படைப்பின் வாயிலாக அவர்களது கலாச்சாரப் பாரம்பரியங்கள், அரபு, சிங்கள மொழி கலந்த பேச்சு வழக்கு என்பவை யதார்த்தபூர்வமாகக் கதையாக்கம் பெறுகின்றன.

## 3598

**சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள்.** செல்வக்குமார். *புத்தளம்: சிந்தியா வெளியீட்டகம், இல.22/17, முதலாம் ஒழுங்கை, கடுமையான்குளம், 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: சுமதி பிரின்டர்ஸ்).*

*146 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 18X12 சமீ.*

செல்வக்குமார் என்ற பெயரில் இலக்கிய உலகிலும், T.அன்ரன் என்ற பெயரில் பரவலாகவும் அறியப்பட்ட இந்த இலக்கியவாதி, செவ்வந்தி சஞ்சிகையில் 25.6.1975இல் வெளியான புதிய பாடம் என்ற சிறுகதையின் மூலம் இலக்கிய உலகில் காலடி பதித்தவர். இத்தொகுப்பில் இவரது 12 சிறுகதைகள் இடம்பெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3599

**சிவாவின் சிறுகதைகள்.** வண்ணை சே.சிவராஜா. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xv, 121 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 20.5x14 சமீ.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான வண்ணை சே.சிவராஜா சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது விஞ்ஞானப் பட்டப்படிப்பை முடித்தவர். ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 50களின் பிற்பகுதிகளில் எழுத்துத் துறையில் அறிமுகமானவர். பின்னாளில் யாழ் இலக்கிய வட்டத்திலும், இலங்கை இலக்கியப் பேரவையிலும் செயலாளராகப் பணியாற்றியவர். இவரது 16 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3600

**சிறை.** C.M.A.அமீன். திஹாரிய: ரேஷ்மா பதிப்பகம், 348/1 வரபலான ரோட், 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64N, பீர் ஸாஹிப் வீதி).

x, 76 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ., ISBN: 955-95661-4-8.

சிந்தாமணி வார இதழில் தன் படைப்புக்களை அறிமுகப்படுத்தியதன் வாயிலாக எழுத்துத் துறையுள் நுழைந்த அமீன், தான் எழுதிப் பிரசுரமான 25 உருவகக் கதைகளை இத்தொகுப்பில் தேர்ந்து வழங்கியுள்ளார். சடப்பொருள்களை வைத்தே உணர்ச்சிபூர்வமானதும் சுவாரஸ்யமானதுமான உருவகக் கதைகளை இத்தொகுப்பில் காணமுடிகின்றது.

## 3601

**சுணைக்கிது.** நிரூபா. (டென்மார்க்: வெளியீட்டக விபரமில்லை) 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (கொழும்பு 13: ஈகுவாலிற்றி கிரபிக்ஸ் லிமிட்டெட், 315 ஜம்பெட்டா வீதி).

132 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



ஒரு பழம் தப்பிச்சிண்ணு, போட்டு வாறன், சுணைக்கிது, பயந்தாங்கொள்ளி, கடுதாசிப்பூ, காதல், அடி அடியாய், கூட்டுக் கொலை, முதல் நாள், மழை ஏன் வந்தது, மாய மனிதன், யாருடைய பிள்ளை ஆகிய 12 சிறுகதைகளின் தொகுப்பு. நூலாசிரியர் பற்றிய பின்னணி விபரங்களை நூலில் காண முடியவில்லை.

## 3602

**செவத்த கமலம்.** கா.வேலாயுதன். புத்தளம்: சிந்தியா வெளியீட்டகம், இல. 22/17, முதலாம் ஒழுங்கை, கடுமையான்குளம் வீதி, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

xiv, 117 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x13 சமீ., ISBN: 955-97920-0-8.

நூலாசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. ஐம்பதுக்கும் மேலான சிறுகதைகளை எழுதிப் பிரசுரித்துள்ள இவரது தேர்ந்த பத்துச் சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. புத்தளம் சிந்தியா கலை இலக்கிய வட்டத்தின் தலைவராகப் பணியாற்றிய வேலாயுதன் புத்தளம் வேலாயுதன் என்ற பெயரிலும் தேசிய பத்திரிகைகளில் கதை, கவிதைகள் எழுதியுள்ளார்.

## 3603

**சொந்த மண்.** சு.இராஜநாயகன் (மூலம்), இ.பாரதி (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜுன் 2005. (கொழும்பு 13: ஈகுவாலிற்றி கிரப்பிக்ஸ், 315 ஜம்பெட்டா வீதி).

xvii, 94 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

ஓடமும் வண்டியும், சொந்த மண், பொத்தல், நாகதோஷம், யதார்த்தம், வேதனைச் சுடர், அவன், உலகக் கண்கள் ஆகிய 8 சிறுகதைகளும் காவியானான் ஒரு பாவி என்ற குறுநாவலும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. மறுமலர்ச்சிக் காலம் முதல் ஈழப்போராட்டக் காலம் வரையிலான ஒரு நீண்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட இக்கதைகள் வீரகேசரி, தினக்குரல், கலைச்செல்வி, ஈழகேசரி, மறுமலர்ச்சி ஆகிய இதழ்களில் வெளியானவை.



படிப்பகம்

www.padippakam.com



## 3604

**சொர்க்கங்களும் தண்டிக்கின்றன.** கல்லாறு சதீஷ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை 600014: பி.வி.ஆர். ஆப்செட்).

xx, 188 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18.5x12.5 சமீ.

சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர் கல்லாறு சதீஷ் அவர்களின் சிறுகதைகளின் தொகுப்பு. புகலிட வாழ்வில் தனக்குள் ஏற்படும் எண்ணச் சிதறல்களை, அந்த அகதி வாழ்வில் காணப்படும் அவலங்களை, அதிலிருந்து மீளும் பொழுது பெற்றுக்கொள்ளக்கூடிய அறுவடைகளைத் தனது கதைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

## 3605

**தகவம் பரிசுக் கதைகள் தொகுதி 2.** மாத்தளை கார்த்திகேசு (நூல் வெளியீட்டுக்குழு சார்பாக). யாழ்ப்பாணம்: தமிழ்க் கதைஞர் வட்டம், பழைய வீதி, கோப்பாய், 1வது பதிப்பு, நவம்பர் 1990. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேஷன்ஸ், 267, பிரதான வீதி).

(8), 176 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18x12.5 சமீ.

1979 முதல் 1982 வரையுள்ள காலப்பகுதியில் ஈழத்து ஊடகங்களில் பிரசுரமான சிறுகதைகளில் பரிசுக்கெனத் தேர்ந்த 12 கதைகளின் தொகுப்பு இது. இத்தொகுதியில் காவலூர் எஸ் ஜெகந்நாதன், கே.ஆர்.டேவிட், எம்.எல்.எம்.மன்சூர், மாத்தளை சோமு, வ.அ.இராசரத்தினம், எஸ்.முத்து குணரத்தினம், செங்கை ஆழியான், ரதி கந்தசாமி, வடகோவை வரதராஜன் ஆகியோரின் கதைகளும், இக்கதைகள் பற்றி கலாநிதி க.அருணாசலம் அவர்கள் எழுதிய பொதுவான மதிப்பீடும் இடம்பெற்றுள்ளன.

## 3606

**தரிசனம்.** நந்தி. (இயற்பெயர்: செ.சிவஞானசுந்தரம்). சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, மார்ச் 2002. (சென்னை 26: சிவா கிரப்பிக்ஸ்).

172 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



நந்தியின் எழுத்துக்களில் மேலும் சிறப்பாகக் கூறக்கூடியது அவரது சமூக விழிப்புணர்வு. சிறுகதைகள் மூலமாக ஈழத்தின் துன்பியலான அரசியல் நிலைமைகளையும் மக்களின் இன்னல்களையும் வெளிப்படுத்த முடிந்ததும் இவரது படைப்புக்களின் தனிச்சிறப்பாகும். நந்தியின் சிறுகதைகள் இன்று இலங்கையில் நடைபெறும் சங்கதிகளின் சரித்திரக் குறிப்புக்கள். கதை மாந்தர்கள் ஈழத்துத் தெருக்களில் நடமாடும் எத்தனையோவிதமான மனிதர்கள். ஒவ்வொரு கதையும் யாழ்ப்பாணத்தின் மண்வாசனையை நினைவுபடுத்துகின்றது. நந்தியின் 4வது சிறுகதைத் தொகுதி இதுவாகும்.

## 3607

**தரை மீன்கள்.** ச.முருகானந்தன். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு)

xv, 121 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21X14.5 சமீ., ISBN: 955-8250-24-4.

இலங்கையின் இனப்போராட்டத்தில் இரண்டறக் கலந்து விட்ட வன்னி மண்ணில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக ஆழக்கால்பதித்து நிற்கும் வைத்தியர் ச.முருகானந்தன் அவர்களின் 20 படைப்புக்களைக் கொண்ட சிறுகதைத் தொகுதி. மருந்துத் தட்டுப்பாடு, பொருளாதாரத் தடை ஆகியவற்றை எதிர்கொண்டு அவர் ஆற்றிய சமூகசேவைகளின்போது கண்டு, கேட்டு, அனுபவித்த விடயங்களை சிறுகதைகளாகத் தந்திருக்கின்றார்.

## 3608

**தனிச் சொத்து: குட்டிக்கதைகள்.** யோ.பெனடிக்ற்பாலன். கண்டி: கலாச்சாரக்குழு வெளியீடு, 170, கொழும்பு வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1975. (கண்டி: ரோயல் பிரின்டர்ஸ், 190, கொழும்பு வீதி).

42 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 21X14 சமீ.

ஆசிரியர் கடந்த 15 வருடங்களாக எழுதிவந்த 46 குட்டிக் கதைகளைக் கொண்ட தொகுப்பு இதுவாகும். பெரும்பாலான கதைகள் அரசியல் தத்துவார்த்த உள்ளடக்கங்களையே கொண்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3609

**தி.ஞானசேகரன் சிறுகதைகள்.** தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுன் 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

xxxii, 276 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 955-8354-12-0.

தி.ஞானசேகரனின் முதலாவது சிறுகதை 1964இல் கலைச்செல்வியில் வெளிவந்த **பிழைப்பு** என்ற கதையாகும். அதைத் தொடர்ந்து நான்கு தசாப்த காலமாக எழுதிவரும் ஞானசேகரன் கடந்த பல வருடங்களாக **ஞானம்** என்ற கலை இலக்கிய மாசிகையொன்றினையும் வெளியிட்டு வருகின்றார். தற்போது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பாடநூலாக வைக்கப்பட்டுள்ள அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் என்ற சிறுகதைத் தொகுதியிலுள்ள 12 கதைகளை உள்ளடக்கிய முப்பது சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும்.

## 3610

**திருப்பம்.** ஜோசப் பாலா. யாழ்ப்பாணம்: ஜோசப் பாலா, நான் வெளியீடு, 12, சென் பற்றிக்ஸ் வீதி, 1வது பதிப்பு, வைகாசி, 1990. (யாழ்ப்பாணம்: மணி ஓசை பிரிண்டர்ஸ், 12, சென். பட்ரிக்ஸ் வீதி).

(8), 68 பக்கம், விலை: சாதாரண பதிப்பு, ரூபா 20., நூலகப் பதிப்பு, ரூபா 25, அளவு: 17.5x12 சமீ.

இத்தொகுப்பில் 9 சிறுகதைகள் இடம்பிடித்துள்ளன. எழுத்தாளர் ஜோசப் பாலா "நான்" உளவியல் மஞ்சரியின் ஆசிரியர் குழுவில் இயங்கியவர். இவரது படைப்புக்கள் அன்றாட வாழ்வில் அவதானித்த நிகழ்வுகளை, அவை உணர்த்தும் உண்மைகளை, அதனால் சமூகத்தில் ஏற்படும் சமவலுத் தாக்கங்களை பகைப்புலமாகக் கொண்டவை. நான் வெளியீட்டுத் தொடரில் 16வது நூல் இதுவாகும்.

## 3611

**தூரத்துக் கோடை இடிகள்.** சி.மாதுமை. கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).



படிப்பகம்

www.padippakam.com



xiv, 98 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ.

திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரி பழைய மாணவியான இந்நூலாசிரியர் மாதுமை சிவசுப்பிரமணியம் திருக்கோணமலையைப் புகலிடமாகக் கொண்டவர். பள்ளிமாணவியாக இருந்தபோதே சிறுகதைகள் எழுதிப் பலரின் கவனத்தை ஈர்த்தவர். திருக்கோண-மலையில் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணத்தை மறக்காது அங்குள்ள மக்கள் பேசும் மொழியிலேயே அங்கு வாழ்ந்துவரும் மக்களின் இன்ப துன்பங்களைக் கதைகளாக வரைந்துள்ளார். இவர் எழுதிய 15 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்கொண்டுள்ளன. முதுமை, தனிமை, அநாதரவு, சூழல் இணக்கமாக அமையாமை, மத்தியதர மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள், இனவேறுபாடுகளுக்கு அப்பால் காணும் மனித உறவுகளின் உன்னதம், புலம்பெயர் தமிழரின் நடத்தைக் கோளாறு, ஏமாற்றுக்கள், திருக்கோணமலையில் குடியேறிய அகதிகளின் அந்தரங்கங்கள், கணநேரக் காதலை வெளிப்படுத்த முடியாத அங்கலாய்ப்பு என்பன போன்ற பல நிகழ்ச்சிகளை வாசகர்களின் கவனஈர்ப்பைப் பெறும்வகையில் இக்கதைகளின் வாயிலாகத் தந்துள்ளார்.

## 3612

**தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள்.** தேவன் (மூலம்), க.குணராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, மே 2004. (Jaffna: Boasco Artone Printers, Nallur).

107 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

ஈழத்தின் மூத்த படைப்பாளிகளுள் ஒருவர் இளையப்பா மகாதேவா என்ற தேவன் யாழ்ப்பாணம் ஆவார். 27.09.1924இல் பிறந்த தேவன், தனது எழுத்துலக வாழ்க்கையை 1944இல் ஆரம்பித்து 1982 வரை தொடர்ந்தார். நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், நாடகாசிரியர், நாடக இயக்குநர், பேச்சாளர் என்று பல்பரிமாணங்களில் அவர் வாழ்ந்தவர். வாடிய மலர்கள், கேட்டதும் நடந்ததும் என்பன அவரது நாவல்கள். அவன் சுற்றவாளி அவரது குறுநாவல். மணிபல்லவம் அவரது மொழிபெயர்ப்பு நூல். தென்னவன் பிரமராயன் அவரது நாடகநூல். புட்டபர்த்தியில் நான் என்ற நூல் தேவனின் ஆத்மீக அனுபவங்களின் பிழிவு. அவரது மொழி நடை எளிமையானது, அர்த்தம் செறிந்தது. 1963இல் இலங்கை எழுத்தாளர் சங்கத்தினை உருவாக்கியதில் அவருக்குரிய



படிப்பகம்

www.padippakam.com



பங்கு அதிகம். தேவன் யாழ்ப்பாணத்தின் 10 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பிடித்திருக்கின்றன.

## 3613

**தொட்டுவிடும் தூரத்தில்.** றகுமான் ஏ ஜபார். மருதமுனை: றகுமான் ஏ ஜபார், Jarsfaham, 203A/1, Hijra Road, 1வது பதிப்பு, 1992. (மருதமுனை: முனைப்பு வெளியீடு, பிரதான வீதி).

(6), 82 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17X12.5 சமீ.

1982-85ம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்த இவர் 1979இல் தினகரனில் வெளிவந்த ஏன் படைத்தான் கவிதை மூலம் எழுத்துலகில் நுழைந்தவர். முனைப்பு சஞ்சிகையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் எழுதித் தினகரனில் பிரசுரமான ஏழு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3614

**தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்.** அ.யேசுராசா. சென்னை 600 014: பூரணி வெளியீட்டகத்தினருடன் இணைந்து, க்ரியா, 268 ராயப்பேட்டை நெடுஞ்சாலை, 2வது பதிப்பு, மார்கழி 1989, 1வது பதிப்பு, மார்கழி 1974. (சென்னை 600 020: இராசகிளி பிரின்டர்ஸ்).

62 பக்கம், விலை: இந்திய ரூபா 8., அளவு: 18X12.5 சமீ.

யாழ்ப்பாணக் கடலோரக் கிராமமான குருநகரில் 1946 மார்கழியில் பிறந்த அத்தனாஸ் யேசுராசா, அஞ்சலதிபர், தந்தியாளர் சேவையில் இணைந்து கடமையாற்றி, இருபது ஆண்டுகளின் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார். 1969இல் புதுக்கவிதை முயற்சியுடன் இலக்கிய உலகிற்கு அறிமுகமானதிலிருந்து தொடர்ந்து எழுதிவருகின்றார். கலைப்பிரக்ஞை கொண்ட நவீனத் திரைப்படங்களில் மிக்க ஈடுபாடு கொண்டுள்ள இவர், 1979-81 வரை இயங்கிய யாழ். திரைப்பட வட்டத்தை உருவாக்கிய சிலருள் ஒருவர். அலை சஞ்சிகை, திசை வார இதழ், ஆகியவற்றின் ஆசிரிய பீடத்திலும், அலை வெளியீடு, தமிழியல் ஆகிய அமைப்புகளின் முக்கிய பொறுப்புக்களிலும் பணியாற்றியவர். இந்தச் சிறுகதைத் தொகுதியின் 1வது பதிப்பு யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தின் வாயிலாக 1974இல் வெளிவந்தது.



படிப்பகம்

www.padippakam.com



## 3615

**நல்லதோர் வீணை செய்தே.** S.நஸீறுதீன். சாய்ந்தமருது: கலை இலக்கிய வட்டம், 542, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (சாய்ந்தமருது: ஸ்டார் ஓப்செற் பிரின்டர்ஸ், பிரதான வீதி).

xv, 100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5X14 சமீ.

இச் சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரியான இவரால் அவ்வப்போது தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதப்பட்ட பதினொரு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கிழக்கின் மண்வாசனை செறிந்த சிறுகதைகள் இவை.

## 3616

**நல்லவன்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, மே 2004. (சென்னை: சிவம்ஸ்).

200 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18X12 சமீ.

அவ்வப்போது ஆங்காங்கே கண்டு கேட்ட மறக்கமுடியாத சம்பவங்களைத் தன் மனோதர்மத்திற்கு இசைந்தவாறு செப்பனிட்டு 23 சிறுகதைகளாகப் படைத்துள்ளார். இரண்டு கதைகள் தவிர்ந்த பிற கதைகள் சரஸ்வதி, தினகரன், தாமரை, புதுமை இலக்கியம் முதலிய இதழ்களில் 1951 முதல் 1959ம் ஆண்டுக் காலங்கள் வரை வெளிவந்தவை. டாக்டர் மு.வ., சிதம்பர ரகுநாதன், வல்லிக்கண்ணன் ஆகியோர் எழுதிய கருத்துரைகளும் நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

## 3617

**நாளையைத் தேடும் மனிதர்கள்.** திருமலை சுந்தா. திருக்கோணமலை: அம்மா பதிப்பகம், 172, பிரதான வீதி, 1வது பதிப்பு, தை 1999. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம்).

(10), 98 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21X15 சமீ.

ஈழத்தில், குறிப்பாகத் திருக்கோணமலை மண்ணில் குறிப்பிடத்தக்க-தொரு சிறுகதை எழுத்தாளராக விளங்குபவர் திருமலை சுந்தா. திருக்கோணமலையிலிருந்து வெளிவந்த சிவநெறி என்ற சமயம் சார்ந்த



படிப்பகம்

www.padippakam.com



சஞ்சிகையில் இவர் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். சைவ சமயத்தை மையமாக வைத்துத் தன் எண்ணங்களைத் தன் பாத்திரங்களினூடாக உணர்வுபூர்வமாக இக்கதைகளில் எடுத்துச் சொல்கிறார். இதிலுள்ள 11 கதைகளும் இந்துத்துவம் சார்ந்த ஒழுக்கவியலைப் போதிக்கும் கதைக் கருக்களையும், பாத்திர வார்ப்புகளையும் சம்பவக் கோவைகளையும் கொண்டுள்ளன.

## 3618

**நிறைநிலா.** இ.நாகராஜன். யாழ்ப்பாணம்: கு.ராதாரமணன், ராதாரமணன் வெளியீடு, 47, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1965. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(12), 192 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18X12 சமீ.

ஈழகேசரி வளர்த்துத் தந்த ஈழத்தின் சிறுகதைப் படைப்பாளர்களுள் நன்கு அறியப்பட்டவரான இ.நாகராஜனின் 14 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. இது இவரது முதலாவது நூலாகவும் அமைகின்றது. ஈழ-கேசரியிலும், தமிழினியிலும் பணிபுரிந்துள்ள இவர் பின்னாளில் சுன்னாகம் வடஇலங்கை தமிழ்நூற் பதிப்பகத்திலும் பணியாற்றி-யுள்ளார்.

## 3619

**நினைந்தழுதல்.** ஓட்டமாவடி S.H.அறபாத். வாழைச்சேனை: இஸ்லாமிய நூல்நிலையம், M.P.C.S.Road, Mavadichenai, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (Colombo 10: M.H.Thahir Printers, B-2, Small Mosque Shopping Complex, 20, Symonds Road, Maradana).

xii,78 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21.5X14 சமீ., ISBN: 955-96317-3-x.

"எரிநெருப்பிலிருந்து" என்ற கவிதைத் தொகுப்பையடுத்து வெளிவரும் நூலாசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இத்தொகுப்பில் முக்கிய அம்சம் யாதெனில் பிரமை, உம்மா வரப்போறா, அவனும் மனிதன் தான் ஆகிய சில கதைகளைத் தவிர எஞ்சியவை அனைத்தும் போர்க்காலச் சூழலைப் பின்னணியாகக் கொண்டவை. குறிப்பாக, அறபாத்தின் கதைகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஓட்டமாவடிப் பகுதியைச் சேர்ந்த முஸ்லீம் தமிழ் மக்களின் பின்புலத்தை ஆதாரமாகக் கொண்டவையாகும்.



படிப்பகம்

www.padippakam.com



**3620**

**நிஜங்களின் வலி.** *மு.பஷீர். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, 1வது பதிப்பு, மே 2005. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், நாவின்ன).*

xvi, *90 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 21.5x14 சமீ.*

*மீறல்கள், தலைமுறை இடைவெளி ஆகிய இரு தொகுதிகளையடுத்து மூன்றாவது தொகுதியுடன் அறிமுகமாகும் மினுவாங்கொடையைச் சேர்ந்த கலாபூஷணம் மு.பஷீர் அவர்களின் பன்னிரு சிறுகதைகளின் தொகுப்பு இது. மொழிவளம், விபரிக்கும் ஆற்றல், பிறர் அதிகம் தேர்ந்தெடுக்காத பாத்திரங்கள், சமூக விமர்சனம், யதார்த்தச் சித்திரிப்பு, மனித நேயம் ஆகிய பண்புகள் இச்சிறுகதைகளின் சிறப்பம்சமாகின்றன. தலைப்புக் கதையான நிஜங்களின் வலி, மலையாளத் தமிழில் சரளமாக எழுதப்பட்டுள்ளது. நடைச்சித்திரப்பாணியில் அமைந்த மைமுன் ஆச்சி, தற்கொலையாளனாக செல்லவேண்டியவன் தனது முடிவை மாற்றிக் கொள்வதாக அமையும் கதை. மீரா பதிப்பகத்தின் 55வது வெளியீடாக மலர்ந்துள்ளது.*

**3621**

**நெடுங் காலத்தின் பின்னொரு நாள்.** *பி.ரவிவர்மன் (இயற்பெயர்: பரமக்குட்டி மகேந்திரராஜா). தெகிவளை: நிகரி, 24, 6/9 இனிசியம் ரோட், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).*

xii, *96 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x15 சமீ.*

*கிழக்கில், மட்டக்களப்பின் ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ரவிவர்மன். இவர் ஒரு பத்திரிகையாளரும் கூட. 1983க்குப் பின்னான வடக்குக் கிழக்கு தமிழ் சமூகத்தின் அரசியல், அதனால் ஏற்பட்ட அவலங்கள், எதிர்கொண்ட நிகழ்வுகள், போர்க்கால வாழ்வு என்பனவெல்லாம் இவரது படைப்பிலக்கியத்திற்கான கருவாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. படைப்பிலக்கியம் வரலாறாகப் பதிவுபெற வேண்டும். மானுட விழிப்புக்கு உந்துசக்தியாக அது மாறவேண்டுமென்ற சிந்தனை கொண்டவர் இவர்.*

**3622**

**பரிசுபெற்ற புதினம் சிறுகதைகள்.** *ஈ.கே.ராஜகோபால். (தொகுப்பாசிரியர்). லண்டன்* SW17 7EZ: *புதினம் வெளியீடு,* 38, Moffat



படிப்பகம்

www.padippakam.com



Road, 1வது பதிப்பு, மே 2006. (Chennai 600094: Scripts Offset).

viii, 284 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

லண்டனில் மாதம் இருமுறை வெளிவரும் புதினம் பத்திரிகையின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உலகளாவியரீதியில் ஏற்பாடுசெய்யப்பட்ட லட்ச ரூபாய் சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற சிறுகதைகளின் தொகுப்பு. கிடைக்கப்பெற்ற 252 கதைகளில் 22 கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. முதற்பரிசு க.செபரத்தினம் (கனடா), 2ம் பரிசு மாதுசிவா (சுவிஸ்), மூன்றாம் பரிசு தாட்சாயணி (சாவகச்சேரி), ஆறுதல் பரிசுகள்: சிவசுப்பிரமணியம் (கொழும்பு), ஏ.நஸ்புள்ளாஹ் (கிண்ணியா), வி.தில்லைநாதன் (திருக்கோணமலை), எஸ்.ராமேஸ்-வரன் (கொழும்பு), வி.எஸ்குமார் (லண்டன்), சிவனு மனோகரன் (ஹட்டன்), வாலம்பாள் கோபாலகிருஷ்ணன் (தமிழ்நாடு), மணிவாசகன் (லண்டன்), எஸ்.உதயச்செல்வன் (நீர்கொழும்பு), எம்.சிவலிங்கம் (கொட்டகல), மாலினி அரவிந்தன் (கனடா), பி.செல்வராஜ் (தமிழ்நாடு), மாரி மகேந்திரன் (பொகவந்தலாவ), கே.வேணி (ஜேர்மனி), எஸ்.ராகவன் (கரவெட்டி), கே.பாலசுப்பிர-மணியம் (லண்டன்), இளைய அப்துல்லாஹ் (வத்தளை), துளசி பாக்கியவதி (பாண்டிச்சேரி), எஸ்.குணரத்தினம் (மட்டக்களப்பு) ஆகியோரின் பரிசுச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

## 3623

**பார்வை.** சாந்தன். தெல்லிப்பழை: யாழ். இலக்கிய நண்பர் கழகம், மாவிட்டபுரம், 1வது பதிப்பு, சித்திரை, 1970. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 54 பக்கம், விலை: 50 சதம்., அளவு: 18.5x12.5 சமீ.

மனிதருடைய உள்ளத்து நெகிழ்ச்சிகளை, கிளர்ச்சிகளை வைத்து எழுதுவதைத் தன் பலமாகக் கொண்டிருக்கும் சாந்தனின் ஆறாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். பார்வை (1966), அப்பா பாவம், தொலைவு, மனிதன் (1967), ஓ இந்த, ஒருநாள் (1968), ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன. இவை கலைச்செல்வி, விவேகி, கதம்பம் ஆகிய இதழ்களில் வெளிவந்தவை.



படிப்பகம்

www.padippakam.com



**3624**

**பிரார்த்தனை.** M.I.M.முஸம்மில். அக்கரைப்பற்று: பிறைப்பண்ணை, 1வது பதிப்பு, நவம்பர் 1988. (சென்னை 600034: Arrow Prints, 20 Village Road, Nungampakkam).

88 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18X12.5 சமீ.

கிழக்கிலங்கை மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர் இச்சிறுகதைத் தொகுப்பில் பதினொரு கதைகளைத் தந்துள்ளார். இக்கதைகளில் இவர் வாழும் சூழலின் தாக்கத்தைக் காணமுடிகின்றது. பேச்சு வழக்குகள், கதைகளைக் கோவைப்படுத்தியுள்ள முறைகள் என்பன யதார்த்தமாக உள்ளன. ஈழத்து முஸ்லீம்களின் வாழ்க்கை முறைகளை தத்ரூபமாகப் படம்பிடித்துக்காட்டும் சிறப்பு இக்கதைகளுக்கு உண்டு.

**3625**

**புதிய பயணம்.** புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். புலோலி: புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், மீரா அகம், புற்றளை, 1வது பதிப்பு, வைகாசி 1996. (Colombo 6: Print Graphics, 4 Nelson Place)

xvi, 104 பக்கம், விலை: ரூபா 95., அளவு: 20X13.5 சமீ.

இத்தொகுதியிலுள்ள சிறுகதைகளைப் பொறுத்தமட்டில் சமகால இருப்பைச் சித்திரிக்கும் ஒரு கருவூலமாகவே வாழ்வின் அனுபவம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான கதைகளில் அவரேதான் அந்தக் கதாபாத்திரமாக மிளிர்கிறார். அந்த நிகழ்வின் பாதிப்பிலிருந்து – ஆக்கிரமிப்பிலிருந்து அவரால் அவரை விலக்கிவிட்டு, இன்னொரு நபரைப் பாத்திரமாக்கி உலவவிட அவராலேயே முடியாமல் போகின்றது. இவரது கதாமாந்தர்கள் மத்தியதர வர்க்கம் சார்ந்தவர்கள். அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஆண்-பெண்கள். இந்தச் சமூகத்தின் அம்சமாகத் திகழும் தன்னையொத்தவர்கள். தன்னுடன் பழகியவர்கள், சக உத்தியோகத்-தர்கள் - அவர்களுடனான தனது அனுபவங்கள் முரண்பாடுகள், ஏற்-படுத்திக்கொண்ட உறவுகள் ஆகியவையே இங்குள்ள 11 சிறுகதைகளுக்கும் வடிவம் கொடுத்துள்ளன.

**3626**

**புதிய பாதை.** திக்குவல்லை கமால். திக்குவல்லை: பேசும்பேனா வெளியீடு, 5-1/20 Super Market, Kotahena, 1வது பதிப்பு, மே 1997.



படிப்பகம்

www.padippakam.com



(Colombo 13: Quick Graphics Print, 5-1/20 Super Market, Kotahena)

*x, 68 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18x13 சமீ.,* ISBN: *955-95926-1-0.*

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையின் சலுகையுடன் அச்சாகி வெளிவந்துள்ள இச் சிறுகதைத் தொகுப்பில் எதிர்வீடு, விடிவை நோக்கி, மன்னிப்பு, விருந்து, புதிய பாதை, /பர்தா, பெற்றமனம், கதவுகள், ஒருநாள் நகர்ந்தது, நாற்பது நாள், அற்புதங்கள் ஆயிரம் ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் கதைகள் அனைத்தும் 1995ம் ஆண்டில் எழுதப்பட்டவை.

## 3627

**புதிய வார்ப்புகள்.** பத்மா சோமகாந்தன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 79, முதலாவது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, ஜுலை 1996. (சென்னை 600014: சித்ரா பிரின்ட்டோகிராப்பி).

*112 பக்கம், விலை: இந்திய ரூபா 22., அளவு: 17.5x12.5 சமீ.*

கல்வித்துறையில் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற இந்நூலாசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இந்நூல் தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி ஞாபகார்த்தமாக வழங்கப்படும் சிறந்த சிறுகதை நூலுக்கான பரிசு பெற்றதுடன் தென்னாசிய பிராந்திய அமைப்புப் பிரிவினரின் இலங்கைக் கிளையினரால் பெண் எழுத்தாளர்களின் சிறந்த ஆக்க இலக்கிய நூலாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று விருது பெற்றது. பெண்ணின் குரல் என்ற பெயரில் கொழும்பிலிருந்து வெளிவரும் பெண்ணியம் சார்ந்த சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றிவரும் பத்மா சோமகாந்தனிடமுள்ள பெண்ணியம் சார்ந்த முற்போக்குக் கருத்துக்கள் இக்கதைகளில் வெளிப்படுகின்றன. பெண்களின், குழந்தைகளின் மெல்லுணர்வுகளை, ஞானங்களை, எதிர்கொள்ளும் துன்பங்களை, பாகுபாடுகளைக் கூறி மனித உரிமை, மானிட நேயம், மனிதாபிமானம், ஆகியவற்றை மறைமுகமாகத் தட்டிக்கேட்பவையாக அமைந்த இதில் உள்ள 11 சிறுகதைகளும் 1995-96 காலகட்டத்தில் வீரகேசரி, தினகரன், தினத்தந்தி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை.



படிப்பகம்

www.padippakam.com



**3628**

**புலம் பெயர்ந்த பூக்கள்: சிறுகதைத் தொகுதி.** க.ஸ்ரீகந்தராஜா (தொகுப்பாசிரியர்). அவுஸ்திரேலியா: விக்ரோரிய இலங்கைத் தமிழ்ச் சங்கம், த.பெ.எண். 103, Glenhuntley, Victoria, 3163, 1வது பதிப்பு, மே 1996. (வெளியிட்ட இடம் தரப்படவில்லை:Limat Publishing).

(10), 162 பக்கம், விலை: அவுஸ்திரேலிய டொலர் 5., அளவு: 20.5x15 சமீ.

அவுஸ்திரேலியாவின் விக்ரோரிய இலங்கைத் தமிழ்ச் சங்கம் வெளியிடும் முதலாவது சிறுகதைத் தொகுதி. அளவெட்டி ஸ்ரீஸ்கந்தராசா, புவனா இராஜரட்ணம், ஸ்ரீசிவகௌரி, துரைசாமி சுப்பிரமணியம், பரமேஸ்வரி பாலசிங்கம், எஸ்.ராமேஸ்வரன், கலாவதி விக்னேஸ்வரன், கிரிஸ்டியன் கிரகரி, இளைய அப்துல்லாஹ், சீ.துரைசிங்கம், எஸ்.சக்தி, ஆர்.தியாகலிங்கம், அனுராதா பாக்கியராஜா, கே.கோபாலபிள்ளை, செ.குணரத்தினம், தமிழினி, ஆரையம்பதி யோகேந்திரன், மகாத்மசீலன் ஆகிய எழுத்தாளர்களின் 20 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்ற சிறகதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய-வர்களின் கதைகள் இவை.

**3629**

**பெற்ற மனம்.** ஜின்னாஹ் (இயற்பெயர்: ஏ. ஜின்னாஹ் ஷரிபுத்தீன்). தெகிவளை: அன்னை வெளியீட்டகம், 16 ஸ்கூல் அவென்யு, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).

xii, 214 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955 96932 1 2.

கவிஞராக மட்டுமின்றி ஈழத்து இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதை-யாளராகவும் விளங்கும் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களின் 21 சிறுகதைகள் இங்கு இடம்பெறுகின்றன. இஸ்லாமிய சமூக விழுமியங்கள் பல சிறுகதைகளின் ஊடுபாவாக உள்ளன. இதிலுள்ள "பெண் உரிமை" என்ற கதை, முஸ்லிம்களிடம் உள்ள பலதார திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. "ஒன்றும் ஒன்றும் ஒன்று" என்ற கதை திருமண சுகத்தை அதிகம் விரும்புகின்ற ஆண் இன்னொரு திருமணம் முடிப்பதை அங்கீகரிக்கின்ற மனைவியின் மனப்பாங்கை எடுத்துக் கூறுகின்றது. "நாமிருவர் நமக்கிருவர்" என்ற கதை, கருச்சிதைவை இஸ்லாம் அங்கீகரிக்காமையை குறிப்பிடுகின்-



படிப்பகம்

www.padippakam.com



றது. "உண்ணா நோன்பு" இஸ்லாமிய மத விழுமியங்களை ஆணித்தரமாகப் பதியவைக்கின்றது. "தவறுகள் தூண்டப்படுகின்றன" என்ற கதை முஸ்லீம் பெண்கள் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதில் உள்ள பிரச்சினைகளைச் சித்திரிக்கிறது.

### 3630

**மண் வாசனை.** சு.வே. (இயற்பெயர்: சு.வேலுப்பிள்ளை). சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001, (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

*184 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12.5 சமீ., ISBN: 1-876626-14-3*

மண்வாசனை, வெறி, கிழவனும் வத்தகைக் கொடிகளும், பாரிசவாதம், பூ, பாற்காவடி, அக்கினி, ஸ்ட்ரைக், புகை, தகிப்பு, தெய்வம், பெரியம்மா ஆகிய 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. சு.வே. சிறுகதை ஆசிரியர்களில் தனித்துவமானவர். பண்டிதமணி வழி யாழ்ப்பாண மண்ணிலே விளைந்த செழுமைத் தமிழைப் படைப்பிலக்கியத்தில் புகுத்திய மூலவர். பண்டித வர்க்கத்தினரைப் படைப்பிலக்கியவாதிகளாக அங்கீகாரம் பெறச் செய்த முன்னோடியும் இவராவார். மூதறிஞர் ராஜாஜி அவர்களால் உருவகக் கதைக் கலையின் பிதாமகர் என்று வாழ்த்தப்பட்டவர். இந்நூலின் முதலாவது பதிப்பு நாவற்குழி, அன்னை வெளியீடாக, 1972 இல் வெளிவந்துள்ளது.

### 3631

**மனத்தூறல்: சிறுகதைத் தொகுதி.** ந.பார்த்திபன். கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/13 பூரணவத்தை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999. (கண்டி: Green Leaf Print House, 85, கட்டுகஸ்தொட்ட வீதி).

*128 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x13 சமீ.*

1989இல் தினகரன் வாரமலரில் எழுதிய தங்க விலங்கு என்ற சிறுகதையின் மூலம் எழுத்துத் துறையில் நுழைந்தவர் பேராதனைப் பல்கலைக்கழக கலைத்துறைப் பட்டதாரியான ந.பார்த்திபன். சிறுகதை, கவிதை, விமர்சனம், தொடர்கதை, கட்டுரை என ஏராளமாக எழுதிவரும் இவர் கண்டி கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றியவர். இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள



படிப்பகம்

www.padippakam.com



இவரது 11 சிறுகதைகளும் சமுதாயத்தில் இயல்பாகவே காணத்தக்க பல்வேறு மாந்தர்களை பாத்திரங்களாக உலவவிடுகின்றன.

### 3632

**மனுஷியம்.** மல்லிகை சி.குமார். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7, பல்கூட்டுத் தொகுதி, ரொசிட்டா கடைவீதி, 1வது பதிப்பு, மே 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 102 பக்கம், விலை: ரூபா 130, அளவு: 19x14 சமீ., ISBN: 955-8589-00-4.

தேயிலைக் காடுகளும் மலை முகடுகளுமே மல்லிகை சி.குமாரின் உலகம். அந்த உலகத்து மனிதர்களைப் பற்றிய யதார்த்தங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருபவையே இவரது கதைகளாகின்றன. இலங்கையின் மலையக வாழ்வியலைத் தன் படைப்புக்களால் சிறப்பாகச் சித்திரிக்கும் இவர் மாடும் வீடும் என்ற கவிதைத் தொகுதியின் ஆசிரியருமாவார். சாரல் வெளியீட்டகத்தின் மூன்றாவது வெளியீடான இந்நூலில், இவரது 13 சிறுகதைகள் அடங்கியுள்ளன.

### 3633

**மாறாத மனங்கள்.** தி.உதயசூரியன். சுழிபுரம்: தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய வாசகர் வட்ட வெளியீடு, தொல்புரம் கிழக்கு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1994. (கொக்குவில்: பராசக்தி அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(12), 72 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

அரச தட்டெழுத்தாளரான திருநாவுக்கரசு உதயசூரியனின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. இதிலுள்ள 10 கதைகளிலும் புலம்பெயர்ந்து வெளிநாடு செல்லும் பிள்ளைகளின் பெற்றோர் கிராமங்களில் வாடுவதும், முதியோர் முறையான பராமரிப்பின்றி உடற்பிணியாலும், பாசப் பிணைப்பாலும் அல்லலுறுவதும், இடம்பெயர்ந்த மக்களின் அல்லல்களும், இராணுவ அழிவுகளால் துன்புறுவதும் யதார்த்தமாகச் சித்திரிக்கப்படுகின்றன. தலைப்புச் சிறுகதையான மாறாத மனங்கள், சமூக சீர்திருத்தத்தை முன்னெடுப்பவர்கள் கூட, எவ்வாறு பழைய சாதி அமைப்புக்குள் கட்டுண்டு கிடக்கிறார்கள் என்பதைக் கலை நயத்தோடு காட்டுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3634

**மானிடம் உயிர் வாழ்கிறது: சிறுகதைத் தொகுதி.** எஸ்.முத்துமீரான். சென்னை 600 017: நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, (கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்), தியாகராயநகர், 1வது பதிப்பு, மே 2005. (சென்னை 600 014: Sabari Process).

160 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8281-04-2.

10 கதைகளுடன் வெளியாகியிருக்கும் இந்நூல் ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும். ஏற்கெனவே 9 நூல்களை இவர் எழுதியுள்ளார். கிழக்கு மாகாண முஸ்லீம்களின் பேச்சு வழக்கை அற்புதமான லாவகத்துடன், அச்சொட்டாகக் கையாண்டுள்ளமை இவரது கதைகளுக்குள்ள தனிச்சிறப்பாகும். இவரது கதைகளில் பெரும்பாலும் வீடு தான் மையத்தளமாக இருக்கின்றன. அதனைச் சுற்றியே ஆண் பெண் கதாபாத்திரங்கள் உலாவுகின்றார்கள். கதைகளுக்கான களமும் சூழலும் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையிலும் சூழல் விபரணை மிகச் சிறப்பாக விழுந்துள்ளது. எளிமையும் இனிமையும் நிறைந்த நடைச் சிறப்பினை இச்சிறுகதைகளில் காணலாம். முரண்படாப் பாத்திர வார்ப்புகளும் கதையம்சமும் இவரது சிறுகதைகளில் நன்குள்ளன.

### 3635

**முதற் பயணம்: சிறுகதைகள்.** கருமணி, புனிதன், தமிழ்நிலா, தேவபானு, சிவேந்திரன். முல்லைத்தீவு: அருமை கல்விக்கூடம், புதுக்குடியிருப்பு, 1வது பதிப்பு, ஜுலை 2004. (முல்லைத்தீவு: அந்திவானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு).

viii, 98 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21x14.5 சமீ.

விடுதலைப் புலிகளின் போராட்ட வாழ்வின்போது, உடலின் ஓர் உறுப்பை அல்லது சில பாகங்களை இழந்தமையால் களத்தில் நின்று நேரடியாகச் செயற்பட முடியாத நிலையில், தமது அடுத்தகட்டப் பணிக்கான தயார்ப் படுத்தலைப் பெறவென உருவாக்கப்பட்டது அருமை கல்விக்கூடமாகும். மாவீரரான லெப்.கேணல் அருமையின் ஞாபகார்த்தமாக இதன் பெயர் வழங்கப்பட்டது. இக்கல்விக்கூடத்தின் மாணவர்களது கள அனுபவங்கள் போரியல் படைப்பிலக்கியமாகப் பன்னிரு சிறுகதைகளின் உருவில் இந்நூலில் தரப்பட்டுள்ளன. இவை



படிப்பகம்

www.padippakam.com



ஏற்கெனவே வெள்ளிநாதம், புலிகளின் குரல், எரிமலை ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை.

## 3636

**முளைகள்.** சாந்தன். சென்னை 600098: New Century Book House, 41 B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், 1வது பதிப்பு, பெப்ரவரி 1982. (சென்னை 600002: நவஜோதி அச்சகம்).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 5., அளவு: 18X13 சமீ.

சமகாலத்து ஈழத்துப் படைப்பாளிகளில் முன்னணியில் நிற்பவர் சாந்தன். 1975இல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். பலவண்ணக் காட்சிக் கருவி போன்று தம் பாத்திரப் படைப்புக்களின் நிகழ்வுகளையும் அவற்றைச் சார்ந்த மனப்பதிவுகளையும் புதிய யுக்தியாக இவரது கதைகளில் படைத்துள்ளார். ஒவ்வொரு கதைகளிலும் அவர் ஈழத்துச் சமுதாயத்தின் சமூக உணர்வுகளை ஏதேனும் ஒருவகையில் சித்திரித்துவிடுகின்றார். இவரது 12 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு இதுவாகும்.

## 3637

**மூங்கில் காடு.** ஆ.மு.சி.வேலழகன். (இயற்பெயர்: ஆதிமுத்து சின்னத்தம்பி வேல்முருகு). சென்னை 600014: The Parker 293, இரண்டாவது தளம், அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, ஜுன் 2001. (சென்னை 600014: The Parker 293, இரண்டாவது தளம், அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை).

272 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22X14.5 சமீ.

கிழக்கிலங்கையின் மூத்த எழுத்தாளர் வேலழகனின் 28 சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்த இவரது படைப்புக்களின் அடித்தளம், சமூக சீர்திருத்தங்களை வெளிப்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இவ்வகைப் பண்புகளை இவரது சிறுகதைகளில் காணமுடிகின்றது. கதைகள் வெவ்வேறு காலகட்டத்தில் மட்டக்களப்பு, கொழும்பு, தமிழகத்தில் மதுரை, இராயப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் இருந்து எழுதப்பட்டிருந்தாலும் அனைத்தும் மட்டக்களப்பு மண்வாசனையுடன் அந்த மண்ணின் கதைக்களங்களில் நகர்வதையே அவதானிக்க முடிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## 3638

**வம்மிப்பூ.** *ச.அருளானந்தம். திருக்கோணமலை: அருள் வெளியீட்டகம்: 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜுலை 2001. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).*

*viii, 80 பக்கம், விலை: ரூபா 95., அளவு: 21x14 சமீ., ISBN: 955-97106-5-6.*

கேணிப்பித்தன் என்ற பெயரிலும் படைப்புலகில் அறிமுகமான ச.அருளானந்தம் கல்வித்துறையில் நீண்டகாலம் பணியாற்றியவர். இத்தொகுப்பிலுள்ள கதைகளிலும் இதன் தாக்கத்தை உணரமுடிகின்றது. அந்த ஆவணி ஆறு என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதிக்குப் பின்னர் இந்நூல் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாக 9 சிறுகதைகளுடன் வெளிவருகின்றது. இவை சமகாலப்பிரச்சினைகள், உளவியல் பார்வை, சமுதாயக் கண்ணோட்டம் கொண்டவை. அரசமரம், மனிதம், அனுபவம் புதுமை ஆகிய கதைகள் கல்விசார் மாந்தரை நாடி பிடித்துப்பார்ப்பன. அவலங்கள், அண்ணன், கஸ்தூரி ஆகியன கட்டவிழ்க்கப்பட்ட அராஜகத்தைக் காட்டி நிற்பன. இரு மனங்கள், படிக்காத பாமரத் தம்பதியினரின் இதயராகம் பற்றியது. வம்மிப்பூ என்ற தலைப்புக் கதை ஒரு கருகிய காதல் பற்றியது. ஆவி துடிக்குதடி, கதை தன்னுயிராய் இருந்த மறைந்த தன் துணைவியாரின் பிரிவு பற்றியது. இக்கதைகள் அனைத்தும் தேசிய நாளேடுகளான வீரகேசரி, தினக்குரல், தினக்கதிர் ஆகிய பத்திரிகைகளில் வெளியாகின.

## 3639

**வழி பிறக்குமா?** *சந்தனம் சத்தியநாதன். புஸ்ஸல்லாவ: சந்தனம் சத்தியநாதன், 399 B, Wahugapitiya, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (புஸ்ஸல்லாவ: மிதுரு செவன வெளியீட்டகம், 288/c, இப்பன்வேவ).*

*(10), 46 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x13 சமீ., ISBN: 955-6260-00-5.*

மலையக மக்களின் வாழ்வியலைப் பகைப்புலமாகக் கொண்ட எட்டு சிறுகதைகள் இத்தொகுப்பிலுள்ளன. மலையகச் சிறுகதைத் துறையில் புதிய வரவாக 80களில் நுழைந்தவர் சந்தனம் சத்தியநாதன். இவரது கதைகள் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளை தெளிவாகவும் உணர்வுபூர்வமாகவும் எடுத்துரைக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



### 3640

**வாடகை வீடு.** எம்.ரி.செல்வராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

188 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து வாழ்வியல் கோலங்களை இத்தொகுப்பிலுள்ள பத்துக் கதைகளிலும் நூலாசிரியர் பதிவுசெய்துள்ளார். இவை அனைத்தும் உலகியல் வாழ்வின் இயல்பான மனத்தடுமாற்றங்களையும் அவற்றின் சுவையான விளைவுகளையும் கூறி இறுதியில் வாசகரை ஒருகணமேனும் சிந்திக்க வைத்திருக்கின்றன. யாழ்ப்பாணம் உரும்பிராய் மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து 1973இல் இருந்து லண்டனில் வசிக்கும் நூலாசிரியர் அங்கு பொறியியலாளராகவும், மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலையின் நிர்வாகியாகவும் பணியாற்றுகின்றார்.

### 3641

**வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்.** கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஜுலை 1997. (கொழும்பு 13: செவ்வந்தி லிமிட்டெட், 130, ஸ்ரீ குணானந்த மாவத்தை).

viii, 136 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5x14 சமீ.

ஆசிரியர், அதிபர் என்ற பணிநிலைச் செயற்பாடுகளுக்கு மேலாக எழுத்தாளர், கலைத் திறனாய்வாளர், நாடகக் கலைஞர், சமூகச் சிந்தனையாளர் முதலிய பன்முகப் பரிமாணங்களை எய்தியவர் கோகிலா மகேந்திரன். சமூகப் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து நோக்கும் இவர் தமக்கேயுரிய வகையில் அவற்றுக்கான தீர்வுகளையும் தன் கதைகளில் உணர்த்தி விடுகின்றார். கோகிலா மகேந்திரனின் இத்தகைய 11 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

### 3642

**வான்மதி சிறுகதைகள்.** பவன்-கணபதிப்பிள்ளை (தொகுப்பாசிரியர்). பிரான்ஸ்: கே.சிவரூபன், வான்மதி (FTCA), 58,Rue des Travailleurs, 93700, Drancy, 1வது பதிப்பு, மார்ச் 2006. (பாரிஸ்: ஸ்ரீ பாரதி அச்சகம்).



படிப்பகம்

www.padippakam.com



58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

வான்மதி கலை இலக்கியக் குழுவின் கலைநிலா – 2006 கலை நிகழ்வினையொட்டி வெளியிடப்பெற்ற இச்சிறப்பு மலரில் குரு அரவிந்தன் (கனடா), த.யோகசுந்தரம் (பிரான்ஸ்), தாமரா சுப்பிரமணியம் (இங்கிலாந்து), சிவலிங்கம் சிவபாலன் (பிரான்ஸ்), தோழர் சுரேந்திரன் (பிரான்ஸ்), த.சுப்பிரமணியம் (இங்கிலாந்து), ரமேஷ் சிவரூபன் (பிரான்ஸ்), வண்ணை தெய்வம் (பிரான்ஸ்), இணுவையூர் பவன் கணபதிப்பிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

## 3643

**விசித்திர உறவுகள்.** பொன். குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, மிசிசிசாகா, 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

v, 136 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இணையத்தள மாதாந்த சஞ்சிகையான குவியத்தில் அதன் பிரதம ஆசிரியரான பொன். குலேந்திரன் அவர்கள் எழுதிய சிறுகதைகளின் நூல்வடிவத் தொகுப்பு இது. யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பௌதிகம், தொலைத் தொடர்புப் பொறியியல், சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் பட்டங்கள் பெற்ற பொறியியலாளர். இலங்கைத் தபால் தந்தித் திணைக்களத்தில் பணியாற்றித் தற்போது கனடாவில் மிசிசிசாகாவில் வாழ்ந்துவருகிறார்.

## 3644

**விடியட்டும் பார்ப்போம்.** புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, மாசி 1997. (கொழும்பு 6: பிரின்ட் கிராப்பிக்ஸ், 4, நெல்சன் பிளேஸ்).

108 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x13.5 சமீ.

தனக்கென ஒரு சுய நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு தனது படைப்புக்களைச் சிருட்டிக்கும் இரத்தினவேலோனது எளிமையான ஆனால் தேர்ந்த சக்திமிக்க வார்த்தைகள் அவரது கதைகளுக்கு ஒரு பலத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுக்கின்றன. அரங்கேற்றம், ஒற்றைப்பனை, புத்தொளி, புதிய அத்தியாயம், காகித உறவுகள், அம்மா, ஒரு பக்கத் தாளம், விடியட்டும் பார்ப்போம்,



படிப்பகம்

www.padippakam.com



இருட்டினில் வாழும் உயிர்களுக்கு என்று 9 கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

### 3645

**விடுதலை.** திக்குவல்லை கமால். கொழும்பு 13: பேசும் பேனா வெளியீடு, 5, 1/20 முதலாம் மாடி, சுப்பர் மார்க்கட், கொட்டஹென, 1வது பதிப்பு, மார்ச் 1996. (கொழும்பு 13: Quick Graphic Print, 5, 1/20 முதலாம் மாடி, சுப்பர் மார்க்கட், கொட்டஹென).

x, 85 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 17x12.5 சமீ., ISBN: 955-95926-0-2.

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையின் உதவியுடன் அச்சாகி வெளிவந்துள்ள விடுதலை சிறுகதைத் தொகுதியானது நூலாசிரியரின் நான்காவது சிறுகதைத் தொகுதியாகும். சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு யதார்த்தமாக, இயல்பான பேச்சுமொழியில் எழுதுவதில் தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக்கொண்டிருக்கும் கமாலின் 11 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கிராம வாழ்வின் பல்வேறு முகங்களையும் அதன் அடித்தள இயல்புகளையும் மிக யதார்த்தமாகச் சித்திரிக்கின்றார். பாசாங்கற்ற கதைசொல்லும் முறையில் நேர்த்தியான கலையம்சம் வனப்புறக் கலந்திருக்கின்றது. எந்த நெருடலுமற்ற செய்நேர்த்தி, வாசகனை கமாலின் கதைகளோடு நெருங்கி வரச் செய்கின்றது.

### 3646

**விநோதினி.** செ.யோகநாதன். கொழும்பு 6: விண்மீன் பதிப்பகம், 121 ஹம்ட்டன் ஒழுங்கை, 1வது பதிப்பு, 2000. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

(4), 112 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 17.5x12.5 சமீ.

பாரதியின் வாய்மொழியாக- எழுத்து உண்மையாயும், எளிமையாயும், தெளிவாயும் இருக்கவேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள செ.யோகநாதனின் 11 சிறுகதைகள் கொண்ட தொகுதி. இதிலுள்ள கதைகள் வாழ்வின் யதார்த்தத்தைச் சித்திரிக்கின்ற வேளையிலேயே, அதன் உள்ளடக்க வலுவினையும் பெற்றிருக்கின்றன. கதைகளின் கலைத்துவமான அழகு இயல்பாகவே உள்ளடக்கத்தோடு ஒட்டி நிற்பதற்கு, எழுத்தாளனின் சிந்தனைத் தெளிவு, பார்வை என்பனவே காரணமென்பர் மேனாட்டு விமர்சகர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



யோகநாதனின் கதைகள் இத்தகைய அம்சங்களைப் பூரணமாகப் பெற்றிருக்கின்றன.

## 3647

**விழியோரத்துக் கனவுகள்.** திருமலை சுந்தா. (இயற்பெயர்: இ.சி.சுந்தரலிங்கம்). திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, 1வது பதிப்பு, மார்கழி 1995. (திருக்கோணமலை: வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களம், அன்பு ஒழுங்கை, உப்புவெளி).

(10), 150 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 17.5x13.5 சமீ.

1970இல் எழுதத் தொடங்கிய திருமலை சுந்தாவின் 18 சிறுகதைகள் கொண்ட தொகுதி இது. இவரது முதற் சிறுகதைத் தொகுதியான **வேள்வி** – சிரித்திரன் வெளியீடாக வெளிவந்தது. இந்நூல் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும். 1975 முதல் 1995 வரை வசந்தம், சுடர், தினமுரசு, கலாவல்லி, தினகரன் வாரமஞ்சரி, திசை, வீரகேசரி வார வெளியீடு, சிவநெறி, மாணிக்கம், நிவேதனம் ஆகிய இதழ்களில் இவை வெளியாகியிருந்தன.

## 3648

**வேட்கை.** நீர்வை பொன்னையன். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340, செட்டியார் தெரு, இணைந்து வெளியிட்டவர்கள் சென்னை 600 026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் வீதி, வட பழநி, 1வது பதிப்பு, 2000. (சென்னை 600 014: மொனார்க் கிராப்பிக்ஸ்).

(4), 184 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12 சமீ.

நூலாசிரியரின் ஐந்தாவது சிறுகதைத் தொகுப்பு. இத்தொகுதியிலுள்ள 10 கதைகளுள் அழியாச்சுடர் என்ற கதை 1958இல் கருக்கொண்டு 1980இல் பிறந்தது. 1959க்கும் 1995க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட வேறுபாட்டை இக்கதையின் வாயிலாக வாசகர் கண்டுகொள்ள முடிகின்றது. ஏனைய கதைகள் 1995க்கும் 1999க்கும் இடைப்பட்ட காலத்தவை. இந்த யுத்த காலத்தில் எமது நாட்டில் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வருகின்ற துன்ப துயரங்களையும், இவற்றை மனவுறுதியுடன் சகித்து வருவதையும், எதிர்காலத்தில் அவர்களுக்கு இருக்கும் வலுவான நம்பிக்கையையும் இக்கதைகள் சுமந்து வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3649

**வேள்வி மலர்கள்.** பத்மா சோமகாந்தன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600005: தேவா ஓப்செட் பிரஸ்).

xiv, 153 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

1950களில் எழுத்துலகில் பிரவேசித்த நூலாசிரியரின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி. இதில் பதினான்கு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. வல்லிக்கண்ணன், பேராசிரியர் நந்தி, செ.கணேசலிங்கன் ஆகியோர் உரைவழங்கியுள்ளனர். இதிலுள்ள கதைகளினூடாக இப்படைப்பாளியின் பெண்ணியக் கருத்துக்களை புரிந்துகொள்ள முடிகின்றது. இலங்கையின் இரு தசாப்த அரசியல் சமூகப் பிரச்சினைகளையும் அவற்றின் குரூரத்தையும் தெரிந்து கொள்ளமுடிகின்றது. அனைத்துக் கதைகளிலும் ஒரு பெண் மறக்க முடியாத பாத்திரமாகின்றாள். அவளது அவலம் அல்லது திடசித்தம் அல்லது எதிர்பார்ப்பு மனதில் பதிகின்றது.

## 3650

**வைகறை.** அமுதன். (இயற்பெயர்: வேல் அமுதலிங்கம்). கழனி: வேல் வெளியீட்டகம், 284/1, பியகம ரோட், பட்டிய, 1வது பதிப்பு, ஜனவரி 1977. (கொழும்பு 13: ரஞ்சனா பிரிண்டர்ஸ், 98, விவேகானந்தா மேடு).

69 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18x13 சமீ.

நூலாசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. 20 ஆண்டுகளாக எழுதப்பட்ட கதைகள் இவை. வைகறை, உட்புண், அளவுகோல், கண்ணீருக்குப் பின்னால், ஈனப் பிறப்பு, ஆகிய ஐந்து கதைகள் இடம்பெற்றுள்ளன. ஈழகேசரி, வெற்றிமணி, பூமாலை ஆகிய பிரசுரங்களில் வெளியானவை. அளவுகோல், கண்ணீருக்குப் பின்னால் ஆகிய இரண்டும் இல்வாழ்வின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை. ஒருவனது சமூகவாழ்வை உருவமைப்பதில் பொருளாதாரக் காரணிகள் முதன்மைபெற்றாலும், அகவாழ்விற்கு அவை எவ்வித மாற்றத்தையும் விளைவிக்காது என்பதை அளவுகோல் என்ற கதை சொல்கிறது. தனி மனித உணர்ச்சிகள் அறிவுபூர்வமாக நெறிப்படுத்தப்படல் வேண்டும், அங்ஙனம் சீர்ப்படுத்தப்பட்டால் அவை தனி மனித வாழ்வையும், அவ்வழியே சமுதாய வாழ்வையும் பரிமளிக்கச் செய்யும் என்பதை கண்ணீருக்குப் பின்னால் என்ற கதை சொல்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3651

**ஜென்மம்.** நீர்வை பொன்னையன். கொழும்பு 6: ஆ.இரத்தின-வேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜுலை 2005. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 504, ஹைலெவல் வீதி, நாவின்ன).

xiv, 155 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ.

இத் தொகுதியில் 11 சிறுகதைகள் அடங்கியுள்ளன. 1960 -2005க்கு இடைப்பட்ட 45 ஆண்டுக்கால இடைவெளியில் படைக்கப்பட்ட இக்கதைகள், அந்தந்தக் காலகட்டங்களில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்டன. நீர்வை பொன்னையனின் ஒவ்வொரு ஆக்கத்திற்குப் பின்னாலும் அவரது சமூக அரசியல் கண்ணோட்டம் வலுவாகப் பதிவுக்குள்ளாகியுள்ளன.

## 894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

### 3652

**அக்கரைகள் பச்சையில்லை.** அருள் சுப்பிரமணியம். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி இல. 160, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

(8), 304 பக்கம், விலை: ரூபா 4.60, அளவு: 18x12 சமீ.

திருக்கோணமலை எழுத்தாளர் கே.அருள் சுப்பிரமணியம் அவர்களது 3வது நாவல் இது. 56வது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்துள்ளது. இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாது வெளிநாட்டுக்குக் கப்பலேறி வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் “விரக்தி” இளைஞர்களின் கதை இது. அக்கரைகள் பச்சையாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அயல்நாடு செல்பவர்கள் அங்கு எதிர்நோக்கும் சிக்கல்கள், அவற்றை எதிர்கொள்ளமுடியாத அவர்களது திண்டாட்டங்கள், அயல்நாடுகளில் நெருக்கடிகளில் சிக்குண்டு உயிர் தப்பினால் போதுமென்று நாடுதிரும்பும் இவ்விளைஞர்களின் பரிதாப வாழ்க்கை இந்நாவலில் பதிவாகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3653

**அக்கினி.** செங்கை ஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).

xiv, 134 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5X12.5 சமீ.

1987இல் ஈழநாடு வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்தது. யாழ்ப்பாணத்தின் சாதியக்கொடுமையின் பல்வேறு வடிவங்களைச் சித்திரிக்கின்ற அதே வேளையில் சமூக மாற்றமானது கல்வி, தொழில்மாற்றம், செல்வத்தேடல் என்பவற்றின் மூலம் ஏற்படுமெனச் சொல்லும் கதை. மண்மீட்பு, சமூக மீட்புக்குரல்கள் ஓங்கி ஒலிக்கும் ஒரு காலகட்டத்தில், மக்களது வாழ்க்கை நடத்தைகளையும், சமகால அரசியலையும் சமூக ஒழுங்கும் அகத்திலும் புறத்திலும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விமர்சிக்கும் நாவலாகவும் இது அமைகின்றது. இது 15வது மீரா பிரசுரமாக வெளிவந்துள்ளது.

### 3654

**அசோக வனம்.** செ.யோகநாதன். சென்னை 600005: கண்ணகி பதிப்பகம், பி 22, முருகேசு நாயக்கர் இல்லம், 279 திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை 600005: பக்கம் மறுதோன்றி, 6/2, தேவராஜன் தெரு).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5X12.5 சமீ.

செ.யோகநாதனின் அசோகவனம், என்று அந்தப் பேதை உரைத்தான், ஜானகி, பலிபீடம், சைக்கிள், சின்னஞ்சிறு மலர் மழையில் நனைந்து, தோழமை என்றொரு சொல் ஆகிய ஏழு குறுநாவல்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இது கண்ணன் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடு.

### 3655

**அடிவாரம்.** சி.சுதந்திரராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 14: பி.வி.ஆர்.பிரின்டர்ஸ்).

viii, 332 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18X12.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



ஈழத்துத் தமிழ் சிறுகதைப் படைப்பாளியாக பரவலாக இனம்காணப்பட்டிருந்த சுதந்திரராஜாவின் நாவல் இது. பற்பல கதை மாந்தரூடாக இலங்கைத்தீவின் யாழ்ப்பாணக் கிராமங்களையும் அக்கிராமங்களையொட்டிய சமகால வரலாற்று நிலையையும் இதில் பதிவுசெய்துள்ளார். கமலநாதன் என்ற துடிப்பும் ஆர்வமும், தான் கண்ட ஏமாற்றங்களைத் தாண்டிய துணிச்சலும் மிக்க இளைஞன் இந்நாவலின் கதாநாயகன். படித்தும் வேலையற்ற கமலநாதன் இறுதியில் விவசாயத்திலும் சுருட்டுத் தொழிலிலும் நாட்டம் கொள்கிறான். அங்கும் வர்க்கப் போராட்டத்தை எதிர்கொள்கின்றான். சிறு உரையாடல்களுடாக நகரும் கதை குறுகிய அத்தியாயங்களில் யாழ்ப்பாணத்துக் கிராமியப் பேச்சுவழக்கில் சொல்லப்படுகின்றது.

## 3656

**அந்தரங்க கீதம்.** உதயணன் (இயற்பெயர்: எஸ்.ரி.ஆர்.சிவலிங்கம்). கொழும்பு: வீரகேசரி, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, டிசம்பர் 1976. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

*(8), 120 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 18x12.5 சமீ.*

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட உதயணன் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். தமிழர் திருமணத்தில் மணமக்களின் சம்மதம் இன்றியமையாதது என்பதை இக்கதை வலியுறுத்துகின்றது. 48ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்துள்ளது. பின்னாளில் புலம்பெயர்ந்து பின்லாந்தில் வாழும் உதயணன் பின்லாந்தின் இலக்கியமான கலேவெலா காவியத்தை தமிழாக்கம் செய்தவர்.

## 3657

**அலிமாராணி.** ஜி.நேசன் (இயற்பெயர்: ஜி.நேசமணி). கொழும்பு 14: ஜனமித்திரன் வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, 1975. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

*(8), 194 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 4.25., அளவு: 17.5x12.5 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவில் 20ம் நூற்றாண்டில் கடத்தல்துறையில் ஈடுபட்டிருந்த அலிமா என்ற பெண் கடத்தல்காரியின் கதை. இந்திய கடத்தல் சாம்ராஜ்யத்தில் ஊடுருவி எல்லைக் கடத்தல்காரியாக வாழ்ந்த அலிமாவின் கதை வீரசாகசங்களும், பாலியல் விவரணங்களும் கதையை வளர்த்துச் செல்கின்றன. க்றுப்புராஜா, ஜமேலா, பட்லி என்ற வரிசையில் விறுவிறுப்பான கதையம்சம் கொண்ட வளர்ந்தோர் நாவல்.

## 3658

**அவர்களுக்கு வயதுவந்துவிட்டது.** க.அருள் சுப்பிரமணியம். மட்டக்களப்பு: மலர் வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1973. (கொழும்பு 13: ரஞ்சனா பிரின்டர்ஸ், 98, விவேகானந்தா மேடு).

(18), 206 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 18X12 சமீ.

கொழும்பில் வேலைபார்க்கும் திருக்கோணமலையைச் சேர்ந்த அரியம், சிங்களப்பெண் மொனிக்காவை மணம்புரிகிறான். ஊரில் உறவினரின் அதிருப்தியை எதிர்கொள்கிறான். தங்கையின் காதலையும் அவனது கலப்புத் திருமணம் பாதித்ததால் மீண்டும் கொழும்பு திரும்புகின்றான். 1956க்குப் பின் ஈழத்தில் தோன்றி வளர்ந்துள்ள தமிழ் இளஞ்சந்ததியினரின் வாழ்க்கைப் பின்னணி பற்றியும், அவர்களை ஆட்கொள்ளும் கருத்துக்கள் பற்றியும், சிங்கள-தமிழ் உறவின் தன்மைகள் பற்றியும் அவ்வுறவில் இன்று காணப்படும் போலி விகற்பங்கள் பற்றியும் சராசரி தமிழ்க் குடும்பங்களின் இலட்சியங்கள், வாழ்க்கை நடைமுறைகள் பற்றியும் இந்நாவல் பேசுகின்றது. இந்நாவலில் ஆற்றொழுக்கான கதை ஓட்டம், பாத்திரங்கள் உரையாடும் போது காணப்படும் செயற்கை வாடை சிறிதும் இல்லாத இயல்பான நடை ஆகியன தமிழகத்து நாவலாசிரியர் தி.ஜானகிராமனின் எழுத்துக்களை நினைவூட்டுவதாக இந்நூல் பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

## 3659

**அவனுக்குத் தான் தெரியும்.** திமிலை மகாலிங்கம். திருக்கோண-மலை: கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, 1வது பதிப்பு, மார்கழி 1995. (திருக்கோணமலை: வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களம், அன்பு ஒழுங்கை, உப்புவெளி).



படிப்பகம்

www.padippakam.com



(8), 138 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x13.5 சமீ.

மட்டக்களப்பைச் சேர்ந்த எழுத்தாளர் தமிழ்மணி மகாலிங்கம் புள்ளிப் புள்ளி மானே (கவிதைத் தொகுதி), புதிய பாதை (சிறுகதைத் தொகுதி) ஆகியவற்றின் ஆசிரியர். இது அவரது முதலாவது நாவல். சுயநலமற்ற தூய்மையான நட்புணர்வால் உறவைப் பலப்படுத்திக் கொள்ளும் இரு நண்பர்கள், அவர்களைச் சுற்றிப் படரும் மனைவி மக்கள் என்ற கொடிகள், இவைகளால் பின்னப்பட்ட ஒரு நாவல் இது.

## 3660

**அழியாத சுவடுகள்.** புஸ்பராணி ஜோர்ஜ். ஜேர்மனி: வண்ணத்துப்பூச்சி மலர் 10, இதழ் 1, 34431 Marsberg 15, 1வது பதிப்பு, மார்ச் 1997. (ஜேர்மனி: எச்.எஸ்.கே.).

52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

பருத்தித்துறையில் பிறந்து வளர்ந்து, 1988முதல் ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் கதாசிரியை புஷ்பராணியின் படைப்புக்கள் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் பல்வேறு ஊடகங்களில் பரவலாகப் பிரசுரமாகியுள்ளன. காசி.வி.நாகலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட வண்ணத்துப்பூச்சி இதழில் இவரது இரு நாவல்கள் இடம்பெற்றுள்ளன. தமிழகத்தின் ராணிமுத்து பாணியில் மாதநாவல் இதழாக வண்ணத்துப்பூச்சி இதழ் பரிமாணம் பெற்ற காலங்களில் புஸ்பராணி ஜோர்ஜ் அதில் எழுதிவந்துள்ளார்.

## 3661

**ஆத்மா.** முல்லை அமுதன். (இயற்பெயர்: இ.மகேந்திரன்). KSA: இ.மகேந்திரன். P.O.Box 30041, Jeddah, 1வது பதிப்பு, ஆனி 1994. (சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை)

92 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட முல்லை அமுதன் கவிதை, சிறுகதை, நாவல் என படைப்பிலக்கியத்தில் ஆழக் காலூன்றியவர். 1981இல் நித்திய கல்யாணி என்ற நூலை முதலாவதாக வெளியிட்டவர். தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்பவர்.



படிப்பகம்

www.padippakam.com



### 3662

**இங்கேயும் மனிதர்கள்.** இந்து மகேஷ். (இயற்பெயர்: எஸ்.மகேஸ்வரன்). கொழும்பு: வீரகேசரி, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 164 பக்கம், விலை: ரூபா 4.40, அளவு: 18X12.5 சமீ.

சமுதாயத்தின் பளபளப்பான பகுதிகளில் மட்டுமன்றி, இருண்டு கிடக்கும் பகுதிகளிலும் தனது தீட்சண்யமான பார்வையைச் செலுத்தி, அதில் வாழும் மக்கள் கூட்டத்தை, தனது காவியநாயகர், நாயகிகளாக்கும் எழுத்தாளர்களில் இந்து மகேஷ் முதன்மையானவர். ஒரு விலை மகளைக் காதலித்தேன், நன்றிக் கடன் ஆகிய இரு நாவல்களை எழுதிய நிலையில் இவரது மூன்றாவது படைப்பு இது. 59வது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்துள்ளது.

### 3663

**இதயங்கள் அழுகின்றன.** தாபி-சுப்பிரமணியம். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, டிசம்பர் 1977. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(8), 152 பக்கம், விலை: ரூபா 4.60, அளவு: 18X12.5 சமீ.

பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு என்ற முதுமொழிக்கொப்ப இந்த நாவலில் வரும் பெற்றோரும் தம் முதுமைக் காலத்தில் பிள்ளைகள் மூலமாகத் தம் வாழ்க்கை வளமாகும் என நம்பியிருந்தார்கள். அவர்களின் நம்பிக்கைகள் சிதைந்தபோதிலும் பிள்ளைகளின் மேல் அவர்கள் கொண்ட பாசம் குறையவேயில்லை. ஒரு இலட்சியப் பெற்றோரின் உணர்ச்சிமிக்க கதையாக இது புனையப்பட்டுள்ளது. பயிற்றப்பட்ட தமிழாசிரியரான தாபி சுப்பிரமணியம் அவர்கள் திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இது 61ஆவது வீரகேசரி பிரசுரம்.

### 3664

**இதயத்தில் இணைந்த இரு மலர்கள்.** மாத்தளை ரோகிணி (இயற்பெயர்: தவசிதேவர் அய்யாத்துரை). கொழும்பு 13: குறிஞ்சி வெளியீடு, 129/25, ஜெம்பட்டா வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1997.



படிப்பகம்

www.padippakam.com



(சென்னை 600014: பார்க்கர் கம்பியுட்டர்ஸ், 293, அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை).

(6), 238 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18X12 சமீ.

இது ஒரு தொழிற்சங்கவாதியின் கதை. அவன் தனது வாழ்க்கையில் அனுபவித்த பல்வேறு கஷ்டங்கள், துன்பங்கள், காதல் தோல்விகள், இறுதியில் மனமுவந்து காதலித்த வசந்தியின் தற்கொலை, மறுமணம் புரியக் காத்திருந்த மாமன் மகள் போராட்டத்தில் உயிரைப் பறி- கொடுத்துத் தியாகியானது, இறுதியாகத் துறவிக்கோலம் பூண்டு வளர்ப்பு மகன் அருணோடு பொதுப்பணிகளில் ஈடுபட்டு வாழமுடிவு- செய்யும் ஒரு சேவையாளனின் வரலாறு இந்நாவல். கம்பொல புசந்தன்னை தோட்டத் தொழிலாளியான இந்நூலாசிரியர் 1966முதல் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து மத்திய கமிட்டி உதவிப் பொதுச் செயலாளராகப் பணியாற்றி 1970முதல் அதன் தலைவராகப் பணியாற்றிவந்துள்ளார். மாத்தளை ரோகிணி, மலைநாட்டான், ரோகிணி போன்ற புனைபெயர்களில் கதை, கட்டுரை, விமர்சனம் போன்றவற்றை தேசிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

## 3665

**இரண்டாவது சாதி.** செ.கணேசலிங்கம். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1993. (சென்னை 600 014: மொனார்க் கிராப்பிக்ஸ்).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 42., அளவு: 18X12.5 சமீ.

பள்ளித் தோழிகளான இந்திராவும் பவானியும் பின்னாளில் சென்னையில் சந்திக்கின்றனர். பவானி இரு பெண்குழந்தைகளுடன் வேலைப்பளுவுடன் குடும்பச்சிறையில் வாடுவதை உணர்கிறாள். ஆணாதிக்க சேஷ்டைகளால் பவானி வேலையிலிருந்தும் விலகிவிட்டதை அறிகிறாள். பவானியின் குடும்ப நண்பன் சந்திரனுடன் இந்திராவுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. அதை முதலில் விரும்பாத பவானியிடம் கல்லூரியை விட்டபின்னர் தனக்கு நேர்ந்த துன்பியல் அனுபவங்களைக் கூறி பவானியின் அனுதாபத்தை இந்திரா பெறுகிறாள். பெண்விடுதலைக்குத் தடைக்கல்லாக இருக்கும் மேல்மட்ட அமைப்பைச் சார்ந்த மூன்று அம்சங்களான ஆபாசம், பாலியல் தொல்லைகள், பாலியல் வன்முறைகள் ஆகியவை பற்றி இந்நாவல் விரிவாகப் பேசுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



**3666**

**இரவின் முடிவு.** செங்கை ஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி 160, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

*(4), 158 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 17.5x12.5 சமீ.*

ஈழநாடு பத்திரிகை 10வது ஆண்டு நிறைவையொட்டி 1969இல் நடாத்திய இலக்கியப் போட்டியில் முதற்பரிசைப்பெற்ற நாவல். பின்னர் அதே பத்திரிகையில் "போராடப் பிறந்தவர்கள்" என்ற தலைப்பில் 1971-72இல் வெளிவந்தது. சுருட்டுத் தொழிலாளியான ஐயாத்துரை வறுமையிற் செம்மையாக வாழமுயல்கிறார். மனைவி பாக்கியலட்சுமி தனக்குக் கிடைக்காத ஆடம்பர வாழ்க்கையை எண்ணி ஏங்கியபடியே குடும்பப்பொறுப்பை அலட்சியம் செய்கிறார். மூத்தமகன் துரைராசா குடும்பத்தைவிட்டு விலகிச்சென்று வாழ்க்கையில் ஏமாற்றப்படுகிறான். மகள் மகேஸ்வரியின் திருமண ஆயத்தம் தடைப்படுவதோடு அவளைப்பற்றிய அவப்பெயரும் பரவுகிறது. துயரம் தாளாமல் ஐயாத்துரை உயிர்துறக்கிறார். இளையமகன் சண்முகநாதன் குடும்பத்தின் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியவனாகிறான். யாழ்ப்பாணத்துச் சுருட்டுத் தொழிலாளர் குடும்ப அவலவாழ்வை சித்திரிக்கும் கதை.

**3667**

**இரு முகம்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2004. (சென்னை: சிவம்ஸ்).

*200 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12 சமீ.*

சென்னைக் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பில் கற்றுவந்த இலங்கைப் பெண் மோகனா அங்கு வாய்ப்பான குடும்பத்தவரின் விருப்பின்படி மூத்த மகனை மணம் முடிக்கிறாள். எதிர்பாராத மனக்குறைவு இருந்தபோதும் கணவனது மருத்துவத்திலும் ஆர்வம் காட்டுகின்றாள். பெற்றோரைப் பாரக்க கொழும்புக்கு மோகனா வருகிறாள். அவ்வேளை, பல்கலைக்கழக விரிவுரையாளரான நண்பன் மகேந்திரனிடம் கண்டிக்குச் செல்கிறாள். அங்கு நாட்டியம், சினிமா பார்த்துப் பொழுது போக்குகிறாள். அக்கலைகள் பற்றிய மதிப்பீடுகள் விவாதங்களிலும் ஈடுபடுகின்றாள். நிலப்பிரபுத்துவத்தில் நிலவிய



படிப்பகம்

www.padippakam.com



உடலுழைப்பு உற்பத்திக்கேற்ப கூத்து, நாட்டிய நாடகங்கள், சிற்பக்கலை முதலியன முதன்மை பெற்றன. முதலாளித்துவத்தில் மூளை உழைப்பான விஞ்ஞானம், தொழில்நுட்பமும் இணைந்து கலை இலக்கியங்களை பயன்பாட்டு உற்பத்தியிலிருந்து பிரித்து இலாபநோக்கான பரிமாற்ற உற்பத்தியாக்கி விட்டது என மகேந்திரன் விவாதிக்கிறான்.

## 3668

**இருட்டறையில் உலகம்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர், 2004. (சென்னை: சிவம்ஸ்).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18X12 சமீ.

ஜேர்மன் மார்க்சிய சித்தாந்தவாதியான அடனோரின் பகுத்தறிவற்ற அரசியலாதிக்கம் என்ற கோட்பாட்டை, கூற்றை விரிவாக்க வேண்டி இந்நாவல் எழுதப்பட்டது. புனிதத்தின் அண்ணன் ஒரு டாக்டரான போதும் அவள் தன் தராதரத்தை விட்டு, தன் கண்ணீரையும் பிடிவாதத்தையும் ஆயுதமாக்கி, சாதாரண உழைப்பாளியாகிய சுந்தரைத் திருமணம் செய்கிறாள். தன் அந்தஸ்தை உயர்த்தவேண்டி தன் கணவனை ஈரான், இந்தியா, ஜெர்மனி வரை சென்று உழைக்க ஊக்கினாள். இறுதியில் பிள்ளைகளுடன் கனடாவில் குடியேறுகிறாள். தன் பிள்ளைகளைப் புனிதமாக வளர்த்து முன்னேற்ற முயல்கிறாள் புனிதம். பிள்ளைகள் புதியதொரு உலகில் வாழ்வதை இருட்டறை உலகத்திலிருக்கும் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

## 3669

**ஈழராஜா எல்லாளன்.** செங்கை ஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 188 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 22X15 சமீ.

ஓவியர் ரமணியின் சித்திரங்களுடன் வெளியாகியுள்ள இந்த வரலாற்று நாவலில் கி.மு.145 இலிருந்து கி.மு.101 வரையிலான 44 ஆண்டுகள் இலங்கையில் மாமன்னனாக விளங்கிய எல்லாள மன்னனின் வரலாறு சொல்லப்படுகின்றது. இலங்கையில் மிகப் புராதன காலத்திலிருந்தே



படிப்பகம்

www.padippakam.com



தெற்கே சிங்கள அரசும் வடக்கே (வன்னி) தமிழரசும் விளங்கியுள்ளன. ஈழதேசம் எனப்படும் உத்தரப் பிரதேசத்திலிருந்து நிகழ்ந்த தமிழ்ப் படையெடுப்புக்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவையல்ல. மேலும் இந்த நாடும் இந்த நாட்டின் ஆட்சியும் இரு இனங்களுக்கும் உரித்துடையவை. மன்னர்கள் மோதிக் கொண்டார்கள் மக்கள் இருதிறத்து ஆட்சிகளையும் அங்கீகரித்து வாழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இந்நாவல் சொல்கின்றது.

## 3670

**உறவுக்கப்பால்.** ந.பாலேஸ்வரி. கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, டிசம்பர் 1975. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(8), 196 பக்கம், விலை: ரூபா 3.90., அளவு: 17.5X12.5 சமீ.

திருக்கோணமலை, கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களின் பகைப்புலத்தில் நிகழும் கதை. சாவித்திரிக்கும் ஆனந்தனுக்குமிடை-யில் நிலவும் அன்பு காதலாக மாறுவதை உறவுமுறை தடுத்தவேளை, சாவித்திரியின் கணவன் ரமணனுக்குத் தனது சிறுநீரகத்தை வழங்கியதன் மூலம் இந்நாவலின் நாயகன் "உறவுக்கப்பால்" உயர்ந்-தவனாகின்றான். திருக்கோணமலையைச் சேர்ந்த திருமதி பாலேஸ்-வரி நல்லரட்ணசிங்கன் ஈழத்தின் சிறந்த பெண் எழுத்தாளர்களில் ஒருவர். இந்நூல் 37ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.

## 3671

**உறவுகள்: குறுநாவல்.** கா.சுஜந்தன். தமிழீழம்: மலரவன் வெளியீடு, 1வது பதிப்பு, ஆடி 2001. (கந்தபுரம்: கன்னி நிலம் பதிப்பகம், 101, முருகன் கோவில் முன் வீதி).

(10), 67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X13.5 சமீ.

அந்த நாளை அடைவதற்காய் என்ற கவிதைத் தொகுதி மூலம் படைப்பிலக்கியத்துறையில் தடம் பதித்த சுஜந்தன் இக்குறுநாவல் மூலம் மற்றொரு படைப்பிலக்கியத் தளத்தில் தடம் பதிக்கிறார். சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், அதே சமயம் போராளி மருத்துவராகவும் பணியாற்றிய அனுபவத்தினால் தனது கதையினை-யும் மருத்துவம் சார்ந்த பின்புலத்திலேயே நகர்த்திச் செல்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



### 3672

**உனக்காகக் கண்ணே.** சிற்பி (இயற்பெயர்: சி.சரவணபவன்). யாழ்ப்பாணம்: முத்துச்சுடர் வெளியீடு, இரண்டாவது மாடி, ஜுபிலி பசார், மின்சார நிலைய வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1973. (யாழ்ப்பாணம்: சிவகுமாரன் பிரஸ், அச்சுவேலி).

(4),162 பக்கம், விலை: ரூபா 3.25., அளவு: 18x12.5 சமீ.

காதலர்களான பாடசாலை ஆசிரியர்கள் சண்முகம், சாவித்திரி இருவரும் தமக்கு மற்றொரு சக ஆசிரியர் விளைவிக்கும் இடையூறுகளுக்கு முகம்கொடுத்து இறுதியில் இணைந்து கொள்வதாக அமையும் கதை. சிற்பியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த கலைச்செல்வி இதழில் தொடராக வெளிவந்த நாவல் இது.

### 3673

**உனக்காகவே வாழ்கிறேன்.** வித்யா (இயற்பெயர்: கமலா தம்பிராஜா). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மே 1977. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 210 பக்கம், விலை: ரூபா 4.40. அளவு: 18x12.5 சமீ.

கடல் கடந்த இளம் நெஞ்சங்களின் காதல் கதையாக மலரும் இந்நாவலில் காதலி ஈழத்துப் பெண்ணாகவும் காதலன் பாக்கிஸ்தானிய இளைஞனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சூழலையும் பேராதனைப் பல்கலைக் கழகத்தையும் கதைக்களமாகக் கொண்டு நாவல் நகர்த்தப்பட்டுள்ளது. இரண்டாண்டுகளுக்கு முன்னதாக (1975) மித்திரன் வாரமலரில் தொடர்கதையாக வெளிவந்திருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரியான கமலா தம்பிராஜா யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார்.

### 3674

**எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு.** ந.பாலேஸ்வரி. சென்னை: 600002: காந்தளகம், 4, முதல் மாடி, ரசிகா கட்டிடம், 834 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஆவணி 1993. (சென்னை 14: அலமு அச்சகம், 5, அய்யா முதலி தெரு, இராயப்பேட்டை).



படிப்பகம்

www.padippakam.com



(10), 252 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18X12.5 சமீ.

திருமதி ந.பாலேஸ்வரி ஈழத்தின் திருக்கோணமலை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஓய்வுபெற்ற பாடசாலை பிரதி அதிபரும் சமூக சேவகியுமான இவர் பல சிறுகதைகளையும் 12 நாவல்களையும் படைத்துள்ளார். 1992இல் கொழும்பில் தமிழ் சாஹித்திய விழாவில் தமிழ்மணி என்ற விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். நூல்வடிவம் பெறும் ஒன்பதாவது நாவல் இது. யாழ்ப்பாணக் கடலோரக் கிராமமொன்றில் வாழும் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த ரகு எதிர்வீட்டில் வாழும் வேறு சமூகப் பெண்ணான உமாவைக் காதலிக்கிறான். இருபக்கத்தினராலும் எதிர்ப்பு வலுக்கிறது. எதிர்பாராது கடலில் சென்று அகப்பட்ட ரகுவை புயற்காற்று திருக்கோணமலைக்குக் கொண்டு சேர்க்கிறது. வாழ்வில் விரக்தியடைந்து தற்கொலை புரியக் கடலை நாடும் பவானியை அங்கு சந்தித்து, இருவரும் தற்கொலை முடிவை மாற்றி நண்பர்களாகப் புதிய வாழ்வைத் தொடங்குகின்றனர். ஈற்றில் இருவரும் தத்தம் காதலர்களை புதிய வாழ்வில் மீண்டும் சந்திக்கின்றனர். விறுவிறுப்பான கதையமைப்புடன் கூடிய காதல் கதை இது.

## 3675

**என் முதுமைத் திருமணக் கோலங்கள்.** எம்.கே.தில்லைமோகன். சுவிட்சர்லாந்து: எஸ்.சிவகாந்தன், ரமி பப்ளிக்கேஷன்ஸ், Chur, Switzerland, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (கொழும்பு 6: Print Graphics, No.4, Nelson Place).

(4), 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X13 சமீ.

உண்மைக்கதைகளை விறுவிறுப்பான நாவலாக்கும் ஆர்வத்தின் விளைவாக இந்நூல் வெளிவந்துள்ளது. தன் முதுமையில் மிக இளவயதுப் பெண்ணை விவாகம் செய்துகொண்ட ஒரு தமிழ் வர்த்தகரின் வாழ்வின் கோலங்கள், சந்தேகங்கள், சஞ்சலங்கள், இங்கே சுவையான கதையாகின்றது.

## 3676

**எனக்காகப் பூக்கும்.** சந்துவி. (இயற்பெயர்: அப்புத்துரை ரகுநாதன்). சென்னை 600024: இளம்பிறை பதிப்பகம், 375-8, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜுலை 1999. (சென்னை 600024: Ilampiral Book Makers, 375-8, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்)



படிப்பகம்

www.padippakam.com



120 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18X12 சமீ.

தற்போது பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தின் மூத்த நாடகக் கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப்பணியாற்றிவருபவர். 1985இல் சென்னை வடபழனியில் புலம்பெயர்ந்து வாழ்ந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டையும், கர்நாடகாவையும் களமாக்கி உருவாக்கப்பட்ட கதைக்கரு.

## 3677

**ஓட்டுமா.** சாந்தன். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1978. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

84 பக்கம், விலை: ரூபா 4.20., அளவு: 18X12.5 சமீ.

1966 இல் கலைச்செல்வியில் தனது முதலாவது சிறுகதையை எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தவர் சாந்தன். இன்றுவரை குன்றாத உற்சாகத்துடன் எழுத்துலகில் செயற்பட்டு வருகின்றார். 1972இல் எழுதப்பட்ட இந்நாவல் 1976இல் தினகரன் வார மஞ்சரியில் தொடராக வெளிவந்தது. இரண்டு மாமரங்களை ஒட்டினால் அது ஒட்டுமா. இலங்கையின் இரு இனங்களையும் ஒட்டவைக்கும் இது வெறும் காதல் கதை மாத்திரமல்ல. ஒரு இனத்தின் கதையும் கூட.

## 3678

**ஒரு தீப்பிழம்பும் சில அரும்புகளும்.** லறீனா ஏ.ஹக். முறுதகஹமுல 20526: வர்தா பதிப்பகம், 85 சீ, பிட்டுனுகம, 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (முறுதகஹமுல 20526: வர்தா பதிப்பகம், 85 சீ, பிட்டுனுகம).

(2), 62 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5X15 சமீ., ISBN: 955-98241-1-2.

இந்நாவலில் சமூகத்தின் மிக முக்கியமான கூறாகத் திகழும் சிறுவர்களின் பிரச்சினைகளை இயன்றளவு அழுத்தமாக அடையாளப்படுத்த முனைந்துள்ளார். சிறுவர்களை, அவர்களது பிரச்சினைகளை பெரியோருக்கு எடுத்துச் சொல்லும் முயற்சியாக இந்நாவல் அமைகின்றது. பிள்ளைகளைக் கையாள்வது, அவர்களை வழிநடத்துவது போன்ற சிந்தனைகளை இந்நாவல் தோற்றுவிக்கின்றது. இந்நாவலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளராவார்.



படிப்பகம்

www.padippakam.com



**3679**

**ஒரு நாடும் மூன்று நண்பர்களும்: குறுநாவல்கள்.** மொழிவரதன். (இயற்பெயர்: கருப்பையா மகாலிங்கம்). கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7, பல்கூட்டுச் சந்தை, ரொசிட்டா பசார், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கண்டி: ஞானம் பதிப்பகம், 19/7, பேராதனை வீதி).

58 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20x14 சமீ., ISBN: 955-8354-06-6.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயின்ற காலத்தில் பெற்ற சுயஅனுபவங்களின் கலவையாகி வெளிவந்த ஒரு நாடும் மூன்று நண்பர்களும் என்ற குறுநாவலும், உழைக்கும் ஒரு தோட்டத் தொழிலாளி வர்க்கத்தினதும் சிங்களக் கூலி விவசாயக் கூட்டத்தினது வாரிசுகளினதும் கதையான புதிய மலர்கள் மலர்கின்றன என்ற குறுநாவலும், ஒரு பாடசாலையைக் களமாகக் கொண்டு புனையப்பெற்ற நிலப்பசி என்ற குறுநாவலுமாக மலையகப் பகைப்புலத்தில் உருவான மொத்தம் மூன்று குறுநாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மலையகத்தின் ஹாலிஎல சென்ட் ஜேம்ஸ் தோட்டத்தில் பிறந்த மலையகத்தின் பிரபல எழுத்தாளர் மொழிவரதன், கொட்டகல தமிழ் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றியவர்.

**3680**

**ஒரு மண்ணின் கதை.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 2வது பதிப்பு, ஏப்ரல் 2002, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (சென்னை 600 018: Adyar students xerox).

192 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ.

குமரேசன் கனடாவிலிருந்து கொழும்புக்குத் தன் காதலி சுசீலாவைத் திருமணம் முடித்து அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளான். கிராமத்திலிருந்து சுசீலா வருவது எதிர்பாராதவிதத்தில் தடைப்படுகின்றது. கொழும்பில் நண்பர்களுடன் தங்கும் குமரேசன், தேசியம் உட்பட மேலைத் தேய, கீழைத்தேய கலாச்சார வேறுபாடுகள் பற்றி விவாதித்துப் பொழுதைக் கழிக்கின்றான். பல சிரமங்களிடையே இரண்டு மாதங்கள் கழித்து கமலா என்ற பெண்ணின் துணையுடன் சுசீலா கொழும்புக்கு வந்து சேர்கிறாள். கமலாவுக்கு ஏற்படும்



படிப்பகம்

www.padippakam.com



பிரச்சினை, திருமண ஏற்பாட்டின் முன்னரே, அப்பாவியான சுசீலாவையும் சிக்கலில் மாட்டி விடுகின்றது. தன் கனடா பயணத்தை விட்டுவிட்டு சுசீலாவை விடுவிக்கும் முயற்சியில் குமரேசன் துணிச்சலுடன் இறங்குகின்றான். ஈழத்தின் துன்பியல் வரலாற்றின் ஒரு காலகட்டத்தை இந்நாவல் பிரதிபலிக்கின்றது.

## 3681

**ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது.** வ.அ.இராசரத்தினம். மட்டக்களப்பு: உஷா சிவதாசன், உதயம் வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1993. (மட்டக்களப்பு: புனித செபத்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிறைவ்).

vi, 116 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5X12 சமீ.

உதயம் வெளியீட்டு வரிசையில் பதினொராவது வெளியீடாக வெளிவந்துள்ள நாவல். 1960களிலான திருக்கோணமலையின் ஆலங்கேணிக் கிராமத்தைக் கதைக்களமாகக் கொண்டு எழுதப்பட்டது. வீரகேசரி பத்திரிகையில் தொடராக வெளிவந்திருந்தது. நூலாசிரியர் 1925இல் மூதூரில் பிறந்தவர். 1946இல் சிறுகதை எழுத ஆரம்பித்து இன்றுவரை 200க்கும் மேலாக எழுதிப் பிரசுரித்துள்ளவர்.

## 3682

**ஒலிக்காத ஓசைகள்.** புஸ்பராணி ஜோர்ஜ். ஜேர்மனி: வண்ணத்துப்பூச்சி, மலர் 8, இதழ் 1, 34431 Marsberg 15, 1வது பதிப்பு, ஜனவரி 1995. (ஜேர்மனி: எச்.எஸ்.கே.).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

பருத்தித்துறையில் பிறந்து வளர்ந்து, 1988முதல் ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் கதாசிரியர் புஷ்பராணியின் படைப்புக்கள் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் பல்வேறு ஊடகங்களில் பிரசுரமாகியுள்ளன. காசி.வி.நாகலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட வண்ணத்துப்பூச்சி இதழில் இவரது இரு நாவல்கள் இடம்பெற்றுள்ளன. தமிழகத்தின் ராணிமுத்து பாணியில் மாதநாவல் இதழாக வண்ணத்துப்பூச்சி சஞ்சிகை பரிமாணம் பெற்ற காலங்களில் புஸ்பராணி ஜோர்ஜ் அதில் எழுதிவந்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3683

**ஒளி பரவுகிறது.** திக்குவல்லை கமால். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/ 1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, மே 1995. (சென்னை 41: சூர்யா அச்சகம்).

184 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18X12.5 சமீ.

இலங்கையில் வடகீழ் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் மக்கள் பல்லினச் சூழலில் வாழும்பொழுது ஏற்படும் அவர்களது அனுபவம் புதுமையானது. அத்தகையதொரு பகைப்புலத்தில் உருவாக்கம்பெற்றுள்ள இந்த நாவல்; தொழிலாளரின் வாழ்க்கைப் போராட்டத்தை ஊடுபாவும் கதைக்களத்தைக்கொண்டு நகர்கின்றது. அதிலும் இளம் யுவதிகள் பங்குகொள்ளும் வேஜி நெசவுத் தொழிற்சாலையை முக்கிய களமாகக் கொண்டு எழுதப்பட்ட படைப்பு. இளமையும் குதூகலமும் நேசமும் பாசமும் சிந்தனையும் பக்குவமான போராட்டமும் இதில் உணர்வு இழைகளெனப் பின்னப்பட்டுள்ளன. பிரதேச அபிவிருத்தி இந்துசமய தமிழ் அலுவல்கள் அமைச்சு 1982ல் நடத்திய நாவல் போட்டியில் முதற்பரிசைப் பெற்றது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் நாவல் வெளியீட்டு வரிசையில் முதலாவது பிரசுரம்.

## 3684

**கங்கைக் கரையோரம்.** செங்கை ஆழியான். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1978. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 152 பக்கம், விலை: ரூபா 4.60, அளவு: 18X12 சமீ.

சிரித்திரன் சஞ்சிகையில் தொடராக 1974 ஜனவரி முதல் 1975 மார்ச் வரை வெளிவந்தது. 60களில் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்து மாணவர்களின் மனவுணர்வையும் புறச்செயல்களையும் அனுபவபூர்வமாகச் சித்திரிப்பதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு மூலையிலிருந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர்கள் அங்கு எப்படி நடந்துகொள்கின்றார்கள், கடன்சுமை, நம்பிக்கைகள் என்பவற்றுடன் அவர்களுக்காக யாழ்ப்பாணத்துப் பெற்றோர்கள் செலவழித்துக் காத்திருக்க, அவர்களின் நம்பிக்கைகளையும் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com



அல்லது அழிக்கிறார்கள் என்பதை இந்நாவல் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கிறது. இது வீரகேசரி பிரசுரத் தொடர் இலக்கம் 65.

## 3685

**கதை ஆண்டி.** மஜீத். அக்கரைப்பற்று 06: பெருவெளி பதிப்பகம், 107, மாவடி சந்தி, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் பிரின்டர்ஸ்).

44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X14.5 சமீ.

எனது பிரதி எந்த எல்லைக்குட்பட்டதாகவும் அமைய நான் விரும்பவில்லை. அது இந்த மக்களோடு, வாழ்வோடு, ஒரு உயிரியாக வசிக்கிறது. எனது பிரதி தனித்து ஒரு கதை சொல்லியாக வளர ஆசைப்பட்டு நிகழ்த்தும் ஊடாட்டமே இது. இது வாழ்வின் ஒரு சிறு அனுபவ அம்சமாக அல்ல, வாழ்வின் பகுதிகளில் இதுவும் இயங்கிக் கொண்டுதானிருக்கிறது. வேறு அம்சங்களுள் ஒப்பிட்டுப் பார்க்குமளவு இதில் எதுவும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இப்பிரதியில் இருந்து மேலெழுந்திடும் அனுபவத்தை பல தளங்களில் நாம் விமர்சிக்கவும் கூடும். கட்டுக்கட்டாய் எழுத்துக்களைக் குவித்துவிட்டு வாசிப்போனை திக்குமுக்காடவைக்கும் நோக்கத்திற்கு எதிராக பல சிறு சிறு நிகழ்வுகளை கதையாடி இயங்கும் இப்பிரதி எழுதப்படாத பெருங்கதையாடல்களைத் தன்னிடம் பதுக்கி வைத்திருக்கிறது.

-மஜீத் (முன்னுரையில்)

## 3686

**கமலினி.** அப்பச்சி மகாலிங்கம். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஏப்ரல் 1977. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 174 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 18X12 சமீ.

யாழ்ப்பாணத்தில் நவாலிப் பிரதேசத்தில் கடற்தொழிலாளர் மத்தியில் வாழ்ந்து பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடாக எழுந்த நாவல் இது. காற்றையும் கடலையும் விதியையும் ஒவ்வொரு நாளும் சந்தித்துப் போராடிவரும் ஒரு தொழிலாள வர்க்கத்தின் வாழ்வியல் பின்னணியில் இக்கதை அமைந்துள்ளது. நூலாசிரியர் அப்பச்சி மகாலிங்கம் மஹரகம அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்று ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1965இல்



படிப்பகம்

www.padippakam.com



இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக் குழு நடத்திய நாடக எழுத்துருப் போட்டியில் நீதிக்கு ஒருவன் என்ற இவரது நாடகம் முதற்பரிசு பெற்றது. ஈழநாடு 10வது ஆண்டு நிறைவுப் போட்டியில் இவரது சிறுகதைக்கு இரண்டாம் பரிசு கிட்டியது. கமலினி இவரது முதல் நாவலாகும். இது 52ஆவது வீரகேசரி பிரசுரமாகும்.

## 3687

**கருகாத பசுமை.** மருதம் (இயற்பெயர்: ஜின்னாஹ் ஷரிபுத்தீன்). மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2000. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).

xx, 114 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-96932-0-4.

மலையகத்தைப் பின்னணியாகக் கொண்ட நாவல். பொன்னு மாமி, அவளது குடும்பம் - தேவி, அவளுடைய தங்கை, தம்பி ஆகிய இன்னொரு குடும்பம் - இந்த இரு குடும்பங்களையும் சுற்றி நகர்கின்றது கதை. தேவியின் பெற்றோர் இறந்துபோக, தன் சகோதரி வசந்தியையும் தம்பி ராஜாவையும் பொறுப்பேற்று வளர்த்துப் படிக்கவைத்து ஆளாக்க வேண்டிய பொறுப்பு இளவயதிலேயே அவளது தோளில் விழுகின்றது. தன் சகோதரர்களின் வளர்ச்சிக்காகத் தன் சொந்த வாழ்க்கையையே தியாகம் செய்கிறாள். இடைப்படும் இடைஞ்சல்களை உறுதியுடன் எதிர்கொண்டு, இடையில் குறுக்கிடும் ஒரு வில்லனின் (கங்காணி முனியன்) வெறிக்கு அவளது கற்பையும் பறிகொடுக்கிறாள். காதல், உறவு, பாசம், தியாகம், போன்றவற்றைப் போற்றும் ஒரு மத்தியதர வர்க்க மக்களின் கதை இங்கு நாவலாகின்றது.

## 3688

**கனவுகள் கற்பனைகள் ஆசைகள்.** செங்கைஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெ.இல. 160, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1981. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

(4), 234 பக்கம், விலை: ரூபா 7.90., அளவு: 18x12.5 சமீ.

மரைநின்ற குளம் என்ற ஒரு காட்டுக்கிராமம் கதைக்குரிய பகைப்புலமாகும். அக்கிராமத்தில் குடியேறிய மக்களின் சாதாரண ஆசாபாசங்களை அவர்கள் தொழில் பின்னணியில் இந்நாவல்



படிப்பகம்

www.padippakam.com



பேசுகின்றது. சமூக விரோதிகளால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் காட்டாற்று எழுச்சியல்ல இந்நாவல். கனவுகளையும் கற்பனைகளையும் ஆசைகளையும் மனங்களில் நிறைத்து நிற்கும் ஒரு கிராமத்தின் குளத்தேக்கம் அது. மடை திறந்ததும் வயல்களுக்குள் குளத்துநீர் விரைவது போல, மனம் திறந்ததும் கனவுகள், கற்பனைகள், ஆசைகள் சமூகக் களத்தில் பொங்குகின்றன. அந்த உணர்வுப் போராட்டங்களை இந்த நாவலில் சமூகப் பொலிவுடன் செங்கை ஆழியான் சித்திரித்துள்ளார். விரகேசரியின் 72வது வெளியீடு. ஆசிரியரின் நூலுருப்பெறும் 14ஆவது நாவல்.

## 3689

**கால் பதிக்கா நிலவு.** எம்.ஏ.எச்.எம். இர்ஷாத். பேருவளை: பஷ்ரா பப்ளிஷர்ஸ் வெளியீடு, 36/5, பெரேரா வீதி, சீனன் கோட்டை, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 9: Q.G.Print, இல. 103, தெமட்டகொட வீதி).

viii, 189 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 955 8993 00 X.

நூலாசிரியரின் இலக்கியப் பிரவேசம் இந்நாவலுடன் ஆரம்பமாகின்றது. பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த இவர் களுத்துறை மாவட்டத்தின் அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர். ரியுசன் ஆசிரியனும் மாணவியுமான இரு இளம் சிட்டுக்களிடையே காதல் மலர்கிறது. அதை வெளிப்படுத்த இருவருக்கும் தயக்கம். ஒருவாறு அவன் தன் காதலை வெளிப்படுத்துகின்றான். அதன் வெளிப்பாட்டுமுறை அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் பிடிவாதம் செய்கிறாள். ஆசிரியனும் மாணவியுமாகவே இருவரும் பிரிகின்றனர். தமது படிப்பிலும் எதிர்கால வாழ்க்கையிலும் சிந்தனையைத் தீவிரமாக்கி உயர்தொழில் பெறுகின்றனர். அவளை முறையாகப் பெண் கேட்க அவன் முனைகின்றான். அப்போது அவளது திருமணப் பத்திரிகை தான் அவன் கரம் எட்டுகிறது. பின்னர் அவனுக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இடையில் அவளது கணவன் மரணமடைகின்றான். முன்னாள் காதலன் விதவையான அவளுக்கு வாழ்வளிக்கத் துடிக்கிறான். அவளோ அதை ஏற்க மறுத்துத் தற்கொலை செய்கிறாள். தென்னிந்திய சினிமா பாணியில் கதை நகர்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



**3690**

**காவியத்தின் மறுபக்கம்.** செ.யோகநாதன். கொழும்பு 3: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 51/9, ஹட்சன் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1976. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(6), 124 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18X12 சமீ.

இத்தொகுதியில் காவியத்தின் மறுபக்கம், சிறுபொறி பெருந்தீ, ஆகிய இரு குறுநாவல்களும் கட்டுமரங்கள் என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளன. காவியத்தின் மறுபக்கம், சிரித்திரன் குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றது. எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தின் எட்டாவது வெளியீடாகவும் இந்நூல் அமைகின்றது.

**3691**

**கிரௌஞ்சப் பறவைகள்.** வ.அ.இராசரத்தினம். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1975. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(10), 167 பக்கம், விலை: ரூபா 3.90., அளவு: 17.5X12.5 சமீ.

.வரலாற்றின் அடிப்படையில் அமைந்த கற்பனை நாவல். கி.மு.237இல் சூரத்தீசன் ஆட்சிக்கால ஈழத்து இராஜரட்டையை கதைக்களமாகக் கொண்டு நகரும் கதை. நாகதத்தன் தன் மருமகன் பந்துவனை அரசனாக்கி, தன்மகள் பிரபாவை அவனுக்கு மணம் முடித்துக் கொடுக்க விரும்புகிறான். பந்துவன், கிராம ஜனநாயகத்தை நிறுவ இளைஞரை அணிதிரட்டுகிறான். அரசுக்கெதிரான அவனது போராட்டம் தென்னிந்திய சேனன், குட்டகன் என்போரது துணையுடன் கூடிய கோபுதியினால் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. ஈழத்தின் அரசியல் வரலாற்றில் புத்த சமயம் பரவிய காலப்பகுதியை இந்நாவல் கண்முன் கொண்டு வருகின்றது. ராகுல் சங்கிருத்தியானின் வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலும், ஜவஹர்லால் நேரு எழுதிய Glimpses of World History என்ற நூலும், செ.குணசிங்கம் அவர்களின் கோணேஸ்வரம் என்ற நூலும் இந்நாவலின் ஆக்கத்திற்குப் பெரிதும் உதவியதாக நூலாசிரியர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் 35ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.



படிப்பகம்

www.padippakam.com



**3692**

**குஜராத் மோகினி.** ஜி.நேசன் (இயற்பெயர்: ஜி.நேசமணி). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 254 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 17.5X12 சமீ.

குஜராத் மாநிலத்தில் ஜுனாகத் மாவட்டத்தில் உள்ள பிரபல கீர் காட்டுக்குள் இருந்த அன்டர்சன் பங்களாவுக்குள் காலடி எடுத்து வைத்தவர்கள் கோரமான முறையில் கொலை செய்யப்படுகின்-றார்கள். இந்தக் கொலையை ஒரு மோகினி செய்வதாக நம்பப்படு-கிறது. இதன் மர்மத்தைக் கண்டறியப் புறப்படும் ஷாமா என்ற துணிச்சல் மிக்க பெண்ணின் கதையாக இந்நாவல் விறுவிறுப்புடன் நகர்த்தப்படுகின்றது.

**3693**

**கொழுகொம்பு.** வ.அ.இராசரத்தினம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: ஜோதி அச்சகம்).

viii, 336 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5X12.5 சமீ.

ஈழகேசரியில் தொடராக வெளிவந்த நாவல். மூதூரைச் சேர்ந்த நடராஜனும் அவனது மாமன் மகள் கனகமும் கொண்ட காதல், குடும்பப் பகையால் தடைப்படுகிறது. ஊரைவிட்டு விலகிய நடராஜன் மலையகத்தை அடைந்து பிலோமினா என்ற பெண்ணைத் திருமணம் செய்கிறான். கனகத்தின் நிலை அறிந்த பிலோமினா அவர்களைச் சேர்த்துவைக்கத் தன் உயிரை மாய்க்கிறாள். வ.அ.இராசரத்தினம் கிழக்கிலங்கையின் மூதூரைச் சேர்ந்தவர். தமிழாசிரியரான இவர் மலர்கள் என்ற கவிதையோடு எழுத்துலக்கிற்கு அறிமுகமானவர். கொழுகொம்பு இவரது முதலாவது நாவல். இது ஈழகேசரி வாரவெளியீட்டில் தொடராகவும் வெளிவந்திருந்தது.

**3694**

**கோடையும் பனியும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஜுலை 2003. (சென்னை: சிவா கிராப்பிக்ஸ்).



படிப்பகம்

www.padippakam.com



224 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18X12.5 சமீ.

ஆங்கில மொழியில் சிறப்புப்பட்டம் பெற்ற ஆசிரியரான சிவபாலன் தலைநகரின் இராணுவ பொலிஸ் கெடுபிடிகளுக்கு அஞ்சி புலம்பெயர்ந்து சுவீடனில் குடியேறுகின்றார். அங்கு அவரிடம் ஆங்கிலம் கற்க வந்த சுவீடிஷ் பெண் ரூபியை வாழ்க்கைத் துணைவியாக்குகின்றார். மீண்டும் இலங்கை வந்து வாழ முற்படுகையில் இருவருக்குமிடையே கலாச்சார, பண்பாட்டு வேறுபாடுகள் தலைதூக்கி இருவரையும் பிரிய வைக்கின்றது. பல்லின பண்பாட்டுச் சூழலில் தமிழரின் தனித்துவம் பற்றிய கேள்வியை கருவாகக்கொண்ட நாவல் இது.

## 3695

**சமரச பூமி.** ஜெயக்குமார் குமாரசாமி. (புனைபெயர்: பாரதிபாலன்). டென்மார்க்: J.Kumarasamy, Holmagervej-10, 4534, Horve, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600 024: இளம்பிறை பதிப்பகம், 32-8(375), ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).

304 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:18X12 சமீ., ISBN: 81-88686-03-4

இளம்பிறை பதிப்பகத்தின் 22வது வெளியீடாக வெளிவரும் இந்நாவல், இன, நிற, மத, நாடு, மொழி என்னும் எல்லைகளைக் கடந்ததாக அறிவியல் ஆன்மீகம் கூறும் நவீனமாகும். கவிவேழம் பாரதிபாலன் என்ற புனைபெயரில் புலம்பெயர் நாடுகளில் இலக்கியம் படைத்துவரும் இவரது முதலாவது நாவல் இது. செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த பூபதி இள வயதில் வைதேகி என்ற பெண்ணிடம் கண்ட தாகம், சுந்தரி என்ற தன் மனைவி மீது வைதேகியாகக் கருதிக் காட்டிய மோகம், பின்னர் பிரயாணக் கப்பலின் விபத்தில் தப்பி கண்காணாத தீவொன்றில் வாழநேர்ந்த போது ஆனந்தி என்னும் சுதந்திர சிந்தை கொண்ட பெண்ணுடன் காதலோடு வாழ்தல், என்று கதை நகர்த்தப்படுகின்றது. மறுபடி ஊர் திரும்பியபோது, ஏற்பட்ட மன மாற்றங்கள், திசை திருப்பங்கள், அவருக்கு ஒரு தெளிவான பாதையைக் காட்ட இறுதியில் அவர் மீண்டும் சமரச பூமியான தீவுக்கே செல்கின்றார். மனித வரலாற்றில் இன, மத, சாதி, வர்க்க பேதங்கள் எவ்வாறு முளைத்தன, மனித குலத்தை செம்மைப்படுத்த உருவான மதங்கள் எவ்வாறு மனிதர்களிடையே வேற்றுமையை வளர்த்தன, தொழில்ரீதியான பிரிவு எவ்வாறு சாதியத்திற்கு இட்டுச்



படிப்பகம்

www.padippakam.com



சென்றது என்பன போன்ற பல விடயங்கள் இந்நாவலில் அறிவார்த்தமாகவும் சுவையாகவும் சொல்லப்படுகின்றன.

## 3696

**சில்லிக்கொடி ஆற்றங்கரை.** ஆ.மு.சி.வேலழகன். (இயற்பெயர்: ஆதிமுத்து சின்னத்தம்பி வேல்முருகு). மட்டக்களப்பு: மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை, 1வது பதிப்பு, ஆவணி 2004. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

xxii, 144 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.

வெல்லாவெளிப் பகுதியையொட்டி இலங்கையின் உட்பகுதிக்குள் செல்லும் வைக்கி எல்ல, கொனாகொல்ல, உகனை, வண்டறந்தீவு, பன்னலகம என்னும் கிராமங்களில் 1940களில் சேனைப்பயிர் செய்து வாழ்ந்த வேடுவச் சமூகத்தவரினதும் வெல்லாவெளிப் பகுதிகளில் விவசாயம் செய்துவந்த விவசாய சமூகத்தவரினதும் வரலாற்றுப் பின்னணியில் இந்நாவல் அமைந்துள்ளது. முதுபெரும் எழுத்தாளர் வேலழகன் தன் இளவயதில் தான் கண்டு கேட்டறிந்த சுவைமிகு விபரங்களை இந்நாவலில் இழையோடி நாவலை சுவையானதாக்கியுள்ளார். சில்லிக்கொடி ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்பேசும் வேடுவ இனம் விவசாயம் செய்து வாழ்ந்த படுவான்கரை விவசாய இனத்தினது செல்வாக்கினால் சில்லிக்கொடி ஆற்றங்கரைப் பகுதிக் காடுகளை வெட்டிக் களனிகளாக்கி விவசாய சமூகமாகப் பரிணமிப்பது தான் இந்நாவலின் கருவாகும்.

## 3697

**சிவபுரத்து கனவுகள்.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: செல்வி ராமேஸ்வரன், E2/4, அண்டர்சன் தொடர்மாடி, நாரஹேன்பிட்டி, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்ட்ஸ், நாவின்ன).

(4), 124 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.

1998இல் வெளியான சிவபுரத்து சைவர்கள் என்ற நாவலின் தொடர்ச்சி இந்நூலாகும். இரண்டாம் பாகமாகக் கருதப்பட்டாலும் தனி நூலாகச் சுவைக்கவும் இந்நூல் ஏற்றதாகவுள்ளது. இலங்கையில் குறிப்பாக வடகிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் சமகாலப் பிரச்சினைகளில் ஒன்றான அகதிகளின் வாழ்வாதாரப் பிரச்சினை இந்நாவலிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. குறிப்பாக பாதுகாப்புத் தேடி சமய நிறுவனங்களுக்குள் நுழையும் அகதிகளிடையே ஏற்படும் மன



படிப்பகம்

www.padippakam.com



உழைச்சல்கள், சமூக, மத, இன ரீதியான பாகுபாடுகள் என்பன இந்நாவலில் ஆழமாகச் சொல்லப்படுகின்றது.

## 3698

**சிறையும் குடிசையும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12(3), மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (சென்னை 94: சிவா கிராப்பிக்ஸ்).

*168 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18X12 சமீ.*

இந்நாவல் சமூக அமைப்பில் இரு முக்கிய பகுதிகளைக் கவனத்தில் கொள்ள முயன்றுள்ளது. ஒன்று நகரங்களில் slum என்னும் சேற்றுப் பகுதி. நாகரீகமாக குடிசைப் பகுதிகள் என அழைக்கப்படுவது. இரண்டாவது, நாகரீக நகரங்களை ஒட்டியே அமைக்கப்பட்ட சிறைகள். சென்னை நகரின் குடிசைப்பகுதிகள் பற்றிய ஆய்வு செய்ய கல்லூரி மாணவ, மாணவியர் ஆசிரியருடன் செல்கின்றனர். அங்கு ஒரு குடிசைப் பகுதியில் மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்த நாதனைச் சந்திக்கின்றனர். நாதனின் எளிய, தியாக வாழ்வும் சிந்தனைக் கருத்துக்களும் அவர்களுக்கு வியப்பூட்டுகின்றன. அவர் மூலமும் குடிசைப் பகுதிவாழ் மக்கள் பற்றி அறிந்துகொள்கின்றனர். அத்தோடு அவரது 9 ஆண்டுக்காலச் சிறைவாசத்தில் கிடைத்த அனுபவங்கள் மூலம் சிறைகளைப் பற்றியும் கற்றுக் கொள்கின்றனர். நாதனின் இளமைக்கால வாழ்வு பற்றிக் கூறுவதைத் தவிர்க்கிறார். ஆயினும் உரையாடல்கள் அவ்வப்போது ஏற்படுத்தும் தாக்கம் நினைவலைகளாக விரிகின்றன.

## 3699

**சீவபுராணம்.** ஈழத்துப் பூராடனார். (இயற்பெயர்: கா.தா.செல்வராஜ-கோபால்). களுவாஞ்சிக்குடி: ஜீவா பதிப்பகம், பிரதான பாதை, தேற்றாத்தீவு, 1வது பதிப்பு, தை 1983. (மட்டக்களப்பு: மனோகரா அச்சகம்).

*(10), 171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X12.5 சமீ.*

இது மட்டக்களப்பு மண்வாசனை வீசும் ஒரு நெடுங்கதை. மட்டக்களப்பின் 1920-1980க்கு இடைப்பட்ட ஒரு காலகட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரங்களின் வழியாக ஒரு வரலாற்றுக்



படிப்பகம்

www.padippakam.com



காலத்தை மீள் உருவாக்கம் செய்து வாசகர் முன் நிறுத்தும் முயற்சியாக இந்நாவல் அமைகின்றது. நாவலின் அத்தியாயங்கள் பக்தி இலக்கியமான சிவபுராணத்தின் வரிகள் சிலவற்றை நினைவூட்டுகின்றன.

## 3700

**சுமைகள்.** தாமரைச்செல்வி. (இயற்பெயர் ரதிதேவி கந்தசாமி). கொழும்பு: வீரகேசரி, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜுலை 1977. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 244 பக்கம், விலை: ரூபா 4.40, அளவு: 18x12 சமீ.

நூலுருவில் வெளியான தாமரைச் செல்வியின் முதலாவது நாவல் இது. பரந்தன் பகுதியில் உள்ள குமரபுரம் கிராமத்தைச் சேர்ந்த இவர் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். தனது 24வது வயதில் எழுதிய கதை இது. கூழாங்கல்லாக இருந்த ஓர் இளைஞன் சுமைதாங்கியாக மாறிய கதை. இது கதையின் நாயகன் செந்திலின் கதை மட்டுமல்ல. ஏக்கம், எதிர்பார்ப்பு, ஆசை, பாசம், துயரம் கொண்ட எத்தனையோ இதயங்களின் கதைளும் இங்கு சொல்லப்படுகின்றன. இந்நூல் 55ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.

## 3701

**செல்லும் வழி இருட்டு.** சொக்கன். (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1973. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(4), 168 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நாவல் தினகரனில் முன்னர் தொடராக வெளிவந்தது. இலங்கையில் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்படுமுன் (1961க்கு முன்) சமய நிறுவனங்களாலும் தனியாராலும் அவை நடத்தப்பட்ட சூழலில் முகாமையாளர்களின் அடக்குமுறை ஆசிரியர்களை எந்தளவு பாதித்தது என்பதை விளக்கும் வகையில் பாத்திரங்களை இயங்கவைத்துள்ளார். இந்நவீனம் சித்திரிக்கும் ஆசிரிய சமூகத்தினரின் இன்னல்கள், ஏக்கங்கள் நிறைந்த வாழ்க்கை, தனியார் பாடசாலை நிர்வாகம் ஆட்சி புரிந்த சகாப்தத்திற்குப் பெரும்பாலும்



படிப்பகம்

www.padippakam.com



பொருந்துமென்றாலும், இதில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ள மனித உள்ளங்களின் அபிலாஷைகளும் பலவீனங்களும் நம்பிக்கைகளும் தோல்விகளும் என்றைக்கும் உண்மையானவையே. இந்நூல் 16ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.

### 3702

**தஞ்சம் புகுந்தவர்கள்.** செ.யோகநாதன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 27, 2வது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 600014: சித்ரா பிரின்டோகிராபி, 24, பொன்னுசாமி தெரு).

*176 பக்கம், விலை: இந்திய ரூபா 24., அளவு: 18X12.5 சமீ.*

ஒரு தலைமுறை காலமாக ஈழமக்கள் அகதிகளாகப் பூமிப் பந்தெங்கும் சிதறிப் பரவுகின்ற கொடுமை மனதைச் சுட்டெரிக்கின்ற தொடர்கதையாகியுள்ளது. குண்டுவீச்சில் தாயாரை இழந்த கமலா தந்தையார், சகோதரனுடன் தமிழகத்தில் குடியேறுகின்றாள். கமலா கல்வியில் ஆர்வமாக ஈடுபடும் வேளை, பொருளீட்டலில் ஆர்வமும், சுயநலமும் கொண்ட வெற்றிவேலுவின் மகன் சித்தார்த்தன் அவளைக் காதலிக்கிறான். ஆயினும் செல்வரத்தினத்தின் மகன் விநோதனுக்கும் கமலாவுக்கும் நட்பு ஏற்படுகின்றது. இடம்பெயர்ந்த வாழ்வும் புதிய சூழலும் வெளியே கூறமுடியாத கனவுகளையும் ஆசைகளையும் மனதில் ஏற்படுத்த அதைத் தாங்கிக் கொண்ட அகதிகள் தமது நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வாழ முற்படும் இயல்பு சுவையாகச் சித்திரிக்கப்படுகின்றது.

### 3703

**தனியாக ஒருத்தி.** செ.யோகநாதன். சென்னை 600005: குமரன் பதிப்பகம், 13/2, கஜபதி தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (சென்னை 600014: சித்ரா பிரின்டோகிராபி, 24, பொன்னுசாமி வீதி).

*192 பக்கம், விலை: இந்திய ரூபா 24., அளவு: 17.5X12.5 சமீ.*

இக்கதையின் பாத்திரங்களாக வரும் அழகும் வசதியுமுள்ள ஆசிரியையான கோகிலா, அச்சகத் தொழிலாளியான துளசி, உதிரித் தொழிலாளியான மாதுரி, மல்லிகா, தொழிற்சங்கப் பெண்ணான சுந்தரி ஆகியோரைச்சுற்றிப் பின்னப்பட்ட கதை. தொழில்ரீதியான சுரண்டல்களாலும் ஆணாதிக்கப்பிடியின் வலுவான கரங்களினாலும் பாதிக்கப்படும் இப்பெண்களின் வாழ்வு திருமணம் என்ற பந்தத்தின்



படிப்பகம்

www.padippakam.com



மீது தான் கட்டியெழுப்பப்படவேண்டுமா? திருமணம் செய்யாத ஒரு பெண்ணால் சுதந்திரமான வாழ்வை வாழமுடியாதா என்ற கேள்விகளை இந்நாவல் எழுப்பிச் செல்கின்றது.

## 3704

**தாகம்.** தாமரைச்செல்வி. யாழ்ப்பாணம்: மிரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, மார்கழி 1993. (யாழ்ப்பாணம்: மஹாலட்சுமி அச்சகம், 232(76), மருத்துவமனை வீதி).

(4), 96 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 19x13 சமீ.

தாமரைச்செல்வியின் மூன்றாவது நாவல். ஈழவிடுதலைப் போராட்டம் கூர்மையடைந்திருந்த காலகட்டத்தில் மக்கள் பல இழப்புகளைச் சந்தித்திருக்கிறார்கள். வீடு இழந்து வாசல் இழந்து அநாதரவாக அலைகின்ற நிலைக்குப் பலர் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் கதையே இந்நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளது. 23ஆவது மீரா பிரசுரம் இதுவாகும்.

## 3705

**தாரிணி.** ரஜனி. (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜனவரி 1974. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(4), 380 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 18x12.5 சமீ.

1954இல் வீரகேசரி நாளிதழில் தொடராக வெளிவந்தபோது அமோக வரவேற்பை இந்த விறுவிறுப்பான துப்பறியும் நாவல் பெற்றது. தாரிணி பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தவள். கொடுமைகளும் நயவஞ்சகமும் பேய்க்குணங்களும் ஒன்றுசேர்ந்த தீயவனான மார்த்தாண்டனின் அட்டூழியங்களை எதிர்த்து வெற்றி பெறுவதோடு தன்னை விரும்பிய பிரேம்குமாரை வளர்ப்புத் தந்தை ஜயந்தரின் ஆசியுடன் கரம்பற்றுகிறாள். இது 19ஆவது வீரகேசரி பிரசுரம்.

## 3706

**தூரம் தொடுவானம்.** பொன். கணேசமூர்த்தி. யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, தை, 1995. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம், 127, காங்கேசன்துறை வீதி).



படிப்பகம்

www.padippakam.com



(8), 129 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 20.5X14 சமீ.

மீரா வெளியீட்டு வரிசையில் 26வது பிரசுரமான நாவல். நாடக எழுத்தாளராக அறியப்பட்ட இந்நூலாசிரியர் சந்தனக்காடு என்ற நாடகத்தின் மூலம் பிரபல்யம் பெற்றவர். புலிகளின் குரலில் ஒலிபரப்பான வைகறை, இலங்கை மண் ஆகிய தொடர்நாடகங்கள் இவரது திறமைக்கு எடுத்துக்காட்டாக இன்றும் பேசப்படுகின்றன. நூலாசிரியரின் முதலாவது நாவல் இதுவாகும். விடுதலைப் போராட்டக் களத்தின் பகைப்புலத்தில் நாவல் நகர்கின்றது. நிலா, காய்ச்சான் கந்தசாமி, கல்யாணி, குமார், 16 வயது இளம் போராளியான இனியன் அனைவருமே மனதை நிறைக்கும் பாத்திரங்களாக வலம்வருகின்றனர்.

## 3707

**தேன் பறிப்போர்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (சென்னை: சிவம்ஸ்).

219 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 17.5X12 சமீ.

மாலதியும் மரகதமும் தோழியராக நகரில் ஒரே விடுதியில் தங்கியுள்ளனர். ஆசிரியையான மரகதம், தன் சொந்த அனுபவத்தை முன்வைத்து, ஆண்களுடன் விழிப்புடன் பழகும்படி மாலதியை எச்சரிக்கிறாள். பெண்களுக்கு திருமணம், பாதுகாப்பு, சமூக அந்தஸ்துக்கு அடுத்ததாகவே காதல் எனவும் அறிவுறுத்துகிறாள். மரகதத்தின் அண்ணன் காதல், தற்காதலுக்கு புதிய விளக்கம் கூறுகின்றான். மாலதி விழிப்புடன் பழகியபோதும் அவளுடன் படித்த மாணவன் தில்லைநாதனுடனும் வேலை கிட்டிபோது பணிபுரிந்த மேலதிகாரி ஆனந்தனுடனும் பிரச்சினை ஏற்படுகின்றது. இக்கட்டான சூழலிலும் அவனை மணம் முடிக்க விரும்பிவந்தவனைத் துணிச்சலுடன் ஏற்றுக்கொள்கிறாள். ஜெர்மனிக்குச் சென்ற முதற் காதலன் தில்லைநாதன் குற்ற உணர்வுடன் மாலதியிடம் மன்னிப்புக் கேட்க வருகின்றான். ஆணாதிக்க உலகில் ஆண்களே காதல் என்ற வார்த்தையை தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நிலப்பிரபுத்துவ சிந்தனை மரபில் இன்றும் ஊறி நிற்கும் பெண்கள் முதன்மையாக வேண்டுவது காதல் அல்ல. பாதுகாப்பு, அந்தஸ்து, குடும்பம், பின்னரே பாலின்பம், குழந்தை என்ற இக்கருத்தை இந்நாவல் விளக்க முனைகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## 3708

**நகரமும் சொர்க்கமும்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 79, முதலாவது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1996. (சென்னை 600014: சித்ரா பிரின்டோகிராப்பி).

184 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18X12.5 சமீ.

சுற்றுப்புறச் சூழல் மாசுபடுதல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய தமிழ் நாவல். வர்த்தக நோக்கிலான இயந்திர உற்பத்தியின் பெருக்கம் நிலம், நீர், காற்று ஆகிய இயற்கை வளங்களை மாசடையச் செய்துள்ளது. இயந்திரங்கள், வாகனங்களின் தொடர்ந்த ஒலி அலைகள் கேட்கும் சக்தியை மனிதர்களிடையே பாதிக்கின்றன. இயற்கை வனங்களை திட்டமிடப்படாத முறையில் அழிப்பதால் நிலங்கள் பாலைவனங்களாகின்றன. இத்தகைய முதலாளித்துவத்தின் எச்சமாக உருவான சேரிப்புறங்கள் குற்றச்செயல்களின் விளைநிலமாகின்றன. இத்தகைய சமூகக் கருத்தியல் பின்னணியில் இந்நாவல் உருவாக்கப்பட்டுள்ளது.

## 3709

**நன்றிக் கடன்.** இந்துமகேஷ் (இயற்பெயர்: எஸ்.மகேஸ்வரன்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1975. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(12), 158 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 18X12.5 சமீ.

சந்தர்ப்பவசத்தால் பாலியல் வன்முறைக்குள்ளான காவேரி தன் தங்கையின் நல்வாழ்வுக்காகத் தான் ஒரு பால்வினைத் தொழிலாளியாகிறாள். தங்கையோ தவறான பாதையில் செல்ல முற்படுகையில் குடிசைக்குத் தீவைத்துத் தன்னையும் தங்கையையும் அழித்துக் கொள்கின்றாள். சமுதாயமே தவறானவர்களை உருவாக்குகின்றது என்ற கோட்பாட்டில் அமைந்த கதைக்கரு. இது 36ஆவது வீரகேசரி பிரசுரமாகும். ஒரு விலைமகளைக் காதலித்தேன் நாவலை வழங்கிய இந்துமகேஷின் இரண்டாவது நாவல் இது.

## 3710

**நான் கெடமாட்டேன்.** க.அருள் சுப்பிரமணியம். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஏப்ரல் 1976.



படிப்பகம்

www.padippakam.com



(கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(8), 167 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 18x12.5 சமீ.

ஒன்றுவிட்ட சகோதரனுடன் தகாத உறவுகொண்ட இந்திரா அதற்குப் பரிகாரமாக அப்பாவியான நடராசனின் மனைவியாக்கப்படுகிறாள். கணவனிடம் தன் கடந்தகால உண்மைகளை வெளியிடும்போது அவன் சீறும் புயலாகின்றான். பின்னர் விபத்தில் கால் ஊனமுற்ற அவன் மனப்போராட்டத்தின் பின் இந்திராவின் நேர்மையை உணர்ந்து அவளை ஏற்கிறான். தவறு செய்தவர்கள் திருந்திவாழ முடியும் என்ற உண்மையைப் போதிக்கும் கதையம்சம். திருக்கோணமலைப் பிரதேச நடுத்தரவர்க்கச் சூழலில் கதை நகர்த்தப்படுகின்றது. திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியரின் முதல் நாவல் **அவர்களுக்கு வயது வந்து விட்டது** என்பதாகும். இது 1974ம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. **நான் கெடமாட்டேன்** இவரது இரண்டாவது நாவல். இது 41வது வீரகேசரி பிரசுரம்.

## 3711

**நிலவைப் பகலாக்கி.** திவ்ய பிரகாஷ். (இயற்பெயர்: ஏ.அன்வர்தீன்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600004: முருகன் ஆப்செட் பிரிண்டர்ஸ்).

viii, 440 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 18x12.5 சமீ.

கொழும்பு வாழைத்தோட்டம், அல்-ஹிக்மா கல்லூரியின் அதிபரான நூலாசிரியர், இந்நாவலில் இரு தளங்களில் கதையை நகர்த்திச் சென்று இறுதியில் ஒரே தளத்தில் சங்கமிக்கும் உத்தியைப் பின்பற்றியிருக்கின்றார். கராட்டிக்கலை பற்றிய அறிதலுடன் எழுதப்பட்டிருக்கும் இந்நாவலின் ஒரு தளம் அதுல்யகுமாரனின் தினக்குறிப்பேடாக நகர்கின்றது. நாவலின் பிரதான தளம் கிழக்கு மாகாணத்தில் மஞ்சம் தொடுவாயில் நிகழ்கின்றது. விறுவிறுப்பான ஜனரஞ்சக நாவல்.

## 3712

**நிலாக்கால இருள்.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: செல்வி ராமேஸ்வரன், 41/2, சித்ரா ஒழுங்கை, 1வது பதிப்பு, 2000. (மஹரகம: தரஞ்ஜி பிரிண்ட்ஸ், நாவின்ன).



படிப்பகம்

www.padippakam.com



vi, 130 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 955-96039-6-0.

தனது வாழ்க்கையின் எதிர்காலத்தையிட்டு கனவுகண்டு திருமணத்தின் பின் தான் வாழப்போகும் மகிழ்ச்சியான வாழ்வினை மனதில் பொதிந்து வைக்கும் ஒரிளம்பெண் தன் எதிர்பார்ப்புகள் நசுங்கும்போது வாழ்க்கையின் பிடிப்பற்றவளாகின்றாள். வாழ்வே மாயம் என்ற நிலைக்கு வருகிறாள். கைக்கெட்டியதை வாய்க்குள் புகுத்திக்கொண்டு அவஸ்தைப்படுகிறாள். துணையைப் பிரிந்தவள் வேறொரு துணையை நாடமுற்படுகிறாள். நண்பனை நண்பனாகவே ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வளரும்போது பெண்ணின் குணவியல்பு சிறப்புப்பெறுகின்றது என்ற கருத்தினை இந்த நாவல் அழகுற விளக்குகின்றது.

## 3713

**நெஞ்சக் கனல்.** ரஜனி (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜூன் 1975. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(16), 102 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 18x12.5 சமீ.

வசதியாக வாழும் இலட்சியத் தம்பதிகளான ரவி-சுமதி இருவரினதும் இன்ப வாழ்வில் சந்தேகம் பிரச்சினைகளை உருவாக்குகிறது. கணவனை மனைவி கொலைகாரனோ எனச் சந்தேகிக்கின்றாள். முடிவில் கணவன் நிரபராதி என நிரூபிக்கப்படுவதுடன் குடும்பம் அன்பில் இணைகின்றது. **குந்தளப் பிரேமா** என்ற சமூக நாவலுடன் இலக்கிய உலகில் நுழைந்தவர் ரஜனி. இது 31ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.

## 3714

**நெருப்பு மல்லிகை.** செம்பியன் செல்வன். (இயற்பெயர்: ஏ.ராஜகோபால்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1981. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 254 பக்கம், விலை: ரூபா 13.50, அளவு: 18x12 சமீ.

உண்பதற்கு உணவில்லாது பசியால் களைத்து மயங்குபவனைத் தாங்க நான்குபேர். அதே வேளை, தின்ற உணவு ஜீரணிக்காது



படிப்பகம்

www.padippakam.com



திக்குமுக்காடுபவனைத் தாங்கவும் நான்கு பேர். இவர்கள் எல்லோரும் சேர்ந்தமைந்த சமூக வட்டத்தில் சிறகொடிந்த தாய்ப்பறவை ஒன்று. குஞ்சுகளைக் காக்கச் சிறிது சிறிதாகப் பருக்கை தேடும் அத் தாய்ப்பறவையைக் கொத்திக் குதறத் தயாராக இருக்கும் ஒரு வல்லூறு. இம்மரணப் பாய்ச்சலில் வல்லூறின் கூரிய நகங்கள் மழுங்கினவா அல்லது தாய்ப்பறவையின் சத்திய வேட்டைக்கு வல்லூறே பலியாகியதா என்பதை சுவாரஸ்யமாகச் சொல்லும் நாவல். இலங்கைப் பல்கலைக்கழக (1964) புவியியல் பட்டதாரியான செம்பியன் செல்வன் பல்கலை வெளியீடு எனும் அமைப்பின் தாபக அமைப்பாளராவார். யாழ். இலக்கிய வட்டத்தின் தாபகச் செயலாளராகவும் இயங்கிய இவர் **இலக்கியம்** என்னும் ஆண்டு மலரின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இந்நூல் 73ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது.

## 3715

**நொறுங்குண்ட இருதயம்.** மங்களநாயகம் தம்பையா (மூல ஆசிரியர்), *எஸ்.சிவலிங்கராஜா (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: யாழ்ப்பாணக் கல்லூரி ஆய்வு நிறுவனம், CISRS, மருதனார் மடம், மீள்பதிப்பு, 1996, 1வது பதிப்பு, 1914. (வட்டுக்கோட்டை: அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம்).*

*(20), 213 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

ஈழத்தின் முதலாவது சமூகநாவலாகவும் ஈழத்தின் முதல் பெண் எழுத்தாளரின் படைப்பாகவும் இது உருவாகியுள்ளது. யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றில் சமூக ஊழல்களால் மனம் பாதிப்புக்குள்ளான ஒரு பெண்ணின் கதை. சுப்பிரமணியரின் மக்களான பொன்னுத்துரையும் கண்மணியும் அவள் கணவனான அருளப்பாவும், பொன்னுத்துரையின் காதலியான பொன்மணியும் முக்கிய பாத்திரங்கள். கணவனால் பலவகையிலும் கொடுமைப்படுத்தப்பட்ட கண்மணி மனமுடைந்தவளாக, கிறிஸ்தவ பாதிரியாரின் அருளுரைகளால் அமைதி காண்கிறாள். இறுதியில் அருளப்பா நல்லவனாக அன்பு செலுத்தவந்த போது அவள் ஆவி பிரிகிறது. பலத்த எதிர்பார்ப்புகளை மீறி, பொன்மணி பொன்னுத்துரையை மணம்முடிக்கிறாள். 20ம் நூற்றாண்டு ஆரம்பகால யாழ்ப்பாணப் பிரதேச கிறிஸ்தவ மிஷனரிகளின் சமயப் பிரச்சாரப் பின்னணியில் அமைந்த கதை. இம்மீள்பதிப்பு பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்



படிப்பகம்

www.padippakam.com



அவர்களின் அயராத முயற்சியுடன் போர்க்காலக் கெடுபிடிகளுக்குள்ளும், பாரிய வலிகாமம் புலப்பெயர்வுச் சூழலிலும் பலத்த இழப்புகளுக்கு மத்தியில் உருவாகியுள்ளது.

## 3716

**புதிய சுவடுகள்.** தி.ஞானசேகரன். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 220 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 18x12 சமீ.

**புதிய சுவடுகள்.** தி.ஞானசேகரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 94: Script Offset).

xiv, 254 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 18x12.5 சமீ.

தி.ஞானசேகரனின் முதலாவது நாவல் இது. மூடநம்பிக்கைகளும் வரட்டுக் கௌரவமும் எப்படியெல்லாம் ஒரு அபலையின் வாழ்வைச் சூறையாடி விடுகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நாவல் அமைகின்றது. சமூகக் கொடுமைகள் அவளை எதிர்த்தபோதும் இந்நாவலின் நாயகி துவண்டுவிடவில்லை. ஒரே இலட்சியத்திற்காக வாழ்ந்து தன் சுவடுகளை தாயக மண்ணில் அழியாமல் விட்டு மறைகின்றாள். இந்நாவல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப்பெற்றது. சாதியத்துக்கு எதிரான நாவல் என்ற வகையில் இது முக்கியமானது. இந்நாவலில் யாழ்ப்பாணக் கிராமியத்தின் மண்வாசனையை நன்றாகவே உணரமுடியும். இது 58ஆவது வீரகேசரி பிரசுரமாக முதலில் பிரசுரமானது. 2005இல் இதேநூல் சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினால் முதற்பதிப்பு எனக் குறிப்பிட்டு மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 3717

**புதிய பூமி.** ஞானரதன் (இயற்பெயர்: வை.சச்சிதானந்த சிவம்). கொழும்பு: வீரகேசரி, த.பெ.எண் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

(8), 168 பக்கம், விலை: ரூபா 4.90., அளவு: 18.5x12.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



வகுப்புவாதத்தின் காரணிகளை ஆராய முனைவதோடு, இனங்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகள் அடிப்படையான முரண்பாடுகள் அல்ல என்பதையும், வாழ்க்கையின் எந்தவொரு அம்சத்தை எடுத்துக் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் மிஞ்சுவது வர்க்க நலன் தான் என்பதையும் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் இது. வீரகேசரி பிரசுரத் தொடரில் 60ஆவது நாவலாக வெளிவந்தது.

## 3718

**புயலுக்குப் பின்.** மா.கி.கிறிஸ்ரியன். Puthanatham 621310: அக்னி வெளியீடு, அடையாளம் பதிப்பகம், 1205/1, கருப்பூர் சாலை, 1வது பதிப்பு, 2005. (சென்னை: மணி ஓப்செட்).

*447 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அள்வு: 19x13 சமீ.*

1982இல் பிரான்ஸ் தேசத்திற்குப் புலம்பெயர்ந்த கிறிஸ்ரியன், படைப்பிலக்கியத்துறையுடன், நாட்டுக்கூத்து, நாடகம் ஆகிய துறைகளிலும் அக்கறை கொண்டவர். நூலுருவில் வெளிவந்த இவரது முதலாவது நாவல் இது. 1964இல் ஈழத்தின் வடபுலத்தில் வீசிய கோரப்புயலின்பின் நடந்த சம்பவங்களையே மையமாகக்கொண்டு இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கரையோரத்து கிராமமான கரையூரே நாவலின் களமாகும். புயலின் கொடுமைக்குள்ளாகிய அப்பிரதேசத்து மீனவரின் வாழ்வியல் கூறுகள் இந்நாவலில் விரிவாகப் பேசப்படுகின்றன. நூலின் பின்னிணைப்பாக 2004 டிசம்பர் சுனாமிப் பேரலை பற்றியும் கட்டுரையொன்றைப் பதிவுசெய்துள்ளார்.

## 3719

**போடியார் மாப்பிள்ளை.** S. ஸ்ரீ ஜோன்ராஜன். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, பெப்ரவரி 1976. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

*(8), 144 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 18x12.5 சமீ.*

கிழக்கிலங்கையின் வளம் கொழிக்கும் வயல்நிலங்களில் ஆட்சிபுரியும் ஒரு சமூகத்தின் கதை இது. பாலிப்போடியாரின் மகள் பரிமளம் குடும்பப் பகைவனான சிவலிங்கத்தைக் கள்ளமாகக் காதலிக்கிறாள். இக்காதலை அறிந்த போடியார் பரிமளத்தைத் தன் கீழ் வயல்வேலை



படிப்பகம்

www.padippakam.com



செய்யும் முல்லைக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த செல்லத்துரைக்கு மணம்செய்துகொடுக்க முயல்கிறார். சிவலிங்கமும் செல்லத்துரையும் சேர்ந்து இத்திட்டத்தை முறியடிக்கிறார்கள். சிவலிங்கம் பரிமளத்தைக் கரம்பற்றுகின்றாள். கிழக்கிலங்கை விவசாயக் கிராமிய வாழ்க்கையைப் பகைப்புலமாகக் கொண்ட நாவல். இது 39ஆவது வீரகேசரி பிரசுரமாகும்.

## 3720

**மர்ம மங்கை நார்தேவி.** ஜி.நேசன். (இயற்பெயர் ஜி.நேசமணி). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, வீரகேசரி, த.பெ.இலக்கம் 160, பதிப்பு ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

(6), 280 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 18x12.5 சமீ.

16வது ஜனமித்திரன் வெளியீடாக இந்நூல் 70களின் இறுதிக்கூறில் வெளிவந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்தியாவில் இமாலயப் பிரதேசத்தின் சம்பா மாவட்ட தீசா பகுதியில் இருக்கும் சாஜேடே கிராமத்தைச் சேர்ந்த நார்தேவியின் விறுவிறுப்பான கதை. ஒரு வெகுளிப்பெண்ணான நார்தேவியின் மர்மம் நிறைந்த வாழ்க்கைச் சம்பவங்கள் இந்த மர்மநாவலில் விரிகின்றது.

## 3721

**மலைக்கன்னி.** ரஜனி. (இயற்பெயர்: கே.வி.எஸ்.வாஸ்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜுலை 1980. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(4), 209 பக்கம், விலை: ரூபா 7.90, அளவு: 18x12 சமீ.

1957ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் செப்டெம்பர் வரை வீரகேசரி வார இதழில் தொடராக வெளிவந்த நாவல். She என்ற ஆங்கில நாவலைத் தழுவிப் புராதன இந்துக் கலாசாரத்தையும் இருபதாம் நூற்றாண்டின் நவநாகரீக ஓட்டத்தையும் ஒன்றிணைத்த சூழலில் இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. இது 69 ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது. இந்நாவலின் இரண்டாம் பாகம் **ஜீவஜோதி** என்ற தலைப்பில் மற்றொரு வீரகேசரி பிரசுரமாக (பிரசுர இலக்கம் 70) வெளிவந்துள்ளது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3735)



படிப்பகம்

www.padippakam.com



## 3722

**மழைக்கோலம்.** முல்லைமணி வே.சுப்பிரமணியம். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, இணைந்து வெளியிடுவோர்: அவுஸ்திரேலியா, பாடும் மீன் பதிப்பகம்,1, Petra Court, Epping Victoria, 3076, 1வது பதிப்பு, ஐப்பசி 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

152 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 18x12 சமீ., ISBN: 955-8715-10-7.

வன்னிமண்ணின் உயிர்த்துடிப்பை வெளிப்படுத்தும் நாவல். 1945-1960 காலப்பகுதிக்குரிய வன்னிமண்ணின் சமூக வரலாற்றை இது பதிவுசெய்கிறது. மல்லிகைக்குளம் என்ற விவசாயக் கிராமத்தில், கைலாய உடையார் குடும்பம் முதன்மை வகிக்கின்றது. மக்கள் அவருக்கு அடங்கி நடக்கின்றார்கள். அந்த அடக்குமுறையிலிருந்து விடுபட்டுச் சொந்தக்காலில் நிற்க முயற்சி செய்கின்றது இளைய தலைமுறை. காணிக் கச்சேரி மூலம் விவசாயக் காணிகளைப் பெற்று சொந்தமாக விவசாயம் செய்யும் வாய்ப்பை இவர்கள் ஏற்படுத்துகின்றனர். அதன் பயனாகக் கூட்டுறவுச் சங்கம், பாடசாலை விவசாயக் கழகம், நவீன விவசாய மேட்டுநிலப் பயிர்ச் செய்கை எனப் புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன. சமுதாய எழுச்சிக்கான அறிகுறிகளைத் தோற்றுவித்து நாவல் நிறைவுபெறுகின்றது.

## 3723

**மறந்து விடாதே.** தாளையடி சபாரத்தினம். உடுப்பிட்டி: திருமதி மீனா சபாரத்தினம், வீரபத்திரர் கோவிலடி, 1வது பதிப்பு, ஜனவரி 1971. (யாழ்ப்பாணம்: மு.வி.ஆசீர்வாதம், ஆசீர்வாதம் அச்சகம்).

(8), 128 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18.5x12.5 சமீ.

1940ஆம் ஆண்டில் தனது 17ஆவது வயதில் எழுதவாரம்பித்து 1967ம் ஆண்டில் தனது 44ஆவது வயதில் மறையும் வரை எழுதிக்கொண்டிருந்தவர் அமரர் க.சபாரத்தினம் (தாளையடி சபாரத்தினம், 22.12.1921-18.11.1967). அவரது புதுவாழ்வு என்ற சிறுகதைத் தொகுதியைத் தொடர்ந்து இரண்டாவது நூலாக இக்குறுநாவல் வெளிவந்துள்ளது. தினகரனில் தொடராகவும் இது வெளிவந்தது.



படிப்பகம்

www.padippakam.com



## 3724

**மீண்டும் வந்த சோளகம்.** செ.யோகநாதன். சென்னை 600026: படைப்பாளிகள் பதிப்பகம், 89/6, நடராஜன் தெரு, தனலெட்சுமி காலனி எக்ஸ்டென்ஷன்ஸ், வடபழனி, 1வது பதிப்பு, மார்கழி 1996. (சென்னை 600 093: ஜெயலட்சுமி கம்ப்யூட்டர் கிராப்பிக்ஸ், 4/4 முல்லை பிளாட்ஸ்).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 32., அளவு: 18.5X12 சமீ.

ஈழத்தின் பிற்படுத்தப்பட்ட பகுதியொன்றில் வாழும் மீனவ சமூகம் பற்றியது இக்கதை. அச்சமூகத்தில் நிலவும் பழமைப் பிடிப்பையும் அதற்கெதிராகப் புதிதாக முளைவிடும் முற்போக்குச் சக்தியையும் இந்நாவல் படம்பிடிக்கின்றது. பரவைக்கடல் என்று அழைக்கப்படும் வளைகுடாக் கடற்பகுதியில் மீன் பிடித்து வாழும் மக்களின் வாழ்க்கையில் ஆண்டுதோறும் வரும் சோளகம் என்னும் கத்தரி வெய்யில் காலம் நிகழ்த்தும் கொடுமைகளை நாவல் விவரிக்கின்றது. சோளகம் வரும்போது காலைப் பொழுதில் கடலே வற்றிவிடுகின்றது. வழமையான மீன்பிடி நின்றுவிடுகின்றது. காலம்காலமாக அம்மக்கள் பயன்படுத்தும் வள்ளங்கள் ஆழ்கடல் மீன்பிடிக்கு உதவாதவை. காலம்காலமாக இருளில் தவிக்கும் இம்மக்களின் வாழ்வில் ஒளியேற்ற புதிய சிந்தனையுடன் வருகிறார்கள் சண்முகமும் ஆறுமுகமும். வழமையான வள்ளங்களுக்குப் பிரதியீடாக இயந்திரப்படகுகளை முதலாளித்துவத்துக்கு எதிராக மீனவர்களிடம் அறிமுகம் செய்து சோளகத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்கொள்ள முயலும் அவர்களின் கதை இது.

## 3725

**முற்றுப்பெறாத முடிவுகள்.** மண்டைதீவு கலைச்செல்வி. யாழ்ப்பாணம்: ஜே.எம்.ஆர்.குகநாதன், ரஜனி வெளியீடு, 248/5, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1984. (யாழ்ப்பாணம்: அன்பு பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

46 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 21X13 சமீ.

மாத நாவல் வெளியீட்டு முயற்சியாக **ரஜனி** என்ற தொடர்த் தலைப்பில் (மலர் 1, இதழ் 4) வெளியாகிய நான்காவது நாவல் இது. 1980ம் ஆண்டு ஈழநாடு சிறுகதைமூலம் இலக்கிய உலகில் நுழைந்த மண்டைதீவு கலைச்செல்வியின் முதலாவது நாவல் இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3726

**மூடுபனி.** சந்தனம் சத்தியநாதன். புஸ்ஸல்லாவ: சந்தனம் சத்தியநாதன், 399 B, Wahugapitiya, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (புஸ்ஸல்லாவ: மிதுரு செவன வெளியீட்டகம், 288/C, இப்பன்வேவ).

*(16), 38 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18.5x13.5 சமீ., ISBN: 955-9489-00-3.*

தோட்டத்தில் பிறந்து அம்மக்களின் மத்தியில் வாழ்ந்துவரும் ஒரு இளைஞனின் படைப்பு என்ற வகையில் இக்குறுநாவல் சத்திய தரிசனமாகின்றது. தோட்ட மக்களின் வாழ்வியல் உள்வீட்டுப் பிள்ளையின் பார்வையில் பதிவாகியுள்ளது. தமது அவல வாழ்விலிருந்து மீள்வதற்கு கல்வியே ஒரேவழி என்பதை அழுத்தமாக இக்குறுநாவல் பதிவுசெய்கின்றது.

## 3727

**யாத்திரை.** பொ.பத்மநாதன். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி இல. 160, 1வது பதிப்பு, மே 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

*(6), 136 பக்கம், விலை: ரூபா 3.90., அளவு: 17.5x12 சமீ.*

சிவராஜன் தன் குடும்பப் பராமரிப்பிலிருந்த சாந்தியுடன் தவறாக நடந்து அதற்குப் பிராயச்சித்தமாக அவளையே மணந்துகொள்கிறான். மகேஸ்வரனை ஏற்கெனவே காதலித்துவந்த போதிலும் சாந்தி, சிவராஜன் தனக்கிழைத்த குற்றத்திற்குப் பழிவாங்கும் நோக்கில் அவனை மணம்புரியச் சம்மதிக்கிறாள். மனப்போராட்டம், விபத்து ஆகியவற்றின் முடிவில் சிவராஜனின் காதலியும் முறைப்பெண்ணுமான உமாவை அவனுடன் இணைத்துவைத்து சாந்தி உயிர்துறக்கிறாள். உணர்ச்சிமிக்க சமூகநாவல். வீரகேசரி வெளியீட்டுத் தொடரில் 42வது நாவல். பொ.பத்மநாதன் எழுதிய எட்டாவது நாவலாகவும், நூலுருவில் வெளிவரும் அவரது இரண்டாவது நாவலாகவும் இது அமைகின்றது. இவரது முதலாவது நாவலான **புயலுக்குப் பின்** வீரகேசரி பிரசுரமாக 1973இல் வெளிவந்தது.

## 3728

**வளைவுகளும் நேர்கோடுகளும்.** நெல்லை. க.பேரன். (இயற்பெயர்: க.பேரம்பலம்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண்



படிப்பகம்

www.padippakam.com



160, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 168 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 18x12.5 சமீ.

சமூகத்தில் பணத்தையும் ஆடம்பரத்தையும் மாத்திரம் முன்னுக்கு வைத்துக்கொண்டு பல கோணங்கித் தனங்களைச் செய்துவரும் போலிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் இளைய சந்ததியினரின் புரட்சிகர இதயங்களை இந்நாவலில் சந்திக்க முடிகின்றது. சமூகத்தின் வளைவுகளான வர்க்கபேதம், சாதி அமைப்பு, இன்னும் பல பேதமைகளை தகர்த்து நிமிர்த்தும் நேர்கோடுகளாக இளைஞர்களின் சக்தி உருவாக வேண்டும் என்பது இந்நாவலின் குறிக்கோளாகின்றது. ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் என்ற தன் சிறுகதைத் தொகுதியை 1975இல் வெளியிட்டதன் மூலம் பிரபல்யமான நெல்லை க.பேரன் இந்நாவலில், சமூகத்தில் தான் பார்த்தும் பழகியும் அனுபவரீதியாக உணர்ந்தும்கொண்ட மனிதர்களின் பிரதிமைகளைப் பாத்திரங்களாகப் படைத்துள்ளார். இது 62ஆவது வீரகேசரி பிரசுரமாகும்.

## 3729

**வனமலர்.** செ.யோகநாதன். குறிஞ்சிப்பாடி 607302: மணியம் பதிப்பகம், 39, இரத்தின முதலித் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (சென்னை 6000 94: ஜென்னிராம் பிரஸ், 13, வன்னியர் 2ம் தெரு, சூளைமேடு).

210 பக்கம், விலை: இந்திய ரூபா 26., அளவு: 18x12.5 சமீ.

கிட்டி என்ற இவரது நாவலைத் தொடர்ந்து கானகத்து வாழ்வியல் பற்றிய இரண்டாவது நாவல் இது. தமிழ்ப் படைப்புத்துறையில் ஒரு விரிந்த தளத்தில் நின்று எழுதிவரும் செ.யோகநாதன் புனைகதை, மொழிபெயர்ப்பு, நவசினிமா, குழந்தை இலக்கியம், கலை விமர்சனம் ஆகிய துறைகளில் பல நூல்களை வெளியிட்டுள்ளவர். இவரது படைப்புக்கள் ஆங்கில, ரஷ்ய, ஜெர்மனிய, தெலுங்கு, சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## 3730

**வாழ்வற்ற வாழ்வு.** ஸி.வி.வேலுப்பிள்ளை (ஆங்கில மூலம்), பொ.கிருஷ்ணசுவாமி (தமிழாக்கம்), சாரல்நாடன் (பதிப்பாசிரியர்). கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7, ரொசிட்டா பல்கூட்டுச்



படிப்பகம்

www.padippakam.com



சந்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கண்டி: New Greenleaf print house, No.87, கட்டுகஸ்தொட்ட வீதி).

290 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 20x14 சமீ, ISBN: 955-8589-04-7.

தினகரனில் 1960ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தொடராக வெளிவந்த மொழிபெயர்ப்பு நாவலின் நூலுரு இதுவாகும். பிரபல இலக்கியவாதி அமரர் சிவி அவர்கள் (14.09.1914-19.11.1984) தலவாக்கல்லையின் முன்னாள் மக்கள் பிரதிநிதியாகவும் (1947-1952) நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். அவரது பார்வையில், 1930களிலும் 1940களிலும் பெருந்தோட்டத்துறை எவ்வாறிருந்தது என்பதை அறிந்துகொள்ள-முடியும். மொழிபெயர்ப்பாளர் பொ.கிருஷ்ணசாமி டெய்லி மிரர் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர். மலையக மக்களின் வாழ்க்-கையில் கொஞ்சம் கொஞ்சமாகப் படர ஆரம்பித்த அவலங்கள் எழுத்தில் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. பொன். அருணாசலம், ஜவகர்லால் நேரு, பெரி. சுந்தரம், நடேசையர், இலங்கை இந்திய காங்கிரஸ்காரர்கள் ஆகியோர் பற்றிய அமரர் வேலுப்பிள்ளையின் கணிப்பு ஆங்காங்கே நாவலில் இழையோடியுள்ளன.

## 3731

**விடியலைத் தேடி.** ஓ.கே.குணநாதன். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, புரட்டாதி 1991. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம்).

(8), 80 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18x12.5 சமீ.

மட்டக்களப்புப் பிராந்திய வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டும் கதையம்சம் கொண்ட இந்நூல் யாழ்ப்பாணம் மீரா பிரசுரத்தின் 17ஆவது வெளியீடாகும். ஒரு ஏழைத் தாய் பாக்கியம், தனது ஒரே மகன் ராஜன் படித்துப் பட்டம் பெற்று சமூகத்தில் உயர்நிலையை எய்தவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தன்னை மெழுகுவர்த்தியாக்கி நாளெல்லாம் ஓடாய் உழைத்துப் பட்ட பாடுகள், தாங்கிய துன்பச் சுமைகள், கொண்ட எதிர்பார்ப்புகள், சந்தித்த ஏமாற்றங்கள், அடித்த எதிர்நீச்சல்கள், இறுதியில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வுகள் என்பன இக்கதையைச் சுவையாக நகர்த்திச் செல்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3732

**விண்ணில் அல்ல விடிவெள்ளி.** தாமரைச்செல்வி. யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஆடி 1992. (யாழ்ப்பாணம்: லக்ஷ்மி அச்சகம், 37, கண்டி வீதி).

(4), 116 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 19x13 சமீ.

1974ம் ஆண்டிலிருந்து எழுதிவரும் தாமரைச்செல்வி பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்தவர். 1987இல் இராணுவம் இவரது வீட்டை எரியூட்டியவேளையில் தான் சேகரித்து வைத்திருந்த அனைத்து நூல்களையும் தனது கையெழுத்துப் பிரதிகளையும் இழந்தார். 1989ம் ஆண்டு எழுதப்பட்ட இந்த நாவலும் பிரசுரம் காணாமலே பின்னாளில் 1990 ஜுனில் எரிந்துவிட்டது. அதை மீள எழுதிப் பிரசுரித்துள்ளார் நூலாசிரியர். பத்திரிகைத் தட்டுப்பாடு நிலவிய காலகட்டத்தில் பயிற்சிக் கொப்பித் தாளில் அச்சிடப்பட்ட இந்நூல் மீரா பிரசுரத்தின் 21வது வெளியீடாக வெளிவந்துள்ளது.

கிளிநொச்சிப் பிரதேசத்தின் சாதாரண விவசாயக் குடும்பமொன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒரு போர்க்காலப் பின்னணியின் மத்தியில் வெளிக்கொண்டுவந்துள்ள இக்கதை மட்டுமல்லாது இக்கதை நூலுருவாக்கப்பட்ட கதைகூட முக்கியமானது. இந்நாவலின் உருவாக்கத்தில் வைராக்கியத்துடன் உழைத்து நூலுருவில் மீண்டும் போர்க்காலச் சூழலிலேயே வெளிக்கொண்டுவந்துள்ளமையும், ஈழத்து போர்க்காலப் படைப்பிலக்கிய முயற்சிகள் பற்றி எதிர்காலத்தில் ஆய்வுசெய்யும் எவருக்கும் இந்நூலை ஒரு வாழும் வகைமாதிரியாகக் காட்டும்.

## 3733

**விழியோரத்துக் கனவுகள்.** குடத்தனை உதயன் (இயற்பெயர்: ஆர்.உதயகுமார்). சுவிட்சர்லாந்து: ஆர்.உதயகுமார், Zuricher Str-158, 8406 Winterthur, 1வது பதிப்பு, ஆனி 1998. (சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை).

(2), 111 பக்கம், விலை: இந்திய ரூபா 18., அளவு: 18x12 சமீ.

சாதாரணக் கிராமத்து இளைஞன் ஒருவனது கனவுகள் மணம்பரப்பி, பின்னாளில் இன சாதீய வெறியால் கசக்கப்பட்டுக் கருகியமை தான் இந்தக் கதை. குடத்தனை என்ற கடலோரக் கிராமத்தின் மணத்தை இந்நாவலில் ஆங்காங்கே நுகர முடிகின்றது. சுவிஸ் மண்ணிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com



எழுதப்பட்டுள்ள இந்நாவலில் ஆங்காங்கே புகலிடப் பாதிப்புகளும் தலைகாட்டத் தவறவில்லை.

## 3734

**வினாக்காலம்: கனவுச்சிறையின் இரண்டாம் பாகம்.** தேவகாந்தன். சென்னை: 600 094: இலக்கு வெளியீடு, 87, பஜனைக் கோவில் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை: எம்.எல்.எம். பிரின்டர்ஸ்).

288 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21X14 சமீ.

ஐந்து பாகங்களில் வெளிவந்த கனவுச்சிறை நாவலின் இரண்டாம் பாகம் இதுவாகும். இந்த நாவல் யுத்தத்திற்கானதாகவோ அன்றி சமாதானத்துக்கானதாகவோ எழுதப்படாது சமகால அரசியல் நியாயமொன்றை விசுவாசமாகச் சொல்லியிருக்கின்றது. 1981-2001வரையான 21 ஆண்டுகளில் 21 நூற்றாண்டுகளின் இலங்கைச் சரித்திரத்தை புல்லின் தலைப் பனித்துளியின் பிரபஞ்சப் பிரதிபலிப்பாக இந்நாவல் மீளுருவாக்கம் செய்கின்றது. சமகாலத்து எரியும் அரசியல் பிரச்சினையொன்று, உலகமளாவிய கதை நகர்ச்சியின் மூலம் பேசப்படுகின்ற தமிழ் நாவல் இது. இதர நான்கு பாகங்களாக கனவுச்சிறை (திருப்படையாட்சி), அக்னி திரவம், உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம், என்பன வெளிவந்துள்ளன.

## 3735

**ஜீவஜோதி.** கே.வி.எஸ்.வாஸ். (புனைபெயர்: ரஜனி). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1980. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(4), 208 பக்கம், விலை: ரூபா 7.90, அளவு: 18X12.5 சமீ.

மலைக்கன்னி என்ற நாவலின் தொடர்ச்சியாக இந்நாவல் வெளிவந்திருந்தது. விரகேசரி நாளிதழில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் விறுவிறுப்பானதொரு தொடர்கதையாக வெளிவந்தபோது பாராட்டப்பட்டது. ரஜனி மேலைத்தேய இலக்கியமொன்றைத் தழுவி இந்நாவலை இந்தியப் பண்பாட்டுடனும் வரலற்றுடனும் இணைத்து அழகாகவும் விறுவிறுப்பாகவும் வடிவமைத்திருந்தார். சர்வார்த்த சித்தர் பல வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டறிந்த ஜீவஜோதி மலைக்கன்னியின் ஆயுளை நீடிக்கிறது. ஆனால் அது அவளுக்கு அமரத்துவத்தை வழங்கிவிடவில்லை. புராணங்களில் வரும்



படிப்பகம்

www.padippakam.com



அமரர்களான தேவர்களுக்கும் கூட ஒரு கால எல்லையை இயற்கை நிர்ணயித்திருப்பதைப்போன்று மலைக்கன்னிக்கும் ஒரு கால எல்லை இருந்தது. இயற்கையின் அந்தக் கால எல்லை மலைக்கன்னியிடம் பயங்கர விளைவுகளை பின்னாளில் ஏற்படுத்துகின்றது. இது 70ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்த நாவலாகும்.

## 894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள்

### 3736

**அகலிகை.** க.இரகுபரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: இகில இலங்கை கம்பன் கழகம், கம்பன் கோட்டம், 300, கோவில் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜுலை 1994. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

xxiv, 216 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 18x13 சமீ.

இராமாயணத்தில் வரும் அகலிகை பற்றியமைந்த ஆக்கங்களின் தொகுப்பு இது. இகில இலங்கை கம்பன் கழகம் நடாத்திய கம்பன் விழாவில் 20.07.1994 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களால் வெளியிடப்பட்டது. வேதங்களிலும் பிராமணங்களிலும் ஆங்காங்கே காணப்பட்ட செய்திகளின் அடிப்படையில் அகலிகை வரலாற்றை முதலில் கதை வடிவில் தந்தவர் வால்மீகி முனிவரே. தசரதராமனின் பெருமை உணர்த்தும் சம்பவங்களில் ஒன்றாகவே கௌதம முனிவரின் மனைவியும், இந்திரனிடம் கற்பை இழந்தவளுமான அகலிகையின் வரலாறு கூறப்படுகின்றது. தாடகையை வதம் செய்து விசுவாமித்திர முனிவரின் வேள்வி காத்து மிதிலை நோக்கிச் செல்லும் இராம-லட்சுமணர் வழியில் சிதிலமாகிக் கிடந்த ஆச்சிரமம் ஒன்றைக் கண்டு அது பற்றி விசுவாமித்திரரிடம் வினவ, அவர் அவ்வாச்சிரமத்தைப் பற்றிச் சொல்வதாக வால்மீகி இராமாயண பாலகாண்டத்திற் காணப்படுகின்றது. கம்பனின் படைப்பில் ஸ்ரீ ராமனின் கால்வண்ணம் காட்டுவதற்காக அகலிகை வரலாறு சொல்லப்படுகின்றது.

### 3737

**அங்கே இப்ப என்ன நேரம்?** அ.முத்துலிங்கம். சென்னை 14: தமிழினி, 67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (சென்னை: மணி ஆப்செட்).



படிப்பகம்

www.padippakam.com



343 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 22.5x15 சமீ, ISBN: 81-87641-53-3.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் அ.முத்துலிங்கம், ஈழத்துத் தமிழ் இலக்கியக்களத்தில் சிறந்த சிறுகதையாசிரியராக மதிக்கப்படுபவர். அக்கா, திகடசக்கரம், வம்ச விருத்தி, வடக்கு வீதி, ஆகிய தொகுதிகளும், அ.முத்துலிங்கம் கதைகள் என்ற பாரிய தொகுப்பும் இவரது கதைகளைக் கொண்டு வெளிவந்தவை. சிறுகதைகளுக்கு அப்பால் இவர் எழுதிய 48 கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. சிறுகதை வாசிப்பில் கிடைத்த அதே விறுவிறுப்பும், சுவையும் இவர் எழுதும் கட்டுரைகளிலும் காணப்படுகின்றன. கனடாவில் வாழ்வியல் முறைகள், எதிர்பாராத சந்திப்புகள், ரசனை, பயணங்கள், கண்டதும் கேட்டதும், மொழிபெயர்ப்பு, விமர்சனம், அனுபவக்கதை, சிந்திப்பதற்கு என்று 9 பிரிவாகத் தன் கட்டுரைகளை வகைப்படுத்தி இத்தொகுதியில் வழங்கியுள்ளார்.

## 3738

**அண்மைக்கால அறுவடைகள்.** புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, மே 2001. (கொழும்பு 13: பேஜ் செட்டர்ஸ், 113-1/1, ஜிந்துப்பிட்டி வீதி).

xxvi, 98 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17x12.5 சமீ.

தொண்ணூறுகளில் வெளிவந்த ஈழச் சிறுகதைத் தொகுப்புகள் இருபதின் மீதானதொரு விமர்சனக் கண்ணோட்டம். சம்பந்தன் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள் (செங்கை ஆழியான்), சிறு கை நீட்டி (எம்.ஏ.ரஹ்மான்), அங்கையன் கதைகள், சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள் (அன்ரன் செல்வக்குமார்), பிறந்த மண் (புர்கான் பீ.இ.இஃப்திகார்), மனத்தூறல் (ந.பார்த்திபன்), புதிய வீட்டில் (சோ.ராமேஸ்வரன்), எங்கள் தேசம் (லெ.முருகபூபதி), கொட்டியாரக் கதைகள் (வ.அ.இராசரத்தினம்), மாங்கல்யம் தந்த நீயே (ராணி சீதரன்), கமகநிலா (வேலழகன்), வேட்கை (நீர்வை பொன்னையன்), சிவாவின் சிறுகதைகள் (வண்ணை சே.சிவராஜா), நாட்கள், கணங்கள், நமது வாழ்க்கைகள் (த.கலாமணி), ஏழு சிறுகதைகள், ஒருநாட்போர் (புலோலியூர் க.சதாசிவம்), வரண்டுபோன மேகங்கள் (திக்குவல்லை கமால்) ஆகிய ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் இங்கு அறிமுகமாகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3739

**அறுபத்து நான்கு கலைகளும் கலையாக்கத் திறன்களும்: கலை இலக்கிய ஆய்வு.** கனகசபாபதி நாகேஸ்வரன். யாழ்ப்பாணம்: திருநெறிய தமிழிசைச் சங்கம், கொழும்பு: அகில இலங்கை இந்து மாமன்றம், 1வது பதிப்பு, புரட்டாதி 2004. (கொழும்பு 13: Luxmi Printer, 195, Wolfendhal Street ).

(20), 45 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 190., அளவு: 22x17.5 சமீ.

சப்றகமுவ பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறையின் முதுநிலை விரிவுரையாளரான நூலாசிரியர், 64 கலைகளும் எவை என்பதை எடுத்துரைத்து அவற்றுள் முக்கியமானவை எனக் கருதப்படும் இருபத்தைந்தினை விளக்கும்வகையில் அவை சம்பந்தமாக அவரால் திரட்டி விபரிக்கப்பட்டுள்ள பல தகவல்களையும் தொகுத்தளித்துள்ளார். இடைக்கிடையே தானும் தன் உறவினர்கள் சார்ந்ததுமான புகைப்படங்களையும் நூலாசிரியர் இந்நூலில் சேர்த்துள்ளார்.

## 3740

**ஆர். ஷண்முகசுந்தரத்தின் நாகம்மாள் நாவலும் விமர்சனங்களும்.** கலாலட்சுமி, மதுசூதனன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 11: தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையம், 44 மூன்றாவது மாடி, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, பங்குனி 2002. (மஹரகம: தரஞ்சி பதிப்பகம், நாவின்ன).

vi, 164 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x13.5 சமீ.

கொங்குநாட்டுக் கிராமியமக்கள் வாழ்க்கையை பேச்சுத் தமிழில் பல நாவல்களில் பதித்தவர் இந்திய எழுத்தாளர் ஆர்.ஷண்முகசுந்தரம். அதில் ஒன்று **நாகம்மாள்** என்பதாகும். அந்த நாவலை முழுமையாக இந்நூலில் மீள்பதிப்புச் செய்துள்ளதுடன், ஆர்.சண்முகசுந்தரத்தின் இலக்கியப்படைப்புக்கள் (டி.சி.ராமசாமி), சண்முகசுந்தரத்தின் நாவல்கள் (எஸ்.தோதாத்திரி), ஆர்.சண்முகசுந்தரத்தின் நாகம்மாள் (சி.ஆர்.ரவீந்திரன்), நாகம்மாள் (க.நா.சு.), நாவல் கலை (க.நா.சு), நாகம்மாள் (சி.வன்னியகுலம்), ஆர்.சண்முகசுந்தரததின் நாகம்மாள் நாவல் விமர்சனக்குறிப்பு (ந.இரவீந்திரன்), ஆகிய கட்டுரைகளும் இணைக்கப்பட்டுள்ளன. க.பொ.த. (உ/த) வகுப்புக்கு ஏற்றதாக உருவாக்கப்பட்டுள்ள நூல் இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3741

**ஆருக்குச் சொல்லி அழ.** ஆசைத்தம்பி (இயற்பெயர்: கந்தையா கஜேந்திரன்). பிரான்ஸ்: ஈழமுரசு, பூபாளம் பதிப்பகம், 22 Rue Perdonnet, 75010, Paris, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை)

xxvi, 325 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22x15.5 சமீ.

கப்டன் கஜன் (இயற்பெயர்: கந்தையா கஜேந்திரன், 17.4.1966-26.10.1996) அவர்கள் பாரிஸ் ஈழமுரசுவில் எழுதிய பத்தி எழுத்துக்களின் தொகுப்பு இதுவாகும். புலம்பெயர் தமிழர் சமூகத்தில் இடம்பெறும் அவலங்களை கிண்டலும் விமர்சனமும் கலந்து ஆரோக்கியமான முறையில் அலசும் ஒரு பத்தியாக ஆசைத்தம்பி என்ற புனைபெயரில் இவர் இவற்றை எழுதிவந்தார். பொதுவாகப் பேசுவதற்குப் பலரும் தயங்கும் எமது சமூக அழுக்குகள் பலவற்றைப் பற்றியும், சமூக அக்கறை கலந்த விமர்சனமாகவும் தமிழ்த் தேசிய உணர்வுடன் இணைந்து நின்று சமூகம் பற்றியதும் சமூகத்தின் பிற்போக்குத் தனங்களைப் பற்றியதுமான கருத்துக்களைப் பதிவுசெய்துள்ள இவ்வெழுத்துக்கள் புலம்பெயர் வாழ்வியலின் ஒரு தரிசனமாக விளங்குகின்றன.

## 3742

**இடுதிதீ: அக்கினிப் பிரவேசம்- ஒரு பன்முக நோக்கு.** ஸ்ரீ பிரசாந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: அகில இலங்கைக் கம்பன் கழகம், இராமகிருஷ்ணா தோட்டம், இணைந்து வெளியிட்டவர்கள், கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், இல.202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, யூலை 2004. (கொழும்பு 6: கிறிப்ஸ்).

274 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x13 சமீ.

கம்பராமாயணத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய பகுதியாக விளங்குகின்ற அக்கினிப் பிரவேசம் பற்றி ஈழத்து, இந்திய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. எஸ்.இராமகிருஷ்ணன், அ.ச.ஞானசம்பந்தன், மு.மு.இஸ்மாயில், முதலிய அறிஞர்களின் 17 கட்டுரைகள் தொகுக்கப்பெற்றுள்ளதோடு, பின்னிணைப்பாக கம்பராமாயண யுத்தகாண்ட அக்கினிப் பிரவேசத் தொடர்புப் பாடல்கள் அனைத்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கம்பன் விழாவின்போது 15.07.2004அன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. அகில இலங்கை கம்பன் கழகத்தின் 13வது வெளியீடு இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3743

**இந்துத்துவக்காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்.** ந.இரவீந்திரன். சென்னை 600 006: சவுத் விஷன், 5, குலாம் அபாஸ் அலிகான் 5வது தெரு, ஆயிரம் விளக்கு, 1வது பதிப்பு, ஜுலை 2003. (சென்னை 14: பி.வி.ஆர். பிரிண்டர்ஸ்).

275 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x13.5 சமீ.

யாழ்ப்பாணம் பண்டத்தெருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நடேசன் இரவீந்திரன் (1955) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாவார். மலையகத்தில் 1977இல் ஆசிரியராகச் செயற்படத்தொடங்கிப் பின்னர் வவனியா கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். 1986இல் பாரதியின் மெய்ஞ்ஞானம் என்ற நூலின் வாயிலாக தமிழிலக்கிய உலகில் கால்பதித்த இவர் பாரதியைத் தனது பிரதான ஆய்வுக்குட்படுத்தியவர். இந்நூலில் இந்துத்துவக்காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம், அரசியல் இலக்கியமும் பாரதியும், பாரதி வரலாறு: ஒரு மதிப்பீடு, பாரதியின் மெய்ஞ்ஞானம் ஆகிய நான்கு பிரதான பிரிவுகளுக்குள் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

## 3744

**இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்: படைப்பு, படைப்பாளர்கள் பற்றிய குறிப்புகள்.** சாந்தன். (இயற்பெயர்: ஐயாத்துரை சாந்தன்). கொழும்பு: மூன்றாவது மனிதன் வெளியீட்டகம், 119/15, கெட்டம்பஹுவ வீதி, வெல்லம்பிட்டி, 1வது பதிப்பு, மார்ச் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xx, 118 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 22x15 சமீ.

தமிழிலேயே உலக இலக்கியவலத்தை மேற்கொள்ள சாந்தனின் இச்சிறுநூல் பெரிதும் உதவுகின்றது. தான் படித்த உலக இலக்கியங்கள் பலவற்றைத் தேர்ந்து அத்தியாவசிய விபரங்களுடன் திறனாய்வு அடிப்படையில் சிறு குறிப்புரைகளுடன் தந்திருக்கிறார். இடதுசாரி இயக்கம்சார்பான இலக்கியங்களுக்கும், போராட்டங்களைச் சித்திரிக்கும் படைப்புகளுக்கும் அழுத்தம் கொடுத்துத் தன் தேடலை மேற்கொண்டுள்ள இவர், சோவியத், சீன, வியட்னாமிய இலக்கியங்களையும், அண்மைக்கால ரூஷ்ய இலக்கியங்களையும் பற்றிய முன்னுதாரணங்களைக் காட்டிப் பின்னர் பிற தொடர்பான விபரங்களைத் தருகிறார். ஜேர்மனி, கிழக்கு ஐரோப்பிய நாடுகள்,



படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்க மாநிலங்கள் போன்ற இடத்தவர்களின் முக்கியத்துவம் குறித்து விளக்குகிறார். கறுப்பின இலக்கியம், இலத்தீன் அமெரிக்க, பிரெஞ்சு ஸ்பானிய எழுத்தாளர்கள் உள்ளிட்ட உலக இலக்கியவாதிகள் பலரையும் பற்றிக் குறிப்பிடுகிறார்.

## 3745

**இலங்கை தமிழ் இலக்கிய வரலாறு.** சாந்தையூரான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: பிரைட் புக் சென்டர், எஸ்.-27, முதலாவது தளம், Colombo Central Super Market Complex, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 72 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21X14 சமீ.

இலங்கை தந்த இலக்கியம் (மு.வரதராசனார்), பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை கண்ட சி.வை.தாமோதரம்பிள்ளை, இலங்கையில் தமிழ் வளர்ச்சி (க.கணபதிப்பிள்ளை), ஈழத்து இலக்கிய வரலாற்றில் நான்கு தசாப்தங்கள், இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகள், குழந்தை இலக்கியம், இலங்கைத் தமிழ் நாவல்கள், தமிழில் நாடக வளர்ச்சி, ஈழத்தில் தமிழ்க் கவிதை வளர்ச்சி, 20ம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை, ஈழத்தில் தமிழ் நாடக வளர்ச்சி, யாழ்ப்பாணத்து பதுறுத்தீன் புலவர், முஹம்மது காஸிம் சித்தி லெப்பையின் கவிவளம் ஆகிய கட்டுரைகள் இந்த உப பாடநூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 3746

**இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண்பாத்திரங்கள்.** செ.யோகராசா. மட்டக்களப்பு: குறிஞ்சி நிலாப் பதிப்பகம், 48/2, பெய்லி வீதி, 1ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 2003. (மட்டக்களப்பு: ஏ.ஈ.ரெக் மறுதோன்றி அச்சகம், 28 பார்க் வீதி, செலான் வங்கி அருகாமை).

iv, 59 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21X15 சமீ.

1998ம் ஆண்டளவில் பெண்கள் கல்வி ஆய்வு வட்டக் கருத்தரங்கிலே ஆற்றிய சுருக்கமான உரை, விரிந்த வடிவமாகி நூலுருக்கொள்கின்றது. நூலாசிரியர் கலாநிதி செ.யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையில் பணியாற்றுபவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3747

**இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்.** எஸ்.ஏ.செய்யிது ஹசன் மௌலானா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

(4), 259 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 18X12.5 சமீ.

200க்கும் மேற்பட்ட முஸ்லீம் தமிழ்ப் புலவர்கள் தமிழுக்குச் செழுமை சேர்த்துள்ளார்கள். இவர்களுள் 15 புலவர்களுடைய தமிழ் முயற்சிகள் இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. முஸ்லிம் புலவர்கள் இயற்றிய இன்பத்தமிழ்க் கவிதைகளை முஸ்லீம்களும், அல்லாதோரும் சுவைப்பதற்கு ஏற்ற நுழைவாயிலாக இந்நூல் அமைகின்றது.

## 3748

**ஈழகேசரித் தமிழ்.** அ.சண்முகதாஸ். குரும்பசிட்டி: சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, மார்ச் 1992. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

10 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14 சமீ.

1946-47ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஈழகேசரி இதழ்களைத் தரவுகளாகக் கொண்டதொரு ஆய்வு. ஈழகேசரி பொன்னையா நினைவுப் பேருரையாக 29.03.1992இல் நிகழ்த்தப்பட்டது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.

## 3749

**ஈழத்து இலக்கிய தரிசனம்.** துரை மனோகரன். பேராதனை: கலாநிதி துரை மனோகரன், தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (Muruthagahamulla 20526: Vardha Printers and Publishers, 85C Pitunugama).

vii, 107 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18X12.5 சமீ.

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் யாழ்ப்பாண மன்னர் காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான சில ஈழத்து இலக்கியங்கள் பற்றிய பார்வைகளாக அமைந்துள்ளன. ஈழத்து இலக்கியம் பற்றிய குறுக்கு வெட்டுமுகத் தோற்றமொன்றினை இந்நூல் தருகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஒரு பொதுப் பார்வை, அரசகேசரியின் இரகுவம்மிசம், ஈழத்துப் பள்ளு நூல்கள், வெருகல் சித்திரவேலாயுதர் பற்றிய 17ம் நூற்றாண்டு இலக்கியம், வரதபண்டிதரின் இலக்கிய சமய நூல்கள், இணுவை சின்னத்தம்பிப்புலவரின் பஞ்சவன்னத் தூது, இருபெரும் புலவர்கள் (உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், யாழ்ப்பாணம் பதுறுத்தீன் புலவர்), சம்பந்தனின் சிறுகதைகள் ஒரு நோக்கு, மலையகத்தின் இரு சிறுகதைகள் (என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தை ஜோசப்) ஆகிய 9 கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன.

## 3750

**ஈழத்து இலக்கிய வளர்ச்சி.** கனக செந்திநாதன். கொழும்பு: அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1964. (கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ்).

xxiv, 208 பக்கம், தகடுகள், விலை: ரூபா 3.50., அளவு: 18.5x12.5 சமீ.

**ஈழத்து இலக்கிய வளர்ச்சி.** கனக செந்திநாதன். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை, 1வது பதிப்பு டிசம்பர் 2000. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

240 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ., ISBN: 1 876626 13 5.

1891இல் வெளிவந்த ஊசோன் பாலந்தை கதை தொடக்கம், 1964ம் ஆண்டுவரை வெளிவந்த இலக்கியங்கள் பற்றிய தகவலும் திறனாய்வுக் கருத்துக்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

ஈழகேசரி நா.பொன்னையா அவர்கள் பிறந்த குரும்பசிட்டியில் 1916ம் ஆண்டு பிறந்த கனக செந்திநாதன், சோ.சிவபாதசுந்தரத்தின் அரவணைப்பில் எழுத்துத்துறையுள் புகுந்தவர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையிடம் படித்து இலக்கிய இரசனை பெற்ற இவர் ஒரு நடமாடும் வாசகசாலை என்று பலராலும் புகழப்பெற்றவர். இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வரலாறு குறித்து முழுத்தகவல்களையும் அரிதில் முயன்று இந்நூலிலே இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் திரட்டியுள்ளார். 1922-1960 வரையும், 1960இன் பின்னரும் என இவரது இலக்கிய வளர்ச்சிக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3751

**ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடி பாவலர் துரையப்பாபிள்ளை.** எஸ்.சிவலிங்கராஜா. தெல்லிப்பழை: மகாஜனக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுன் 2001. (சுன்னாகம்: டெல்டா கொம்பியூட்டர் பிரின்ட், மயிலணி)

(2), 20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் 24.06.2001இல் வழங்கிய எட்டாவது பாவலர் துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரையின் நூல் வடிவம்.

## 3752

**ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாறு: ஓர் அறிமுகம்.** பொ.கமலரூபன். கரவெட்டி: கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம், கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1வது பதிப்பு, மார்கழி 2002. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், மல்றறி ஓப்செட், நெல்லியடி).

viii, 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பின்படிப்பைத் தொடரும் வேளையில் அகால மரணமான ஆய்வாளர் பொ.கமலரூபன் அவர்களது ஆய்வுக் கட்டுரையின் நூலுரு இதுவாகும். கமலரூபன் பற்றிய அறிமுகத்தை குப்பிழான் ஐ.சண்முகம் எழுதியுள்ளார். த.ஜெயசிலனின் "ஒரு கவிஞனின் பார்வையில் கமலரூபன்" என்ற கவிதையும், பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் "கவிதையும் தத்துவமும்" என்ற கட்டுரையும் பின்னிணைப்பாக இடம்பெற்றுள்ளன. இவரது "எண்பதுக்குப் பின்னர் ஈழத்துப் புதுக்கவிதை" என்ற மற்றொரு ஆய்வும் முன்னர் நூலுருவாகியுள்ளது. அந்த ஆய்வு நூலுக்கு கவிஞர் இ.முருகையன் அவர்கள் வழங்கிய "எண்பதுக்குப் பின்னர் ஈழத்துப் புதுக்கவிதை" என்ற திறனாய்வுக் கட்டுரையும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது.

## 3753

**உலகம் யாவையும்.** இலங்கை ஜெயராஜ் (இயற்பெயர்: இ.ஜெயராஜ்). சென்னை 17: வானதி பதிப்பகம், இல. 23, தீனதயாளு தெரு,



படிப்பகம்

www.padippakam.com



தியாகராய நகர், 1வது பதிப்பு, மே 2004. (சென்னை 05: மணி ஓப்செற்).

xxx, 218 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12.5 சமீ.

ஈழத்தின் புகழ்பெற்ற பேச்சாளரான கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுடைய ஒன்பது கம்பராமாயணக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கட்டுரைகளுள் சில இரசனை சார்ந்தவை. சில ஆய்வு நோக்கிலானவை. குறிப்பாக, கம்பராமாயணத்தில் முக்கியத்துவம் பெறும் பெண் பாத்திரங்கள் விரிவாக ஆராயப்பெற்றுள்ளன. "சிறந்த தீயாள்" என்ற தலைப்பில் கைகேயியும், "நெஞ்சினால் பிழைப்பிலாள்" என்ற தலைப்பில் அகலிகையும், "நெருப்பைச் சுட்ட நெருப்பு" என்ற தலைப்பில் சீதையும், "மயன் மகள்" என்ற தலைப்பில் மண்டோதரியும் சிறப்புற எடுத்துக் காட்டப்பெற்றுள்ளனர். பேராசிரியர் ஔவை நடராசன் வழங்கிய வாழ்த்துரையும், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் எழுதிய கடிதம் ஒன்றும் நூலின் முன்னீடாகத் தரப்பட்டுள்ளன.

## 3754

**கதாகாலம்: மகாபாரதத்தின் மறுவாசிப்பு.** தேவகாந்தன். கனடா: காலம், 16, Hampstead Court, Ontario L3R 357, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

xvi, 159 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

நமது சமூகத்தின் உயிர்த்துடிப்புள்ள அம்சங்களில் ஒன்றான மகாபாரத இதிகாசத்தின் சாரத்தையும், ஜீவனையும் உள்வாங்கி அதை உகந்த முறையில் மீள்சிருஷ்டி செய்து, சுருள்வில்லைப் போன்ற விசைமிகு மொழிநடையுடன் மறுவாசிப்புச் செய்யும் முயற்சி இதுவாகும். தமிழில் மறுவாசிப்பு தொடர்பான பிரக்ஞைகள் உருவாகிவரும் இத்தருணத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பங்களிப்பாக கதாகாலம் வெளிவந்துள்ளது. மறுவாசிப்பு முயற்சிகள் அறவே இல்லாத ஈழத்துத் தமிழிலக்கியச் சூழலுக்கு மகாபாரதத்தின் மறுவாசிப்பாக அமையும் கதாகாலம் என்னும் தேவகாந்தனின் இப்படைப்பு நல்லதொரு ஆரம்பமாக அமைகின்றது.

## 3755

**கம்ப களஞ்சியம்.** க.இரகுபரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கை கம்பன் கழகம், கம்பன் கோட்டம், 300, கோவில்



படிப்பகம்

www.padippakam.com



வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1993. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

xviii, 104 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 18.5x12.5 சமீ.

கம்பன் பற்றிய ஆக்கங்களின் தொகுப்பு. இது அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்திய கம்பன் விழாவில் 2.4.1993 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவராகவிருந்த பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களால் வெளியிடப்பட்டது. கம்பராமாயணத்தினூடாக பிரபல்யமான கம்பனது பிற இலக்கியங்களையும் பற்றி அறிந்துகொள்வதற்கு இந்நூல் உதவுகின்றது. ஏர் எழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி அந்தாதி, சடகோபரந்தாதி, மும்மணிக்கோவை, என்னும் நூல்கள் பற்றியும் கம்பரின் மேலும் பல தனிப்பாடல்கள் பற்றியும் இந்நூல் விளக்குகின்றது.

## 3756

**கம்பமலர்: 15ம் ஆண்டு நிறைவுவிழா மலர் 1980-1995.** க.இரகுபரன் (பதிப்பாசிரியர்), கல்வயல் வே.குமாரசுவாமி (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கைக் கம்பன் கழகம், 1வது பதிப்பு,1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

372 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் வரலாற்றுப் பதிவேடாகவும் அறிஞர் பெருமக்களின் ஆழ்ந்த கருத்துக்களைத் தாங்கிய இலக்கியக் கருவூலமாகவும் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. 1980 முதல் 1995 வரை, 15 ஆண்டுகளாக இவ்வமைப்பு கடந்துவந்த வளர்ச்சிப் பாதையைப் பதிவுசெய்யும் புகைப்பட ஆவணத் தொகுப்பையும், கம்பன் கழகத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த நிர்வாகிகளின் விபரங்களையும், இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளையும் இப்பெருநூல் கொண்டுள்ளது.

## 3757

**கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: திருவடி சூட்டு படலம்.** த.துரைசிங்கம் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர்



படிப்பகம்

www.padippakam.com



1995. (கொழும்பு 12: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, ஜீ.எல். 1-2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(133), 28 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21X14 சமீ.

கம்பரின் அற்புதப் படைப்பான கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. அதன் இரண்டாவது காண்டமான அயோத்திய காண்டம், மந்திரப்படலத்தில் தொடங்கி திருவடி சூட்டுப் படலத்தில் முடிகின்றது. திருவடி சூட்டுப்படலத்தில் இடம்பெற்றுள்ள செய்யுள்களுக்கு பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என்பன இந்நூலில் தரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் மாதிரி வினாக்களும், விடைகளும், பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன.

## 3758

**கம்பன் அபரபிரமன்.** சி.கணபதிப்பிள்ளை (மூலம்), ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கை கம்பன் கழகம், இல. 300, கோவில் வீதி, நல்லூர், இணைந்த வெளியீட்டாளர்: கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, ஸ்ரீ ரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xix, 639 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 22.5X15 சமீ.

ஈழத்தின் புகழ்பெற்ற தமிழ் அறிஞரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய கம்பராமாயணக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுள்ள நூல். கம்பராமாயணக் காட்சிகள் என்ற தலைப்பிலான கதை தழுவிய கவிநயக் கட்டுரைகள் 118 நூலின் முதற் பகுதியாகவும், பிற தனிக் கட்டுரைகள் 10 நூலின் இரண்டாம் பகுதியாகவும் தரப்பட்டுள்ளன. இதுவரை நூல்களாக வெளிவராத பண்டிதமணியின் கட்டுரைகள் சில, சிறப்பு மலர்களிலிருந்து பெறப்பட்டும் இணைக்கப்பட்டுள்ளன.

## 3759

**கம்பன் மலர் 2000.** க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: அகில இலங்கைக் கம்பன் கழகம், 11 இராமகிருஷ்ணா தோட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



(6), 242 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21.5 சமீ.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் இருபதாண்டு நிறைவு வெளியீடாக 1980-2000 காலப்பகுதியின் வரலாற்றுப் பதிவாக இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. கம்பர், அவரது இலக்கியப் படைப்புக்கள், குறிப்பாக கம்பராமாயணம் ஆகியன பற்றிய ஆழமானதும், ஆய்வுக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டதுமான ஏராளமான இலக்கியக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 3760

**கம்பனைப் போல்: கம்பனைப் பற்றிய ஒரு ஒப்பியல் ஆய்வு.** ஸ்ரீ பிரசாந்தன். (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: அகில இலங்கைக் கம்பன் கழகம், 11 இராமகிருஷ்ணா தோட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xviii, 370 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 18x13 சமீ.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனைப் பிற கவிஞர்களுடன் ஒப்பிட்டு எழுதப்பெற்றுள்ள கட்டுரைகளின் தொகுப்பு நூல். கம்பனுடன் பிற தமிழ்மொழிக் கவிஞர்களும், இந்தியாவின் பிறமொழிக் கவிஞர்களும், சர்வதேச அளவில் புகழ்பெற்றுள்ள கவிஞர்களும் இந்நூலில் ஒப்பிடப்பெற்றுள்ளனர். ஈழத்து, இந்திய அறிஞர்கள் எழுதியுள்ள 32 கட்டுரைகள் இந்நூலில் உள்ளன. வ.வே.சு.ஐயர், எஸ்.வையாபுரிப்பிள்ளை, எஸ்.இராமகிருஷ்ணன், ம.பொ.சிவஞானம், அ.ச.ஞானசம்பந்தன் முதலிய அறிஞர்கள் பலருடைய கட்டுரைகள் ஒரே பார்வையில் இந்நூலின் மூலம் கிடைக்கின்றன. கம்பன் விழாவின்போது 16.04.2003 அன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. அகில இலங்கை கம்பன் கழகத்தின் 12வது வெளியீடு இதுவாகும்.

## 3761

**கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்.** ந.இரவீந்திரன். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் விஷன், 6, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (சென்னை 05: மணிஆப்செட் பிரிண்டர்ஸ்).

xvi, 120 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் இலக்கியமும் பாரதியும், பாரதி வரலாறு: ஒரு மறுமதிப்பீடு, இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ப் புனைகதை இலக்கியம், ஜெயமோகன்: திசையழிந்த அத்துவான வெளியில், கலாச்சாரம், எதிர்க் கலாச்சாரம், புதிய கலாச்சாரம் ஆகிய ஐந்து கட்டுரைகளையும் திலகரும் காந்தியும் சந்திப்பு, 1966 அக்டோபர் எழுச்சி ஆகிய இரு பின்னிணைப்புகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

## 3762

**கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள்: தொகுதி 1.** நா.சுப்பிரமணியன் (மூலம்), கௌசல்யா சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்). சென்னை 600086: சவுத் விஷன், 132, அவ்வை சண்முகம் சாலை, புது எண் 251, கோபாலபுரம், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (சென்னை 600017: மாணவர் நகலகம்).

xvii, 502 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 20X14 சமீ.

கடந்த கால்நூற்றாண்டுப் பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தேவைகளுக்காக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், சொற்பொழிவு உரைகள், நூல்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரைகள், அணிந்துரைகள், மதிப்புரைகள் முதலிய வகைகளில் அமைந்த எழுத்துக்களின் தொகுப்பு. இத்தொகுப்பு, நூலாசிரியரின் பன்முக ஈடுபாடுகள், பலதளப் பார்வைகள் மற்றும் அப்பார்வைகளில் நிகழ்ந்துள்ள வளர்ச்சி நிலைகள், மாற்றங்கள் என்பவற்றை இனம்காட்டும் தரவுகளாக அமைவன. ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள் என்று மூன்று பகுதிகளாக இவ்வாக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. முதலாம் பகுதியில் திறனாய்வியலும் இலக்கியமும், யாப்பியல், இசையியல், அறிவியல் தமிழ், ஆன்மீகம், சமயம், அறவியல் என்பவை சார்ந்த 16 கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இரண்டாம் பகுதியில் 9 கட்டுரைகளில், பகவத்கீதை, சங்கரர், இராமாநுஜர், பாரதி, உமாபதி, புதுமைப்பித்தன், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், எம்.எம்.தண்டபாணி தேசிகர் ஆகியோர் பற்றிய பார்வைகள் பதிவாகியுள்ளன. 3ம் பகுதியில் ஆய்வுகள், அனுபவப் பதிவுகள் என்பனவாக அமைந்த நூல்கள், படைப்புக்கள் தொடர்பான 16 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 41 கட்டுரைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3763

**கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள்: தொகுதி 2.** நா.சுப்பிரமணியன் (மூலம்), கௌசல்யா சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்). சென்னை 600086: சவுத் விஷன், 132, அவ்வை சண்முகம் சாலை, புது எண் 251, கோபாலபுரம், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (சென்னை 600017: மாணவர் நகலகம்).

xviii, 458 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 20X14 சமீ.

ஈழம் சார்ந்த எழுத்தாக்கங்களைக் கொண்ட இந்த இரண்டாவது தொகுதியில் 50 ஆக்கங்கள் 45 தலைப்புக்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பண்டைய இலக்கிய வரலாறு, அதன் தொடர்நிலையான புலமை மரபு என்பவற்றைச் சார்ந்த எழுத்துக்கள் முதற் பகுதியாகவும், நவீன இலக்கியம் மற்றும் நவீன ஆய்வியற் சூழல் என்பன சார்ந்த எழுத்துக்கள் இரண்டாவது பகுதியாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

## 3764

**கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள்: ஓர் ஆய்வு.** அகளங்கன். (இயற்பெயர்: நா.தர்மராஜா). தெகிவளை: அன்னை வெளியீட்டகம், 16, School Avenue, Off Station Road, 1வது பதிப்பு, மே 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

xvi, 104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5X14 சமீ.

அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய 6ம் மகாநாட்டில் வெளியிடப்பட்ட நூல். கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் படைத்த பல்வேறு கவிதை, காப்பியங்கள் இன்று பிரபல்யமான இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களாக விளங்குகின்றன. அவர் எழுதிய மஹ்ஜபீன் காவியம், புனித பூமியிலே என்னும் காவியங்களுக்கு அகளங்கன் எழுதிய நயவுரையே இந்நூலாகும். கவிஞர் ஜின்னாஹ்வின் கவிதைகளின் சிறப்பைப் பழந்தமிழ்ப் புலவர்கள், சமகாலக் கவிஞர்கள் ஆகியோர் பாடிவைத்த சில கவிதைகளோடு ஒப்புநோக்கி, உரசிப் பார்த்து நயந்திருக்கிறார். அகளங்கன் வவுனியா பம்பைமடு என்னும் தமிழ் மண்ணில் பிறந்து, தான் பிறந்த மண்ணுக்குப் புகழ் சேர்ப்பவர். தமிழ்மணி, கவிமாமணி, காவிய மாமணி, திருநெறிய தமிழ் வேந்தர் ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3765

**குறள் வழி வாழ்வு.** வ.இராசையா. கொழும்பு 6: அரவிந்தம் வெளியீட்டகம், 40, லில்லி அவெனியு, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு: கிரிப்ஸ்).

168 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

50 குறள் கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் இது. இக்கட்டுரைகள் கனடாவின் சைவ சித்தாந்த மன்ற வெளியீடான அன்புநெறி மாசிகையில் தொடராக வெளிவந்தவை. திருக்குறளுள் பொதிந்துள்ள சிந்தனைக் கருக்களை ஏற்ற இடங்களில் சமகால எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியிருப்பது தெளிவான விளக்கத்தை வாசகர் பெற உதவுகின்றது. குறிப்பாக குறள்களின் சொற்பதங்களில் பதம் மாற்றி, விரிந்த பொருளில் குறளின் உட்பொருளை மெருகூட்டித் தருவது சிறப்பாக உள்ளது. பண்டைய இலக்கிய நூலின் வாழ்வியற் பண்புகளை வருங்காலச் சந்ததியிரும் படித்துப் பயன்பெறும் வகையில் நூலாக்கித் தந்துள்ளார். பயிற்றப்பட்ட தமிழாசிரியரான வ.இராசையா அவர்கள் 34 வருடங்களுக்கு மேலாக கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ற் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் வானொலி அண்ணாவாக இளைஞர் மன்ற நிகழ்ச்சிகளையும், வானொலி மாமாவாக சிறுவர்மலர் நிகழ்ச்சிகளையும் மற்றும் கல்விசார் நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கியுள்ளார்.

## 3766

**சங்க இலக்கிய ஆய்வுகள்.** அ.சண்முகதாஸ் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏசியன் புக்ஸ், 44, மூன்றாம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002, (கொழும்பு: கௌரி அச்சகம்).

ix, 190 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-8637-15-7.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய பேராசிரியர் க.கைலாசபதி நினைவுக் கருத்தரங்கிற் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு. இக்கருத்தரங்கு அமரர் கைலாசபதியின் பதினோராவது நினைவு ஆண்டான 1993இல் இடம்பெற்றது. சங்க இலக்கியத்தில் நோக்கு என்னும் செய்யுளுறுப்பு (பண்டிதர் க.சச்சிதானந்தன்), சங்க



படிப்பகம்

www.padippakam.com



இலக்கியங்களிலே ஒழுக்கவியற் கோட்பாடுகள் (வித்துவான் க.சொக்கலிங்கம்), சங்க இலக்கியங்களில் தோழி (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), பழந்தமிழர் வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும் (கி.விசாகரூபன்), சங்கச் செய்யுள் வடிவங்களும் மொழியும் (பேராசிரியர் அ.சண்முகதாஸ்), யப்பானிய அகப்பாடல் மொழிபெயர்ப்புக்குச் சங்கப்பாடல் மரபு பற்றிய அறிவின் இன்றியமையாமை (மனோன்மணி சண்முகதாஸ்), ஈழத்திற் காணப்படும் சங்ககால முதுமக்கட் தாழிகள் (பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்), வழுக்கையாற்றுப் பிராந்தியத்திற் சங்ககாலப் படிமங்கள் (செ.கிருஷ்ணராஜா) ஆகிய எட்டு ஆய்வுக்கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இது தேசிய கலை இலக்கியப் பேரவையின் 99ஆவது நூலாகும்.

## 3767

**சங்ககால சமூகமும் இலக்கியமும்: ஒரு மீள்பார்வை.** சி.மௌனகுரு. கொழும்பு 6: தமிழ்ச்சங்கம், 7, 57வது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, மே 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*44 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *955-8564-12-5.*

இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும் என்ற ஆய்வுரைத் தொடரில் 27.4.2003அன்று கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் நிகழ்த்திய உரை. வெளியீட்டு இலக்கம் 36. இக்கட்டுரையில் தமிழ்நாட்டில் இதுவரை நடந்தேறியுள்ள அகழ்வாய்வுப் பின்னணியில் சங்க இலக்கியங்களைப் புரிந்துகொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

## 3768

**சாயியின் குரலும் வள்ளுவர் குறளும்.** நந்தி. யாழ்ப்பாணம்: சாயி மார்க்கம், இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம், 681/2, பருத்தித்துறை வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (கொழும்பு 6: ஈ.சரவணபவன், சுடர் ஒளி பதிப்பகம், 36/2, பிரெட்ரிகா வீதி).

*101 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *955 8450 00 6.*

இது மனித மேம்பாட்டுக்கல்வி சம்பந்தப்பட்ட நூல். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவப்



படிப்பகம்

www.padippakam.com



பேராசிரியராகவும், இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின் ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் தேசிய ஆலோசகராகவும் பணியாற்றியவர் அமரர் நந்தி அவர்கள். பகவான் சத்திய சாயி பாபாவின் சனாதன போதனைகளை திருவள்ளுவரின் பார்வையினூடாக ஆராய்ந்து சனாதன தர்மத்தின் சிறப்பினை இந்நூலில் விளக்குகின்றார். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளை வைத்து அமையும் பகவானின் போதனைகள் திருவள்ளுவரின் வாய்மொழியின் உதவியுடன் மீள்விளக்கம்பெறுகின்றன.

## 3769

**சிவசேகரத்தின் விமர்சனங்கள்-2.** *சிவானந்தம் சிவசேகரம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல.44, 3வது மாடி,* CCSM Complex, *1வது பதிப்பு, தை 2002. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், வெள்ளவத்தை).*

*104 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *955-8637-00-9.*

*சிவசேகரத்தின் விமர்சனங்கள் முதற்தொகுதி 1995இல் வெளியிடப்பட்டிருந்தது. இரண்டாவது தொகுதியான இந்நூலில் உள்ள இருபது விமர்சனங்களும் முன்னையதைப் போலவே வேறுபடும் அளவுகளில் சமூக-அரசியல் பார்வைகளை முன்நிறுத்தி எழுதப்பட்டுள்ளன. தகவல்களினதும் ஆய்வுகளினதும் விளக்கங்களின் செம்மையை விமர்சகர் கேள்விக்குள்ளாக்கியுள்ளார். இந்நூல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 85ஆவது வெளியீடு.*

## 3770

**சென்ற காலத்தின் பழுதிலாத்திறம்: இலக்கியக் கல்விக்கான துணைநூல்: தொகுதி 1.** *மனோன்மணி சண்முகதாஸ். யாழ்ப்பாணம்: மனோன்மணி சண்முகதாஸ்,* Higher Education Service Centre, *1வது பதிப்பு, 2001. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம்).*

*(2), 164 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*க.பொ.த.உயர்தர வகுப்பிற்குரிய தமிழ்ப் பாடத் துணைநூல் (புதிய பாடத்திட்டம்). ஊழிபெயரினும் தாம் பெயரார், செம்மையின் திருவடித் தலம், ஒழிபு இயல் ஆகிய மூன்று தலைப்புக்களின்கீழ்*



படிப்பகம்

www.padippakam.com



இதில் பண்டைத் தமிழ் இலக்கியம் பற்றிய அறிவைத்தேடும் மாணவர்களுக்கேற்ற தகவல்கள் தரப்பட்டுள்ளன.

## 3771

**சொன்னாற் போல-02.** கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

viii, 100 பக்கம், விலை ரூபா 150., அளவு: 17x12 சமீ.

தினக்குரல் நாளிதழில் வெளிவந்த சிவகுமாரனின் பத்தி எழுத்துக்களின் தொகுப்பு. இலங்கையின் தமிழ் ஒலிபரப்புத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த திறமைசாலிகளை இந்நூல் இன்றைய சந்ததியினருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றது. நூலாசிரியரின் அனுபவத் தொகுப்பாக வெளிவந்துள்ள இவ்வெழுத்துக்கள் வானொலியில் சில அனுபவங்கள், அமெரிக்காவில் சில அனுபவங்கள், நூல் நுகர்வில் சில, மற்றுஞ்சில நுகர்வுகள், நுகர்ந்த சிற்றேடுகளிற் சில ஆகிய பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 3772

**டானியலின் எழுத்துக்கள்.** செ.திருநாவுக்கரசு. யாழ்ப்பாணம்: செ.திருநாவுக்கரசு, 1வது பதிப்பு, ஜுன் 2004. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் அச்சகம், இல. 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

vi, 300 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x15 சமீ., ISBN: 955-98673-0-X.

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைத் தாயகமாகக் கொண்ட கலாநிதி செ.திருநாவுக்கரசு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். ஈழத்துத் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் 20ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின் பங்களிப்பினை ஆராய்ந்து முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், எழுத்தாளர் அமரர் கே.டானியலின் படைப்புக்களை ஆராய்ந்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்று அந்த ஆய்வினை நூலுருவாக்கியுள்ளார். ஆறு இயல்களில் டானியலின் ஆளுமை உருவாக்கம், டானியலின் எழுத்துக்களின் உள்ளடக்கம், டானியலின் எழுத்துக்களில் நாட்டார் வழக்கியல் பண்பாட்டுக் கூறுகள், டானியலின் புனைதிறன், ஆய்வு நிலையில் டானியல் ஆகிய அம்சங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3773

**தமிழர் வாழ்வில் தமிழ்.** வே.பரமநாதபிள்ளை (தொகுப்பாசிரியர்). கிளிநொச்சி: கிளிநொச்சித் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (கந்தபுரம்: சி.க.கூ.ச.சமாச அச்சகம்).

(10), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

தமிழர் வாழ்வில் தமிழ் என்ற தனது கட்டுரையுடன் குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விசுவநாதம், ஔவை துரைச்சாமிப்பிள்ளை, மு.வரதராசனார், மா.இராசமாணிக்கம், பாரதியார், பாரதிதாசன், ஆகியோரின் கருத்தோவியங்களை இந்நூலில் தொகுத்திருக்கின்றார். வட்டுக்கோட்டை சிந்துபுரத்தை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வே.பரமநாதபிள்ளை, கிளிநொச்சி அரச செயலகத்தில் நிர்வாக உதவியாளராகப் பணிபுரிந்தவர். தமிழ் வளர்ச்சி கருதிக் கிளிநொச்சித் தமிழ்ச் சங்கத்தை நிறுவ உழைத்தவர். அந்தச் சங்கத்தின் முதலாவது நூலாக இது வெளிவருகின்றது.

## 3774

**தமிழின் நவீனத்துவம்.** தர்மோ ஜீவராம் பிருமிள் (மூலம்), காலப்ரதீப் சுப்ரமணியன் (தொகுப்பாசிரியர்). அந்தியூர் 638 501: லயம் வெளியீடு, நகலூர், பெரியார் மாவட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1986. (சென்னை 600015: பாரிஜாதம் அச்சகம்).

219 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.

தமிழகத்தின் சிசு.செல்லப்பா அவர்களின் "எழுத்து" சஞ்சிகையில் 1960-1967 காலப்பகுதியில் இடம்பெற்ற இலக்கிய விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். திருக்கோணமலையைப் பிறப்பிடமாகவும், தமிழகத்தை வாழ்விடமாகவும் கொண்ட பிரமிள் தர்மசிவராமூ என்ற பெயரில் இக்கட்டுரைகளை எழுதியிருந்தார். தமது விமர்சனங்களுக்கு ஆதாரமாக விமர்சனச் சித்தாந்தம் ஒன்றைச் சிருஷ்டித்தபடியே பிரமிள் தன் பார்வையை வெளியிடுவதை இத்தொகுப்பிலுள்ள 20 கட்டுரைகளிலும் அவதானிக்க முடிகின்றது. அனுபந்தமாக, தொகுப்பாசிரியர் எழுத்து இதழின் காலத்திற்கு முன்னும் பின்னும் பிரமிளின் விமர்சனக் கட்டுரைகளின் பாணிபற்றி எழுதிய உரை இடம்பெற்றுள்ளது. தொகுப்பாசிரியரான தமிழகத்தைச் சேர்ந்த காலப்ரதீப் சுப்ரமண்யன் ஒரு இளந்



படிப்பகம்

www.padippakam.com



தலைமுறை எழுத்தாளர். லயம் பத்திரிகையின் ஸ்தாபகரும் ஆசிரியருமாவார். பிரமிளின் கவிதைகளில் தம் கலாநிதித் தேர்வுக்கான ஆய்வினை மேற்கொண்டவர்.

**3775**

**திருக்குறள் அகராதி.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

XX, 124 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு.இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் திருக்குறள் அகராதி என்ற நூல் இடம்பெற்றுள்ளது. இந்நூல் திருக்குறள் சொல்லடைவை (பொருளுடன்) அகரவரிசைப்படி நிரல்படுத்தித் தருகின்றது. (ந.சி.க. நூல் திரட்டு 18)

**3776**

**திருக்குறள் மாநாடு 2000: சிறப்புமலர்.** சோ.சந்திரசேகரம், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், சற்சொரூபவதி நாதன், ஆ.கந்தசாமி (மலர்க்குழு). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

(5), 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21.5 சமீ.

2000ம் ஆண்டு டிசம்பர் 2-3ம் திகதிகளில் கொழும்பில் சிறப்புற நடந்தேறிய திருக்குறள் மாநாட்டு நினைவாக வெளியிடப்பட்ட சிறப்புமலர். திருக்குறள் பற்றியும் திருவள்ளுவர் பற்றியும் இலக்கிய ஆர்வலர்களால் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3777

**திருவள்ளுவர்: திருக்குறள்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xvi, 384 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 22X14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் திருவள்ளுவர் (1948), திருக்குறள் (1949) ஆகிய இரண்டு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 15)

## 3778

**நாம் ஏன் எழுதுகின்றோம்?** நீர்வை பொன்னையன். கொழும்பு 5: மீரா பதிப்பகம், c-3/5, அன்டர்சன் தொடர்மாடி, பார்க் வீதி, நாரஹேன்பிட்டி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

vi, 118 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 17X12 சமீ.

வன்னிப் பிரதேசத்திலிருந்து 1970களில் வெளிவந்த "களனி" என்ற இலக்கியச் சஞ்சிகையிலும், 1975ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டு மலராகிய புதுமை இலக்கியத்திலும், "விபவி" கலாச்சார மையத்தின் செய்தி ஏட்டிலும் வெளிவந்த கலை இலக்கியக் கட்டுரைகளில் பதினைந்து இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தான் பார்த்து, அனுபவித்த, பங்குபற்றிய, போராட்ட அனுபவங்களைக் கட்டுரைகளாக இங்கு தந்திருக்கிறார்.

## 3779

**பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும்.** மேமன்கவி (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: மல்லிகைப் பந்தல், 201 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 13 யு.கே.பிரிண்டர்ஸ், 98A, விவேகானந்தா மேடு).



படிப்பகம்

www.padippakam.com



118 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x12.5 சமீ., ISBN: 955-8250-13-9.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்ட பட்டத்தை அவர் மறுதலித்தது தொடர்பாகப் பத்திரிகைகளும், இலக்கிய ஆர்வலர்களும் வெளியிட்ட கருத்துக்களும், சர்ச்சைகளும், எதிர்காலத் தலைமுறைக்கான காலத்தின் பதிவுகளாக இந்நூலில் ஆவணமாக்கப்பட்டுள்ளன.

## 3780

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் புலமையியல்: ஓர் ஆய்வு.** இரா.வை.கனகரத்தினம். பேராதனை: இரா.வை.கனகரத்தினம், தமிழ்த்துறை, இலங்கைப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, சித்திரை 2004. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

xxiv, 125 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19x13 சமீ.

மூன்றாவது கண் (கனக செந்திநாதன், 1959), மட்டுவில் தந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (இ.சிதம்பரப்பிள்ளை, 1988), பண்டிதமணியின் பேரும் புகழும் (சு.சுசீந்திரராசா, 1993), பண்டிதமணி நினைவு மலர் (பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை, 1989), பண்டிதமணி அவர்களின் புலமை மையம் (கா.சிவத்தம்பி, பண்டிதமணி நினைவுமலர் கட்டுரை, 1989), பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ்ப் பாரம்பரியம் (ஆ.வேலுப்பிள்ளை, 1989) ஆகிய படைப்புக்களை ஆதாரமாகக் கொண்டது இவ்வாய்வு.

## 3781

**பழம் புனலும் புது வெள்ளமும்.** துரை மனோகரன். பேராதனை: கலாநிதி துரை மனோகரன், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (கண்டி: சண் பிரின்டர்ஸ், 67, மாப்பாணவத்துர ஒழுங்கை).

(7), 120 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 17x12.5 சமீ.

சிலப்பதிகாரத்தில் சிறு பாத்திரங்கள், திருப்பாவையும் திருவெம்பாவையும்: ஓர் ஒப்பீடு, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐரோப்பியர் காலம், ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, தமிழ் நாவல் வளர்ச்சி: ஒரு பொதுப் பார்வை, எஸ்.பொ. படைத்த இருகதைத் தலைவர்கள் (தீ 1961, சடங்கு 1971), திரைக்கு வந்த



படிப்பகம்

www.padippakam.com



நாட்டார் இலக்கியம் ஆகிய ஏழு இலக்கியக் கட்டுரைகள் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியம் தொடர்பான பல்வகை அனுபவங்களை இவை வாசகர்களுக்கு வழங்குகின்றன.

## 3782

**பார்வையும் பதிவும்.** துரை மனோகரன். கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன், 135, கனல் பாங்கி விதி, 2வது பதிப்பு, ஐப்பசி 2003. (சென்னை 600 001: மாணவர் நகலகம்).

*(8), 128 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21.5X14 சமீ.*

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றும் கலநிதி துரை மனோகரன் எழுதிய பன்னிரு கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. பழந்தமிழ்ப் புலமையும் நவீன இலக்கிய நோக்கும், சங்க இலக்கியம்-சில அறிமுகக் குறிப்புகள், மானுடம் பாடாத மகளிர், தமிழ் இலக்கியத்தில் பொதுமக்கள் பற்றிய உணர்வு: பள்ளு இலக்கிய அடிப்படையிலான நோக்கு, ஆக்க இலக்கிய வளர்ச்சியும் தமிழ் உரைநடையின் பயன்பாடும், தமிழ் நாவல்களில் உத்திமுறைகள், ராஜமய்யரின் கமலாம்பாள் சரித்திரம், சி.வைத்திலிங்கத்தின் சிறுகதைகள், சுவாமி விபுலாநந்தரின் கலை இலக்கியப் பணிகள், இரு பெரும் பேராசிரியர்கள்: வையாபுரிப்பிள்ளை – கைலாசபதி பற்றிய ஒரு நோக்கு, இலக்கியத்தை விளங்கிக் கொள்ளலும் மதிப்பிடுதலும்: தமிழ் இலக்கிய அடிப்படையில் ஒரு பார்வை, மொழியும் படைப்பாற்றல் விருத்தியும் ஆகிய தலைப்புக்களில் இங்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 3783

**பிறைக் கொழுந்து.** அல்லாமா ம.முகம்மது உவைஸ் (பதிப்பாசிரியர்). Panadurai: Dr. M.M.Uwise, Markazi, Henamulla, 1வது பதிப்பு, 1979. (Colombo 10: The Economic Times Ltd., 157, Jayantha Weerasekera Mawathe).

*232 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X14 சமீ.*

இந்நூலாசிரியர், 1979இல் ஜூன் 29,30, ஜூலை 1 ஆகிய 3 தினங்களிலும் கொழும்பில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளை முன்நின்று நடத்தி முடித்தவர். இம்மாநாட்டையொட்டி இஸ்லாமியரின் வரலாறு,



படிப்பகம்

www.padippakam.com



பண்பாடு, கலை என்பன பற்றி அறிஞர்கள் எழுதிய 27 ஆய்வுக்-கட்டுரைகளின் தொகுப்பாகப் பதிப்பிக்கப்பட்டது இந்நூல்.

## 3784

**புலம்பெயர் கவிதை: உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை.** கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, பங்குனி 2004. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

xi, 115 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955 98618 0 8.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளரான நூலாசிரியரின் இவ்வாய்வு, புலம்பெயர்ந்தோரின் இலக்கியப் படைப்புகள் பற்றி – குறிப்பாக கவிதைத்துறையின் போக்குகள் பற்றி ஆராய்கின்றது. புலம்பெயர்ந்தோரின் இலக்கியப் படைப்புக்கள் தமிழிலக்கியப் பரப்பில் புதியதொரு போக்கை ஏற்படுத்தியுள்ளதை இவ்வாய்வு நன்கு சித்திரிக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்ச்சி, அதன் பன்முகத் தன்மை, அதற்கான ஏதுநிலைகள், புலம்பெயர் கவிதைகளின் உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை ஆகியன குறித்து விரிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

## 3785

**புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் சிறுகதைகள்: ஆய்வுநூல்.** ம.திருமகள். கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

x, 104 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 18x12 சமீ.

ஈழத்தின் சிறுகதை எழுத்தாளர்களில் 5வது தலைமுறையைச் சேர்ந்த முக்கியமான எழுத்தாளர் இரத்தினவேலோன். நிலாக்காலம், விடியட்டும் பார்ப்போம், புதிய பயணம், ஆகிய இவரது சிறுகதைத் தொகுதிகளில் வெளிவந்த 27 சிறுகதைகள் ஆய்வுக்குள்ளாகியுள்ளன. இவரது சிறுகதைகளின் உள்ளடக்கம் இனப்பிரச்சினை, சாதியம், ஆண்-பெண் உறவுநிலை, சீதனப் பிரச்சினை, பெண்ணியம், சமுதாயப் பிரச்சினை ஆகிய ஆறு பிரிவுகளுக்குள் வகைப்படுத்தப்-பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரை தமிழ்



படிப்பகம்

www.padippakam.com



சிறப்புக் கலைமாணித் தேர்வின் நிறைவாண்டுப் பரீட்சையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2004இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. 50வது மீரா வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

## 3786

**புறப்பொருள் விளக்கம்- கலிங்கத்துப் பரணி- விறலிவிடுதூது.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xvi, 160 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு.இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் **புறப்பொருள் விளக்கம், கலிங்கத்துப் பரணி, விறலிவிடு தூது வசனம்** ஆகிய மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 04)

## 3787

**புனைகதை இலக்கியம்.** S.சிவநிர்த்தானந்தா. கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மாசி 2001. (கொழும்பு: சு.கிருஷ்ணமூர்த்தி).

v,168 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 22x15 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான தமிழ் இலக்கியப் பாடப்பரப்பிற்குத் தேவையான தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளையும் "நாகம்மாள்" என்ற ஆர்.சண்முகசுந்தரத்தின் நாவலையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. "இலங்கையில் தமிழ்ச் சிறுகதை" என்ற தலைப்பில் நூலாசிரியரின் அறிமுகக் கட்டுரையுடன் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி, இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், ஆர்.ஷண்முகசுந்தரம் ஆகிய எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகத்துடன் அவர்களது மாதிரிப் படைப்புகள்



படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொன்றையும், அப்படைப்புகள் பற்றிய அறிமுகக் குறிப்புகளையும் இந்நூல் வழங்குகின்றது.

### 3788

**பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்: பகுப்பாய்வும் நுண்ணாய்வும்.** லலிதாமினி முருகேசு. யாழ்ப்பாணம்: பொ.கைலாசபதி நூற்றாண்டு நினைவுக்குழு, 314, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(2), xvi, 198 பக்கம், 7 புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ., ISBN: 955-8058-02-5

சமகால அறிஞர்களால் மௌனதவமுனி என்று போற்றப்படும் அறிஞர் பொ.கைலாசபதி அவர்கள், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்து ஆன்மீகச் சூழலில் ஆலவிருட்சமாய் பரிணமித்தவர். இந்துப் பண்பாட்டின் பல்வேறு துறைகளையும் வளப்படுத்த வழிகோலிய இவர், யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரியில் கற்றும் பின்னர் கற்பித்தும், சைவாசிரிய கலாசாலையில் 30 ஆண்டுகளாக உப அதிபராயிருந்தும் கல்விப்பணியாற்றியவர். இவ்வாய்வின் முதல் இயல் கைலாசபதி அவர்கள் பற்றிய அறிமுக உரையாகவும், இரண்டாம் இயல் அவரது மெய்யியலின் பாரிய கட்டமைப்பு, மனிதனின் அந்தக்கரண விருத்திகள் பற்றியது என்பதைப் பொதுவாக அறிமுகம் செய்வதாகவும், மூன்றாம் இயல் அவரது வேதம், வேதாங்கம் பற்றிய கருத்துக்களை தொகுத்துத் தருவதாகவும் அமைகின்றன. நான்காம் இயலில் தமிழ், தொல்காப்பியம் பற்றிய அவரது கருத்துக்களும், ஐந்தாம் இயலில் மரபு வழியல்லாத கணித, விஞ்ஞான மற்றும் அளவையியல் சார்ந்த புதிய சிந்தனைகள் சிலவும் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 3789

**மகாகவி கம்பதாசன் கவிதாநுட்பங்கள்.** சிலோன் விஜயேந்திரன். சென்னை 600101: லோகிதன் பதிப்பகம், 16/7, சாந்தம் காலனி, அண்ணா நகர் மேற்கு, விரிவாக்கம், 1வது பதிப்பு, மே 1997. (சென்னை 600005: ஜீவோதயம் அச்சகம்).

82 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 17.5x12.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கைத் தமிழரான சிலோன் விஜயேந்திரன் ஒரு சிறந்த கவிஞரும் நடிகருமாவார். தனது இறுதிக் காலங்களில் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி முகம்மது பிலால் என்று பெயரையும் மாற்றிக்கொண்டவர். இவர் தமிழகத்தில் வாழ்ந்த நீண்ட காலத்தில் தமிழகக் கவிஞர் கம்பதாசன் (1916-1973) அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். தமிழகத்தில் திரைப்பட வட்டாரத்தில் அறிமுகமாகியிருந்த கம்பதாசனின் கவிதாவன்மையை அவரது மறைவின் பின்னர் பல நூல்களைத் தொகுத்து வழங்கியதன்மூலம் இலக்கிய உலகின் கவனத்தைத் திருப்பியிருந்தார். இந்நூலில் கம்பதாசன் அவர்களின் கவிதைகளில் காணப்படும் கவிதா நுட்பங்களை இலக்கியநயத்துடனும் உதாரண விளக்கங்களுடனும் மீள் அறிமுகம் செய்துள்ளார்.

## 3790

**மரபுவழித் திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும்.** K.S.சிவகுமாரன். கொழும்பு 6: ஆ.இரத்தினவேலோன், மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கொழும்பு 13: பேஜ்செட்டர்ஸ், 72, மெசெஞ்சர் வீதி).

viii, 126 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 19.5x14 சமீ.

ஈழத்தமிழ் இலக்கியத்தில் வேறுபட்ட பரிமாணங்களையும் அறிந்துகொள்ள விரும்பும் ஆர்வலர்களுக்கு K.S.சிவகுமாரனின் நூல்கள் பெருவிருந்து. இதுவரை 12 நூல்களை வழங்கியுள்ள இவரது கலை இலக்கியத் திறனாய்வு (1989), கைலாசபதியும் நானும் (1990) ஆகிய இரு நூல்களையும் தழுவிப் புதிதாக பதிப்பிக்கப்பட்ட வடிவமாக இந்த நூல் அமைகின்றது. திறனாய்வு தொடர்பான அடிப்படை விடயங்களை இந்நூல் 16 கட்டுரைகளில் ஆராய்கின்றது. ஊடகத்துறையில் நீண்டகால அனுபவம்மிக்கவரான சிவகுமாரனின் பத்திஎழுத்துக்கள் பிரபல்யமானவை.

## 3791

**மருதத்திணை.** வாசுகி சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, பி.ஏ.தம்பி ஒழுங்கை).

xx, 260 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



சங்க காலத்தில் எழுந்த அகத்திணை சார்ந்த பாடல்களிலே, சிறப்பாக மருதத்திணைப் பாடல்களினூடாக, அக்காலத்தில் நிலவிய சமூக ஒழுக்க, இலக்கிய நியமங்கள் அமைந்த வகையினை ஆராய்வது இந்நூலாகும். சங்க இலக்கியங்களது இயங்குதளம், மருதத்திணையில் இடம்பெறும் பாத்திரங்களின் உணர்ச்சி நிலைகள், திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகளும் இலக்கிய வெளிப்பாடுகளும், சமூக மேலாண்மைக் கொள்கைகளும் களவு-கற்பு என்பனவற்றின் நியமங்களும், பெறுமானங்களும், சமுதாய மாற்றமும் பரத்தையர் தோற்றமும், முல்லை சான்ற கற்பு என்று ஆறு இயல்களில் இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வுத் தேவைக்காக உருவான நூல் இதுவாகும். இந்நூலாசிரியை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியையாவார்.

## 3792

**மல்லிகை ஜீவா மனப் பதிவுகள்.** திக்குவல்லை கமால். பண்டாரகம: பரீதா பிரசுரம், 104, கஸ்ஸாலி மாவத்தை, அட்டுலுகம, 1வது பதிப்பு, ஜூன் 2004. (கொழும்பு 13: யு.கே.பிரிண்டர்ஸ், 103, விவேகானந்த மேடு).

viii, 157 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 955-95923-7-x.

1968 முதல் எழுதிவரும் திக்குவல்லை கமால் கவிதை, சிறுகதை, நாவல், ஒலி நாடகம் ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 11 நூல்கள் வரை எழுதியுள்ளார். சாகித்திய மண்டலப் பரிசு, முஸ்லீம் கலாசார அமைச்சின் இலக்கிய வேந்தன் பரிசு, கலாசாரத் திணைக்களத்தின் கலாபூஷணம் விருது ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டவர். மல்லிகை தொடர்பானதும் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா தொடர்பானதுமான தனது மனப்பதிவுகளை இவர் சிறு கட்டுரைகளாக எழுதித் தொகுத்திருக்கிறார்.

## 3793

**முருகபூபதியின் படைப்புகள்.** லெ.முருகபூபதி (தொகுப்பாசிரியர்). அவுஸ்திரேலியா: முகுந்தன் பதிப்பகம், P.O.Box 350, Craigieburn, Victoria 3064, 1வது பதிப்பு, ஐப்பசி 2001. (அவுஸ்திரேலியா: Limat Digital Media, Victoria).



படிப்பகம்

www.padippakam.com



(2), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

முருகபூபதியின் இலக்கியப் பிரவேச வெள்ளிவிழாவின் போது, ஏற்கெனவே வெளியான சுமையின் பங்காளிகள், சமாந்தரங்கள், சமதர்மப் பூங்காவில், நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் ஆகிய நூல்களைப் பற்றி இலக்கியவாதிகள் எழுதிய விமர்சனங்களின் தொகுப்பு நூலொன்று வெளியிடப்பட்டிருந்தது. அவ்வரிசையில் இரண்டாம் பாகமாக இந்நூல் வெளிவருகின்றது. ஆங்கில மொழியிலும் வெளியாகவுள்ள பாட்டி சொன்ன கதைகள், சந்திப்பு (நேர்காணல்), வெளிச்சம், எங்கள் தேசம் (கதைகள்), இலக்கிய மடல் (கட்டுரைகள்), கடிதங்கள் (கடித இலக்கியம்), முதலானவற்றை விமர்சித்தவர்களின் பார்வைகள் இந்தப் பதிப்பில் இடம்பெற்றுள்ளன. டொமினிக் ஜீவா, எஸ்.கே.காசிலிங்கம், கணேஷ் ஆனந்த், கல்யாணி இரத்தினசிங்கம், புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், ஜெயசக்தி பத்மநாதன், தெ.நித்தியகீர்த்தி, பாலம் லக்ஷ்மணன், த.கலாமணி, செ.யோகநாதன், சரவணன், மகேந்திரராஜா பிரவீணன், அருண் விஜயராணி ஆகியோர் முருகபூபதியின் நூல்களைத் திறனாய்வு செய்துள்ளனர்.

## 3794

**முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்.** நீர்வை பொன்னையன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxvi, 315 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 125., அளவு: 18X12 சமீ.

ஈழத்து முன்னோடி எழுத்தாளரான நீர்வை பொன்னையனின் இந்நூல் உலகளாவிய நிலையில் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தான் கருதுவோரைத் தேர்ந்து அவர்களில் பதின்மரை சாதாரண வாசகனுக்கு அறிமுகப்படுத்துவதுடன் அவர்களது படைப்புக்களின் தமிழாக்கங்களையும் மாதிரிக்கு ஒன்றாக இந்நூலில் அறிமுகப்படுத்தியிருக்கின்றார். அந்த வகையில், மார்க்ஸிம் கார்க்கி (மனிதன் பிறந்தான்), பிரேம்சந்த் (கொஞ்சம் கோதுமை), லூசுன் (ஒரு நிகழ்ச்சி), சரத் சந்திரர் (மகேஷ்), ஆஸ்த்ரோவஸ்கி (வீரம் விளைந்தது), தகழி சிவசங்கரம்பிள்ளை (தந்தையும் மகனும்), கே.ஏ.அப்பாஸ் (அநாமதேய அக்தி), ராகுல சாங்கிருத்யாயன் (சுமேர்), முல்க்ராஜ் ஆனந்த் (நாவிதர் சங்கம்), கிருஷன் சந்தர் (முழுநிலவு) ஆகிய படைப்பாளிகளும் (அவர்களது படைப்புக்களும்) இந்நூலில் அறிமுகமாகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3795

**முஸ்லீம் தமிழ்ப் பாரம்பரியம்.** ஹாபிஸ். எம்.கே.செய்யது அகமது. கொழும்பு 13: அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

(8), 94 பக்கம், விலை: ரூபா 4.75., அளவு: 18X12.5 சமீ.

இந்நூலில் தமிழ் முஸ்லீம்களின் பாரம்பரியம் என்ற கட்டுரை பக்கம் 9-44 வரையிலும், தமிழ் இலக்கியத்தில் முஸ்லீம்களின் பங்கு என்ற கட்டுரை பக்கம் 45-94 வரையிலும் காணப்படுகின்றது.

## 3796

**மொழியினால் அமைந்த வீடு.** மணி வேலுப்பிள்ளை. தஞ்சாவூர் 613007: அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சிவகாசி: Hemamala Syndicate).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 22X14 சமீ.

ஆங்கில நடையில் தமிழ், தமிழும் பெண்மைக்கு நெகிழும், ஆளுமை, மொழியின் முன் ஆணும் பெண்ணும் சமன், மொழியினால் அமைந்த வீடு, தமிழோசை, சோக்கிரட்டீஸ் ஒரு மீள்நோக்கு, மாயக்கோவஸ்கி, அலந்தே, டெங் சியாவோபிங் ஆகிய தலைப்புக்களில் 10 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நூலின் முற்பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் தமிழ் மொழியின் சமகாலப் பயன்பாடுபற்றியதாகவும் புதிய சொற்களின் வருகையை கையாளும் யுக்திகளை கண்டறிவதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 3797

**யார் வியவாதார்: வாலிவதை ஒரு பன்முக நோக்கு.** ஸ்ரீ பிரசாந்தன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கை கம்பன் கழகம், இல. 300, கோவில் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, மே 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

xvi, 380 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 18.5X13 சமீ.

கம்பராமாயணத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய பகுதியாக விளங்குகின்ற வாலிவதை பற்றி ஈழத்து, இந்திய அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு, ராஜாஜி, கி.வா.ஜகந்நாதன், எஸ்.இராமகிருஷ்ணன்,



படிப்பகம்

www.padippakam.com



அ.ச.ஞானசம்பந்தன் முதலிய 14 அறிஞர்களுடைய கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக கம்பராமாயண கிட்கிந்தா காண்ட வாலிவதைப் பாடல்கள் அனைத்தும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கம்பன் விழாவின்போது 04.05.2001 அன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. அகில இலங்கை கம்பன் கழகத்தின் 10வது வெளியீடு இதுவாகும்.

## 3798

**வரகவி செய்கு அலாவுத்தீன் நூல் அறிமுகமும் பிராந்திய முஸ்லீம் கலாசார விழாவும்: நினைவு மலர்.** எம்.எஸ்.எம்.அனஸ். (மலராசிரியர்). காரைதீவு, மட்டக்களப்பு: முஸ்லீம் சமய, பண்பாட்டலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5X19 சமீ.

ஜனாப் எம்.எஸ்.எம்.அனஸ் எழுதிய "வரகவி செய்கு அலாவுதீன்" நூல் வெளியிடப்பட்ட வேளை அதையொட்டி இடம்பெற்ற பிராந்திய முஸ்லீம் கலாசார விழா நினைவாக வெளியிடப்பட்ட மலர் இதுவாகும். காரைதீவின் கல்வி வளர்ச்சி, வரகவி செய்கு அலாவுதீன் நூல் ஒரு நோக்கு, பொன்பரப்பி முஸ்லீம்களின் வாழ்வும் பண்பாடும், பொன்பரப்பியின் பொருளாதாரம், காரைதீவின் வளர்ச்சியிலே ஆகிய கட்டுரைகள் இம்மலரில் சிறப்பிடம் பெறுகின்றன.

## 3799

**வாலி வதைப் படலம்.** கம்பன். யாழ்ப்பாணம்: அகில இலங்கை கம்பன் கழகம், கம்பன் கோட்டம், 300, கோவில் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, பெப்ரவரி 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14 சமீ.

கம்பராமாயணம் - கிஷ்கிந்தா காண்டத்தில் வரும் வாலி வதைப்-படலம் இந்நூலில் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சுருவிலைப் பிறபபிடமாகக் கொண்ட அமரர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவையொட்டி இந்நினைவஞ்சலி நூல் வெளியிடப்-பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3800

**விசாரம்: கடக்கப்பட வேண்டிய கட்டுக்கள்.** மு.பொன்னம்பலம். தெகிவளை: மு.பொன்னம்பலம், 49/1, வன்டவேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், 581,2/1, காலி வீதி, வெள்ளவத்தை).

(12), 136 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

விசாரம், உண்மையைத் தேடிச்சென்ற உபநிஷத கால நசிகேதனிலிருந்து புத்தர், மகாவீரர், சங்கரர் ஊடாக கீழைத்தேய ஆன்மீகப் பண்பாடாக, இயங்கியல் பார்வையின் மைய ஊற்றாக இருந்து வந்துள்ளது. விசாரம் ஒருவனை விடுதலைக்கு இட்டுச் செல்லும் வழியென்பர். விடுதலைக்கு எல்லையில்லை. எல்லைகளை நாமே வகுக்கின்றோம். நமது சிந்தனைகளும் செயல்களும் வகுக்கின்றன. ஒவ்வொன்றின் அறிவுக்கேற்ப ஒவ்வொன்றினது விடுதலை குறுகவும் விரியவும் செய்கின்றது. இத்தொகுப்பில் அடங்கியுள்ள 18 கட்டுரைகளில் பெரும்பாலான விசாரங்கள் 1998இல் சரிநிகர் இதழ்களில் "ஒரு சிறு அலசல்" என்ற தலைப்பில் தொடர்ந்து வெளியானவை. மற்றும் சில காலச்சுவடு, மூன்றாவது மனிதன், திசை, காந்தியம் போன்ற சிறு சஞ்சிகைகளில் பிரசுரமானவை. பரந்துசெல்ல முயலும் கருத்தியல் நோக்கைத் தளமாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கட்டுரைகள் தரிசனம் மிக்க எதிர்காலக் கலை இலக்கியப் படைப்புக்களை அவாவி நிற்கின்றன.

## 3801

**விமர்சனாஸ்ரமம்.** பிரேமிள் (இயற்பெயர்: தருமு சிவராம்). தமிழ்நாடு: லயம் வெளியீடு, பெரியூர், சத்தியமங்கலம் 638401, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கோவை 15: பாரிஜாதம் அச்சகம்).

40 பக்கம், விலை: இந்திய ரூபா 14., அளவு: 21.5x14 சமீ.

வெங்கட் சாமிநாதனின் விமர்சன கருத்துலகம் பற்றிய கணிப்பாக இந்நூல் அமைகின்றது. எழுத்து பத்திரிகையில் வெங்கட் சாமிநாதனின் ஆரம்பப் பிரவேசம், இடைப்பட்ட காலத்தின் தர்மாவேசம், பிற சிறு பத்திரிகைகளிலும் யாத்ரா இதழ்களிலும் தொடர்ச்சியாக அவர் செய்துவந்த கருத்துலக மோசடிகள், அவரது விமர்சன எழுத்தின் இயக்கப் பின்னணி, ஆழமற்ற தன்மை, தவறான திசையோட்டம், நீண்ட இடைவேளைக்குப் பின் வெளிவந்த சுபமங்களா (ஒக்டோபர் 1995) பேட்டியின் அபத்தம் என்று பல சர்ச்சைக்குரிய விடயங்களும்



படிப்பகம்

www.padippakam.com



விமர்சனாஸ்ரமத்தில் விபரிக்கப்பட்டுள்ளன. பிரேமிள் என்ற புனைபெயருள் மறைந்து தமிழக இலக்கியத்துள் ஐக்கியமாகிநின்ற இலங்கையரான தருமு சிவராம் தன்னை தமிழக படைப்பிலக்கியச் சூழலுடனேயே பெரிதும் இனம்காட்டிக்கொண்டவர்.

## 894.8(7) பலவினத் தொகுப்பு

### 3802

**அமுத கங்கை: கவிதைகள் சிறுகதைகள்.** வன்னியூர்க் கவிராயர். (இயற்பெயர்: எஸ்.எல்.சவுந்தரநாயகம்). அகளங்கன், கந்தையா ஸ்ரீகணேசன் (பதிப்பாசிரியர்கள்), வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, ஆனி 2004. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், குடியிருப்பு).

169 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

1953இலிருந்து படைப்பிலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்ட வன்னியூர்க் கவிராயர் வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளப்பகுதியிலிருந்து தமிழ் இலக்கியம் பரப்பியவர். 1978இல் தான் மறையும் வரை அவர் படைத்தவற்றில் கிடைக்கப்பெற்ற 20 கவிதைகளையும், ஈழத்துக் காவியதீபம் என்ற அவரது நூலில் பெறப்பட்ட 17 சிறுகதைகளையும் இத்தொகுப்பில் பதிப்பித்துள்ளார்கள். பின்னிணைப்பாக வன்னியூர்க் கவிராயரின் கவிதைப் பண்புகள் (க.நவசோதி), வன்னிப் பண்பாட்டுப் பகைப்புலத்தில் வன்னியூர்க் கவிராயர் (முத்து சிவலிங்கம்), முன்னோடிக் கவிஞர் வன்னியூர்க் கவிராயர் (முல்லைமணி), வவுனியாவின் முன்னோடி எழுத்தாளர் வன்னியூர்க் கவிராயர் (ஓ.கே.குணநாதன்) ஆகிய திறனாய்வுக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

### 3803

**அறிவுரைக் கோவை- அறிவுரை மாலை- அறிவுக் கட்டுரைகள்- நூலகங்கள்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xx, 228 பக்கம், விலை: இந்திய ரூபா 155., அளவு: 22x14 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் நூலகங்கள், அறிவுக் கட்டுரைகள், அறிவுரை மாலை, அறிவுரைக் கோவை ஆகிய நான்கு கட்டுரைத் தொகுப்பு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 07)

## 3804

**ஆரியர் தமிழர் கலப்பு-தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா?- ஆரியத்தால் விளைந்த கேடு-புரோகிதர் ஆட்சி- இராமாயணம் நடந்த கதையா- ஆரியர் வேதங்கள்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xxiv, 144 பக்கம், விலை: இந்திய ரூபா 105., அளவு: 22X14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் ஆரியர் தமிழர் கலப்பு, ஆரியத்தால் விளைந்த கேடு, புரோகிதர் ஆட்சி, இராமாயணம் நடந்த கதையா?, ஆரிய வேதங்கள், தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா? ஆகிய ஆறு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 10)

## 3805

**இராபின்சன் குரூசோ: கலிவர் யாத்திரை: அகத்தியர்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xvi, 87 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 65., அளவு: 22X14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும்



படிப்பகம்

www.padippakam.com



முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் இராபின்சன் குரூசோ (1949), கலிவர் யாத்திரைகள் (1959), அகத்தியர் (1948) ஆகிய மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 23)

## 3806

**உங்கள் சேகரின் கேள்வி-பதில்கள்: பாகம் 1.** சேகர். ஜேர்மனி: இளைஞன் பிரசுரம், Ginnheimer Str, 24A, 60487, Frankfurt, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (ஜேர்மனி: சிந்துநதி பதிப்பகம்).

98 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X15 சமீ.

ஜேர்மனியிலிருந்து சிறிதுகாலம் வெளிவந்த இளைஞன் என்ற சஞ்சிகையில் வாசகர் கேள்விகளுக்கு இதழாசிரியர் சேகர் வழங்கிய பதில்களின் தொகுப்பு. 1994 முதல் 1997 வரையான காலகட்டத்திற்குரிய இளைஞன் இதழ்களிலிருந்து இவை தொகுக்கப்பட்டுள்ளன.

## 3807

**உங்களுக்குத் தெரியுமா?-பொது அறிவு – பொது அறிவு வினாவிடை – உலக அறிவியல் நூல்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

XX, 468 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 305., அளவு: 22X14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் பொது அறிவு நூல்களான உலக அறிவியல் நூல், உங்களுக்குத் தெரியுமா?, பொது அறிவு, பொது அறிவு வினாவிடை ஆகிய நான்கு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 06)



படிப்பகம்

www.padippakam.com



**3808**

**உயிரைப் பிழியும் உண்மைகள்.** அருட்தந்தை செகத் கஸ்பார் (தொகுப்பாளர்), பிலிப்பீன்ஸ்: வெரித்தாஸ், தமிழ்த் தாயின் உண்மை வெளியீடு, மணிலா, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (அச்சக விபரமோ பதிப்பு விபரமோ தெளிவாகத் தரப்படவில்லை).

160 பக்கம், விலை: தரப்படவில்லை, அளவு: 20X13.5 சமீ.

1996ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணிக்கு இயக்குநராகப் பொறுப்பெற்றது முதல் அந்த வானொலிக்கெனப் பெற்றுக்கொண்ட ஈழத்தமிழர்களின் உணர்ச்சிமிகு கடிதங்களின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. கடிதங்களுக்கு அணிசெய்யும்வகையில் அமைந்த புகைப்படங்களும்கூட உணர்வுபூர்வமான தகவல்களை எமக்குச் சொல்கின்றன.

**3809**

**என் தமிழ்.** ராஜகுரு சேனாதிபதி கனகரெட்னம். கொழும்பு 6: வேங்கடவன் பதிப்பகம், 13/3, அலெக்சான்ட்ரா வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1987. (சென்னை 600008: டார்வின் பிரிண்டிங் வேர்க்ஸ், 3, வேனல்ஸ் ரோடு, எழும்பூர்).

(52) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12 சமீ.

இலங்கை வானொலியின் அறிவிப்பாளராக நன்கு அறியப்பட்டவர் இந்நூலாசிரியர். அவ்வப்போது தான் எழுதிவைத்த 33 கவிதைகளையும், பட்டாபிஷேகம், எங்களும் நாங்களும், பரந்தாமனுக்கு ஒரு கடிதம், இரவே உனக்கு ஒரு விண்ணப்பம், விதுரன் மாண்டான், மீண்டும் வனவாசம் ஆகிய ஆறு இலக்கியக் கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**3810**

**கண்ணம்மா.** தி.உதயசூரியன். கிளிநொச்சி: தமிழோசை இலக்கிய அமைப்பு, புன்னை நீராவி வித்தியாலயம், தருமபுரம், பரந்தன், 1வது பதிப்பு, பங்குனி 2002. (புதுக்குடியிருப்பு: வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கப் பதிப்பகம்).

xvi, 52 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5X13.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



இது கவிதைகள், கட்டுரைகள், கடிதங்களை உள்ளடக்கிய ஒரு நூலாகும். இந்நூல் வையத்தில் நன்கு வாழ்ந்த கண்ணம்மா இடம்பெயர்ந்து வறுமையில் வாடுவதையும் மூன்று குழந்தைகளை இழப்பதையும், ஈற்றில் அரச உத்தியோகம் என்னும் நிவாரணம் பெற்று நிம்மதிப் பெருமூச்சு விடுவதையும் வெளிப்படையாகப் பேசுகின்றது. இந்நூலின் பிரதான பாத்திரமான கண்ணம்மா உதயசூரியனின் ஒரு புனைவா? தான் இழந்த ஒருத்தியைத் தேடும் தேடலா? அவரது இலக்கியக் கனவா? அவர் சந்திக்கும் அடிமட்ட மக்களின் வாழ்வின் ஒரு பதிவா? என்று பல்வேறு கேள்விகளை உருவாக்கி நிற்கும் தொகுப்பு இது.

## 3811

**காதோடு காதாக.** கதிர். துரைசிங்கம், ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, Brinker Hohe 13, 58507 Ludenscheld, 1வது பதிப்பு, 2005. (ஜேர்மனி: அச்சக விபரம் தரப்படவில்லை).

96 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15.5x11.5 சமீ., ISBN: 0-9739213-07.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் கதிர் துரைசிங்கத்தின் நகைச்சுவைத் துணுக்குகள் கொண்ட நூல். வெற்றிமணி சஞ்சிகையில் 2002ம் ஆண்டு முதல் எழுதிய நகைச்சுவைத் துணுக்குகளின் தொகுப்பு இதுவாகும். நகைச்சுவைத் துணுக்குகளுக்கு ஏற்ப ஓவியர் கண்ணாவினால் (மு.க.சு.சிவகுமாரன்) பொருத்தமான புகைப்படங்களும், சித்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

## 3812

**சிந்தனையைக் கிளறும் சிரித்திரன் மகுடி.** சி.சிவஞானசுந்தரம் (மூலம்), திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: சுவைத்திரள் நகைச்சுவை ஏடு, 1வது பதிப்பு, ஜுன் 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

(6), 140 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 14x22.5 சமீ.

கடந்த 45 வருடங்களாக கார்ட்டூன் துறையிலும், சஞ்சிகை வெளியீட்டுத் துறையிலும் தனக்கென்றொரு தனி முத்திரை பதித்தவர் மாமனிதர் சிரித்திரன் சுந்தர். சுந்தரின் மாதச்சஞ்சிகையான



படிப்பகம்

www.padippakam.com



சிரித்திரனில் வெளிவந்த கேள்வி-பதில் பகுதியை இத்தொகுப்பின் வாயிலாக மீள்பிரசுரமாகத் தரிசிக்க முடிகின்றது.

## 3813

**சிந்துவெளித் தமிழர்: தமிழர் யார்? உலக நாகரீகத்தில் தமிழர் பங்கு: தென்னிந்திய குலங்களும் குடிகளும்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xxxvi, 188 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 22x14 சமீ.

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழர் யார், சிந்துவெளித் தமிழர், உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு, தென்னிந்திய குலங்களும் குடிகளும் ஆகிய நான்கு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 13)

## 3814

**சிறுகதை எழுதுவது எப்படி?** அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜுலை 2005. (யாழ்ப்பாணம்: கங்கை பிரிண்டேர்ஸ், 781 காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப் புளியடி).

xvi, 166 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.

ஆசிரியரின் 10 சிறுகதைகளும், 13 பிற படைப்புக்களும் இடம்பெறுகின்றன. ஆங்கிலத்திலும், தமிழிலும் பெருவழக்காய் இருந்த, இருக்கின்ற சிறுகதை இலக்கியக் கொள்கைகளைத் தொகுத்து இந்நூலில் தனது கட்டுரைகளில் பதிவுசெய்துள்ளார். அத்துடன் தினக்குரல் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியும் இடம்பெறுகின்றது. இவரது அண்மைக்காலப் படைப்பான இமயம், பற்றிய விமரசனக் கட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3815

**தமிழ் ஆராய்ச்சி: தமிழ் விளக்கம்: நீதி நெறி விளக்கம்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xx, 108 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழ் ஆராய்ச்சி (1947), நீதிநெறி விளக்கம்: மூலமும் உரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் (1949), தமிழ் விளக்கம்: கேள்வி மறுமொழி (ஆண்டு தரப்படவில்லை) ஆகிய மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 24).

## 3816

**தமிழ் இனி 2000: மாநாட்டுக் கட்டுரைகள்.** பா.மதிவாணன், உ.சேரன் (பதிப்பாசிரியர்கள்). நாகர் கோவில்: காலச்சுவடு அறக்கட்டளை, இணைந்த வெளியீட்டாளர், கொழும்பு: சரிநிகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (சென்னை 600005: மணி ஓப்செட்).

1030 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 750., அளவு: 25x19 சமீ.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் ஒரு பன்னாட்டு மொழியாக, நவீன மொழியாக, பரந்து வளர்ந்து நிற்பதைத் தொகுத்துத் தந்த தமிழ் இனி 2000 மாநாடு சென்னை எழும்பூர், ஹோட்டல் அட்லாண்டிக்கில் 2000 செப்டெம்பர் 1-3 திகதிகளில் நடைபெற்றது. அரச ஆதரவு எதுவுமின்றி உலகத் தமிழ்ச் சமூகத்தின் உதவியை மட்டுமே கொண்டு சிறப்பாக நடந்தேறி வரலாறு படைத்தது இம்மாநாடு. இம்மாநாட்டில் பங்கேற்றவர்களின் சிறப்புரைகளும் மாநாட்டில் படிக்கப் பெற்ற கட்டுரைகளும் கொண்ட பாரிய தொகுப்பு இதுவாகும். இதுவரை வெளிவந்த நவீன தமிழ் இலக்கியம் பற்றிய பன்முகக் கணிப்பை, உண்மையில் பல வேளைகளில் ஒன்றுக்கொன்று முரணான கணிப்பீடுகளை இம் மாநாட்டின் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளிலும் காணலாம். இத்தொகுதியின் பெறுமதி இவ்விமர்சனப் பண்பேயாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3817

**தமிழகம்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xx, 172 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழ்நாட்டின் தொன்மை நிலை, மொழி, தமிழர் நாகரிகம், ஒழிபியல் ஆகிய நான்கு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 16)

## 3818

**தமிழர் சமயம் எது? "சைவ சமய வரலாறு- சிவன்- இந்து சமய வரலாறு- தமிழர் பண்பாடு.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xvi, 304 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழர் சமயம் எது, சைவ சமய வரலாறு, இந்து சமய வரலாறு, சிவன், தமிழர் பண்பாடு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஐந்து நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 08)

## 3819

**திராவிட நாகரிகம்- திராவிடம் என்றால் என்ன? மறைந்த நாகரிகங்கள்-திராவிட இந்தியா.** ந.சி.கந்தையா (மூலம்),



படிப்பகம்

www.padippakam.com



கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 005: எம்.கே.என்ரர்பிரைசஸ்).

xx, 164 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 115., அளவு: 22x14 சமீ.

ஈழத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் திராவிட நாகரீகம், திராவிடம் என்றால் என்ன?, மறைந்த நாகரீகங்கள், திராவிட இந்தியா ஆகிய நான்கு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 11)

## 3820

**நகைச்சுவை முத்துக்கள்.** இ.சிறீஸ்கந்தராசா. கொழும்பு 6: 93, பீட்டர்சன் லேன், E15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2004. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

100 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 18.5x13 சமீ.

கவலை மறந்து சிரித்து மகிழ்ந்திடவும், சிந்தனையைத் தூண்டும் வலிமை மிக்கனவுமான நகைச்சுவை விகடத் துணுக்குகள் கொண்ட தொகுப்பு.

## 3821

**நகைச்சுவைப் பூங்கா.** இ.சிறீஸ்கந்தராசா. கொழும்பு 6: 93, பீட்டர்சன் லேன், E15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 2003. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், 581, 2/1, காலி வீதி, வெள்ளவத்தை).

100 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 18.5x13 சமீ.

கவலையை மறந்து சிரித்து மகிழ்ந்திடவும், சிந்தனையைத் தூண்டும் வலிமை மிக்கனவுமான விகடத் துணுக்குகள், நகைச்சுவைக் கதைகள் கொண்ட தொகுப்பு. மாலைதீவில் நீண்டகாலம் பணியாற்றித் தாயகம் திரும்பிய நூலாசிரியர் சிறீஸ்கந்தராஜா வேறும் பல



படிப்பகம்

www.padippakam.com



நகைச்சுவைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். இவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மரபில் உதித்தவர்.

## 3822

**நமது மொழி-நமது நாடு-நமது தாய்மொழி-திராவிட மொழிகளும் இந்தியும்-தமிழ்ப் பழமையும் புதுமையும்-முச்சங்கம்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xx, 236 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 160., அளவு: 22x14 சமீ.

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழ்ப் பழமையும் புதுமையும், முச்சங்கம், நமது தாய்மொழி, திராவிட மொழிகளும் இந்தியும், நமது மொழி, நமது நாடு ஆகிய ஆறு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 09)

## 3823

**நாட்டுக் கருடன் பதில்கள்.** சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம் (புனைபெயர்: திக்கவயல் சி. தருமகுலசிங்கம்). மட்டக்களப்பு: சுவைத்திரள், 9, தாமரைக்கேணி வீதி, 1வது பதிப்பு, மே 2005. (மட்டக்களப்பு: வனசிங்கா பிரிண்டர்ஸ், 126/1, திருமலை வீதி).

92 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

சுவைத்திரள் என்ற நகைச்சுவைச் சஞ்சிகை மட்டக்களப்பிலிருந்து சிலகாலம் வெளிவந்தது. நாட்டுக்கருடன் என்ற பெயரில் நல்ல பல கேள்வி-பதில்களை வெளியிட்டு வந்தவர் திக்கவயல் (அல்வாய்) தர்மகுலசிங்கம் அவர்கள். தமிழ் இலக்கிய உலகில் கேள்வி பதில் பகுதிகளில் வெற்றியடைந்த குயுக்தியார், மகுடியார் போன்றவர்களின் பாதையில் நாட்டுக்கருடனும் இடம்பெறுகின்றார். நாட்டுக்கருடன் பதில்கள் பகுதி 1 தொடக்கம் பகுதி 15 வரை 300க்கும் மேற்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



சுவையான கேள்வி பதில்கள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன. இவரது 40 வருட கலை இலக்கிய அனுபவத்தின் உரைகல்லாக இந்தக் கேள்வி பதில் பகுதி அமைகின்றது. நாட்டுக் கருடன் என்ற பதம் தமிழ்ப் பிரதேச வழக்கில் தாயுடன் திரிந்து இரைதேடும் கோழிக்குஞ்சைப் பிடிக்கும் கூரிய பார்வைகொண்ட பருந்தைக் குறிக்கின்றது.

## 3824

**நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள், யாழ்ப்பாணம், முதலாம் தொகுதி.** சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்), கொழும்பு 7: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் இலங்கைக்கிளை, வீ.எஸ்.ரி.கட்டடம், முதலாம் மாடி, 75, வாட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜனவரி 1977. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xxxii, 370 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரி 3ம் திகதி முதல் 9ம் திகதிவரை நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். சமூகவியல், இலக்கியம், இலக்கணம்-மொழியியல், வெகுசனத் தொடர்பு ஆகிய நான்கு பெரும் பகுதிகளின் கீழ் 30 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பேராசிரியர் சு.வித்தியானந்தன், வண. சேவியர் எஸ்.தனிநாயகம், கலாநிதி சி.பத்மநாதன், திரு.ச.அம்பிகைபாகன் ஆகியோரை ஆசிரியர் குழுவாகக் கொண்டியங்கித் தயாரிக்கப்பட்ட கட்டுரைத் தொகுதி இதுவாகும்.

## 3825

**பரியாரி பரமர்: பேனாச்சித்திரங்கள்.** சானா. (இயற்பெயர்: சண்முகநாதன்). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231, ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1964. (கொழும்பு 13: ரெயின்பொ பிரின்டர்ஸ்).

122 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.90., அளவு: 15x10 சமீ.

**பரியாரி பரமர்: பேனாச்சித்திரங்கள்.** சானா. சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).



படிப்பகம்

www.padippakam.com



*96 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 35., அளவு: 17.5x12 சமீ., ISBN: 1-876626-62-3.*

இதுவொரு தனித்த இலக்கிய உருவமாக அமைந்த 12 பேனாச்சித்திரங்களின் தொகுப்பு. யாழ்ப்பாண மண்வாசனை வீச, சானாவின் மனதில் மிதந்துவந்த சம்பவங்களினதும் மனிதர்களினதும் தொகுப்பாக இந்நூல் விளங்குகின்றது. பேனாச்சித்திரங்கள் என்ற புதிய இலக்கிய உருவம் மறுமலர்ச்சி இலக்கிய காலகட்டத்தில் அறிமுகமானதாகக் குறிப்பிடப்படுகின்றது. சிறுகதைகளுக்குரிய நிகழ்ச்சிப் பின்னல்களைத் தவிர்த்து பாத்திரங்களை மட்டும் சுவையுடன் அறிமுகப்படுத்தும் எழுத்துவகை இதுவாகும். சமூகத்தில் நடமாடிய பாத்திரங்களை இயல்பாக மனதில் பதிப்பிப்பதில் பேனாச்சித்திரங்கள் வெற்றிபெறுகின்றன. இங்கு பரியாரி என்றசொல் மருத்துவரைக் குறிக்கும். ஈழத்தின் பழகு தமிழில் அங்கு வாழும் பாத்திரங்கள் இந்நூலில் அறிமுகமாகின்றன. சானாவின் கைவண்ணத்தில் உருவான சித்திரங்களையும் தன்னகத்தே இந்நூல் கொண்டுள்ளது. அரசு வெளியீட்டினரது 8ஆவது பிரசுரமாக முதற்பதிப்பு வெளிவந்தது. பின்னாளில் 2002இல் மித்ர வெளியீட்டின் முதற்பதிப்பாகவும் தமிழகத்தில் மீள்பிரசுரம் கண்டுள்ளது. இலங்கை வானொலியின் தமிழ் நாடகத்துறைத் தலைவராக இருந்த சானா அவர்களது "லண்டன் கந்தையா" என்ற பாத்திரத்துக்கு உயிரூட்டியவராவார். நாடகத் தயாரிப்பாளராகவும், ஓவியராகவும், நடிகராகவும் எம்மிடையே வாழ்ந்து நிறைபுகழ்பூத்தவர்.

## 3826

**பல்சுவை மணிகள்.** இ.சிறீஸ்கந்தராசா. கொழும்பு 6: 93, பீட்டர்சன் லேன், E15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, (2005?). (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

*100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.*

உவகையூட்டும் நகைச்சுவைக் கதைகள், கேள்வி-பதில்கள், தந்திரக் கணக்குகள், விடுகதைகள், பயனுள்ள தகவல்கள், கடி ஜோக்ஸ், பழமொழிகள், சினிமாப் புதிர்கள், பொன் மொழிகள், சுயமுன்னேற்றக் கட்டுரைகள் என்று பல்வேறு துணுக்குகளைக் கொண்ட தொகுப்பு இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com



## 3827

**மகுடி: சிரித்திரன் சுந்தர் பதில்கள்.** எஸ்.சிவஞானசுந்தரம் (மூலம்), சுதாராஜ் (தொகுப்பாசிரியர்). புத்தளம்: தேனுகா பதிப்பகம், 58/3, அனுராதபுரம் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (கொழும்பு: யு.கே.பிரின்டர்ஸ்).

*(10), 118 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-8635-06-5.*

சிந்தனைச் சிறப்பாலும், கேலிச்சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புகளாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் எனும் தனித்துவமான சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட்டவர் அமரர் சுந்தர் அவர்கள். உதட்டையும் உள்ளத்தையும் திறக்கவைக்கும் தன்மைகொண்டவை அவரது மகுடி பதில்கள். 1969 முதல் 1995 வரை வெளியான சிரித்திரன் சஞ்சிகைகளில் தெரிவுசெய்யப்பட்ட 54 இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட காலத்தை வென்று நிற்கும் சுமார் 820 கேள்வி பதில்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. சுந்தரின் பிரபல்யமான கருத்தோவியங்களும் இந்நூலின் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன.

## 3828

**மகுடி: மக்களின் கேள்வியும் மகுடியின் பதில்களும் (முதல் பாகம்).** சிரித்திரன் சுந்தர் (இயற்பெயர்: எஸ்.சிவஞானசுந்தரம்). யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், 122 நாவலர் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1973. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், 122 நாவலர் வீதி).

*(2), 56 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 1.45, அளவு: 20x13 சமீ.*

காலத்தை வென்றுவாழும் கார்ட்டூன் எனப்படும் கருத்தோவியங்களைத் தந்த சிரித்திரன் எஸ்.சிவஞானசுந்தரம் அவர்களை ஈழத் தமிழ் உலகம் எளிதில் மறந்து விடமாட்டாது. பல்லாயிரம் தமிழ் மக்களின் இதயங்களைத் தன் கருத்தோவியப் படைப்புக்களால் கவர்ந்துகொண்ட ஈழத்தின் கார்ட்டூன் மேதை அவர். 1996 மார்ச் மாதம் 3ம் திகதி தனது சொந்தக் கிராமமாகிய கரவெட்டியில் தனது 72வது வயதில் அமரத்துவம் அடைந்த இந்த மாமனிதர் வாழும்போது அவர் சிந்திக்கச் சிந்திக்க தமிழ் மக்கள் சிரித்தனர். போர்மேகம் அவர்களைச் சூழ்ந்த வேளையிலும் மனம்விட்டுக் கலகலப்பாக சில நிமிடநேரமாயினும் கவலை மறந்து சிரித்தனர். பின்னர் அந்தச் சிரிப்பின்



படிப்பகம்

www.padippakam.com



பின்னால் மறைந்திருந்த தாம் சார்ந்த சமூகம் பற்றிய சுந்தரின் கருத்தை எண்ணிச் சிந்தித்தனர். பலர் தெளிவும் பெற்றனர். சிரித்திரன் என்ற தனது மாத இதழில் மகுடி என்ற பெயரில் வாசகர்களின் கேள்விகளுக்கு சுந்தர் அளித்த பதில்களின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. தனக்கெனவொரு முற்போக்கான வழியில் நின்று துணிச்சலுடனும், சுவைமிக்கதாகவும், வாசகரின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் கேலிரசம் குறையாது அவர் வழங்கிய இப்பதில்கள் காலத்தால் அழியாதவை.

## 3829

**மனிதன் எப்படித் தோன்றினான்? ஆதி மனிதன்- ஆதி உயிர்கள் - மரணத்தின் பின் - பாம்பு வணக்கம்.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xx, 156 பக்கம், விளக்கப் படங்கள், விலை: இந்திய ரூபா 110., அளவு: 22x14 சமீ.

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் பாம்பு வணக்கம், ஆதி மனிதன், ஆதி உயிர்கள், மரணத்தின் பின், மனிதன் எப்படித் தோன்றினான் ஆகிய ஐந்து நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 12)

## 3830

**வாழும் சுவடுகள்: கால்நடை வைத்தியரின் அனுபவங்கள்.** என்.எஸ்.நடேசன். (இயற்பெயர்: நொயல் எஸ்.நடேசன்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 1 876626 32 1



படிப்பகம்

www.padippakam.com



தற்போது அவுஸ்திரேலியாவில் மிருகவைத்தியராகக் கடமையாற்றும் நூலாசிரியர் மிருகவைத்தியத்துறையில் தான் பெற்ற அனுபவங்களை வைத்துப் பின்னப்பட்ட கதைகள் இவை. விலங்குகளைப் பாத்திரமாகக் கொண்ட இக்கதைகள் அவுஸ்திரேலியாவில் Tamil News Pte Ltd வெளியிடும் உதயம் என்ற இருமொழி மாதஇதழில் எழுதிவந்த அனுபவம்சார்ந்த இருபத்தைந்து கதைகளின் தொகுப்பு.

## 899 பிறமொழி இலக்கியங்கள்

## 899.(1) பிறமொழிக் கவிதைகள்

### 3831

**அல்லாமா இஃபாலின் இதயப் புதையல்.** *அல்லாமா இஃபால் (மூலம்),* S.M.A. *ஹசன் (தமிழாக்கம்). கண்டி: ஒறாபி பாஷா கலாசார நிலையம், 1வது பதிப்பு, 1999.* (Colombo 11: Q.G.Graphics, 110, ¼ Maliban Street).

*87 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.,* ISBN: *955-9392-00-6.*

அல்லாமா இக்பாலின் அஷ்றாரே இ குஹ்தி (இதயப் புதையல்) 1915இல் லாகூரில் பிரசுரிக்கப்பட்டது. இக்பால் பாரசீக மொழியில் யாத்த இக்கவிதைகளை இலண்டனிலிருந்து Reynold A Nicholson 1920இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இக்பாலின் உன்னதமான உயரிய தத்துவார்த்தக் கருத்துக்கள் அகிலத்தை அதிர்வடையச் செய்தபோதும் அமைதியான தமது உள்ளக்கிடக்கையை அற்புதமாக வெளியிட்ட நூல் இதயப்புதையலாகும். எகிப்திய விடுதலை வீரர் ஒறாபி பாஷா நினைவுக் கலாசார பீடத்தின் பணிப்பாளராகக் கடமைபுரியும் இந்நூலாசிரியர் ஹசன் பேராதனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

## 899.(2) பிறமொழி நாடகங்கள்

### 3832

**நாடக அரங்கு.** *இ.இரத்தினம் (மூலம்), ஞானம் இரத்தினம் (பதிப்பாசிரியர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு*



படிப்பகம்

www.padippakam.com



சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

216 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ., ISBN: 1-876626-34-8.

உலகப்பிரசித்தி பெற்ற நாடகங்கள் மூன்றின் தமிழாக்கம் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கிரேக்க இலக்கியத்தில் துன்பியல் நாடகமரபில் வெளிவந்த மன்னன் ஈடிபசு (edipus Rex) என்ற சொபக்கிளிசுவினால் எழுதப்பட்ட நாடகமும், ஷேக்ஸ்பியர் எழுதிய ஒத்தெல்லோ நாடகமும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஒஸ்கார் வயில்ட் எழுதிய லேடி வைட்மியர் (Lady Widemere's Fan) என்ற நாடகமும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒஸ்கார் வைல்ட் நாடகம் மேகலையின் விசிறி என்ற தலைப்பிட்டு மேகலை, இன்பநாதன், சிவக்குமார், பவானி, சுந்தரவடிவு போன்ற தமிழ்க் கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி தழுவலாக எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 899.(4) பிறமொழிச் சிறுகதைகள்

### 3833

**இயந்திர நண்டுகள்.** எஸ்.பி.கிருஷ்ணன். யாழ்ப்பாணம்: கண்ணன் வெளியீடு, 17 பேரின்பநாயகம் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

52 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20.5x14 சமீ.

சோவியத் விஞ்ஞான எழுத்தாளர் அனத்தோவிய் தினெப்ரோவ் எழுதிய இயந்திர நண்டு என்ற கதை உள்ளிட்ட கத்தியின்றி இரத்தமின்றி (ரஷ்ய விஞ்ஞானக் கதை), சப்பாத்துப் பிழை (சீன நாடோடிக் கதை), அன்பான நரியாரே (சிங்களக் கிராமியக்கதை), தம்பிக்கு, ஆகிய ஐந்து கதைகளைக் கொண்ட நூல். இயந்திர நண்டுகள், வரதரின் அறிவுக்களஞ்சியம் என்ற சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. தற்போது கிளிநொச்சியில் வாழும் எஸ்.பி.கிருஷ்ணன் எஸ்.பி.கே., கண்ணன், வளவன், வேரற்கேணியன் ஆகிய புனைபெயர்களிலும் பல படைப்புக்களைத் தந்தவர். ஒன்றே தெய்வம், பொழுதுபோக்கு, இந்து சமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம், எஸ்.பி.கிருஷ்ணன் சிறுகதைகள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளும், பொற்கிழி என்ற நாடகநூலும்,



படிப்பகம்

www.padippakam.com



வல்லவரும் நல்லவரும் என்ற கட்டுரைநூலும் நூலுருவில் வெளிவந்த இவரது பிற படைப்புக்களாகும்.

## 3834

**மூங்கிற் பள்ளம்: வியத்னாமியக் கதைகள்.** கே.கணேஷ் (தமிழாக்கம்). சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1992. (சென்னை 17: சூர்யா அச்சகம்).

64 பக்கம், விலை: ரூபா 8., அளவு: 17.5x12 சமீ.

1954 ஜுலை 20இல் ஜெனீவா உடன்படிக்கையின்படி வடக்கு தெற்கு எனப் பிளவுபட்ட வியத்நாமில் தேர்தல் நடாத்தி ஒன்றுபடுத்தும் முயற்சியை அமெரிக்காவும் அதன் பொம்மை அரசாங்கமும் நிறைவேற்றவில்லை. இச்சரித்திரப் போராட்டகாலத்தில் ஹோசிமின் தலைமையில் ஒன்றுபட்டு விடுதலைக்காகப் போராடியபோது எழுந்த சிறுகதைகளும், பிறகதைகளுமாக ஐந்து வியட்நாமிய விடுதலை எழுத்தாளர்களின் கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. முடியாத ஓவியம் (பூய் டுக் ஆய்), மூங்கிற் பள்ளம் (வூ வான் பாவ்), கிழத்தம்பதிகள் (ட்ரான் தான்), அரிசி முனை (பொங் வூ), மலைத் தடம் (ஹூவ் மாய்) ஆகியனவே அந்த ஐந்து கதைகளுமாகும்.

## 3835

**ஹென்றி லோசன் கதைகள்.** நவீனன் எடில்பேட் இராசதுரை. சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1997. (சென்னை 600024: மித்ர புக் மேக்கர்ஸ், 375/8-10, ஆற்காடு சாலை).

iv, 140 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12 சமீ., ISBN: 0-958-681-309.

அவுஸ்திரேலிய சிறுகதை உலகில் முக்கியமானவராகக் கருதப்படும் ஹென்ரி லோசனின் (Henry Archibald Lawson, 17.6.1867-22.09.1922) தேர்ந்த 15 சிறுகதைகளை, அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத்தவரான நூலாசிரியர் மொழிபெயர்த்துள்ளார். அவுஸ்திரேலிய இலக்கியத்தின் ஆரம்ப நிலைகளையும் அதன் தரிசன எல்லைகளையும் அறிந்துகொள்ள லோசனின் கதைகள் பயன்படு-கின்றன. 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியின் அவுஸ்திரேலிய



படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கையை- பிரதானமாக Bush Area என்று வழங்கப்படும் புதர்ப்பகுதி வாழ்க்கை முறைகளை லோசன் தன் சிறுகதைகளின் பின்புலமாக்கியிருக்கிறார்.

## 899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்

### 3836

**அபலையின் கடிதம்.** ஸ்ரீபன் செவாக் (மூலம்), செ.கணேசலிங்கன் (தமிழாக்கம்). சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 2வது பதிப்பு, ஜுலை 2003, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1965. (அச்சக விபரம் தரப்படவில்லை).

86 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5X12 சமீ.

Stefan Zweig ஒரு யூத எழுத்தாளர். வியன்னா நகரில் 1881இல் பிறந்த இவர் முதலாவது உலகப்போரின் பின்னர் ஐரோப்பாவில் சிறந்த எழுத்தாளராகக் கருதப்பட்டவர். இவரது நாவல்கள் அனைத்தும் உலகின் 40க்கும் மேற்பட்ட மொழிகளிலும் படிக்கப்பட்டன. ஹிட்லரின் யூத எதிர்ப்பு வெறியால் யூதர் என்ற ஒரே காரணத்திற்காக இவரது நூல்கள் ஜேர்மன் தெருக்களில் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. இரண்டாவது உலகப்போர் ஆரம்பித்ததும் மிகுந்த பாதிப்புக்குள்ளான இவர் ஆஸ்திரியாவை விட்டுப் புலம்பெயர்ந்து பிரேசில் நாட்டில் சரணடைந்தார். யுத்தச்செய்திகளால் மனநிலை பிறழ்ந்து தன் மனைவியுடன் 22.2.1942இல் விஷமருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இவரது சிறந்த நாவல்களில் ஒன்றான Letter from an unknown woman தமிழில் அபலையின் கடிதமாக மொழிமாற்றம் பெற்றுள்ளது. அடுத்த வீட்டில் குடிபுகுந்த எழுத்தாளனை பதின்மூன்று வயதிலேயே ஒரு பெண் காதலிக்கிறாள். வீடு மாறிய போதும் ஒருதலைக்காதல் தொடர்கின்றது. அவன் அவளை அறியான். சந்தர்ப்பவசத்தால் அவனுடன் கொண்ட உறவால் பெற்ற ஒரே பிள்ளையை இழந்த வேளையில் அவள் தன் காதலைத் தெரிவித்துக் கடிதம் எழுதுகின்றாள்.

### 3837

**பாலத்தின் அடியில்.** குலசேன பொன்சேகா (சிங்கள மூலம்), சுந்தரம் சௌமியன் (தமிழாக்கம்). பெல்காதென்ன: சுந்தரம் சௌமியன்,



படிப்பகம்

www.padippakam.com



இல.1, 7ம் கட்டை, பசறை வீதி, 1வது பதிப்பு, 1999. (பதுளை: ஊவா பிரின்ட் ஹவுஸ், 33A, புகையிரத வீதி).

xvi, 252 பக்கம், விலை: ரூபா 195., அளவு: 21x14 சமீ., ISBN: 955-96782-0-5.

**பாலம யட்ட** என்ற சிங்கள நாவலின் தமிழாக்கம் இதுவாகும். பல்வேறு ஆதிக்கச் சக்திகளைக் கொண்ட சமுதாயத்தின் தாக்கத்தால் துன்பம் துயரங்களுக்கு இரையாகி முடிவற்றதொரு வாழ்க்கைப் போராட்டத்துக்கு ஆட்பட்டு மிதிபட்டு வாடிவதங்கும் ஒரு கீழ்மட்ட சமுதாயத்தின் துயரக்கதை பாலத்தின் அடியில் சொல்லப்படுகின்றது. பதுளையைச் சேர்ந்த சுந்தரம் சௌமியன், சிங்கள தமிழ் இலக்கிய பரிவர்த்தனையில், தலையாய பங்காற்றியவராக வளர்ந்திருக்கிறார். மார்ட்டின் விக்கிரமசிங்கவின் விராகய என்ற நாவலை பற்றற்ற வாழ்க்கை என்று மொழிமாற்றம் செய்து, இம்மொழிபெயர்ப்பிற்காக 1992ம் ஆண்டு பதுளை மகியங்கனையில் நடைபெற்ற சிங்கள சாஹித்திய விழாவில் சௌமியன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## 3838

**விலங்குப் பண்ணை.** ஜோர்ஜ் ஓர்வல் (ஆங்கில மூலம்), நல்லைக்குமரன் குமாரசாமி (தமிழாக்கம்).அவுஸ்திரேலியா: உதயம் வெளியீடு, Tamil News Ltd, P.O.Box 3170, Wheelers Hill, Victoria – 3150, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (கொழும்பு: கிரிப்ஸ்).

144 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ.

George Orval அவர்கள் எழுதிய Animal Farm என்ற நூலின் தமிழாக்கம். மேலை நாடுகளில் உயர்வகுப்புகளின் பாடநூலாகவும், பின்னர் ஆங்கிலத் திரைப்படமாகவும் வெளிவந்தது. இரண்டாம் உலக யுத்த காலகட்டத்தில் உலக அரசியல் பற்றி அங்கதச் சுவையுடன் பிரிட்டனில் எழுதப்பட்ட நாவல் இதுவாகும். இக்கதையின் மூலக்கரு 1937இல் ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின்போது மூலநூலாசிரியர் இணைந்து போரிட்டவேளை ஸ்பானிய இடதுசாரிகளான கம்யுனிஸ்டுகள் பூண்டோடு சுத்திகரிக்கப்பட்டதைக் கண்கண்ட காட்சிகளால் மனதில் உருவானதாகும். ஹீரோஷிமா அணுக்குண்டு வீச்சையடுத்து ஜப்பான் சரணடைந்த மாதத்தில் வெளியாகிய நாவல் இது. ஓர்வேல் இந்நூலில் அரச பயங்கரவாதம், பிரச்சாரம், புரட்சிப் பாதையில் சந்திக்கும் துரோகத்தனங்கள் ஆகியவற்றின் அராஜகங்கள் பற்றி அனுபவரீதியாகக் குறிப்பிடுகின்றார். பேசுவதற்கும், சிந்திப்-



படிப்பகம்

www.padippakam.com



பதற்குமான பூரண சுதந்திரம், மேற்குலகின் வளர்ச்சிக்கு மூலாதார-மாக இருப்பதை இந்நூலில் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டுகின்றார்.

# 900 புவியியல், வரலாறுகள்

## 909 நாகரீகங்கள்

### 3839

**நாகரீகங்களுக்கு ஓர் அறிமுகம் 1.** சமாதிலிங்கம் சத்தியசீலன். *யாழ்ப்பாணம்: அகிலம் வெளியீடு, 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம். 664, கேணல் கிட்டு சாலை).*

viii, *138 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20X14 சமீ.*

கிரேக்க நாகரீகம், உரோம நாகரீகம், கிறிஸ்தவ திருச்சபையும் ஐரோப்பிய நாகரீகமும், அராபிய நாகரிகம், ஐரோப்பிய மானிய முறைமை, பைசாந்திய நாகரீகம், ஐரோப்பாவில் இஸ்லாமியப் படர்ச்சியும் விளைவுகளும், சிலுவைப் போர்கள், இடைக்கால ஐரோப்பியப் பல்கலைக்கழகங்கள், ஆகிய 9 தலைப்புகளின் கீழ் ஐரோப்பிய வரலாற்றைக் கற்க முற்படும் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

## 910 பொதுப் புவியியல்

### 3840

**குடித்தொகை: கோட்பாடுகளும் பிரயோகங்களும்.** கா.குகபாலன். *யாழ்ப்பாணம்: புவியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுலை 1995. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

*(8), 240 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 22.5X15 சமீ.*

**குடித்தொகையியல்: கோட்பாடுகளும் பிரயோகங்களும்.** கா.குகபாலன். யாழ்ப்பாணம்: புவியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2வது திருத்திய பதிப்பு, ஜனவரி 2005, 1வது பதிப்பு,



படிப்பகம்

www.padippakam.com



ஜுலை 1995. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பதிப்பகம், 424, காங்கேசன்துறை வீதி).

(6), 214 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x15 சமீ.

ஆசிரியர் இந்நூலில் குடித்தொகை இயக்கப் பண்புகளைக் கோட்பாட்டுரீதியாகவும் பிரயோக அடிப்படையிலும் இலங்கைக் குடித்தொகைப் பண்புகளை உதாரணமாகக் கொண்டு எழுதியுள்ளார். குடித்தொகைக் கல்வி, குடித்தொகைக் கோட்பாடுகள், குடித்தொகையின் புள்ளிவிபர உள்ளடக்கம், இறப்புகள், கருவளம், இடப்பெயர்வு முதலான முக்கியமான பகுதிகளை ஆசிரியர் இந்நூலில் ஆராய்ந்துள்ளார்.

## 3841

**சூழல் புவியியல்: வளங்களும் முகாமைத்துவமும்.** எஸ்.அன்ரனி நோர்பேட். கொழும்பு 3: எஸ்.அன்ரனி நோர்பேட், சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜுன் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xiii, 222 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, ISBN: 955 96132 3 5

சூழலும் அபிவிருத்தியும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடையன. வரலாற்றினூடாக மனிதனின் தேவைகளும், விருப்பங்களும் மாற்றமடைந்து வந்ததினால் சூழலின் மீதான தாக்கங்களும் அதிகரிக்கத் தொடங்கவே அபிவிருத்தி தொடர்பான கருத்தியலும் மாற்றமடைந்து எதிர்கால அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடுகளும் ஏற்படத்தொடங்கின. இன்று நிலைபேண் அபிவிருத்தியை அடைந்துகொள்வதே மனித இனத்தின் பிரதான நோக்காகக் காணப்படுகின்றன. இத்தகைய பின்புலத்தில் அபிவிருத்தியின் பல்வேறு பரிமாணங்கள், சூழலுக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்புகள், பிரதேச அபிவிருத்தியை வெளிப்படுத்தும் குறிகாட்டிகள் மற்றும் நிலைபேண் அபிவிருத்தியின் அணுகுமுறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் இந்நூலில் ஆராயப்படுகின்றன. வளங்கள் பற்றி மாற்றமடைந்துவரும் புதிய கருத்துக்களுடன் குறிப்பாக சக்தி வளங்கள், காட்டு வளங்கள், மண்வளம், மீன்பிடி வளங்கள், பாலைவனமாகுதல், மிகக் குறைந்த அபிவிருத்தி நாடுகளின் பொருளாதார சூழல் நிலைமைகளில்



படிப்பகம்

www.padippakam.com



எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் மற்றும் வளப் பயன்பாடு, முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்நூலில் மிக ஆழமாகவும், மாணவர்களுக்கு விளங்கக் கூடிய முறையிலும் மிகவும் விபரமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

## 911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

### 3842

**இந்திய திருத்தல யாத்திரை: கனடாவிலிருந்து காசி முதல் கன்னியாகுமரி வரை.** ச.சதாசிவம் சேவியர். சிவகாசி 626123: ராஜாத்தி எக்ஸ்போர்ட்டர்ஸ், 13, காமராஜ் ரோடு, 1வது பதிப்பு, 1998. (சிவகாசி: டிரினிட்டி எக்ஸ்போர்ட்ஸ்).

256 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

புங்குடுதீவைச் சேர்ந்த நூலாசிரியர் தற்போது வாழும் கனடா தேசத்திலிருந்து திருத்தல யாத்திரை புறப்பட்டு இந்தியா சென்று வந்துள்ளார். அவரது பயண அனுபவங்களை 64 இயல்களில் எழுதி இந்த நூலைப் படைத்துள்ளார். பல தலங்களின் செய்திகளை இதிகாச புராணங்களோடு வரலாற்று ரீதியிலும் தர முனைந்துள்ளார். பிரயாணங்களின் போது எடுத்த புகைப்படங்களும் ஆங்காங்கே நூலை அலங்கரிக்கின்றன.

### 3843

**சமதர்மப் பூங்காவில்.** லெ.முருகபூபதி. நீர்கொழும்பு: பாரதி இல்லம், 99/5, அலஸ் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (கொழும்பு 6: சாமர அச்சகம், 22ஏ, மல்லிகா ஒழுங்கை).

127 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

சோவியத் யூனியனில் 12ஆவது உலக இளைஞர், மாணவர் விழாவில் கலந்துகொள்ளச் சென்றபோது ஏற்பட்ட பயண அனுபவங்களைக் கூறும் நூல். வீரகேசரி வாரவெளியீட்டில் 15 வாரங்களாகத் தொடர்ந்து வெளியாகிய பயண இலக்கியம் இதுவாகும். பண்பட்ட பத்திரிகையாளரான இவர் சிறந்த சிறுகதை எழுத்தாளருமாவார். இவரது சுமையின் பங்காளிகள் என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3844

**நெஞ்சில் பதிந்த ஐரோப்பியப் பயணம்.** அந்தனி ஜீவா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

iv, 136 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

மலையக வெளியீட்டகத்தின் தாபகரும், பிரபல நாடகக் கலைஞரும், எழுத்தாளருமான அந்தனி ஜீவா அவர்கள் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் முதலாய ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயமொன்றினை ஆகஸ்ட் 2003இல் மேற்கொண்டிருந்தார். இவரது வரவும் சந்திப்புகளும் அனுபவங்களும் இந்நூலில் பிரயாணக்கதையாக சுவைபடச் சொல்லப்பட்டிருக்கின்றது.

## 3845

**மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள்.** சங்கர். கிளிநொச்சி: அறிவமுது பதிப்பகம், முதன்மைச் சாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கிளிநொச்சி: அறிவமுது பதிப்பகம், முதன்மைச் சாலை).

vi,177 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

2000ம் ஆண்டின் ஆனையிரவுச் சமரின் பின்னர் 31.3.2000 அன்று யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் தரையிறங்கி அன்றாட போர்க்கள நிலையினை கண்டறிந்து ஈழநாதம் பத்திரிகையில் அதனைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தவர் பத்திரிகையாளர் சங்கர். அத்தொடர் புகைப்பட உதவியுடன் நூலுருவில் வெளியாகியுள்ளது. மு.திருநாவுக்கரசு, சாரணன் என்ற புனைபெயரில் சாளரம் (ஆகஸ்ட் 1991)இதழில் எழுதிய **ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதல்: தமிழ்த் தேசிய பிரதேச ஒருமைப்பாட்டின் ஒரு மைல்கல்** என்ற கட்டுரையும், கருணாகரன் வெளிச்சம் (சித்திரை-வைகாசி 2000) இதழுக்கு எழுதிய **ஆனையிரவு: நினைவும் நிஜமும்** என்ற கட்டுரையும் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# 912 தேசப்படங்கள்

## 3846

**புதிய பாடத் திட்டம்: லேக்ஹவுஸ் தேசப்படம்.** கே.பி.பர்ணாந்து. கொழும்பு 2: வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் அச்சகத்தாரும் வெளியீட்டாளரும், 1வது பதிப்பு, மே 1993. (கொழும்பு 2: வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் அச்சகத்தாரும் வெளியீட்டாளரும்).

56 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 28x22 சமீ.

இலங்கையினதும், பிரதான கண்டங்களினதும் தேசப்பட விளக்கம் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. மழைவீழ்ச்சி, வெப்பநிலை, நிர்வாகப் பிரதேசங்கள், கப்பலும் வர்த்தகமும், தானிய உற்பத்திகள், கைத்தொழில் அமைவிடங்கள், வனவழிப் பாதைகள், கடல் நீரோட்டங்கள், புவியின் வேறுபாடு, புவியமைப்பு போன்ற பலதரப்பட்ட விளக்கப்படங்கள் நான்கு வர்ணத்தில் இணைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இந்நூல் மெற்றிக் முறையில் திருத்தம் பெற்ற முதல் பதிப்பாக வெளிவருகின்றது.

# 915 பிரதேசப் புவியியல்

## 3847

**வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாற்றமுற்று வரும் இன ரீதியிலான குடித்தொகைப் போக்குகள்.** கா.குகபாலன். யாழ்ப்பாணம்: கா.குகபாலன், முதுநிலை விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மே 1993. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டேர்ஸ்).

(4), 48 பக்கம், அட்டவணைகள், புள்ளிவிபரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா நிறைவை- யொட்டி (1943-1993) 23.05.1993இல் நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஸ்தாபகர் நினைவுப் பேருரை இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# 920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்

## 920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள்

### 3848

**இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்.** இளவாலை அமுது. லண்டன் SW17 7EZ: புதினம் 10ஆவது ஆண்டு நிறைவு வெளியீடு, 38, Moffat Road, 1வது பதிப்பு, மே 2006. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360 பிரதான வீதி).

213 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 5., அளவு: 21X14.5 சமீ.

புலவர்மணி கலாநிதி இளவாலை அமுது அவர்கள் லண்டன் புதினம் இருவாரப் பத்திரிகையில் தொடர்ந்து எழுதிவந்த வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. தமிழ் வளர்த்த சான்றோர்கள் மாத்திரமன்றி, சமகால ஊடகத்துறையினர், எழுத்தாளர்கள், திரைப்படக் கலைஞர்கள் என்று 44 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை முதல் மறைந்த மனிதகுல மாணிக்கம் இரண்டாம் யோவான் பவுல் (பாப்பாண்டவர்) வரை விரிந்துள்ள இத்தொடரில், சமகால புகலிடக் கலைஞர்கள் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

### 3849

**எழு குரல்கள்.** நிலக்ஷன் சுவர்ணராஜா. குரும்பசிட்டி: சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (வவுனியா: வாணி கணனி அச்சிடல் நிலையம்).

viii, 37 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21X14.5 சமீ.

தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்த பல்வேறு துறைசார் பிரமுகர்களின் செவ்விகளின் தொகுப்பு. கலைஞானி அ.செல்வரத்தினம், கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, மகராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள், திரு.வை.சிவசுப்பிரமணியம், வேல் அமுதலிங்கம், ஆவணஞானி இரா.கனகரத்தினம், தோழர் எம்.சுகுமாரன் ஆகியோருடனான நேர்காணல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியும், கொழும்பு சட்டக்கல்லூரி மாணவருமாவார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3850

**என் அம்மாவின் கதை.** என்.சண்முகலிங்கன். தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி)

vii, 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X13 சமீ.

1988இல் தன் தந்தையின் (அமரர் நாகலிங்கம்) மறைவின்போது என் அப்பாவின் கதை என்ற நூலை எழுதியவர் என்.சண்முகலிங்கன். தனிமனிதன் ஒருவனுக்கு தாயின் மீதுள்ள பாசத்தையும், தனிமனித உருவாக்கத்தில் தாய் என்ற ஆளுமையின் வகிபாகத்தையும் தன் வரலாற்றுடன் இணைத்து கலைப்பெறுமானச் செறிவுடன் இந்நூலைத் தன் அம்மாவின் கதையாக (திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம்) எழுதியுள்ளார். கல்வெட்டுப் பாரம்பரியத்தின் பரிணாம வளர்ச்சியாக இந்நூல் அமைகின்றது.

## 3851

**சின்ன தேவதை.** எஸ்.பாலசுகுமார் (தொகுப்பாளர்). மட்டக்களப்பு: அனாமிகா பதிப்பகம், 48 பைலி முதலாம் குறுக்குத்தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

190 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14.5 சமீ.

மார்கழி 2004இல் இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமிப் பேரலையில் சிக்குண்டு மரணித்த பதினான்கு வயதான ஏஞ்சல் என்ற சிறுமியின் மறைவின் ஓராண்டுப் பூர்த்தியையொட்டி தொகுக்கப்பட்ட நினைவலைகள். கிழக்குப் பல்கலைக்கழக கலைத்துறைத் தலைவரான திரு.எஸ்.பாலசுகுமார் அவர்களின் ஏக புதல்வியான ஏஞ்சல் பற்றி அவரது பல்துறை ஆளுமை பற்றி பல்கலைக்கழக அறிவுஜீவிகளும், கலை இலக்கியத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களும், உறவினர்களும் எழுதிய இவ்வஞ்சல் உரைகளின் வாயிலாக, ஈழத்தின் சுனாமி அனர்த்தத்தின் ஆழத்தை உணர்வுபூர்வமாகத் தரிசிக்க முடிகின்றது. பிறந்தநாளன்று காலையில் ஆராதனைக்காக மகளுடன் தேவாலயத்திற்குச் சென்றவேளையில் பேரலையால் அடித்துச்செல்லப்பட்ட தாய், தன் மகளுடனான அந்த இறுதி நேரக்கணங்களை எழுத்தில்



படிப்பகம்

www.padippakam.com



வடித்திருக்கும் உருக்கமான, விரிவான முன்னுரை சுநாமி தந்த வலியை வாசகர்களும் நன்குணரவைக்கின்றது. அவ்வகையில் இந்நூல் சுனாமி இலக்கிய வகைக்குள் தன்னை வரலாற்று ஆவணமாக நிலைநிறுத்திக்கொண்டுள்ளது.

## 920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்

### 3852

**இரா பத்மநாதன் நினைவுகளோடு.** நூலாக்கக் குழு. சென்னை *600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, 2005. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், ஆர்க்காடு சாலை).*

*160 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 12.5X18 சமீ.*

மட்டக்களப்பின் களுதாவளை, களுவாஞ்சிக்குடியில் வாழ்ந்து இறைபதம் அடைந்த கலைமாமணி இரா.பத்மநாதன் அவர்களின் நினைவாக உருவாக்கிய நினைவுமலர். 19.7.1929இல் பிறந்து 16.4.2005இல் தனது 73ஆவது வயதில் காலமான இரா.பத்மநாதன் (இராசதுரை பத்மநாதன்) பற்றிய மனப்பதிவுகளை இலக்கியத்துறையிலும், கலைத்துறையிலும் அவரை நன்கறிந்த பிரமுகர்கள் பகிர்ந்துகொண்டுள்ளனர். ஆங்கில உதவி ஆசிரியராக 1950இல் தன் தொழிலைத் தொடங்கிய இவர், வீரகேசரி பத்திரிகையின் அதிபர் பி.பி.ஆர்.எஸ்.செட்டியாரின் அந்தரங்க காரியதரிசியாக (1955-56) இருந்தவர். பின்னர் தமிழக சினிமா உலகில் பிரவேசித்துத் தென்னிந்திய சினிமாப் பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக, உதவி ஒளிப்பதிவாளராக, உதவி இயக்குநராக, உதவி நடிகராக இருந்துள்ளார். சுதந்திரன் வார இதழின் 1962-66 காலகட்ட இணை ஆசிரியராகவும், 1967-1969 காலகட்டத்தில் USIS அமெரிக்க தகவல் நிலையத்தின் தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாளராகவும், 1969-1984 காலகட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார். 1984 முதல் தமிழகத்தில் சென்னையில் வாழ்ந்து வந்த இவர் 1993முதல் 1999 வரை இலங்கையில் தினமுரசு வார இதழின் கௌரவ ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். இவரது பரந்துபட்ட அனுபவங்கள் இங்கு பதிவாகியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3853

**ஒரு படுகொலையின் மொழி.** நண்பர்கள் வட்டம். பிரான்ஸ்: சபாலிங்கம் நண்பர்கள் வட்டம், பாரிஸ், 1வது பதிப்பு, ஜுலை 1994. (France: 3, Allee Paul Leataud, 95200, Sarcelles).

*56 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30X21 சமீ.*

பாரிஸ் நகரில் 01.05.1994 அன்று படுகொலை செய்யப்பட்ட சபாரட்ணம் சபாலிங்கம் அவர்களின் நினைவுகள் தாங்கிய நூல். அவரது வாழ்க்கைக் குறிப்புகளும் அவரது பணிகள் பற்றிய வரலாற்றுப் பதிவுகளும் புகைப்படங்களும் உள்ளடங்கியுள்ளன. 14.01.1952இல் யாழ்ப்பாணம், வேலணையில் பிறந்த இவர் ஈழவிடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக அடையாளம் காணப்பட்டு 1970களில் மூன்றாண்டுகள் இலங்கைச் சிறையிலிருந்தவர். 1981இல் பாரிசுக்குப் புலம்பெயர்ந்து வந்து ஊடகவியலாளராகவும், ஆவணத் தொகுப்பாளராகவும், தமிழ் அகதிகள் சார்ந்த செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தியும் வாழ்ந்திருந்தவர்.

## 3854

**ஒரு பேனாவின் பதிவேடு.** தராக்கி சிவராம் (இயற்பெயர்: தர்மரத்தினம் சிவராம்). சுவிஸ்: ஊடகப் பணிமனை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (Switzerland: T-Graphics Copy Centre, Militarstrasse 84, 8004 Zurich).

*40 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30X21 சமீ.*

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு 28.04.2005 அன்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும், தமிழ்நெட் செய்தித் தாபனத்தின் ஆசிரியருமான தராகி டி.சிவராம் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட இந்தத் தொகுப்பில் சிவராம் அவர்கள் பத்திரிகைகளில் எழுதி வெளியான அண்மைக்கால இராணுவ ஆய்வுக் கட்டுரைகளில் தேர்ந்த சில கட்டுரைகள் பதிவுக்குள்ளாகியுள்ளன. டெய்லி மிரர் ஆங்கில நாளிதழிலும், பல தமிழ் ஊடகங்களிலும் படைத்துறை தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை இவர் எழுதிவந்திருந்தார். தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை உலக அரங்கில் எடுத்துச்சென்றவர் இவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3855

**காற்றின் சுவடுகள்: மேடை முதல் வானொலி வரை.** பொன்விழாக்குழு. கொழும்பு 6: C.Sharan Super Graphics, 310/2 காலி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

*124 பக்கம், வண்ணப்படத் தகடு, புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

1952இல் முதன்முதலில் இலங்கை வானொலியில் வானொலி நாடகங்களில் நடித்து அறிமுகமானவர் இராஜேஸ்வரி சண்முகம். தனது 31வது வயதில் 1969இல் பகுதிநேர அறிவிப்பாளராகத் தேர்வுபெற்று இன்றும் குன்றாத குரல்வளத்துடன் வாழும் அற்புதக் கலைஞர். மேடை முதல் வானொலி வரை தனது நெஞ்சில் நிறைந்தவையும், நினைவில் பதிந்தவையும் இம்மலரில் பதிவாகியுள்ளன. குரலின் வசீகரமும் குணத்தின் செம்மையும் கடமை நேர்மையும் அவரை இன்று இலங்கை வானொலியின் மதிப்புமிக்க மூத்த கலைஞர்களில் ஒருவராக்கியுள்ளது. வானொலிக் குயில் இராஜேஸ்வரி சண்முகம் ஒலிபரப்பு, கலை, இலக்கியம், நாடகம், விளம்பரம் ஆகிய துறைகளில் முத்திரை பதித்த நிகழ்வை முன்னிட்ட பொன்விழா மலர் இது. செல்வி விக்னா செல்வநாயகம், அ.கனகசூரியர், மஹ்தி ஹசன் இப்ராஹிம் ஆகியவர்களின் கூட்டுத் தொகுப்பில் இது மலர்ந்துள்ளது.

## 3856

**சகலகலாவித்தகி சற்சொரூபவதி.** மலர்க்குழு, கொழும்பு: யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம், கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

*88 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

ஒலிபரப்பில் நாற்பது ஆண்டுகள் சேவைத்திறன் பாராட்டுவிழாவொன்றினை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் கொழும்பில் வெள்ளவத்தை சண்முகாஸ் ஹோட்டலில் 2.4.2005 அன்று ஏற்பாடு செய்திருந்தது. அன்றையதினம் சகலகலா வித்தகி என்ற பட்டமும் ஒலிபரப்பாளர் சற்சொரூபவதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அன்றையதினம் வெளியிடப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



சிறப்பு மலர் இதுவாகும். 1956இல் சேர் பொன் அருணாசலம் நூற்றாண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்ற பிரபல ஒலிபரப்பாளரான சற்சொரூபவதி, 1958இல் சென்னையில் ஸ்ரீ ஜவகர்லால் நேரு விருதினையும், 1992இல் உண்டா விருதினையும், அதைத் தொடர்ந்து இந்து கலாச்சார அமைச்சு விருது (1993), ஜனாதிபதி விருது (1995), கொழும்புக் கலைக்கழக விருது (1999), இலங்கை வானொலி பவளவிழா விருது (2000), தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தேசிய விருது (2003) ஆகியவற்றைப் பெற்றவர். இலங்கைத் தமிழ் ஒலிபரப்புத் துறையில் நீண்ட நாட்கள் பணியாற்றிய ஜனரஞ்சக ஒலிபரப்பாளர் இவராவார்.

### 3857

**சிவலயம்: வீ.ஏ.சிவஞானம் பற்றிய நினைவுகள்.** *வி.ஏ.திருஞானசுந்தரம். (பதிப்பாசிரியர்), கொழும்பு: கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).*

x, *117 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 22x14.5 சமீ.*

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தமிழ் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிய அமரர் வீ.ஏ.சிவஞானம் பற்றிய மனப்பதிவுகள். அவர் தொடர்பான பல்வேறு தகவல்கள், புகைப்படங்கள், சகிதம் பல்துறை அறிஞர்களின் கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பக்கங்கள் 53-110 வரை அமரர் சிவஞானம் அவர்கள் எழுதிய பல்வேறு கட்டுரைகள், கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன.

## 922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

### 3858

**அருட்திரு சேவக். ஐ.ரி.இயேசுசகாயம் (சின்னண்ணன்) அவர்களின் வாழ்க்கையும் பணியும்.** *அருட்திரு சேவக். சி.பிலிப்குமார். சுன்னாகம்: கிறிஸ்த சேவா ஆச்சிரமம், மருதனார்மடம், 1வது பதிப்பு, 2003. (மானிப்பாய்: சௌந்தரம் அச்சகம்).*

ix, *145 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



அருட்தந்தை எஸ்.செல்வரட்ணம் அடிகளார் (பெரியண்ணன்) யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதனார் மடம் என்ற கிராமத்தில் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தை 1939ம் ஆண்டில் தொடக்கினார். யாழ். கிறிஸ்தவ மக்கள் மத்தியில் அருந்தொண்டாற்றி ஆன்மீகத்துறையில் அவர்களை வழிநடத்தும் நோக்குடன் செயற்பட்ட அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களின் ஆன்மீகச் சேவையினால் கவரப்பெற்று தன்னையும் இறைசேவையில் இணைத்துக்கொண்டவர் சின்னண்ணன் என்று அழைக்கப்படும் அருட்சகோதரன் ஐ.ரி.இயேசு சகாயம் அடிகளார் (18.7.1918 – 28.12.1970) ஆவார். கிழக்கிலங்கையில் வட்டிமோட்டமடுவில் ஜோதி இல்லத்தையும், கிரான் பகுதியில் மற்றொரு ஆச்சிரமத்தையும் இவர் நிறுவி வழிநடத்திவந்திருந்தார். இவரது வாழ்வும் ஆன்மிகப்பணியும் இந்நூலில் விபரமாகப் பதிவுக்குள்ளாகியுள்ளது.

### 3859

**இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கலாநிதி K.M.H.காலிதீன்.** இக்பால் அலி. பேராதனை: இலங்கை தென்கிழக்கு ஆய்வு மையம், பல்கலைக்கழகப் பள்ளிவாசல், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (வேஉட: Dhaniz Printers, 108/2, Melwatte, Paragahadeniya).

*82 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ.,* ISBN: *955-8194-01-8.*

கிழக்கு மாகாணம் தந்த நல்லறிஞரான கலாநிதி மௌலவி கே.எம்.எச்.காலிதீன் அவர்கள் இலங்கையின் கல்வித்துறை அபிவிருத்தியோடும், சமூக உயர்வுக்கான பணிகளோடும், பல்கலைக்கழக சமூகத்தோடும் பிரிக்கமுடியாத வகையில் தனது வாழ்வை இணைத்துக்கொண்டவர். இவரது வாழ்வும் பணிகளும் இந்நூலில் விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

### 3860

**இறைப் பணியாளர் பால்டேயசும் இலங்கைப் பணியும்.** கார்மேகம் சுரேஷ்குமார். கொழும்பு 5: Philip International, 100/1, Vijaya Kumaranatunga Mawathe, 1வது பதிப்பு, 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(8), 85 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ.,* ISBN: *955-8673-14-5.*



படிப்பகம்

www.padippakam.com



வரலாறு உரைக்கும் முதல் இலங்கை புரட்டஸ்தாந்து மிஷனரியின் சிறப்புமிக்க திருமறைப் பணி ஒளியில் தற்கால திருச்சபை திருமறைப் பணியை நோக்கலாக இந்நூல் அமைந்துள்ளது. புரட்டஸ்தாந்து திருத்தூதுப் பணியாளனாக (மிஷனரியாக) இலங்கைக்கு முதலாவது வருகைதந்த, அருட்திரு பிலிப்ஸ் பால்டேயஸ் (Philippus Baldaeus) அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி இந்நூல் ஆய்வியல் தகவல்களை வழங்குகின்றது.

## 3861

**இன்னாசியார் காவியம்.** வாகரைவாணன். மட்டக்களப்பு: ஆரணியகம், 479/5 புதிய கல்முனை வீதி, நாவற்குடா, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (மட்டக்களப்பு: வனசிங்கா அச்சகம்).

(4), xii, 100 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ.

இயேசு சபையின் தாபகரும் புரட்சிப் புனிதருமாகிய இலயோலா இஞ்ஞாசியார் விண்ணகம் சென்ற 450ம் ஆண்டு ஜுபிலி விழா 2006ம் ஆண்டு உலகெங்கும் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வையொட்டி இயேசு சபைத்தாபகரின் வாழ்க்கையை அதன் வரலாற்றை, அச்சபையின் சிந்தனைகளை, செயற்பாடுகளை, கவிஞர் வாகரைவாணன் இன்னாசியார் காவியம் என்ற இந்த இலக்கியத்தின் வாயிலாகப் பதிவுசெய்துள்ளார்.

## 3862

**என் சரிதம்.** கா.கைலாசநாதக் குருக்கள். யாழ்ப்பாணம்: ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானம் (சிவன் கோவில்), நல்லூர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (யாழ்ப்பாணம்: பொஸ்கோ அச்சகம்).

(4), 142 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

வாழ்நாட் பேராசிரியர் கலாநிதி சிவஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் நினைவு வெளியீடு இலக்கம் 3. தனது வாழ்க்கை வரலாற்றை 1998ம் ஆண்டு முதலாக எழுதிவந்த பேராசிரியர் இறுதி இரண்டு அத்தியாயங்கள் (உபதேசங்கள், வாழ்க்கையின் பெறுபேறுகள்) முற்றுப்பெறாத நிலையில் 30.6.2000 அன்று தான் புலம்பெயர்ந்து வாழ்ந்திருந்த அவுஸ்திரேலியாவின் Vanclause வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு 31.7.2000 முதலாக நினைவிழந்த



படிப்பகம்

www.padippakam.com



நிலையில் இருந்து 07.08.2000 அன்று காலை தன் வாழ்வை நிறைவுசெய்துகொண்டார். இவரது இறுதிக் கிரியைகள் மெல்போர்ண் நகரில் 10.8.2000 அன்று நடைபெற்றன. பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் வாழ்க்கை வரலாறு விரிவாக இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

## 3863

**கனவுங் கலைந்தது காலையும் புலர்ந்தது.** ஊரெழு கதிரமலையான். (இயற்பெயர்: ச.கதிரவேலு). சென்னை 600078: கதிரமலை பதிப்பகம், 15-கே, பாரதிதாசன் காலனி, கே.கே.நகர், 1வது பதிப்பு, மே 1997. (வடபழனி: ஜொப் பிரின்ட்ஸ்).

201 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12.5 சமீ.

1987 ஜனவரி 25க்கும் பெப்ரவரி 20க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் ஈழவிடுதலைப் போராட்ட அணியொன்றினால் அவர்களின் முகாமொன்றில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது எழுதிய நினைவலைகள், இந்நூலில் தனது தடுப்புக்காவல் காலகட்ட அனுபவங்களினூடாகத் தன் சுய வரலாற்றையும், ஆன்மீகப் பார்வையில் தனது வாழ்வியல் அனுபவங்களையும் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். நாற்பதாண்டு காலம் இலங்கையில் ஆசிரியராகத் தொழில்புரிந்து ஓய்வுபெற்றுள்ள முருகபக்தரான நூலாசிரியர், முருகன் பேரிற் பாடிய கவிதைகள் பல நூலுருவில் வெளிவந்துள்ளன. இந்த நினைவலைகளை எழுதிய காலகட்டத்தில் மனோன்மணி அந்தாதி என்ற நூலையும் இவர் எழுதியிருந்தார். அது 1988இல் வெளிவந்திருந்தது.

## 3864

**சிவத்தமிழ் இன்பம்: செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 60ம் ஆண்டு நிறைவு மணிவிழா மலர்.** மலர் வெளியீட்டுக் குழு. தெல்லிப்பழை: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை, துர்க்காபுரம், 1வது பதிப்பு, ஜனவரி 1985. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xlii, 158 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 30., அளவு: 24.5X19 சமீ.

மூன்று பகுதிகளில் அமைந்துள்ள இம்மலரின் முதற் பகுதியில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய



படிப்பகம்

www.padippakam.com



ஆன்மீகச் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும், இரண்டாம் பகுதியில் சிவத்தமிழ்ச் செல்விக்கு பல்வேறு பிரமுகர்கள் வழங்கிய வாழ்த்து மடல்கள், வாழ்த்துரைகள் என்பனவும், மூன்றாம் பகுதியில் மணிவிழாவுக்கென பிரத்தியேகமாக வழங்கப்பட்ட மணிமலர் மாலையும் இடம்பெறுகின்றன. 07.01.1985இல் நடைபெற்ற 60ம் ஆண்டு நிறைவு மணிவிழாவில் வெளியிடப்பட்டது.

### 3865

**நவ முஸ்லிம் சிந்தனையாளர் யூஸுப் இஸ்லாம்.** அஹ்மத் முனவ்வர். சென்னை 600001: அல்பாஸி பப்ளிக்கேஷன்ஸ், 151, அங்கப்ப நாயக்கன் தெரு, 3வது பதிப்பு, செப்டெம்பர் 1987, 1வது பதிப்பு, ஜுன் 1985, 2வது பதிப்பு, ஜுன் 1986. (சென்னை 600001: திரீயெம் பிரின்டர்ஸ், 92 ஆர்மீனியன் வீதி).

*90 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 18X12.5 சமீ.*

இங்கிலாந்தின் பிரபல்யம் பெற்று விளங்கிய பொப்பிசைப் பாடகரான கெட் ஸ்டீவன் அவர்கள் 1970களின் இறுதிப் பகுதியில் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டார். இதைத் தொடர்ந்து இவரின் பெயர் யூஸுப் இஸ்லாம் என மாற்றம் பெற்றது. யூஸுப் இஸ்லாம் அவர்கள் 1985இல் இலங்கைக்கு விஜயம்செய்து மார்க்கப் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். இக்கால கட்டத்தில் இவரது வாழ்க்கை வரலாறு தினகரன் பத்திரிகையில் தொடராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் இந்நூலாசிரியரால் எழுதப்பட்டது. அக்கட்டுரைகளின் தொகுப்பே இத்தனிநூலாகும். நூலின் முன்னட்டையில் தலைப்பு, **யூஸுப் இஸ்லாம் சில நினைவுகள்** என்று பதியப்பெற்றுள்ளது.

## 923 சமூகவியல்துறை சார்ந்தோர்

### 3866

**உலகப் பேரொளி உத்தமர் காந்தி.** இ.சிறிஸ்கந்தராசா. கொழும்பு 6: 93, பீட்டர்சன் லேன், E15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

*100 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 19X13 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



காந்தியடிகளின் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள், புதுமைத் தகவல்கள் ஓரிரு வரிச் செய்திகளாக இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. காந்தியடிகளின் நகைச்சுவை ததும்பும் கேள்வி பதில்கள், அவரது மணிமொழிகள், மாணவர்கள் மேடையில் பேசவும், கட்டுரையாக எழுதவும் தேவைப்படும் காந்தி பற்றிய முக்கியமான குறிப்புகள் என்பன இந்நூலில் காணப்படும் மேலதிகமான அம்சங்களாகும்.

## 3867

**பேரேட்டில் சில பக்கங்கள்.** சாரல்நாடன். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், இல.7, பல்கூட்டுச் சந்தை, ரொசிட்டா கடைத் தொகுதி, 1வது பதிப்பு, மே 2004. (கண்டி: Sunprints, 67, Mapanawathura Lane).

*68 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *955-8589-12-8.*

மலையகச் சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள், பாடலாசிரியர்கள், இசை, நாடகக் கலைஞர்கள், நாவலாசிரியர்கள், புலவர்கள், இதழியலாளர்கள், அரசியல், தொழிற்சங்கவாதிகள், என 57 வரலாற்று நாயகர்களை இந்நூலில் சாரல்நாடன் அடையாளம் காட்டியுள்ளார்.

## 3868

**வாழ்வும் வடுவும்.** இலங்கையன். (இயற்பெயர்: இ.வே.செல்வரத்தினம்). கனடா: நான்காவது பரிமாணம், 1வது பதிப்பு, ஜுலை 2005. (கனடா: குவாலிற்றி பிரிண்டிங்).

*132 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *0-9738775-0-2.*

வாழ்வின் பெரும்பகுதியை கல்விக்கென்றே அர்ப்பணித்த இலங்கையன் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏராளமான நிபுணர்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தவர். தமது கனடியப் புலம்பெயர் வாழ்வின்போதும் தமிழ்மொழிக்காக உழைத்தவர். ஒரு பகுத்தறிவாளராகவும் முற்போக்காளராகவும் அறிவியலாளராகவும் இருந்து தமிழ்ச் சமூகத்திற்கு மேலும் காத்திரமான பங்களிப்புகள் பலவற்றைச் செய்துள்ள இவரது வாழ்வின் சில கூறுகளை இந்நூல் வெளிக்கொணர்கின்றது. இவரது கல்வியுலக,



படிப்பகம்

www.padippakam.com



*சமூகசேவைக்கால அனுபவங்கள் பலவும், வாழ்வியல் கருத்துக்களும் இந்நூலில் பரவலாக இடம்பெறுகின்றன.*

## 923.2 அரசியல் துறையினர்

### 3869

**அனுபவம் பேசுகிறது: அமிர்தலிங்கம்.** *சாமிஜி. யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, ஆனந்தா புத்தகசாலை, 226 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1978. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).*

*(4), 88 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 3.80, அளவு: 21x14 சமீ.*

*ஈழத்தமிழர் நெருக்கடி மிகுந்ததொரு காலகட்டத்தில் வரலாற்றின் திருப்புமுனையொன்றில் நின்றிருந்த வேளை, அவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்திமிக்க ஒரே கட்சியாக விளங்கியது தமிழர் கூட்டணியாகும். தமிழர் கூட்டணியின் செயலதிபரும், இலங்கை அரசின் எதிர்க்கட்சித் தலைவருமாக விளங்கிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்களிடம் சாமிஜியின் சுவையான கேள்விகளும் இலங்கை அரசின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியேற்றிருந்த அமிர்தலிங்கம் அவர்களின் கருத்தாளமுள்ள பதில்களும் இந்த நூலைச் சிறப்புச்செய்கின்றன.*

### 3870

**எங்கள் தலைவர்.** *எம்.சிவானந்தன் (தலைவர்). சாவகச்சேரி: அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், சாவகச்சேரிக் கிளை, 1வது பதிப்பு, மார்ச் 1966. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).*

*16 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராக விளங்கிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரச் சுருக்கம்.*

### 3871

**எங்கள் தலைவர் பதியுதீன்.** A.W.M.*ஹன்சிர். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, ஜுன் 1989. (சென்னை 600001: திரியெம் பப்ளிஷர்ஸ், 92, ஆர்மேனியன் வீதி).*



படிப்பகம்

www.padippakam.com



1105 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ.

காயிதே மில்லத் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் மிக விரிவாகத் தரப்பட்டுள்ளன. பதினொரு பாகங்கள் கொண்ட இப்பாரிய தொகுப்பில் தலைவர் பதியுதீன் மஹ்மூத் அவர்களின் சாஹிராக் கல்லூரி வாழ்வு-முடிவு வரை, முஸ்லீம் லீக் காலம், அலிகார் சர்வகலாசாலைக் காலம், தேசிய சேவைக்குத் தயாராகும் காலம், கம்பளை சாஹிராக் காலம், தீவிர அரசியல் காலம், கல்வி, வானொலி மந்திரிக் காலம், சுகாதார, வீடமைப்பு மந்திரிக் காலம், இஸ்லாமிய சோசலிச முன்னணிக் காலம், கல்வி மந்திரிக் காலம் (இரண்டாவது முறை), 1977ம் ஆண்டுத் தேர்தலின் பின், ஆகிய தலைப்புக்களின் கீழ் இவரது வாழ்வும் பணியும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## 3872

**கம்யுனிஸ்ட் இயக்கத்தில் தோழர் சண்முகதாசன்: விமர்சனக் கண்ணோட்டம்.** வெகுஜனன், இமயவரம்பன். சென்னை 600002: புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, மார்ச் 1994. (சென்னை 600020: இராசகிளி பிரின்டர்ஸ்).

36 பக்கம், விலை: இந்திய ரூபா 6., அளவு: 18x12.5 சமீ.

இலங்கை கம்யுனிஸ்ட் இயக்கப் பரப்பில் ஒரு முக்கியமான அரசியல் தொழிற்சங்கத் தலைவராகத் திகழ்ந்தவர் மறைந்த தோழர் நா.சண்முகதாசன். தனது 74வது வயதில் (08.02.1993இல்) மரணமடைந்த தோழர் சண் ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை அரசியல் தொழிற்சங்க இயக்கத்தின் முழுநேர வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தவர். அவரது தலைமைத்துவத்தால் சாதகமானவைகளும் பாரிய தவறுகளும் இழைக்கப்பட்டன. அவை இந்நூலில் மார்க்சிய-லெனினிய விமர்சனப்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன. வெகுஜனன் எழுதிய "தோழர் சண்முகதாசன்", இமயவரம்பன் எழுதிய "சண்முகதாசன்: ஒரு புனர்மதிப்பீட்டிற்கான அவசியம்" ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3873

**கலாநிதி பதியுத்தீன்.** எஸ்.எம்.ஏ.ஹசன். கண்டி: இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம், இராஜ வீதி, 1வது பதிப்பு, 1974. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).



படிப்பகம்

www.padippakam.com



200 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X13.5 சமீ.

கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்முத் அவர்களது கல்வி, சமூக, அரசியல் வாழ்க்கை வரலாறு இந்நூலில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. முஸ்லீம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அதீத அக்கறை காட்டிய அரசியல்வாதியாக இன்றும் மதிக்கப்பெற்று வரும் அமரர் பதியுத்தீன் அவர்களின் சமூக, அரசியல் நேர்மை பற்றி இந்நூல் விதந்துரைக்கின்றது. இது ஒரு சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நூல்.

### 3874

**கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம்: முதற்பகுதி.** அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 2: புதிய வெளிச்சங்கள் வெளியீடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 56 ஆட்டுப்பட்டித் தெரு, 3வது பதிப்பு, நவம்பர் 1999, 1வது பதிப்பு, மே 1998. (கொழும்பு 13: பசிபிக் அச்சகம், 267, ஆட்டுப்பட்டித் தெரு).

xxii, 214 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5X14 சமீ.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய முன்னாள் தலைவரும், துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் முன்னாள் அமைச்சருமான M.H.M.அஷ்ரஃப் அவர்களின் இளமைக்கால வாழ்க்கை வரலாற்று நூல். சரளமான தமிழ்நடையில் ஆதாரச் சான்றுகள் பல இணைக்கப்பட்டு ஒரு ஆவணமாகப் பதிவுசெய்கின்றது. ஒரு அரசியல் தலைமைத்துவத்தின் வாழ்வுத்தடங்களின் ஊடாகப் பேரினவாத அலைகளுக்கு ஈடுகொடுக்கும் சிறுபான்மையின ஆளுமையை வெளிப்படுத்தும் மனப்பதிவு இந்நூலாகும். 17.05.1998இல் முதற்பதிப்பும் ஒரு வார இடைவெளியில் 23.5.1998இல் இரண்டாம் பதிப்பும் கண்ட நூல் இது.

### 3875

**குமார் பொன்னம்பலம் நினைவு மலர்.** ஞாபகார்த்தக் குழு. கொழும்பு: அமரர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 234 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29X22 சமீ.

குமார் பொன்னம்பலம் எனச் சட்டத்துறையிலும், அரசியலிலும் நன்கறியப்பெற்ற அமரர் காசிநாதர் காங்கேசர் பொன்னம்பலம்



படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் தனது வாழ்வை, ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்காக அர்ப்பணித்த மாமனிதர். 05.01.2000 அன்று கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட இவர் தமிழ்த் தேசிய இனத்துக்குச் செய்த சேவைகள் பன்மொழி, பல்லின அறிஞர்களால் இம்மலரில் மீள்நினைவுகொள்ளப்பட்டுள்ளன.

## 3876

**சாகாவரம் பெற்ற சான்றோன்.** வீ.ஏ.திருஞானசுந்தரம் (செயலாளர்). கொழும்பு: கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201 டாம் வீதி).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இலங்கைத்தமிழ் அரசியல் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரம் (20.7.1923 - 5.6.2002) அவர்களின் நினைவு மலர். மு.சிவசிதம்பரம் அவர்கள் பற்றிய மனப்பதிவுகளை முன்நிறுத்தி வழங்கப்பட்ட இரங்கலுரைகள், அஞ்சலிக் கடிதங்கள் என்பன இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன.

## 3877

**சாமிவேலர் காவியம்.** சுதர்ஷனி குணராஜா. கோலாலம்பூர் 59000: பொன்னேஸ்வரி (ம) சென்.பெர்ஹாட், 79, ஜாலான் லிமாவ் நிப்பிஸ், பங்சார் பார்க், 1வது பதிப்பு, 1988. (Kuala Lumpur 50470: Tamil Nesan (M) Sdn. Bhd.,37, Jalan Ampang)

78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

மலேசிய அரசியல் களத்தில் இந்திய மக்களின் பிரதிநிதியாகத் தன்னை வெற்றிகரமாக நிலைநிறுத்திக் கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் டத்தோ சா.சாமிவேலு அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை விபரித்துப் பாடப்பட்டுள்ள காவியம் இதுவாகும். இந்நூலாசிரியர் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இயல் இசை நாடக மன்றம் என்ற கலை அமைப்பினை உருவாக்கி நடத்திவந்தவர். சங்கீதம், நாட்டியத் துறைகளில் மட்டுமின்றி கைரேகை சாத்திரத்திலும் தேறியவர்.

## 3878

**சோனியா சரிதை.** எஸ்.எம்.ஹனீபா. கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (கொழும்பு 12: குமரன்



படிப்பகம்

www.padippakam.com



புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

150 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இந்தியப் பிரதமராகவிருந்து ஸ்ரீபெரம்புதூரில் 21.5.1991அன்று படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியின் சமூக அரசியல் வாழ்க்கை பற்றிய நூல் இது. 9.12.1946இல் பிறந்த இத்தாலியரான சோனியா 25.2.1968இல் பாரதப் பிரதமர் இந்திராகாந்தியின் மகனைத் திருமணம் செய்தார். கணவனின் மறைவுக்குப் பின்னர் அரசியலில் பிரவேசித்து இன்றுவரை பலம்பொருந்திய அரசியல்வாதியாகக் காணப்படுபவர் சோனியா. ராஹுல் (19.6.1970), பிரியங்கா (1971 டிசம்பர்) ஆகிய இரண்டு குழந்தைகளுக்குத் தாயான சோனியாவின் அரசியல் வாழ்க்கையின் பின்புலத்தில் இந்திய அரசியல் பற்றிய ஒரு காலத்தின் பதிவாக இந்நூல் அமைகின்றது.

## 3879

**பொதுவுடமைவாதி தோழர் பொன் கந்தையா.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு 13: நினைவுக் குழு, 161, 1/1, ஜிந்துப்பிட்டி வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2003. (கொழும்பு 13: யூ.கே.பிரின்டர்ஸ், 98 ஏ, விவேகானந்தா மேடு).

IV, 124 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ.

பருத்தித்துறைத் தொகுதி முன்னாள் பாராளுமன்றப் பிரதிநிதியான (1956-1960) தோழர் பொன்னம்பலம் கந்தையா அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வென்றவர். எஸ்.ஏ.விக்ரமசிங்க, பீட்டர் கெனமன், டியு குணசேகர, மு.கார்த்திகேசன், எஸ்.கே.கந்தையா, Raja Collure, எம்.குமாரசாமி, டொமினிக் ஜீவா, சாந்தசீலன் கதிர்காமர், ஐ.ஆர்.அரியரட்ணம், சு.லோகதாசன். உள்ளிட்ட பல கம்யூனிஸ்ட் பிரமுகர்களின் நினைவுப் பதிவுகள் இந்நூலில் இடம்பெறுகின்றன.

## 3880

**மக்கள் தலைவர் அமரர் சௌ.தொண்டமான் அவர்களின் தமிழ் சாகித்திய விழா சிறப்பு நினைவு மலர் 2000.** கே.வி.இராமசாமி (பதிப்பாசிரியர்). கண்டி: அகிலம் பதிப்பகம், 308, திருக்கோணமலை வீதி, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி)



படிப்பகம்

www.padippakam.com



*(90) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

இம்மலரின் பதிப்பாசிரியர், அகிலம் கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகையின் பதிப்பாசிரியரும், அகிலம் பதிப்பக உரிமையாளரு-மாவார். 1947இல் பாராளுமன்றப் பிரவேசம் செய்து தன் இறுதிக் காலம் வரை மலையகத் தமிழரின் தலைமைத்துவத்தை ஏற்று வழி-நடத்திய அமரர் சௌம்யமூர்த்தி தொண்டமான் அவர்களின் பணிகள் பற்றி அவருடன் தொடர்புள்ள பல்வேறு மலையக, தமிழகத்தவரின் கட்டுரைகள், அஞ்சலி உரைகள் என்பன இம்மலரில் தொகுக்கப்-பட்டுள்ளன. பெருந்தலைவர்களுடனும், அரசியல் பிரமுகர்களுடனும் தலைவர் தொண்டமான் சேர்ந்திருந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்களும் ஆங்காங்கே செறிந்து காணப்படுகின்றன.

## 3881

**மெழுகுவர்த்தி.** கரிகாலன். கொழும்பு 12: சுதந்திரன் வெளியீட்டகம், 194ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 1977. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(10), 166 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18x13 சமீ.*

சுதந்திரன் வார இதழில் **நினைவில் நிற்பவை** என்ற தலைப்பில் இலங்கைத் தமிழர் அரசியலில் தனித்துவமாகி நின்ற கலாநிதி இ.எம்.வி.நாகநாதன் (இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன் 31.1.1901-16.8.1971) அவர்கள் பற்றி கரிகாலன் எழுதிய 20 தொடர்கட்டுரைகளின் தொகுப்பு.

## 3882

**லெனினும் ஆசியாவும்.** த.துரைசிங்கம் (மூலம்), பண்ணாமத்துக் கவிராயர் (தமிழாக்கம்). கொழும்பு 12: சோசலிச ஆய்வுக் கழகம், 31, வில்சன் வீதி, 1வது பதிப்பு, 1981.(கொழும்பு 10: பிரகத்தி அச்சகம், 93, மாளிகாகந்தை வீதி).

*146 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

லெனின் பற்றிய இந்நூல் ஆசியாவைப் பகைப்புலமாகக் கொண்டுள்ளது. இம்மாபெரும் கண்டத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த லெனின் செலுத்திய பங்கும் இங்கே எடைபோடப்-பட்டுள்ளது. லெனினின் 110வது பிறந்த தினத்தையொட்டி எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் த.துரைசிங்கம் ஒரு வழக்கறிஞர்.



படிப்பகம்

www.padippakam.com



1927இல் முற்போக்கு இளைஞர் தாபனமான யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸில் சேர்ந்து, பின்னாளில் அதன் உயர் கமிட்டி அங்கத்தவரானவர். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, சட்ட, உலக சமாதான, கூட்டுச்சேரா இயக்கத்தின் உயர்கட்ட, ஆபிரிக்க, ஆசிய ஒருமைப்பாடு, ஆசிய பந்தோபஸ்து குறித்த சர்வதேச மகாநாடுகளில் கலந்து கொள்வதற்காக பல நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளார்.

## 923.4 சட்ட அறிஞர்கள்

### 3883

**மானிப்பாய் தந்த மாணிக்கம்: சேர் முத்துக்குமாரசுவாமி (கி.பி.1834-1879) அவர்கள் வாழ்க்கை வரலாறு.** சின்னத்துரை குமாரசாமி. மானிப்பாய்: சின்னத்துரை குமாரசாமி, கல்யாணி, லோட்டன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம், வண்ணார்பண்ணை).

(16), 26 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5X14 சமீ.

சேர் பொன். இராமநாதனின் தாய்மாமனாரும், கலாயோகி ஆனந்தா குமாரசுவாமி அவர்களின் தந்தையுமான சேர் முத்துக்குமாரசுவாமி பற்றிய வாழ்க்கைச்சரிதம். 45 வயதே வாழ்ந்தாலும், அந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் எய்திய உச்சங்களை இந்நூல் சுருக்கமாகத் தருகின்றது. ஆசியாக்கண்டத்தின் முதல் சேர் பட்டம் பெற்ற இந்துசமயவாதியும் தமிழருமாக வரலாற்றில் இடம்கொண்டவர் இவர். இலங்கை அரசசேவையில் எழுத்தராக நுழைந்து, பொலிஸ் நீதவானாகி, 22வயதில் சட்டத்தரணியாகி, 27 வயதில் இலங்கை சட்ட நிருபண சபையில் தமிழர் பிரதிநிதியாகி 17 ஆண்டுகள் அங்கு சேவையாற்றியுள்ளார். இடைப்பட்ட காலத்தில் பாரிஸ்டர் பட்டமும், கலைத்திறனுக்கும், ஆங்கிலப் பேச்சு வன்மைக்குமாக இங்கிலாந்தின் மகாராணியாரிடம் சேர் பட்டமும் பெற்றவர் இவர். இவரது மகனான கலாயோகி ஆனந்த குமாரசுவாமி பற்றியும் இந்நூலில் ஒரு கட்டுரை காணப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



# 923.61 விடுதலைப் போராளிகள்

## 3884

**இதய பூமி 1.** மணலாறு விஜயன். தமிழீழம் : வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*(4), 36 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 25., அளவு: 19x15.5 சமீ.*

எழுபதிற்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தின் படைவீரர்களை-யும், ஐந்து கோடி ரூபா பெறுமதியான படைக்கலன்களையும் இலங்கை அரசு இழக்கக் காரணமாக இருந்த மணலாறு சிறிலங்கா படைமுகாம் தகர்ப்பு பற்றிய வரலாற்றுப் பதிவு இதுவாகும். மணலாறு முகாம் தகர்ப்பின் ஒரு மாத நினைவைக் கொண்டாடும் முகமாக 25.8.1993இல் இந்நூல் வெளியிடப்பட்டது. இதயபூமி 1 என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவமுகாம் தகர்ப்புப் பற்றிய விபரங்களையும், அதில் வீரச்சாவடைந்த மாவீரர்களது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பையும் கொண்ட இந்நூலின் ஆசிரியர் முல்லைத்தீவு மாவட்டத் துணைப்படை வீரர்களுள் ஒருவர்.

## 3885

**உயிர் ஒளி 2001: மாவீரர் அகவணக்க மலர்.** மலர் வெளியீட்டுக்-குழு. சுவிட்சர்லாந்து: தமிழீழ விடுதலைப் புலிகள், சுவிஸ் பணியகம், 1வது பதிப்பு, கார்த்திகை 2001.(அச்சக விபரம் தரப்படவில்லை)

*32 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.*

27 நவம்பர் 2001இல் மாவீரர் நாள் நினைவாக வெளியிடப்பெற்ற இம்மலரில் 2001ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் நிகழ்த்திய மாவீரர் உரையுடன், முன்னைய உரைகளின் தேர்ந்த பகுதிகளும், மாவீரர்களான விடுதலைப் போராளிகளுக்கான அஞ்சலிகளும் இடம்பெற்றுள்ளன.

## 3886

**லெப்.கேணல் சுபன்.** எஸ்.பிரதீபன், எஸ்.கதிரவன். தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள், 1வது பதிப்பு,



படிப்பகம்

www.padippakam.com



கார்த்திகை 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 41 பக்கம், தகடு, விலை: ரூபா 20., அளவு: 21x14 சமீ.

மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியாகப் பணிபுரிந்த வேளையில், பூநகரி சிங்கள இராணுவப் படைத்தளத்தின் ஒரு பகுதி மீது நடத்தப்பட்ட பாரிய தாக்குதலின்போது 25.09.1992இல் வீரச்சாவைத் தழுவிய லெப்.கேணல் சுபனின் நினைவாக வெளிவரும் இந்நூலில், தளபதி சுபனைப் பற்றி பிரதீபன் என்ற போராளி எழுதிய கட்டுரையும், கதிரவன் என்ற போராளி எழுதிய நீண்ட கவிதையும் இடம்பெற்றுள்ளன. தளபதி சுபனின் முதலாம் ஆண்டு நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டது.

### 3887

**வணங்கா மண்.** மணலாறு விஜயன் (தொகுப்பாசிரியர்). தமிழீழம்: தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1996. (தருமபுரம்: மாறன் பதிப்பகம், முல்லை வீதி).

ix, 488 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x20 சமீ.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவம் மிக்க போர்க்களமாக மணலாறு, காலத்திற்குக் காலம் திகழ்ந்து வந்திருக்கின்றது. இந்தியப் போர்க்காலத்தில் நெருக்கடிகளால் சூழ்ந்ததொரு வரலாற்றுக் காலகட்டத்தில், போராட்டத்தின் முடிவைத் தீர்மானித்த சமர்க்களமாக மணலாறு விளங்கியது. மணலாற்றுக் களத்தை வென்று அன்று இந்தியப் படைக்கெதிரான போரை விடுதலைப் போராளிகள் வென்றனர். அந்த மண்ணைக் காப்பதில் களப்பலியாகிய புலி வீரர்களின் குறிப்பேடாகிய இந்நூல் மணலாற்றுச் சமர்களில் முக்கிய தளபதியாக நின்று பணியாற்றிய லெப்ரினன்ற் கேர்ணல் அன்புவின் முயற்சியால் உருவாகியுள்ளது.

### 3888

**விடுதலைப் போராளி: சிறப்பு மலர்: அகவை ஐம்பது.** மலர் வெளியீட்டுக் குழு. பாரிஸ்: ஈழமுரசு வெளியீடு, பூபாளம், 22, Rue Perdonnet, 75010, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (Paris: Sagittaire).

296 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



மாணி. நாகேஷ், கி.பி.அரவிந்தன், கந்தையா நவரேந்திரன், பரணி, மற்றும் ஈழமுரசு (ஐரோப்பா) ஆசிரியர் குழுவினரை மலர்க்குழுவாகக் கொண்டு இம்மலர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது அகவைப் பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரில் உலகளாவிய ரீதியில் சேகரிக்கப்பட்ட 95 படைப்புக்கள், வாழ்த்துக்களாகவும், போராட்டப் பாதையில் விடுதலைப் புலிகள் அமைப்பும், அதன் தலைமைத்துவமும் பெற்ற வெற்றிகளை நினைவுகூர்வதாகவும், அமைந்துள்ளன. தலைவர் திரு.பிரபாகரன் அவர்களின் செவ்விகள், அவர்பற்றி அவரது தந்தை திரு. வேலுப்பிள்ளை, ஆசிரியர் திரு வேணுகோபால், சக மாணவன் திரு. கி.செ.துரை, சகோதரன் திரு வே.மனோகரன் ஆகியோரது கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. இம்மலரில் பலரது எண்ணங்கள், அனுபவங்கள் வழியே ஒரு அரைநூற்றாண்டு வரலாறு எழுத்துக்களாகவும், ஒளிப்படங்களாகவும் பதிவாகியுள்ளன.

### 3889

**விழுதாகி வேருமாகி.** அ.காந்தா, செ.புரட்சிகா, மலைமகள். கிளிநொச்சி: கப்டன் வானதி வெளியீட்டகம், 61, கனகபுரம், இணைந்து வெளியிடுவோர் 2ம் லெப். மாலதி படையணி, தமிழீழ விடுதலைப் புலிகள், 2வது பதிப்பு, நவம்பர் 2003, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (கிளிநொச்சி: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம்).

xxii, *(58), 564 பக்கம், வரைபடம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 550., அளவு: 22.5x15 சமீ.*

இனஒடுக்கலுக்கு எதிராக, பண்பாட்டின் பழைய நுகத்தடியைத் தூக்கி எறிந்து களமாடிய பெண்போராளிகளின் கள அனுபவங்கள் உயிர்த்துடிப்புடன் அவர்களாலேயே இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளது அபாரமான போராற்றலையும் அவர்களது வீரத்தையும் உலகமும், மக்களும் அறியும்படியான வரலாற்றுப் பதிவாக இந்நூல் அமைகின்றது. போராட்டம் பற்றிய தெளிவான பார்வையும், போருக்குள் நின்ற வாழ்வனுபவமும், போர்க்கலை பற்றிய அறிவும் கொண்ட போராளிகளின் எழுத்தில் இவை அமைந்துள்ளன. மாலதி படையணியின் வெளியீடாக நெஞ்சை உறையவைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக, பெண் போராளிகளின் வீரத்தையும் விவேகத்தையும் பறைசாற்றும் பதிவேடாக இவ்வாவணம் அமைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



போராட்டத்தில் வீரமரணம் எய்திய பெண்போராளிகளின் பட்டியலும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

# 923.7 கல்வியியலாளர்கள்

## 3890

**ஆசான் க.சிவராமலிங்கம்: பவளவிழா மலர்.** மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: பொஸ்கோ பதிப்பகம், நல்லூர், 1வது பதிப்பு, மார்ச் 2001. (நல்லூர்: பொஸ்கோ அச்சகம்).

(8), 72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X14 சமீ.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பயின்று அக்கல்லூரியின் ஆசிரியராகி, உப அதிபராக உயர்ந்து பல நன்மாணாக்கர்களை உருவாக்கிவிட்ட ஆசிரியர் கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் அவர்களது பவளவிழாவை முன்னிட்டு 04.03.2001 இல் இந்நூல் வெளியிடப்பட்டது. பல்வேறு அறிஞர்கள், மாணவர்கள், பிரமுகர்களின் மனப்பதிவுகளும், வாழ்த்துரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. "திரும்பிப் பார்க்கிறேன்: அசைபோடுவதிலும் ஓர் இன்பம்" என்ற தலைப்பில் தனது 75வது அகவையில் எழுதி வைத்திருந்த அனுபவப் பிழிவுக்கட்டுரை இந்நூலின் பிற்பகுதியில் (பக்கம் 33-72) காணப்படுகின்றது.

## 3891

**இரத்தினம்: அருணாசலம் இரத்தினம் நினைவு வெளியீடு.** நினைவுக்குழு. கோண்டாவில்: திருமதி இரத்தினம். கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1988. (அச்சக விபரம் தரப்படவில்லை).

48 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X13 சமீ.

யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவனத்தின் வணிகத்துறைத் தலைவராகப் பணியாற்றிய அருணாசலம் இரத்தினம் அவர்களின் மறைவையொட்டி 26.2.1988 அன்று வெளியிடப்பட்ட நினைவு மலர். இரங்கலுரைகளுடன் குழந்தைகளுக்கான பாடல்களும், குழந்தை ம.சண்முகலிங்கன் அவர்களது **முயலார் முயல்கிறார்** என்ற சிறுவர் நாடகமும் இடம்பெற்றுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## 3892

**கலாநிதி பதியுத்தீன் மஹ்முதின் கல்விப்பணிகள்.** S.H.M. ஜெமீல். கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், 556 பிரதான வீதி, சாய்ந்தமருது 07. 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (கொழும்பு: பசிபிக் அச்சகம்).

44 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 30., அளவு: 22X14 சமீ.

இலங்கை அரசில் இரு தடவைகள் கல்வி அமைச்சராயிருந்த கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தினருக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அரசியல், சமூகம், கல்வி, என்ற அடிப்படையில் இவரின் பணிகள் பல்வேறு துறைகளிலும் வியாபித்திருக்கின்றன. 20ஆம் நூற்றாண்டில் பின்னரைப் பகுதிகளில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி எழுச்சிக்காக இவரால் ஆற்றப்பட்ட சேவைகள் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் வெளியீட்டு வரிசையில் 18ஆவது நூல் இது.

## 3893

**கைலாசநாதம்: பவளவிழா மலர்.** ப.கோபாலகிருஷ்ண ஐயர் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பவள விழா மலர்க்குழு, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: பிரின்டெல் மீடியா, 19, களுபோவில வீதி, தெகிவளை).

xxxii, 387 பக்கம், வண்ணப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5X19 சமீ.

பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் எழுபத்தைந்தாவது அகவை நிறைவினையிட்டு சமர்ப்பணமாக்கப்பெறும் பவளவிழாமலர் இதுவாகும். பேராசிரியர் குருக்கள் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாவது இந்து நாகரீகத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். வேதாத்யயனப் பயிற்சிக்கென 1988முதல் தனது இல்லத்தில் ஸ்ரீ வித்யா குருகுலம் என்ற அமைப்பையும் உருவாக்கி நடத்திவந்தவர். பன்மொழிப் புலமையானவரான பேராசிரியர் குருக்கள் தீர்க்கதரிசனத்துடன் சைவம், பண்பாடு ஆகிய முறைகளின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர். இம்மலரின் முதற் பகுதியில் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிப் பல்வேறு



படிப்பகம்

www.padippakam.com



அறிஞர்களின் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் சைவத்தையும் சைவப்பண்பாட்டையும் ஆய்வுசெய்யும் 31 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 9 ஆங்கிலக் கட்டுரைகளும் 22 தமிழ்க் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 3894

**சிவராஜ சாதனை.** மலர் வெளியீட்டுக்குழு, கொழும்பு 4: பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா பாராட்டுவிழாக் குழு, 24/3, 1/1, பிராங்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).

(32) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

அரசறிவியல்துறைப் பேராசிரியரான அம்பலவாணர் சிவராஜா (1944) அவர்களின் அறுபதாவது அகவை நிறைவையொட்டிய ஒரு சமர்ப்பண நூல். அ.சிவராஜா தனது முதுமாணிப் பட்டப் படிப்பை கனடாவிலுள்ள நியு பிரான்ஸ்விக் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப்பட்ட ஆய்வை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டவர். சிலகாலம் புதுடில்லியிலுள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சிறப்பு வருகை ஆய்வாளராகவும் இருந்துள்ளார். பல ஆய்வு நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ள இவர் தற்போழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறைத் தலைவராக பணியாற்றுகின்றார். என்.பி.எம்.சைபுதீன் அவர்களால் தொகுக்கப்பட்ட பேராசிரியரின் 149 ஆக்கங்களுக்கான நூற்பட்டியல் ஒன்றும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

## 3895

**தலைமுறை தந்த தலைமகன்.** க.கிருஷ்ணானந்தசிவம். கண்டி: ஊற்று வெளியீடு, 215, கொழும்பு வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1977. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432 காங்கேசன்துறை வீதி).

(2), 30 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.

ஊற்று நிறுவனத்தின் உருவாக்கத்திற்கும், அதன் வெளியீடான ஊற்று சஞ்சிகையின் வளர்ச்சிக்கும் காரணகர்த்தாவாக விளங்கிய பேராதனைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் அமரர் பே.கனகசபாபதி அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிய நூல் இது.



படிப்பகம்

www.padippakam.com



## 3896

**பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும்.** சுபைர் இளங்கீரன். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (சென்னை 600017: சூர்யா அச்சகம்).

138 பக்கம், விலை: இந்திய ரூபா 17., அளவு: 18X12 சமீ.

கைலாசபதி அவர்கள் இறந்த 10வது ஆண்டு நிறைவையொட்டி வெளிவந்துள்ளது. கைலாசுடன் ஒன்றாகப் பணியாற்றியவர்கள், நெருங்கிப் பழகியவர்களுக்கு மாத்திரமே தெரிந்திருக்கக்கூடிய பல தகவல்கள் இந்நூலில் காணப்படுகின்றன. குறிப்பாக தினகரன் பத்திரிகையாசிரியர் காலத்துச் செயற்பாடுகள், நாடகம் ஒலிபரப்பு ஆகிய துறைகளில் காட்டிய ஈடுபாடு பலருக்குத் தெரியாதவை. இவை பற்றி இந்நூல் முக்கியமான பல தகவல்களையும் கருத்துக்களையும் தருவது சிறப்பம்சமாகும். பேராசிரியர் கைலாசபதியுடைய கலை, இலக்கிய, பல்கலைக்கழக, சமூக, அரசியல் வாழ்க்கையின் அனைத்துப் பணிகளையும் தொட்டுச்செல்லும் நம்பகரமான நூல். இந்நூலாசிரியர் 1927இல் இலங்கையில் பிறந்தவர். 20 வயதில் எழுத்துலகில் புகுந்தவர். மரகதம் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

## 3897

**பேராசிரியர் சோ.சந்திரசேகரம்: மணிவிழா மலர் 2004.** எம்.கருணாநிதி (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: பேராசிரியர் சோ.சந்திரசேகரம் மணிவிழாக் குழு, 24/3, 1/1, பிராங்போர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்கழி 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

x, 283 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

கொழும்பு பல்கலைக்கழகக் கல்வித்துறைப் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம் அவர்களை வாழ்த்திக் கௌரவிக்கும் முகமாக அவர்களுடைய நண்பர்களும், நலன்விரும்பிகளும் இணைந்து வெளியிட்ட மலர் இதுவாகும். இந்நூலின் முதலாம் பகுதி, பேராசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகள், கல்விப் பணி மற்றும் அவருடைய எழுத்துக்கள் பற்றிய பார்வை என்னும் விடயங்களை உள்ளடக்கியுள்ளன. 2ம் பகுதியில் பிரதானமாகக் கல்வியியலையும்,



படிப்பகம்

www.padippakam.com



அதனோடு தொடர்புடைய ஏனைய துறைகளையும் அடக்கிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன. மூன்றாம் பகுதி ஆங்கிலக் கட்டுரைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3898

**மு.வ.நினைவுகள்.** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 79, முதலாவது தெரு, குமரன் காலனி, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (சென்னை 600 005: Suvita Computers, 110, T.P.Koil Street, Triplicane).

*(4), 84 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18X12.5 சமீ.*

20ம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டு முதன்மையான இடம்பெற்றதாகும். பெரும் எழுத்தாளராக விளங்கிய இவர் உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த தமிழறிஞராகவும் விளங்கினார். அவர் வாழ்நாளின் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நேரடியாகவும் கடித மூலமும் நட்புடன் பழகிய இந்நூலாசிரியரின் மனப்பதிவுகள் 22 இயல்களில் இங்கு பதிவாகியுள்ளன. அறிஞராக, எழுத்தாளராக, மனிதராக, நண்பராக அவருடன் பழகியவேளை நடைபெற்ற சில நிகழ்ச்சிகள், உரையாடல்களில் இன்னும் மனதில் பதிந்துள்ள நினைவுகளைத் தனது சொந்த அனுபவங்களுடன் இணைத்து 23 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்நூல் வழியாக செ. கணேசலிங்கம் அவர்கள் மீட்டிருக்கின்றார்.

## 3899

**முயற்சியாளர் மு.க.சு.** த.அரியரத்தினம், கு.குணநாயகம் (இணைச் செயலாளர்கள்). குரும்பசிட்டி: பொன் பரமானந்தர் வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கம், 1வது பதிப்பு, ஜூன் 1977. (யாழ்ப்பாணம்: சக்தி அச்சகம், 253 1/1 ஸ்ரான்லி வீதி).

*34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18X12.5 சமீ.*

ஓய்வுபெற்ற குரும்பசிட்டி: பொன் பரமானந்தர் வித்தியாலய அதிபர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் சேவைநலம் பாராட்டும் வகையில் 4.6.1977 அன்று வெளியிடப்பட்ட மலர். வடமாநில கல்வித்துறை அதிகாரிகள், சக பாடசாலை அதிபர்கள் ஆகியோரின் வாழ்த்துச் செயதிகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மு.க.சு அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



கல்வியியல் துறையில் ஒரு பாடசாலை அதிபராகச் செயற்பட்டு-வந்தபோதும், கல்வித்துறையுடன் கலை இலக்கியத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். வெற்றிமணி என்ற சிறுவர் சஞ்சிகையை தொடர்ந்தும் நீண்டகாலப்பரப்பில் வெளியிட்டு வைத்தவர் இவர்.

### 3900

**வித்தகம் ச.கந்தையாபிள்ளை.** பி.நடராசன் (செய்திட்டப் பொறுப்பாசிரியர்). தெல்லிப்பழை: தமிழ் மன்றம், கல்வித்துறைச் செய்திட்டக் குழு, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுன் 1977. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

20 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

தமிழ் மன்றத்தின் கல்வித்துறைச் செய்திட்டக் குழுவின் 3வது வெளியீடு இதுவாகும். வித்தகம் சஞ்சிகையின் ஆசிரியரான தென் கோவைப் பண்டிதர் ச.கந்தையாபிள்ளை (25.08.1880-18.11.1958) அவர்களின் சுருக்க வரலாற்றுக் கட்டுரை இது. ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்றுச் சைவமும் தமிழும் பேணிக்காத்த ஒரு தலைமுறையில் இவர் குறிப்பிடத்தக்கவர்.

## 923.8 வர்த்தகர்கள்

### 3901

**கல்கி சின்னத்துரை மலர்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: சிவக்கொழுந்து சின்னத்துரை ஞாபகார்த்த வெளியீடு, 27/2, 5ஆவது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

306 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

திருச்சி, கல்கி பீடி நிறுவனத்தின் இலங்கைக்கான ஏக விநியோகஸ்-தரானமையால் அந்த நிறுவனத்தின் பெயரையே தனதாக்கிக்கொண்டு வாழ்ந்த அமரர் கல்கி சின்னத்துரையின் வெற்றிகரமான வர்த்தகத்துறை வாழ்க்கையும் பொதுவாழ்க்கையும் இந்நூலில் பதியப்பெற்றுள்ளன. அன்னாரின் நினைவுமலராக வெளிவந்துள்ள இத்தொகுப்பில் திருமுறைச்செல்வம், திருவருட்செல்வம், வாழ்வியல்



படிப்பகம்

www.padippakam.com



செல்வம், துதிபெறுசெல்வம் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளன. திருமுறைச்செல்வம் என்ற முதற் பகுதியில் பன்னிரு திருமுறைகள் இடம்பெறுகின்றன. திருவருட்செல்வம் என்ற பகுதியில் விநாயக, முருக, வயிரவ, சக்தி, வழிபாடுகளுக்குரிய பாடல்களும், திருக்குறள், புறநானூற்றுண்மைகள் பற்றிய இலக்கியங்களும் இடம்பெறுகின்றன. வாழ்வியல் செல்வம் என்ற பகுதியில் அமரர் கல்கி சின்னத்துரையின் வாழ்வும் பணியும் பற்றி நா.சிவராஜா அவர்களின் தமிழ்க் கட்டுரையும், எஸ்.சோமநாதனின் ஆங்கிலக்கட்டுரையும் இடம்பெறுகின்றன. இறுதியாக அமைந்த துதிபெறுசெல்வம் என்ற பகுதியில் அமரர் சின்னத்துரை பற்றிய அஞ்சலி உரைகள், கடிதங்கள், இடம்பெறுகின்றன.

## 924 மொழியியலாளர்கள்

### 3902

**ஈழத்து மணி விளக்குகள்.** கனக.செந்திநாதன். யாழ்ப்பாணம்: ஈழகேசரி வெளியீடு, 1வது பதிப்பு, 1956. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(12) பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 2., அளவு: 25x18.5 சமீ.

1956இல் இ.அரியரத்தினம் அவர்களை மலராசிரியராகக் கொண்டு 176 பக்கங்களில் வெளிவந்த ஈழகேசரி வெள்ளிவிழா மலரிலிருந்து தனியாகப் பிரித்தெடுத்து வெளியிடப்பட்ட சிறுநூல். இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் எழுதிய இக்கட்டுரையில் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், இந்துசாதனம் திருஞானசம்பந்தர், தேசாபிமானி மாசிலாமணி, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், அழகசுந்தர தேசிகர் எனும் வண.பிரான்சிஸ் கிங்ஸ்பெரி, வரகவி மகாலிங்கசிவம், புலவர்மணி நவநீதகிருஷ்ண பாரதியார், முத்தமிழ்ப் புலவர் நல்லதம்பி, சங்கம் வளர்த்த சதாசிவ ஐயர், ஆசுகவி வேலுப்பிள்ளை ஆகியோர் பற்றிய வாழ்க்கைக்குறிப்புகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 3903

**தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும்.** வே.அந்தனி ஜான் அழகரசன். மட்டக்களப்பு: தங்கம் பதிப்பகம், 51, ஊறணி, 1வது பதிப்பு, ஜனவரி 1984. (சென்னை 600 108: அப்பர் அச்சகம்).



படிப்பகம்

www.padippakam.com



xxxvi, 208 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: இந்திய ரூபா 25., அளவு: 21.5x14.5 சமீ.

இந்நூலாசிரியர் வே.அ.அழகரசன் தத்துவத்துறை, இந்தியவியல்துறைப் பேராசிரியராக யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் பணியாற்றியவர். இந்த நூலின் முதற்பாகத்தில் தவத்திரு தனிநாயக அடிகளின் தமிழ்ப் பணிகளையும் வாழ்வாங்கு வாழ்ந்த வகையினையும் தொகுத்துத் தந்துள்ளார். 26 இயல்களில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் அவரது பணிகளும் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் தனிநாயகம் அடிகளாரின் உரைச் சுருக்கங்களும், அவர் எழுதிய 9 கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

## 3904

**யார் எவர்.** அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம். மட்டக்களப்பு: அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம், இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, மார்ச் 1976. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

30 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

மட்டக்களப்பில் 1976 மார்ச் 19,20,21ம் திகதிகளில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை ஒழுங்குசெய்த தமிழாராய்ச்சி மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற இந்நூலில் இம்மாநாட்டில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்த அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், கல்வித் தகைமைகள், ஆய்வு முயற்சிகள் போன்றவற்றுடன் அவர்கள் மாநாட்டின்போது வாசிக்கவிருந்த ஆய்வின் விபரமும் தரப்பட்டுள்ளது.

## 3905

**யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும்.** ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா. யாழ்ப்பாணம்: சிவன் கோவில், நல்லூர். 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (யாழ்ப்பாணம்: போஸ்கோ அச்சகம், 252 பருத்தித்துறை வீதி, நல்லூர்).

vi, 35 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

வாழ்நாட்பேராசிரியர் சிவ ஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் நினைவு-வெளியீட்டு இல. 5. இந்நூலின் முதற் பகுதியில் யாழ்ப்பாணத்தில்



படிப்பகம்

www.padippakam.com



சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்தவர்களின் வரிசையில் சிங்கைச் செகராசசேகரன் (1380-1414) முதல் சுன்னாகம் சு.நடேசபிள்ளை (1895-1965) வரை 70 பேரின் பட்டியலும் அவர்களது பணிகள் பற்றிய சுருக்கக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வி வளர்த்த நிறுவனங்கள் பற்றிய விரிவான வரலாற்றுக் கட்டுரை காணப்படுகின்றது.

## 926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

### 3906

**மருத்துவத் தமிழ் முன்னோடி: டாக்டர் கிறீன்.** இ.அம்பிகைபாகர் (புனைபெயர்: அம்பி). சென்னை 18: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1வது பதிப்பு, 1995. (சென்னை 108: அப்பர் அச்சகம்).

(4), 173 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18X12 சமீ.

தாய்மொழி தமிழிலேயே மருத்துவக் கல்வியை ஆற்ற முடியும் என்று இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே செய்து காட்டிய அறிஞர் கிறீன் அவர்களின் வாழ்க்கை வரலாறு. அமெரிக்கப் பாதிரியாரான சாமுவேல் எப்.கிறீன் அவர்கள் பாடம் கற்பித்ததுடன் இரண வைத்தியம் (Surgery), மனுஷவங்காதிபாதம் (Human Anatomy), கெமிஸ்தம் (Chemistry) போன்ற அரிய பெரிய நூல்களையும் தமிழில் படைத்தவர். அம்பி அவர்களின் முயற்சியின் பயனாக இலங்கை அரசு டாக்டர் கிறீன் ஞாபகார்த்தமாக முத்திரையும் வெளியிட்டிருந்தது.

### 3907

**வைத்தியர் திலகம் அப்துல் அஸீஸ்.** S.M.A.ஹசன். கண்டி: ஒறாபி பாஷா கலாசார நிலையம், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xii, 105 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5X14 சமீ.

இலங்கையில் முஸ்லீம்களின் வைத்தியத் தொடர்பு 12ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பிக்கின்றது என்பது வரலாற்றாய்வாளர்-களின் முடிபாகும். சமகாலத்தில் வாழ்ந்து மறைந்த மாவனல்லையில் புகழ்பூத்த வைத்தியர் பரம்பரையில் தோன்றிய S.M.A.ஹசன், சுதேச வைத்தியத்துறை வளர்ச்சிக்காக தன் வாழ்நாளில் பெரும்பங்கை



படிப்பகம்

www.padippakam.com



செலவிட்டவர். இவரது வாழ்க்கை வரலாறு 11 அத்தியாயங்களில் ஆராயப்பட்டுள்ளது. முஸ்லீம்களின் வைத்தியப் பாரம்பரியம் பற்றியும், அப்துல் அஸீஸ் அவர்களின் இடதுசாரி அரசியல் ஈடுபாடு பற்றியும் இந்நூல் பல குறிப்புக்களைத் தருகின்றது.

# 927 கலைஞர்கள்

## 3908

**ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்: அமரர் கலைச்சங்க கே.பாலச்சந்திரன் அவர்களின் ஆத்மாஞ்சலி இதழ்.** *அந்தனி ஜீவா (பதிப்பாசிரியர்). கனடா: ஜெகன்மோகன் பாலச்சந்திரன், 178,* Dollars Dec Ormenax, Quebec, H9B, 2G8, *1வது பதிப்பு, டிசம்பர் 2002.* (Colombo 13: Vickram Printers, 19, Wolfendhal Lane).

*88 பக்கம், விலை: அன்பளிப்பு, புகைப்படங்கள், அளவு: 21x14 சமீ.*

கொழும்பு கலைச்சங்கத்தின் செயலாளராகவும் பிரபல நாடகக் கலைஞராகவும் பன்முகத் திறன்மிக்கவராகவும் திகழ்ந்த அமரர் கே.பாலச்சந்திரன் அவர்களின் நினைவு மலர். அவரைப் பற்றிப் பல்வேறு கலைத்துறைப் பிரமுகர்களின் மனப்பதிவுகள், அஞ்சலிகள், இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இம்மலருடன் தொடர்பற்ற உம் குழந்தைகளுக்குச் சொந்தமான இந்த உலகைப்பற்றி (ராதா மனோகரன் வல்லிபுரம்), கல்வியின் நோக்கம் (அல்வா மேர்டல்), கடவுளை உணரும் அனுபவம் (கலாநிதி தீபக் கோப்ரா) ஆகிய கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3909

**காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள்.** *வண்ணை தெய்வம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 14: பிவிஆர் ஆப்செட்).*

xliv, *612 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 290., அளவு: 22x14.5 சமீ.*

இந்நூல் பிரான்சில் வாழும் தொகுப்பாசிரியரின் பாரியதொரு தேடலின் வெளிப்பாடாகும். மூன்று பாகங்களாகத் தரவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. பாகம் ஒன்று யாழ்ப்பாணம் என்ற தலைப்பின்கீழ் 11 கட்டுரைகளில் தகவல்களைத் தொகுத்துத்



படிப்பகம்

www.padippakam.com



தருகின்றது. பதினொரு தலைப்புகளும் பின்வருமாறு பெயரிடப்பட்டுள்ளன. கலைஞானி முதற்கொண்டு, துளிரும் கலை நினைவுகள், யாழ்ப்பாணத்தில் இசைக்குழுக்கள், பாரிசில் இசைக்குழுக்கள், நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள், ஈழத்தில் தமிழ்த் திரைப்படங்கள், இன்றைய காலகட்டத்தில் அன்றைய நாட்டுக்கூத்து, சதிர்க் கச்சேரிகள், ஒப்பனைக் கலைஞர்கள், நகைச்சுவை நடிகர்கள், வைரமாளிகை என்று அந்த பதினொரு தலைப்புக்களும் அமைகின்றன. இரண்டாம் பாகம் கலைஞர்கள் என்ற தலைப்புக்குள் 131 கலைஞர்களைப் பற்றிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது. தனித்தனிப் பெயர்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ள தகவல்கள் இவை. மூன்றாம் பாகத்தில் எழுத்தாளர்கள் பற்றிய 131 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 131 எழுத்தாளர்களின் விபரங்கள் தரப்பட்ட கையோடு 535 முதல் 545ம் பக்கங்களில் மேலும் சில எழுத்தாளர்கள் பற்றிய பொருளடக்கத்தில் காணப்படாத தகவல்கள் இடம்பெறுகின்றன. மூன்றாம் பாகத்திலேயே எழுத்தாளர் விபரப் பகுதியில் தவில் நாதஸ்வர வாய்ப்பாட்டுக் கலைஞர்கள் 38 பேரின் விபரங்களையும், அதைத் தொடர்ந்து 9 ஓவிய சிற்பக் கலைஞர்களின் விபரங்களையும், 7 வில்லிசைக் கலைஞர்களின் விபரங்களையும் தந்துள்ளார். இத்தகவல்களை வண்ணை தெய்வம் மாத்திரமல்லாது, அந்தனி ஜீவா, புலவர் தெட்சணாமூர்த்தி, என்.சோமகாந்தன், மா.பாலசிங்கம், பிரபாலினி பிரபாகரன், பரமேஷ், எஸ்.டி.சிங்கம், எஸ்.கே.ராஜன், சி.மௌனகுரு, செல்வ மாணிக்கராஜா, இப்ராஹீம், விமல் சொக்கநாதன். சிவனடியான் ஸ்ரீபதி, அன்சார், ஈ.கே.ராஜகோபால் போன்றோரும் வழங்கியுள்ளார்கள். ஆங்காங்கே ஏராளமான புகைப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

## 927.3 சிற்பக்கலைஞர்

### 3910

**வரதம்.** செ.சட்டநாதர். யாழ்ப்பாணம்: திருமதி பாக்கியம் வரதலிங்கம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (யாழ்ப்பாணம்: போஸ்கோ அச்சகம், 252 பருத்தித்துறை வீதி, நல்லூர்).

*(2), 50 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.*

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், புத்தூரை இருப்பிடமாகவும் கொண்ட புத்தூர் காளிகாம்பிகை தேவஸ்தான பரம்பரைத்



படிப்பகம்

www.padippakam.com



தர்மகர்த்தாவும், தேவ ஊர்திகள் பல சமைத்த மயன் மரபுத் தோன்றலுமான விஸ்வப்பிரம்மஸ்ரீ அமரர் கந்தையா வரதலிங்கம் அவர்களின் (1916-2004) மறைவினையொட்டி வெளியிடப்பட்ட அஞ்சலி மலர்.

## 927.5 ஓவியக்கலைஞர்கள்

### 3911

**உலக ஓவியர்களும் சிற்பிகளும்.** சி.யோகேஸ்வரி. இணுவில்: கலை ஒளி வெளியீடு, ஞானபதி, இணுவில் மேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (கொக்குவில்: Hitech, College of Computer Studies).

(12), 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X15 சமீ.

உலகத்து ஓவியர்களையும், சிற்பிகளையும் அவர்களது படைப்புக்களையும் சுருக்கமாக அறிமுகப்படுத்தும் நூல். இலங்கை, இந்திய, மேலைத்தேய ஓவியர்கள் என்று மூன்று பிரிவுகளில் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. விடுபட்ட சில தகவல்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

### 3912

**பல்கலைச் செல்வர்: கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் பாராட்டுவிழா மலர்.** வி.கந்தவனம், இந்து மகேஷ், த.புவனேந்திரன். (தொகுப்பாசிரியர்கள்). ஜேர்மனி: வெற்றிமணி வாசகர் வட்டம், Postfach 2765, 58477, Ludenscheid, 1வது பதிப்பு, மே 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30X21 சமீ.

வெற்றிமணி (ஜேர்மனி) ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிப் பல்வேறு பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள், புகைப்படங்கள் என்பவற்றைக் கொண்டு வெளிவந்துள்ள சிறப்புமலர் இது. குரும்பசிட்டியில் வெற்றிமணி சிறுவர் இதழை 1950களில் தொடக்கிவைத்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் பணியை ஜேர்மனிய வெற்றிமணி ஜனரஞ்சகப் பத்திரிகையாகத் தொடரும் அவரது மகனான சிவகுமாரன், களனிப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 1989இல் Degree of Bachelor of Fine Arts (BFA) பட்டத்தினைப் பெற்றவர். கடந்த 2002இல் அமெரிக்காவின்



படிப்பகம்

www.padippakam.com



அரிசோனா மாநிலத்தில் இயங்கும் உலகப் பல்கலைக்கழக அமைப்பு வழங்கிவரும் கௌரவ கலாநிதி விருதினையும் பெற்றவர். இதனைப் பதிவுசெய்யும் வகையில் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

## 927.8 இசைக்கலைஞர்கள்

### 3913

**பாடிப் பறந்த இசைக்குயில்: நினைவுத் தொகுப்பு.** அரியாலையூர் சி.சிவதாசன். யாழ்ப்பாணம்: கதிர்காமு இரத்தினம் நினைவுமலர் வெளியீட்டுக்குழு, அரியாலை, 1வது பதிப்பு, மே 2005. (யாழ்ப்பாணம்: போஸ்கோ அச்சகம், 252 பருத்தித்துறை வீதி, நல்லூர்).

76 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X12.5 சமீ.

யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த இசை நாடகக் கலைஞர் கலாபூஷணம் சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் கதிர்காமு இரத்தினம் அவர்களின் மறைவையொட்டி 13.5.2005 இல் வெளியிடப்பட்ட நினைவுமலர். ஈழத்துக் கிராமியக் கலையுலகில் சந்திரமதி இரத்தினம் என்று அன்புடன் நினைவுகூரப்படும் இவர் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் அரிச்சந்திர மயானகாண்டம் இசை நாடகத்தில் சந்திரமதி பாத்திரம் ஏற்று நடித்ததன் மூலம் நாடக உலகில் தனக்கென்றொரு இடத்தைப் பிடித்தவர். தன்வாழ்வின் இறுதிவரை ஈழத்தின் கிராமியக் கலைஞராக வாழ்ந்து, வளர்ந்து புகழ்பரப்பி மறைந்தவர்.

**மேலும் பார்க்க: 3916**

## 927.91 நாட்டியக் கலைஞர்கள்

### 3914

**வேல் ஆனந்தன் 60: மணிவிழாச் சிறப்பு மலர்.** மலர்க்குழு. திருக்கோணமலை: ந.அனந்தராஜ், செயலாளர், ஆற்றுகைக் கலைஞர் ஒன்றியம், வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, நவம்பர் 2001. (திருக்கோணமலை: உதயன் பிரின்டர்ஸ், 39, அருணகிரி வீதி).

xiv, (18), 36 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21X17.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



1941இல் நெடுந்தீவில் பிறந்த வேல் ஆனந்தன் (அருளானந்தம்-பிள்ளை) சிறுவயதிலிருந்து ஆசான் ஏரம்பு சுப்பையா அவர்களால் ஆடற்கலைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவர். யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் 1969இல் கலைக்கோயில் என்ற நாட்டியப் பள்ளியை உருவாக்கி நாட்டியப் பயிற்சியை வழங்கிவந்தவர். அவரது அகவை 60இன் நினைவாக அவரது 870அவது நாட்டியாஞ்சலி நிகழ்வு வடக்கு,கிழக்கு மாகாண அரசின் ஆற்றுகைக் கலைஞர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் திருக்கோணமலை புனிதவளனார் கல்லூரி (St; Joseph's College) யில் 18.11.2001 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது இம்மலர் வெளியிடப்பட்டது. கலைஞர் வேல் ஆனந்தன் பற்றிய எட்டுக் கட்டுரைகள் இதிலுள்ளன. அவரது வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்பான புகைப்படங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 927.92 நாடகக் கலைஞர்கள்

### 3915

**அரங்கக் கலைஞர் ஐவர்.** ஏ.ரி.பொன்னுத்துரை. தெல்லிப்பழை: கலை இலக்கியக்கள வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 1998. (சுன்னாகம்: அம்மா பதிப்பகம், இணுவில், மருதனார்மடம்).

viii, 78 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5X14.5 சமீ.

05.09.1986இல் தோற்றுவிக்கப்பட்ட கலை இலக்கியக் களத்தின் பத்தாவது வெளியீடு இதுவாகும். சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் மணிவிழா வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட வலிகாமம் வடக்கின் குரும்பசிட்டி-கட்டுவன்-தெல்லிப்பழை ஆகிய மையங்களை உள்ளடக்கிய ஒரு கலாச்சார முக்கோண வலயத்துக்குள் ஒரு காலத்தில் கலை இலக்கியம் செழுமை பெற்றிருந்தது. அம்மண்ணில் தோன்றிய அரங்கக் கலைஞர் ஐவர் பற்றி கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் இந்நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். சானா, கே.கே.வி.செல்லையா, கே.கே.சோமசுந்தரம், சைவப்புலவர் சு.செல்லத்துரை, கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை ஆகிய ஐவரினதும் வாழ்வும் பணியும் இங்கு பதிவுக்குள்ளாகியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



### 3916

**இசை நாடகக் கவிக்குயில் வி.கே.இரத்தினம்.** அரியாலையூர் சி.சிவதாசன். யாழ்ப்பாணம்: சி.சிவதாசன், இல. 58, கனகரத்தினம் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, ஜுலை 2001. (யாழ்ப்பாணம்: தாரணி பிரின்டர்ஸ், மனோகரா சந்திக்கு அருகாமை, காங்கேசன்துறை வீதி).

*(28), 100 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 100, அளவு: 20.5X14.5 சமீ.*

ஈழத்து இசை நாடகத் துறையில் மிகச்சிறப்பிடம் பெற்றவரும், நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுடன் இணைந்து இரண்டாயிரத்துக்கும் அதிகமான மேடைகளில் பெண்வேடம் தரித்து நடித்துச் சிறந்த நடிகராகத் தன்னை நிலைநிறுத்தி ஈழத்து நாடகவரலாற்றில் இடம்பெற்றுள்ள வி.கே.இரத்தினம் அவர்களது கலைத்துறைச் சிறப்புக்களை ஆவணப்படுத்தும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

### 3917

**சானா + பரியாரி பரமர்.** நூல் வெளியீட்டுக்குழு. கொழும்பு 6: சுமதி பதிப்பகம், 91/5, 3/2 ஹம்டன் லேன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஏ.ஈ.குரே மாவத்தை).

*122+54 பக்கம், புகைப்படங்கள், கருத்தோவியங்கள், விலை: ரூபா 250., அளவு: 21.5X15 சமீ.*

சானா (எஸ்.சண்முகநாதன்) அவர்களின் 25ஆவது சிரார்த்த தினத்தையொட்டி வெளிவரும் இந்நூலில் சானா பற்றிய மனப்பதிவுகளை அவருடன் ஒன்றிப் பழகிய ஒலிபரப்புத்துறை, நாடகத்துறை, மற்றும் கலைத்துறைப் பிரமுகர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர். இந்நூலின் இரண்டாம் பகுதியில் சானாவின் பிரபல்யமான பேனாச்சித்திரங்களின் தொகுப்பான "பரியாரி பரமர்" நூலின் மீள்பதிப்பு இடம்பெறுகின்றது.

## 928 இலக்கிய அறிஞர்கள்

### 3918

**அம்பி வாழ்வும்: பணியும்.** லெ.முருகபூபதி. அவுஸ்திரேலியா: முகுந்தன் பதிப்பகம், P.O.Box 350, Craigieburn, Victoria 3064,



படிப்பகம்

www.padippakam.com



1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (சென்னை 94: சிவா கிராப்பிக்ஸ்).

180 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ.

ஈழத்துத் தமிழ் வாசகர்களுக்கு நன்கு பரிச்சயமான அம்பி (இராமலிங்கம் அம்பிகைபாகர்) அவர்கள் பற்றிய விரிவான இந்நூலில், அம்பியின் வாழ்வும் அவர் தாயகத்திலும், பின் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றபோதும் மேற்கொண்ட பணிகளும் ஒரு சக எழுத்தாளனின் பார்வையில் பதிவுபெறுகின்றன.

## 3919

**இரசிகமணி நினைவு மஞ்சரி.** மலராக்கக் குழு. குரும்பசிட்டி: சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (காங்கேசன்துறை: சந்திரா அச்சகம்).

(4), 27 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

41ஆவது சன்மார்க்க சபை வெளியீடாக வந்துள்ள இந்நூல், இரசிகமணி கனக செந்திநாதனின் (05.11.1916-16.11.1977) நினைவாக அவர்பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் க.சச்சிதானந்தன், கலாகேசரி ஆ.தம்பித்துரை ஆகியோரின் நினைவஞ்சலிகளுடன் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் கனக செந்திநாதனின் வாழ்வும் பணியும் பற்றி எழுதிய விரிவான கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3920

**இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு: மூன்றாம் பாகம்.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம் வெளியீட்டாளர்கள், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (கண்டி: கிரியேட்டிவ் பிரின்டர்ஸ் அன் டிசைனர்ஸ், இல.3ஏ, பைரவகந்தை வீதி).

194 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14..5 சமீ., ISBN: 955-8913-20-0.



படிப்பகம்

www.padippakam.com



சிந்தனை வட்டத்தின் 200ஆவது வெளியீடு. இலங்கை முஸ்லிம் மக்களின் தேசிய இதழாக வெளிவரும் "நவமணி" வார இதழில், முஸ்லீம் எழுத்தாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் தொகுத்து வெளிவந்த தொடரில் இடம்பெற்ற 36பேரின் விபரங்கள் (பதிவுகள் 78-114) புகைப்படங்களுடன் இம்மூன்றாம் பாகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக மலையகப் பதிப்புலகத்தில் சிந்தனை வட்டம், கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் (என்.செல்வராஜா), சிந்தனை வட்டம் ஓர் ஆய்வு (என்.செல்வராஜா), ஒரே பார்வையில் சிந்தனை வட்டம் வெளியீடுகள் (2005 செப்டெம்பர் 11 வரை வெளியான 207 நூல்களின் விபரங்கள்), சிந்தனை வட்டம் பணிப்பாளர்களில் ஒருவரான மஸீதா புன்னியாமீன் அவர்களின் தாயார், சகோதரி, அவரது குழந்தைகள், என சுனாமிப் பேரலையில் இழந்த உறவுகளுக்கான கண்ணீர் அஞ்சலிக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. முன்னுரையில் இத்தகையதொரு தொகுதியின் தேவை பற்றிய ஆய்வுரீதியான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

## 3921

**இளங்கீரனின் இலக்கியப்பணி.** ரஹீமா முஹம்மத். ராஜகிரிய: தமிழ் மன்றம், 10, நான்காவது ஒழுங்கை, கொஸ்வத்தை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (சென்னை 600 005: கண்ணப்பா ஆர்ட் பிரின்டர்ஸ்).

viii, 152 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.

குருணாகல் மாவட்டத்தின் மாய்வெல கிராமத்தைச் சேர்ந்தவர் ரஹீமா முஹம்மத். 1990இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கற்ற இவர் தமிழாசிரியையாகப் பணியாற்றியுள்ளார். இவரது கலைமாணித் தேர்வின் ஓர் அங்கமாக 1993-94ஆம் கல்வி ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு இந்நூலாகும். ஏறத்தாழ 1950களில், யதார்த்தபூர்வமான பல நாவல்களைப் படைத்து, தமிழிலக்கிய உலகில் தனக்கெனத் தனியிடம் பெற்றுக்கொண்டவர் இளங்கீரன். இவர் பற்றியும் இவரது படைப்புகள் பற்றியும் குறிப்பாக அவரது நாவல்கள் பற்றியும் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு இதுவாகும்.

## 3922

**இறப்பு என்பது முடிவு அல்ல: பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) நினைவாக.** தே.தேவானந்த் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நந்தி வெளியீடு, 681/2, பருத்தித்துறை வீதி, 1வது



படிப்பகம்

www.padippakam.com



பதிப்பு, ஜுலை 2005. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரிண்டர்ஸ், 103, பலாலி வீதி).

65 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5X14.5 சமீ.

பேராசிரியர் நந்தி தன் வாழ்வில் பல பாத்திரங்களை வகித்திருந்தார். அதில் அவர் குடும்பத்தில் வகித்த வகிபாகத்துடன், பல்கலைக்கழகத்திலும், பொதுச் சேவையிலும், ஆன்மீகத்திலும் கணிசமான பங்கினை வகித்திருந்தார். ஒவ்வொரு இடத்திலும் இவரது பங்களிப்பு முக்கியமாகப் பேசப்படுகின்றது. இதனை நிலைநிறுத்துவதான கட்டுரைகளை அவரது மறைவின் 31ம் நாள் நினைவாக இந்நூல் பதிவுசெய்கின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி, என்சோமகாந்தன், பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், பேராசிரியர் வ.அரசரத்தினம், வைத்திய கலாநிதி ந.சிவராஜா, வைத்திய கலாநிதி செ.சு.நச்சினார்க்கினியன், வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தி, பேராசிரியர் மல்க்கம் ஏ.பெர்ணாண்டோ ஆகியோரின் கட்டுரைகளையும், மற்றும் குடும்ப உறவினர்கள், இலக்கிய நண்பர்களின் உணர்வலைகளின் தொகுப்பினையும் இம்மலர் கொண்டுள்ளது.

## 3923

**ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இவர்கள்: தொகுதி 1.** எ.த.ஜெயரஞ்சித், எஸ்.ஏ.ஸ்ரீதர். வாழைச்சேனை: அம்றிதா பதிப்பகம், இல. 231, வாணி வித்தியாலய ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (வாழைச்சேனை: பாரதி அச்சக்கூடம்).

(6), 22 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 20X14.5 சமீ.

அ.வரதபண்டிதர், பதுறுத்தீன் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை, எப்.எக்ஸ்.சி.நடராஜா, கனக.செந்திநாதன், அ.செ.முருகானந்தன், எஸ்.அகஸ்தியர், பேராசிரியர் நந்தி, மூதறிஞர் சொக்கன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன், மு.தளையசிங்கம், செம்பியன் செல்வன் ஆகிய பதினைந்து ஈழத்துத் தமிழ் இலக்கியவாதிகள் பற்றிய வாழ்க்கைக் குறிப்பினைக் கொண்ட நூல்.

## 3924

**ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்.** மு.கணபதிப்பிள்ளை. சென்னை 600001: பாரி நிலையம், 59, பிராட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1967. (சென்னை 14: மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் சாலை).



படிப்பகம்

www.padippakam.com



242 பக்கம், விலை: இந்திய ரூபா 5., அளவு: 18X12.5 சமீ.

நம்மிடையே வாழ்ந்து மறைந்த தமிழ் அறிஞர்கள் பற்றி விளக்கும் இந்நூல் தமிழக அறிஞர் மு.வரதராசனாரின் முன்னுரையுடன் கூடியது.

## 3925

**உள்ளக் கமலம்.** ச.அருளானந்தம், ஆ.பொன்னையா, நா.தர்மராஜா (மலர்க்குழு). வவுனியா: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச் சபை, 1வது பதிப்பு, 1992. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

xii, 98 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 25X18.5 சமீ.

சுவாமி விபுலானந்தர் பற்றி ஈழத்தறிஞர்களின் கட்டுரைகள் 22இனைத் தாங்கி வெளிவந்துள்ள சிறப்புமலர் இதுவாகும். அவரது நூற்றாண்டு விழாவையொட்டி, சி.தில்லைநாதன், ஆலையூரான், இ.முருகையன், எஸ்.எதிர்மன்னசிங்கம், கணியன் புலவனார் ஐங்கரலிங்கம், வி.சிவசாமி, நா.புவனேந்திரன், தாமரைத்தீவான், இ.பாலசுந்தரம், அ.சிவராஜா, தி.மகேஸ்வரராஜா, செ.அழகரெத்தினம், க.சுவர்ணராஜா, ந.இரவீந்திரன், நா.ஞானகுமாரன், எஸ்.கே.சிவநாதன், அகளங்கன், அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ், ஆலன், உடுவை தில்லை நடராஜா, சி.மௌனகுரு, சா.இ.கமலநாதன் ஆகியோர் எழுதிய விபுலானந்த அடிகள் சார்ந்த இலக்கியப் படைப்புக்கள் இம்மலரில் உள்ளடங்கியுள்ளன.

## 3926

**எஸ்.அகஸ்தியர். 1926-1995.** நவமணி அகஸ்தியரும் குடும்பத்தினரும். பிரான்ஸ்: திருமதி நவமணி அகஸ்தியர், 9, Rue Galleron, 75020, Paris, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், புகைப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 20.5X14.5 சமீ.

**அகஸ்தியர் என்ற எங்கள் பப்பா** என்ற உட்புறத் தலைப்புடன் 6.1.1996 இல் வெளியான இந்நூல், 08.12.1995இல் பாரிசில் அமரரான ஈழத்து முதுபெரும் எழுத்தாளர் எஸ்.அகஸ்தியர் அவர்களின் 31ம் நாள் நிகழ்வின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. குடும்ப உறவினரின் கனதியான இரங்கலுரைகளுடன் அகஸ்தியரின்



படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கைச் சுருக்கம், அவரது சிறுகதைகளில் ஒன்றான "தனியொருவனுக்கு" என்ற கதை ஆகியன இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒரு இலக்கியவாதியின் ஆழமான குடும்பப் பிணைப்பின் சாட்சியங்களாக ஒவ்வொரு ஆக்கமும் பதிவாகியுள்ளது.

## 3927

**எஸ்.பொ: ஒரு பன்முகப் பார்வை.** இந்திரன், ப.தி.அரசு. தமிழ்நாடு: *மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, சென்னை 24, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 24: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை).*

*536 பக்கம், வண்ணத் தகடுகள், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 280, அளவு: 22x14 சமீ.,* ISBN: *1876626879.*

ஈழத்து, தமிழகத்து பிரபல எழுத்தாளர்களில் 76பேர் தற்போது அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் ஆற்றல், ஆளுமை, கோபம், இலக்கிய நேசம், ஆற்றாமை இப்படிப் பலவற்றையும் தமது கண்ணோட்டத்தில் கட்டுரைகளாகவும் ஓவியங்களாகவும் இந்நூலில் பதிவு செய்திருக்கின்றார்கள். அறிவுமதி, அம்பி, கந்தவனம், பழமலய், நீலாவணன், யுகபாரதி, ஆதிமூலம், வீரசந்தானம், மருது, சந்ரு, நெடுங்செழியன், மாருதி, பாலு மகேந்திரா, ஞானம், புகழேந்தி, சௌந்தர், சிவபாலன், இலங்கைநாதன், இந்ர, சிநேகிதன், சரவணன், ராஜன், இந்திரா பார்த்தசாரதி, அம்பை, இன்குலாப், இந்திரன், கலாமோகன், காசி ஆனந்தன், தளையசிங்கம், முத்துலிங்கம், ஞானி, சாலை இளந்திரையன், சாலினி, திலகவதி, ஏ.ஜே.கனகரத்தினா, பெ.சு.மணி, வல்லிக்கண்ணன், கனக செந்திநாதன். பொன் பூலோகசிங்கம், அசோகமித்திரன், செல்வராஜா, விட்டல்ராவ், வெங்கடேஷ், சுமதி, வீகேட பாலன், தர்மகுலசிங்கம், டொமினிக் ஜீவா, வேலாயுதபிள்ளை, இராசரத்தினம், இளங்கோவன், பாவண்ணன், துரை மனோகரன், விசாலம், பஞ்சாங்கம், முருகேச பாண்டியன், இரவிகுமார், இரு கூரான், உ.பெ.பிள்ளை, ரெ.கார்த்திகேசு, இராமானுஜம், ஞானக்கூத்தன், பாலமனோகரன், செயப்பிரகாசம், கணேசலிங்கன், ஆசி.கந்தராசா, சிறிக்கந்தராஜா, கார்மேகம், தனபாலசிங்கம், சுந்தரதாஸ், அர்ப்பனா, முத்துக்குமாரசாமி, அரவிந்தன், முருகபூபதி, திருநாவுக்கரசு, தேவதாஸ், எம்.ஏ.ரஹ்மான் ஆகிய படைப்பாளிகள் எஸ்.பொ. பற்றிய தங்கள் மனப்பதிவுகளை இப்பாரிய தொகுப்பில் பதிவுசெய்துள்ளார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## 3928

**எஸ்.வீ.தம்பையா: நினைவுமலர்.** மலர் வெளியீட்டுக் குழு. நீர்வேலி: அம்பிகா இல்லம், அச்செழு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2002. (கொழும்பு 13: யு.கே.பிரின்டர்ஸ், 98ஏ, விவேகானந்த மேடு).

114 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

அமரர் எஸ்.வீ.தம்பையா (சின்னட்டி வீரகத்தி தம்பையா 25.10.1932-09.01.2002) அவர்களின் சிவபதப்பேற்றின் நினைவாக அவரது மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளால் வெளியிடப்பட்ட இம்மலரில் அமரர் தம்பையாவின் நூல்களான கடலில் கலந்தது கண்ணீர் சிறுகதைத் தொகுதி, நினைவின் அலைகள்- சுயவரலாறு, ஆகியவற்றில் தேர்ந்த சில பக்கங்களை இம்மலரின் பக்கங்கள் 1-64வரையில் காணமுடிகின்றது. பிற்பகுதி அவரது மறைவையொட்டி வழங்கப்பட்ட இரங்கலுரைகளின் தொகுப்பாக விரிகின்றது.

## 3929

**கலாயோகி ஆனந்த கெ.குமாரசுவாமி.** ஆ.தம்பித்துரை. சுன்னாகம்: வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1971. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(2), 36 பக்கம், தகடு, விலை: ரூபா 1., அளவு: 18x12.5 சமீ.

கலாயோகி ஆனந்த கென்டிஷ் குமாரசுவாமி (22.8.1877 – 9.9.1947) அவர்களின் நினைவாக 29.10.1971இல் இலங்கை அரசு தபால் முத்திரை வெளியிட்ட வேளையில் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் எழுதிய இச்சிறுநூல் வெளிவந்தது. வீரகேசரி, தினபதி பத்திரிகைகளில் ஏற்கெனவே 1966இல் எழுதப்பட்ட கட்டுரைகளின் விரிவான பதிவு இதுவாகும்.

## 3930

**கவிஞர் காரை.** மலர் வெளியீட்டுக் குழு. லண்டன்: திருமதி மாதவி சிவலீலன், 607, Whitton Avenue West, Greenford, Middlesex, UB6 ODZ, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (லண்டன்: வாசன் அச்சகம், மிச்செம்).

126 பக்கம், விலை: இலவசம், அளவு: 20.5x14.5 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபரும், பிரபல ஈழத்துக் கவிஞருமான கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் இலண்டனில் 21.09.2005இல் அமரத்துவமடைந்தார். அவரது மறைவினையொட்டி அவரது வாழ்வும் பணிகளும், அவர் பற்றிப் பிறர் கொண்ட மலரும் நினைவுகளும் இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன.

## 3931

**கார்த்திகேசு சிவத்தம்பி: இலக்கியமும் வாழ்க்கையும்.** தி.ஞானசேகரன். லண்டன் SW17 9NE: தமிழினி பதிப்பகம், 112 Bickley Street, 1வது பதிப்பு, ஆகஸ்ட், 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

viii, 160 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ.

இலங்கை ஞானம் சஞ்சிகைக்கு பேராசிரியர் அளித்த நேர்காணல்களின் தொகுப்பு. வேறு நேர்காணல்களில் சொல்லியிராத பல விடயங்களை இந்த நேர்காணலிலே பேராசிரியர் சொல்லியிருக்கிறார். ஈழத்து நவீன இலக்கியத்துறையின் பிதாமகர்களில் ஒருவராக விளங்கும் பேராசிரியர் கடந்த 50 வருடகாலப் பகுதியில் ஈழத்து இலக்கியப் போக்கில் நிகழ்ந்த மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், எழுச்சிகள், முரண்பாடுகள் என்பவற்றையெல்லாம் அனுபவ அடிப்படையில் வெளிப்படுத்தியுள்ளார். பேராசிரியரின் வாழ்க்கையின் பல பக்கங்களைத் தொட்டுச்செல்லும் இந்த நேர்காணல் ஓரளவுக்கு அவரது வாழ்க்கைச் சரிதம் போன்றும் அமைந்துள்ளது.

## 3932

**சாதனையாளர் சாரல்நாடன்.** க.அருணாசலம். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், இல.7, பல்கூட்டு சந்தை, ரொசிட்டா கடைத் தொகுதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கண்டி: Sunprints, 67, Mapanawathura Lane).

40 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-8589-13-6.

ஈழத்து இலக்கிய வரலாற்றின் மூல நாயகர்களுள் ஒருவர் சாரல்நாடன் பற்றிய ஒரு குறிப்பு (பேராசிரியர் கா.சிவத்தம்பி), சாதனையாளர் சாரல்நாடன் (கலாநிதி க.அருணாசலம்), சாரல் நாடனும் ஈழத்துத் தமிழியல் ஆய்வு வளர்ச்சியும் (கலாநிதி செ.யோகராசா) ஆகிய



படிப்பகம்

www.padippakam.com



கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சாரல்நாடன் என்று இலக்கிய உலகில் அறியப்பட்ட கருப்பையா நல்லையா அவர்களது மணிவிழா நினைவாக இந்நூல் தொகுக்கப்பட்டது.

## 3933

**சி.வை.தாமோதரம்பிள்ளை: வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.** எஸ்.சிவலிங்கராஜா. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை, 1வது பதிப்பு, மே 1983. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

(4), 18 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

1832இல் பிறந்து 1901இல் மறைந்த சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் நினைவாக இலங்கை அரசு முத்திரை வெளியிட்டது. அது தொடர்பாக நடைபெற்ற விழாவொன்றில் வெளியிடப்பட்ட இந்நூல் சி.வை.தா பற்றிய சுருக்கமான வாழ்க்கை வரலாற்றைத் தருகின்றது. நூலாசிரியர் சிவலிங்கராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

## 3934

**சுகணாவின் அமுதவிழா மலர்.** மலர் வெளியீட்டுக் குழு, அல்வாய்: சு.கணபதிப்பிள்ளை, 1வது பதிப்பு, 2003. (அல்வாய்: சதா பொன்ஸ்).

vi, 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

தமிழறிஞர் சு.கணபதிப்பிள்ளை (சுகணா) அவர்களின் 80வது அகவைப் பூர்த்தியை கொண்டாடும் வகையில் அவரது ஆக்கங்களைக் கொண்டு வெளிவந்த தொகுப்பு இது. போதிய நூலியல் தகவல்களைப் பெறமுடியாதவகையில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. க.தமிழ் அழகன், ச.பூங்கோதை, பா.தமிழ்மலர், செ.மணிமேகலை, ப.கனிமொழி, க.கணேசானந்தன் ஆகியோர் வெளியிட்டுள்ள இம்மலரில், தமிழறிஞர் சுகணாவினால் சமூக சீர்திருத்தப் பார்வையில் எழுதப்பட்ட இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த பத்து கடிதங்கள் உட்பட, அவர் எழுதிய சிறுகதைகளும், கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## 3935

**சுவாமி விபுலானந்தர்: காலமும் கருத்தும்.** சி.மௌனகுரு. மட்டக்களப்பு: விபுலம் வெளியீட்டுக் குழுவினர், 7 ஞானசூரியம் வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1993. (மட்டக்களப்பு: செயின்ட் செபஸ்தியன் அச்சகம்).

viii, 120 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12 சமீ.

விபுலானந்த அடிகளாரின் சமூக, கலை, இலக்கிய நோக்கு, தமிழ் உணர்வின் வரலாறும் விபுலாநந்தரின் தமிழுணர்வும், விபுலாநந்தர் நயந்த இலக்கிய நாயகர்கள் ஆகிய மூன்று கட்டுரைகளை உள்ளடக்கிய நூல்.

## 3936

**சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரது 150ஆவது ஆண்டு நினைவு மலர். 1855-2005.** இ.சிறிஸ்கந்தராஜா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இராமசாமி சிறீஸ்கந்தராஜா, 93, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (கொழும்பு 6: ரெக்னோ பிரின்டர்ஸ், வெள்ளவத்தை).

xiv, 93 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

சுன்னாகம் மைலணி குமாரசுவாமிப் புலவர் அவர்களின் 150ஆவது பிறந்ததினவிழா (1855-2005) கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 12.02.2005 அன்று இடம்பெற்றபோது, வெளியிடப்பட்ட மலர். புலவரின் தலைமுறையில் வந்தவரான சிறீஸ்கந்தராஜா அவர்கள் புலவர் பற்றிப் பல்வேறு தமிழறிஞர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இம்மலரை ஆக்கியுள்ளார்.

## 3937

**சைவமும் தமிழும் வளர்த்த சான்றோன்.** க.சி.குலரத்தினம். குப்பிளான்: காசிவாசி சி.செந்திநாத ஐயர் 254ஆவது குருபூசை நினைவு வெளியீடு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2002, 1வது பதிப்பு, 1983. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).



படிப்பகம்

www.padippakam.com



*x, 34 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 22x14 சமீ.*

*சைவசித்தாந்த சிகாமணி மகான் குப்பிளான் காசிவாசி சி.செந்திநாத ஐயர் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி அமரர் க.சி.குலரத்தினம் அவர்கள் 1983இல் எழுதிய விரிவான கட்டுரை மீள்பதிப்புக் கண்டுள்ளது. ஆறுமுகநாவலர் அவர்களின் வலதுகரமாகத் திகழ்ந்த இவர் நாவலரின் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக இருந்தவர். பல்வேறு கண்டன நூல்களையும் தேவாரம், வேதசாரம், சைவ வேதாந்தம் ஆகிய பிரபல நூல்களையும் எழுதியவர்.*

## 3938

**சொல்லேருழவர்: தமிழ்மணி தெல்லியூர் செ.நடராசா நினைவுமலர்: 2002.** *நினைவு மலர்க் குழு, யாழ்ப்பாணம்: தமிழ்மணி தெல்லியூர் செ.நடராசா நினைவுமலர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (யாழ்ப்பாணம்: ஹரிஹரணன் பிரிண்டர்ஸ், 424 காங்கேசன்துறை வீதி).*

*(6), 98 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*தெல்லியூர் செல்லையா நடராசா (14.11.1923-10.09.2002) அவர்களின் சிவபதப்பேற்றின் நினைவு மலர். வீரகேசரியில் துணை ஆசிரியராக 1943இல் பணியாற்றிய தெல்லியூர், பின்னர் சுதந்திரன், இந்து சாதனம் ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார். அரசசேவையில் மொழிபெயர்ப்பாளராக 1950 முதல் இவர் பணியாற்றியிருக்கிறார். யாழ்பாடி, ஜோதிடம், போன்ற பல இதழ்களை வெளியிட்டுள்ளார். சமயம், சோதிடம், மொழி, சமூகம், நாடு, என்று பரந்துபட்ட சிந்தனை ஆழமுடைய பல படைப்புகளை உருவாக்கியவர். இத்தகைய நல்லறிஞர் தெல்லியூரின் வாழ்க்கை வரலாறு, அவரது மனப்பதிவுகள், 31 அதிகாரங்களில் இவர் படைத்த 310 குறட்பாக்களைக் கொண்ட ஔவைக்குறள் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

## 3939

**தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்.** *க.செபரத்தினம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 5: எம்.கே.என்டர்பிரைசஸ்).*



படிப்பகம்

www.padippakam.com



xi, 321 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 22.5x15 சமீ.

ஈழத்தில் பிறந்து பின்னாளில் தமிழகத்தில் புகழ்பூத்த தமிழறிஞர்களின் வாழ்வும் பணியும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. ஈழத்துப் பூதந்தேவனார், சுவாமி ஞானப்பிரகாசர், கறோல் வை.விஸ்வநாதபிள்ளை, ஆறுமுக நாவலர், ஹெலக் விசுவநாதபிள்ளை, உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள், சுன்னாகம் பூ.முருகேச பண்டிதர், இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை, வித்துவசிரோமணி ச.பொன்னம்பலபிள்ளை, ஜி.பி.சவுந்தரநாயகம்பிள்ளை, சபாபதி நாவலர், உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், வி.கனகசபைப்பிள்ளை, அம்பலவாண நாவலர், ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, தி.த.சரவணமுத்துப்பிள்ளை, விபுலாநந்த அடிகள், ந.சி.கந்தையாபிள்ளை, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, தமிழ்த்தூதர் தனிநாயக அடிகள், பேராசிரியர் அல்லாமா ம.முகம்மது உவைஸ் ஆகிய 24 பெரியார்களின் வாழ்வும் பணியும் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

### 3940

**தமிழ் நாவலர் சரிதை.** திருக்கோணமலை த.கனகசுந்தரம்பிள்ளை (பரிசோதித்தவர்). சென்னை சி.குமாரசாமி நாயுடு ஸன்ஸ், 1வது பதிப்பு, ரௌத்திரி வருஷம் 1921. (சென்னை: The Caxton Press).

xii, 128 பக்கம், விலை: இந்திய அணா 12., அளவு: 18.5x12.5 சமீ.

மூலநூலாசிரியர் யாரென அறியமுடியாத 250 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் நூல்களில் இதுவும் ஒன்றாகும். தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் இந்நூலில் ஆண்டடிப்படை ஒழுங்கில் தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதிலுள்ள கவிஞர்களுள் இறுதியில் வருபவர் கவிவீரராகவராவார். அவருக்குப் பின் எவரையும் இந்நூல் குறிப்பிடாததால், யாழ்ப்பாணத்தில் அரசாண்ட பரராசசேகரன் காலத்தவராகப் 16ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்நூலாசிரியர் வாழ்ந்திருத்தல் கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது. (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுவடிகள் காப்பகப் பதிவிலக்கம் 46973).



படிப்பகம்

www.padippakam.com



## 3941

**தமிழ்ப் புலவர் அகராதி.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 014: Prompt Offset Printers, 34, திப்பு தெரு).

xx, 212 பக்கம், விலை: இந்திய ரூபா 145., அளவு: 22x14 சமீ.

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழ்ப் புலவர் அகராதி என்ற நூல் இடம்பெற்றுள்ளது. தமிழ்ப் புலவர்களின் விபரங்கள் அகரவரிசையில் இவ்வகராதியில் தரப்பட்டுள்ளன. இதுவரை அச்சிடப்பெற்ற புலவர் வரலாறுகள், சென்னை அரசாங்க நூலகக் கையெழுத்துப் பிரதிகள், சரசுவதி மகால் நூல்நிலையக் கையெழுத்துப்பிரதிகள் சம்பந்தமான குறிப்புகள் ஆகியவற்றின் துணைகொண்டு இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது. (ந.சி.க. நூல் திரட்டு 19)

## 3942

**தமிழ்ப் புலவர் சரித்திரம்.** அ.குமாரசுவாமிப் புலவர். சுன்னாகம்: அ.குமாரசுவாமிப் புலவர், 1வது பதிப்பு, நளவருடம் கார்த்திகை, 1917. (கொக்குவில்: ச.இ.சிவராமலிங்கையர், சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை, சோதிட பரிபாலன மடம்).

6+23+132 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20.5x14 சமீ.

பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைக் கூறும் நூல். இது இராமநாதபுர சமஸ்தான பூபதியும், மாட்சிமை தங்கிய ஸ்ரீமத் இரணியகர்ப்ப மஹாயாஜீ ரவிகுல முத்துவிஜயரகுநாத சேதுபதி ராஜகுல கலாநிதியும், மஹாப் பிரபுத்துவ மஹௌதாரிய கனதர பாஸ்கர சேதுபதி மஹாராஜாவின் புத்திரநிதியும், மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதியும், சென்னைச் சட்ட நிரூபண சபையிற் பிரதிநிதியுமாகிய மஹாராஜ் சமூக பூஜித மகத்துவ ஸ்ரீயுக்த ராஜராஜேஷ்வர சேதுபதி மஹாராஜா அவர்களின் செந்தமிழ்ப் பரிபாலன விருப்பமும் சிரத்தையும் நோக்கி யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையு-



படிப்பகம்

www.padippakam.com



பாத்தியாயர் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரவர்கள் இயற்றியது. (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுவடிகள் காப்பக பதிவு இலக்கம் 32473).

## 3943

**தமிழீழப் போராட்டத்தில் கலைஞர் கருணாநிதியின் பங்கும் பணியும்.** க.நவசோதி. லண்டன்: கணபதிப்பிள்ளை நவசோதி நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (லண்டன் E12: செல்வம் அச்சகம், 160-162, Sixth Avenue, Manor Park).

28 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20.5x14.5 சமீ.

எழுத்தாளர் கணபதிப்பிள்ளை நவசோதி அவர்களின் (2.4.1941-4.1.1990) மறைவின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி வெளியிடப்பட்ட இச்சிறு நூலில் The World Federation of Tamils அமைப்பினரால் 1989 ஏப்ரல் 29-30களில் லண்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் படிக்கப்பட்ட **தமிழீழப் போராட்டத்தில் கலைஞர் கருணாநிதியின் பங்கும் பணியும்** என்ற கட்டுரையும், அந்தனி ஜீவா அவர்கள் தினகரன் வார மஞ்சரியில் 9.12.1984இல் எழுதிய **நினைத்துப் பார்க்கிறேன்** என்ற தொடரில் நவசோதி பற்றி எழுதிய கட்டுரையும், தமிழர் முன்னேற்றக் கழக 10ஆவது ஆண்டு விழா மலருக்கு நவசோதி எழுதிய **தமிழ்ப் பண்ணும் மண்ணும்** என்ற கட்டுரையும், தினகரன் குறிஞ்சிக் குரல் பகுதியில் **நவசோதியின் மலையக நாட்டார் பாடல் ஆய்வு** பற்றிய லீலா ஆர். என்பவரின் கட்டுரையும், அரங்க முருகையன், சி.த.மார்க்கண்டு, ஆகியோரின் நவசோதி பற்றிய இரங்கலுரைகளும் தாசீசியஸ், சில்லையூர் செல்வராசன், பி.எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அஞ்சலிக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

## 3944

**தவச் சுடர்கள்.** மா.இராசேந்திரன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1வது பதிப்பு, நவம்பர், 1996. (கொழும்பு 13: Lanka Publishing House, 50/19, Brass Founder Street).

vi, 44 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ., ISBN: 955-9262-21-1.



படிப்பகம்

www.padippakam.com



மறைப்பணிகளோடு தமிழ்ப்பணியாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தனிநாயகம் அடிகள், பன்மொழிப் புலவர் தாவீது அடிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை இந்நூலில் சுருங்கக் கூறியுள்ளார்.

## 3945

**திருக்கோணமலையில் இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேசபிள்ளை.** *த.சித்தி அமரசிங்கம். திருக்கோணமலை: ஈழத்து இலக்கியச் சோலை, 21, ஔவையார் வீதி, 1வது பதிப்பு, பங்குனி 2006. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, நீதிமன்ற வீதி)*

*132 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 17x12.5 சமீ.,* ISBN: *955-1170-01-6.*

திருக்கோணமலை மண்ணின் மூதறிஞரும், திருக்கோணமலையின் இலக்கிய வெளியீட்டின் பிதாமகரும், திருமலை நாடக இலக்கியத்தின் முன்னோடியுமான புலவர் அகிலேசபிள்ளை (07.03.1853 – 01.01.1910) அவர்கள் பற்றிய பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்ட நூல் இது. இப்பெரியார் பற்றி 153 வருடங்களின் பின்னர் வெளிவரும் முதல் நூல் இதுவென்ற வகையில் இந்நூல் வரலாற்று முக்கியத்துவமுடையது. ஈழத்து இலக்கியச் சோலையின் 25ஆவது நூல் இதுவாகும். இப்பெரியாரின் சேகரிப்பில் இருந்த 2225 நூல்கள் பற்றிய தலைப்புப் பட்டியல் ஒன்றும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

## 3946

**பாவலர் சரித்திர தீபகம்.** *அ.சதாசிவம்பிள்ளை* (J.R.Arnold). *வட்டுக்கோட்டை: அ.சதாசிவம்பிள்ளை, தமிழ் ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, 1வது பதிப்பு, 1886. (மானிப்பாய்: ஸ்திறாங் அஸ்பரி இயந்திரசாலை).*

viii, *268 பக்கம், விலை: ரூபா க.ரு0 (ரூபா 1.20), அளவு: 21x14 சமீ.*

**பாவலர் சரித்திர தீபகம்.** *அ.சதாசிவம்பிள்ளை* (J.R.Arnold). *புதுடில்லி: ஏசியன் எடுகேஷன் சர்விஸஸ்,* C-2/15, S.D.A., *3வது பதிப்பு, 1994. 1வது பதிப்பு, 1886, 2வது* AES *மறுபதிப்பு, 1984. (டெல்லி 110051: சவுத்திரி ஓப்செட் புரோசஸ்).*



படிப்பகம்

www.padippakam.com



viii, *268 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5*X*14.5 சமீ.*, ISBN: *81-206-0031-2.*

தமிழ்ப்புலவர்களின் சரிதங்களைத் தொகுத்துக் கூற எழுந்த முதனூலும் தமிழ் மொழியில் வெளிவந்த முதலாவது தமிழ்ப்புலவர் சரித்திர நூலும் ஈழத்தவரால் இயற்றப்பெற்று ஈழத்திலேயே வெளியிடப்பெற்றவையாகும். இவற்றிலே முன்னையது கற்பிட்டி சைமன் காசிச்செட்டி (1807-1860) ஆங்கிலத்தில் எழுதி 1859இல் வெளிவந்த "தமிழ் புளூராக்" ஆகும். பின்னையது அ.சதாசிவம்பிள்ளை (1820-1895) எழுதி 1886இல் வெளியிட்ட பாவலர் சரித்திர தீபகமாகும். பாவலர் சரித்திர திபகத்திலே 410 அறிஞர்களுடைய வரலாற்றுச் செய்திகள் இடம்பெறுகின்றன. இவர்களில் 82பேர் ஈழத்தவர்களாவர். அகஸ்தியர் முதல் ஔவையார் வரை முதலாம் பகுதியில் இடம்பெற்றுள்ளன. பலருடைய வரலாறுகள், ஆக்கங்கள் முதலியன பிற ஆதாரங்களாகப் பெற முடியாதவை. இந்நூல் மூலநூலின் புகைப்பிரதிப் பதிப்பாகும். (இந்நூலின் 1886ம் ஆண்டுக்கான முதற்பதிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சுவடிகள் காப்பகப் பதிவிலக்கம் 102113).

## 3947

**பாவலர் சரித்திர தீபகம். பகுதி 2.** அ.சதாசிவம்பிள்ளை (மூல ஆசிரியர்), பொ.பூலோகசிங்கம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 7, 57ம் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் *1979. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம், பிரதான வீதி).*

xii, *362 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21*X*14 சமீ.*

யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழாசிரியரும் உதயதாரகை பத்திரிகையாசிரியருமான J.R.Arnold என்ற அர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்று The Galaxy of Tamil Poets என்ற ஆங்கில மாற்றுத்தலைப்புடன் 1886இல் மானிப்பாய் Strong & Asbury Printers அச்சகத்தினரால் அச்சிடப்பெற்ற மூலநூலை 1975இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி பொ.பூலோகசிங்கம் அவர்கள் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பித்திருந்தார். தமிழ் வளர்த்த பாவலர்களான கச்சபாலய ஐயர் முதல் தொல்காப்பியர் வரை 166 பேரின் வாழ்வும் பணியும் இவ்விரண்டாம் பகுதியில் சுருக்கமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## 3948

**புலவர் போற்றிசை.** இ.இரத்தினம். கொழும்பு 4: இ.இரத்தினம், செய்யுள், 18. ஆர்தர் இடம், 1வது பதிப்பு, 1976. (கொழும்பு 13: எம்.ஜி.எம். அச்சகம், 102/2 ஆட்டுப்பட்டித் தெரு).

(4), 22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

அரை நூற்றாண்டுக்காலம் கொழும்பில் இருந்து ஒரு தமிழ் வளாகம் போல் செயற்பட்ட புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் (09.08.1903 - 30.06.1976) அவர்களின் பிரிவு குறித்து கால்நூற்றாண்டுக்காலமாக அவரிடம் தமிழ் கற்ற புலவர் இ.இரத்தினம் இயற்றிய செய்யுள் இதுவாகும். புலவரவர்கள் பற்றித் தினகரன் பத்திரிகையில் 11.07.1976 அன்று பிரசுரமான கட்டுரையை முன்னுரையாகவும், அவர் பற்றி ஆங்கிலக்கட்டுரையொன்றை முடிவுரையாகவும் கொண்டுள்ளது. இரண்டும் இ.இரத்தினம் அவர்களால் எழுதப்பெற்றவை.

## 3949

**புலோலியூர் க.சதாசிவம் நினைவலைகள்.** புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: மீரா பதிப்பகம், C-3/5, அண்டர்சன் தொடர்மாடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

அமரர் புலோலியூர் க.சதாசிவம் (20.3.1942-15.9.2004) அவர்களின் மறைவையொட்டி 31ம் நாள் நிகழ்வின்போது வெளியிடப்பட்ட மலர். தி.ஞானசேகரன், தெளிவத்தை ஜோசப், தெணியான், கே.எஸ்.சிவகுமாரன், எம்.கே.முருகானந்தன், தமிழோவியன், பெரிய ஐங்கரன், எஸ்.பேராசிரியன், சுபத்திரமணியன், செ.மாணிக்கவாசகர், ப.ஆப்டீன், ஆகியோரின் இரங்கல் உரைகளும், குமுதினி கலையழகன், பா.இளந்திரையன், மேகலா சண்முகம், ஆகியோரின் அஞ்சலிக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

## 3950

**மல்லிகை ஜீவா நினைவுகள்.** லெ.முருகபூபதி. அவுஸ்திரேலியா: முகுந்தன் பதிப்பகம், P.O.Box 350, Craigieburn, Victoria 3064, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (சென்னை 26: சிவா கிராப்பிக்ஸ்).



படிப்பகம்

www.padippakam.com



136 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 21x14 சமீ.

கடந்த முப்பது ஆண்டுகள் (1971-2001) மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா என்ற இலக்கியவாதியுடன் தான் கொண்ட தொடர்பினை இந்த நூலில் முப்பது இயல்களில் விரிவாகப் பதிவுசெய்திருக்கிறார். இரண்டாம் பகுதியில் பலரது பார்வையில் மல்லிகை ஜீவா என்ற தலைப்பில் சமகால படைப்பிலக்கியவாதிகள் டொமினிக் ஜீவா அவர்களைப் பற்றிக் கூறிய கருத்துக்களையும் தொகுத்துத் தந்துள்ளார்.

## 3951

**வரதர் பவளவிழா மலர்.** புத்தொளி ந.சிவபாதம் (பொருளாளர்). யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 75/10 ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2002. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

(4), 64 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

மூதறிஞர் தி.ச.வரதராஜன் (வரதர்) அவர்களின் பவளவிழாவை முன்னிட்டு (1924-1999) வெளியிடப்பட்ட ஞாபகார்த்த மலர்.

## 3952

**வரலாற்றில் வாழ்தல்.** எஸ்.பொன்னுத்துரை. தமிழ்நாடு: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை, சென்னை 24, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (சென்னை 24: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆற்காடு சாலை).

xv, 952 பக்கம், விலை: இந்திய ரூபா 450, அளவு: 22x14.5 சமீ., ISBN: 1876626453.

எஸ்.பொ வின் விரிவான வாழ்க்கை வரலாற்று நூல் இதுவாகும். தனது சுயசரிதையின் ஊடாக இலங்கை இந்தியத் தமிழர்களின் இலக்கியம், பண்பாடு, அரசியல் ஆகியவை குறித்த வெளிப்படையான ஒரு நூற்றாண்டுக் காலப்பதிவை மேற்கொண்டுள்ளார். 1932இல் யாழ்ப்பாணம், நல்லூரில் பிறந்த எஸ்.பொன்னுத்துரை, 1981இல் பிறந்த மண்ணை விட்டுப்பிரிந்து நைஜீரியாவில் சிலகாலம் பணியாற்றிய பின்னர் அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார். இந்நூல் வெறும் நிகழ்வுப் பதிவாக மட்டுமல்லாது படைப்பாற்றல் கொண்ட ஒரு கலைஞனின் மதிப்பீட்டுப் பார்வையாயும் தனிப்பட்ட வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com



அனுபவங்களைச் சுவைபடச் சொல்லிச் செல்லும் சுயவரலாற்று நூலாயும் அமைந்துள்ளது.

### 3953

**வித்துவரத்தினம்: வித்துவான் க.செபரத்தினம் அவர்களின் பவள விழா மலர்.** வி.கந்தவனம், த.சிவபாலு (மலர்க்குழு). கனடா: கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (கனடா: ஜே.ஜே.பிரின்ட், ஒன்ராரியோ).

100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

எழுபத்தைந்தாம் அகவை காணும் வித்துவான் க.செபரத்தினம் அவர்களின் பவளவிழா ஞாபகார்த்தமாக 08.04.2006 அன்று வெளியிடப்பட்ட இம்மலரில், வித்துவான் செபரத்தினம் அவர்களின் தமிழ்ப்பணி பற்றிய பன்முக நோக்குக் கொண்ட வாழ்த்துரைகள் இடம்பெற்றுள்ளன.

### 3954

**விபுலாநந்தம்.** தமிழவேள் (இயற்பெயர்: க.இ.க.கந்தசுவாமி). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1992. (கொழும்பு 13: நியு சென்ட்ரல் பிரின்டர்ஸ், 147, வூல்பெண்டால் வீதி).

(6), 67 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு நினைவாக (24.4.1992, 25.4.1992) வெளியான நூல். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீட்டு வரிசையில் 20ஆவது நூலாகவும் இது அமைகின்றது. இந்நூலில் சுவாமி விபுலாநந்தரின் பணிகள் பற்றி அறிஞர்களின் சிறப்புக் கட்டுரைகளும், விபுலாநந்தர் நூற்றாண்டுத் தேர்வுகளில் (1992) பரிசில் பெற்ற மாணவர்களின் கட்டுரைகள், கவிதைகள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. இளம் வயதினரின் ஆக்கங்களையும் ஆற்றல்களையும் உலகுக்கு உணர்த்தும் வகையில் உருவாக்கப்பட்ட இத்தொகுப்பில் 14 ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. அடிகளாரது பணிகள், சிந்தனைகளோடு இணங்கும் மாணவர்களின் சிந்தனைகளையும் இந்நூலில் உள்ள கட்டுரைகளில் காணமுடிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3955

**வேலணைத் தீவு புலவர்கள் வரலாறு.** தில்லைச்சிவன். (இயற்பெயர்: தி.சிவசாமி). வேலணை: வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(4), 32 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 21.5X14.5 சமீ.

65 தீவகத்து இலக்கியவாதிகளை ஆவணப்படுத்தும் நூல் இதுவாகும். இவர்களில் 43 பேரின் விபரங்கள் முதலிலும் எஞ்சியவர்களின் விபரங்கள் அனுபந்தமாகவும் தரப்பட்டுள்ளன. அகர வரிசை ஒழுங்கிலோ, ஆண்டு ஒழுங்கிலோ இவை காணப்படாவிடினும் இலக்கியவாதிகள் பற்றிய விரிவானதொரு தொகுப்பு நூலுக்கு இது முன்னோடியாக அமையும். சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட தில்லைச்சிவன் 1946 முதல் இலக்கியத்துறையில் தடம்பதித்து வந்தவர். பாடசாலை ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1950-1951ம் ஆண்டுகளில் தமிழன், கலைச்செல்வி ஆகிய இரு இதழ்களை வெளியிட்டுள்ளார். 1961இல் இவரது முதலாவது கவிதைத் தொகுதியான கனவுக்கன்னி வெளிவந்தது. அதைத் தொடர்ந்து பல நூல்களை இவர் எழுதியிருக்கிறார்.

**மேலும் பார்க்க: 3802, 3909**

## 950 ஆசிய வரலாறு

### 3956

**கடல் அனர்த்தம்.** வ.மா.குலேந்திரன் (தொகுப்பாசிரியர்). இலண்டன்: தமிழினி பப்ளிக்கேஷன்ஸ், 112, Bickley Street, London SW17 9NE, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 600005: ராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ், 15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி).

96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 60., இந்திய ரூபா 30., அளவு: 21.5X14 சமீ.

26.12.2004இல் இடம்பெற்ற சுநாமி கடற்கோளின் பாதிப்பு தென்னாசிய நாடுகளெங்கும் தன் கோரச் சுவடுகளை விட்டுச்சென்றுள்ளது. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான உயிரிழப்புகளைப் பதிவுசெய்த இந்தப் ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட இயற்கை அழிவு வரலாற்றில் பதியப்படவேண்டியது. இந்நூல் இந்நிகழ்வினை



படிப்பகம்

www.padippakam.com



தமிழில் ஆவணப்பதிவாக்கியுள்ளது. சுநாமி ஆழிப்பேரலை பற்றிய பல்வேறு பத்திரிகைச்செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது.

## 3957

**தமிழ் இந்தியா.** ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).

xvi, 192 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 130., அளவு: 22x14 சமீ.

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழ் இந்தியா என்ற நூல் இடம்பெற்றுள்ளது. தொன்மைக்காலம், ஆரியருக்கு முற்பட்ட தமிழ் நாகரீகம், புத்தருக்கு முற்பட்ட இந்தியா, புத்தருக்குப் பிற்பட்ட இந்தியா, தமிழ் வேந்தரும் அவர் ஆட்சியும், கிழக்கே தமிழரின் குடியேற்ற நாடுகள், தமிழர் சமய வரலாறு, இந்தியாவும் மேற்கு உலகமும், மொழி ஆகிய ஒன்பது இயல்களில் இந்தியப் பெருங்கண்டத்தில் தமிழரின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது. (ந.சி.க. நூல் திரட்டு 17)

## 3958

**பலஸ்தீன் பிரச்சினையும் போராட்டமும்.** எம்.ஏ.எம்.மன்ஸூர். கொழும்பு 14: மீள்பார்வை வெளியீட்டகம், 63/5, ஸ்டேஷன் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

60 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 21x14.5 சமீ.

பாலஸ்தீனப் பிரச்சினைகள் பற்றியும், பாலஸ்தீனப் போராட்டங்கள் பற்றியும் சமகால வரலாற்றுரீதியாக இந்நூல் விளக்குகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



### 3959

**பாலைவனத்து நரி: ஈராக் தாக்குதல்.** பொன்.சக்திவேல். கொழும்பு 11: பிரைட் புக் சென்டர், எஸ். 27, முதலாவது தளம், த.பெ.எண் 162, மத்திய கொழும்பு சுப்பர் மார்க்கட் தொகுதி, 1வது பதிப்பு, 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 38 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 19x14 சமீ.

பிரைட் புத்தக நிலையத்தின் வெற்றிப்படி அறிவுக் களஞ்சிய வெளியீட்டு வரிசையில் உலக நடப்புகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட நூற்தொடராகும். அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து 17.12.1998இல் நடாத்திமுடித்த ஈராக்கின் பாக்தாத் நகரக் குண்டுவீச்சுத் தொடர்பான சர்வதேச அரசியல் பின்னணித் தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. Desert Fox என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலும் அதன் அரசியல் வரலாற்றுப் பின்னணியும் 55 கேள்வி-பதில்களாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 954.93 இலங்கை வரலாறு

### 3960

**கண்டிராசன் கதை.** சாரல்நாடன். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7, ரொசீட்டா பல்கூட்டுச் சந்தை, 1வது பதிப்பு, ஜுன் 2005. (கண்டி: சன் பிரிண்ட்ஸ், இல.67, மாப்பன வத்துர ஒழுங்கை).

64 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 170., அளவு: 20x15 சமீ., ISBN: 955-8589-07-1.

1815இல் முடிவுற்ற கண்டி இராச்சியத்தின் வரலாற்றை இந்நூலில் கூறமுற்பட்டுள்ளார். கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்ததற்கான காரணத்தை இன்றுவரை தீர்க்கமாக அறியமுடியாதுள்ள நிலையில், புலமைத்திறத்துடன் ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட ஆவணங்களிலிருந்தும், சிங்களத்திலும் தமிழிலும் வழங்கிவந்த நாட்டார் பாடல்களிலிருந்தும் தகவல்களைச் சேர்த்து சுவையான வரலாற்று நாவல் போல விறுவிறுப்பாக இந்நூலை சாரல்நாடன் படைத்துள்ளார். கண்டிராசன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் தொடர்பான புகைப்படங்களும், சித்திரங்களும் நூலுக்கு மெருகூட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



# 954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

## 3961

**இலங்கை இனமுரண்பாடுகளின் வரலாறு: ஒரு ஆவணப் பதிவு.** ஜி.நடேசன். மட்டக்களப்பு: அபிராமி விளம்பர நிறுவனம், 11, முதலாவது வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2000. (மட்டக்களப்பு: நியூ கீன் அச்சகம், 73, முனை வீதி).

xii, 188 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19x13.5 சமீ.

இலங்கையின் இன்றைய இன முரண்பாடுகளின் அடிப்படைக் காரணம் பற்றிய வரலாற்று மூலங்களை ஆராய்ந்து அதனை இளந்தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில் வீரகேசரி வார வெளியீட்டில் தொடர்ந்து கட்டுரைகளாக ஊடகவியலாளர் ஜீ நடேசன் அவர்கள் எழுதிவந்தார். அத்தொடரின் முக்கியத்துவம் கருதி அவற்றின் தொகுப்பாக இந்நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கான முன்னுரையை ஊடகவியலாளர் (தராக்கி) டி.சிவராம் அவர்கள் எழுதியுள்ளார்.

## 3962

**இலங்கையில் அட்டூழியங்களை எதிர்த்துத் தொடரும் போராட்டங்கள்.** என்.விஜயசிங்கம். கொழும்பு: கொழும்புவாழ் தமிழர் பணிக்குழு, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (Colombo, Sri Lanka: E. S. Printers, 257-1E, Galle Road, Wellawatte).

xiii, 176 பக்கம், புகைப்படங்கள், வரைபடம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-8701-00-9.

தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் வெளியாகியுள்ள இந்நூலில் ஆசிரியர் எழுதிய 29 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 1-19 வரை ஆங்கிலக் கட்டுரைகளும், 20-29வரை தமிழ்க் கட்டுரைகளுமாக இடைக்கிடையே புகைப்படங்களுடன் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கட்டுரைகள் அனைத்தும் வீரகேசரி, தினக்குரல் நாளிதழ்களில் 1998-2000 காலப்பகுதியில் பிரசுரமானவை. கொழும்புவாழ் தமிழர் பணிக்குழு (Action Group of Tamils in Colombo (AGOTIC), என்ற அமைப்பின் தலைவரான என்.விஜயசிங்கம் தன் வாழ்நாளில் 1941-45 காலப்பகுதியில் சிங்கப்பூரில் ஜப்பானியரின் ஆக்கிரமிப்பினை அனுபவித்தவர். இலங்கை வந்த பின்னர் GCSU தொழிற்சங்கத்தில் பிரதி பொதுச்செயலாளராகப் பணியாற்றியவர். உள்நாட்டு இறைவரித்



படிப்பகம்

www.padippakam.com



திணைக்களத்தில் பணியாற்றிய வேளையில் தொழிலாளர் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டவர்.

## 3963

**இலங்கையின் இனமோதலும் சமாதானமும்: 2002-2004.** எஸ்.ஐ.கீதபொன்கலன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361 ½ டாம் வீதி).

xii, 244 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5சமீ., ISBN: 955 9429 71 x.

இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விவாதங்கள் மிக உயர்மட்டத்திலேயே இடம்பெற்று வருவது ஜனநாயகத்தின் ஒரு குறைபாடாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் தெளிவின்மைக்கு காரணமாய் அமைவதுடன் அவர்கள் தவறான முடிவுகளை மேற்கொள்வதற்கும் உதவியுள்ளது. இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு சமூகத்தின் தீவிர பங்குபற்றுதலும், ஆதரவும் முக்கியமானதாகும். எனவே சமாதான செயன்முறையின்தார்ப்பரியங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதுடன் அது பற்றிய தெளிவை ஏற்படுத்தவேண்டிய தேவையும் காணப்படுகின்றது. இத்தேவையை பூர்த்திசெய்யும் வகையிலான ஒரு முயற்சியாக கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன் அவர்களால் ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு வடிவமே இந்நூலாகும்.

## 3964

**போரும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு.** அன்ரன் பாலசிங்கம். லண்டன்: பெயர்மக்ஸ் பதிப்பகம், த.பெ. 2454, மிச்செம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (லண்டன் CR4 1WB: வாசன் அச்சகம், மிச்செம்).

vi, 790 பக்கம், வண்ணப்படத் தகடுகள், விலை: ஸ்டேர்லிங் பவுண் 20, அமெரிக்க டொலர் 35., அளவு: 22x15 சமீ., ISBN: 1-903679-06-0.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் 27 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்புகொண்டுள்ளவருமான நூலாசிரியரின் இந்த



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் வரலாற்று நூல், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விறுவிறுப்பாக விளக்கிக் கூறுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்த கொந்தளிப்பான அரசியல் பின்னணி, அதன் ஆரம்பகால ஆயுதப் போராட்டம், காலப்போக்கில் அதன் அபாரமான போரியல் வளர்ச்சி என்ற ரீதியில் புலிகள் அமைப்பின் புரட்சிகரமான போராட்ட வரலாற்றை உண்மைத் தகவல்களுடன் பதிவு செய்கின்றது. ஒருபுறம் நீண்ட தொடர்ச்சியான, இரத்தம் சிந்தும் ஆயுதப் போராகவும், மறுபுறம் அமைதிவழியில் தீர்வுகாணவேண்டிய சமாதான முயற்சிகளாகவும் கட்டவிழ்ந்த விடுதலைப் புலிகளினது போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும், திருப்பங்களையும் காலவரிசையில் மிக நேர்த்தியாக எடுத்துக் கூறுகின்றது.

## 954.93(3) இனங்கள் இன உறவுகள்

### 3965

**அந்தக் காலத்து யாழ்ப்பாணம்.** *சி.சு.நாகேந்திரன். அவுஸ்திரேலியா: கலப்பை வெளியீடு,* P.O.Box 40, Homebush South, NSW 2140, *1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).*

*184 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.,* ISBN: *1 876626 11 9.*

கலப்பை காலாண்டிதழ், அவுஸ்திரேலியாவில் சிட்னி மாநிலத்தில் இயங்கும் அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் காலாண்டு வெளியீடாகும். இந்தச் சஞ்சிகையில் தொடராக முதியோன் என்ற புனைபெயரில் எழுதப்பட்ட கட்டுரைத்தொடரின் நூல்வடிவமே இந்நூல். 1920களிலிருந்து படிப்படியாக மாறிவந்த யாழ்ப்பாணத்துச் சமூகவாழ்க்கை முறையை உள்ளது உள்ளபடி காய்தல் உவத்தலின்றி இக்கட்டுரைகள் வழங்குகின்றன. நூலாசிரியர் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரி (தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம்)யின் பழைய மாணவர். 1944இல் அரச சேவையில் சேர்ந்து கணக்காய்வாளராகப் பணியாற்றி 1979இல் இளைப்பாறியவர். முதலில் லண்டனிலும் பின்னாளில் அவுஸ்திரேலியாவிலும் புலம்பெயர்ந்து வாழ்ந்தவர்.



படிப்பகம்

www.padippakam.com



## 3966

**இஸ்லாமிய உலகும் முஸ்லிம்களுக்கு எதிரான சர்வதேச சதித்திட்டங்களும்.** எம்.டி.ஹபீபுல்லாஹ். கிண்ணியா: ஐ.எஸ்.எஸ்., 1வது பதிப்பு, மார்ச் 2005. (முறுதகஹமுல்ல: வர்தா பதிப்பகம், 85 சீ, பிட்டுனுகம).

165 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20X15 சமீ., ISBN: 955-99078-0-8.

இலங்கையில் சின்னக் கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மது தம்பி ஹபீபுல்லாஹ் அவர்கள் இஸ்லாமிய நாகரீகத்துறையில் முதுகலைமாணிப் பட்டம்பெற்றவர். உலகளாவிய ரீதியில் வாழும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சர்வதேச சதித்திட்டங்களை ஆதாரபூர்வமாகவும் மிகவும் அவதானமாகவும் புள்ளிவிபர உதவியுடன் இந்நூலில் விளக்குகின்றார்.

## 3967

**எருக்கலம்பிட்டி முஸ்லீம்கள்: வரலாறும் பாரம்பரியங்களும்: பாகம் 1.** எம்.கே.ஹபீபு முஹம்மது. Kalagedihene: H.M.M.Fayiz Foundation, 380/3A, Zahira Lane, Thihariya, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (Wattala: Union Printers, 40, Puwakawatta Road, Hendala).

xviii, 221 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5X14 சமீ., ISBN: 955-98541-0-0.

எருக்கலம்பிட்டி, மன்னார்த் தீவின் வடபுறத்தில் அமைந்துள்ள ஒரு அழகான முஸ்லீம் கிராமமாகும். போர்த்துக்கேய காலனித்துவத்துக்கு முன்பே இக்கிராமம் நீண்ட வரலாற்றுடன் இங்கு நிலைத்திருந்தது. இக்கிராமத்தின் பழமைமிக்க வரலாற்றையும், கலை, கலாச்சாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் 15 இயல்களில் இந்நூல் விளக்குகின்றது. இடப்பெயர் வரலாறு, ஆதிக் குடியேற்றம், இஸ்லாமிய எழுச்சி, பொருளாதாரப் பின்னணி, பாரம்பரியக் கலைகள், கலாசாரங்கள், விளையாட்டுக்கள், சமய விழாக்களும் சடங்குகளும், சமூகப்பழக்க வழக்கங்கள், இக்கிராமத்தின் பெரியோர்கள், புலவர்கள், அவர்களின் படைப்புக்கள் என்பவற்றுடன், இனவன்முறையின்போது ஆயுதக்குழுக்களால் கொல்லப்பட்ட எருக்கலம்பிட்டிக் கிராமத்து இளைஞர்களின் வரலாறு, மன்னார் மாவட்டத்திலிருந்து முஸ்லீம்கள்



படிப்பகம்

www.padippakam.com



பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது எருக்கலம்பிட்டியில் ஏற்பட்ட பாதிப்புகள் என்பன விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 3968

**எருக்கலம்பிட்டி முஸ்லீம்கள்: வரலாறும் பாரம்பரியங்களும்: பாகம் 2.** எம்.கே.ஹபீபு முஹம்மது. Kalagedihene: H.M.M.Fayiz Foundation, 380/3A, Zahira Lane, Thihariya, *1வது பதிப்பு, ஜனவரி 2004.* (Colombo 11: Nike Card Centre, 103, Maliban Street).

vii, *185 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *955-98541-0-0.*

எருக்கலம்பிட்டி, மன்னார்த் தீவின் வடபுறத்தில் அமைந்துள்ள முஸ்லீம் கிராமமாகும். இக்கிராமத்தில் வாழ்ந்து அதன் வளர்ச்சிக்குப் பணிசெய்துள்ளவர்களைப் பற்றிய விரிவான பதிவினை இவ்விரண்டாம் தொகுதி உள்ளடக்கியுள்ளது. 11 இயல்களைக் கொண்ட இந்நூலில் ஊருக்கு உழைத்தவர்கள் வரிசையில், மார்க்க அறிஞர்கள், பள்ளி நிர்வாகிகள், பொதுப்பணியாளர்கள், கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள், கிராமசபைத் தலைவர்கள், சமாதான நீதிபதிகள் என்போர் அடங்குகின்றனர். எருக்கலம்பிட்டி உருவாக்கிவிட்ட பல்கலைக்கழக அறிவுஜீவிகள், அரசியல்வாதிகள், புலவர்கள், தொழில்துறை சார்ந்தோர், படைப்பாளிகள் பற்றிய விரிவான விபரங்களும் தேடித்தொகுக்கப்பட்டுள்ளன. ஊருக்காக உழைத்த சமூக அபிவிருத்தி, பொதுநல மன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள், அகதிகள் புனர்வாழ்வுக்கான RRRA கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் பற்றிய விபரங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

## 3969

**கண்டி இராச்சிய முஸ்லீம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள்.** A.M.நஜிமுதீன். மாத்தளை: ஏ.எம்.நஜிமுதீன், 77 டோல் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1998. (மாத்தளை: நுவன் ஓப்செட், வரக்காமுற).

xii, *135 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x13.5 சமீ.*

இலங்கை முஸ்லீம்களிடத்தே, குறிப்பாகக் கண்டிப் பிரதேசத்தில் வாழும் முஸ்லீம்களிடத்தே தமது பெயருடன் சேர்த்து வம்சாவளிப் பெயர்களையும் இணைத்துக்கொள்ளும் பழக்கம் உண்டு. இது மரபுரீதியாகப் பேணப்பட்டுவரும் ஒரு வழிமுறையாகும். குறிப்பாக கண்டி இராச்சிய சிங்கள மன்னர்களுடன் இவர்கள் இணைந்து



படிப்பகம்

www.padippakam.com



செயற்பட்டமையினால் இத்தகைய வம்சாவளிப்பெயர்கள் சிங்கள மன்னர்களால் வழங்கப்பட்டன என்று கூறப்படுகின்றன. இதுகுறித்த ஓர் ஆய்வுநூலாக கண்டி இராச்சிய முஸ்லீம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள் எனும் இந்நூல் அமைகின்றது. சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலகட்டத்தில் கண்டி மாவட்டத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குப்பிரதிகளை ஆதாரமாகக் கொண்டு இத்தகைய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் நீதிமன்ற முதலியாராகப் பணியாற்றியவர்.

## 3970

**தமிழர் சரித்திரம்: வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்.** *ந.சி.கந்தையா (மூலம்), கோ.தேவராசன் (தொகுப்பாளர்), இ.இனியன் (பதிப்பாளர்), சென்னை 600 017: அமிழ்தம் பதிப்பகம், எ4, மாதவ் குடியிருப்பு, 5, டாக்டர் தாமசு சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600 006: வெங்கடேசுவரா ஆப்செட், 20, அஜீஸ் முல்க் 5வது தெரு, ஆயிரம் விளக்கு).*

*xx, 236 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 22x14 சமீ.*

ஈழத்தமிழ் அறிஞர் ந.சி.கந்தையாபிள்ளை (1893-1967) அவர்கள் எழுதிய பன்னூல்களையும் தேடித்திரட்டித் தொகுப்பாக்கும் முயற்சியில் தமிழகத்திலிருந்து திரு. இளவளகன் அவர்கள் ஈடுபட்டு 24 தொகுதிகளில் அவற்றைத் தொகுத்துள்ளார். இத்திரட்டில் ந.சி.க.வின் தமிழர் சரித்திரம், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர் ஆகிய இரு நூல்கள் இடம்பெற்றுள்ளன. (ந.சி.க. நூல் திரட்டு 14)

## 3971

**தமிழன் மாட்சி.** *தெல்லியூர் செ.நடராசா. யாழ்ப்பாணம்: தமிழ்மணி பதிப்பகம், 14, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், 2வது பதிப்பு, 1955, 1வது பதிப்பு, 1947. (யாழ்ப்பாணம்: தமிழ்மணி பதிப்பகம்).*

*68 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 20.5x13 சமீ.*

தமிழின் பெருமைகூறும் இந்நூலில் இடம்பெற்றுள்ள 14 கட்டுரைகளும் அமரர் தெல்லியூர் நடராசா அவர்கள் தனது இளமைக்காலத்தில் 15ஆவது வயதிலிருந்து எழுதி இந்து சாதனம் பத்திரிகையில் பிரசுரமானவையாகும். முதிர்ந்த தெள்ளிய எழுத்துநடைகொண்ட இக்கட்டுரைத் தொகுதிக்கு சுவாமி விபுலானந்தர் அணிந்துரை வழங்கியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## 3972

**தமிழனே தலைமகன் தமிழே தலைமொழி.** கா.வை.இரத்தினசிங்கம். (புனைபெயர் கொக்கூர்கிழான்). கொக்குவில்: அறிவராயம், மாத்தனை கோவிலடி, செம்பியன் ஒழுங்கை, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: கபிலா பதிப்பகம், 369, காங்கேசன்துறை வீதி).

(8), 80 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21X13.5 சமீ.

தமிழின் தொன்மை பற்றியும், தமிழரின் நாகரீகம் பற்றியும், ஒப்பீட்டுரீதியில் விளக்குவதாக அமைந்த இந்நூல் 16 குறுந்தலைப்புக்களில் தமிழியல் பற்றிய பல்வேறு விபரங்களைத் தருகின்றது. அரசியற் புரட்டும் அறிவியற் தெருட்டும், அறிவியல் ஒளிமுன் ஆரிருள் அகல்கிறது, முன்னோடியவர் பின்னோடுவதேன்?, பழந்தமிழகமே பார்முதல் நிலமாம், தமிழெழுத்தே தலையெழுத்து, தமிழ்மொழியே தலைமொழி, முத்தமிழ்ச்சங்கமே முதன்மொழிச் சங்கம், பாவலர் தமிழும் பாமரர் தமிழும், வாய்மொழியும் வரைமொழியும், பழந்தமிழ்ப் பண்பே பாரெல்லாம் பரவியது, நடுகல் வழக்கமும் நாக வணக்கமும், நாகரும் இயக்கரும் நம் தமிழ் மக்களே, வணிகமும் தளைத்தது வையமும் பிழைத்தது, ஈழவள நாடும் இன்றமிழ் மக்களும், திராவிட மரபுவழிக் காலவரண்முறை ஆகிய தலைப்புக்களே நூல் பற்றிய உள்ளடக்கத்தைத் தெளிவாகப் புரியவைக்கும்.

## 3973

**பௌத்த சிங்களவரும் சிறுபான்மையினரும்: இலங்கை இந்திய நிலைப்பாடு.** சந்தியாபிள்ளை கீதபொன்கலன். சென்னை 600090: செரோ வெளியீடு, தபால் பெட்டி இலக்கம் 5001, பெசன்ட் நகர், 1வது பதிப்பு, மார்கழி 1987. (சென்னை 600020: ராசகிளி பதிப்பகம்).

xxiv, 376 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21X14 சமீ.

இலங்கைத் தமிழ் மக்களது பிரச்சினைகள் உருவெடுத்து முதிர்ச்சியுற்ற வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் நூல். இந்நூலின் முதலாம் பாகம் சிங்கள பௌத்த உணர்வும் பிக்குகளும், பாராளுமன்றத்தில் சிறுபான்மையோர் சிறுபான்மையினராக்கப்பட்டமை, தோட்டத் தொழிலாளர் உரிமை மறுப்பு, இலங்கை முஸ்லீம்களின் இன்றைய நிலை, அரசாங்கக் குடியேற்றங்கள், சிங்களமயமாக்கம், கல்வியும் தமிழர் புறக்கணிப்பும் ஆகிய விடயங்களை விளக்குகின்றது. இரண்டாம் பாகம் இனப்பிரச்சினையும் இந்தியாவும் (1983-1987),



படிப்பகம்

www.padippakam.com



அரச பயங்கரவாதமும் போராளிகளும், இனப்பிரச்சினையும் இந்திராகாந்தியும் (1983-1984), 1985இல் நிலையும் திம்புப் பேச்சுவார்த்தையும், 1986இன் நிலையும் பேச்சுவார்த்தையும், 1987 இல் போரும் ஒப்பந்தமும் ஆகிய விடயங்களை விரிவாகப் பேசுகின்றது. நூலாசிரியர் வண.பிதா சந்தியாபிள்ளை கீதபொன்கலன் பெல்ஜியம் நாட்டின் லூவேன் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பட்டம் பெற்றவர். பதுளை மறைமாவட்டத்தில் கடமையாற்றிய-போது (1974-1983) உஸ்கொட் என்னும் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவி ஊவா மாகாணத்தின் தமிழ்-சிங்கள மக்களின் உயர்வுக்காக அயராது உழைத்துவந்தவர். 1983ம் ஆண்டு இந்நிலையம் இனக்கலவரத்தின்போது தீக்கிரையாக்கப்பட்டது. பின்னர் இவர் பெல்ஜியம் நாட்டுக்குச் சென்று தனது கலாநிதிப் பட்டத்தை முடித்துக்கொண்டார். 1984ம் ஆண்டு சென்னையில் Ceylon Refugees and Repatriates Organisation (CERRO) என்ற அமைப்பினை நிறுவித் தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளின் துயர்துடைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

## 3974

**மலையகத் தமிழர் வரலாறு.** சாரல்நாடன். கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், இல.7, ரொசிட்டா பல்கூட்டுச் சந்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xvi, 226 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 330., அளவு: 22x14 சமீ., ISBN: 955-8589-11-x.

நிலவரி, லயத்துவாரி முறை, பஞ்சம், தமிழர்கள் கடல் கடத்தல், மலையகத் தமிழரின் அரசியல் அனுபவங்கள், நாடற்றோர் பிரச்சினை, மறக்க முடியாத நிகழ்வுகள், மலையக மக்கள் சமூகம், தோட்டப்புறக் கல்வி, வீடுகள், காணிகள், மாறிவரும் நிலைமைகள், மலையக மக்களின் வளர்ச்சிப்படிகள் ஆகியவை உள்ளிட்ட ஒன்பது இயல்களில் மலையகத் தமிழரின் வரலாறு சொல்லப்படுகின்றது.

## 3975

**மும்முனைப் பிரச்சினைகளும் தீர்வுகளும்.** எம்.ஐ.அப்துர் ரஸ்ஸாக். கொழும்பு 9: ஆசிரியர், 23, கெட்டவலமுல்ல ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (கொழும்பு 10: Iqra Instant Print, 143, 1st Division).



படிப்பகம்

www.padippakam.com



x, 141 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இந்நூலாசிரியர் அப்துர் ரஸ்ஸாக் கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். மும்முனைப் பிரச்சினைகளாக இங்கே இவர் இனம் காட்டியிருப்பது இலங்கை முஸ்லீம்களின் அடிப்படைப் பிரச்சினைகளான பொருளாதார, கல்வி, சமூகப் பிரச்சினைகளாகும். இப்பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய வரம்புக்குள்ளிருந்து தீர்வுகாண எத்தனிக்கிறார் நூலாசிரியர். இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் 1980களில் தினகரன் பத்திரிகையில் பிரசுரமானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 3976

**மூச்சுத் திணறும் முஸ்லிம் தேசம்: சமாதான முயற்சியில் முஸ்லிம் பாத்திரம் ஒரு விமர்சன நோக்கு.** முஸ்லீம் தகவல் நிலையம். கொழும்பு: முஸ்லிம் தகவல் நிலையம், 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iii, 37 பக்கம், புகைப்படங்கள், கருத்தோவியங்கள், விலை: ரூபா 60., அளவு: 24x18.5 சமீ.

இவ்வாய்வில், சமாதானச் சூழல், விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த காலப்பகுதி, புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு, ஹக்கீம்-பிரபா கூட்டறிக்கை, சமாதானப் பேச்சுவார்த்தைகள், உபகுழுக்கள், இறுதித் தீர்வுக்கான நகல் யோசனை, இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள், இடைக்கால நிர்வாகசபை, அரசின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளும் முஸ்லீம்களும், விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளும் முஸ்லீம்களும் ஆகிய அம்சங்கள் இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளன.

## 3977

**யாதும் ஊரே: ஒரு யாத்திரை.** அம்பி. (இயற்பெயர்: இ.அம்பிகைபாகர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 375/8-10, ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 375/8-10, ஆர்க்காடு சாலை).

224 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ., ISBN: 1 876626 92 5.



படிப்பகம்

www.padippakam.com



ஈழத்தமிழர் உலகளாவிய ஈழத் தமிழராகியது ஏன்? அந்நிலை எப்படி உருவாகியது? அவர்களின் எதிர்காலம் என்ன? ஆகிய கேள்விகளுக்கு விடை தேடும்வகையில் உருவாகிய இந்நூல், புலம்பெயர்ந்த மக்களின் நிலை பற்றிய உணர்ச்சிநிலைச் சிந்தனையை அடக்கி, உண்மை நிலைச் சிந்தனையுடன் ஆராய்தலையும் சிந்திக்கவைத்தலையும் குறிக்கோளாகக் கொண்டது. அம்பியின் 16 கட்டுரைகளிலும் இதனைக் காண முடிகின்றது.

## 954.93(4) பிரதேச வரலாறு

### 3978

**அக்கரைப்பற்று வரலாறு.** A.R.M.சலீம். அக்கரைப்பற்று: பள்ளிவாசல்களின் சம்மேளனம், 2வது பதிப்பு, நவம்பர் 1997. 1வது பதிப்பு, டிசம்பர் 1990. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஓப்செட்).

xxiii, 392 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-95567-2-X.

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தின் இயற்கைவளமும் கலாச்சாரமும் ஆக்கங்களும் சாதனைகளும் பெரியார்கள் உத்தமர்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களும் இந்நூலில் அக்கறையுடன் தொகுக்கப்பட்டுள்ளன. அக்கரைப்பற்றுப் பிரதேசத்தின் பெயர்விளக்கம், புவியியல் அமைவு, மழைவீழ்ச்சி, குடியேற்ற வரலாறு, கிராமங்களின் தோற்றம், சமூக வாழ்வியல் அமைப்பு, குடும்ப அமைப்பு, பொருளாதாரமும் போக்குவரவும், கல்வி, இலக்கியச் செழுமை, வணக்கஸ்தலங்களும் ஸியாறங்களும், அரசியல் மேடை, ஆயுதப் போராட்டத்தில் அக்கரைப்பற்றின் பங்களிப்பு ஆகிய தகவல்கள் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

### 3979

**அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 1: கிமு-கிபி.** அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், ஏ 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் திட்டம், மங்கள வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

xvi, 125 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-96159-9-8.



படிப்பகம்

www.padippakam.com



அடங்காப்பற்று பண்டாரவன்னியன் வரலாறு, பண்டாரவன்னியன்-குருவிச்சி நாச்சியார் நாடகம் ஆகிய நூல்களைத் தந்த அருணா செல்லத்துரையின் அண்மைக்காலப் படைப்பு இது. வன்னிப்பிரதேச அரசியல் பொருளியல் சமூகவியல் வரலாற்றை அறிய உதவும் இந்நூலில் வன்னியில் கிறிஸ்துவுக்கு முன்னையகால வரலாற்றுத் தகவல்களும் இடம்பெறுகின்றன. கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள காலப்பகுதி, முன்னையதிலும் விரிவாகத் தரப்பட்டுள்ளது. நீர்ப்பாசனக் குளங்களின் வரலாற்றுக் குறிப்புகள் நூற்றாண்டுரீதியாகத் தரப்பட்டுள்ளன.

## 3980

**அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 3: சுதேசத் தலைமைகள்: கிபி 1750 - கிபி 1895.** *அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், ஏ 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் திட்டம், மங்கள வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).*

xvii, *134 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *955-96159-8-*X.

அடங்காப்பற்று பண்டாரவன்னியன் வரலாறு, பண்டாரவன்னியன்-குருவிச்சி நாச்சியார் நாடகம் ஆகிய நூல்களைத் தந்த அருணா செல்லத்துரையின் அண்மைக்காலப் படைப்பு இது. இந்நூலின் வருகை அடங்காப்பற்று பிரதேசத்தின் வரலாற்றை வெளிக்கொண்டு-வரும் முயற்சியில் மற்றுமொரு மைல்கல்லாகக் கருதப்படுகின்றது. இந்நூலின் முதற் பாகம் அடங்காப்பற்று (வன்னி) வரலாறு கி.மு.-கி.பி. என்ற தலைப்பில் வெளிவந்திருந்தது. இரண்டாம் பாகம் வெளி-வராத நிலையில் ஏற்கெனவே 2002இல் வெளிவந்திருந்த அடங்காப்-பற்று பண்டாரவன்னியன் வரலாறு (நூல்தேட்டம் பதிவு இலக்கம் 1966) இத்தொகுதியின் இரண்டாம் பாகமாகக் கருதப்படுகின்றது.

## 3981

**காரைநகர் தொன்மையும் வன்மையும்.** *ச.ஆ.பாலேந்திரன். கொழும்பு 13: பாலாவோடை அம்மன் பதிப்பகம், 48, புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).*

xiv, *404 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22x14 சமீ.*



படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணக் குடாநாட்டின் காரைதீவு (காரைநகர்) பற்றிய இவ்வரலாற்றாய்வில் முதற்பகுதியில் காரைநகரின் தொன்மையை விளக்குவதற்கான வரலாற்றாதாரங்களை முன்வைத்துள்ளார். காலத்தால் முந்தியதும் பல்வேறு பெருமைகளைக் கொண்டதுமான காரைதீவின் ஆதிக்குடிகள் தாமிரபரணி மக்கள் எனவும், மணிபல்லவத்தீவு என வழங்கப்பட்டது காரைதீவேயாகும் என்பதையும், ஜம்புகோளப் பட்டினம் இன்றைய காரைதீவிலிருந்து அழிந்த ஒரு பெருந்துறையாகும் என்பதையும் கூறி, இன்றைய (தும்பில்) கோவளம் அத்துறைமுகத்தின் எஞ்சிய பகுதியாகும் என நிறுவ முற்பட்டுள்ளார். அத்துடன் களபூமித்துறையும் ஊர்காவற்றுறையும் இலக்கிய அந்தஸ்துப்பெற்றவை என்பதையும் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். காரைநகரின் வன்மையை விளக்கமுற்படும் இரண்டாம் பகுதியில் இவ்வூரில் உள்ள கோவில்கள், மடங்கள், சபைகள், பாடசாலைகள் பற்றிய விபரங்கள் மூலம் இவ்வூர் சமயம், கல்வி என்பவற்றில் எவ்வாறு வலிமை பெற்றிருந்தது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வூரில் வாழ்ந்து மறைந்த பெரியார்கள் பற்றியும் நினைவுகூர்ந்துள்ளார். கொழும்பு கம்பன் கழகப் பொருளாளரான ச.ஆ.பாலேந்திரன் காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் (1965-1968) பட்டதாரியுமாவார்.

**3982**

**சரித்திரப்பெற்ற பொலன்னறுவை.** டி.எம்.ஜயவர்த்தன (மூலம்), எஸ்.லோகம்பாள் (தமிழாக்கம்). பிலியந்தலை: திலினி அட்வர்டைசிங், 433-1,புதிய பாதை, கெடபுவான, 1வது பதிப்பு, மார்ச் 2004. (பிலியந்தலை: எஸ்.டி.எஸ்.வெளியீடு ஸ்தாபனம்).

(6), 14, வண்ணப் புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 40., அளவு: 18x13.5 சமீ.

இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நகரங்களுள் பொலன்னறுவையும் ஒன்று. பௌத்த, இந்து கலாச்சாரங்களுக்குரிய பல தொல்பொருட்சான்றுகள் இங்கு காணப்படுகின்றன. இலங்கையின் ஏனைய புராதன நகரங்களை விட தமிழர்களின் அவதானத்திற்குட்பட இதுவே மூலகாரணமாகும். பொலன்னறுவையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தொல்பொருள் சான்றுகளை ஒரே பார்வையில் தெரிந்துகொள்ள உதவிடும் இந்நூலின் மூல ஆசிரியர் பொலன்னறுவைப் பிரதேசத்தின் புராதன ஆய்வதிகாரி-



படிப்பகம்

www.padippakam.com



யாகக் கடமையாற்றியவர். சிங்கள மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் தமிழாக்கத்தை மேற்கொண்ட செல்வி எஸ்.லோகம்பாள் இராஜவெல தமிழ் தேசிய பாடசாலையின் பிரதி அதிபராவார். (நூல் தலைப்பு நூலில் உள்ளபடி தரப்பட்டுள்ளது. சரித்திரப் புகழ்பெற்ற அல்லது சரித்திர முக்கியத்துவம் பெற்ற பொலன்னறுவை என்ற கருத்தில் நூலின் தலைப்பு அமைந்திருக்கலாம்)

## 3983

**தீவகம்: பல்துறை நோக்கு.** கா.குகபாலன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ்).

(6), 157 பக்கம், வரைபடம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

தீவகம் பற்றிய பல்வேறு தலைப்புக்களில் அமைந்த ஆறு ஆய்வுக்கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. தீவகம்: ஒரு வரலாற்று நோக்கு (பேராசிரியர் வி.சிவசாமி), தீவகம்: நீர்வளம் (பேராசிரியர் செ.பாலச்சந்திரன்), தீவகம்: மக்களும் மதமும் (பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்), தீவகம்: இடப்பெயர்கள் (பேராசிரியர் இ.பாலசுந்தரம்), தீவகம்: சமூக, பொருளாதார மாற்றங்கள் (பேராசிரியர் கா.குகபாலன்), தீவகம்: நூற்றொகை விபரங்கள் (கலாநிதி வே.இ.பாக்கியநாதன்) ஆகியவையே அந்த ஆறு கட்டுரைகளுமாகும்.

## 3984

**தீவகம்: வளமும் வாழ்வும்.** கா.குகபாலன். யாழ்ப்பாணம்: தீவகக் கோட்டக் கூட்டுறவு ஒன்றியம், 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகம், காங்கேசன்துறை வீதி).

(12), 133 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் மக்கள் நடமாட்டமுடையதானதும், மேல்நாட்டார் இலங்கைத் தீவைக் கைப்பற்றிய போதெல்லாம் அவர்களின் கணிசமான கவனத்தை ஈர்த்ததுமான தீவகப்பகுதியின் வளத்தையும் வாழ்வையும் பிரதேசப் புவியியல் ஆய்வாகப் பதிவுசெய்துள்ள நூல். தீவகத்தின் அமைவிடம், வரலாற்று நோக்கு, குடித்தொகைப் பண்புகள், அரசியல், பொருளாதாரம், கல்வி, போக்குவரத்து, அபிவிருத்திக்கான உபாயங்கள், இன்றைய நிலை



படிப்பகம்

www.padippakam.com



என்று 9 இயல்களில் இந்நூல் விரிந்துள்ளது. இலங்கை அரசின் சாகித்திய விருதுபெற்ற நூல். வடக்கு கிழக்கு மாகாணசபையால் வழங்கப்படும் சிறந்த நூலுக்கான பரிசும் பெற்றது.

## 3985

**புங்குடுதீவு கிராமம்: அன்றும் இன்றும்.** *கா.குகபாலன். யாழ்ப்பாணம்: யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரிண்டர்ஸ்).*

*(2), iv, 54 பக்கம், விலை: ரூபா 100, அளவு: 19.5X14 சமீ.*

வரலாற்றுக்காலம் தொட்டு பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைகளில் சிறப்புற்று விளங்கிய தீவு புங்குடுதீவாகும். 1952வரை பெருநிலப் பகுதிக்கான தொடர்பு கடல்வழிப் பாதையாக இருந்தது. **வாணர் பாலம்** அமைக்கப்பட்ட பின்பே தரைவழிப் பயணத் தொடர்பு சாத்தியமாயிற்று. இந்தத் தொடர்பு இக்கிராமத்திற்கு பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியில் விருத்தியடையும் வாய்ப்பைத் தந்தது. 70களைத் தொடர்ந்து இன விடுதலைப் போராட்டத்தில் ஏனைய தமிழர்வாழ் பிரதேசங்களுக்கு எடுத்துக்காட்டாக இத்தீவு மக்கள் ஈடுபட்டனர். 1987இல் இந்தியப்படை யாழ். குடாநாட்டை முற்றுகையிட்ட போதும், 1990இல் இலங்கை இராணுவத்தினர் லைடன் தீவை முற்றுகையிட்ட போதும் அப்பிரதேச மக்களின் பாதுகாப்புப் பிரதேசமாக விளங்கியது புங்குடுதீவாகும். இயற்கை வாய்ப்புக் குறைவான போதிலும், மனிதவள விருத்தியினால் பொருளாதார, சமூக, பண்பாட்டுரீதியில் வளர்ச்சி கண்ட புங்குடுதீவுக் கிராமம், 1991ம் ஆண்டிலிருந்து 90 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்களை இழந்து கட்டிடத் தொகுதிகளுடன் கூடிய இயற்கைத் தாவரப்போர்வையினால் மூடப்பட்டுக் காணப்படுகின்றது. தற்போது இப்பிரதேசத்தில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுகின்ற போதிலும் 90க்கு முற்பட்ட நிலையைக் காண்பது கடினமாகும். இந்நிலையில் இந்நூல் புங்குடுதீவு கிராமத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வரலாற்றை மீட்டுப்பார்க்க உதவுகின்றது.

## 3986

**மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்.** *சா.இ.கமலநாதன், திருமதி கமலா கமலநாதன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).*



படிப்பகம்

www.padippakam.com



xxii, 138 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ, ISBN: 955-9429-00-0.

மட்டக்களப்பு வரலாற்றுக்கான மூலச்சான்றாக விளங்கும் "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" என்ற ஏட்டுச்சுவடி பாட செவ்வையாக்கம் மேற்கொள்ளப்பட்டு, விளக்கக் குறிப்புகளுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற பெயரில் வழக்கில் இருந்த நான்கு ஏடுகளைத் தேடி எடுத்து அவற்றுக்கிடையேயுள்ள பிரதிபேதங்களை ஒப்புநோக்கி நேர்த்தியான வகையில் வரலாற்று ஆய்வாளர்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த பதிப்பொன்றாக இந்நூலை உருவாக்கியுள்ளனர். மட்டக்களப்பிலிருந்து த.சிவராம் அவர்கள் இந்நூலுக்கு எழுதிய ஆழமான முன்னுரை குறிப்பிடத்தக்கது.

### 3987

**மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்.** க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்), எஸ்.பி.கனகசபாபதி (புனைபெயர்: கல்கிதாசன்). கனடா: ஜீவா பதிப்பகம், ரொரன்ரோ, இணைந்து வெளியிட்டோர், கனடா: கந்தபாணம் என்ரர்பிறைசஸ், மொன்றியல், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9-10, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).

(57), 294 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: கனேடிய டொலர் 12, இந்திய ரூபா 150., இலங்கை ரூபா 300., அளவு: 22.5x12 சமீ.

அமரர் நா.சா.கதிர்காமத்தம்பி நினைவையொட்டி கனடாவிலிருந்து ஜீவா பதிப்பகம், கந்தபாணம் நிறுவனம் ஆகியவை கூட்டாக இணைந்து வெளியிட்ட இந்நூலில் இராவண ஊழியிலிருந்து கண்டிக் காலம் வரையிலான மட்டக்களப்புப் பிரதேசத்தின் பண்டைய வரலாற்று மூலங்கள் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

### 3988

**யாழ்ப்பாண வைபவ விமர்சனம்: தமிழரசர் உகம்.** நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர். சென்னை 600014: Asian Educational Services, 5, Sripuram First Street, 2வது மீள்பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 1928. (டெல்லி 110 051: சவுத்திரி ஓப்செட் புறொஸஸ்).



படிப்பகம்

www.padippakam.com



*(8), 172 பக்கம், விலை: ரூபா 295., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *81-206-1689-8.*

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதி அச்சுவேலியில் 1928இல் பிரசுரம் செய்த மூலநூலின் மீள்பதிப்பு இதுவாகும். யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆதிகால உண்மைச் சரித்திர ஆராய்ச்சியையும் யாழ்ப்பாண வைபவமாலை எனப் பெயர்கொண்ட நூலின் உள்ளுறை ஆராய்ச்சியையும் கையாண்டு எழுதப்பட்ட இந்நூல் சன்மார்க்கபோதினி என்ற பத்திரிகையில் அவ்வப்போது தொடராக வெளிவந்தது.

# 999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

## 3989

**அதிர்ஷ்ட எண் ஜோதிடம்.** கோட்டையூர் என்.சிவசுப்பிரமணியம். கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி அச்சகம், 320 செட்டியார் தெரு).

*(10), 182 பக்கம், விலை: ரூபா 200., இந்திய ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.*

ஒருவரின் பிறந்த தேதியை வைத்து அவரது அதிர்ஷ்ட எண்ணை அறிவது முதல் அதன் பலன்கள் வரையில் கூறும் இச்சோதிட நூல், தமிழகத்தின் சிவகங்கை மாவட்டத்தின் கோட்டையூர்ப் பகுதியைச் சேர்ந்த நூலாசிரியரால் இலங்கையில் வெளியிடப்பட்டுள்ளது. முன்னட்டையில் "அதிர்ஷ்ட எண்கணிதம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் பதிப்பு ஆண்டு மே 1999க்குப் பிற்பட்டதாக இருக்கலாம்.

## 3990

**அமர்தல் அலைதல்.** ஜெயமோகன். சென்னை 14: தமிழினி, 342, டி.டி.கே.சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (சென்னை 5: மணி ஆப்செட்).

*80 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.*

இலக்கிய முன்னோடிகள் வரிசையில் ஆறாவது நூலாகத் தமிழக எழுத்தாளர் ஜெயமோகன் எழுதியுள்ள நூல். இந்நூலில் ஈழத்து



படிப்பகம்

www.padippakam.com



எழுத்தாளர்களான மு.தளையசிங்கம், அ.முத்துலிங்கம் ஆகியோரது படைப்பிலக்கியத் தளம், திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. மு.தளையசிங்கம்: தத்துவமும் மெய்யியலும், அ.முத்துலிங்கம்: புன்னகைக்கும் கதைசொல்லி ஆகிய இரு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 3991

**இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்.** பெ.சு.மணி. கொழும்பு 6: இராமகிருஷ்ணா மிஷன், 40, இராமகிருஷ்ணா சாலை, 1வது பதிப்பு, 1997. (சென்னை 600094: ராஜ் பிரின்டர்ஸ், சூளைமேடு).

256 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18.5x12.5 சமீ.

1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் நாள் சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்தார். இங்கு தனது அருளுரைகளால் மக்கள் மனங்களில் ஆன்ம நாட்டத்தைத் தூண்டினார். அவரது விஜயத்தைத் தொடர்ந்து இராமகிருஷ்னர் இயக்கப் பணிகள் இங்கு வேரூன்றத் தொடங்கின. அந்த வரலாற்றை நூலாசிரியர் விளக்கமாகத் தந்துள்ளார். சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டது. (நூலாசிரியர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்).

## 3992

**இனியது இனியது இலங்கை.** பி.எல். ராஜேந்திரன். சென்னை 600 004: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், 1வது பதிப்பு, டிசம்பர் 1984. (சென்னை 600005: வீரபத்திரர் அச்சகம்).

347 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18x12.5 சமீ.

இலங்கைப் பின்னணியில் தமிழக எழுத்தாளரின் கற்பனையில் உதித்த நாவல் இது. இலங்கை பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், இனப்பிரச்சினை பற்றிய சம்பவத் திணிப்புகளும் கதையோட்டத்துடன் இணைந்து செல்கின்றன. கண்டியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் பணியாற்றும் செல்வத்தையும் அவனது குடும்பத்தையும் சுற்றிக் கதை விறுவிறுப்பாக நகர்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



## 3993

**ஒரு குடும்பத்தில் நடக்கிறது.** ஜெயகாந்தன். கொழும்பு 13: கிருஷ்ணா பதிப்பகம், 149, புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: கலாநிலையம் அச்சகம், 303(533), காங்கேசன்துறை வீதி).

(6), 61 பக்கம், விலை: ரூபா 3.95, அளவு: 17.5X12.5 சமீ.

தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தனின் குறுநாவல். தமிழக எழுத்தாளர்களின் படைப்புக்களை ஈழத்து பதிப்புத்துறை உள்வாங்கும் அரிய உதாரணமாக இந்நூல் வெளியீடு அமைந்துள்ளது. நாட்டில் நடக்கும் எல்லா நடப்புக்களும், உடனடியாகவோ, காலம் கடந்தோ, எல்லாக் குடும்பங்களிலும் பிரதிபலிக்கும். தனி மனிதர்களையும் அது பாதிக்கும். ஆனால் வாழ்க்கையின் சகல பிரச்சினைகளையும் அரசியல்-சமுதாய மாற்றத்தால் மட்டும் தீர்த்துவிட முடியாது என்ற கருத்தினை ஊடுபாவாகக் கொண்ட கதை.

## 3994

**குருதி பூத்த வெள்ளரசு.** கணபதி கணேசன். கோலாலம்பூர்: உலகத் தமிழர் நிவாரண நிதி, 1வது பதிப்பு, மே 2002. (மலேசியா: விசால் நாதன், கோலாலம்பூர்).

78 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20X13 சமீ.

ஈழத் தமிழர் துயர் துடைக்க மலேசியத் தமிழர்களால் உருவாக்கப்பட்டது உலகத் தமிழர் நிவாரணநிதி. பசுபதி சிதம்பரம் அவர்கள் அறங்காவலராக இருந்து இயங்கும் இந்நிதியம் ஈழத்தமிழர் துயர்துடைப்புப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தது. நிதி சேகரிப்பு முயற்சிகளுக்கு அனுகூலமாக ஈழத்தமிழரின் துயர்பாடும் இக்கவிதை நூல் வெளியிடப்பட்டது. வண்ணப் புகைப்படங்களுடன் கூடிய அழகான அச்சுருவில் வெளியாகியுள்ள இந்நூலில் கவிஞர்கள் அறிவுமதி, காசி ஆனந்தன், கணபதி கணேசன் ஆகியோரின் சிறப்புரைகளும் அறங்காவலர் பசுபதி சிதம்பரம் அவர்களின் அறிமுக உரையும் இடம்பெறுகின்றது. 1970களிலிருந்து எழுதிவரும் கணபதி கணேசனின் ஈழத்தமிழர் பற்றிய தேர்ந்த உணர்வுக் கவிதைகளை இந்நூல் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



### 3995

**கௌதமரின் கண்ணீர்.** பெருங்கவிக்கோ (இயற்பெயர்: வா.மு.சேது-ராமன்). சென்னை 600 111: கவி அரசன் பதிப்பகம், திருவள்ளுவர் இல்லம், 12, சாயி நகர் இணைப்பு, ஐயப்பா நகர், 1வது பதிப்பு, 1983. (சென்னை 14: அன்னை அஞ்சுகம் அச்சகம்).

*140 பக்கம், விலை: இந்திய ரூபா 11., அளவு: 18x12.5 சமீ.*

ஓரங்க நாட்டிய நூல். தமிழீழம் வேண்டிப் போராடும் விடுதலைப் போராளிகள் மீதும், அப்பாவிப் பொதுமக்கள் மீதும், தமிழ்மொழி பேசுவதே குற்றம் என்று கருதும் சிங்கள வெறியர்கள் நடத்திய படுகொலைகளின் கோரத்தை உள்வாங்கி, அக்கொடுமைகள் பற்றிப் பாடப்பட்ட காவியமாக இது மலர்ந்துள்ளது. கிருஷ்ணா சீனிவாசன் அவர்களால் இக்காவியம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்-பட்டுள்ளது. உலகெங்கும் ஈழத்தமிழரின் இன்னலை எடுத்துக்கூறும் நோக்குடன் இக்காவியம் படைக்கப்பட்டுள்ளதாக இந்நூலாசிரியர் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

### 3996

**தமிழ் நாடகம் - சில ஆளுமைகள்.** சி.அண்ணாமலை. சென்னை 600 014: The Parkar, 293, Ahamed Complex, 2nd Floor, Royapettah High Road, Royapettah, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (சென்னை 600 014: The Parkar, 293, Ahamed Complex, 2nd Floor, Royapettah High Road).

*127 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ.*

நவீன நாடகத்துறையில் இன்றுவரை முன்னோடிகளாகத் திகழும் 15 கலைஞர்கள் பற்றியும் அவர்களின் அரங்கியல் பணிகள் மற்றும் கருத்தியல்கள் பற்றியும் தனித்தனி இயல்களில் விளக்கும் இந்நூலில் தமிழக ஈழத்துக் கலைஞர்கள் பலரும் இடம்பெற்றுள்ளனர். ஈழத்து நவீன அரங்கியல் முன்னோடிகளாக நூலாசிரியர் இனம்கண்ட பாலேந்திரா (லண்டன்), மௌனகுரு (கிழக்குப் பல்கலைக்கழகம்), தாசீசியஸ் (லண்டன்), சிதம்பரநாதன் (யாழ்ப்பாணம்), ஆகியோர் பற்றிய தனி இயல்கள் இந்நூலில் காணப்படுகின்றன. தமிழக அரங்கியலாளர்களாக பிரளயன், நாடகப் பேராசிரியர் சே.இராமானு-ஜம், நாடகவெளி ரெங்கராஜன், ந.முத்துசாமி, வேலு சரவணன், கே.ஏ.குணசேகரன், கே.எஸ்.ராஜேந்திரன், கருஞ்சுழி வ.ஆறுமுகம், மு.இராமசுவாமி ஆகியோரும் இந்நூலில் இனம்காணப்பட்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



**3997**

**தமிழீழமும் தங்க வங்கமும்: இந்தியாவின் இரட்டை அணுகுமுறை.** *பழ.நெடுமாறன். சென்னை 600004: தமிழ்க்குலம் பதிப்பாலயம், 17/1, நரசிம்மபுரம், மயிலை, 1வது பதிப்பு, அக்டோபர் 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*112 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5X14 சமீ.*

வங்கதேச விடுதலைப்போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் பலவகையிலும் ஒத்திருக்கின்றன. வங்க மக்களும் ஈழத் தமிழ் மக்களும் மொழித் திணிப்பு. இனப்படுகொலை, பொருளாதாரச் சுரண்டல், இராணுவ ஒடுக்குமுறை. அகதிகளாக இந்தியாவிற்கு ஓடிவருதல் போன்ற பல பிரச்சினைகளில் ஒரே மாதிரியான ஒடுக்குமுறைகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளானார்கள். ஆனாலும் வங்கமக்கள் மீது காட்டப்பட்ட அனுதாபமும், ஆதரவும் ஈழத்தமிழர்கள் மீது காட்டப்படாதது ஏன் என்ற கேள்விக்கு இந்நூல் விரிவான காரணங்களைத் தேடுகின்றது.

**3998**

**தனிநாயகம் அடிகளார்.** *அமுதன் அடிகள். சென்னை 600113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ (அஞ்சல்), தரமணி, 1வது பதிப்பு, ஜுலை 1993, (சென்னை 600041: கவின்கலை அச்சகம்)*

xxxiv, *224 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21X14 சமீ.*

உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தியும், Tamil Culture என்ற ஆங்கில இதழை வெளியிட்டும், பாரெங்கும் சுற்றித் தமிழ் பரப்பியும் தமிழ்த் தொண்டாற்றிய தகைசால் பெருந்தலைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கையையும், அவர் ஆற்றிய தொண்டினையும் தமிழுலகம் நன்கறியும் பொருட்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியினை முழுமையாகத் தொகுத்து, நேர்நின்று, ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகி மிகத் தெளிவாகத் தேவையான விளக்கங்களுடன் நூலை ஆசிரியர் படைத்திருக்கின்றார். அடிகளாரின் தமிழ்ப்பணி வரலாற்றோடு உலகத் தமிழ் மாநாடுகளின் வரலாறும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதையும் சிறப்பாக இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. கத்தோலிக்க சமயகுருவான இந்நூலாசிரியர் அமுதன் அடிகளார் தமிழகத்தின் புன்னைக் காயல்



படிப்பகம்

www.padippakam.com



பிரதேசத்தில் 1943இல் பிறந்தவர். வேளாங்கண்ணிக் குரலொலி என்ற பெயரில் சஞ்சிகையொன்றின் ஆசிரியராக 1977-1987 காலகட்டத்தில் பணியாற்றியவர்.

### 3999

**தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள்.** ம.செ.இரபிசிங். சென்னை 600113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், C.I.T. வளாகம், தரமணி, 1வது பதிப்பு, 1999. (சென்னை 600014: பாவை பிரின்டர்ஸ், 142, ஜே.ஜே.கே. சாலை, இராயப்பேட்டை)

(8), 91 பக்கம், விலை: இந்திய ரூபா 22., அளவு: 21x13.5 சமீ.

தவத்திரு தனிநாயகம் அடிகள் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தையும் உருவாக்கியவர்களுள் ஒருவர். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமைமிக்க தனிநாயகம் அடிகள் பன்மொழிப் புலவராவார். இவரது ஆய்வுப் பணிகள் பற்றி முனைவர் ம.செ.இரபிசிங் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது.

### 4000

**தீக்குள் விரலை வைத்தேன்.** சி.மகேந்திரன். சென்னை 600017: ராஜராஜன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை 600021: சக்தி பிரின்டர்ஸ்).

335 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21.5x14 சமீ.

தமிழகத்தின் முற்போக்கு இலக்கிய இதழான தாமரையின் பொறுப்பாசிரியரான சி.மகேந்திரன் அவர்கள் தனது இலங்கைக்கான இலக்கியப் பயணத்தை கட்டுரையுருவில் புதிய பார்வை இதழில் தொடராக வெளியிட்டுவந்தார். அதன் நூலுருவாக்கமே இதுவாகும். இலக்கியப் பயணத்திற்கு அப்பால் தான் கண்டு கேட்டு வாசித்தறிந்ததுடன் அவர்களுடன் உறவாடிப் பெற்ற ஈழத்தமிழ் மக்களின் போராட்ட வாழ்வியல் சூழலை இதயசுத்தியுடன் உணர்வுபூர்வமாகத் தந்துள்ளார். ஈழத்தமிழரின் இன்னல்கள் பற்றிய தேடல்கொண்ட தமிழகத்தவரின் தரிசனத்தை இந்நூல் மாற்றும் வலிமைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com



# பின்னிணைப்பு

**இப்பிரிவில் உள்ள நூல்கள் ஏற்கெனவே நூல்தேட்டம் முன்னைய தொகுதிகளில் பதியப்பெற்றவை. மூலநூற்பதிவிற்குப் பின்னர் வெளியாகிய திருத்திய பதிப்புக்களை ஆவணப்படுத்தும் நோக்கில் இத்தொகுதியின் கீழுள்ள நூல்கள் இடம்பெறுகின்றன. அடைப்புக்குறிக்குள் இந்நூல்களுக்கான நூல்தேட்டத்தின் முன்னைய பதிவிலக்கங்கள் தரப்பட்டுள்ளன.**

## 01

**அக்கினிக் கரங்கள்.** நாவண்ணன். மன்னார்: ஸ்ரீனா வெளியீட்டகம், *89, புனித செபஸ்தியார் வீதி, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, ஐப்பசி 1995. (மன்னார்: ஸ்கை அச்சகம்)*

*(vi), 149 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.*

*1987ம் ஆண்டு ஒக்டோபர் 21ம், 22ம் திகதிகளில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் இந்திய அமைதிகாக்கும் படையினர் புகுந்து புரிந்த படுகொலைகளை மையமாக வைத்து இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. இரத்த வங்கிப்பிரிவில் பணியாற்றிய தாதி ஒருவரினதும், அந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிய வைத்தியர், தாதியர், சிற்றூழியர், நோயாளர் ஆகியோரின் நேரடி அனுபவங்களைக் கொண்டும் காங்கேசன்துறையில் வாழ்ந்து இடம்பெயர்ந்த ஆசிரியர் பெற்ற அனுபவங்களும் அக்கினிக்கரங்களின் கதையாகின்றது. இந்நூலின் முதற் பதிப்பு ஒக்டோபர் 1995இல் வெளியிடப்பட்ட கையோடு வலிகாமத்தில் பாரிய புலப்பெயர்வு நிகழ்ந்தமையால், முதற்பதிப்பு திருப்திகரமான முறையில் விநியோகிக்கப்படவில்லை. இந்நிலையில், மேற்படி அக்கினிக் கரங்கள் கதையுடன், நினைவாலயம், அருட்திரு நேசன் அடிகளார் அவர்களின் துன்பியல் அனுபவங்கள் ஆகியன இந்தப் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1703)*



படிப்பகம்

www.padippakam.com



## 02

**அரசறிவியல் மூலதத்துவங்கள்.** அம்பலவாணர் சிவராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 4வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, 1987. (சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி).

(10), 160 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22X14 சமீ., ISBN: 955-9429-70-1

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும், பல்கலைக்கழக 1வது வருட மாணவருக்கும் விஷேடமாக உதவும் பொருட்டு தயாரிக்கப்பட்ட நூல். அரசின் தோற்றம், தன்மை, தேவை முதல், இன்றைய அரசின் அரசியல் போக்கின் முக்கிய அம்சங்களான கட்சிகள், அமுக்கக் குழுக்கள் (Preasure Groups), சமஷ்டி ஒழுங்கு முறைகள், அதிகார வேறாக்கம், போன்ற பண்புகள் ஈறாக, அரசியல் மூலதத்துவக் கொள்கைகளைச் சுருக்கமாகவும், கருத்துக் குழைவு ஏற்படாவண்ணமும் தொகுத்துத் தந்துள்ளார். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1181)

## 03

**இலங்கை அரசியல்.** அம்பலவாணர் சிவராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 6வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, 1980, 2வது பதிப்பு, 1986, 3வது பதிப்பு, 1989, 4வது பதிப்பு, 1994, 5வது பதிப்பு, 2002, (கொழும்பு 12: குமரன் அச்சகம், 361, 1/2, டாம் வீதி).

xvi, 267 பக்கம், விலை: ரூபா 295., அளவு: 21.5X14.5 சமீ., ISBN: 955 9429 17 5.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைப் பின்நோக்கிப் பார்த்து ஒரு மதிப்பீட்டைச் செய்ய முனையும் முயற்சி. இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்நூலின் முதற்பகுதியில் யாப்பு வளர்ச்சியையும் மாற்றங்களையும் குறிப்பிடும் ஆசிரியர் இரண்டாவது பகுதியில் நடைமுறை அரசியல் பற்றிக்கூறுகின்றார். அரசறிவியல்துறைப் பேராசிரியரான அ.சிவராஜா தனது முதுமாணிப் பட்டப்படிப்பை கனடாவிலுள்ள நியு பிரான்ஸ்விக் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்ட ஆய்வை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டவர். தற்போது பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் தலைவராகப்



படிப்பகம்

www.padippakam.com



பணியாற்றுகின்றார். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1187)

## 04

**இளமைக் கோலங்கள்.** சுதாராஜ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600 005: எம்.கே.எண்டர்பிரைசஸ்.)

iv, 180 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18x12 சமீ,

1970களில் எழுத்துலகிற்குள் நுழைந்தவர் சுதாராஜ். இவரது கதைகள் சில ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இலங்கை சாகித்திய மண்டலம், சபாஷ் இலக்கிய வட்டம், விபவி கலாச்சார மையம், ஆனந்த விகடன் வைரவிழாப் போட்டியில் முதற் பரிசு எனக் கௌரவம் பெற்றவர். உத்தியோக நிமித்தம் கொழும்புக்கு வந்து பல பிரச்சினைகளுடனும் மனப்போராட்டங்களுடனும் சீவியம் நடத்தும் இளம்உள்ளங்களின் கதை. சுதாராஜின் முதலாவது நாவலான இது வீரகேசரி பிரசுரமாக முதற்பதிப்பு 1981இல் வெளிவந்தது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 626)

## 05

**எழுத்தாளர்.** வி.கந்தவனம். சென்னை 600002: காந்தளகம், 68 (834) அண்ணாசாலை, மவுண்ட் ரோட், 2வது பதிப்பு, டிசம்பர் 2005, 1வது பதிப்பு, ஜுலை 1995. (சென்னை 600002: காந்தளகம், 68 (834) அண்ணாசாலை).

80 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 81-89708-02-3.

வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் (ஜேர்மனி) அவர்களின் நவீன ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்நூல் முன்னதாக லண்டன் ஈழகேசரியில் 1994இல் தொடர் கட்டுரையாக பிரசுரமாகியிருந்தது. புலம்பெயர்ந்து வாழும் படைப்பாளிகளுக்குப் பயன்படும் பல்வேறு தகவல்கள் இத்தொடரின் 30 கட்டுரைகளிலும் இடம்பெற்றிருந்தன. அனைத்தும் பேசுபொருளை எளிய தமிழ்நடையில் சுருக்கமாகச் சொல்கின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 815)



படிப்பகம்

www.padippakam.com



## 06

**காட்டாறு.** செங்கை ஆழியான். (இயற்பெயர்: க.குணராசா). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெ.160, 1வது பதிப்பு, பெப்ரவரி 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி)

(12), 244 பக்கம், விலை: ரூபா 4.90., அளவு: 18X13 சமீ.

வீரகேசரியின் சிறந்த நாவலுக்கான பரிசில், இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசில், இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில் போன்றவற்றைப் பெற்றுக்கொண்ட நாவல். பல்வேறு விதங்களில் சுரண்டலுக்கும் பாதிப்புக்கும் உள்ளான மக்கள் தமக்கிழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்குணம் கொள்வது சமூக விழிப்புடனும் கலையழகுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளது. விவசாயக் கிராமமான கடலாஞ்சியில் நிகழும் சமுதாயச் சுரண்டல்களும் அவற்றிற்கெதிராக நிகழும் எழுச்சியுணர்வுமே இந்நாவலின் கதையம்சமாகும். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 650)

## 07

**குருதி மலை.** தி.ஞானசேகரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (Madras 94: Script Offset)

xvi, 320 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 17.5X12.5 சமீ.

ஈழத்தமிழரின் ஒரு முக்கிய சமூகப்பிரிவினரான மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் பௌத்த சிங்கள பேரினவாதச் சூழலில் தம் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காகத் தற்காப்புப் போராட்டத்தை நிகழ்த்திவருபவர்களின் வரலாற்றின் ஒரு காலகட்டம் இந்த நாவலின் மூலம் எமது காட்சிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. தமிழகத்தில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம்.ஏ.வகுப்புக்குப் பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கொடகே நிறுவனத்தினரால் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. தமிழகத்திலும் இலங்கையிலும் மூன்று பதிப்புகளைக் கண்டது. மணிமேகலைப் பிரசுரத்தின் முதற் பதிப்பாக 2005இல் வெளியிடப்படுகின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 657)



படிப்பகம்

www.padippakam.com



## 08

**கொடுத்தல்.** சுதாராஜ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால்பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆர்ட்ஸ்).

184 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12.5 சமீ.

ஈழத்து எழுத்தாளர்களிடையே எண்பதுகளில் கவனஈர்ப்பைப் பெற்றவர்களுள் சுதாராஜ் முக்கியமான ஒருவர். சுதாராஜின் கதைகள் சமூகப் பிரச்சினை கனத்த கதைகள். அறைக்கு வாடகைப்பணம் கொடுக்க முடியாது ஒளித்து விளையாடும் கிளறிக்கல் உத்தியோகத்தன், பட்டப்படிப்புப் படித்துவிட்டு மவுசுள்ள மணமகனுக்குக் காத்திருக்கும் கமலம், தொழிற்சாலையில் முதுகெலும்பாய் உழைத்த பியரத்னவை ஈவிரக்கமின்றி வேலையிலிருந்து நீக்கும் அதிகாரி, உணவுச்சாலையில் விசுவாசமாக வேலை செய்தும், தனது பிள்ளைக்கு நான்கு வடை கொண்டுபோக முடியாமல் ஏங்கும் சர்வர் வைத்தி என்று பலரையும் சுதாராஜின் கதைகளில் தரிசிக்கலாம். ஈழத்துத் தமிழ்ச்சஞ்சிகைகளில் வெளியான ஆசிரியரின் பன்னிரு கதைகளின் தொகுப்பு இதுவாகும். 1வது பதிப்பு, ஜுன் 1983இல் யாழ்ப்பாணம் சிரித்திரன் வெளியீடாக வெளிவந்தபோதும் மீண்டும் மணிமேகலைப் பிரசுரத்தின் முதற்பதிப்பாக வெளிவருகின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 555).

## 09

**கோதம புத்தர்.** ஆனந்த குமாரஸ்வாமி, ஐ.பி.ஹார்னர் (மூல ஆசிரியர்கள்), த.நா.குமாரஸ்வாமி (தமிழாக்கம்). புதுடில்லி 600 013: நேஷனல் புக் ட்ரஸ்ட், 23, நைஜமுத்தீன் ஈஸ்ட், 1வது பதிப்பு, டிசம்பர் 1967. (Madras: Janatha Printing and Publishing Co).

(8), 275 பக்கம், விலை: இந்திய ரூபா 6.00, அளவு: 20.5x14 சமீ.

கோதம புத்தரின் சுயசரிதைப் பகுதி, பயிற்சி பற்றிய உரைகள், பிறருடனான தொடர்பு, பரிணாமம் (மாறுதல்), தர்மோபதேசம் (அறவுரைகள்), அகோசரம் (அறிவுக்கு அப்பாலான நிலை) ஆகிய ஆறு தலைப்புக்களில் புத்தபகவானையும் அவரது போதனைகளையும் இலகு தமிழில் அறியவைக்கும் நூல். (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2103)



படிப்பகம்

www.padippakam.com



## 10

**செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் (பாகம் 1).** க.சி.குலரத்தினம். லண்டன்: E7 8PQ: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15 ருத்லண்ட் வீதி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2005, 1வது பதிப்பு, அக்டோபர் 1989. (சென்னை 600094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராட்டிரா நகர், 7ம் தெரு, சூளைமேடு).

221 பக்கம், விலை: இந்திய ரூபா 70., இலங்கையில் ரூபா 150., அளவு: 21X14 சமீ.

தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலமாகத் திகழ்கின்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழநாட்டுப் புலவர்களின் ஆக்கங்களில் காணப்படும் சிறப்புகளைத் தமக்கேயுரிய முறையில் ஆசிரியர் தந்துள்ளார். புலமையாழம் பொருந்திய ஈழத்துத் தமிழ்ப்புலவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியன. இத்தகைய சிறப்புமிக்க ஈழத்தவர்கள் பதினெண்மரின் பணிகள்பற்றி, எம்மவரால் மறக்கப்பட்ட அவர்களின் வாழ்வுபற்றி தேடித்தொகுத்த தகவல்கள் இந்நூலில் கோர்க்கப்பட்டுள்ளன. சேனாதிராய முதலியார், முத்துக்குமார கவிராயர், சைமன் காசிச்செட்டி, அருணாசலம் சுவாமிநாதர், அருணாசலம் சதாசிவம்பிள்ளை, ஹென்றி மார்ட்டின், விசுவநாதச் சட்டம்பியார், கறோல் விசுவநாதம்பிள்ளை, வல்வெட்டி குமாரசுவாமி முதலியார், நெவின்ஸ் சிதம்பரபிள்ளை, ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை, நட்டுவச் சுப்பையனார், மொட்டை வேலாப்போடியார், வே.அகிலேசபிள்ளை, குமாரகுலசிங்க முதலியார், கனகசபைப் புலவர், வைமன் கதிரைவேற்பிள்ளை, சிவசம்புப்புலவர், ஆகிய பதினெண்மரின் வாழ்வும் தமிழ்ப்பணிகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 912)

## 11

**டொமினிக் ஜீவா சிறுகதைகள்.** டொமினிக் ஜீவா. கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 2வது பதிப்பு, மார்ச் 2004, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

(8), 392 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5X15 சமீ.

மல்லிகை ஜீவாவின் 70வது அகவைநிறைவை முன்னிட்டு 27.6.1996இல் அவரது படைப்புக்களில் தேர்ந்தெடுத்து அவரால்



படிப்பகம்

www.padippakam.com



தொகுக்கப்பட்ட 50 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. டொமினிக் ஜீவா 1960ம் ஆண்டுக்கான இலங்கை சாஹித்திய மண்டல ஆக்க இலக்கியப் பரிசை முதன்முதலாகப் பெற்றுக்கொண்டவர். தொடர்ந்து 40 ஆண்டுகளுக்கும் மேலாக மல்லிகை என்ற சஞ்சிகையை நடத்தி வருகின்றார். இதன்மூலம் பல புதிய எழுத்தாளர்களை இனம்கண்டு ஈழத்து இலக்கியத்துறைக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இவரது பல கதைகள் ரஷ்ய, செக், ஆங்கில, சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுமுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 559).

## 12

**தமிழ் ஓலைகள் 2006.** தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன், ஏ.திருலிங்கநாதன், (தொகுப்பாசிரியர்கள்). இலண்டன்: British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF, 13வது பதிப்பு, 2006, முதற் பதிப்பு 1994 (இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

768 பக்கம், வண்ணப்படங்கள், விலை: இலவசம், அளவு: 21X14.5 சமீ., ISSN 1477-1179.

1994 முதல் ஆண்டு இதழாக வெளிவரும் பிரித்தானிய, ஐரோப்பிய வர்த்தக வழிகாட்டியின் 2005வது ஆண்டுக்கான பதின்மூன்றாவது பதிப்பு. டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய ஐரோப்பிய தமிழர் நிறுவனங்களின் விபரங்கள் சிலவும் 653 முதல் 728 ஆம் பக்கங்கள் வரையில் ஐரோப்பிய பக்கங்கள் என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவு இலக்கம் 13, 1025)

## 13

**தெரியாத பக்கங்கள்.** சுதாராஜ் (இயற்பெயர்: சிவசாமி இராஜசிங்கம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆர்ட்ஸ்).

196 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 17.5X12.5 சமீ.

1971இல் எழுத்துலகில் நுழைந்த சுதாராஜ் இளமைக்கோலங்கள் என்ற நாவலையும் பலாத்காரம், கொடுத்தல், ஒருநாளில் மறைந்த இரு மாலைப்பொழுதுகள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும்



படிப்பகம்

www.padippakam.com



வெளியிட்டுள்ளார். கொடுத்தல் சிறுகதைத் தொகுதி இலங்கையின் விபவி கலாசார மையத்தினால் சிறந்த சிறுகதை நூலுக்கான விருதினைப்பெற்றது. சுதாராஜ் ஆனந்தவிகடன் வைரவிழாப் போட்டியில் பரிசும், இந்துசமய கலாசார அமைச்சினால் இலக்கிய வித்தகர் பட்டமும் பெற்றவர். இவரது 11 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. இவர் தனது கதைகளினூடாக மானிடநேயம் ஒன்றினை மையமாகக் கொண்டு, சிக்கலற்ற சமூக வாழ்க்கையுணர்வுகளைச் சித்திரித்துள்ளார். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவு இலக்கம் 1642)

## 14

**தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு.** *ப.புஷ்பரட்ணம். யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம், புத்தூர் கிழக்கு, 2வது பதிப்பு, ஜுலை 2003, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (சென்னை 600035: தமிழ்நிலம், 7, முதலாவது மாடி, 33, வெங்கட நாராயணன் சாலை, நந்தனம்).*

*xvi, 240 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 சமீ.*

தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூலில் இலங்கைத் தமிழர்களின் பூர்வீக வரலாறு, பண்பாடு, தொடர்பாக இதுவரை கூறப்படாத புதிய கருத்துக்கள் சான்றாதாரங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழ், சிங்களப் பண்பாடு இந்தியாவின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்தாலும் அவற்றிடையே பிரதேசரீதியான தனித்துவம், ஒருமைப்பாடு என்பன பண்டுதொட்டே இருந்துவந்துள்ளதையும், இலங்கையிலேயே உருவான சுதேச தமிழ் அரசமரபிலிருந்து வந்தவர்களே பண்டைய காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் என்பதைத் தக்க சான்றுகளுக்கூடாக இந்நூல் விபரிக்கின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1981)

## 15

**பாவலர் சரித்திர தீபகம். பகுதி 1.** *அ.சதாசிவம்பிள்ளை (மூல ஆசிரியர்), பொ.பூலோகசிங்கம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 7, 57ம் ஒழுங்கை, மீள் பதிப்பு, தை 1975, 1வது பதிப்பு, 1886. (கொழும்பு 13: ரெயின்போ அச்சகம், 231 ஆதிருப்பள்ளித் தெரு).*

www.padippakam.com



xxviii, 240 பக்கம், விலை: குறிப்படப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழாசிரியரும் உதயதாரகை பத்திரிகையாசிரியருமான J.R.Arnold என்ற அர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்று The Galaxy of Tamils Poets என்ற ஆங்கில மாற்றுத் தலைப்புடன் 1886இல் மானிப்பாய் Strong & Asbury Printers அச்சகத்தினரால் அச்சிடப்பெற்ற மூலநூலை 1975இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி பொ.பூலோகசிங்கம் அவர்கள் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பித்திருந்தார். தமிழ் வளர்த்த பாவலர்கள் 87 பேரின் வாழ்வும் பணியும் சுருக்கமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2894)

## 16

**புலமைப் பரிசில் புலமைத் தீபம்.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 2வது பதிப்பு, நவம்பர் 2005. 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (Kandy: Creative Printers & Designers, No.3/ a Bahiravakanda Road).

252 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 28x21 சமீ., ISBN: 955-8913-17-0.

சிந்தனை வட்டத்தின் 211வது வெளியீடு. 2006ம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 30 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. 2004, 2005 அரசாங்க வினாப்பத்திரங்களும் மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2020).

## 17

**முரசம் 2006: பிரித்தானிய தமிழர் தகவல் ஏடு.** இலண்டன் CR4 2WW: பிரித்தானிய தமிழ் ஒன்றியம், தபால் பெட்டி இல. 2803, மிச்செம், 4வது பதிப்பு, 2005. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்சம்).

544 பக்கம், வண்ணத்தகடுகள், விலை: இலவசம், அளவு: 23.5x16 சமீ.



படிப்பகம்

www.padippakam.com



பிரித்தானியாவில் வெளியாகும் வர்த்தக வழிகாட்டி. பயனுள்ள பிரித்தானிய தொலைபேசி இலக்கங்கள், மற்றும் பல்வேறு உசாத்துணைத் தகவல்களுடன் 2002 முதல் ஆண்டுதோறும் வெளிவரும் வழிகாட்டி. வர்த்தகத் துறைகள் அகரவரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. புகலிடத்தில் குறுகிய காலத்தில் தொழில், வர்த்தகம், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, மருத்துவம், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்மக்கள் காட்டிவருகின்ற ஈடுபாடும், கடின உழைப்பும் திறமையும் வெற்றியும் ஒவ்வொரு பக்கங்களிலும் விரவிக்கிடக்கின்றன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1028).

## 18

**மோகவாசல்.** ரஞ்சகுமார். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1, தாயார் சாகிப் 2வது சந்து, 1வது பதிப்பு, ஏப்ரல் 1995. (சென்னை 41: சூர்யா அச்சகம்).

132 பக்கம், விலை: இந்திய ரூபா 24., அளவு: 18X12 சமீ.

1989இல் முதற்பதிப்பை இலங்கையில் கண்ட மோகவாசல் சிறுகதைத் தொகுப்பு மீண்டும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் விமர்சனக் குறிப்புடன் தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சுருக்கும் ஊஞ்சலும், கபரக்கொயாக்கள், காலம் உனக்கொரு பாட்டெழுதும், கோசலை, அரசி, கோளறு பதிகம், மோகவாசல் ஆகிய ஏழு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 598).

## 19

**வாடைக்காற்று.** செங்கை ஆழியான். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, த.பெ.இலக்கம் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1973. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி)

(4), 135 பக்கம், விலை: ரூபா 2.60, அளவு: 17X12 சமீ.

நெடுந்தீவு மீனவ சமூகத்தின் வாழ்க்கைமுறையைப் பகைப்புலமாகக் கொண்ட நாவல். மீனவ மக்களின் சொற்களையும், நெடுந்தீவு மக்களின் பிரதேசச் சொற்களையும் மீன்பிடித்தொழிலின் நுணுக்கங்களையும் ஆசிரியர் கலை அழகோடு சித்திரித்துள்ளார். வாடைக்காற்று பெயர்ந்ததும் பேசாலை கரையூர்ப்பகுதிகளிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com



மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்கரைக்கு மீன்பிடிக்க இடம்பெயர்ந்து வருகின்றார்கள். அக்காலத்தில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து கூழைக்கடா (பெலிக்கன்) பறவைகளும் அங்கே வருகின்றன. வாடைக்காற்றோடு இத்தீவுக்கு வரும் கூழைக்கடாக்கள் கதையோடு உருவகப்படுத்தப்படுகின்றன. மிகுந்த சர்ச்சைக்குரிய நூலாகவும், மூன்று மாதங்களுக்குள் முதற்பதிப்பின் முழுப் பிரதிகளும் (7000 பிரதிகள்) விற்பனையான நூலாகவும் அமைந்த நாவல். முதற்பதிப்பு வீரகேசரி பிரசுரமாக 1973இல் வெளியிடப்பட்டது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1758).

## 20

**விமோசனம் நாளை.** முல்லை அமுதன். திருப்பூர் 641 602: கனவு, 8/707 C, பாண்டியன் நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1995. (வாணியம்பாடி: கன்கார்டியா அச்சகம்).

123 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5X12.5 சமீ.

இலங்கையில் சமகாலத்து இனப்பிரச்சினைகளின் பகைப்புலத்தில் இணைந்து செல்லும் ஒரு சாமானியனின் கதை. முல்லை அமுதனின் எட்டாவது நூல் இதுவாகும். இந்நாவலின் இரண்டாவது பதிப்பு 2000இல் மணிமேகலை பிரசுரமாக வெளிவந்தது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 728).

## 21

**ஷாமிலாவின் இதயராகம்.** ஜெக்கியா ஜுனைதீன். தெகிவளை: ஷாமிலா பதிப்பகம், 21/2 சீ, மயூரா மாவத்தை, நதிமல, 4வது பதிப்பு, ஜனவரி 2000. 1வது பதிப்பு, மே 1989, 2வது பதிப்பு, ஒகஸ்ட் 1989, 3வது பதிப்பு, ஒகஸ்ட் 1997. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்டர்ஸ், 44 ஸ்டேஷன் வீதி).

xxiv, 159 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21X14 சமீ.

அண்மைக்காலங்களில் வெளிவந்த தமிழ் நாவல்களுள் குறுகிய காலத்துக்குள் நான்கு பதிப்புகளைக்கண்டு வாசகர் மத்தியில் ஜனரஞ்சகத் தன்மைபெற்ற நாவல் இது. 1980களில் “சிந்தாமணி”யில் தொடர்கதையாக வெளிவந்தது. சமூகத்தில் புரையோடியுள்ள பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளையும் அதனால் தோன்றும் விளைவுகளையும், விபரீதங்களையும் இந்நாவல் சித்திரிக்கின்றது. ஷாமிலாவின் இதயத்தில் புரையோடியிருந்த இந்த உணர்வுகளே



படிப்பகம்

www.padippakam.com



இறுதிவரை கதாபாத்திரங்களை நகர்த்திச் செல்கின்றன. இந்த நாவல் இலங்கையின் வரலாற்றில் முதல் முழுநீள வர்ணத் தமிழ்த் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## நான்காம் தொகுதி முற்றிற்று



படிப்பகம்

www.padippakam.com



# தலைப்பு வழிகாட்டி


அக்கரைகள் பச்சையில்லை 3652

அக்கரைப்பற்று வரலாறு 3978

அக்கினி 3653

அக்கினிக் கரங்கள் A01

அகதி அரிசி 3548

அகநானூறு 3384

அகலிகை 3736

அகஸ்தியர் என்ற எங்கள் பப்பா பார்க்க எஸ்.அகஸ்தியர். 1926-1995.

அங்கே இப்ப என்ன நேரம்? 3737

அங்கையன் கவிதைகள் 3390

அச்சுக்கு வராத கவிதைகள் 3391

அச்சுத்தாளின் ஊடாக ஓர் அநுபவப் பயணம். 3037

அசோக வனம் 3654

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 1: கிமு-கிபி. 3979

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 3: சுதேசத் தலைமைகள். 3980

அடிப்படை அரசியற் கோட்பாடுகள் 3181

அடிப்படை கர்னாடக இசையியல் 3336

அடிவாரம் 3655

அடையாளம் 3392

அண்மைக்கால அறுவடைகள் 3738

அணில் வால் 3362

அதிகாரப் பகிர்வு லோசனைகளும், முஸ்லீம்கள் அதிகப்படியான மாநில சபை ஒன்றின் அவசியமும் 3182

அதிர்ஷ்ட எண் ஜோதிடம் 3989

அதிர்ஷ்ட வழிகாட்டி 3058

அந்த அழகான பூனை 3363

அந்த ஆவணி ஆறு 3549

அந்தக் காலத்து யாழ்ப்பாணம் 3965

அந்தச் 'சிரிப்பு 3537

அந்தரங்க கீதம் 3656

அந்தரிக்கும் ஆன்மா 3393

அநு. வை.நாவின் ஒரு காலத்துச் சிறுகதைகள் 3550

அப்பையா 3538

அபத்த நாடகம் 3520

அபலையின் கடிதம் 3836

அபிராமி அந்தாதி: விளக்க உரையுடன் 3089

அபிராமிப் பட்டரின் ஸ்ரீ அபிராமி அந்தாதி: மூலமும் உரையும் 3090

அம்பி : வாழ்வும் பணியும் 3918

அம்மா 3394

அம்மா: கவிதைகள் 3395

அமர்தல் அலைதல் 3990

அமுத கங்கை: கவிதைகள் சிறுகதைகள் 3802

அர்ச்சுனன் தபசு 3284




படிப்பகம்

www.padippakam.com




அரங்கக் கலைஞர் ஐவர் 3915

அரச அறிவியல்: முதலாம் பகுதி 3183

அரச பயங்கரவாத விமானக் குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு: பாதுகாப்புக் கையேடு 3232

அரசறிவியல் மூலதத்துவங்கள் A02

அரசறிவியல் மூலதத்துவங்கள்: பரீட்சை மாதிரி வினாவிடை 1998. 3184

அரசறிவியல் மூலதத்துவங்கள்: பல்தேர்வு மாதிரி வினாவிடைத் தொகுதி 1. 3185

அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு. 3186

அருட்திரு சேவக். .ரி.இயேசுசகாயம் (சின்னண்ணன்) அவர்களின் வாழ்க்கையும் பணியும் 3858

அருணோதயம் 3249

அருளமுதம்: ஒரு ஆவணத் தொகுப்பு 3110

அல்லாமா இஃபாலின் இதயப் புதையல் 3831

அல்குர் ஆன் அல்ஹதீஸ் அடிப்படையில் (முத்)தலாக் பற்றி ஓர் ஆய்வு 3223

அல்குர் ஆன் கூறும் அழகிய உவமைகள் 3122

அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் 3551

அல்லாஹ் எங்கும் உள்ளானா? 3123

அலிமாராணி 3657

அலுவலக நிருவாகம்: பகுதி 1. 3225

அலையில் பூத்த மலர்கள் 3396

அவர்கள் மூன்று சிறுவர்கள் 3061

அவர்களுக்கு வயதுவந்துவிட்டது 3658

அவன் ஒருவனல்ல 3552

அவனுக்குத் தான் தெரியும் 3659

அவனும் அவளும் அவையும் 3397

அழகியலும் அறமும் 3047

அழியாத சுவடுகள் 3660

அழியும் கோலங்கள் 3553

அறிவாலயம்: திறப்பு விழாச் சிறப்பு மலர் 3016

அறிவியல் வளர்த்த முஸ்லீம்கள் (முதலாம் பாகம்). 3124

அறிவுரைக் கோவை- அறிவுரை மாலை- அறிவுக் கட்டுரைகள்- நூலகங்கள் 3803

அறிவுரைகள் 3048

அறிவொளி 3250

அறிவொளி: தரம் 4, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கானது 3001

அறுபத்து நான்கு கலைகளும் கலையாக்கத் திறன்களும் 3739

அன்புள்ள அப்பா 3364

அன்னை கதீஜா (ரலி). 3125

அனுபவம் பேசுகிறது: அமிர்தலிங்கம் 3869

அஸ்கிரிய முதல் லாஹூர் வரை 3347

ஆகாய கங்கை 3398

ஆச்சி: கவிதைத்தொகுப்பு 3399

ஆசான் க.சிவராமலிங்கம்: பவளவிழா மலர் 3890

ஆசிரிய சேவையும் ஆசிரியர் வாண்மையும் 3233

ஆசிரிய முகாமைத்துவம் 3234

ஆசிரியை ஆகினேன்: காவியம் 3539

ஆசையினாலே மனம்: உருவகக் கதைகள் 3365




படிப்பகம்

www.padippakam.com



ஆட்சி இயல் 3187

ஆடி மகிழ்வோம்: விளையாட்டு வழிகாட்டி 3382

ஆண்மரம் 3554

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா-விடைகள்: (தொகுதி 1-2) 3002-03

ஆத்ம ஞானிகளும் அறப்போராட்டங்களும் 3126

ஆத்ம பரவசங்கள் 3127

ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஞாபகார்த்தக் கட்டுரைமலர் 3111

ஆத்மா 3661

ஆதலினால் காதல் செய்வீர் 3335

ஆய்வரங்குக் கட்டுரைகள் 1997. 3091

ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு 3400

ஆயிரம் கொக்குகள் 3366

ஆர்.ஷண்முகசுந்தரத்தின் நாகம்மாள் நாவலும் விமர்சனங்களும் 3740

ஆரியர் தமிழர் கலப்பு-தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா?- ஆரியத்தால் விளைந்த கேடு- புரோகிதர் ஆட்சி- இராமாயணம் நடந்த கதையா- ஆரியர் வேதங்கள் 3804

ஆருக்குச் சொல்லி அழ 3741

ஆளடையாள அட்டையும் ஐந்து ரூபாயும் 3555

ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு (இரண்டு பாகங்களும்). 3092

ஆனந்தமே ஜீவனின் மகரந்தம் 3908

ஆனந்தன் கவிதைகள் 3401

இங்கேயும் மனிதர்கள் 3662

இசை நாடகக் கவிக்குயில் வி.கே.இரத்தினம் 3916

இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும் 3128

இடம் கொடுத்தல்: சுதந்திர செயற்பாடும் கல்விச் சமூக வெளிப்பாடும் 3343

இடுதிதீ: அக்கினிப் பிரவேசம்- ஒரு பன்முக நோக்கு 3742

இணைப்போம் கரங்கள்: அத்வலக் தனமு அப்பி 3402

இணையும் இரண்டு துருவங்கள் 3556

இதய ஒலி 3403

இதய பூமி 1. 3884

இதயக் கதவுகள் 3557

இதயங்கள் அழுகின்றன 3663

இதயத்தில் இணைந்த இரு மலர்கள் 3664

இதழியல் முன்னோடி எங்கள் பாரதியார் 3038

இதுதான் தவ்ஹீத் 3129

இதோபதேசக் கதைகள் 3049

இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் 3848

இந்திய திருத்தல யாத்திரை: கனடாவிலிருந்து காசி முதல் கன்னியாகுமரி வரை 3842

இந்து தீபம்: நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ் 3251

இந்து மதம் என்ன சொல்கிறது 3093

இந்து மதம் என்ன சொல்கிறது: பாகம் 2. 3094

இந்துக் கலைக்கொள்கை 3328

இந்துத்துவக்காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம் 3743



படிப்பகம்

www.padippakam.com



இயந்திர நண்டுகள் 3833
இயற்கை 3558
இயேசு கிறிஸ்துவும் மானிட விடுதலையும் 3062
இரக்ஷணிய மனோகரம்: செய்யுளும் உரையும் 3063
இரசிகமணி நினைவு மஞ்சரி 3919
இரட்சணிய யாத்திரீகம் இரட்சணிய சரிதப்படலம் சிலுவைப்பாடு 3064
இரண்டாவது சாதி 3665
இரத்தினம்: அருணாசலம் இரத்தினம் நினைவு வெளியீடு 3891
இரவில் நான் உன் குதிரை 3559
இரவின் முடிவு 3666
இரா.பத்மநாதன் நினைவுகளோடு 3852
இராபின்சன் குரூசோ: கலிவர் யாத்திரை: அகத்தியர் 3805
இரு முகம் 3667
இருட்டறையில் உலகம் 3668
இருட்டு ஒளி 3560
இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம் 3744
இருபதாம் நூற்றாண்டு ஓவியம் 3331
இருமை 3561
இருளைத் துளாவும் மின்மினிகள் 3404
இலக்கியச் சொல்லகராதி 3385
இலங்கை அரசியல் A03
இலங்கை அரசியலமைப்பும் தேர்தல் முறைசார் சீர்திருத்தங்களும் 3188
இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும் 3189
இலங்கை அரசியலில் மொழியும் மதமும் 3190
இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள் 3191
இலங்கை இனமுரண்பாடுகளின் வரலாறு: ஒரு ஆவணப் பதிவு 3961
இலங்கை எழுத்தாளர்களின் 26 சிறுகதைகள் 3562
இலங்கை கிராமத்து முஸ்லீம்களின் பழமொழிகள் 3293
இலங்கை தமிழ் இலக்கிய வரலாறு 3745
இலங்கை நாட்டுப்புறப் பாடல்கள் 3285
இலங்கை மீன்வளம்: பயன்படுத்தலும் அபிவிருத்தியும் 3219
இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு: மூன்றாம் பாகம் 3920
இலங்கை முஸ்லிம்களின் கல்வியும் அரசியலும் 3235
இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கலாநிதி K.M.H.காலிதீன் 3859
இலங்கைத் தமிழ்த் தேசியவாதம்: சில அவதானிப்புகள் 3192
இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்நாடக அரங்கம் 3344
இலங்கையில் அட்டூழியங்களை எதிர்த்துத் தொடரும் போராட்டங்கள் 3962
இலங்கையில் இந்துசமயம் 3095
இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம் 3991
இலங்கையில் தேர்தல்கள்: அன்றும் இன்றும் 3193



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் நூலகச் சட்டங்கள் 3017
இலங்கையில் மங்கையரும் ஆடவரும் 3180
இலங்கையில் முகாமைத்துவக் கல்வி 3236
இலங்கையில் விஸ்வகர்மா 3096
இலங்கையிற் கல்வி 3237
இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி 3194
இலங்கையின் இனமோதலும் சமாதானமும் 3963
இலங்கையின் கல்விச் செலவு 3238
இளங்கீரனின் இலக்கியப்பணி 3921
இளமைக் கோலங்கள் A04
இறப்பு என்பது முடிவு அல்ல 3922
இறைப் பணியாளர் பால்டேயசும் இலங்கைப் பணியும் 3860
இன்ப வானில்: அகத்துறைக் கவிதைகள் 3405
இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண்பாத்திரங்கள் 3746
இன்றைய உலகில் நாம் 3065
இன்னமும் வாழ்வேன் 3406
இன்னாசியார் காவியம் 3861
இன்னும் மனிதர்களாக 3407
இன்னொரு நாளில் உயிர்ப்பேன் 3408
இன்னொரு வெண்ணிரவு 3563
இனி வசந்த காலம் பார்க்க எஸ்.பி.கிருஷ்ணன் சிறுகதைகள்
இனிமைமிக்க ஸலவாத்துக்கள் 3130
இனியது இனியது இலங்கை 3992
இனியும் அடிமையல்ல 3066
இஸ்லாத்தின் பார்வையில் யார் குழப்பவாதிகள்? 3131
இஸ்லாம் ஓர் அறிமுகம் 3132
இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் 3133
இஸ்லாமிய அகீதா: ஒரு விளக்கம் 3134
இஸ்லாமிய உலகும் முஸ்லிம்களுக்கு எதிரான சர்வதேச சதித்திட்டங்களும் 3966
இஸ்லாமிய சட்டக்கலை: ஒரு வரலாற்று நோக்கு 3224
இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் 3747
இஸ்லாமிய நாகரீகம் 3135
இஸ்லாமிய நாகரீகம் வினா விடை 3136,3137
இஸ்லாமிய நீதிக்கதைகள் 3050
இஸ்லாமிய மறுமலர்ச்சி: ஒரு வரலாற்று நோக்கு 3138
இஸ்லாமும் குடும்பத் திட்டமும் 3139
இஸ்லாமும் சர்வமத கோட்பாடும் 3140
ஈழ எழுத்தாளர் புரட்சிபாலனின் புதுமைக்கதைகள் 3564
ஈழக்குயிலின் இதயத்தில் நீ 3409
ஈழகேசரித் தமிழ் 3748
ஈழத்து இலக்கிய தரிசனம் 3749
ஈழத்து இலக்கிய வளர்ச்சி 3750
ஈழத்து இலக்கியமும் வரலாறும் 3386
ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடி பாவலர் துரையப்பாபிள்ளை 3751
ஈழத்து மணி விளக்குகள் 3902
ஈழத்துக் கவிமலர்கள் 3410
ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் இவர்கள்: தொகுதி 1. 3923



படிப்பகம்

www.padippakam.com



ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாறு: ஓர் அறிமுகம் 3752
ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் 3411
ஈழநாட்டிலே தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் 3039
ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் 3924
ஈழராஜா எல்லாளன் 3669
உங்கள் சேகரின் கேள்வி-பதில்கள்: பாகம் 1. 3806
உங்களுக்குத் தெரியுமா?-பொது அறிவு – பொது அறிவு வினாவிடை – உலக அறிவியல் நூல் 3807
உங்களை நோக்கி 3051
உங்களோடு பேசுகிறார் உஸாமா பின் லாதின் 3195
உடல்நல வாழ்வுக்குரிய அறிவுச்சுடர் 3318
உணவுப் பொருள்களில் ஹாராமான கலப்படங்கள் 3141
உதயம் 3565
உதிர வேர்கள் 3566
உந்து சக்தி: விஞ்ஞான மன்ற சிறப்புமலர் 3252
உம்மாவுக்கு ஒரு சேலை 3567
உயர்கல்விச் சிந்தனையில் புதிய செல்நெறிகள் 3239
உயர்தர அரசியல் சிந்தனைகள் 3196
உயர்தர தாவரவியல்: முதற்பாகம் 3313
உயிர் ஒளி 2001: மாவீரர் அகவணக்க மலர் 3885
உயிர் காத்த ஓவியம்: சிறுவர் பாடல்கள் 3351
உயிர்த்தெழுகிற கவிதை 3412
உயிர்ப் பல்வகைமை: ஓர் அறிமுகம் 3311
உயிர்ப்பு 3568
உயிரலைகள்: 17வது ஆண்டு சிறப்பு மலர் 3226
உயிரைப் பிழியும் உண்மைகள் 3808
உயிரோடிருத்தல் 3413
உரசல் ஓசைகள் 3414
உலக அதிசயங்கள் 3379
உலக ஓவியர்களும் சிற்பிகளும் 3911
உலகங்கள் வெல்லப்படுகின்றன 3569
உலகச் சமயங்கள் 3380
உலகப் பேரொளி உத்தமர் காந்தி 3866
உலகம் யாவையும் 3753
உலகியல் விளக்கமும் நம்நாட்டின் நானிலக் காட்சிகளும் 3415
உலகை மேம்படுத்திய சிந்தனையாளர்கள் 3381
உள்ளக் கமலம் 3925
உறக்கந் தேடும் உலகிற்காய் 3416
உறவுக்கப்பால் 3670
உறவுகள் 3570
உறவுகள்: குறுநாவல் 3671
உனக்காகக் கண்ணே 3672
உனக்காகவே வாழ்கிறேன் 3673
உனக்குள்ளேயே உள்ளிருப்பு 3417
ஊடக இயல் கலைச்சொல் அகராதி 3040
ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம் 3041
ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 3082
எங்கள் உலகம் 3352
எங்கள் தலைவர் 3870



படிப்பகம்

www.padippakam.com



எங்கள் தலைவர் பதியுதீன் 3871
எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு 3674
எங்கே, மனக்கண்ணையும் திறவுங்கள் 3571
எண் ஜோதிடம் 3059
எண்ணத்தில் பூத்த வண்ண மலர்கள் 3418
எரிந்துகொண்டிருக்கும் நேரம் 3419
எருக்கலம்பிட்டி முஸ்லீம்கள்: வரலாறும் பாரம்பரியங்களும் (இரு பாகங்கள்) 3967, 3968
எழு குரல்கள் 3849
எழுத்தாளர் A05
என் அம்மாவின் கதை 3850
என் காதல் கிராமத்தின் சாளரம் 3420
என் சரிதம் 3862
என் தமிழ் 3809
என் தேசம் 3421
என் முதுமைத் திருமணக் கோலங்கள் 3675
எனக்காகப் பூக்கும் 3676
எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன் 3422
எனது பார்வை 3348
எனது வானொலி நாடகங்கள் 3521
எஸ்.அகஸ்தியர். 1926-1995. 3926
எஸ்.பொ: ஒரு பன்முகப் பார்வை 3927
எஸ்தாக்கியர் நாடகம் 3286
எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும் 3216
எஸ்.பி.கிருஷ்ணன் சிறுகதைகள்: இனி வசந்த காலம் 3572
எஸ்.வீ.தம்பையா: நினைவுமலர் 3928
ஏகலைவ பூமி 3423
ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும் பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும் 3197
ஏசு வரலாறு 3067
ஏழு நண்பர்கள் 3374
56வது ஆண்டு நிறைவு 1947-2003: பரிசளிப்பு விழா சிறப்பு மலர் 3253
ஐம்பாலைம்பது 3424
ஐயப்ப தரிசனம்: மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 3112
ஓட்டுமா 3677
ஒப்பீட்டு அரசியல் 3198
ஒப்பீட்டுச் சட்டம்: ஒரு சில சிந்தனைகள் 3220
ஒரு அகதியின் கவிதைகள் 3425
ஒரு இலையின் மரணம் 3426
ஒரு காலத்துச் சிறுகதைகள் **பார்க்க** அநு.வை.நாவின் ஒரு காலத்துச் சிறுகதைகள்
ஒரு குடும்பத்தில் நடக்கிறது 3993
ஒரு தனிமனித நிறுவனம் 3254
ஒரு தாய் மக்கள் **பார்க்க** ஒரு தாயின் பிள்ளைகள்
ஒரு தாயின் பிள்ளைகள் 3573
ஒரு தீப்பிழம்பும் சில அரும்புகளும் 3678
ஒரு நாடும் மூன்று நண்பர்களும்: குறுநாவல்கள் 3679
ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் 3574
ஒரு படுகொலையின் மொழி 3853
ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள் 3427
ஒரு பிடி மண் 3575



படிப்பகம்

www.padippakam.com



ஒரு பூ மலர்கின்றது 3522
ஒரு பேனாவின் பதிவேடு 3854
ஒரு மண்ணின் கதை 3680
ஒரு மரணமும் சில மனிதர்களும் 3576
ஒரு விதை நெல் 3577
ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது 3681
ஒரே ஒரு ஊரிலே 3578
ஒலிக்காத ஓசைகள் 3682
ஒளி பரவுகிறது 3683
ஒன்பதாந் திருமுறை ஒரு நோக்கு: திருவிசைப்பா திருப்பல்லாண்டு 3097
ஓ என் தேவனுக்கு மகிமை 3068
ஓருலகம் 3428
ஓலாண்ட் தீவுகளின் சுயாட்சி: உதாரணமாகுமொரு தீர்வு 3199
ஓவியம் வரையாத தூரிகை 3429
ஔவையின் அமுத மொழிகளும் விளக்கங்களும் 3052
கங்கை மகள் 3579
கங்கைக் கரையோரம் 3684
கடல் அனர்த்தம் 3956
கடலில் மிதக்கும் மாடிவீடு 3353
கடலும் படகும் 3301
கடற்கரையில் அந்தக் கல்லறைகள் 3430
கடுகு: குறுங்கதைத் தொகுதி 3580
கடைசிச் சொட்டு உசிரில் 3431
கண்டி இராச்சிய முஸ்லீம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள் 3969
கண்டிராசன் கதை 3960
கண்ணகி சரிதையும் வரலாறுகளும் 3113
கண்ணம்மா 3810
கணிதம் தரம் 6. 3306
கதம்ப வாசங்கள் 3581
கதாகாலம்: மகாபாரதத்தின் மறுவாசிப்பு 3754
கதிராளி 2004. 3255
கதிரொளி விழா மலர் 1976. 3024
கதை ஆண்டி 3685
கதை-கண்ணீர்-கவிதை 3540
கதை முடியுமா? 3582
கந்தபுராணச் சிந்தனைகள் 3098
கபளீகரம் 3583
கம்ப களஞ்சியம் 3755
கம்பதாசன் காவியங்கள் 3541
கம்பமலர்: 15ம் ஆண்டு நிறைவுவிழா மலர் 1980-1995. 3756
கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: திருவடி சூட்டு படலம் 3757
கம்பன் அபரபிரமன் 3758
கம்பன் மலர் 2000. 3759
கம்பனைப் போல்: கம்பனைப் பற்றிய ஒரு ஒப்பியல் ஆய்வு 3760
கம்யுனிஸ்ட் இயக்கத்தில் தோழர் சண்முகதாசன்: விமர்சனக் கண்ணோட்டம் 3872
கமலினி 3686
கரவைக்கிழார் கவிதைகள் 3432
கருகாத பசுமை 3687
கருவாட்டுக் கஸ்லா 3433
கல் உயிர் 3434
கல்கி சின்னத்துரை மலர் 3901
கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் வரலாறும் வளர்ச்சியும்.1971-1999. 3256
கல்லறைக்குள் கதிரவன் 3435



படிப்பகம்

www.padippakam.com



கல்விசார் தொடர்புகள், நினைவுகள், சிந்தனைகள் 3240
கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம் 3761
கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள்: இருதொகுதிகள். 3762,3763
கலாநிதி பதியுத்தீன் 3873
கலாநிதி பதியுத்தீன் மஹ்முதின் கல்விப்பணிகள் 3892
கலாயோகி ஆனந்த கெ.குமாரசுவாமி 3929
கலித்தொகை-பரிபாடல் 3387
கலைச்செல்வி 3257
கலைச்செல்வி: திமிலைத்துமிலன் மணிவிழாச் சிறப்பு மலர் 3258
கலைச்செல்வி: விபுலானந்தர் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 1992. 3259
கலைஞானம் 3260
கலைமலர்(2004-2005). 3261
கவசத் திரட்டு 3099
கவிஞர் காரை 3930
கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள்: ஓர் ஆய்வு 3764
கவிதை நேரங்கள் 3436
கவிதைக் கதம்பம் 3437
கவிவானம் பொழிகிறது 3438
கன்னிகா தானங்கள் 3584
கன்னிப் பெண் 3585
கனவுகள் கற்பனைகள் ஆசைகள் 3688
கனவுங் கலைந்தது காலையும் புலர்ந்தது 3863
கனவுப் பூக்கள் 3439,3440
காசி ஆனந்தன் கவிதைகள்: முதல் தொகுப்பு 3441
காட்டாறு A06
காத்திருத்தல் 3442
காதோடு காதாக 3811
காமன் கூத்து: ஓர் கள ஆய்வு 3283
கார்த்திகேசு சிவத்தம்பி: இலக்கியமும் வாழ்க்கையும் 3931
காரைநகர் தொன்மையும் வன்மையும் 3981
கால்நடை அபிவிருத்தி: இலங்கை தமிழர் பிரதேசம் 3319
கால் பதிக்கா நிலவு 3689
காலக் கீறல்கள் 3586
காலக்குறிப்பு அகராதி 3298
காலங்கள் 3587
காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள் 3909
காலத்தால் மறையாத கற்பக இதழ் சிறுகதைகள் 3588
காலத்தின் அறைகூவலும் முஸ்லீம்கள் பணியும் 3142
காவியத்தின் மறுபக்கம் 3690
காவிரி முதல் மாவெலி வரை 3443
காற்றின் சுவடுகள்: மேடை முதல் வானொலி வரை 3855
காற்றோடு போதல் 3589
கானல்நீர் கங்கையாகிறது: சமூக, நகைச்சுவை நாடகங்கள் 3523
கிட்கிந்தை 3524
கிராமிய மணம் 3287
கிருஷ்ணன் தூது 3590
கிரௌஞ்சப் பறவைகள் 3691
கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார் பாடல்கள் 3288
கிழக்கிலங்கைக் கிராமியம் 3289
கிழக்கிலங்கையில் கிறிஸ்தவர் ஆற்றிய கல்விப் பணி 3241



படிப்பகம்

www.padippakam.com



கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம்: முதற்பகுதி 3874
கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு 3069
கிறிஸ்து காவியம் 3070
கிறீஸ்தவ நாற்படை 3071
கீத போதனா ரஞ்சிதம் 3143
கீரிமலையினிலே 3444
கீழக்கரைப் பண்பாட்டுக் கோலங்கள் 3168
குட்டிகளுக்குப் பாட்டுக்கள் 3354
குடிஇயல் 3200
குடித்தொகை: கோட்பாடுகளும் பிரயோகங்களும் 3840
குடித்தொகையியல்: கோட்பாடுகளும் பிரயோகங்களும் 3840
குடியுரிமைக் கல்வி: தரம் 7. 3201
குமரனுக்குக் கடிதங்கள் அறிவுக் கடிதங்கள் 3202
குமார் பொன்னம்பலம் நினைவு மலர் 3875
குமார் மூர்த்தி கதைகள் 3591
குர்பான் செய்த கனவு 3592
குரங்குகள் 3525
குருட்டு வெளிச்சம் 3593
குருதி பூத்த வெள்ளரசு 3994
குருதி மலை A07
குரும்பசிட்டி சன்மார்க்கசபை: 30 ஆண்டு நிறைவுமலர் 3227
குரும்பசிட்டி மக்களின் விளையாட்டுத்துறை: ஓர் ஆய்வு 3349
குரோட்டன் அழகி 3445
குறள்வழி வாழ்வு 3765
குறளிக் குஞ்சன் 3594
குறளின் நிழல்கள் 3446
குழந்தைக் குரல் 3355
குன்றில் எழுந்த குரல் 3290
குஜராத் மோகினி 3692
கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் 3595
கைகளுக்குள் சிக்காத காற்று 3447
கைதிப் புறாக்கள் 3448
கைலாசநாதம்: பவளவிழா மலர் 3893
கொக்கிளாய் மாமி 3596
கொடுத்தல் A08
கொய்யாக் கனிகள் 3542
கொழுகொம்பு 3693
கொழும்பில் இந்துப் பாரம்பரியம்: பொன்விழா மலர் 3114
கோடையும் பனியும் 3694
கோடையும் வரம்புகளை உடைக்கும் 3597
கோதம புத்தர் A09
கௌதமரின் கண்ணீர் 3995
சக்தி பிறக்குது 3526
சகலகலாவித்தகி சற்சொரூபவதி 3856
சங்க இலக்கிய ஆய்வுகள் 3766
சங்ககால சமூகமும் இலக்கியமும்: ஒரு மீள்பார்வை 3767
சங்கிலி 3527
சண்முக விஜயம்: கந்தபுராணக் கதையமுதம் 3100
சத்திய வசனம்: பொதுப்பாடல்கள் 3072
சந்தன மேடை 3449
சமதர்மப் பூங்காவில் 3843
சமரச பூமி 3695
சமாதான வழியில் 3203
சமாதானத்திற்கான கல்விப் பாதை 3242



படிப்பகம்

www.padippakam.com



சமாதானத்தின் தேக்கநிலையும் அதனை வெற்றிகொள்வதற்கான மார்க்கங்களும் 3204
சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள் 3598
சமூகக் கல்வியும் வரலாறும்: தரம் 9. 3161
சமூகக் கல்வியும் வரலாறும்: தரம் 10. 3162
சரித்திரப்பெற்ற பொலன்னறுவை 3982
சரிநிகர் சமானமாக: கைநூல் 2. 3163
சனநாயக அரசாங்கத்தின் மாதிரிகள் 3205
சாகாவரம் பெற்ற சான்றோன் 3876
சாதனையாளர் சாரல்நாடன் 3932
சாதியும் துடக்கும்: பண்டைத் தமிழர் தொடக்கம் யாழ்ப்பாணத் தமிழர் வரை 3177
சாம்பல் பூத்த மேட்டில் 3450
சாமிவேலர் காவியம் 3877
சாயியின் குரலும் வள்ளுவர் குறளும் 3768
சானா + பரியாரி பரமர் 3917
சி.வை.தாமோதரம்பிள்ளை: வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் 3933
சிங்கள தமிழ் அகராதி 3296
சிங்களப் பழமொழிகள் 3294
சித்தர்கள் சித்தாந்தமும் சூபிசமும் 3055
சிந்தனையைக் கிளறும் சிரித்திரன் மகுடி 3812
சிந்துவெளித் தமிழர்: தமிழர் யார்? உலக நாகரீகத்தில் தமிழர் பங்கு: தென்னிந்திய குலங்களும் குடிகளும் 3813
சில்லிக்கொடி ஆற்றங்கரை 3696
சிவசேகரத்தின் விமர்சனங்கள்-2. 3769
சிவத்தமிழ் இன்பம்: செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மணிவிழாமலர் 3864
சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்: திறப்புவிழாச் சிறப்புமலர் 3018
சிவபுரத்து கனவுகள் 3697
சிவராஜ சாதனை 3894
சிவலயம்: வீ.ஏ.சிவஞானம் பற்றிய நினைவுகள் 3857
சிவாவின் சிறுகதைகள் 3599
சிவானந்த நடனம் 3329
சிறுகதை எழுதுவது எப்படி? 3814
சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள் 3367
சிறுவர்களுக்கு அமுதமான கதைகள் 3368
சிறுவருக்கான சிந்தனைக் கதைகள் 3369
சிறை 3600
சிறைகளில் இருந்து 3451
சிறையும் குடிசையும் 3698
சின்ன தேவதை 3851
சின்னச் சிட்டுக்கள் 3356
சின்னப்பரின் நிருபங்கள்: கிறிஸ்தவ மதிப்பீடுகள் 3073
சீரழிய சினிமாவைப் பாருங்கள் 3346
சீவபுராணம் 3699
சுகணாவின் அமுதவிழா மலர் 3934
சுணைக்கிது 3601
சுத்தானந்தம் 50:பொன்விழா மலர் 3115
சுதந்திரம் 3375



படிப்பகம்

www.padippakam.com



சுமைகள் 3700
சுவடுகள் 99: நினைவு மலர் 3228
சுவாமி விபுலானந்தர்: காலமும் கருத்தும் 3935
சுவைத் தேன் 3452
சுற்றாடற் கல்வி: 6ஆந் தரம் 3231
சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரது 150ஆவது ஆண்டு நினைவு மலர் 3936
சுனாமி 3453
சுனாமி: கடற்கோள் 26/12. 3309
சுனாமியினால் பாதிப்புற்ற பாடசாலைகளை முகாமை செய்தல்: புதிய அணுகுமுறையைத் தேடுதல் 3243
சுஜிகலா சிங்கள-தமிழ் ஆசிரியன் 3297
சூழல் புவியியல்: வளங்களும் முகாமைத்துவமும் 3841
சூழல் முரசு 1999. 3262
செந்தமிழ் அகராதி 3299
செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் (பாகம் 1) A10
செந்தமிழர் ஆகிடுவோம் 3206
செந்தமிழே செம்மொழியே 3454
செல்லும் வழி இருட்டு 3701
செல்வி - சிவரமணி கவிதைகள் 3455
செவத்த கமலம் 3602
சென்ற காலத்தின் பழுதிலாத்திறம்: தொகுதி 1. 3770
சைவ சித்தாந்தங் கூறும் தத்துவங்களும் தாத்துவீகங்களும் 3056
சைவமும் தமிழும் வளர்த்த சான்றோன் 3937
சொந்த மண் 3603
சொர்க்கங்களும் தண்டிக்கின்றன 3604
சொல்லேருழவர்: தமிழ்மணி தெல்லியூர் செ.நடராசா நினைவுமலர் 3938
சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி 3300
சொன்னாற் போல-02. 3771
சோகங்களிலும் துயரமனது 3456
சோவியத் யூனியனின் உடைவு 3207
சோனியா சரிதை 3878
டானியலின் எழுத்துக்கள் 3772
டெனிஷ்-தமிழ், தமிழ்-டெனிஷ் சிறு அகராதி 3295
டொமினிக் ஜீவா சிறுகதைகள் A11
தகவம் பரிசுக் கதைகள் தொகுதி 2. 3605
தங்கப் புதையல் 3376
தஞ்சம் புகுந்தவர்கள் 3702
தந்தை செல்வா காவியம் 3543
தப்லீக் ஜமாஅத்: ஓர் அறிமுகம் 3144
தம்மபதம்: அறவழி 3085
தம்மபதம்: பாளி-சிங்கள-தமிழ் ஆங்கிலப் பதிப்பு 3086
தமிழ் ஆராய்ச்சி: தமிழ் விளக்கம்: நீதி நெறி விளக்கம் 3815
தமிழ் இந்தியா 3957
தமிழ் இலக்கிய அகராதி: இலக்கிய அகரவரிசை 3388
தமிழ் இலக்கியத் தொகுப்பு: 10-11 ஆந் தரங்கள்: 3302
தமிழ் இனி 2000: மாநாட்டுக் கட்டுரைகள் 3816
தமிழ் ஓலைகள் 2006. A12
தமிழ் நாடகம்-சில ஆளுமைகள் 3996
தமிழ் நாவலர் சரிதை 3940



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மொழியும் இலக்கியமும்: தரம் 6. 3303
தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும் தென்னிலங்கை அரசியலின் இயலாமையும் 3208
தமிழ்ப் புலவர் அகராதி 3941
தமிழ்ப் புலவர் சரித்திரம் 3942
தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் 3939
தமிழகம் 3817
தமிழர் உளவியலும் கல்வியும் 3244
தமிழர் சமயம் எது? – சைவ சமய வரலாறு- சிவன்- இந்து சமய வரலாறு- தமிழர் பண்பாடு 3818
தமிழர் சரித்திரம்: வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர் 3970
தமிழர் தகவல் பதின்ம மலர். 3025
தமிழர்-யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல் 3278
தமிழர் வாழ்வில் தமிழ் 3773
தமிழரின் தாகம் 3457
தமிழன் மாட்சி 3971
தமிழின் நவீனத்துவம் 3774
தமிழனே தலைமகன் தமிழே தலைமொழி 3972
தமிழீழச் சங்கம், கனடா: வெள்ளிவிழா மலர் 3229
தமிழீழப் போராட்டத்தில் கலைஞர் கருணாநிதியின் பங்கும் பணியும் 3943
தமிழீழமும் தங்க வங்கமும்: இந்தியாவின் இரட்டை அணுகுமுறை 3997
தமிழோசை 1988-1989. 3263
தரம் 4 புலமைப் பரிசில் மாணவர் வழிகாட்டி 3004
தரம் 10 கணிதம்: பயிற்சியும் செயல்நூலும் 3307
தரிசனம் 3606
தரை மீன்கள் 3607
தலைமுறை தந்த தலைமகன் 3895
தலைமைத்துவம்: ஓர் இஸ்லாமிய அணுகல் 3164
தவச் சுடர்கள் 3944
தனிச் சொத்து: குட்டிக்கதைகள் 3608
தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும் 3903
தனிநாயகம் அடிகளார் 3998
தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள் 3999
தனியாக ஒருத்தி 3703
தாகம் 3704
தாய் 3458
தாரிணி 3705
தி.ஞானசேகரன் சிறுகதைகள் 3609
திராவிட நாகரிகம்- திராவிடம் என்றால் என்ன? மறைந்த நாகரிகங்கள்-திராவிட இந்தியா 3819
திருக்குமரன் கவிதைகள் 3459
திருக்குர் ஆன் தீர்ப்பு - மூன்றாம் பாகம்: பாடம் ஒன்று 3145
திருக்குறள் அகராதி 3775
திருக்குறள் ஒழிபியல் பாரதியார் கவிதைகள் 3304
திருக்குறள் மாநாடு 2000: சிறப்புமலர் 3776
திருக்கோணமலையில் இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேசபிள்ளை 3945
திருப்பம் 3610
திருப்பாடல்கள் 150. 3074



படிப்பகம்

www.padippakam.com



திருமண பந்தத்தில் கணவன் மனைவி 3279
திருமறையும் திருமணமும் 3280
திருவள்ளுவர்: திருக்குறள் 3777
திருவாசக ஆராய்ச்சியுரை 3101
திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர், 1963. 3116
திருவாசக அமுதம்: பண்டிதர் சி.அப்புத்துரை பவளவிழா மலர் 3117
தீக்குள் விரலை வைத்தேன் 4000
தீவகம்: பல்துறை நோக்கு 3983
தீவகம்: வளமும் வாழ்வும் 3984
துருவச் சுவடுகள் 3460
துளியூண்டு புன்னகைத்து 3461
தூரத்துக் கோடை இடிகள் 3611
தூரம் தொடுவானம் 3706
தெய்வ கானம் 3337
தெய்வச் சேக்கிழார்: ஐந்தாவது உலகச் சேக்கிழார் மாநாட்டு மலர், 2005. 3118
தெய்வம் புழுதியில்: இறைஇயற் கதைகளும் கவிதைகளும் 3075
தெய்வீகத் தோத்திரப் பாடல்கள் 3102
தெரியாத பக்கங்கள் A13
தென்கோவை கந்தையாப் பண்டிதர் கவித் திரட்டு 3462
தேடல்: சில முயற்சிகள் 3245
தேடல் வலி 3463
தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள் 3612
தேவி எழுந்தாள் 3464
தேன் பறிப்போர் 3707
தொட்டுவிடும் தூரத்தில் 3613
தொண்டன்: வெள்ளிவிழாச் சிறப்பு மலர். 3026
தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு A14
தொலைவில் 3465
தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் 3614
தோட்டத் தொழிலாளர் கைநூல் 3221
ந.சி.கந்தையாபிள்ளை நூற்திரட்டு 3171,3298-9,3384,3386-89,3775,3777,3803-05,3807,3813,3815,3817-19,3822,3829,3941,3957,3970.
நகரமும் சொர்க்கமும் 3708
நகைச்சுவை முத்துக்கள் 3820
நகைச்சுவைப் பூங்கா 3821
நமக்குள் ஏன் இந்தப் பிரச்சினைகள் 3178
நமது மொழி-நமது நாடு-நமது தாய்மொழி-திராவிட மொழிகளும் இந்தியும்-தமிழ்ப் பழமையும் புதுமையும்-முச்சங்கம் 3822
நல்லதோர் வீணை செய்தே 3615
நல்லவன் 3616
நல்லைக்குமரன் மலர் 1997. 3119
நல்லைநகர் நாவலன் 3528
நவ முஸ்லிம் சிந்தனையாளர் யூஸுப் இஸ்லாம் 3865
நவீன பொது அறிவு சுடர் 3005
நற்செயல்களும் பிரதிபலன்களும் 3146
நறுமணம் கமழும் ஸலவாத்துக்கள் 3147
நன்றிக் கடன் 3709
நாகரீகங்களுக்கு ஓர் அறிமுகம் 1. 3839
நாட்டார் வழக்காற்றியல்: ஓர் அறிமுகம் 3274



படிப்பகம்

www.padippakam.com



நாட்டிய அரங்கு 3340
நாட்டுக் கருடன் பதில்கள் 3823
நாடக அரங்கு 3832
நாம் ஏன் எழுதுகின்றோம்? 3778
நாளையைத் தேடும் மனிதர்கள் 3617
நாற்பயனன்னூல்: நபிமொழி நாற்பதும் கருத்தும் விளக்கமும் 3148
நான் எனும் நீ 3466
நான் கெடமாட்டேன் 3710
நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள், யாழ்ப்பாணம், முதலாம் தொகுதி 3824
நித்திய ஜீவன் 3076
நிந்தித்தும்மை நிராகரித்தால் 3149
நிர்வாண விழிகள் 3467
நிலப்பூக்கள் 3468
நிலவைப் பகலாக்கி 3711
நிலாக்கால இருள் 3712
நிறைநிலா 3618
நினைந்தழுதல் 3619
நினைவாற்றலை வளர்த்தல்: மாணவர், ஆசிரியருக்கான ஒரு வழிகாட்டி நூல் 3246
நிஜங்களின் வலி 3620
நீருயிர்வளத் தொழில்நுட்பம் 3312
நீலராணி 3377
நூல்தேட்டம்: தொகுதி 3. 3015
நூலகமும் சமூகமும் 3019
நூலியல் பதிவுகள் 3020
100 விரைவான & இலகுவான சிற்றுண்டிக் குறிப்புகள் 3326
நெஞ்ச நெருடல் 3469
நெஞ்சக் கனல் 3713
நெஞ்சத்து நெருப்பு 3470
நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள் 3021
நெஞ்சில் பதிந்த ஐரோப்பியப் பயணம் 3844
நெஞ்சுறுத்தும் கானல் 3529
நெடுங் காலத்தின் பின்னொரு நாள் 3621
நெருடல்கள் 3471
நெருப்பு ஊர்வலங்கள் 3472
நெருப்பு மல்லிகை 3714
நொறுங்குண்ட இருதயம் 3715
ப்ரியநிலா: மீலாத் சிறப்பு மலர் 2005. 3027
பகவத் கீதையும் திருக்குறளும் 3057
பஞ்சவர்ண நரியார் 3360
பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும் 3779
பண்டாரவன்னியன் காவியம் 3544
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் புலமையியல்: ஓர் ஆய்வு 3780
பண்பாட்டின் சமூகவியல் 3169
பண்பாட்டின் மூன்று கோலங்கள் 3332
பத்திரிகைத் துறை சில நினைவுக் குறிப்புகள் 3042
பத்துப் பாட்டு 3473
பத்துப் பாட்டு-பதிற்றுப் பத்து 3389
பரத நாட்டிய அரங்கேற்றம் 3341
பரமானந்தம்: 75 ஆண்டு நிறைவுவிழா மலர் 3264
பரமானந்தம்: குரும்பசிட்டி பொன் பரமானந்தம் மகாவித்தியாலயம் நூற்றாண்டு நிறைவுமலர் 3265
பரிசுபெற்ற புதினம் சிறுகதைகள் 3622



படிப்பகம்

www.padippakam.com



பரிமளத் திரட்டு 3103
பரியாரி பரமர்: பேனாச்சித்திரங்கள் 3825
பல்கலைச் செல்வர்: கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் பாராட்டுவிழா மலர் 3912
பல்சுவை மணிகள் 3826
பல்சுவைச் சுரங்கம் 3006
பலஸ்தீன் பிரச்சினையும் போராட்டமும் 3958
பலிக்களம் 3530
பவள நிலா 3266
பழம் புனலும் புது வெள்ளமும் 3781
பன்னிரண்டு பிரசங்கங்கள் 3077
பனிமழையில் கூத்தாடி 3345
பனிமழையில் பூபாளம் 3474
பனைவளம் 3320
பாடிப் பறந்த இசைக்குயில்: நினைவுத் தொகுப்பு 3913
பாப்பா பாடல்கள் 3357
பார்வை 3623
பார்வையும் பதிவும் 3782
பாரிஸ் பேருரைகள் 3160
பாலசுகுமார் நாடகங்கள் 3531
பாலத்தின் அடியில் 3837
பாலஸ்தீனர்களைப் பாதாளத்தில் தள்ளிய பாதகர்கள் 3209
பாலையும் பயணமும் 3475
பாலைவனத்திற்கு சிறுமழை 3044
பாலைவனத்து நரி: ஈராக் தாக்குதல் 3959
பாவலர் சரித்திர தீபகம் 3946
பாவலர் சரித்திர தீபகம். பகுதி 1. A15
பாவலர் சரித்திர தீபகம். பகுதி 2. 3947
பாவாரம் 3476
பித்அத் ஓர் ஆய்வு 3150
பிரார்த்தனை 3624
பிரார்த்தனைப் பாடல்கள்: தோத்திரத்திரட்டு 3104
பிரான்ஸ் தமிழர் வழிகாட்டி 2006. 3022
பிள்ளை அழுத கண்ணீர் 3361
பிள்ளை மொழி 3358
பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள் 3247
பிறைக் கொழுந்து 3783
புங்குடுதீவு கிராமம்: அன்றும் இன்றும் 3985
புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகமலர் 2004. 3120
புத்த பகவான் அருளிய போதனை 3087
புதிய ஆரம்பம்: புதிய ஏற்பாடு 3078
புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு 3210
புதிய சிந்தனை: மலையக சமூக மேடை நாடகங்கள் 3532
புதிய சுவடுகள் 3716
புதிய பயணம் 3625
புதிய பாடத் திட்டம்: லேக்ஹவுஸ் தேசப்படம் 3846
புதிய பாதை 3626
புதிய பூமி 3717
புதிய முறைச் சித்திரம் 3333
புதிய வடிவங்கள்: சித்திர சிற்பக் கண்காட்சி சிறப்புமலர் 3330
புதிய வார்ப்புகள் 3627
புதினம் 10-வது ஆண்டு மலர். 3028
புதுயுகத் தமிழர் 3477
புயலுக்குப் பின் 3718



படிப்பகம்

www.padippakam.com




புரட்சிக்கமால் கவிதைகள் 3478

புலம்பெயர் கவிதை: உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை 3784

புலம் பெயர்ந்த பூக்கள்: சிறுகதைத் தொகுதி 3628

புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் 3217

புலரும் புலராத பொழுதுகளும் 3479

புலமைச் சுடர் 02. 3007

புலமைப் பரிசில் ஆரம்ப வழிகாட்டி 3008

புலமைப் பரிசில் புலமைத் தீபம் A16

புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 1-3. 3009-11

புலர்வு 2000. 3230

புலவர் போற்றிசை 3948

புலவர்மணி ஷரிபுத்தீன் செய்த தமிழ் 3480

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் சிறுகதைகள்: ஆய்வுநூல் 3785

புலோலியூர் க.சதாசிவம் நினைவலைகள் 3949

புறப்பொருள் விளக்கம்- கலிங்கத்துப் பரணி- விறலிவிடுதூது 3786

புனித பூமியிலே 3545

புனித ரமழான் - ஒரு விளக்கம் 3151

புனைகதை இலக்கியம் 3787

பூக்கள் விடும் பட்டம் 3359

பூபாள ராகங்கள் 2005. 3267

பூம்பொழில்: விழா மலர் 1973. 3029

பூமழை 3481

பெண்களும் சமூகமும் அன்றும் இன்றும் -பெண்கள் உலகம் - பெண்கள் புரட்சி 3171

பெண்களும் மூடநம்பிக்கையும்: சகுனம் 3172

பெண்ணுரிமையின் பரிமாணங்களும் பெண்ணடிமையின் விளக்கமும் 3173

பெண்மைக்கு இணையுண்டோ? 3174

பெரியபுராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம் 3105

பெற்ற மனம் 3629

பேசவே செய்ததடி 3482

பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும் 3896

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்: மணிவிழா மலர் 2004. 3897

பேரேட்டில் சில பக்கங்கள் 3867

பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்: பகுப்பாய்வும் நுண்ணாய்வும் 3788

பொது அறிவு 3012-13

பொது உளச்சார்பு: நுண்ணறிவு பொது விவேகம் 3014

பொதுவுடமைவாதி தோழர் பொன் கந்தையா 3879

போடியார் மாப்பிள்ளை 3719

போரும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு 3964

பௌத்த சிங்களவரும் சிறுபான்மையினரும்: இலங்கை இந்திய நிலைப்பாடு 3973

மக்கட் பெயர் அகரவரிசை 3277

மக்கள் தலைவர் அமரர் சௌ.தொண்டமான் அவர்களின் தமிழ் சாகித்திய விழா சிறப்பு நினைவு மலர் 2000. 3880

மக்கியாவலியும் வள்ளுவரும் 3211




படிப்பகம்

www.padippakam.com



மகரந்தம்: கவிதைத் தொகுப்பு 2. 3483

மகளே கேள் 3053

மகாகவி கம்பதாசன் கவிதானுட்பங்கள் 3789

மகுடி: சிரித்திரன் சுந்தர் பதில்கள் 3827

மகுடி: மக்களின் கேள்வியும் மகுடியின் பதில்களும் (முதல் பாகம்). 3828

மட்டக்களப்பு கல்வி வலயப் பாடசாலைகளின் 2001ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்: ஒரு மீள்பார்வை 3248

மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் 3986

மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள் 3987

மடிக்குள் விழுந்த வெள்ளிகள் 3484

மண் வாசனை 3630

மண்ணில் தொலைந்த மனது தேடி 3485

மண்ணில் வேரானாய் 3486

மண்வாசம் 3487

மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும் 3488

மதீனாவை நோக்கி 3152

மர்ம மங்கை நார்தேவி 3720

மரணத்தை வென்ற மகாகவி 3489

மரணமும் கடமையும் 3281

மரபு தழுவிய திருமண நாண் பூணல் 3282

மரபுகளும் மாற்றங்களும் 3170

மரபுவழித் திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும் 3790

மருத்துவத் தமிழ் முன்னோடி: டாக்டர் கிறீன் 3906

மருதத்திணை 3791

மருதம் கலாசார விழா சிறப்புமலர்: 2003. 3023

மருதமடு யாத்திரைக் கைத்துணை 3083

மல்லிகை அவுஸ்திரேலியா சிறப்பு மலர் 3030

மல்லிகை: 36வது ஆண்டு மலர் 3031

மல்லிகை: 38ஆவது ஆண்டு மலர் 3032

மல்லிகை: 39ஆவது ஆண்டு மலர் 3033

மல்லிகை: 41ஆவது ஆண்டு மலர் 3034

மல்லிகை ஜீவா நினைவுகள் 3950

மல்லிகை ஜீவா மனப் பதிவுகள் 3792

மலரும் மொட்டுக்கள் 3370

மலைக்கன்னி 3721

மலைச் சுவடுகள் 3491

மலைத் தென்றல் 3492

மலைமேகம்: நடைப்பா 3490

மலையக அரசியலும் சமூக வாழ்வும் 3212

மலையகத் தமிழர் வரலாறு 3974

மலையகத் தொழிற்சங்க வரலாறு 3218

மலையகத்தின் கலாச்சாரம் 3179

மழைக்கோலம் 3722.

மறந்து விடாதே 3723

மனக்கோலம் 3493

மனங்களின் ஊசல்கள்: உணர்வூட்டும் கட்டுரைத் தொகுதி 3045

மனத்தூறல்: சிறுகதைத் தொகுதி 3631



படிப்பகம்

www.padippakam.com



மனித ஏணிகள் 3494
மனிதகுல ஐக்கியத்துக்கு இஸ்லாத்தின் அழைப்பு 3153
மனிதன் எப்படித் தோன்றினான்? ஆதி மனிதன்- ஆதி உயிர்கள் - மரணத்தின் பின் - பாம்பு வணக்கம் 3829
மனுஷியம் 3632
மனைப் பொருளியல் 3322
மனைப் பொருளியல்: ஆசிரியர் கைந்நூல் தரம் 12-13. 3323-24
மனைப் பொருளியல்: 10ம், 11ம் தரத்திற்குரியது 3325
மனையடி சிற்ப சிந்தாமணி: வீட்டு நிலைய நூல் 3060
மனோபாவம் 3495
மனோராகம் 3496
மஹ்ஜபீன் காவியம் 3546
மாடும் கயிறுகள் அறுக்கும் 3497
மாதிரிக் கட்டுரைகள்: தரம்: 5. 3305
மாலை சூட்டும் நாள் 3498
மாற்று நோக்கில் சில கருத்துக்களும் நிகழ்வுகளும் 3175
மாறன் மணிக்கதைகள் 3371
மாறன் மணிக்கதைகள் 2. 3372
மாறாத மனங்கள் 3633
மாறிவரும் புதிய உலக ஒழுங்கு: புவிசார் அரசியல் நோக்கு 3213
மானிடம் உயிர் வாழ்கிறது 3634
மானிப்பாய் தந்த மாணிக்கம்: சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் வாழ்க்கை வரலாறு 3883
மானுடக் கலை 3334
மிருசுவிலின் தரிசனம்: 2004. 3084
மீண்டும் துளிர்க்கும் வசந்தம் 3499
மீண்டும் யாழ். மண்ணில் பதிந்த எம் தடங்கள் 3845
மீண்டும் வந்த சோளகம் 3724
மு.வ.நினைவுகள் 3898
முகை 3268
முட்களின் இடுக்கில் 3500
முடிந்தால் மன்னித்துவிடு 3501
முதல்நிலை முஸ்லிம் பெண்கள் 3176
முதற் பயணம் 3635
முதியோர் வாழ்வு 3165
முதியோர் வாழ உதவுவோம் 3166
முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும் 3502
மும்முனைப் பிரச்சினைகளும் தீர்வுகளும் 3975
முயற்சியாளர் மு.க.சு. 3899
முரசம்(2006) A17
முருகபூபதியின் படைப்புகள் 3793
முருகன் துதி மஞ்சரி 3106
முருகானந்தம் 3107
முள்ளில் படுக்கையிட்டு 3291
முளைகள் 3636
முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் 3794
முற்றுப்பெறாத முடிவுகள் 3725
முறையீடும் தேற்றமும் 3503
முஸ்லீம் தமிழ்ப் பாரம்பரியம் 3795
முஸ்லீம்களின் அரசியல் தனித்துவத்தை அங்கீகரித்த தமிழர் தலைவர் தந்தை செல்வா 3214
மூங்கில் காடு 3637
மூங்கிற் பள்ளம்: வியத்னாமியக் கதைகள் 3834
மூச்சுத் திணறும் முஸ்லிம் தேசம்: சமாதான முயற்சியில் முஸ்லிம் பாத்திரம் ஒரு விமர்சன நோக்கு



படிப்பகம்

www.padippakam.com



3976
மூடுபனி 3726
மெழுகுவர்த்தி 3881
மொழியினால் அமைந்த வீடு 3796
மோகவாசல் A18
மோதல் தீர்வும் வன்முறையும் 3167
மௌன தரிசனங்கள் 3504
யாசகம் 3505
யாத்திரை 3727
யாதும் ஊரே: ஒரு யாத்திரை 3977
யார் எவர் 3904
யார் வியவாதார்: வாலிவதை ஒரு பன்முக நோக்கு 3797
யாழ்ப்பாண வைபவ விமர்சனம்: தமிழரசர் உகம் 3988
யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்த நிறுவனங்களும் அறிஞர்களும் 3905
யாழ்ப்பாணத்துச் சமையற்கலை 3327
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: நூற்றாண்டு மலர், 1890-1990. 3269
யுத்த காலத்தில் பெண்கள் 3506
ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்: 1 சித்ரா 3533
லெப்.கேணல் சுபன் 3886
லெனினும் ஆசியாவும் 3882
வட இலங்கையில் சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்: வரலாறும் தலப் பெருமையும் 3121
வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாற்றமுற்று வரும் இன ரீதியிலான குடித்தொகைப் போக்குகள் 3847
வடமொழி இலக்கிய வரலாறு 3383
வண்ண மலர்கள்: நல்வழிச் சிறுகதைகள் 3373
வணங்கா மண் 3887
வணிகக் கல்வியும் கணக்கீடும். தரம் 11. 3271
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும். தரம் 10, 11: பாகம் 1. 3272
வதனமார் வழிபாடு: ஒரு மதிப்பீடு 3275
வந்து பாருங்கள் 3079
வம்மிப்பூ 3638
வரகவி செய்கு அலாவுத்தீன் நூல் அறிமுகமும் பிராந்திய முஸ்லீம் கலாசார விழாவும்: நினைவு மலர் 3798
வரதம் 3910
வரதர் பவளவிழா மலர் 3951
வரலாற்றில் வாழ்தல் 3952
வரவும் வாழ்வும்: மலையக நாட்டாரியல் சிந்தனைகள் 3276
வரிக்கவிகள் 3507
வலைப்பந்தாட்டம் 3350
வழிநடத்தும் வார்த்தை 3080
வழி பிறக்குமா? 3639
வள்ளுவர் அந்தாதி 3508
வளம்பெற ஒன்றுபடுவோம் 3215
வளரும் வணிகம் 3273
வளைவுகளும் நேர்கோடுகளும் 3728
வனமலர் 3729
வா ஊருக்குப் போவோம் 3509
வாடகை வீடு 3640
வாடைக்காற்று A19
வாலி வதைப் படலம் 3799
வாழ்க்கை என்பது என்ன? 3081
வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு 3054
வாழ்க வளமுடன் 3317



படிப்பகம்

www.padippakam.com



வாழ்ந்து பார்க்கலாம் 3534
வாழ்வற்ற வாழ்வு 3730
வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் 3641
வாழ்வும் வடுவும் 3868
வாழ்வெனும் வரம் 3046
வாழும் சுவடுகள்: கால்நடை வைத்தியரின் அனுபவங்கள் 3830
வான்பதி: 1வது ஆண்டு மலர் 3043
வான்மதி சிறுகதைகள் 3642
வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி 3535
வானொலி நாடகங்கள். தொகுதி 3. 3536
விசாரம்: கடக்கப்பட வேண்டிய கட்டுக்கள் 3800
விசித்திர உறவுகள் 3643
விஞ்ஞான விளக்கம்: புவி நடுக்கமும் சுனாமி அலைகளும் 3310
விஞ்ஞானம் வளர்த்த மெஞ்ஞானத் திருமறை: முதற் பாகம் 3154
விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் தரம் 7. 3314
விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்: தரம் 10. 3315
விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும்: தரம் 11. 3316
விநோதினி3646
விடியட்டும் பார்ப்போம் 3644
விடியலின் பாதையினிலே 3510
விடியலுக்காய் 3511
விடியலைத் தேடி 3731
விடிவை நோக்கி வா 3512
விடுதலை 3645
விடுதலை வேட்கை 3513
விடுதலைக்காய் 3514
விடுதலைப் போராளி: சிறப்பு மலர்: அகவை ஐம்பது 3888
விடைகள்: மூன்றாம் புத்தகம் 3308
விண்ணில் அல்ல விடிவெள்ளி 3732
வித்தகம் ச.கந்தையாபிள்ளை 3900
வித்துவரத்தினம்: வித்துவான் க.செபரத்தினம் அவர்களின் பவள விழா மலர் 3953
விபுலாநந்தம் 3954
விமர்சனாஸ்ரமம் 3801
விமோசனம் நாளை A20
வில்லிசைக் கலை 3338
விலங்குப் பண்ணை 3838
விவசாயம்: தரம் 10. 3321
விழியோரத்துக் கனவுகள் 3647
விழியோரத்துக் கனவுகள் 3733
விழுதாகி வேருமாகி 3889
வினாக்காலம்: கனவுச்சிறையின் இரண்டாம் பாகம் 3734
விஜயேந்திரன் கவிதைகள் 3515
வீசுக புயலே 3516
வீதிச் சட்டமும், வேறு அறிவுரைகளும் 3222
வீர ஆனந்தன் 3378
வீரத் தளபதி: தென்மோடிக் கூத்து 3292
வெண்சங்கு: 2004-2005. 3270
வெண்தாமரையின் பேரழகு 3088
வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் 3108
வெளிப்படுதல் 3517
வெற்றிமணி: 100வது இதழ். 3035
வெற்றிமணியின் பொன்விழா மலர் 3036
வேட்கை 3648



படிப்பகம்

www.padippakam.com



வேல் ஆனந்தன் 60: மணிவிழாச் சிறப்பு மலர் 3914
வேலணைத் தீவு புலவர்கள் வரலாறு 3955
வேள்வி மலர்கள் 3649
வைகறை 3650
வைத்தியர் திலகம் அப்துல் அஸீஸ் 3907
றஞ்சனி கவிதைகள் 3518
ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகள் 3339
ஸ்ரீ ராமர்-ஆஞ்சநேயர் தோத்திரங்கள், கவசம், வரலாறு 3109
ஜமாஅத்தினரை நாம் அறிந்துகொள்வது எப்படி? 3145
ஜின்னாஹ்வின் இரு குறுங்காவியங்கள் 3547
ஜீவஜோதி 3735
ஜென்மம் 3651
ஸ்ருதி தேடும் சந்தங்கள் 3519
ஸூபிகள்: முதலாம் பாகம் 3155
ஷாமிலாவின் இதயராகம் A21
ஷீயாக்களின் சீர்கேடுகள் 3156
ஹஜ் -உலகளாவிய இஸ்லாமிய இயக்கத்தின் இதயம் 3157
ஹஜ் வழிகாட்டி 3158
ஹஸ்த விநியோகங்கள்: முத்திரை விநியோகங்கள் 3342
ஹிஜ்ரா 3159
ஹென்றி லோசன் கதைகள் 3835



படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியர் வழிகாட்டி


அக்கரையூர் அப்துல் குத்தூஸ். **பார்க்க** குத்தூஸ், அப்துல்

அக்ரம், எம்.எம். முகம்மது. 3136-37

அகத்தி முறிப்பான் **பார்க்க** பரீத், செய்னுத்தீன் எஸ்.

அகமது, ஹாபிஸ். எம்.கே.செய்யது 3795

அகளங்கன் 3115, 3255, 3356, 3764, 3802, 3925

அகியோபி 3438

அகிலன், வதிரியூர் வேலாயுதம் **பார்க்க** அகியோபி.

அங்கையன் **பார்க்க** கயிலாசநாதன், வை.அ.

அண்ணாமலை, சி. 3996

அப்துல்லாஹ், றமிஸ் 3289

அப்துல்லாஹ், ஷெய்குல் முப்லிஹீன் எம்.எஸ்.எம். 3145

அப்பாக்குட்டி, தங்கம்மா 3174

அப்புத்துரை, இ.ச. 3308

அப்புத்துரை, சி. 3117, 3901,

அபிராமிப் பட்டர் 3089, 3090,

அபூபக்கர், ஏ.எம். 3124, 3155

அபூபக்கர், மப்ரூஹா 3252

அம்பலவாணர், டி.ஆர். 3054

அம்பிகைபாகர், இ. 3537, 3906, 3977

அம்புலி, ந. 3499

அமரசிங்க, வை.ஆர். 3183,

அமரசிங்கம், த.சித்தி 3945

அமீர்தீன், வெ. 3198

அமீன், ஸீ.எம்.ஏ. 3141, 3600,

அமீன், M.I.M. 3224

அமீன், முகம்மது இப்றாகிம் ஆலிம் சாகிபு முகம்மது **பார்க்க** அமீன், M.I.M.

அமுதலிங்கம், வேல் 3650

அமுதன் **பார்க்க** அமுதலிங்கம், வேல்

அமுதன் அடிகள். 3998

அமுது, இளவாலை 3848

அய்யாத்துரை, தவசிதேவர் **பார்க்க** மாத்தளை ரோகிணி

அயூப், ஆர். 3322, 3327

அரசு, ப.தி. 3927

அரவிந்தன், ஆறுமுகம் **பார்க்க** நவம் அரவிந்தன்

அரியரத்தினம், த. 3899

அருணாசலம், க. 3932

அருள்மொழி, செல்லையா 3321

அருளம்பலவனார், சு. 3101,

அருளானந்தம், ச. 3382, 3549, 3638, 3925

அருளானந்தன், நீ.பி. 3583

அலவி, எம்.ஆசிம் 3164

அலி, இக்பால் 3859

அலி, செய்யித் அபுல் ஹசன் 3142




படிப்பகம்

www.padippakam.com



அழகரசன், வே.அந்தனி ஜான் 3903
அறபாத், ஓட்டமாவடி **பார்க்க** ஓட்டமாவடி அறபாத்
அறவணடிகள் 3088
அன்வர்தீன், ஏ. **பார்க்க** திவ்விய பிரகாஷ்
அனலை. ஆறு. இராசேந்திரம் **பார்க்க** இராசேந்திரம், அனலை ஆறு.
அனஸ், எம்.எஸ்.எம். 3798
அனார். 3429
அஸ்ஸுஹைமீ, ஸாலிஹ் ஸயீத் 3134
அஸீம், இஸத் ரெஹானா **பார்க்க** அனார்
அஷ்ரஃப், M.H.M. 3149, 3466
ஆசீர்வாதம், வண. சூ. 3061
ஆசைத்தம்பி **பார்க்க** கஜேந்திரன், கந்தையா
ஆதித்த நிலா 3571
ஆபிதீன், பீ.ஜைனுல் 3133
ஆயிலியன் 3556
ஆயிஷா, எம்.எச்.எஸ். 3323-24
ஆயிஷா, பேகம் பவானி 3132
ஆர்னோல்ட், ஜே.ஆர். **பார்க்க** சதாசிவம்பிள்ளை,அ.
ஆரியசிங்க, கே. 3314
ஆறுமுகநாவலர் 3092, 3105,
ஆறுமுகம், சீ. 3222
ஆனந்தன், காசி. 3441
ஆனந்தன், வே. 3401
இக்பால், கே.எம்.எம். 3162, 3403
இஃபால், அல்லாமா 3831,
இத்ரீஸ், ஈழக்குயில் **பார்க்க** ஈழக்குயில் இத்ரீஸ்
இந்திரன் 3927
இந்து மகேஷ். 3662, 3709, 3912,
இப்றாஹீம், ஏ.எஸ். **பார்க்க** மூதூர் கலைமேகம்.
இமயவரம்பன் 3872
இர்ஷாத், எம்.ஏ.எச்.எம். 3689
இரகுநாதன், என். 3314
இரகுபரன், க. 3263, 3736, 3755-56, 3759,
இரத்தினசிங்கம், கா.வை. 3972
இரத்தினம், இ.3340, 3436, 3832, 3948,
இரத்தினவேலோன், புலோலியூர் ஆ. 3625, 3644, 3738, 3949
இரபிசிங், ம.செ. 3999
இரவிக்குமார், பா. 3570,
இரவீந்திரன், கனகரத்தினம் **பார்க்க** கனகரவி
இரவீந்திரன், ந. 3743, 3761,
இராசதுரை, தையிட்டி அ. 3548
இராசயோகன், இராசவல்லவன் 3365
இராசரத்தினம், கணபதி 3334
இராசரத்தினம், தெ.வ. 3221
இராசரத்தினம், வ.அ. 3681, 3691, 3693,
இராசேந்திரம், அனலை ஆறு. 3481
இராசேந்திரம், சோ. 3358, 3424, 3508,
இராசேந்திரன், மா. 3944
இராசையா, இ.பொ. 3048,
இராசையா, வ. 3765,
இராதாகிருஷ்ணன், முத்து 3566
இராமசாமி, கே.வி. 3880
இராமலிங்கம், வள்ளிநாயகி **பார்க்க** குறமகள்
இராஜ்கண்ணா. 3373
இராசதுரை, நவீனன் எடில்பேட் 3835,



படிப்பகம்

www.padippakam.com




இராஜநாயகன், சு. 3603

இராஜரட்ணம், ஜெகதீஸ்வரி 3479

இராஜலிங்கம், வே. 3468

இராஜேஸ்வரன், இ. **பார்க்க** விஜயேந்திரன்.

இலங்கையன் 3868

இளங்கீரன், சுபைர் 3896

இளங்கோவன், சு. 3349

இளவாலை அமுது **பார்க்க** அமுது, இளவாலை

இஸ்மாஈல், எஸ்.எச்.எம். 3123, 3134, 3150, 3156, 3172, 3176

ஈழக்குயில் இத்ரீஸ் 3409

ஈழத்துப் பூராடனார் **பார்க்க** செல்வராசகோபால், க.தா.

ஈழமுருகதாசன். 3368

ஈழவன் 3510

உதயகுமார், ஆர். **பார்க்க** உதயன், குடத்தனை

உதயச்சந்திரன், வி.என்.எஸ். 3013

உதயசூரியன், தி. 3633, 3810,

உதயணன் 3656,

உதயன், குடத்தனை 3733

உபைதா, ஏ.எச்.அபூ 3138,

உமர், முஹம்மது 3148

உயன்வத்தை றம்ஜான் 3027

உவெஸ்லி ஐயர், ஜோன் 3077

உவைஸ், ம.முகம்மது 3783

உவைஸ் கனி **பார்க்க** கனி, உவைஸ்

ஊரெழு கதிரமலையான் **பார்க்க** கதிரவேலு, ச.

எதிர்வீரசிங்கம், க. 3333

எஸ்தாக்கி, நீ. 3292

ஐங்கரன், விக்னேஸ்வரன் **பார்க்க** சார்ள்ஸ்

ஐயாத்துரை, அரச. 3080

ஓட்டமாவடி அறபாத் 3140, 3554, 3619,

ஓர், வில்லியம் டபிள்யு 3081

ஓர்வல், ஜோர்ஜ் 3838

கண்ணன், கே. 3307

கணபதி, புசல்லாவை தே. 3391

கணபதிப்பிள்ளை, க. 3527

கணபதிப்பிள்ளை, சி. 3758

கணபதிப்பிள்ளை, பவன் 3642

கணபதிப்பிள்ளை, மு. 3924,

கணேசமூர்த்தி, க.கரு. 3112

கணேசமூர்த்தி, பொன். 3706,

கணேசலிங்கம், கே.ரி. 3213

கணேசலிங்கம், சு. 3103

கணேசலிங்கம், யோகேஸ்வரி 3369

கணேசலிங்கன், செ. 3047, 3055, 3057, 3202, 3211, 3367, 3379-81, 3616, 3665, 3667-68, 3680, 3694, 3698, 3707-08, 3836, 3898,

கணேசவரதன், பீ. 3336

கணேசன், கணபதி 3556, 3994

கணேஷ், கே. 3834

கதிரவன், எஸ். 3886

கதிரவேலு, ச. 3106-07, 3863,

கதிரவேலு, த. 3264

கந்தசாமி, ஆ. 3776

கந்தசாமி, இ.க. 3064, 3954

கந்தசாமி, க. **பார்க்க** கரவைக்கிழார்

கந்தசாமி, க.ச. 3355

கந்தசாமி, ரதிதேவி **பார்க்க** தாமரைச்செல்வி

கந்தவனம், வி. 3249, 3444, 3473, 3507, 3912, 3953, பின்.05

கந்தவேல், மு.ஆ. 3024




படிப்பகம்

www.padippakam.com



கந்தையா, ஆறுமுகம் 3012, 3099, 3100, 3109,

கந்தையா, சகி 3090

கந்தையா, ந.சி. 3171, 3298-99, 3384, 3387-89, 3775, 3777, 3786, 3803-05, 3807, 3813, 3815, 3817-19, 3822, 3829, 3941, 3957, 3970,

கந்தையா பண்டிதர் 3462

கந்தையா, மு. 3105,

கந்தையா, ராம் 3090

கம்பதாசன் 3541

கமலநாதன், சா.இ. 3986

கமலநாதன், கமலா 3986

கமலரூபன், பொ. 3752,

கமால், திக்குவல்லை 3593, 3597, 3626, 3645, 3683, 3792,

கயிலாசநாதன், வை.அ. 3390

கரவைக்கிழார் 3432

கரவைதாசன் 3043

கரிகாலன் 3881

கரீம், எம்.வை.ஏ. 3161,

கருணாகரன் 3427

கருணாநிதி, மா. 3205, 3237, 3897,

கருணாரத்தின, விக்கிரமபாகு 3208

கருணைநாயகம், மே.ம. 3262

கருமணி 3635

கல்கிதாசன் **பார்க்க** கனகசபாபதி, எஸ்.பி.

கல்லாறு சதீஷ் 3604

கல்வயல் வே.குமாரசாமி. **பார்க்க** குமாரசாமி, கல்வயல் வே.

கலாலட்சுமி 3740

கலியாணசுந்தரனார், வி. 3071

கலீல், மடவளை 3448, 3557,

கலைச்செல்வி, மண்டைதீவு 3725

கலைமேகம், மூதூர் **பார்க்க** மூதூர் கலைமேகம்

கலையரசன் 3279

கனகசபாபதி, எஸ்.பி. 3987

கனகசபாபதி, பொ. 3371-72

கனகசுந்தரம்பிள்ளை, தி.த. 3940

கனகமூர்த்தி, சின்னையா 3086

கனகரட்ணம், கந்தையா 3225

கனகரத்தினம், இரா.வை. 3780,

கனகரத்தினம், கே.ரீ. 3161,

கனகரவி 3514

கனகரெட்னம், ராஜகுரு சேனாதிபதி 3809,

கனகலிங்கம், செல்லப்பா தியாகராஜா 3282

கனி, உவைஸ் 3434

கனி, ஏ.எம். 3281

கஜன் **பார்க்க** கஜேந்திரன், கந்தையா

கஜேந்திரன், கந்தையா 3741,

கஸ்பார், செகத். 3808

காசிம், நிலார் என். 3592

காண்டீபன், ப. **பார்க்க** ஈழவன்

காதர் லெப்பை, அ.லெ.அப்துல் 3503

காந்தா, அ. 3889

கார்த்திகேசு, மாத்தளை **பார்க்க** மாத்தளை கார்த்திகேசு

காஸிம், M.M. 3256

கிங்ஸ்பரி, பிரான்சிஸ் 3067

கிருஷ்ணசாமி, பொன். 3221

கிருஷ்ணசுவாமி, பொ. 3730

கிருஷ்ணபிள்ளை, கிருஷ்ணநிதி 3295

கிருஷ்ணபிள்ளை, சி. **பார்க்க** திமிலைத் துமிலன்.

கிருஷ்ணபிள்ளை, ஹென்றி அல்பிரட் 3063-64



படிப்பகம்

www.padippakam.com



கிருஷ்ணராஜா, சோ. 3328
கிருஷ்ணன், எஸ்.பி. 3572, 3833,
கிருஷ்ணா 3022
கிருஷ்ணானந்தசிவம், க. 3895
கிறிஸ்ரியன், மா.கி. 3718
கீதபொன்கலன், எஸ்.ஐ. 3167, 3963,
கீதபொன்கலன், சந்தியாபிள்ளை 3973
குகதாசன், சண்முகம் 3229
குகதாசன், நிலா 3408
குகபாலன், கா. 3111, 3120, 3165, 3840, 3847, 3983-85,
குடத்தனை உதயன் **பார்க்க** உதயன், குடத்தனை
குணநாதன், ஓ.கே. 3375, 3378, 3731,
குணநாயகம், கு. 3899
குணராசா, கந்தையா 3309, 3595, 3612, 3653, 3666, 3669, 3684, 3688, பின்.06, பின்.19
குணராஜா, சுதர்ஷனி 3877
குத்தூஸ், அப்துல் 3519
குத்ப், அஷ் ஷஹீத் ஸெய்யித் 3127
குமார், மல்லிகை சி. 3632
குமார் மூர்த்தி 3591
குமாரசாமி, க.இ. 3113,
குமாரசாமி, கல்வயல் வே. 3357, 3756,
குமாரசாமி, சின்னத்துரை 3883
குமாரசாமி, நல்லைக்குமரன் 3838
குமாரசாமி, ஜெயக்குமார் **பார்க்க** பாரதிபாலன்
குமாரசுவாமி, ஆனந்த கே. 3329, பின்.09
குமாரசுவாமிப்பிள்ளை, அ. 3385
குமாரசுவாமிப் புலவர், அ. 3942
குமாரஸ்வாமி, த.நா. பின்.09
குலத்துங்க, மானெல் ரூபா ரஞ்சினி 3231
குலரத்தினம், க.சி. 3320, 3937, பின்.10
குலேந்திரன், சபாபதி 3069
குலேந்திரன், பொன். 3273, 3643,
குலேந்திரன், வ.மா. 3956,
குழந்தை, நற்குணராஜா 3295
குழந்தைவேல், விமல் 3594
குறமகள் 3498
கைலாசநாதக் குருக்கள், கா. 3862
கைலாசபிள்ளை, த. 3092
கைலாசநாதன், இராஜலட்சுமி 3086
கொக்கூர்கிழான் **பார்க்க** இரத்தினசிங்கம், கா.வை.
கொன்ஸ்ரன்ரைன், கொ.றொ. 3331
கோணேசராஜா, ந. 3257
கோபாலகிருஷ்ண ஐயர், ப. 3893
கோவிலூர் செல்வராஜன் 3487
கோவைக்கிழார் **பார்க்க** குமாரசாமி, க.இ.
கௌரி 3456
சக்திசாந்தன் 3493, 3495-96
சக்திதாசன், இணுவை 3469
சக்திவேல், பொன். 3959
சங்கர் 3845
சச்சிதானந்த சிவம், வை. **பார்க்க** ஞானரதன்
சச்சிதானந்தன், சாந்தி 3163
சட்டநாதர், செ. 3910
சடாகோபன் 3485
சண்முகதாஸ், அ. 3748, 3766,
சண்முகதாஸ், மனோன்மணி 3177, 3278, 3770,
சண்முகநாதன், நா. 3186,



படிப்பகம்

www.padippakam.com



சண்முகநாதன், மலைக்கொழுந்து 3112

சண்முகபாலன், கந்தசாமி **பார்க்க** புரட்சிபாலன்

சண்முகராஜா, லா. 3345

சண்முகலிங்கம், குழந்தை ம. 3360

சண்முகலிங்கன், என். 3169-70, 3254, 3449, 3850,

சண்முகலிங்கன், நாகலிங்கம் **பார்க்க** சண்முகலிங்கன், என்.

சத்தியகுமாரன், சிவகடாட்சம்பிள்ளை **பார்க்க** மாவை. வரோதயன்

சத்தியசீலன், சமாதிலிங்கம் 3190-92, 3269, 3839,

சத்தியசீலன், பா. 3351

சத்தியநாதன், சந்தனம் 3212, 3283, 3492, 3639, 3726,

சத்யன், யோ. 3366, 3376

சதாசிவம், ஆ. 3411

சதாசிவம்பிள்ளை, அ. 3946, 3947, பின்.15

சதீஷ், கல்லாறு **பார்க்க** கல்லாறு சதீஷ்.

சந்திரசேகரம், சோ. 3205, 3237, 3239, 3247, 3776,

சந்திரசேகரன், ஜோர்ஜ் 3520

சந்துவி 3676

சபாரத்தினம், தாளையடி 3723

சபாரத்தினம், பிரேமினி **பார்க்க** தாட்சாயிணி.

சபாரத்தினம், மனோ 3311

சம்பந்தர், ஐ.தி. 3477

சமரசிங்க, சீதா சாந்தசீலி 3246,

சமரதிவாகர, அரோஷா 3592

சர்மா, பா.சி. 3242

சர்மா, விஷ்ணு 3049

சரவணபவன்,சி. 3672,

சரவணமுத்து, பாக்கியசோதி 3203

சரவணன், N. 3189

சரீஷ், தங்கவேலு 3430

சலீம், A.R.M. 3978,

சவரிமுத்து, எஸ்.டபிள்யு. 3071,

சவுந்தரநாயகம், எஸ்.எல். **பார்க்க** வன்னியூர்க் கவிராயர்

சற்சொரூபவதி **பார்க்க** நாதன், சற்சொரூபவதி

சாந்தன், ஐயாத்துரை 3563, 3578, 3580, 3587, 3590, 3623, 3636, 3677, 3744,

சாந்தையூரான் 3745

சாம்சன், ஜெயந்தி 3463

சாமிஜி 3869

சார்ள்ஸ் 3416-17, 3435

சாரல்நாடன் 3867, 3960, 3974,

சானா 3825

சாஹிப், உஸ்மான் 3122

சித்தி அமரசிங்கம் **பார்க்க** அமரசிங்கம், த.சித்தி

சிதம்பரசிவன், ப. 3249

சிதம்பரநாதன், எஸ்.சி.எஸ். 3058

சிதம்பரநாதன், ந. 3303

சில்வா, S.F.D. 3200

சிலோன் விஜயேந்திரன் **பார்க்க** விஜயேந்திரன்

சிவகாந்தா, பி. 3316

சிவகுமார், மாரிமுத்து 3491

சிவகுமாரன், கே.எஸ். 3561, 3771, 3790,

சிவகுமாரன், புஷ்பா 3247

சிவகுமாரன், மு.க.சு. 3035-36, 3330, 3420



படிப்பகம்

www.padippakam.com



சிவகுருநாதன், ஆர். 3204
சிவசாமி, தி. **பார்க்க** தில்லைச்சிவன்
சிவசுப்பிரமணியம், கோட்டையூர் என். 3989,
சிவசுப்பிரமணியம், த. 3588,
சிவசேகரம், சி. 3423, 3464, 3524, 3769,
சிவஞானசுந்தரம், இ.க. 3102,
சிவஞானசுந்தரம், சி. 3812, 3827-28,
சிவஞானசுந்தரம், செ. 3354, 3525, 3606, 3768,
சிவதாசன், அரியாலையூர் சி. 3913, 3916,
சிவநாதன், நகுலா 3359
சிவநிர்த்தானந்தா, எஸ். 3302, 3304, 3787,
சிவநேசச்செல்வன், ஆ. 3039,
சிவநேசராஜா, அ. 3271-72
சிவபாதம், புத்தொளி ந. 3951
சிவபாலராசா, ம. 3313
சிவபாலு, த. 3953
சிவயோகலிங்கம், வே. 3198,
சிவரமணி 3455
சிவராசா, வி.ஏ. 3059,
சிவராசா, க. 3260
சிவராம், தர்மரத்தினம் 3854
சிவராம், தருமு **பார்க்க** பிருமிள், தர்மோ ஜீவராம்
சிவராஜா, அம்பலவாணர் 3196, 3198, பின்.02, பின்.03
சிவராஜா, மு. **பார்க்க** முல்லையூரான்
சிவராஜா, வண்ணை சே. 3599
சிவலிங்கம், எஸ்.ரி.ஆர். **பார்க்க** உதயணன்
சிவலிங்கம், மு. 3577
சிவலிங்கராஜா, எஸ். 3715, 3751, 3933,
சிவலோகநாதன், சங்கரப்பிள்ளை 3098,
சிவானந்தம், தா. 3253
சிவானந்தன், இ. 3344
சிவானந்தன், எம். 3870
சிவேந்திரன் 3635
சிற்பி **பார்க்க** சரவணபவன், சி.
சிறிரஞ்சன், என். 3217
சிறிவர்த்தன, றெஜி 3207
சிறீஸ்கந்தராசா, இ. 3006, 3820-21, 3826, 3866, 3936,
சின்னத்தம்பி, மா. 3234, 3236, 3238, 3243,
சிஹாப்தீன், அஷ்ரப் 3476
சுக்ரி, எம்.ஏ.எம். 3126,3142,
சுகுமார், பாலசிங்கம் 3531, 3851,
சுசீந்திரராஜா, சு. 3240
சுதந்திரராஜா, சி. 3377, 3655,
சுதாகரன், மகாலிங்கம் 3267
சுதாகினி, எஸ். 3392
சுதாராஜ் 3285, 3589, 3827, பின்.04, பின்.08, பின்.13
சுந்தரம்பிள்ளை, அராலியூர் ந. 3814,
சுந்தரலிங்கம், இ.சி. **பார்க்க** திருமலை சுந்தா
சுந்தரேசன், வைரமுத்து 3475
சுப்பிரமணியம்., என்.கே. 3060,
சுப்பிரமணியம், பன்னைமூலை ந. 3397
சுப்பிரமணியம், க.அருள் 3652, 3658, 3710,
சுப்பிரமணியம், தாபி 3663
சுப்பிரமணியம், மு.க. 3264, 3341
சுப்பிரமணியம், வே. 3722



படிப்பகம்

www.padippakam.com



சுப்பிரமணியன், கௌசல்யா 3762-63
சுப்பிரமணியன், நா. 3762-63
சுப்ரமணியன், காலப்ரதீப் 3774
சுபையிர், A.C.M. 3127
சுமணரத்தின, டபிள்யூ. 3044
சுமதி, தி. 3570
சுரனிமல, ஈ.எல். 3201
சுரேஷ்குமார், கார்மேகம் 3860
சுவர்ணராஜா, நிலக்ஷன் 3849
சுஜந்தன், கா. 3671,
சூசைப்பிள்ளை, சகோதரி மேரி 3072
செங்கைஆழியான் **பார்க்க** குணராசா, கந்தையா
செந்தாரகை 3454
செந்திநாதன், கனக. 3264, 3410, 3750, 3902,
செபரத்தினம், க. 3939
செம்பியன் செல்வன் 3714
செய்யிது ஹசன், மௌலானா, எஸ்.ஏ. 3747
செல்லத்துரை, அருணா 3979-80,
செல்லத்துரை, பூ.ம. 3096,
செல்வக்குமார், அன்ரன் 3393, 3598,
செல்வகுமார், எஸ். 3562,
செல்வமதீந்திரன் 3076
செல்வரத்தினம், இ.வே. **பார்க்க** இலங்கையன்
செல்வராசகோபால், க.தா. 3063, 3071, 3275, 3699, 3987,
செல்வராஜ், பெயாவெல் ஏ. 3443
செல்வராஜன், கோவிலூர் **பார்க்க** கோவிலூர் செல்வராஜன்.
செல்வராஜா, எம்.ரி. 3640
செல்வராஜா, என். 3015, 3020,
செல்வி 3455
செவாக், ஸ்ரீபன் 3836
சேகர் 3806
சேதுராமன், வா.மு. **பார்க்க** பெருங்கவிக்கோ
சேரன், உ. 3207, 3419, 3816,
சேவியர், ச.சதாசிவம் 3842
சொக்கலிங்கசாமி, மு. **பார்க்க** முத்துசொக்கன்
சொக்கலிங்கம், க. 3437, 3701,
சொக்கலிங்கம், வாசுகி 3791
சொக்கன் **பார்க்க** சொக்கலிங்கம், க.
சோபிகா, செ. 3268
சோம, எம்.பீ. 3044
சோமகாந்தன், பத்மா 3627, 3649,
சோமசுந்தரம்பிள்ளை, அ. 3219, 3319
சோமசுந்தரன், கு. 3528
சோமதேரர், கங்கொடவில 3088
சோமஸ்கந்தர், வை. 3116,
சௌபி, எம்.நவாஸ் 3486
சௌமியன், சுந்தரம் 3837
ஞானக்குமரன், 3270
ஞானகுமாரன், நா. 3111,
ஞானசேகர ஐயர், ஞானம் 3093-94,
ஞானசேகரன், தி. 3551, 3596, 3609, 3716, 3931, பின்.07
ஞானப்பிரகாச்சர், சுவாமி 3300, 3988,
ஞானரதன் 3717
ஞானவரதன், பீ. 3336
ஞானேந்திரன், ஏ. பின்.12
டயமண்ட், லரி 3205
டானியல், கே. 3569
டீன்கபூர் 3445



படிப்பகம்

www.padippakam.com



டேவிட், தாவீதுராசா 3312
டொமினிக் ஜீவா **பார்க்க** ஜீவா, டொமினிக்
த சில்வா, பத்மினி 3231
தங்கரத்தினம், நா.க. **பார்க்க** நகுலன்
தணிகாசலம், க.
தம்பித்துரை, கலாகேசரி ஆ. 3332, 3929,
தம்பிமுத்து, ஐ. 3231
தம்பிமுத்துப்பிள்ளை, எஸ். 3286
தம்பிராஜா, கமலா **பார்க்க** வித்யா
தம்பு-சிவா **பார்க்க** சிவசுப்பிரமணியம், த.
தம்பையா, புலோலியூர் க. 3553
தம்பையா, மங்களநாயகம் 3715,
தமயந்தி 3335, 3450
தமிழ்ச்செல்வன், கனகசுந்தரம் **பார்க்க** ஹம்சத்வனி
தமிழ்நிலா 3635
தமிழ்மாறன், வி.ரி. 3199, 3220,
தமிழவேள் **பார்க்க** கந்தசாமி, இ.க.
தர்மகுலசிங்கம், திக்கவயல் சி. 3812, 3823,
தர்மராஜா, நா. **பார்க்க** அகளங்கன்
தர்மலிங்கம், எஸ்.எம். **பார்க்க** பூண்டுலோயா தர்மு
தரங்கனி, ஏ.எஸ்.ஏ. 3342
தராக்கி சிவராம் **பார்க்க** சிவராம், தர்மரத்தினம்
தவமணிதாசன், வை.க. 3315
தளையசிங்கம், ஜெயந்தி 3517
தனராஜ், டி. 3205
தாக்ஷாயினி, க. 3103,
தாகூர், ரவீந்திரநாத் 3533,
தாட்சாயிணி 3576
தாமரைச்செல்வி 3700, 3704, 3732,
தாமரைத்தீவான் **பார்க்க** இராசேந்திரம், சோ.
திக்குவல்லை ஸப்வான் **பார்க்க** ஸப்வான், திக்குவல்லை
திமிலைத் துமிலன். 3362, 3542,
தியாகராஜா, செல்வநிதி **பார்க்க** செல்வி
திருக்குமரன், தி. 3459
திருச்சந்திரன், செல்வி 3173,
திருச்செல்வம், எஸ். 3025
திருச்செல்வம், க. 3440
திருஞானசுந்தரம், வி.ஏ. 3857, 3876
திருநாவுக்கரசு, செ. 3772,
திருநாவுக்கரசு, மு. 3210
திருமகள், ம. 3785,
திருமலை சுந்தா 3395, 3617, 3647,
திருலிங்கநாதன், ஏ. பின்.12
திரேஸ்குமார், த. 3471
தில்லைச்சிவன் 3458, 3539, 3543, 3955,
தில்லைமோகன், எம்.கே. 3675
திவ்ய பிரகாஷ். 3711
துசியந்தன், 3270,
துரை, எஸ்.எஸ். 3536
துரை, கி.செ. 3178,
துரைசிங்கம், கதிர். 3811,
துரைசிங்கம், த. 3089, 3757, 3882,
தெருத்தூசியோன் **பார்க்க** ராஜ்குமார், சி.ஆர்.
தேவகடாட்சம், கனகசபை 3575, 3586,
தேவகாந்தன் 3734, 3754,
தேவதாஸ், தம்பிஐயா 3294
தேவபானு 3635
தேவரஞ்சன், ப. 3258



படிப்பகம்

www.padippakam.com



தேவராஜா, சோ. 3399
தேவராஜா, த.சகா 3259
தேவன் யாழ்ப்பாணம் 3612
தேவானந், தே. 3354, 3529, 3922,
தேவேந்திரன், த.ம. 3350
நகுலன் 3585
நடராசன், நவாலியூர் சோ. 3049, 3085, 3087, 3160, 3329, 3383
நடராசன், பி. 3900
நடராசா, சுகந்தி **பார்க்க** அம்புலி, ந.
நடராசா, தெல்லியூர் செ. 3971,
நடராசா, வ. 3264
நடராஜா, ஆ.சி. 3265
நடேசன், என்.எஸ். 3830
நடேசன், ஜி. 3961,
நந்தி **பார்க்க** சிவஞானசுந்தரம், செ.
நமசிவாயம், இ. 3056,
நயில்ஸ், டி.றி. 3054
நல்லதம்பி, மு. 3488
நல்லலிங்கம், த. 3337
நவசோதி, க. 3943
நவும் அரவிந்தன் 3442
நவரட்ணம், விக்கி **பார்க்க** விக்கி-நவரட்ணம்.
நவரெட்ணம், ஆர். 3253
நவாலியூர் சோ.நடராசன் **பார்க்க** நடராசன், நவாலியூர் சோ.
நவாஸ்தீன், எப்.எம். 3242
நளீம், எஸ். 3431
நஜிமுதீன், எம்.எல். 3139
நஜிமுதீன், எஸ். 3291, 3482
நஜிமுதீன், ஏ.எம். 3969,
நஸ்புள்ளாஹ், ஏ. 3461
நஸிறுதீன், எஸ். 3615
நாகராஜன், இ. 3618
நாகராஜன், அநு.வை. 3550
நாகேந்திரன், சி.சு. 3965,
நாகேஸ்வரன், கனகசபாபதி 3121, 3739,
நாதன், சற்சொரூபவதி 3776
நாவண்ணன் 3540, பின்.01
நாவலன், முருகையன் **பார்க்க** பவித்திரன்
நாவுக்கரசன், சாந்தி 3091
நிசார், உ. 3439
நிதானிதாசன் 3181,
நிரூபா 3601
நிஹ்மத், எஸ்.எச். 3509, 3555,
நீர்வை பொன்னையன் 3565, 3648, 3651, 3778, 3794,
நுஃமான், எம்.ஏ. 3207
நூராணியா ஹசன் 3347-48
நெடுமாறன், பழ. 3997
நெல்லை க.பேரன் 3574, 3728
நேசன், ஜி. 3657, 3692, 3720,
நோபர்ட், எஸ்.அன்ரனி 3205, 3841,
பஞ்சாட்சரம், ச.வே. 3405
பண்டாரநாயக்க, சிறிமா ஆர்.டி. 3215
பண்ணாமத்துக் கவிராயர் 3882
பத்மநாதன், சி. 3095, 3386
பத்மநாதன், பொ. 3727
பர்ணாந்து, கே.பி. 3846
பர்த்தாஸ் சுவாமியார், வண. சீ. 3061,
பரமசாமி, சோ. 3535
பரமநாதபிள்ளை, வே. 3773,
பரீத், செய்னுத்தீன் எஸ். 3125, 3133, 3146, 3150,
பவ்ஸான், ஸாலிஹ் பின் பவ்ஸான் அல் 3129



படிப்பகம்

www.padippakam.com



பவித்திரன் 3414
பளீல், ஏ.எல்.எம். **பார்க்க** பளீல், நற்பிட்டிமுனை
பளீல், நற்பிட்டிமுனை 3014, 3484
பஷர், H.I.M.கைரூல் 3153,
பஷீர், மு. 3620,
பஹா, அப்துல் 3160,
பாக்கியநாதன், விக்னா 3394, 3418, 3446
பாசையூர் யேசுதாசன் 3290
பாயிஸ் ஜிப்ரி, எம்.யூ.எம். 3050
பார்த்திபன், ந. 3631
பாரதிபாலன் 3695
பாலசிங்கம், அன்ரன் 3964,
பாலசுகுமார் **பார்க்க** சுகுமார், பாலசிங்கம்
பாலசுந்தரம், கௌசி 3270
பாலசுந்தரம், பொன் 3477
பாலசூரிய, ஏ.எஸ். 3242
பாலசூரிய, திஸ்ஸ 3062,
பாலா, ஜோசப் **பார்க்க** ஜோசப் பாலா.
பாலேந்திரன், ச.ஆ. 3981,
பாலேஸ்வரி, ந. 3670, 3674,
பிச்சையப்பா, டீ.வீ. 3336
பியதாச, ரோஹண லக்ஷ்மன் 3402
பியாஸ், ரஷீத் எம். 3151
பிரதீபன், எஸ். 3886
பிரபாகரன், சிவவதனி 3046
பிரபாகரன், ம. 3261
பிராங், ஜோன் பி. 3205
பிருமிள், தர்மோ ஜீவராம் 3774, 3801,
பிரேம்குமார், ஆ. 3066,
பிரேமிள் **பார்க்க** பிருமிள், தர்மோ ஜீவராம்
பிலிப், ஜீ.ஜே. 3201
பிலிப்குமார், சேவக்.சி. 3858
பீரிஸ், என்.டி. 3296
பீற்றர், அம்புறோஸ் 3074
புசல்லாவை தே.கணபதி **பார்க்க** கணபதி, புசல்லாவை தே.
புத்தொளி **பார்க்க** சிவபாதம், புத்தொளி ந.
புத்பிட்டிய, ஜயசேன 3233
புதியபாரதி **பார்க்க** இராஜலிங்கம், வே.
புரட்சிக்கமால். 3478
புரட்சிகா, செ. 3889
புரட்சிபாலன் 3564,
புவனேந்திரன், த. 3912
புன்னியாமீன், பீ.எம். 3002-04, 3007-11, 3184-85, 3193-94, 3305, 3920, பின்.16
புன்னியாமீன், மஸீதா 3002-04, 3007-11, 3252, 3305, பின்.16
புனிதன் 3635
புஷ்பரட்ணம், ப.ரமு பின்.14,
புஹாரி, எம்.எச்.எம். 3476
புஹாரி, ஏ.சீ.ஏ.எம். 3149
பூண்டுலோயா தர்மு 3512
பூலோகசிங்கம், பொ. 3947, பின்.15
பெர்ணாண்டோ, ஆர்தர் ஜோன்ஸ் 3233
பெரியசாமி, வீ.கே. 3501
பெருங்கவிக்கோ 3995
பெருமாள், எஸ். 3042
பெரேரா, கே.ஏ.குணதாச 3179,
பெரேரா, சுமிகா 3592
பெனடிக்றபாலன், யோ. 3608
பெனி 3472
பேரம்பலம், வே. 3183,



படிப்பகம்

www.padippakam.com



பேரம்பலம், க. **பார்க்க** நெல்லை க.பேரன்.

பேரன், நெல்லை க. **பார்க்க** நெல்லை க.பேரன்.

பேராதனை ஷர்புன்னிசா. 3287

பேரின்பநாதன், ந. 3120

பேரின்பநாயகம், ச.ஹண்டி 3187,

பொன்சேகா, குலசேன 3837

பொன்னண்ணா, வேலணையூர் **பார்க்க** வேலணையூர் பொன்னண்ணா

பொன்னம்பலம், மு. 3800,

பொன்னம்பலம், வ. 3206

பொன்னுத்துரை, எஸ். 3538, 3570, 3952,

பொன்னுத்துரை, ஏ.ரி. 3264-65, 3915,

பொன்னையன், நீர்வை **பார்க்க** நீர்வை பொன்னையன்

பொன்னையா, ஆ. 3925

போர்வை பாயிஸ் ஜிப்ரி. **பார்க்க** பாயிஸ் ஜிப்ரி, எம்.யூ.எம்.

மக்கீன், மானா **பார்க்க** மானா மக்கீன்

மகாதேவன், ஆ. 3265

மகாலிங்கம், அப்பச்சி 3686

மகாலிங்கம், என்.கே. 3559

மகாலிங்கம், கருப்பையா **பார்க்க** மொழிவரதன்.

மகாலிங்கம், திமிலை 3659

மகேந்திரராஜா, பரமக்குட்டி **பார்க்க** ரவிவர்மன், பி.

மகேந்திரன், இ. **பார்க்க** முல்லை அமுதன்

மகேந்திரன், கோகிலா 3641

மகேந்திரன், சி. 4000

மகேஸ்வரன், எஸ். **பார்க்க** இந்து மகேஷ்.

மடவளை கலீல் **பார்க்க** கலீல், மடவளை

மணி, பெ.சு. 3991

மத்தாயஸ், அன்ரன் 3065

மத்தியூ, எஸ்.ஏ.ஐ. 3073, 3241, 3245,

மதிவாணன், பா. 3816,

மதுசூதனன் 3740

மயில்வாகனம், இரா. 3097,

மர்ஸூக், தாரிக்கா 3045,

மரியசேவியர், நீ. 3452, 3530,

மரியாம்பிள்ளை, ரூபன் 3040-41,

மருதம் **பார்க்க** ஷரிபுத்தீன், ஜின்னாஹ்

மலைமகள் 3889

மலையக வாசுதேவன் 3532

மன்சூர், எஸ்.எம். 3131,

மன்ஸூர், எம்.ஏ.எம். 3958

மனோகரன், துரை 3749, 3781-82,

மஜீட், சிஹாரா 3001

மஜீதிய்யா 3147

மஹ்ரூப், எஸ்.எல்.எம். 3005

மஹ்ரூப், ஏ.ஏ.எம். 3314

மாதவன் 3379-80

மாதுமை, சி. 3611

மஜீத் 3426, 3685,

மாத்தளை கார்த்திகேசு 3605

மாத்தளை சோமு 3552

மாத்தளை ரோகிணி 3664

மாதையா வாசகம் **பார்க்க** மலையக வாசுதேவன்

மாவை. வரோதயன். 3406

மானா மக்கீன். 3038, 3168,

மிர்ஷான், அபு 3592

மீராமொஹிதீன், ஜே. 3158,



படிப்பகம்

www.padippakam.com



முத்துக்குமாரசுவாமி, வை. 3533
முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, கு. 3462
முத்துசாமி, பொ. 3112
முத்துசொக்கன் 3513
முத்துமீரான், எஸ். 3288, 3293, 3433, 3558, 3634,
முத்துலிங்கம், அ. 3737
முபாரக் ஸலபி, எம்.எல். 3129
முரளீதரன், சு. 3276
முருகபூபதி, லெ. 3568, 3579, 3793, 3843, 3918, 3950,
முருகானந்தன், அனுசூயா 3166
முருகானந்தன், ச. 3607
முருகேசு, லலிதாமினி 3788
முருகையன், இ. 3497
முல்லை அமுதன் 3661, பின்.20
முல்லைமணி **பார்க்க** சுப்பிரமணியம், வே.
முல்லையூரான் 3467
முனவ்வர், அஹ்மத் 3865
முஸம்மில், எம்.ஐ.எம். 3624
முஹம்மத், ரஹீமா 3921,
முஹம்மது, எம்.கே.ஹபீபு 3967-68,
முஹம்மது, சையது 3545
முஹம்மது, முக்தார் ஏ. 3135,
முஹியத்தீன், எம்.ஐ.எம். 3182, 3188
முஹியித்தீன், சாந்தி 3476
மூதூர் கலைமேகம் 3483
மெலிஞ்சி முத்தன் 3500
மேமன்கவி 3779
மைக்கல், வத்தியூர் **பார்க்க** வத்தியூர் மைக்கல்.
மொழிவரதன் 3679
மொஹிதீன், M.I.M. **பார்க்க** முஹியத்தீன், எம்.ஐ.எம்.
மோகனதாசன், கௌரி 3505
மௌதூதி, அபுல் அ/லா 3138
மௌனகுரு, சி. 3526, 3767, 3935,
மௌனகுரு, சித்திரலேகா 3592
யசோதா, சி. 3261
யாக்கூத், எம்.எச்.எம். 3246, 3314
யாசிர், ஸொமையாஹ் 3157
யாத்திரீகன். 3413
யூசுப், எம்.எஸ்.எம். 3396
யேசுதாசன், பாஷையூர் **பார்க்க** பாசையூர் யேசுதாசன்
யேசுராசா, அ. 3614
யோகநாதன், செ. 3374, 3646, 3654, 3690, 3702-03, 3724, 3729,
யோகராசா, செ. 3175, 3746,
யோகராஜா, ஆ. 3310
யோகராஜா, ஏ.ஜீ. 3345
யோகேஸ்வரி, சி. 3911
யோசெவ், எஸ்.எம். 3082
ரகுநாதன், அப்புத்துரை **பார்க்க** சந்துவி
ரசூல், டீ.எஸ்.ஏ. 3346
ரஞ்சகுமார். பின்.18
ரத்னாயக்க, டபிள்யூ 3306
ரவிவர்மன், பி. 3621
ரஜனி 3705, 3713, 3721, 3735,
ரஸ்ஸாக், எம்.ஐ.அப்துர் 3975
ராகுல, வல்பொல 3087
ராசியா, பாத்திமா 3161,
ராசீக், எம்.எம். 3231, 3314
ராமேஸ்வரன், சோ. 3363, 3523, 3697, 3712,
ராமையா, சி.வே. 3490
ராமையா, சின்னவேலு **பார்க்க** ராமையா, சி.வே.
ராஜ்குமார், சி.ஆர். 3051,3068



படிப்பகம்

www.padippakam.com



ராஜகோபால், ஏ. **பார்க்க** செம்பியன் செல்வன்
ராஜகோபால், ஈ.கே. 3028, 3622,
ராஜேந்திரன், பி.எல். 3992,
ரூபசிங்க, குமார் 3204
ரொபர்ட், கிங்ஸ்லி 3026
லரீப், எஸ்.எல். **பார்க்க** கலையரசன்
லிங்கதாசன், க.ப. 3052
லூதர், மார்ட்டின். 3071
லேகம்கே, தயாலதா 3201
லோகம்பாள், எஸ். 3982,
லோகநாதன், தயாநிதி 3250
வசந்தகுமார், எம்.எஸ். 3280
வடிவேல், இ. 3108,3116,
வண்ணை தெய்வம் 3909
வத்தியூர் மைக்கல் 3511
வரோதயன், மாவை. **பார்க்க** மாவை. வரோதயன்.
வன்னியூர்க் கவிராயர் 3802
வாகரைவாணன் 3070, 3522, 3861,
வாசுதேவன் 3465
வாஞ்சிநாதன், மு.வே.யோ. 3457
வாஸ், கே.வி.எஸ். **பார்க்க** ரஜனி
விக்கி-நவரட்ணம். 3398
விக்டோரியா, அ.வி. 3062
விக்டோரியா, அ.விஜயன் 3183
விக்னேஸ்வரன், P. 3534
விசாகரூபன், கிருஷ்ணபிள்ளை 3274, 3784,
விசாகரூபன், மைதிலி 3017, 3019,
வித்தாரண, ஜினதாச 3222
வித்தியானந்தன், சு. 3824
வித்யா 3673
விந்தன், செ. 3343
விமலராஜன், சைமன் **பார்க்க** தமயந்தி
வில்லவராயர், மீரா 3336
விஜயகுமார், அப்புக்குட்டி 3425
விஜயசிங்கம், என். 3962,
விஜயசுந்தரம், நல்லையா 3119
விஜயராணி, அருண் 3584
விஜயலட்சுமி, எஸ். 3325
விஜயன், மணல்று 3884, 3887,
விஜயேந்திரன் 3515, 3541, 3789,
விஜேந்திரன், காவலூர் இ. 3334
விஜேரத்ன, மடுளுகிரியே 3088
விஸ்வநாதன், கலா 3494
வீரக்கோன் முதலியார், ஐ. 3108,
வீரகத்தி, க. 3301, 3428,
வெகுஜனன் 3872
வெல்லாவெளி கலாச்சாரப்பேரவை 3023
வேல்முருகு, அம்பிகை 3284
வேல்முருகு, ஆ.சி. **பார்க்க** வேலழகன், ஆ.மு.சி.
வேலணையூர் பொன்னண்ணா 3110, 3470,
வேலழகன், ஆ.மு.சி. 3637, 3696,
வேலாயுதம், மகேஸ்வரி 3118
வேலாயுதன், கா. 3602
வேலுப்பிள்ளை, சி.வி. 3730,
வேலுப்பிள்ளை, சு. 3630
வேலுப்பிள்ளை, மணி 3796
வைத்தீஸ்வரன், கா. 3317
வொஸ்னியாடோ, ஸ்டெலா 3247
ரஞ்சனி 3518
ரம்ஜான், உயன்வத்தை **பார்க்க** உயன்வத்தை ரம்ஜான்
ரஷ்மி. 3400
ரியாள், எம்.ஜே.எம். 3152,
ஜபார், ரகுமான் ஏ 3613



படிப்பகம்

www.padippakam.com



ஜயசிங்க, கே.எச். 3183,
ஜயவர்த்தன, டி.எம். 3982,
ஜலீல், ஏ.ஸீ.எம். 3144
ஜின்னாஹ் ஷரிபுத்தீன் **பார்க்க** ஷரிபுத்தீன், ஜின்னாஹ்
ஜீவரட்ணம், எம். 3079
ஜீவராஜன், கே. 3314
ஜீவா, அந்தனி 3218, 3844, 3908,
ஜீவா, டொமினிக் 3021, 3030-34, 3037, பின்.11
ஜீவாண்ணன் **பார்க்க** ஜீவரட்ணம், எம்.
ஜுனைதீன், காத்தான்குடி எம்.எம். 3407
ஜுனைதீன், பேராதனை ஏ.ஏ. 3521
ஜுனைதீன், ஜெக்கியா பின்.21
ஜெமீல், S.H.M. 3892,
ஜெய்சங்கர், சி. 3361
ஜெயகாந்தன் 3993
ஜெயச்சந்திரா, சோ. 3560,
ஜெயசீலன், த. 3447
ஜெயப்பிரதாபன், அ. 3257
ஜெயபால், வி. 3504
ஜெயபாலன், வ.ஐ.ச. 3412
ஜெயமோகன் 3990
ஜெயரஞ்சித், எ.த. 3923,
ஜெயராசா, சபா. 3244
ஜெயராஜ், இ. 3753,
ஜெயராஜா, அனிஸ்டஸ் 3874
ஜோகரட்னம், நவஜோதி 3422
ஜோசப், எஸ்.எம். 3082
ஜோசப், றெக்ஸ் 3075
ஜோசப் பாலா 3610,
ஜோர்ஜ், புஷ்பராணி 3581, 3660, 3682,
**ஶ்ரீ மேலும் பார்க்க** சிறீ
ஶ்ரீ இந்துசனன். 3297
ஶ்ரீ கணேசன், கந்தையா 3802,
ஶ்ரீ கிருஷ்ணானந்த சர்மா. 3905
ஶ்ரீ பிரசாந்தன் 3742, 3758, 3760, 3797,
ஶ்ரீ ஜோன்ராஜன், எஸ். 3719
ஶ்ரீகந்தராஜா, க. 3628
ஶ்ரீகாந்தலட்சுமி, அருளானந்தம் 3016
ஶ்ரீதர், எஸ்.ஏ. 3923,
ஶ்ரீதரன், இராசையா 3338
ஶ்ரீதரன், பொகவந்தலாவை சோ. 3404
ஶ்ரீதரன், ஷீலா 3303
ஶ்ரீநிவாச அய்யர், ஶ்ரீ செம்மங்குடி ஆர். 3339
ஶ்ரீரங்கநாதன், எஸ். 3314
ஶ்ரீஸ்கந்தராஜா, தி. பின்.12
ஸப்வான், திக்குவல்லை 3567
ஸர்தாபி, சித்தி **பார்க்க** பேராதனை ஷர்புன்னிசா.
ஸலபி, எஸ்.எச்.எம். **பார்க்க** இஸ்மாஈல், எஸ்.எச்.எம்.
ஸலாஹுத்தீன், எச். 3053,
ஸாயிக் 3132
ஷர்மிலன், தேவராசா 3364
ஷரிபுத்தீன், ஆ.மு. 3128, 3415, 3480, 3502
ஷரிபுத்தீன், ஜின்னாஹ் 3352-53, 3474, 3489, 3544-47, 3629, 3687, 3776,
ஷரீஅத்தி, அலி 3157,
ஷியாம், மடவளை அன்சார் எம். 3421
ஷெரிபுத்தீன், ஜின்னாஹ் **பார்க்க** ஷரிபுத்தீன், ஜின்னாஹ்
ஹக், எஸ்.எல்.ஏ.அப்துல் 3223



படிப்பகம்

www.padippakam.com



ஹக், லறீனா அப்துல் 3516, 3678,
ஹக்கீம், ரவூப் 3214
ஹசன் 3546
ஹசன், எம்.எச்.எம். 3246
ஹஸன், மருதூர் ஏ. 3453
ஹசன், நூராணியா பார்க்க நூராணியா ஹசன்
ஹசன், எஸ்.எம்.ஏ. 3831, 3873, 3907,
ஹசன், எஸ்.எல்.எம். 3154,
ஹபீப் முஹம்மத், யஹ்யூஹ் அல் 3146
ஹபீபுல்லாஹ், எம்.டி. 3966,
ஹம்தூன், நிம்ஸான் 3235
ஹம்சத்வனி 3451
ஹம்ஸா, எஸ்.ஐ.எம். 3161,
ஹமீத், ஏ.ஸி.சாஹுல் 3159,
ஹமீது, ரீ.எம்.ஷாஹுல் 3143,
ஹலீம்தீன், எம்.எச்.எம். 3209
ஹன்சிர், A.W.M. 3871
ஹனிப், எம்.எஸ்.எம். 3346
ஹனீபா, எஸ்.எம். 3878
ஹார்னர், ஐ.பி. பின்.09
ஹாஸிம், ஏ.எல்.எம். 3209
ஹிஸ்புல்லாஹ், எஸ்.எச். 3162



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வாழ்த்துகின்றனர்

**திரு. அந்தனி ஜீவா, த.பெ.இல. 32, கண்டி**
**(ஆசிரியர்: கொழுந்து, ஸ்தாபகர்: மலையக வெளியீட்டகம்.)**

உங்களது தனிமனித முயற்சியை எவ்வாறு பாராட்டுவது என்று தெரியவில்லை. ஒரு பல்கலைக்கழகமோ அல்லது ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணியை தனிமனிதராகச் சாதித்திருக்கிறீர்கள். கடந்த சில தினங்களாக நூலதேட்டம் 1,2, இரண்டையும் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன். என்னால் முடிந்தவரை இந்த நூல்தேட்டத்தை அறிமுகம் செய்வேன்.

*(நூல்தேட்டம் கடிதக் கோவையிலிருந்து 10.08.2004)*

**கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை, 30. கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.**

உங்களது தொகுப்பு நூல்களான ஈழத்து நூல்களின் தேட்டம் 1, தேட்டம் 2 நூல்களைப் பார்த்தேன். அருமையான நூல்கள். கஷ்டப்பட்டுத் தேடி எடுத்து வாசித்து, மதிப்பீடு செய்து எழுதியிருக்கிறீர்கள். எவ்வளவு நேரம், எவ்வளவு பெரிய முயற்சி. நினைத்துப் பார்க்க முடியாத சாதனை. தனி ஒருவரே எல்லாவற்றையும் செய்தார் என்று நினைத்துப் பார்க்கவே முடியாமல் இருக்கிறது. எனது 16 நூல்கள் பற்றி எழுதியிருக்கிறீர்கள். சரியாகவே கூறியிருக்கிறீர்கள். நான் நூல்களை அனுப்பாமலே எனது நூல்களைத் தேடி எடுத்து, வாசித்து, அவை பற்றி எழுதிமைக்கு எனது பாராட்டும் நன்றியும். இரண்டு நூல்களை விட்டுவிட்டீர்கள். அவற்றை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். 3ம் தொகுதியில் சேர்த்துக் கொள்ளவும்.

*(நூல்தேட்டம் கடிதக் கோவையிலிருந்து 17.08.2004)*

**ஸ்ரீ பிரசாந்தன், கம்பன் கோட்டம், இல. 11, இராமகிருஷ்ணா தோட்டம், கொழும்பு 6**

எமது கழக நூலகத்திற்கென தங்கள் பெருமுயற்சியில் உருவான நூல்தேட்டம் (தொகுதி 2) நூலின் பிரதியை பூபாலசிங்கம்



படிப்பகம்

www.padippakam.com

புத்தகசாலையில் அண்மையில் கொள்வனவு செய்துகொண்டபோது, தாங்கள் ஈழத்து வெளியீடுகளை அடுத்த தலைமுறையும் அறிந்து கொள்ளவேண்டும் என்கின்ற ஆவலில் மேற்கொண்டுவரும் பயன்மிக்க பணியை அறிந்துகொள்ள நேர்ந்தது. தங்களுக்கு எமது பாராட்டுக்கள். சமுதாயச் சிந்தனையோடும், கடும் உழைப்போடும் தாங்கள் மேற்கொண்டுவரும் பணி காலம் கருதிய பணியாகும். கடும் போரால் உலகெங்கும் சிதறிக் கிடக்கும் எமது இனத்தின் அறிவுக் கொழுந்துகள் பற்றிய தகவல்களை ஒரே பார்வையில் திரட்டித் தருவது என்பது மிகுந்த அவசியமான பணியாகும். அவ்வகையிலான நூல்கள் தொடர்ந்தும் வெற்றிகரமாக வெளிவர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

*(நூல்தேட்டம் கடிதக் கோவையிலிருந்து...2005)*

**வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் - 412, Milner Avenue, Scarborough, Ontario, MIB 1Z9, Canada *(முதுபெரும் எழுத்தாளர்)***

இலக்கியத் தகவற் திரட்டு என்னும் பகுதியில், தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் என்னும் எனது நூலினை அறிமுகஞ் செய்துதவிய தங்களின் பெருந்தன்மையைப் பெரிதும் மதிக்கின்றேன். மிகவும் விரிவாக அறிமுகம் செய்துள்ளீர்கள். உங்களின் அன்பைப் பெரிதும் மதிக்கிறேன். உங்களின் அரிய பணியின் மூலம் எழுத்தாளர்கள் ஊக்கம் பெறுகிறார்கள். அறிமுகம் பெறுகிறார்கள். உங்கள் உயரிய பணி விரிவடைந்து உயர்வடைய வாழ்த்துகிறேன். நூல்தேட்டம் மூலம் பயனுள்ள பணியினை அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் உங்களின் அன்பான தொடர்பு கிடைத்தமை மன நிறைவைத் தருகின்றது. உங்களின் பணி, காலத்தின் தேவையறிந்து ஆற்றப்படும் பணி – மென்மேலும் சிறப்புற்றோங்கிட எல்லாம் வல்ல இறைவனை வழுத்தி விடைபெறுகிறேன்.

*(நூல்தேட்டம் கடிதக் கோவையிலிருந்து...30.04.2006)*

**திரு. எஸ்.பி.கிருஷ்ணன், 145, கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி *(ஈழத்து எழுத்தாளர்)***

நூல்தேட்டம் பக்கங்களில் உங்கள் பரந்த அனுபவங்கள் பற்றிப் பார்க்கக் கிடைத்தது. சி.வை.தாமோதரம்பிள்ளை தமிழ்நாட்டில் இருந்து மறைந்துபோகும் நூல்களை புதுப்பித்து வெளியிட்ட பணியை ஞாபகப்படுத்தின. பாரிய பணி. ஆனால் அது உரிய இடங்களைச் சென்றடைகின்றதா என்று எனக்குத் தெரியவில்லை.

*(நூல்தேட்டம் கடிதக் கோவையிலிருந்து ..29.04.2006)*



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# நூல் தேட்டம் - 4

**என். செல்வராஜா**

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல் தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும் இரண்டாவது தொகுதி 2004இலும் மூன்றாவது தொகுதி 2005இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான நான்காவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக்குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இத்தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 3001இலிருந்து 4000வரை தொடரிலக்கமிடப்பட்டுள் ளன. இந்நூல் ஈழத்துத் தமிழியல் தொடர்பாக ஆர்வம் கொண்ட அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.



ஈழத்து நூலகவியல் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் நன்கு அறிமுக மானவர் திரு. என். செல்வராஜா அவர்கள். தாயகத்தில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் தன் நூலகப்பணியை ஆரம்பித்த இவர், பின்னர் யாழ். சர்வோதய மத்திய நூலகம், இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன நூலகம், இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் கொழும்புக் கிளையின் நூலகம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் தாபகரான இவர் அந்நிறுவனத்தினூடாகப் பல நூலகவியல் சார்ந்த நூல்களை வெளியிட்டு வருகின்றார். நூலகவியல், நூல் தேட்டம் ஆகிய இரு சஞ்சிகைகளினதும் பிரதம ஆசிரியராக இருந்ததுடன் கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும், ஆரம்ப நூலகர் கைந்நூல், உருமாறும் பழமொழிகள், யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு, Selected bibliography of James T. Rutnam, Rising from the Ashes ஆகிய நூல்களையும் எழுதி யுள்ளார்.

ISBN 0-9549440-3-8

9780954944032